L
N84
N84·3
347

(2) (2)

March & April 1984

# தமிழரசு

L
N84
N84.3
347


1.3.1984
75 காசு






# ஆசிரியர்கள் பிரச்னை என் சொந்தப் பிரச்னை

## முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்.

என்னுடைய உடல்நலம் கொஞ்சம் சரியில்லை. அது ரொம்பப் பெரிதாக ஆகிவிடாதா என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் 2, 3 நாட்களுக்குள் எனக்குச் சரியாகிவிட்டது. நாளைக் காலையில் அண்ணா நினைவாலயம் சென்று மாலை வைத்துவிட்டு வேலையைத் தொடங்கலாம் என்று நினைத்து இருந்தேன்.

85-347

அண்ணா அவர்கள் ஆசிரியர்களிடம் எவ்வளவு மதிப்பு வைத்திருந்தார் என்பது எனக்குத் தெரியும். அவர் கும்பிட்ட உங்களைக் கும்பிட நான் வந்திருக்கிறேன்.

முதலில் ஒன்றை உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த மாதத்திற்குள்ளாக உங்கள் சங்கம் அங்கீகரிக்கப்படும். சட்டசபையில் கவர்னர் உரை படிக்கும்வரை பொறுமையாக இருங்கள். அதற்குள் நல்ல செய்தி வரும்.

உங்கள் நிலைமைகளை ஆட்சிக்கு வரும் முன் நான் தி.மு. கழகத்தில் இருக்கும் பொழுதே உணர்ந்தவன்.

உங்கள் பிரச்சினைகளை என் பிரச்சினைகளாக்கிக் கொண்டவன்.

தொழிலாளர், ஆசிரியர்கள், உழைக்கும் வர்த்தகத்தினருக்கு நன்மை செய்ய நான் இந்தப் பதவியைப் பயன்படுத்துவேனே தவிர, மாற்றாருக்கு விட்டுக்கொடுத்து உங்களை நான் துன்பப்படுத்த மாட்டேன்.

ஒரு ஆசிரியருடைய தகுதி என்ன என்பதை நான் தெரிந்து கொண்டிருப்பவன். எதிர்காலச் சந்ததிகளை உருவாக்குபவர்கள் நீங்கள்.

நீங்கள் எந்தக் காரணத்தை முன்னிட்டும் இன்னொருவர் காலில் விழக்கூடாது. யாரையும் மரியாதை செய்யுங்கள். ஆனால் கவிதை எழுதத் தகுதியுள்ள நீங்கள் யாருக்கும் தலை வணங்கக்கூடாது.

தமிழ் யாருக்கும் தலை வணங்கக்கூடாது. என்காலில்கூட நீங்கள் விழக்கூடாது.

நாங்கள் மக்களுடைய வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்து இருக்கிறோம். வாக்குகளைப் பெறாவிட்டால் ஆட்சிக்கு வரமுடியாது. ஆனால் நீங்கள் அப்படி அல்ல. அந்த எண்ணத்தை மனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் யாருக்கும் அச்சப்படக்கூடாது. நீங்கள் சுயமரியாதையோடு தன்மானத்தோடு வாழவேண்டும்.

நாங்கள் ஆட்சிக்கு வந்து 4 வருடம் ஆகிறது. சில மாதத்திற்குள் தேர்தல் வரலாம், 5 ஆண்டு முடிந்தும் வரலாம். அப்போது முடிவு செய்யவேண்டியவர்கள் மக்கள்.

அதைப்பற்றிக் கவலைப்படாமல் பதவியில் இருக்கும் வரை நாங்கள் என்ன சொன்னோமோ அதை நிறைவேற்றுவோம்.

'சாதி இரண்டொழிய வேறில்லை' என்பதை நீங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள். இந்த இணைப்பு, பிணைப்பாக வேண்டும். சாதி, மதம் இதில் குறுக்கிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பள்ளிக் கல்வி இயக்குநர் ரயான் பதவிக் காலம் முடிவடைகிறது என்றாலும் இன்னும் அவருக்கு வாய்ப்பு கொடுத்து இருக்கிறோம். புதிய திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற அவர் பணி நமக்குத் தேவையாக இருக்கிறது.

படித்தவன் பட்டினி கிடக்கக்கூடாது. வேலை இல்லாமல் திண்டாடக்கூடாது. எல்லோரும் தொழிலுக்குச் சொந்தக்காரர்களாக வேண்டும்.

சத்துணவுத் திட்டத்தை, மற்ற மாநிலத்தில் உள்ளவர்கள் எப்படி நடத்துகிறீர்கள் என்று கேட்கிறார்கள். நினைத்தால் தமிழக மக்களால் செய்ய முடியும். நல்ல திட்டங்களுக்கு நீங்கள் உதவியாக இருக்கவேண்டும்.

[5-2-84 அன்று நடந்த தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் இணைப்பு இயக்கப் பிரதிநிதிகள் மாநாட்டில், ஆற்றிய உரையிலிருந்து].

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2015
ருத்ரோத்காரி — மாசி 18
மலர் : 14 இதழ் : 17
1-3-1984



# உழைப்போர் உயர உறுதியுடன் செயலாற்றுவோம்

## மேதகு ஆளுநர் திரு சுந்தர்லால் குரானா

மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர்களே,

உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை முதற்கண் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப் புத்தாண்டில் நம் மாநிலத்தின் பொருளாதாரம் எல்லா வகையிலும் மேலும் வளம் பெறும் என்று உளமாற நம்புகிறேன்.

2. சென்றமுறை உங்கள் முன் உரையாற்றியபோது இம் மாநிலத்தில் நிலவிய வறட்சி நிலைமை பற்றியும், மக்கள் துயர் துடைக்க அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகள் பற்றியும் நான் உங்களுக்கு கோடிட்டுக் காட்டியிருந்தேன். அடுத்தடுத்து இரண்டாண்டுகள் மழை பொய்த்ததன் விளைவாக மக்கள் அடைந்த சொல்லொணாத் துயரமும், தொல்லையும் ஆண்டு முடிவில்தான் முழுமையாகத் தெரிந்தது. என்றுமே கண்டிராத கடுமையான வறட்சியின் பிடியிலிருந்து மாநிலம் இப்பொழுதுதான் விடுபட்டு வருகிறது.

3. வறட்சித் துயர்த் தணிப்புப் பணிகளுக்காக இந்திய அரசு ரூ. 68·36 கோடி செலவினத்தை அனுமதித்திருக்க, மாநிலம் ரூ. 114.28 கோடி செலவிட்டுள்ளது. இந்திய அரசு ஒப்புதல் அளித்த செலவினங்களைத் தவிர, மாநில அரசு தானாகவே, மக்களின் துயர்களைய வேறு பல பணிகளையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது. தஞ்சை மாவட்டத்தில் 5,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்க கடன்கள் அளிக்க அனுமதி வழங்கிய ரூ. 7·50 கோடி செலவும், தனியார் பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக கடன்கள் அளிக்க அனுமதி வழங்கிய ரூ. 5·00 கோடி செலவும், மேலும், ரூ. 10·00 கோடிக்கு மேல் செலவாகும், கிராமங்களிலும், நகராட்சிப் பகுதிகளிலும் உள்ள நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு ஜனதா சேலை, வேட்டிகளை இலவசமாக வழங்குதல் ஆகிய முக்கிய திட்டங்கள் இதில் அடங்கும்.

4. கொடும் வறட்சிக் காரணமாக ஏற்பட்ட கடும் குடிநீர் பஞ்சத்தைச் சமாளிக்க மாநிலம் முழுவதிலும் துளைக் கிணறுகளை அமைப்பதற்காக அரசு பெரிய அளவில் நடவடிக்கை எடுத்தது. ரூ. 46 கோடி செலவில் 21,700 துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டன. குடிநீர் பிரச்சினை, குறிப்பாக சென்னை மாநகரில் மிகவும் கடுமையாக இருந்தது. ஒரு சில மாதங்களுக்கு சென்னை மாநகர மக்களுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் மட்டுமே குடிநீர் வழங்கப்பட்டபோதிலும், போதிய அளவு குடிநீர் வழங்க மாநகரின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்ட நீர்த் தொட்டிகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் அனுப்பப்பட்டது. மேலும், ரூ. 252.28 இலட்சம் செலவில் சென்னை மாநகரில் 11,951 குழாய் கிணறு பம்புகளும், 1,204 இந்தியா மார்க் II பம்புகளும் அமைக்கப்பட்டன.

5. வறட்சியினால் எல்லாத் துறைகளிலும் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. பெருமளவு துயர்த் தணிப்புப் பணிகளைத் தவிர பல்வேறு துறைகளில் ஏற்பட்ட பாதிப்புகளை ஈடுசெய்ய, அரசு மேலும் பல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது இவ்வகையில் உணவுப்பொருள் வழங்கும் பணிக்கு மாநில அரசின் நிதியுதவி அதிக அளவில் தேவைப்பட்டது. கொள்முதல் செய்வதில் அரசுக்கு ஏகபோக உரிமை இருந்தும், லெவி விலைக்கு மேல் வறட்சி ஈட்டுத் தொகையாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 15 அதிகமாக கொடுத்தபோதிலும், நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 1983 சம்பா பருவத்தில் இரண்டு இலட்சத்து இருபதாயிரம் டன் அரிசி மட்டுமே கொள்முதல் செய்ய முடிந்தது. மத்திய அரசிடமிருந்து 1983 ஏப்ரலில் மாநில அரசு பெற்ற 15,000 டன் படிப்படியாக உயர்ந்து தற்போது 35,000 டன் அரிசி பெறுகின்ற போதிலும், வெளி அங்காடியிலிருந்து அதிகமான விலையில் அரிசி வழங்குவதன் மூலமே, பொதுப் பங்கீட்டு ஏற்பாட்டின்கீழ், பொதுமக்களுக்கு முழு அளவில் உணவுப்பொருள்களை வழங்க

**தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டு அவையில் மேதகு ஆளுநர் திரு. சுந்தர்லால் குரானா அவர்கள் (திருவள்ளுவர் ஆண்டு 2015 - குத்ரோத்காரி மாசித் திங்கள் 1ஆம் நாள்) 13.2.1984 அன்று ஆற்றிய உரை.**

முடிந்தது. சென்ற சில ஆண்டுகளாகத் தொடர்ந்து அதே அளவில் இருந்துவரும் விற்பனை விலையிலேயே மாதம் ஒன்றுக்கு சுமார் 75,000 முதல் 80,000 டன் அரிசி வழங்கப்பட்டது. 1983 குறுவை பருவத்தில் ஒரு இலட்சத்து பத்தாயிரம் டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டது. 1984 சம்பா பருவத்தில் கொள்முதல் இன்னும் அதிகமான அளவில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1983ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8ஆம் நாளிலிருந்து 1984ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 29ஆம் நாள் வரையிலான கால அளவில், நுகர்பொருள் வாணிபக் கழகம் ஏகபோகக் கொள்முதல் செய்யும் இடங்களில் மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிட, குவின்டால் ஒன்றுக்கு, வறட்சி, பாசன ஈட்டுத் தொகையாக ரூ. 35 அளித்து வருகிறது. நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்கப்படும் அரிசியின் விலையினை மத்திய அரசு அண்மையில் மேலும் உயர்த்தியுள்ளதன் காரணமாக, பொதுப் பங்கீட்டு ஏற்பாட்டின் மூலம் வழங்கப்படும் அரிசியின் விலைக்கு ஈடாகக் கொடுக்கப்படும் மானியத்தின் அளவும் உயர்ந்துள்ளது.

6. வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க, மாநில அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்ட போதிலும், மாநில அரசின் நிதி ஆதாரங்கள் போதுமான அளவு இல்லாததால், வறட்சித் துயர்த் தணிப்புப் பணிகளுக்காக மேற்கொண்டும் உதவி கேட்டு மத்திய அரசுக்கு மற்றுமோர் வேண்டுகோள் விடுக்கும்படியான அவசியம் நமக்கேற்பட்டது. இப்போது வைத்திருக்கும் வேண்டுகோள், அரசு ஏற்கனவே துயர்த்தணிப்புப் பணிகளுக்காக செலவிட்ட தொகையை ஈடு செய்யத்தானே தவிர, புதிய பணிகளுக்காக அல்ல. இந்த வேண்டுகோளுக்கிணங்க, மத்திய அரசின் குழு இம் மாநிலத்தில் பாதிக்கப்பட்ட சில மாவட்டங்களைப் பார்வையிட்டது. இக் குழுவின் பரிந்துரைகள் இன்னும் நமக்கு தெரியவில்லை என்றாலும் இந்திய அரசு கணிசமான அளவிற்கு நிதியுதவி அளிக்குமென மாநில அரசு நம்புகிறது.

7. வறட்சிக் கொடுமையிலிருந்து விடுபட்டு மாநிலத்தின் பொருளாதாரம் இயல்பான நிலைக்குத் திரும்பும் நிலையில், தஞ்சை, திருச்சி, தென் ஆர்க்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களை கடும் மழை தாக்கியதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இம்மழையின் காரணமாக பெருமளவில் சொத்துகளுக்கு சேதமும் உயிரிழப்பும் ஏற்பட்டன. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக விமானம் மூலம் பார்வையிட்டு தஞ்சை, திருச்சி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் நிவாரண நடவடிக்கைகளை நேரடியாக மேற்பார்வையிட்டார். இராணுவ அதிகாரிகள் நமது வேண்டுகோளுக்கு இணங்க உடனடியாக தங்கள் ஆட்களை அனுப்பினர். வெள்ளத்தினால் சூழப்பட்ட கிராமங்களுக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்தும் வகையில், மிக குறுகிய கால அளவில் மூன்று பெய்லி பாலங்களை இராணுவத்தினர் அமைத்துக் கொடுத்தனர். கடற்படை, விமானப்படையினர் அளித்த ஹெலிகாப்டர்கள் மூலமும், கடற்படையினர் அளித்த காற்றினால் பெரிதாகக்கூடிய சிறிய படகுகள் மூலமும் வெள்ளத்தினால் சூழப்பட்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் அளிப்பதற்கும் அவர்களை மீட்பதற்கும் நடவடிக்கை எடுக்க முடிந்தது. உரிய தருணத்தில் அளித்த சேவைக்காகவும், உதவிக்காகவும், முப்படைகளுக்கும் இச்சந்தர்ப்பத்தில் அரசு தனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது. இப்பகுதிகளில் தொற்று நோய்கள் தலைதூக்கா வண்ணம் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப் போதுமான அளவு மருந்துகளுடன், மருத்துவர்களும், சுகாதாரதுறை அதிகாரிகளும் அந்தந்தஇடங்களுக்கு அனுப்பப்பட்டனர். வெள்ள நிவாரண பணிகளைத் துரிதப்படுத்த காவல் துறையினர் தகுந்த உதவிகளைச் செய்தனர்.

வெள்ள நிவாரணப் பணிகளை உடனடியாகச் செய்து முடிக்க உதவிய, இந்திய செஞ்சிலுவை சங்கம், பம்பாய் தமிழர் பேரவை, இராமகிருஷ்ணா மடம், தேசிய சமூக சேவை மற்றும், தேசிய மாணவர் படை உறுப்பினர்களுக்கும் அரசு நன்றி தெரிவித்துக் கொள்கிறது. வெள்ளத்தினால் 7,10,000 குடிசைகளும், 3,183 பாசன வாயில்களும், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள், ஆகியவற்றைச் சேர்ந்த 4,211 சாலைகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 10 இலட்சம் மக்களுக்கு உணவு அளிக்க 1,653 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டன.

8. சாலைகள், பாசன வாயில்கள் ஆகியவற்றைப் பழுது பார்த்து அவற்றை முந்தைய நிலைக்குக் கொண்டு வரவும் நிவாரணத் தொகை அளிக்கவும், மாநில அரசு ஏற்கனவே ரூ. 37.54 கோடி வழங்கியுள்ளது. வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ரூ. 128 கோடி உதவி கேட்டு மத்திய அரசிற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. மத்திய குழுவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைப் பார்வையிட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து கணிசமான அளவிற்கு உதவி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

9. ஸ்ரீலங்காவில் உள்ள இந்திய வம்சாவழியினர் மீது குறிப்பாக தமிழர்கள் மீது அவிழ்த்துவிடப்பட்ட அரக்கத்தனமான வன்முறை நடவடிக்கைகளினால் தமிழர்கள் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டது தமிழ்நாட்டு மக்களிடையே கொதிப்பையும் தாங்கொணாத் துயரையும் ஏற்படுத்தியது. தமிழக மக்கள் ஸ்ரீலங்கா தமிழர்களுடன் ஒன்றுபட்டு நிற்பதை எடுத்துரைக்க தமிழக முதல்வர் 1983ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 28ஆம் நாள் அன்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் மாநாட்டைக் கூட்டினார். ஆகஸ்டு மாதத்தில் இத்தகைய கூட்டங்கள் இரண்டை மீண்டும் கூட்டினார். ஸ்ரீலங்கா தமிழர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மாநில அரசு 1983ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 2ஆம் நாளன்று பொதுவேலை நிறுத்தம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்தது. இதில் எல்லா அரசியல்





கட்சிகளும் மைய அரசின் துறைகளும் கலந்து கொண்டன. இந்தப் பொது வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக இந்திய அரசு, விமானப் பணிகளையும் ரயில் போக்குவரத்தையும் நிறுத்தி வைத்தது. இந்திய வரலாற்றிலேயே, விமானபணிகளை நிறுத்தி வைத்தது இதுவே முதல் முறையாகும். இப்பிரச்சினைக்கு நிலையான தீர்வுகாண உடனடியாகவும் செவ்வையான முறையிலும் நடவடிக்கை எடுத்ததற்காக நாம் இந்தியப் பிரதமருக்குக் கடமைப் பட்டுள்ளோம்.

1964ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவிற்கு திரும்பிவரும் இந்திய வம்சாவழியினரைத் தவிர, ஸ்ரீலங்காவில் நடந்த கலவரங்களினால் பாதிக்கப்பட்ட அகதிகள் 1983 ஜூலை முதற்கொண்டு ஸ்ரீலங்காவிலிருந்து தமிழ்நாட்டிற்கு பெருமளவில் வரத் தொடங்கினர். 1984 ஜனவரி வரையில் கப்பல் மூலமாகவும் விமானம் மூலமாகவும் 35,394 பேர் தமிழ் நாட்டிற்கு வந்துள்ளனர். இவர்களில் 14,334 பேர்தான் ஸ்ரீலங்காவிற்குத் திரும்பிச் சென்றுள்ளனர். நாதியற்ற அகதிகளுக்கு உடனடி உதவியும் நிவாரணமும் அளிக்க இடைத்தங்கல் முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஸ்ரீலங்கா தமிழர்களின் இடருதவிக்காக வசூலிக்கப்படும் நிதியைப் பெறவும் அவற்றைச் செவ்வையான முறையில் வழிப்படுத்தவும் சட்டமன்ற உறுப்பினர்கள், முக்கியமான அரசியல் கட்சித் தலைவர்கள் அடங்கிய மாநில அளவிலான குழு ஒன்றைத் தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது. மாவட்ட நிலையில் எல்லா மாவட்டங்களிலும் அமைக்கப்பட்ட குழுக்களைத் தவிர பெருந் தொழிலதிபர்கள் அடங்கிய ஆலோசனைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்காவில் நடந்த கலவரங்களில் கொல்லப்பட்ட விடுதலை வீரர்களான குட்டிமணி, தங்கதுரை ஆகிய இருவரின் துணைவியருக்கும் திரு குட்டிமணியின் சகோதரிக்கும் அரசு வீடுகள் கொடுத்துள்ளது. திருமதி குட்டிமணியின் குடும்பத்திற்கு ஓராண்டு வரையில் அல்லது அவர் குடும்பம் ஸ்ரீலங்காவிற்குத் திரும்பும் வரையில் மாதம் ஒன்றுக்கு ரூ. 1,000 நிதி உதவியும் அளிக்கப்பட்டுள்ளது.

**10.** கடந்த ஆண்டில் தென்மேற்கு பருவமழை காலம் தாழ்த்தி வந்ததால் ஏற்பட்ட இடர்ப்பாடு காரணமாக விவசாயிகளால் சம்பா சாகுபடியை உரிய காலத்தில் துவங்க முடியவில்லை. இந்த நிலைமையை சமாளிக்க, விவசாயிகளுக்கு ரூ. 464 இலட்சம் செலவில் விதைகள், உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் அரசால் கொடுக்கப்பட்டன. பாசன வசதிகளை மேம்படுத்த தஞ்சாவூர் மாவட்டத்தில், ரூ. 7.50 கோடி செலவில் 5,000 வடிமுனைக் குழாய் கிணறுகளை வெட்டும் ஒரு பெரும் திட்டத்தை அரசு மேற்கொண்டது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு கிணறுவெட்ட ரூ. 15,000 வரை கடனாக அளிக்கப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 2,521 வடிமுனைக் குழாய் கிணறுகள் ஏற்படுத்த கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. மாநிலம் கடுமையான மின் பற்றாக்குறையை எதிர் நோக்கியிருந்த போதிலும் நாளொன்றுக்கு 12 மணி நேரம் அளவிற்கு விவசாய பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் அளிக்கப்பட்டது. காவிரி பாசனப் பகுதியில் விவசாயிகளை சம்பா பயிரிட ஊக்குவிக்கும் வகையில் அரசு கொள்முதல் விலையை இவ்வருடம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 171 என அறிவித்துள்ளது. அதாவது மத்திய அரசு அறிவித்துள்ள விலையை விட ரூ. 35 அதிகம்.

அரசு சரியான நேரத்தில் எடுத்த இந்த அனைத்து நடவடிக்கைகளாலும் சம்பா பயிர் விளைச்சல் உற்சாகம் தருவதாக இருக்குமென எதிர்பார்த்திருந்தபோதிலும் 1983ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் பெய்த கடும் மழையின் காரணமாக துரதிர்ஷ்டவசமாக காவிரி பாசன பகுதியில் சம்பா பயிருக்கு பெருத்த சேதம் ஏற்பட்டது. இக் கடும் மழையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு உடனடியாக குறைந்த விலையில் 500 மெட்ரிக் டன் அளவிற்கு பருப்பு விதைகளை வினியோகிக்க ஏற்பாடு செய்தது.

கடும் மழைக் காரணமாக காவிரி பாசனப் பகுதியில் சம்பாப் பயிருக்கு பெருத்த சேதம் ஏற்பட்டாலும் இம் மழையினால் மாநிலத்தில் வட மாவட்டங்களில் உள்ள ஏரிகளும், குளங்களும் நிரம்பின. இப் பாசன வசதியைப் பயன்படுத்தி அரசு 10 இலட்சம் ஏக்கரில் பருப்பு விதைகளையும், 7 இலட்சம் ஏக்கரில் நவரை நெல் வகைகளையும், 8 இலட்சம் ஏக்கரில் நிலக்கடலையையும் சாகுபடி செய்ய பெரும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. இந்த விளைச்சலால் காவிரி பாசனப் பகுதியில் ஏற்பட்ட சேதத்தை ஓரளவிற்கு ஈடுகட்ட முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலே கூறியபடி இயற்கைச் சீற்றங்கள் காரணமாக மாநிலத்தின் விவசாயப் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தபோதிலும் பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்ததால் உணவு உற்பத்தியின் அளவு திருப்திகரமாகவே இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மிக அதிகமான நிலுவை இருந்தும், விவசாயப் பணிக் கூட்டுறவு சங்கங்கள் 1983-ம் ஆண்டு டிசம்பர் வரை ரூ. 58.04 கோடியளவிற்குப் பயிர் கடன்கள் வழங்கியுள்ளன.

1984–85ஆம் ஆண்டில் 95 இலட்சம் மெட்ரிக் டன் அளவு உணவு தானியங்களை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உயர்ந்த இலக்கினை நாம் அடைய அரசு பல்வேறு திட்டங்களை மேற்கொண்டுள்ளது. நல்ல தரமான விதை உற்பத்தியும் அதன் விநியோக முறையும் வலுப்படுத்தப்பட்டு விவசாயிகளுக்கு இவை பெருமளவில் கிட்ட வழிவகைகள் செய்யப்படும். விவசாயத்திற்கான தண்ணீரைச் சிக்கனமாக பயன்படுத்த காவிரி, வைகை, சாத்தனூர் மற்றும் பரம்பிக்குளம், ஆளியாறு ஆகிய பாசனப் பகுதிகளில் விசேஷமான கவனம் செலுத்தி பல்வேறு திட்டங்களைச் செயல் படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. "ஹெக்டேர் ஒன்றுக்கு 5 மெட்ரிக் டன் நெல் உற்பத்தி" என்ற இலக்கினை 1984–85-ல் அடைய முயற்சிகள் எடுக்கப்படும்.

**11.** தற்போதுள்ள பயிர்க் காப்புறுதி திட்டம் நெல் பயிருக்கு மட்டும் உள்ளது. இதன் கீழ் ஒவ்வொரு விவசாயியும், பாசனப் பயிருக்கு ரூ. 10,000 அல்லது தான் பெற்றுள்ள பயிர் கடனில் 150 சதவீதம், இவற்றில் எது குறைவோ, மேலும் மானவாரி பயிருக்கு ரூ. 5,000 அல்லது தான் பெற்றுள்ள பயிர்கடனில் 150 சதவீதம் இவற்றில் எது குறைவோ அந்த அளவிற்கு பயிர் காப்பு பெறலாம். தற்போதுள்ள திட்டம் நெல் பயிருக்கு மட்டும் இருப்பதால், பல்வேறு பொருள் மற்றும் உயிர் சேதத்தையும் ஈடுகட்டும் வகையில், அரசு இத்திட்டத்தினை விரிவாக்கத் திட்டமிட்டுள்ளது.

**12.** பால்வளத் திட்டம் II தற்போது மாநிலத்தின் ஒன்பது மாவட்டங்களில் நடைமுறையில் இருந்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் உற்சாகமூட்டும் பயன்கள் கிட்டிருப்பதால் அரசு, மேலும் மூன்று மாவட்டங்களில் இத் திட்டத்தினை செயலாக்க இந்திய பால்வள நிறுவனத்தை கேட்டுக்கொண்டுள்ளது. மாடுகளின் தரத்தை மேம்படுத்திப் பால் உற்பத்தியை பெருக்க, உறை விந்துக்கான ஒரு வங்கியைத் தொடங்கி 400 துணை மையங்களில் இவ் வசதி கிடைக்குமாறு வகை செய்ய திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன.

**13.** இதுவரை பாசன வசதி பெறாத நிலங்களுக்கு பாசன வசதி ஏற்படுத்திக் கொடுப்பதும், ஏற்கெனவே பாசனம் பெற்று வரும் நிலங்களுக்கு, அவ்வசதியை நிலையாக்குவதும் அரசின் முக்கிய கொள்கையாகும். ஆறாவது திட்டக் காலத்தில் சிறிய மற்றும் பெரிய பாசனத் திட்டங்கள் மற்றும் வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்கு ரூ. 189·79 கோடி அனுமதிக்கப்பட்டிருக்க, திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் ரூ. 80·73 கோடி செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இத் திட்டங்களுக்கு என ரூ. 55·14 கோடியும், அடுத்த ஆண்டில் ரூ. 60·62 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் 78,000 எக்டேர் நிலத்திற்கு பாசன வசதி ஏற்படுத்தவேண்டுமென இலக்கிட்டிருக்க, முதல் மூன்று ஆண்டுகளில் 36,656 எக்டேர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் மேலும் 16,880 எக்டேர் நிலப்பரப்பு பாசன வசதிபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**14.** கிருஷ்ணா நதியிலிருந்து 15 ஆயிரம் மில்லியன் கனஅடி நீரைப் பெறுவதற்காக, தமிழ்நாடு அரசும், ஆந்திரப் பிரதேச அரசும் 18–4–1983 அன்று ஒப்பந்தம் செய்துகொண்டதன் வாயிலாக, சென்னை மாநகரில் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண வகை செய்யப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் மாநிலங்களுக்கிடையேயான ஒத்துழைப்பிற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். ஆந்திரப் பிரதேசத்தில் பாசனத்திற்கும் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதைப் பெருக்குவதற்கும் கிருஷ்ணா நதி நீர் திட்டம் வகைசெய்யும். இதற்காக மதிப்பிடப்பட்ட மொத்தத் திட்டச் செலவான ரூ. 760 கோடியில், தமிழ் நாட்டின் பங்கு ரூ. 200 கோடியாக இருக்கும். திட்டத்தின் முதற்கட்டப் பணிக்காக ரூ. 30.15 கோடி செலவிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நம் மாநில எல்லைப் பகுதியிலிருந்து பூண்டி நீர்த்தேக்கத்திற்குக் கால்வாய் வெட்டும் பணியை நாம் மேற்கொண்டுள்ளோம். எஞ்சிய பணியை ஆந்திரப்பிரதேச அரசு நிறைவேற்றி வருகிறது. இந்த கிருஷ்ணா நதி நீர் திட்டம் நிறைவேறியபின் சென்னை மாநகரில் தற்போதுள்ள உயரளவாக, நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு கிடைக்கும் 65 லிட்டர் நீர் 127 லிட்டராக உயரும்.

**15.** தமிழ் நாட்டில் பயிரிடத்தக்க நிலத்தில் 50 சதவீத நிலப்பரப்புக்கு இன்னும் பாசனம் அளிக்க வேண்டியுள்ள நிலையில், மேல்பரப்பு நீர் முற்றிலும் பயன்படுத்தப்பட்டுவிட்டது. சில பகுதிகளில் நிலத்தடி நீரும் பயன்படுத்தப்பட்டுவிட்டது. ஆகவே, அறிவார்ந்த முறையிலும், அறிவியல் அடிப்படையிலும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டியது தவிர்க்க முடியாததாகும். பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கு நீர் வழங்கும் ஏற்பாடுகளை நவீனப்படுத்துவதினாலும், புதிய கசிவு நீர் குட்டைகள் ஏற்படுத்துவதினாலும் நீரைச்சிக்கனமாகப் பயன்படுத்தும் திட்டங்களைச் செயல்படுத்த தமிழ்நாடு அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 9 இலட்சம் எக்டேர் பரப்புக்குப் பாசனம் அளிக்க 39,000-க்கும் மேற்பட்ட மானவாரி ஏரிகள் உள்ளன. இவற்றை நவீனப்படுத்தி, இந் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்த பணிகளுக்கு அடுத்தபடியாக அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். இம் மாநிலத்திலுள்ள சிறுபாசன ஏற்பாடுகளை நவீனப்படுத்துவதற்கு மத்திய அரசின் மூலம் ஐரோப்பிய பொருளாதாரக் குழுவிடமிருந்து ரூ. 25 கோடி மானியம் பெறுவதில் இவ்வரசு வெற்றிகண்டுள்ளது. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து ஐந்தாண்டுகளில் முடிவடையும். தமிழ்நாட்டிலுள்ள ஐந்து மாவட்டங்களில் அதாவது, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஏரிகளை நவீனப்படுத்தும் பணி



மேற்கொள்ளப்படும். இதன்மூலம், தற்போது பயன்படுத்தப்படும் நீரில் 20 சதவீதத்தை மிச்சப்படுத்த முடியும். இதனால் தற்போதுள்ள ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு இடையறாத பாசன வசதி அளிக்கவும், அவற்றின் சாகுபடிப் பரப்பை அதிகரிக்கவும் முடியும்.

16. நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதை மேம்படுத்துவதற்கும், நிலத்தின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்குமான வழிமுறைகளை ஆய்வு செய்து, கண்காணிக்க பாசன நிருவாக-பயிற்சிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த மாநில அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டம், அனைத்து நாட்டு வளர்ச்சி குறித்த அமெரிக்க நிறுவன உதவியுடன் செயல்படுத்தப்படும். இத்திட்டம், சுமார் ரூ. 10 கோடி மொத்தச் செலவில் விரைவில் துவங்கி 7 ஆண்டு காலத்தில் செயல்படுத்தப்படும். இதில், தமிழ்நாடு அரசின் பங்கு ரூ. 4.4 கோடியாகும். மீதமுள்ள தொகை, அமெரிக்க நாட்டு நிறுவனத்திடமிருந்து ரூ. 1.4 கோடி கடனாகவும், மீதமுள்ள ரூ. 4·2 கோடி மானியமாகவும் பெறப்படும்.




17. பருவமழை பொய்த்துவிடுவதனால் அவ்வப்போது பாதிக்கப்படும் மற்றொரு துறை மின்சக்தித் துறையாகும். தமிழ்நாட்டில் மொத்த மின் உற்பத்தியில், அதிக செலவில் உற்பத்தியாகும் அனல் மின்சக்தி பெருமளவு இடம் வகிப்பது தவிர்க்கமுடியாததாகும், அடுத்தடுத்து பருவமழை பொய்த்ததன் காரணமாக. புனல் மின் உற்பத்தி குறைந்து மின் வாரியத்தின் இழப்பு அதிகமாகிறது. இதன் விளைவாக மாநிலத்தின் நிதி நிலையிலும் பெருஞ்சுமை ஏற்படுகிறது. புனல் மின் உற்பத்தி நிலையங்களையும், ஏனைய மின் உற்பத்தி நிலையங்களையும் கவனமாகவும், திறம்படவும் நிருவகித்ததன் மூலமே, சென்ற ஆண்டு ஒரு சிறிது காலம் இருந்த 100 சதவீத மின்வெட்டினை உயரழுத்த மின்சக்தியைப் பிரதானமாகப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்குத் தளர்த்த முடிந்துள்ளது. உயரழுத்த மின்சக்தியைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு தேவையில் 75 சதவீதமாகவும், மின் அழுத்தத்தில் 60 சதவீதமாகவும் இருந்த மின்வெட்டு தேவையிலும் மின் அழுத்தத்திலும் 30 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. உயரழுத்த மின் சக்தியைப் பயன்படுத்தும் ஏனைய தொழிற்சாலைகளுக்கு மின்வெட்டுத் தேவையிலும், மின் அழுத்தத்திலும் 15 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. 1—10—1981-க்குப் பிறகு தொடங்கப்பட்ட உயரழுத்த மின்சக்தியைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு 30—6—1984 வரை மின்வெட்டிலிருந்து முழு விலக்களிக்கப்பட்டுள்ளது. உயர் உபயோக நேரத்தில் (Peak hour) தொழிற்சாலைகளுக்கு மின்சக்தியைப் பயன்படுத்த விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது. குறைவழுத்த மின்சக்தியைப் பயன்படுத்தும் அனைத்துப் பணிகளுக்கும் 11—7—1983-விருந்து மின்வெட்டு நீக்கப்பட்டது.

18. அனல் மின்சக்தி உற்பத்தியைக் கணிசமான அளவுக்குப் பெருக்குவதன் மூலம் மட்டுமே இம்மாநிலத்தில் உள்ள மின் பற்றாக்குறைப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு காணமுடியும். 210 மெகாவாட் உற்பத்தித் திறன்கொண்ட இரண்டு யூனிட்டுகள் அமைக்கும் மேட்டூர் அனல் மின் உற்பத்தி நிலைய விரிவாக்கத் திட்டத்திற்கு தற்போது மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி நெய்வேலியில் 210 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஐந்து அனல் மின் யூனிட்டுகள் ஏற்படுத்துவதற்கான திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு, 1983 ஜூனில் மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. நெய்வேலியில் மூன்றாவது சுரங்கத்தை வெட்டும் பணியைத் தொடங்குவதற்கும், மேற்குறிப்பிட்ட அனல் மின் உற்பத்தித் திட்டத்திற்கு முழு அளவில் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்துவதற்கும் அனுமதி வழங்குமாறு நமது அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. இம்மாநிலத்தில் மற்றுமொரு அணு மின்சக்தித் திட்டத்தைத் தொடங்குமாறு இந்த அரசு, மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது. இம் மாநிலத்தில் நீண்ட காலமாக நிலவி வரும் மின்சக்திப் பற்றாக்குறையை ஓரளவிற்காவது தீர்க்க இத்திட்டம் உதவும்.

19. 1983ஆம் ஆண்டு மே திங்களில் மின் கட்டணம் திருத்தியமைக்கப்பட்டபோதிலும், மின் பயனீட்டாளர்களிடமிருந்து வசூலிக்கப்படும் மின் கட்டணங்கள், மின் உற்பத்திச் செலவைக் கூட ஈடுசெய்யப் போதுமானதாக இல்லை. அப்படியிருக்க, மத்திய திட்டக் குழு வலியுறுத்தும் முதலீட்டில் 3 சதவீத ஆதாயம் கிட்ட வாய்ப்பில்லை என்பதைச் சொல்லத் தேவையில்லை. அண்மையில் நிலக்கரி விலை 25 சதவீதம் உயர்ந்துள்ளதால் இந்நிலை மேலும் மோசமாகியுள்ளது. தனது மூலதனத் திட்டங்களுக்கு மட்டுமின்றி, மின் உற்பத்தித் திட்டங்களுக்கான செலவில் ஏற்படும் பற்றாக்குறையை ஈடுசெய்யவும், மாநில அரசின் நிதியுதவிய்யை மின்வாரியம் பெருமளவில் நாடவேண்டியுள்ளது.

20. கிராமப்புற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு அரசு முன்னுரிமை அளித்து வந்துள்ளது. 1976–77ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட புள்ளிவிவரக் கணக்குப்படி இம் மாநிலத்தில் உள்ள 47,273 குடியிருப்புப் பகுதிகளில் 18,167 குடியிருப்புப் பகுதிகள் குடிநீர் பிரச்சினையுள்ள குடியிருப்புப் பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டுகளில் பருவமழை பொய்த்ததன் காரணமாக குடிநீர் பிரச்சினையுள்ள கிராமங்களின்



எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது. 1985 மார்ச் இறுதிக்குள், இந்த குடியிருப்புப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கப்படுமென்று நம்பப்படுகிறது.

21. உலக வங்கியின் நிதியுதவியுடன் குடிநீர் வழங்குதல் மற்றும் குறைந்த செலவிலான துப்புரவுப் பணித் திட்டத்தை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், கோயம்புத்தூர், சேலம், மதுரை ஆகிய மூன்று பெரு நகரங்களுக்கும், ஏனைய 75 நகரங்களுக்கும், 740 கிராமக் குடியிருப்புப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டங்களும் 14 நகராட்சிகளுக்குக் குறைந்த செலவில் துப்புரவு வசதி அளிக்கும் திட்டமும் மேற்கொள்ளப்படும். ரூ. 149.42 கோடி செலவில் செயலாக்கப்படவிருக்கும் இத்திட்டம் நாலரை ஆண்டுகளில் முடிவடையும்.

22. பெரியார், கோயம்புத்தூர் மாவட்டங்களில் தண்ணீரில் அதிக .'.ப்ளுரைட் உள்ள 726 குடியிருப்பு பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் ஒரு திட்டத்திற்கு நிதியுதவி அளிக்க ஐரோப்பிய பொருளாதாரக் குழு ஒப்புக்கொண்டுள்ளது. இத்திட்டம், ரூ. 15.20 கோடி மதிப்பீட்டுச் செலவில் 30 மாதங்களில் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.




23. வறுமையை ஒழிப்பதையே நோக்கமாகக் கொண்டு இந்த அரசு முனைப்பாகச் செயல்பட்டு வருவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். ஒட்டுமொத்தமான பொருளாதார வளர்ச்சி இன்றியும், மேலும் வேலைவாய்ப்புகளை உருவாக்காமலும் இந்த உயரிய நோக்கத்தை எய்த இயலாது. இதனைக் கருத்தில் கொண்டுதான், ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்கு வேலை அளிக்கும் திட்டத்தை அரசு தொடங்கியது. அரசுத் துறைகளிலும், அரசு நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பு அளிக்க வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள, ஒருவருமே வேலை வாய்ப்புப் பெறாத, குடும்பத்தில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று மாநில அரசு அண்மையில் அறிவித்துள்ளது. மேலும், கிராமப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள குடும்பங்கள் பற்றியும், அக்குடும்பங்களைச் சேர்ந்தவர்களில் சுய வேலைவாய்ப்பில் ஈடுபடத் தகுதியும், ஆர்வமும் உள்ளவர்கள் பற்றியும் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

தேவையான தகுதி வாய்ந்த கைவினைஞர்கள் கிராமப்பகுதிகளில் இல்லை என்பதனால் எந்த ஒரு சுய வேலைவாய்ப்புத் திட்டமும் திறமையை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். ஏற்கெனவே நிறுவன நிதியின் உதவியுடன் செயலாக்கப்படும், சுய வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டங்களுடன் பல்வேறு திட்டங்களின்கீழான பயிற்சித் திட்டங்களையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்த வேண்டியுள்ளது. பிரதமரின், படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் திட்டம், மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து செயல்படுத்தும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் பலன், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்குக் கிடைக்கச் செய்யும் வகையில் தகுந்த நிறுவன அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குக் கடன் உதவி கிடைக்கச் செய்வதை முறைப்படுத்தும் ஓர் அமைப்பாகப் பணியாற்ற 15—7—1983 முதல் நிறுவன நிதித் துறை என்ற ஒரு துறையை அரசு ஏற்படுத்தியுள்ளது. இது, ஏற்படுத்தப்பட்ட சில மாதங்களில் ரூ. 30.16 கோடி அளவிற்குக் கடன்களை இம் மாநிலத்திலுள்ள 1,70,564 பேருக்கு வழங்கியுள்ளது. இதில் 56,966 பேர் ஆதி திராவிடர்கள் ஆவர். தொழிற் பயிற்சி நிலையத்தின் பயிற்சி பெற்ற வேலை இல்லாமல் இருக்கும் 10,000 பேர்களுக்கு தொடக்க மூலதன உதவி அளித்து, அதன் மூலம் வங்கிக் கடனைப் பெறச் செய்யும் பணியைப் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள வேலைவாய்ப்புப் பணிகள் துறை மேற்கொண்டுள்ளது.

24. நிலமற்ற கிராமப்புறத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ. 8.90 கோடியையும் அடுத்த ஆண்டிற்கு ரூ. 44.50 கோடியையும் மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. ரூ. 44 கோடி மதிப்பீட்டுச் செலவிலான திட்டங்களுக்கு, மாநில அரசு, மத்திய அரசின் ஒப்புதலை ஏற்கெனவே பெற்றுள்ளது.

25. மாநில அரசும் மத்திய அரசும் சம அளவில் நிதியுதவி அளித்து செயற்படுத்தி வரும் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், நடப்பாண்டில் ரூ. 36 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. 1979–80 முதல் 1983 நவம்பர் இறுதி வரை, இத்திட்டத்தின்கீழ் 164,867 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்திற்கு 1984–85ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூ. 40 கோடி ஒதுக்கப்படும். இதில் 50 சதவீதத் தொகையை மத்திய அரசு அளிக்கும்.

26. நம்முடைய சமுதாயத்தை இன்று எதிர்நோக்கியுள்ள மிக முக்கியப் பிரச்சினை, தற்போதைய கல்வி முறையில் படித்து விட்டு வரும் எண்ணற்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதுதான். அனைத்து நிலைகளிலும் உள்ள பொதுவான கல்விமுறை, வேலைவாய்ப்பை அளிக்க முடியாத அளவிற்கு மனித ஆற்றலை உருவாக்கித் தந்துள்ளது. இவர்களிடையே வளர்ந்து வரும் அதிருப்தி, சமுதாயத்தில் அமைதியின்மையையும் பதட்ட நிலையையும் அதிகமாக்குகின்றன. கல்வியின் அனைத்து நிலைகளிலும் அந்தந்த இடத்திற்கேற்றாற்போல் குறிப்பிட்ட பணிப் பயிற்சி அளிக்கக்கூடிய வகையில், தற்போதைய கல்வி முறையை மாற்றியமைப்பதில் அரசு கவனம் செலுத்தி வருகிறது. அப்பொழுதுதான், இளைஞர்கள் தொழிற்சாலைகளில்

வேலைவாய்ப்பு பெறுவதற்கோ அல்லது சுய வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்வதற்கோ திறனைப் பெற்றிருப்பர். இந்த பல்திறப்பட்ட திட்டத்தைச் செயலாற்றுவது மாநிலத்தின் நிதி ஆதாரங்களுக்கு அப்பாற்பட்டு இருக்குமாதலால், மாநில அரசு, எட்டாவது நிதிக் குழுவின் மூலம் மைய அரசிடம் நிதியுதவியைக் கோரியுள்ளது. இக்குழுவின் இடைக்கால அறிக்கையில் இதுபற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை எனினும், இச்செயற் குறிப்பிற்கு மைய அரசின் நிதியுதவி பெற விரிவான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

**27.** தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் இம் மாநில அரசு அளித்துள்ள பல்வேறு சலுகைகள், வசதிகளைத் தவிர பெரும் செலவில் பொதுத் துறைத் தொழில்களை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. செங்கற்பட்டு மாவட்டம், திருவாலங்காட்டில் சுமார் ரூ. 10 கோடி செலவில் அமைக்கப்பட்டுவரும் திருத்தணி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, இவ்வாண்டு ஏப்ரல் மத்தியில் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெருமளவில் ஆட்குறைப்புச் செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காகவும் பணி செம்மையாக நடைபெறுவதை உறுதி செய்வதற்காகவும் மதுரை மாவட்டத்தில் உள்ள மதுரா சுகர்ஸ் நிறுவனத்தின் நிர்வாகத்தை மாநில அரசு தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டுள்ளது.

**28.** மாநில அரசால் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு பத்திரிகைக் காகிதம்—பிற காகித ஆலை நிறுவனம், திருச்சி மாவட்டத்தின், பின்தங்கிய பகுதியான புகலூரில் பத்திரிகைக் காகிதம்-பிற காகித ஆலை ஒன்றை அமைத்து வருவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். ரூ. 195 கோடி செலவிலான இத்திட்டத்திற்கு, உலக வங்கி, திட்டச் செலவில் 50 சதவீதத்தை ஏற்கிறது. ஆண்டு ஒன்றிற்கு 50,000 டன் பத்திரிகைக் காகிதத்தையும், 40,000 டன் பிற காகிதத்தையும் உற்பத்தி செய்யும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இத்திட்டம் செயல்படத் தொடங்கியவுடன் ஆண்டொன்றுக்கு ரூ. 40 கோடி அளவிற்கு அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தும். இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் நடந்தேறி வருகின்றன. திட்டமிட்டுள்ளவாறு, நடப்பு ஆண்டின் செப்டம்பர்-அக்டோபருக்குள் இத்திட்டத்தின் அனைத்துப் பணிகளும் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**29.** சென்னையில் வரிக் கட்டுப்பாடற்ற வணிக மண்டலம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பிற்கு மத்திய அரசு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது. அரசுக்குச் சொந்தமான 150 ஏக்கர் நிலம் இம்மண்டலத்தை அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இப் பகுதியின் மேம்பாட்டுப் பணி, மாநில தொழில் மேம்பாட்டு நிறுவனத்திடம் (சிப்காட்) ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**30.** பாம்பன் பாலப்பணி விரைவில் மறுபடி ஆரம்பிக்கப்படும். இராமேஸ்வரம் தீவின் முனையில் இருக்கும் தனுஷ்கோடி வரை தடங்கலற்ற சாலைப் போக்குவரத்து வசதியை இப்பாலம் ஏற்படுத்தும். இப்பணிக்கு இப்போது ரூ. 16.65 கோடி செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**31.** அரசுப் போக்குவரத்து நிறுவனங்களின் பணி தொடர்ந்து மிகவும் திருப்தி தரும்வகையில் நடைபெற்று வருகிறது. நாட்டிலேயே தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள் தலை சிறந்தவைகளில் ஒன்றாக விளங்குகின்றன என்று மத்தியத் திட்டக் குழு கருத்துத் தெரிவித்துள்ளது. ஈரோட்டில் ஜீவா போக்குவரத்து நிறுவனம், நாகர்கோவிலில் நேசமணி போக்குவரத்து நிறுவனம், காரைக்குடியில் மருதுபாண்டியர் போக்குவரத்து நிறுவனம் ஆகிய புதிய மூன்று போக்குவரத்து நிறுவனங்கள் 1-4-1983 முதல் தனித்துச் செயல்படத் தொடங்கியுள்ளன. கடந்த நிதியாண்டில், மூன்று நிறுவனங்கள் தவிர, பிற நிறுவனங்கள் அனைத்தும் ஆதாயம் ஈட்டியுள்ள போதிலும், டீசல் வழங்கல் விலை அவ்வப்போது உயர்ந்து வருவதால், இந்த ஆதாயநிலை தொடர்ந்து இருப்பது கடினமாகும். 1980 முதல் இப்பொழுதுவரையிலான கால அளவில், டீசலின் விலை 100 சதவீதத்திற்கும் மேல் உயர்ந்துள்ளது. இதன் காரணமாக, கடந்த மூன்றரை ஆண்டுகளில் அரசுப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு ரூ. 115 கோடி. அளவிற்குக் கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது.

**32.** கிராமப்புறப் பகுதிகளுக்குச் சுகாதார வசதி அளிப்பது, மாநில அரசின் கொள்கைகளில் முக்கியமான ஒன்றாகும். இந்தக் கொள்கையின் அடிப்படையில், 5,000 மக்கள் தொகை உள்ள ஒவ்வொரு பகுதியிலும், சுகாதாரத் துணை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் 712 துணை நிலையங்களைக் கூடுதலாக ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இவை மாநிலத்தில் தற்போது உள்ள 4,586 துணை நிலையங்களுக்குக் கூடுதலாக அமையும்.



**33.** தென் ஆர்க்காடு மாவட்டத்திலும், சேலம் மாவட்டத்திலும் டேனிடா (DANIDA) நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் குடும்ப நலத் திட்டம் மூன்றாம் ஆண்டை எட்டியுள்ளது. இத் திட்டத்தின்கீழ், இதுவரை 449 சுகாதாரத் துணை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 313 துணை நிலையங்களில் கட்டிடம் கட்டும் பணி நடந்து வருகிறது.

**34.** குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் சிறப்பான நாட்டம் செலுத்தப்பட்டு வருவதால், நல்ல பயன் கிட்டியுள்ளது. இந்த ஆண்டில் 3·99 இலட்சம் கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட வேண்டுமென இலக்கு நிச்சயிக்கப்பட்டிருக்க, 1984 சனவரி இறுதிவரை 3,77,827 கருத்தடை அறுவை சிகிச்சைகளைச் செய்து, இம் மாநில அரசு, நாட்டிலேயே முதன்மையாகத் திகழ்கிறது. இவ்வாண்டின் முடிவிற்குள், இது தொடர்பான பணி இலக்கை கணிசமான அளவுக்கு விஞ்சக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வட்டார மருத்துவமனைகளுக்கு அளிக்க ரூ. 7.80 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 26 லேப்ரோஸ்கோப் கருவிகளை வாங்க இந்த அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**35.** சுற்றுப்புறச் சூழல் சுகாதாரத்தைப் பற்றிய சட்டங்களைச் செவ்வனே செயல்படுத்த 1983 ஜூலை மாதம் 15ஆம் தேதியிலிருந்து அரசு, இதற்கான ஒரு தனித் துறையை உருவாக்கியது. மாநிலம் முழுவதும் 1983 அக்டோபர் முதல் தேதியிலிருந்து "காற்று தூய்மைக்கேடு கட்டுப்பாடு இடமாக" அறிவிக்கப்பட்டுள்ளது. 1983 செப்டம்பர் 30-ம் தேதியிலிருந்து அமுலுக்கு வந்த, தமிழ்நாடு நீர் (தூய்மைகேடு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள் 1983, மற்றும் தமிழ்நாடு காற்று (தூய்மைகேடு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள் 1983, ஆகியவையினால் மாநிலத்தில் புதிய தொழில்கள் ஆரம்பிப்பதற்கான நிரந்தரத் தகுதியை மாநிலம் பெற்றுள்ளது.

**36.** ஆறாவது திட்டக் காலத்தில், கிராம வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் இரண்டு இலட்சம் வீடுகளைக் கட்டுவதற்குரிய திட்டம் ஒன்றை மாநில அரசு மேற்கொண்டுள்ளது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். 1982–83ஆம் ஆண்டில் 40,000 வீடுகள் கட்டவேண்டுமெனத் திட்டமிட்டிருக்க, 40,092 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. நடப்பாண்டில், அக்டோபர் இறுதி வரையில் 17,894 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் ஆதி திராவிடர்களுக்காக 15,058 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 20,759 வீடுகளைக் கட்டும் பணி வெவ்வேறு நிலைகளில் உள்ளது. ஒரு வீட்டின் கட்டுமான மதிப்பீட்டுச் செலவு நடப்பு நிதி ஆண்டுத் தொடக்கத்திலிருந்து ரூ. 4,000-லிருந்து ரூ. 6,000 ஆக உயர்ந்துள்ளது.




**37.** முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் ஒரு முக்கிய பலன் பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்ததாகும். இத் திட்டம், மனிதவளத்தில் செய்யப்பட்டுள்ள முதலீடு என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். கோயம்புத்தூர், அவினாசிலிங்கம் மனையியல் மகளிர் கல்லூரி இது தொடர்பாக மாதிரி ஆய்வு ஒன்றை நடத்தியது. ஆய்வு செய்யப்பட்ட பகுதியில் உள்ள அனைத்துக் குழந்தைகளின் உடல் நலத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு சராசரி உயரம், எடை ஆகியவையும் நான்கு மாத கால அளவில் அதிகரித்துள்ளன என்பது இந்த ஆய்விலிருந்து தெரிய வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வரும் பாலர்களுக்கு மருத்துவப் பரிசோதனையும் சிகிச்சையும் அளிப்பதற்கான விரிவான திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டுள்ளது.

**38.** 1982–83ஆம் ஆண்டில் 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில், தமிழக அரசு தலைசிறந்து விளங்கியது என்று மத்தியத் திட்டக்குழு பாராட்டியுள்ளதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இதே முறையில் நடப்பாண்டிலும் இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதின் பயனாக, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி, கிராம வேலைவாய்ப்புத் தேசியத் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட வேலை நாட்கள், நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்குவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட உபரி நிலம், வறுமைக் கோட்டினைத் தாண்ட பழங்குடியினருக்கு உதவியளித்தல், கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குதல், ஏழைகளுக்கு வீட்டுமனைகள் வழங்குதல், மரங்கள் நடுதல், கரிம எரிவாயு தயாரிப்புச் சாதனங்கள் அமைத்தல், செய்யப்பட்ட கருத்தடை அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை, தொடக்கச் சுகாதார நிலையங்கள் அமைத்தல், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்பாடு, 6—14 வயதுத் தொகுதியிலுள்ள சிறார்களைப் பள்ளியில் சேர்த்தல், முதியோர் கல்வித் திட்டத்தின்கீழ் பயனடைந்தவர்கள் ஆகிய அம்சங்களில், நடப்பாண்டிற்கான இலக்கில் 70 சதவீதத்தை ஏற்கெனவே அடைந்துவிட்டது.

**39.** தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தைச் செயல்படுத்துவதில் 1981–82 முதல் நாம் பெற்ற அனுபவத்தைக் கருத்தில் கொண்டு மாநிலம் முழுவதிலும், சாராயம் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளின் மொத்த விற்பனையை, பொது நலன் கருதி அரசு தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டு அரசுக்குச் சொந்தமான நிறுவனம் ஒன்று இதனை நிருவகிக்கவும், முறைப்படுத்தவும் வேண்டும் என்று மாநில அரசு முடிவு செய்தது. இந்த நோக்கத்துடன் தமிழ்நாடு மாநில விற்பனை நிறுவனம் அமைக்கப்பட்டது. சாராயம் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளின் மொத்த விற்பனையை அரசு தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டு, 1—6—1983 முதல் இந்த நிறுவனத்திடம் அந்த உரிமையை ஒப்படைத்தது.

**40.** மாவட்ட நிர்வாகத்தை மேலும் பயனுள்ளதாக்குவதெற்கென மாநிலத்தில் உள்ள சில பெரிய மாவட்டங்களை படிப்படியே பிரிக்கும் முடிவை அரசு எடுத்துள்ளது. இதன்படி இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட இராமநாதபுரம் மாவட்டம் என்றும், சிவகங்கையைத் தலைமையிடமாகக் கொண்ட பசும்பொன் முத்துராமலிங்கர் மாவட்டம் என்றும், விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்ட காமராஜர் மாவட்டம் என்றும் பிரிக்கப்படும். திருநெல்வேலி மாவட்டம் திருநெல்வேலியைத் தலைமையிடமாகக் கொண்ட திருநெல்வேலி மாவட்டம் என்றும் தூத்துக்குடியைத் தலைமையிடமாகக் கொண்ட சிதம்பரனார் மாவட்டம் என்றும் பிரிக்கப்படும். வட ஆர்க்காடு மாவட்டம், வேலூரைத் தலைமையிடமாகக் கொண்ட வட ஆர்க்காடு மாவட்டம் என்றும் திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்ட சம்புவராயர் மாவட்டம் என்றும் பிரிக்கப்படும். மதுரை மாவட்டம்,

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்ட மதுரை மாவட்டம் என்றும், திண்டுக்கல்லைத் தலைமை யிடமாகக் கொண்ட அண்ணா மாவட்டமாகவும் பிரிக்கப்படும். தஞ்சை மாவட்டத்தை தஞ்சாவூரை தலைமையிடமாகக் கொண்ட தஞ்சை மாவட்டம் என்றும், திருவாரூரைத் தலைமையிடமாகக் கொண்ட வள்ளியம்மை மாவட்டம் என்றும் பிரிக்கப்படும். தென் ஆர்க்காடு மாவட்டம் கடலூரைத் தலைமையிடமாகக் கொண்ட தென் ஆர்க்காடு மாவட்டமாகவும், விழுப்புரத்தை தலைமையிடமாகக் கொண்ட வள்ளலார் மாவட்டம் என்றும் இரண்டாகப் பிரிக்கப்படும். திருச்சி மாவட்டம் பெரம்பலூரைத் தலைமையிட மாகக் கொண்ட திருவள்ளுவர் மாவட்டம் எனவும், திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்ட திருச்சிராப்பள்ளி மாவட்டம் எனவும் பிரிக்கப்படும்.

புதியனவாக அமைக்கப்படும் மாவட்டங்களின் பரப்பளவு, அவை உள்ளடக்கும் வட்டங்கள், அவை களில் ஏற்படுத்தவேண்டிய வசதிகள் போன்றவற்றை இதற்கென அமைக்கப்படும் வல்லுநர் குழு ஆராய்ந்து அறிந்து அரசிற்கு பரிந்துரைகள் செய்யும். பரிந்துரை செய்யப்பட்ட குறிப்புகளை அரசு தக்கப்படி ஆராய்ந்து ஏற்ற வகையில் முடிவெடுத்து, அந்த முடிவுகளை படிப்படியர்க நிறைவேற்றும்.

**41.** அரசுப் பணியாளர்களின் பல்வேறு கோரிக்கை களை அரசு அக்கறையுடன் கவனித்து வருகிறது. வழக்கமாகக் கொடுக்கப்படும் பணிக்கொடையைத் தவிர, ரூ. 10,000-மும் வழங்குவதன் மூலம் அரசுப் பணியாளர்களின் ஓய்வு ஊதிய சலுகைகள் அதிகரிக்கப் பட வேண்டும் என்பது அரசுப் பணியாளர்களின் நீண்ட கால கோரிக்கையாகும். அரசுப் பணியாளர் ஒவ் வொருவரும் மாதம் ஒன்றுக்கு ரூ. 20-ஐ அத்தொகை வட்டியுடன் ரூ. 5,000 ஆக சேர்கிற வரையில் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில், பணியாளர்களை இத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டு செயல்படுத்த அரசு இப்பொழுது முடிவு செய்துள்ளது. அரசுப் பணி யாளர் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது ரூ.10,000 பெற இயலும் வகையில், அரசு, தனது நிதியிலிருந்து ரூ. 5,000 சேர்த்துக் கொடுக்கும். எனினும், முன்ன தாகப் பணியிலிருந்து ஓய்வு பெறுவோருக்கு அவர்கள் செலுத்தும் தொகை வட்டியுடன் கொடுக்கப்படு வதோடு அரசிடமிருந்து ரூ. 5,000-யும் பெறுவர். அரசு பணியாளர்களின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோ சித்து வரையறுக்கப்பட்ட இத்திட்டம் 1—4—1984 முதல் செயலுக்கு வரும்.

**42.** தாராள ஓய்வூதிய விதிகளை 1979 அக்டோபர் மாதத்திற்கு முன்னர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற அரசுப் பணியாளர்கள் அனைவருக்கும் பொருந்துகிற வகையில் அரசு நீட்டித்துள்ளது.

**43.** நான்காவது ஊதிய ஆணைக்குழு (சம்பளக் கமிஷன்) அமைக்கப்படுவதை அரசுப் பணியாளர் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர் என்பதையும் இவ்வரசு அறியும். இது குறித்த முடிவு இவ்வருடமே அறிவிக்கப்படும் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**44.** கட்டிடப் பணியில் ஈடுபட்டுள்ள தொழி லாளர்கள் கட்டிடப் பணி நடந்து வருகையில் விபத்தில் இறக்க நேரிடும்போது அவர்களுடைய குடும்பங்களுக்கு ஏற்படும் துன்பத்தை அரசு அறியும். 1923ஆம் ஆண்டு வேலையாள் இழப்பீட்டு சட்டம், 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடக் கட்டுமானப் பணியாளர்கள் (பணிநிலைமைகள்-பல்வகை விதிகள்) சட்ட முன்வடி விற்கு பொருந்தும் வகையில் அரசு திருத்தம் கொண்டு வந்துள்ளது. இதனால், கட்டிடப் பணியில் ஈடு பட்டுள்ள தொழிலாளர்கள் இறந்தால் அவர்கள் குடும்பத்திற்கு ஏற்படும் துன்பம் ஓரளவுக்கு நீக்கப்படும். 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடக் கட்டுமானப் பணியாளர்கள் (பணிநிலைமைகள்-பல்வகை விதிகள்) சட்ட முன்வடிவிற்கு அதிகாரபூர்வமான திருத்தம் ஒன்றை அரசு கொண்டு வர இருக்கிறது. இதன்படி, இப்பணி யாட்களை வேலையில் வைத்திருப்பவர்கள், வேலையின் போது இவர்களின் ஆயுளுக்கும் மற்றும் அங்க இழப்பு களுக்கும் போதுமான காப்புறுதி வசதி ஏற்படுத்த வேண்டும் என்பது கட்டாயமாக்கப்படும். இத்திருத்தத் தினால் பயன் பெறாதவர்களுக்கு அரசு, முதலமைச் சரின் நிவாரண நிதியிலிருந்து இறந்தவரின் குடும்பத் திற்கு ரூ. 10,000 அளிக்க முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயன் பெற கட்டிடப் பணியாளர்கள் ரூ. 5 கொடுத்து தங்களை தொழிலாளர் நலத் துறையில் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

**45.** ஊராட்சி-நகராட்சித் தேர்தல்களை 1984 பிப்ரவரியில் நடத்த அரசு முன்னர் முடிவு செய்திருந்தது. அவ்வண்ணமே அதற்கான தொடக்க ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டன. எனினும், மாநிலத்தின் சில பகுதிகள், அதாவது, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தென் ஆற்காடு மாவட்டங்கள் அண்மையில் கடுமையான வெள்ளத் தினால் பாதிக்கப்பட்டு இப்பகுதிகளில் சொத்துக் களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டதுடன் போக்குவரத்து வசதிகளும் மிகவும் பாதிக்கப்பட்டன. இப்பகுதிகளில், அரசு நிர்வாகம், போர்க்கால அடிப்படையில் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டியிருந்தது. நிவாரணப் பணிகள் தற்போது நடந்துகொண்டிருக்கின்றன. மிகப் பெரும்பாலோர் தஞ்சை போன்ற மாவட்டங்களில் வீடிழந்து குடிபெயர்ந்துள்ளனர். அவர்கள் தங்கள் இருப்பிடங்களுக்கு திரும்பிய பிறகு அல்லது புதிதாக கட்டப்பட்ட குடியிருப்புகளில் குடியேறிய பிறகே தங்களை வாக்காளர்களாக பதிவு செய்து கொண்டு இத்தேர்தலில் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த இயலும். எனவே, ஊராட்சி நகராட்சித் தேர்தல்களைத் தள்ளிப் போடவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. சட்டமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடர் முடிந்தபின் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய தேர்தல்களை இரண்டு கட்டமாக 19—4—1984 அன்றும், 23—4—1984 அன்றும் நடத்தவும் நகராட்சித் தேர்தல்களை 28—4—1984 அன்று நடத்தவும் அரசு முடிவு செய்துள்ளது. இது மன்ற உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் என நம்புகிறேன்.

திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி நகராட்சிகளின் நிலையை மாநகராட்சிகளாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இம்மாநிலத்தில் உள்ள மாநகராட்சிகள் அனைத்திற்கும் பொதுவான சட்டம் ஒன்றை இயற்றவும் அரசு நடவடிக்கை எடுக்க உள்ளது.

**46.** அடுத்தடுத்து இயற்கை இடர்ப்பாடுகள் வந்த போதிலும், மாநிலம் பொருளாதாரம் மற்றும் பிற துறைகளில் அடைந்த நிலையான முன்னேற்றத்தைக் கோடிட்டுக் காட்டியுள்ளேன். வறுமையை ஒழிக்கவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், வருங்காலத்தில் அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறியுள்ளேன். மாநிலம் ஏற்றிருக்கும் இந்த மிகப் பெரிய பொறுப்பை நிறைவேற்ற உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் அளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்.



# வெள்ள நிவாரணப் பணிக்கு விரைவான உதவி



**மா**ண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 18.2.84 அன்று காலையில் வடசென்னையில், புளியந்தோப்பு, கல்யாணி மேஸ்திரி தோட்டம் மற்றும் பி.அண்ட்.சி. மில் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார். முழங்கால் அளவு நீரில் நடந்து சென்று வெள் ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உணவு அளிப்பதோடு, நிவாரணப் பணிகளையும் விரைந்து எடுக்கும்படி அதிகாரி களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார். மறுபடியும் வெள்ளத்தில் மக்கள் பாதிக்கப்படாதவாறு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் உயரமான இடங்களில் இவர்களுக்கு வீடுகள் கட்டித்தர நடவடிக்கை எடுக்கும்படியும் உத்தரவிட்டார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்றபோது நீர்சூழ்ந்த இடங்களில் கார் வழியில் நின்று விட்டதால், ஜீப்பில் ஏறிச் சில பகுதிகளைப் பார்வையிட்டார்.



சென்னையில் வெள்ளம் பாதித்த பகுதி களை அமைச்சர்கள் நேரிடையாகச் சென்று பார்த்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரண நடவடிக்கைகளை எடுக்குமாறு மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, 19.2.84 அன்று மாண்புமிகு அமைச்சர்கள் திரு கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள் ஆயிரம் விளக்குப் பகுதியையும், திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தியாகராய நகர்ப் பகுதியையும், திரு இராம. வீரப்பன் அவர்கள் சைதாப் பேட்டைப் பகுதியையும், திரு சி. பொன்னையன் அவர்கள் அண்ணாநகர்ப் பகுதியையும், திரு ப. குழந்தைவேலு அவர்கள் சேப்பாக்கம் பகுதி யையும், திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் எழும்பூர்ப் பகுதியையும், டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள் பூங்கா நகர்ப் பகுதியையும், திரு எஸ். முத்துசாமி அவர்கள் புரசைவாக்கம் பகுதியையும், திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் மயிலாப்பூர் பகுதியையும், திரு எம். விஜயசாரதி அவர்கள் பெரம்பூர் பகுதியையும், திரு இரா. சவுந்தரராசன் அவர்கள் ஆர்.கே. நகர்ப் பகுதியையும், திரு எஸ். ஆர். இராதா அவர்கள் திருவல்லிக்கேணிப் பகுதியையும், திரு. யா. சை. மு. யூசுப் அவர்கள் துறைமுகப் பகுதியையும், திரு க. கலைமணி அவர்கள் இராயபுரம் பகுதியையும் பார்வையிட்டு நட வடிக்கைகள் எடுத்தார்கள்.

# இது எங்க ஆத்தாக்கு...

மகத்தான திட்டமென்று மாநிலத்தார் போற்றும் முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தை, மக்களை ஏமாற்றும் திட்டமென்று மாசு கற்பிப்பவர்களும் சிலர் நாட்டில் இருக்கிறார்கள். இவர்களது கூற்றில் உள்ள போலி வாதத்தைப் பொடியாக்கும் வகையில் மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் திரு ஆர். சௌந்தரராசன் அவர்களைப் பேட்டி காணச் சென்றோம்.

பேட்டியின்போது கேட்ட கேள்விகளும், அவற்றுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுரைகளும் கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.



மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர்

## திரு. ஆர். சௌந்தரராசன் அவர்களின் பேட்டி

**சத்துணவுத் திட்டம் மக்களை ஏமாற்றும் திட்டம், மக்களுக்கு நன்மை பயக்காத திட்டம் என்று ஒரு சிலர் கூறுகிறார்களே ?**

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தில் சின்னஞ்சிறு குழந்தைகளும், வளர்ந்த குழந்தைகளும் ஒரு நாளைக்கு ஒருவேளை நல்ல அரிசிச் சோறு சாப்பிடுகிறார்கள். யார் இந்தக் குழந்தைகள் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். கம்பஞ் சோறு, கேழ்வரகுக்கூழ் சாப்பிட்டு வளர்ந்த ஏழை மக்கள் பெற்ற செல்வங்கள்.

நாம்தான் இப்படிக் கஞ்சிக்கும் கூழுக்கும் அல்லல்படுகிறோமே, நம்முடைய குழந்தைகளாவது பள்ளிக்குப் போய் ஒருவேளை நல்ல சாப்பாடு சாப்பிட்டு, படிப்பும் படித்து வரட்டும் என்று மக்கள் அனுப்புகிறார்கள். இந்த ஏற்பாடு பள்ளிகளில் இல்லாவிட்டால், இந்தக் குழந்தைகளை அந்தப் பெற்றோர்கள் வேலைக்குத்தான் அனுப்புவார்கள்.

ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் குழந்தைப்பருவம்தான் முக்கியமானது. ''நாட்டின் முதுகெலும்பைப் போன்றவர்கள் குழந்தைகள்'' என்று நவின்றார் பண்டிதஜவகர்லால் நேரு.

முதுகெலும்பு இல்லாவிட்டால் மனிதனால் நடமாட முடியாது. நிற்க முடியாது. அப்படியே ஒரு நாட்டின் குழந்தைச் செல்வங்கள் வளமானவர்களாக அமையா விட்டால் அந்த நாட்டின் முன்னேற்றம் சீர் குலைந்துவிடும். முதுகெலும்பற்ற மனிதனைப் போல் ஆகிவிடும்.

வளர்கின்ற சமுதாயம் வளமானவர்களாக-நோய் நொடியற்றவர்களாக விளங்க வேண்டும். இதற்காக இவர்களுக்குச் சத்துணவு வழங்குகிறோம். சத்துணவு, நோயை விரட்டுகிறது. வறுமையை ஓட்டுகிறது.

''கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினும் கொடிது இளமையில் வறுமை''
என்பது ஔவையின் வாக்கு.

குழந்தைகள் கவலையற்றவர்களாக வளர வேண்டும். அப்பொழுதுதான் அவர்களால் கல்வியில் முழுக்கவனம் செலுத்த முடியும். வயிற்றுக்கு என்ன செய்வது என்று ஏங்கினால், அவன் கற்ற அறிவும் மழுங்கி அழிந்து விடுவான்.

இளமை துடிப்பானது. கல்லைக்கூட ஜீரணம் செய்யும் பருவம். அந்த வயதில் வறுமை தலைகாட்டாதபடி செய்கிறது சத்துணவுத்திட்டம்.

நோஞ்சான் குழந்தைகள் நாட்டுக்குப் பாரமே தவிர, ஒருபோதும் நாட்டுக்கு உதவியாக இருக்க முடியாது.

**இந்தத் திட்டம் முதலமைச்சரின் யோசனையில் உதித்த திட்டம் என்று குறை கூறப்படுகிறதே ?**

அப்படியே இருக்கட்டும். அதில் என்ன தவறு?



எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் சில தத்துவங்கள் தனி மனிதனின் சிந்தையில் தான் உதிக்கும். பிறகு நாட்டு மக்களால் அது ஏற்றுக் கொள்ளப்படும். அதற்கு நம்முடைய தலைவரும் விதிவிலக்கல்ல.

அசோகன் கலிங்கத்துப் போரில் கஷ்ட நஷ்டங்களை நேரில் கண்டான். போரின் கொடுமையால் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் அளவிடற்கரிய இன்னல்களுக்கு ஆளாவதைக் கண்டு, இனிமேல் என் வழி போரில்லாத அகிம்சை வழிதான் என்று மனம் மாறினான்.

வாழ்க்கை அனுபவங்கள் ஒரு சிலருக்குத்தான் ஏற்படுகின்றன. சிலர்தான் சிந்திக்கிறார்கள். சரித்திரத்தில் புத்தர், ஆப்ரகாம் லிங்கன், காந்தியடிகள், நேரு, பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்களால் தான் சிந்திக்க முடியும். அப்படிப்பட்ட சிந்தனையாளர்களின் வரிசையில் வந்தவர் புரட்சித் தலைவர்.



காந்தியடிகள் ஆப்ரிக்காவில் கண்ட அனுபவம், சிந்தித்த சிந்தனை, கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று செய்ய அவருக்குள் வித்திட்டது. அகிம்சை வழியில் சுதந்தரப் போராட்டம் இந்தியாவில் பூத்திட்டது.

இப்படிப் புரட்சித் தலைவர் அவர்களின் இளமை வாழ்க்கையில் அவர் அனுபவித்த இன்னல், வறுமை, பசி, பட்டினி அவரைச் சிந்திக்க வைத்து, தான் அனுபவித்த பசிக் கொடுமையைத் தனது நாட்டு மக்கள் குழந்தைப் பருவத்தில் அனுபவிக்கக்கூடாது என்ற தூய நோக்கத்தோடு, சிறந்த லட்சியத்தோடு கொண்டுவந்த திட்டம்தான் இந்த முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத்திட்டம்.

**புகழ் பெறவேண்டும் என்ற பிரச்சார நோக்கத்திற்காகச் செய்யப்படும் விளம்பரத் திட்டம் என்று சிலர் கொச்சைப் படுத்துகிறார்களே ?**

பாபுலாரிடி அவசியம் இல்லாத தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள். இன்று வாழ்கின்ற உலகத் தலைவர்களில் இவ்வளவு பெரும் புகழோடும் வாழும் தலைவர் வேறு யாரும் இல்லை. அவருக்கு இனிமேல் என்ன விளம்பரம் தேவை இருக்கிறது?

திரைப்பட நடிகர் ஒருவரால் திறம்பட அரசியலில் சடுபட்டு, சிறப்பாக நிர்வாகத்தை நடத்த முடியும் என்று முதன் முதலில் உலக சாதனை நிகழ்த்தியவர் நமது புரட்சித் தலைவர். இவருக்குப் பிறகுதான் அமெரிக்காவில் ரீகன் அதிபராக வந்ததைப் பார்த்தோம்.

நமது தலைவர் தேர்தலை நோக்கமாகக் கொண்டவராக இருந்திருந்தால், இந்தத் திட்டத்தை அவர் தேர்தல் அறிக்கையில் சேர்த்திருக்க வேண்டும். அவர் அப்படிச் செய்யவில்லை. இதிலிருந்தே அவரது கவலையெல்லாம், அடுத்த தேர்தலைப் பற்றியல்ல: அடுத்த தலைமுறையைப் பற்றியதுதான் என்பது தெளிவாகும்.

ஓர் அரசியல்வாதி அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திக்கிறான்; ஒரு ராஜதந்திரி அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்திக்கிறான் என்று சொல்வார்கள். புரட்சித் தலைவர் தமிழ்நாட்டின் எதிர்காலச் சந்ததியினரைப் பற்றிச் சிந்தித்ததன் விளைவுதான் சத்துணவுத் திட்டம்.

சுயவிளம்பரத்திற்காகச் செயல்படுத்தப் படும் திட்டமல்ல இது.

கடவுளிடம் மக்கள் என்ன கேட்கிறார்கள்? ''என்னை நல்லா வைத்திரு, கவலையில்லாத வாழ்க்கையைக் கொடு'' என்றுதான் கேட்கிறார்கள். இலட்சக் கணக்கான மக்களின் வாழ்க்கையில் கேள்விக்குறியாக இருந்த பசிக் கொடுமையைப் போக்கினார் புரட்சித் தலைவர்.

ஆண்டவனே கைவிட்ட, ஆண்டவனே செய்யத் தவறிய ஒன்றை ஆளுகிறவர் நிறைவேற்றி வருகிறார்.

**சத்துணவுத் திட்டத்தால் ஏற்பட்டுள்ள பலன்களைச் சற்று விளக்குவீர்களா ?**

சத்துணவுத் திட்டத்தால் சமூகம் பெற்று வரும் நன்மைகள் பல. நோயற்ற சமுதாயம் உருவாகி வருகிறது. குழந்தைப் பருவம்தான் அடித்தளம் போன்றது. சத்துணவு, நோய் எதிர்ப்பு ஆற்றலைத் தருகிறது. இப்பொழுது நாம் செலவு செய்யும் ஒவ்வொரு காசையும் பிற்பாடு பெரிய அளவில் சமுதாயம் மக்களுக்குத் திருப்பித் தரப்போகிறது. இந்தக் குழந்தைகள் நோயில்லாமல் வளர்வார்கள். அவர்களுக்குச் செலவு செய்ய வேண்டிய மருத்துவச் செலவு மிகவும் குறைந்துவிடும்.

ஜாதி வேற்றுமையற்ற சமுதாயம் உருவாகிறது. அந்தக் காலத்தில் சித்தனார் காலட்

சேபத்தில் கலைவாணர், ரயில் பெட்டியைச் சமத்துவ வாதியாகச் சித்திரிப்பார். .ரயில் பெட்டியில் இடம் கிடைத்தால் போதும், உட்கார்ந்துவிடுவோம். பக்கத்தில் இருப்பவர் எந்த ஜாதி, எந்த இனம் என்று பார்ப்பதில்லை.

இதுபோலவே இன்று சத்துணவு சாப்பிடும் குழந்தைகள் ஜாதி, சமய, இன வேறுபாடுகளை மறந்து ஒன்றாகச் சாப்பிடுகிறார்கள். ராமசாமி, இப்ராகிம், பிரான்சிஸ் எந்த ஜாதியென்று பார்க்காமல் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுகிறார்கள்.

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பார்கள். ஜாதிமத பேதமற்ற சமுதாயம் இளமையில் இருந்து வளர இந்தச் சத்துணவுத் திட்டம் வழிகோலுகிறது.

இளமையில் படிப்பது முதுமை மட்டும் நிற்கும். அதனால்தான் மகாகவி பாரதியார் கூட, ''ஜாதிகள் இல்லையடி பாப்பா'' என்று பாப்பாவுக்குச் சொல்லி வைத்தார். பாப்பாவை நம்பிய அளவுக்கு அவர் பெரியவர்களை நம்பவில்லை.

சத்துணவால் நோய்கள் குறைந்திருப்பது பல ஆய்வுகளில் இருந்து தெளிவாகியுள்ளது. குழந்தைகளுக்கு வரும் இதய அடைப்பு சத்துணவால் வராது என்று முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஊட்டச் சத்துக் குறைவே எல்லா உடல் உபாதைகளுக்கும் அடிப்படை. சத்துணவு இந்த நோய்களை அகற்றி வலிவும் பொலிவும் அளிக்கிறது. இந்த ஓராண்டில் சொறி சிரங்கு குழந்தைகளிடையே 70 விழுக்காடு குறைந்திருக்கிறது. திருச்சியில் 1200 குழந்தைகளைச் சோதித்ததில் 12 குழந்தைகளுக்குத்தான் சொறி சிரங்கு இருந்தது. அதாவது 1% தான்.

இவ்வாறே (Primary Complex) குழந்தைகள் காசம் ( Infantile Paralysis ) குழந்தைகள் முடக்குவாதம் போன்ற நோய்களும் சத்துணவால் குணமாகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தில் வீரையா என்ற சிறுவன் கைகால் விளங்காமல் நகர்ந்து செல்லக் கூடிய நிலையில்தான் இருந்தான். அவன் சத்துணவு சாப்பிட்டதற்குப் பிறகு எழுந்து நிற்கவும் நடக்கவும் இயலுகிறது என்று அவனது பெற்றோரே கூறியிருக்கின்றனர்.



திருச்சியில் சியாமளா என்ற சிறுமி ரத்த சோகையால் பாதிக்கப்பட்டிருந்தாள்; இப்பொழுது சத்துணவால் குணம் பெற்றிருக்கிறாள்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் பத்மினி என்ற சிறுமி மாலைக்கண் வியாதியால் பாதிக்கப்பட்டிருந்தாள். அவள் சத்துணவு சாப்பிட்டதன் பயனாக, மங்கிய பார்வையிலிருந்து விடுபட்டு, இப்பொழுது தெளிவாகப் பார்க்கிறாள்.

சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப் பட்டதன் பயனாக, பள்ளிகளில் குழந்தைகளின் எண்ணிக்கை கூடியிருக்கிறது. பசித்தவனுக்கு எதுவும் ஏறாது. முதலில் வயிறார உணவு போடவேண்டும். அதன் பிறகு அறிவு புகட்ட வேண்டும். வறுமையைப் போக்கி, அறியாமை இருளையகற்றும் பணியை இத்திட்டம் நிறைவேற்றுகிறது.

சமத்துவ உணர்வை வளர்த்துள்ளது, வசதியில்லாதவர்கள்கூட வாழ்க்கையில் தாழ்ந்துவிடாமல் கல்வி கற்று முன்னேற வழி செய்கிறது. ''நீயாவது போய்ப் படித்துவிட்டு வா'' என்று அங்கே கிடைக்கும் சத்துணவை நம்பி, பல தாய் தந்தையர் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புகிறார்கள்.

திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சியில் ஒரு பள்ளியில் ஒரு சிறுவன் எதையோ மறைத்துக் கொண்டு செல்வதைப் பார்த்தேன். அவனை நிறுத்தி என்னவென்று விசாரித்தேன். அவன் தனது பள்ளியில் தான் சாப்பிட்ட சத்துணவில் மிச்சத்தை, தன் தாய்க்கு எடுத்துப் போகிறான். நான் அவனைப் பிடித்து விட்டதாக அவன் நினைத்து, ''எனக்கு இங்கே சத்துணவு போட்டாங்க. இது எங்க ஆத்தாக்கு நான் கொண்டு போகிறேன்'' என்று உணர்ச்சியுடன் சொன்னான்.

தன் தாயைக் கவனிக்க வேண்டும் என்ற எண்ணம் குழந்தையிலேயே ஏற்பட்டுவிட்டதைப் பார்த்தீர்களா! திருஞான சம்பந்தனுக்கு அதனால்தான் உமாதேவியைப் பால் கொடுக்கச் சொன்னான், உமா மகேசுவரன். தான் சாப்பிடுவதை மற்றவர்களோடும் சேர்ந்துண்ண வேண்டும் என்ற சமுதாய நோக்கை- பரந்த மனப்பான்மையை -பிஞ்சு உள்ளத்தில் வளர்க்கிறது இந்தத் திட்டம்.

சத்துணவுத் திட்டத்தினால் கிடைத்துள்ள இன்னொரு பெரிய நன்மை, ஏராளமான மக்கள் வேலைவாய்ப்பினைப் பெற்



றுள்ளதாகும். ஆடவர், மகளிர் முக்கியமாக விதவைகள், ஆதரவற்றோர், ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இனத்தவர் மொத்தம் ஒரு லட்சத்து 72 ஆயிரத்துக்கும் அதிகமானோர் புதிதாக வேலைவாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். அதிலும் இவர்கள் தங்களது சொந்த கிராமங்களில் அல்லது மிக அண்மையில் உள்ள கிராமங்களில் இந்த வேலைவாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**முதலமைச்சர் நிவாரண நிதி தவறான காரியத்துக்குப் பயன்படுத்தப்படுவதாகக் குறை கூறப்படுவதைப் பற்றி...... ?**

முதலமைச்சர் நிவாரண நிதி என்பது, கஷ்டத்திற்குள்ளானவர்களுக்கு சிரமத்தில் இருப்பவர்களுக்கு-உதவுவதற்காக ஏற்பட்டது தான். தனி நபர்களின் துயர் துடைக்கப் பயன்படுத்தப்படும் நிதியை, சமுதாயத்தில் மிகவும் கவனிக்கப்படவேண்டிய நிலையில் உள்ள ஒட்டுமொத்தமான ஒரு பிரிவினரின் (குழந்தைகளின்) கஷ்ட நிவாரணத்துக்குப் பயன்படுத்துவதில் என்ன தவறு இருக்க முடியும்?

மனிதனுக்கு எதைக் கொடுத்தாலும் நிறைவு, திருப்தி இருக்காது. உணவு ஒன்று தான் அவனைத் திருப்திப்படுத்தும். 'போதும் என்று சொல்ல வைக்கும். ஜப்பான், ஜெர்மனி போல நம் நாடும் விஞ்ஞானிகளைப் பெற்று வாழ்க்கைத் தரத்தில் நாட்டை உயர்த்த, இப்பொழுது சத்துணவு பெற்றுக் கல்வி கற்கும் குழந்தைகளால் இயலும்.

இராஜராஜ சோழன், இராஜேந்திர சோழன் காலத்திலேயே படிக்கும் குழந்தைகளுக்கு பள்ளிக்கூட விடுதிகளில் இலவசமாக உணவு கொடுத்திருப்பதை வரலாறு நமக்குத் தெரிவிக்கிறது. இராஜராஜ சோழனின் தமக்கையார் குந்தவையார் இந்த ஏற்பாட்டைச் செய்திருந்த செய்தியை அறிகிறோம்.

சத்துணவுக்கூடங்கள் வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட நேரங்களில் மக்கள் புகலிடம் தேடிப் பாதுகாப்பாகத் தங்குவதற்குப் பயன்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு அப்பொழுது உணவளித்துக் காப்பாற்ற அங்கே சேமித்து வைக்கப்பெற்ற உணவுப் பொருள்கள் பயன்பட்டிருக்கின்றன.

'' தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்'' என்றார் மகாகவி பாரதியார். பட்டினி தாங்காமல் நல்ல தங்காள், தான் பெற்ற குழந்தைகளைக் கிணற்றில் போட்டுக் கொன்றாள். இப்படித் தாய்க்குலம் நல்லதங்காள்களாக மாறிவிடக்கூடாது என்ற தாயுள்ளத்தோடு தான் புரட்சித் தலைவர் இந்தச் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்.

உலகில் ரஷ்யப் புரட்சி, பிரஞ்சுப் புரட்சி போன்ற புரட்சிகள் வெடித்ததற்கே காரணம் பசிதான். ''சாலையோரத்தில் சில வேலையற்றதுகள். வேலையற்றவர்களின் உள்ளத்தில் விபரீத எண்ணங்கள்'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் எச்சரித்ததை நாம் மறந்துவிடக்கூடாது.

**சில சத்துணவுக் கூடங்களில் உணவு சரியாகப் போடப்படுவதில்லை என்று குற்றம் சாட்டப்படுகிறதே? என்று கேட்க நினைக்கின்றோம்.**

அப்பொழுது அமைச்சரவர்களைப் பார்க்க வந்த ஒரு பிரமுகர் ''கோயம்புத்தூரிலே 28 பேரை வீட்டுக்கு அனுப்பிவிட்டீர்களாமே?'' என்று கேட்டுக் கொண்டே நுழைகிறார்.

''ஆமாம். குழந்தைகளுக்குப் போடும் உணவில் கள்ளத்தனம் செய்யலாமா? ஒரு இடத்தில் அளவு குறைவாக இருந்தது. ஒரு மூதாட்டி, தனக்குப் போட்ட சோற்றைக் கொண்டு வந்து காட்டினாள். அளவு உண்மையிலேயே குறைவாக இருந்தது. நடவடிக்கை எடுத்தோம்.

இன்னொரு இடத்தில், குழந்தைகளைத் தரையிலே தூங்க வைத்திருந்தார்கள். அரசு வாங்கிக் கொடுத்த பாய் பிரிக்கப்படாமலே இருந்தது. அதுபோலவே குழந்தைகளின் விளையாட்டுச் சாமான்கள் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படவில்லை. குறளமுதம் கற்றுத்தர நாம் சம்பளம் கொடுத்து ஊழியர்களை நியமித்துள்ளோம். அதைச் சொல்லிக் கொடுக்கவில்லை. திருக்குறளுக்கும், நடமாடும் தெய்வத்துக்கும் துரோகம் செய்யலாமா? வேலை நீக்கம் செய்துவிட்டோம்'' பளிச்சென்று பதில் வருகிறது மாண்புமிகு அமைச்சரிடமிருந்து. நம்மைப் பார்த்துத் தொடர்கிறார்:

''ஒரு மாபெரும் திட்டத்தில் அங்கொன்றும் இங்கொன்றும் குறைகள் இருக்கவே செய்

யும். அந்தக் குறைகளைப்போக்க நடவடிக்கை எடுக்கச் சொல்வதுதான் சரியே தவிர, திட்டமே தேவையில்லை என்பது எப்படிப் பொருத்தமான வாதமாகும்? அது விதண்டா வாதம்!

தூங்குகிறவனை எழுப்பலாம். தூங்குவதுபோல் நடிப்பவனை எப்படி எழுப்புவது? அறிவாளிக்கும் புத்தி சொல்லலாம்; அறிவற்றவனுக்கும் புத்தி சொல்லலாம். இரண்டும் இல்லாமல் இடைப்பட்ட நிலையில் குழப்புகிறவர்களை எப்படித் திருத்த முடியும்?

சர்.சி.வி.ராமன் தமது ஆய்வைச் சொன்னபோதுகூட அவரைக் கேலி செய்தார்கள். பிறகு உலகம் அவர் சொன்ன உண்மையை ஏற்றுக் கொண்டது. அதுபோல, புரட்சித் தலைவரின் இந்தத் திட்டத்தை இப்பொழுது புரிந்து கொள்ளாதவர்கள், இன்னும் சிறிது காலம் பொறுத்து அதன் பயனைக் காணும்பொழுது தெளிவாகப் புரிந்து கொள்வார்கள். அப்படிப் புரிந்து கொள்ளும்பொழுது இது தனி ஒரு மனிதனின் திட்டமாக இல்லாமல், உலகத் திட்டமாக மாறிவிடும். இப்பொழுதே இந்தியாவில் பிற மாநிலங்கள் பின்பற்ற முயல்கின்றன. நாடே ஏற்றுக் கொள்ளும் காலம் வரும். உலகக் கல்வி-குழந்தை நல நிபுணர்கள் ஆர்வத்துடன் கூர்ந்து கவனிக்கின்றார்கள்.



சிற்றெறும்புகள் மழைவருங் காலத்தை முன்னதாக அறிந்து, தங்கள் வாயில் வெள்ளை முட்டைகளைச் சுமந்து சாரை சாரையாக மேடான இடம் நோக்கிச் செல்வதைக் காணலாம். இப்படிச் சிறுவர்கள் வெண்சோற்றைக் கையில் ஏந்திக் கொண்டு வரிசையாகச் சென்ற ஒரு காட்சி 2000ஆண்டுகளுக்கு முன்னால் புறநானூற்றில் (புறம்183) சித்திரிக்கப்பட்டுள்ளது.

மன்னன் கிள்ளிவளவன் பண்ணன் என்ற வள்ளலை வாழ்த்தி இந்தப் பாடலைப் பாடியிருக்கிறான். பண்ணன் என்ற வள்ளல் இளஞ் சிறார்க்குச் சோறளித்துப் பசிப்பிணியைப் போக்கிவிட்டான். அதனால் ஊரார் அவனை, ''பசிப்பிணி மருத்துவன்'' என்றே அழைத்தனர். இத்தகைய வள்ளல், என் வாழ்நாளையும் சேர்த்து நீடூழி வாழ்க என்று கிள்ளி வளவன் என்ற குறுநில மன்னன் வாழ்த்துகிறான். ''யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய'' என்கிறான்.



இன்றைக்கு அந்தக் கிள்ளிவளவன் இருந்தால், இன்றைய பசிப்பிணி மருத்துவராகிய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களைத்தான் வாழ்த்திப் பாடுவான். மக்களாட்சியில் மன்னன் இல்லை. மக்கள் தான். வாழ்த்தக்கூட வேண்டாம். வசைபாடாமலாவது இருக்கலாம் அல்லவா?

அவர்கள் வாழ்த்தாவிட்டாலும், வாழ்த்த வேண்டியவர்கள் வாழ்த்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். ''சோறு போட்ட புண்ணியவான் வாழ்க'' என்று தாய்மார்கள், தங்கள் குழந்தைகள் ஒவ்வொரு கவளம் சத்துணவு சாப்பிட்டுக் களைபொருந்திய முகத்தினராய் நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாய் வளர்வதைப் பார்க்குந் தோறும் வாழ்த்தும் வாழ்த்து இருக்கிறதே, அது புரட்சித் தலைவரை நூறாண்டுக்காலம் வாழவைக்கும்.

அவர் தனக்குப் புகழ் வேண்டும் என்பதற்காக இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருந்தால், வேறு பெயர் வைத்திருக்கலாம். அப்படிச் செய்யவில்லை. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத்திட்டம் என்று வைத்ததிலிருந்தே இந்தப் புகழ், அவருக்கு முன்பிருந்த முதலமைச்சர்களையும் சேருகிறது. அவருக்குப் பின்னால் வரக்கூடிய முதலமைச்சர்களையும் சேர்கிறது."

சத்துணவுத் திட்ட அமைச்சரின் பேச்சில் சத்தும் இருக்கிறது. சுவையும் இருக்கிறது. எப்பொழுதும் கலகலப்பாக, எவ்வளவு பேர் வந்தாலும் அவ்வளவு பேர் குறைகளையும் கேட்டு முடித்துவிட்டு, அர்ப்பணிப்பு உணர்வுடன் இந்த அரும்பெரும் திட்ட நிறைவேற்றத்துக்குப் பாடுபட ஊழியர்களை ஊக்குவிக்கும் அவர் திறன் நம்மைப் புல்லரிக்கச் செய்கிறது. பெருமைப்பட வைக்கிறது.

—பேட்டி: மு. முத்துக்காளத்தி

# தமிழகத்தில் ஊரகத் தொழில் வளர்ச்சி



மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்

## திரு. இரா. அருணாசலம்

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)**

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி) தொழில் வணிகத் துறையின் கீழ் இயங்கி வந்த சிறு தொழிற் பிரிவுகளை 1.12.1965 முதல் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. பொருளாதார முறையில் தனித்தியங்கக் கூடிய வகையில் அவற்றை இயங்கச் செய்வதே இதன் நோக்கமாகும்.

31.3.1982ஆம் நாளன்றுள்ளபடி, இந்நிறுவனத்தின் மூலதனம் மற்றும் கடன் குறித்த விவரங்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | ரூ10.00 | கோடி |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. 7.81 | ,, |
| அரசிடம் பெற்ற கடன்கள் | ரூ. 8.83 | ,, |

சென்ற இதழ்த் தொடர்ச்சி

தற்போது இந்நிறுவனத்தின் உற்பத்தி தொழில் நிலையங்கள் 56 உள்ளன. தொழில் வகை பிரிவுகள் பின்வருமாறு:

கட்டுமான பட்டறைகள்
தளவாட அறைகள்-இணைந்த பிரிவுகள்
பொறியியல் தொழில் பட்டறைகள்
கட்டுமானப் பணிகள்
வார்ப்படத் தொழில் பிரிவுகள்
தச்சுத் தொழில் பிரிவுகள்
தோல் பொருள் தயாரிப்புப் பிரிவு
சிறப்பு வகையிலான பல்வகைத் தொழில் பிரிவுகள்

டான்சி நிறுவனத்தின் பெரும்பாலான பிரிவுகள் அரசுத் துறைகளிடமிருந்தும், மற்றும் இரயில்வே, மின்சார வாரியங்கள், தபால் தந்தித் துறை, தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியம், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் போன்ற அரசுத் துறை நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும் கொடுக்கின்ற பணிகளை நிறைவேற்றி வருகின்றன.

இந்நிறுவனத்தை ஆதாயத்தில் இயங்கச் செய்யத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**பட்டுத்தொழில்**

பட்டுத் தொழில், வேளாண்மை சார்ந்த குடிசைத் தொழில் ஆகும். ஒரு ஏக்கர் முசுக்கொட்டைச் செடியை இறைவைப் பயிராகப் பயிரிடும்போது ஏறக்குறைய 5 நபர்களுக்கு ஆண்டு தோறும் வேலை வாய்ப்புக் கிடைக்கிறது. முசுக்கொட்டை பயிரிட்டு பல விவசாயிகள் மாதம் ஒருமுறை வருவாய் பெறும் வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். இந்த உண்மையைக் கருத்தில் கொண்டு, பட்டுக் கைத்தறி நெசவாளர் தேவையை ஓரளவு தமிழ்நாட்டிலேயே பூர்த்தி செய்ய வேண்டும் என்னும் நோக்கத்துடன் பயனுள்ள திட்டங்கள் பல அறிமுகம் செய்யப்படுகின்றன. மேலும் 1979ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல், தனியாக பட்டு வளர்ச்சித்துறை செயல்பட்டு வருகிறது.

தற்போது 36 பட்டு நூற்புத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. 1983-84ஆம் ஆண்டில் மேலும் 5 பட்டு நூற்புத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும். தமிழ்நாடு முழுவதும் தற்போது கிராம அளவிலான இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையங்கள் 65 உள்ளன. 1983-84ஆம் ஆண்டில் கிராம அளவிலான இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையங்கள் மேலும் 50 மையங்களைத் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பட்டுப்புழு வளர்ப்புக்காக 1981-82ஆம் ஆண்டு 65 இலட்சம் முட்டைகளும் 1982-83ஆம் ஆண்டு 83 இலட்சம் முட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 180 இலட்சமாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முசுக்கொட்டைச் செடி பயிரிடப்படும் பரப்பளவை இந்த ஆண்டுமேலும்7400 ஏக்கர் அதிகமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அப்பொழுது முசுக்கொட்டைச் செடி பயிரிடப்

படும் பரப்பளவு 63,000 ஏக்கர் அளவிற்கு உயரும். உழவர்கள் பயிற்சித் திட்டத்தின் கீழ் 4,710 உழவர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். ஓர் உழவருக்கு மூன்று மாதப் பயிற்சியும், ஒரு மாதத்துக்கு ரூ. 150 வீதம் உதவித் தொகையும், மேலும் பட்டுப்புழு வளர்ப்பு உபகரணங்கள்வாங்குவதற்காக 50 சதவிகிதம் உதவித் தொகையும் வழங்கப்படுகின்றன. மேலும் உழவர்களுக்கு பட்டுப்புழு வளர்ப்புக் கருவிகள் வாங்குவதற்காக ரூ. 500- உதவித் தொகையும் (விலையில் 25 சதவிதம்) பட்டுப்புழு வளர்ப்புகொட்டகை கட்டுவதற்கு ரூ.750 உதவித்தொகையும் (கட்டுமானச் செலவில்25 சதவிகிதம்) வழங்கப்படுகிறது. உழவர்களுக்குத் தேவையான கடன் வசதி பெறுவதற்காக இத்துறையின் அதிகாரிகள் வேண்டிய உதவியை நல்குகின்றனர்.

1982 டிசம்பர் வரை 44,430 பேர் புதிதாகப் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்



டனர். இத்தொழிலில் இதுவரை 2.8 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டது. 18,090 ஆதி திராவிடர்களும் 5100 மலை வாழ் மக்களும் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

பட்டுப்புழு வளர்ப்பவர்கள், தங்கள் உற்பத்திப் பொருள்களை நியாய விலையில் விற்பதற்கு இயலும் வகையில், பல்வேறு மையங்களில் பட்டுக்கூடு விற்பனை அங்காடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பெண்களுக்கென்றே இரு சங்கங்கள் சேலம் மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் தமிழ்நாடு மாநிலப் பட்டு உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு விற்பனை இணையம், இவ்வாண்டு 82,400 கிலோகிராம் எடையுள்ள மூலப்பட்டை விற்பனை செய்து சாதனை நிகழ்த்தியுள்ளது.

பைவோல்டின் இனப்பட்டுப்புழு வளர்ப்புத் திட்டம் தமிழ்நாட்டில் அண்மையில் கொண்டு வரப்பட்டு 2000 உழவர்கள் இவ்வாண்டு இதனை மேற்கொண்டுள்ளார்கள். இப்பட்டுப்புழு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் சுமார் 5 இலட்சம் கிலோ கிராம் பட்டுக் கூடுகள் உற்பத்தி பெருக்கப்படும். ஆகையால் ரூ.117.70 இலட்சம் செலவில் பைவோல்டின் இனப்பட்டுப்புழு வளர்ப்பு செயல்விளக்கப் பயிற்சிப் பிரிவுகள் அமைக்கப்படும். மேலும் தமிழ்நாடு வேளாண்மைப பல்கலைக்கழகத்தின் வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கெனத் தொடங்கப்பட்ட சிறப்புப் பயிற்சித் திட்டம் இவ்வாண்டும் தொடர்ந்து செயல்பட்டு வரும்.

சிறு தொழில்களுக்கும், ஊரகத் தொழில்களுக்கும் உதவுவதற்கென்றே அரசு சில அமைப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. இவற்றில் குறிப்பிடத்தக்கது தமிழ்நாடு சிறு தொழில வளர்ச்சி நிறுவனமாகும்.

### தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்

கடந்த சில ஆண்டுகளில் இந்நிறுவனம் சிறு தொழில்களின் சீரிய வளர்ச்சிக்கு உதவும் முக்கியமான அங்கங்களில் ஒன்றாக மலர்ந்துள்ளது. தவணை முறையில் தொழிற்கூடங்கள், கிராமப்புறங்களில் மேம்படுத்தப்பட்ட மனைகள், பின்தங்கிய பகுதிகளிலும் கிராமப்புறங்களிலும் மிகச் சிறிய தொழில்களுக்குத் தேவையான தொழிற்கூடங்கள் போன்ற அடிப்படை வசதிகளை அமைத்துத் தருதல், முக்கிய மூலப்பொருள்களைப்பகிர்ந்தளித்தல், சிறு தொழில்களின் பொருள் விற்பனையில் உதவுதல் இவை முக்கியமான பணிகளில் சில. 1977-78 முதல் 1983-84 (ஆகஸ்டு வரை) தமிழகமெங்கிலும் 861 தவணை முறைத் தொழிற்கூடங்களும், 270 மேம்படுத்தப்பட்ட மனைகளும் சிறுதொழில்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தீப்பெட்டித் தொழில், பட்டுத் தொழில் போன்ற ஊரகத் தொழில்களின் வளர்ச்சிக்கென மிகச் சிறு தொழிற்கூடங்கள் அமைத்துத்தரப்பட்டுள்ளதே பாரம்பரியமில்லாத பகுதிகளுக்கும் இத்தொழில்கள் பரவத் தொடங்கியுள்ளதற்கு ஒரு முக்கிய காரணம் என்று கூறினால் அது மிகையாகாது. கடந்த நான்கு ஆண்டுகளில் தீப்பெட்டித் தொழிலுக்கென இத்தகைய 723 கூடங்களும், பட்டுத் தொழிலுக்கென 72 கூடங்களும் இதர தொழில்களுக்கு 953 கூடங்களும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நிறுவனத்தால் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள மூலப் பொருள்களின் மதிப்பு 1976-77ல் ரூ. 269



லட்சமாயிருந்தது, 1982-83ல் ரூ. 1,472லட்சமாக உயர்ந்துள்ளது

கடந்த சில வருடங்களில் மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ள பணி, சிறு தொழில்களுக்கு விற்பனை வசதி செய்து கொடுப்பதாகும். 1978-89ல் இத்தகைய உதவி பெற்ற சிறு தொழில்களின் எண்ணிக்கை 14 ஆகவும், பொருள்களின் மதிப்பு ரூ.26.30 லட்சமாகவும் இருந்ததற்கு மாறாக, 1982-83ல் உதவி பெற்ற சிறு தொழில்களின் எண்ணிக்கை 191 ஆகவும், பொருள்களின் மதிப்பு ரூ. 494.58 லட்சமாகவும் உயர்ந்துள்ளது இத்திட்டத்தில் ஏற்பட்டுள்ளமுன்னேற்றத்திற்குச் சான்று கூறுவதாகும். 1983-84ல் முதல் ஐந்து மாதங்களிலேயே அதாவது ஆகஸ்டு திங்கள் வரையிலுமே இத்திட்டத்தின் மூலம் 142 சிறு தொழில்கள் பயன் பெற்றுள்ளன. பொருள்களின் மதிப்பு ரூ. 439.21 லட்சமாகும்.

இத்திட்டத்தில் சிறு தொழில்கள், முக்கியமாக ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ளவை, இன்னும் அதிக அளவிற்குப் பங்கு பெற்றுப் பயனடையவேண்டுமென்பதுதான் அரசின் கருத்தாகும்.

### போற்றத்தக்க முன்னேற்றம்

ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளின் விளைவாக தமிழகத்தில் சிறு தொழில் துறையில் மிகவும் சிறப்பான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. சான்றாக, 1978 மார்ச் திங்கள் இறுதியில் 18,789 ஆக இருந்த நிரந்தரப்பதிவுச் சான்றிதழ் பெற்ற சிறு தொழில்களின் எண்ணிக்கை 1983 ஜூன் திங்கள் இறுதியில் 46,986 ஆக உயர்ந்தது. அதாவது ஐந்தாண்டுக் காலத்தில் இத்துறையில் சுமார் 150 சதவிகித அபிவிருத்தி தோன்றியுள்ளது. அது மட்டுமன்றி, இந்த மொத்தப் பதிவீட்டில் தென்னார்க்காடு, வடஆர்க்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம், தருமபுரி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஒன்பது பின்தங்கிய மாவட்டங்களின் பங்கு 1978 38.7 சதவிகிதத்திலிருந்து 1983 ஜூன் திங்களில் 42 சதவிகிதமாக உயர்ந்திருப்பது முன்னேற்றத்தின் பயன் பின்தங்கிய பகுதிகளுக்கும் பரவத் தொடங்கியுள்ளது என்பதனைத் தெளிவுபடுத்துகிறது.

வடஆர்க்காடு, தென்னார்க்காடு, தருமபுரி, இராமநாதபுரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் பதிவுபெற்றசிறு தொழில்களின் எண்ணிக்கை சுமார் 3 மடங்கு உயர்ந்திருப்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

சிறு தொழில்கள் என்றாலே, இரும்பு வாளிகள், தோல் பொருள்கள்தாம் என்ற நிலை மாறி, இன்றைய தினம் மிகவும் தொழில் நுட்பம் வாய்ந்த பொருள்களும் இத்துறையில் தயாரிக்கப்படக் கூடிய நிலை உருவாகியுள்ளது.

### எதிர்காலத் திட்டங்கள்

கடந்த சில வருடங்களில் வளர்ச்சியின் வேகம் துரிதப் பட்டிருந்தாலும், தொழில் வளர்ச்சி இன்னும் பரவலான முறையில் அமைந்திடவேண்டியதன் அவசியத்தையும், அவசரத்தையும் அரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவே தொழில் வளர்ச்சிக்கு முக்கியமாக, ஊரகத் தொழில்களுக்கு தொடர்ந்து மிகச்



சிறப்பான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. மைய அரசும், மாநில அரசும் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அளித்திடத் தயாராய் உள்ளன. அண்மையில் செயற்படுத்தப்பட்டுள்ள பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இந்த நிதி ஆண்டில் தமிழகத்தில் படித்து வேலையற்ற 16,400 நபர்களுக்கு வங்கிகள் மூலம் நிதி உதவி பெற்றுத் தந்து சுய வேலை வாய்ப்பு நல்கிட வேண்டுமென்று திட்டமிடப்பட்டுள்ளது. இதற்குரிய பணிகளை மாவட்ட தொழில் மையங்கள் மேற்கொண்டுள்ளன.

ஊரகப் பகுதிகளில், தொழில்களைத் துவக்கி, நிர்வகிக்கத்தேவையான பயிற்சிகளை அளிக்கவும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரகக் கைவினைஞர் திட்டம் போன்றவை செயற்படுத்தப்பட்டுவருகின்றன. பயிற்சி பெற்ற நபர்கள் கருவிகளையும், தொழிற்கூடங்களையும் எளிய தவணைகளில் பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது. ஆர்வமுள்ளோர் மாவட்டத் தொழில் மையங்களை அணுகலாம்.

ஏற்கெனவே குறிப்பிடப்பட்டதுபோன்று, தொழில்கள் வேகமாக மட்டுமன்றி பரவலாகவும் வளர்ந்திட வேண்டுமென்பதில் அரசு மிகுந்த அக்கறைகொண்டுள்ளது. வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள எந்தத் தொழிலும் நசிந்துவிடலாகாது என்பதில் அரசு கண்ணும், கருத்துமாக இருந்து வருகிறது. தமிழகத்தின் வளர்ச்சிக்கு மிகவும் உகந்ததோர் சூழ்நிலை உருவாக்கித் தரப்பட்டுள்ளது. விரைவான ,சீரான தொழில் வளர்ச்சி அமைநதிட வேண்டும் என்பது அரசின் உறுதியான நம்பிக்கையாகும்.

# தமிழகத்தில் மீனவர் நலன்

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர்

**திரு. க. கலைமணி**



அண்டார்ட்டிக்காவிற்குச் சென்று வந்த குழுக்கள் இந்தியாவில் பஞ்சம் வந்தபொழுதும் இக்கட்டான வறுமைக்காலத்திலும் இந்தியா தனது நீண்ட நெடிய கடலை நம்பி நிச்சயம் வாழ முடியுமென்ற கருத்தை வெளியிட்டன. நிலத்தைவிட மூன்று பங்குப் பெருக்கத்தை உடைய கடல் நிச்சயம் இந்தியாவைக் காக்குமென நம்பலாம்.

கடலோரப் பகுதிகளில் வாழுகின்ற மக்கள் இந்திய பொருளாதார வளர்ச்சிக்கும் உணவுப் பெருக்கத்திற்கும் பெரிய அளவில் உதவுகின்றார்கள். தமிழகத்தின் கடற்கரையின் நீளம் 1,000 கி.மீட்டர் ஆகும். உள்நாட்டுப் பகுதியில் நீர்த்தேக்கங்கள், குளங்கள் ஆறுகள், ஏரிகள் மற்றும் உவர்நீர் பரப்புகளும் மீன்பிடிப்பதற்குப் பயன்படுகின்றன. 3.69 இலட்சம் எக்டேர் பரப்பளவெனக் கணக்கிடப்பட்டுள்ளது. 4.00 இலட்சம் மீனவர்கள் தமிழகத்தில் 402 கடலோரக் கிராமங்களில் வாழுகின்றனர்.

மத்திய அரசைப் பொறுத்தவரை, ஏன், தமிழகத்தைத் தவிர மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரை மீன்வளத்துறை மற்றதுறைகளோடு இணைக்கப்பட்ட துறையாகவே இருக்கிறது. தமிழகத்தில் மட்டுமே மீன் துறை தனித்துறையாக இயங்குகிறது. இத்தகைய நிலையை உருவாக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்குத் தமிழக மீனவர்கள் என்றென்றும் நன்றிக் கடப்பாடுடையவர்கள்.

கடல்வளமென்றாலே உடனடியாக நாம் மீன்வளத்தை மட்டுமே நினைக்கின்றோம். எண்ணற்ற வளங்களைக் கடல்தாய் தன் மடியிலே வைத்துள்ளாள். எண்ணெய் வளத்திலிருந்து ஏராளமான தாது உப்புக்கள் வரை தோரியம், ரேடியம் வரை கடலடியிலே படிந்து கிடக்கிறது. இவற்றையெல்லாம் வெளிக்கொணர்வதன் மூலம் இந்தியாவின் வளத்தைப் பெரிய அளவிலே பெருக்கமுடியும். இந்திய அரசுக்கு மீன் ஏற்றுமதியினால் அன்னியச் செலாவணியாக ஆண்டுக்குக் குறைந்தது சுமார் ரூ.400 கோடி வருமானம் கிடைக்கிறது. இதிலே விசைப்படகு, கப்பல்கள் இவற்றினால் 30 விழுக்காட்டிற்குக் குறைவாகவே மீன் கரையேறுகிறது. 70 பங்கு மீன் சாதாரண நாட்டுப் படகினாலும் கட்டுமரத்தினாலுமே கரையேற்றப்படுகின்றது. இந்தியாவின் மொத்த மீன் உற்பத்தியில் தமிழ்நாட்டில் கடல்மீன் 19 சதவிகிதமும் உள்நாட்டு மீன் 18 சதவிகிதமும் கிடைக்கிறது.

கடந்த ஐந்தாண்டுத் திட்டங்களில் விசைப்படகுகளை மீனவர்களிடையே அறிமுகம் செய்ய எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டன. துறையில் அமல்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களினால் 1961-62-ல் 93,280 டன்னாக இருந்த கடல்மீன் உற்பத்தி, 1982-ல் 2,35,320 டன்களாக உயர்ந்துள்ளது. மீன்பிடிப்பில் பெரிய அளவு துணை செய்கின்ற கட்டுமரம், நாட்டுப்படகு இவைகளில் பெரிய அளவில் கவனம் செலுத்தி அதில், தொழில் செய்யும் உழைக்கும் மீனவர்களைக் கைதூக்கி விட நாங்கள் முடிவெடுக்க இருக்கிறோம்.

எஞ்சின் பொறுத்தப்பட்ட கண்ணாடி இழைப்படகுகள் வழங்கவும், வசதியாகக் கரையேற்றும் நாட்டுப்படகுகளை அறிமுகம் செய்யவும் தற்போதிருக்கும் நாட்டுப்படகுகளை இயந்திரமயமாக்கவும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் 20 சதவிகிதம் முழு மானியமாகவும் 80 சதவிகிதம் கடனாகவும் வழங்கப்படும்.

''கூடைமுறம், கட்டுநரும்—கூடித் தொழில் செய்தால், தேடிவரும் நன்மை சிறப்புயரும் தோழர்களே'' என்பதைப் போல இனி வரும் நாளில் மீனவர்களுக்கு வழங்கப்படும் விசைப்படகுகளை மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமே வழங்குவதெனவும் இதனால் கிடைக்கும் லாபத்தைச் சங்க உறுப்பினர்களுக்கே வழங்குவதெனவும் அரசு முடிவெடுத்துள்ளது.



தமிழ்நாடு மீன்துறை கடல், நன்னீர் மற்றும் உவர்நீர் பரப்புகளில் மீன் அறுவடை செய்யவும் மற்றும் உற்பத்தி செய்யவும் பல திட்டங்களைக் கீழ்க்குறிப்பிட்ட நோக்கத்தோடு அமல் செய்து வருகின்றது.

1. சாதாரண மீனவர்களுக்குத் தங்களது மீன் உற்பத்தியைப் பெருக்கவும், அவர்களது வருவாயை உயர்த்தவும், கலன்கள் மற்றும் கருவிகளின் இயக்கும் திறமையை அதிகரித்தல்.
2. கடல் மீனவர்கள் தங்களது கலன்களைப் பத்திரமாக விடுவதற்கு போதிய அளவு தங்குதுறை வசதிகள் அமைத்தல்.
3. மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்கு நன்னீர் மற்றும் உவர் நீர்களில் மீன், இரால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மேற்கொள்ளுதல்
4. கூட்டுறவு சங்கங்கள் மீன் பிடிக்கவும் மீன் விற்பனை செய்யவும் பொருளாதார வசதிகள் கொடுத்து பலப்படுத்துதல்.
5. மக்களுக்குத் தரமான மீனை நியாய விலையில் விற்பனை செய்தல்.

**கரையோர வசதிகள்:**

மீன்பிடி கலன்கள் பாதுகாப்பான இடங்களில் நங்கூரமிடுவதற்கு மீன்பிடிதுறைமுகங்கள், தங்குதுறை வசதிகள் மத்திய நிதி உதவியோடு பொருத்தமான இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் தூத்துக்குடி மீன்பிடிதுறைமுகம், கடலூர், நாகப்பட்டினம், மல்லிப்பட்டினம், மண்டபம், இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் இறங்குதுறை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுளளதால் 550 விசைப்படகுகள் தங்க இயலும். 1982-83-ஆம் ஆண்டில் கோடிக்கரையில் இறங்குதுறைவசதி கட்டிமுடிக்கப்பட்டது. துறைமுகப் பொறுப்புக் கழகத்தினரால் சென்னையில் பெரிய மீன்பிடி துறைமுகம் கட்டப்பட்டு வருகிறது. இது முடியும் தறுவாயில் உள்ளது. இதில் 50 டிராலர்களும் 500 விசைப்படகுகளும் தங்க வசதி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது ஆழ்கடல் மீன்பிடிப்பு டிராலர்களும் இதர விசைப்படகுகளும் இங்கு வந்து தங்குகின்றன. ரூ. 234 இலட்சம் செலவில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்னமுட்டம் என்னுமிடத்தில் கட்டப்பட்டு வரும் மீன்பிடி துறைமுகத்தில் 10 டிராலர்களும் 240 மீன்பிடி விசைப்படகுகளும் தங்கலாம். இதுபோன்று ரூ. 77 இலட்சம் செலவில் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வாலிநோக்கத்துல் கட்டப்படும் தங்குதுறை வசதியால் 150 விசைப்படகுகள் தங்க வசதி கிடைக்கும். இதனுடன் தஞ்சாவூர் மாவட்டத்தில் பழையாற்றில் ரூ. 86.20 இலட்சம் செலவில் மீன்பிடி துறைமுகமும், இராமநாதபுரத்திலுள்ள தொண்டியில் இறங்குதுறை வசதியும் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கோட்டைப்பட்டினத்தில் ரூ. 22 இலட்சம் செலவில் இறங்குதுறை வசதியும் ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பழையாறு மீன்பிடி துறைமுக கட்டுமானப் பணியினை மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் 1983-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13-ஆம் தேதியன்று துவக்கி வைத்துள்ளார்கள். இவ்வகைச் செலவினத்தை மத்திய அரசும் மாநில அரசும் சமமாக ஏற்றுக் கொண்டுள்ளன.



**இதர கரையோர வசதிகள்:**

பிடிக்கப்பட்ட மீன்களை இறக்கவும், கையாளவும் பதப்படுத்தவும் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லவும் மீனவர்களுக்குக் கரையோர வசதிகள் தேவைப்படுகின்றன. பதனிடும் தொழிற்சாலை. பழுதுபார்ப்பு நிலையம், விற்பனைக்கூடம், சாலை வசதி போக்குவரத்து வசதி போன்ற வசதிகள் ஏற்படுத்த தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பழையாற்றில் ரூ. 28 இலட்சம் செலவிலும், வாலிநோக்கத்தில் ரூ. 24 இலட்சம் செலவிலும், இராமநாதபுரத்திலுள்ள தொண்டியில் ரூ. 5.60 இலட்சம் செலவிலும் கரையோர வசதிகள் கட்டப்பட்டு வருகின்றன. மீன்துறையானது கடல்பொருள் ஏற்றுமதி ஆணையகத்திடமிருந்து செங்கற்பட்டு மாவட்டத்தில் பழவேற்காட்டிலும், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கோட்டைப்பட்டினத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இராமேஸ்வரத்திலும் மீன் இறக்கும் மேடைகள் கட்ட நிதியுதவி பெற்றுள்ளது. மேலும் இரு இடங்களில் தஞ்சாவூரில் அகரப்பேட்டையிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் தெற்குத் தூத்துக்குடியிலும் 1982-83ஆம் ஆண்டில் மீன் இறக்கும் மேடைகள் கட்டக் கடல்பொருள் ஏற்றுமதி ஆணையகம் நிதியுதவி வழங்கியுள்ளது. கடல் பொருள் ஏற்றுமதி ஆணையகத்தின் உதவி பெற்றுத் தூத்துக்குடியில் கட்டப்பட்டு வரும் உலர்ந்த மீன் வைப்புக் கிடங்கு கட்டுமானப் பணி முடியும் தறுவாயில் உள்ளது. இதனால் தூத்துக்குடியைச் சுற்றி

யுள்ள மீனவர்களுககு உலர்ந்த மீன்களைப் பாதுகாப்பாக வைக்கும் வசதி கிடைக்கும்.

**வழிகாட்டி விளக்குகள் அமைத்தல்:**

தமிழ்நாட்டின் கடற்கரையோர மீனவ கிராமங்களிலிருந்து சுமார் 38,000 நாட்டுக் கலன்களும், 4000-க்கும் மேற்பட்ட மீன்பிடி விசைப்படகுகளும் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளன. இரவு நேரங்களில் மீன்களைப் பாதுகாப்பாய்க் கரை சேர்த்திட வழிகாட்டி விளக்குகள் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் அமைக்கப்படுகின்றன.

**உள்நாட்டு மீன் வளம்:**

தற்பொழுது உள்ள 1.85 இலட்சம் டன்கள் உள்நாட்டு மீன் உற்பத்தியிலிருந்து ஆறாவது ஐந்தாண்டுத்திட்ட கால முடிவில் 2.10 இலட்சம் டன்களாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. நமக்குக் கிடைக்கும் தரமான மீன்குஞ்சுகளின் உற்பத்தி அளவு மிகவும் குறைவானதாகும். தற்பொழுது பெரிய நீர்ப்பாசன நீர்நிலைகளில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு வளர்க்கப்பட்டு வந்திருக்கின்றன. மீன்வளர்ப்போருக்கு வருமானம் ஈட்டித் தரவும், மீன் உற்பத்தியைப் பெருக்கவும், மீன்குஞ்சு இறப்பு வளர்ப்பு முதலியவற்றை எல்லாப் பெரிய நீர்ப்பாசன நீர்நிலைகளிலும் செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் உற்பத்தியைப் பெருக்க 11 மாவட்டங்களில் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அமைக்கப்பட்டுள்ளன. இம்முகமைகள் தீவிர மீன் உற்பத்தி செய்ய சிறிய குளங்களையும் எடுத்து மீன்குஞ்சுகள் இருப்பு செய்கின்றன. மீன் உற்பத்தியில் நூதன முறைகளைக் கையாள்வதன் மூலம் ஒரு ஹெக்டேர் நீர்ப்பரப்பில் 750 கிலோவிற்கு மீன் உற்பத்தி அதிகரித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் மீன்வளர்ப்போருக்கு வருவாயும் பொது மக்களுக்குப் புரதம் மிகுந்த சத்துணவும் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.



**உவர்நீர் மீன் வளர்ப்பு:**

கடலில் இறால் மீன்பிடிப்பு உண்மையிலேயே உயரிய லாபமுடைய தொழிலாகும். மேலும் இதனால் நிறைய அந்நிய செலாவணி கிடைக்கிறது. இருப்பினும் இறால் மீன் பிடிப்பிற்குச் சிலவரைமுறைகள் உள்ளன. சமீப வருடங்களில் இறால் பிடிப்பு உச்ச கட்டத்தை எய்தியுள்ளது. இறால் உற்பத்தியினைப் பெருக்கப் புதுத்தொழில் முறைகளைக் கண்டுபிடிக்க வேண்டியது காலத்தின் அவசியமாகும். எனவே பரிசோதனை அளவில் கழிமுகங்கள் அருகே உவர்நீர் மீன்வளர்ப்புப் பண்ணைகள் துவங்கப்பட்டுள்ளன. மீன் வளர்ப்பு நவீன முறைகளாலும், இறால் குஞ்சு விநியோகத்தாலும் உற்பத்தி ஓர் அறுவடைக்கு ஒரு ஏக்கருக்கு 500 கிலோ உயர்ந்துள்ளது. சாதாரணமாக ஒரு வருடத்துற்கு ஒருமுறை இறால் அறுவடை செய்யப்படும். மாதிரி விளக்கப் பண்ணைகளில் கிடைத்த பயன்களின் விளைவாக 150 ஹெக்டேர் பரப்பினை இறால் வளர்ப்புக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனை மேம்பாடு செய்த பின்னர் மீனவக் குழுககளுக்கு வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.





**மீனவர் நல்வாழ்வுத் திட்டங்கள்:**

மீனவர் நல்வாழ்வுத் திட்டங்களை அமல்படுத்துவதிலும், இணைப்புச் சாலை, போக்குவரத்து, குடிநீர் வசதி, இலவச வீட்டு வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்வதிலும் நமது மாநில அரசு முதலிடம் வகிக்கிறது. கடுமையான பருவ நிலை காரணமாக ஆண்டில் மூன்று மாதம் நிரந்தர வருமான வாய்ப்பு இல்லாமல் இருக்கும் காலத்தில் உதவி செய்ய மாநில அரசு மீனவர்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாக உள்ள மீனவர்களிடமிருந்து வருவாய் கிடைக்கும் 9 மாதங்களில் மாதம் ரூ. 10 வீதம் வசூலிக்கப்பட்டு, அவ்வாறு சேர்ந்த ரூ. 90 உடன் மாநில அரசு ரூ. 90 சேர்த்து மொத்தம் ரூ. 180 ஐ வருவாய் இல்லாத மூன்று மாதங்களில் மாதம் ஒன்றுக்கு ரூ. 60 வீதம் வழங்குகிறது. 1-4-83 முதல் அரசு மீனவ நலனுக்காகச் சமீபத்தில் மீனவர் விபத்துக் காப்பீடு திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தில் கடலில் இறக்கும் மீனவரின் குடும்பத்திற்கு 15,000-ரூபாயும் பகுதி பாதிப்பு ஏற்பட்டால் 7,500-ரூபாயும் வழங்கப்படும். எல்லா மீனவ அங்கத்தினர்களும் இத்திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்படுவார்கள். மொத்தத் தவணைத் தொகையில் 50 விழுக்காடு மத்திய அரசும் 25 விழுக்காடு மாநில அரசும் மீதியுள்ள 25 விழுக்காடு சம்பந்தப்பட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கத்தினாலும் செலுத்தப்பட வேண்டும். இத்திட்டம் மீனவர் கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களுக்கு மட்டும் பொருந்தும்.

**மீன் துறையில் மீனவ மகளிர் பங்கு:**

மீன்துறையில் மீனவ மகளிர் முக்கிய பங்கு வகிக்கின்றார்கள். மீன் உலர்த்தல், மீன் விற்பனை போன்ற இரண்டு பிரிவுகளில் இவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். முக்கியமாகத் தஞ்சாவூர், இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய கடலோர மாவட்டங்களில் இவர்கள் மீன் உலர்த்தலிலும், மீன் விற்பனையிலும் பெரிதளவில் ஈடுபட்டுள்ளார்கள். உப்பங்கழிகள், சதுப்பு நிலம், முகத்துவாரம் மற்றும் உள்நாட்டு நீர்நிலைகளில் சில சமயங்களில் கையினாலும் ஊத்தா என்னும் பொறி கொண்டும் மீன்பிடிப்பதில் பெண்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு மீன்துறை, மீனவ மகளிர் விரிவாக்க சேவைக்கென்று ஒரு பெண் உதவி இயக்குநரை நியமித்துள்ளது. செங்கல்பட்டு, தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஒரு மீனவக் கிராமத்தைத் தேர்ந்தெடுத்துப் பெண்களின் நலனுக்காக அது உதவி இயக்குநரின் கீழ் இயங்கி வருகின்றது.

இம்மாவட்டங்களில் முறையே திருச்சினாங்குப்பம், கரையூர்தெரு, தருவைக்குளம் ஆகிய மீனவர் கிராமங்களில் மீனவ மகளிரிடையே சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தவும், மற்றும் வலை பின்னுவதற்குப் பயிற்சி அளித்தல், தையல் இயந்திர விநியோகம் செய்தல், கைத்தறிச் சேலைகள் விற்பனை செய்தல் ஆகியவற்றிற்கென மூன்று மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. மேலும் இதுபோன்று சென்னையில் 5 சங்கங்களும், செங்கல்பட்டு மாவட்டத்தில் 4 சங்கங்களும், தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒன்றும், தென்னார்க்காடு மாவட்டத்தில் ஒன்றும், திருநெல்வேலி மாவட்டத்தில் ஒன்றும் ஆக மேலும் 12 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம்:**

இத்துறையின் வணிக நடவடிக்கைகள் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்ினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. டிராலர்கள் இயக்குதல், மீன்குஞ்சு பண்ணை பராமரித்தல், பெரும் நீர்த்தேக்க மீன்பிடிப்பு, கரையோர வசதிகள் ஏற்படுத்துதல், பனிக்கட்டி நிலையம், குளிர்பதன நிலையம், எண்ணூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, மண்டபம் ஆகிய இடங்களில் இயக்குதல் போன்ற நடவடிக்கைகளைக் கழகம் மேற்கொண்டுள்ளது.

மத்திய அரசின் தளர்த்தப்பட்ட கொள்கையின் அனுகூலமாக அந்நிய மீன்பிடி டிராலர்களைப் பங்கு அடிப்படையில், வரவழைத்து மீன்பிடிக்க உத்தேசித்துள்ளது இக்கழகம். தமிழ்நாடு முத்து வளர்ப்பு நிறுவனத்துடன் இணைந்து தூத்துக்குடி, மண்டபம் போன்ற இடங்களில் முத்து வளர்த்து விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளது.

இத்துறை செயல்படுத்திவரும் கடல் மற்றும் உள்நாட்டு மேம்பாட்டுத் திட்டங்களினால் தமிழகம், கேரளம், மகாராஷ்டிரம், ஆகிய மாநிலங்களுக்கு அடுத்தபடியாகக் கடல் மீன் உற்பத்தியில் மூன்றாம் இடம் வகிக்கிறது. உள்நாட்டு மீன் உற்பத்தியில் மேற்கு வங்காளத்திற்கு அடுத்து இரண்டாம் இடம் வகிக்கிறது. மொத்த கடல் மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்தியில் தமிழகம் இந்தியாவில் முதலிடம் வகிக்கிறது.



# நரிக்குறவர்களுக்கு நவீன உத்திகளில் பயிற்சி

நரிக்குறவர்கள் அல்லது குருவிக்காரர்கள் என்று அழைக்கப்படும் நாடோடிகளாக வாழ்ந்து வரும் பின் தங்கிய வகுப்பினர் சென்னை நகரின் பல பாகங்களில் பரவலாக வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களில் அடையாறு, திருவான்மியூரில் நரிக்குறவர் காலனியில் சுமார் 40க்கு மேற்பட்ட குடும்பங்கள், சுமார் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் சிறு செடி, மரங்களின் ஊடே தங்களுக்கேற்ற வகையில், நடையில், பாணியில், எளிய வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். சுற்றிலும் மற்ற மக்களின் கல் வீடுகள். சற்று தொலைவில் ஒரு சினிமா கொட்டகை.

இவர்களில் ஆடவர், துப்பாக்கிகள், மற்றும் தாங்களாகவே செய்த எளிய பொறிகளின் மூலமாகவும், சிறு பறவைகளான காடை, கவுதாரி, காகம், மற்றும் சிறு மிருகங்களான அணில், கீரிப்பிள்ளை, நரி, முயல் ஆகியவைகளை நகருக்குச் சற்றுத் தொலைவிலுள்ள கிராமங்களிலும், காடுகளிலும், மலைச்சரிவுகளிலும் வேட்டையாடுகின்றனர். சிலர் வீட்டு ஓரங்களிலும், தெரு ஓரங்களிலும் சிதறிக் கிடக்கும் பத்திரிகைகள் மற்றும் கிழிந்த காகிதங்களை, ஒரு வித நீண்ட கம்பியினால் குத்தி, பறித்து, சேகரித்து அவற்றை விற்று வாழ்கின்றனர். தங்களின் ஓலை வீடுகளின் அருகே அமைக்கப்பட்ட தனித்த சிறு கூண்டு வீடுகளில் பன்றிகளையும், கோழிகளையும், வாத்துகளையும் வளர்த்து, அவற்றை விற்று வாழ்கின்றனர்.


**நே. தேவசகாயம்**

**ப. ஜவஹர்**

**காப்பாட்சியாளர்,**
**மானிடவியல்-விலங்கியல் பிரிவுகள்**
**அரசு அருங்காட்சியகம்,**
**சென்னை.**


குடும்ப முன்னேற்றத்தில் பெண்களின் பங்கும் சிறப்புடையது. ஆடவர்களைப் போன்று தாங்களும் உழைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் மணிகள், ஊசி மற்றும் இதர கலையழகுப் பொருட்களை மலிவு விலைக்குப் பெற்று, மணிகளை அழகு மாலைகளாகக் கோத்து, கலைப் பொருட்களாக வடித்து விற்று வருகின்றனர்.

வேட்டையாடுவதையே முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ள நரிக்குறவர்கள் அத்தொழிலில் மிக அக்கறை கொண்டு சிறந்த பயிற்சியுடன், தாங்களாகவே செய்த எளிய பொறிகளுடன் விலங்குகளைப் பிடிக்கின்றனர்.

இப்படிப்பட்ட பொறிகளில் ஒன்றுதான் நரிகளைப் பிடிக்க உதவும் வலைப் பொறி. இது நமது கிராமத்தவர், ஓடும் ஆறுகளில் மீன்களைப் பிடிக்க உதவும் பொறி போன்றதே. ஆனால் இது வலையினால் ஆனது. அது தென்னங் கீற்றினால் அல்லது மூங்கில் பத்தையினால் ஆனது.

நரியைப் போன்று கத்துதல், அதைக் கேட்டு நரி இப்பொறியின் அருகில் வந்தவுடன் அதை அடித்துப் பிடித்தல்-இதுதான், இதனது சிறப்பு. இப்பொறியின் நீளம் மூன்று அல்லது நான்கு மீட்டர் ஆகும். முன் புறத்தில் திறந்த வாயுடன் உள்ள இந்த நூல் பொறி, நடுவில் சிறிது சிறிதாக அகலம் குறைக்கப்பட்டு கடைசியில் மூடப்பட்டுள்ளது. இப்பகுதியில்தான் நரியோ, பூனையோ மாட்டிக்கொண்டு இங்கும் அங்கும் ஓடப்பார்க்கும்.



இரண்டாம் வகைப் பொறிக் கூண்டு, நாம் சாதாரணமாக நமது வீடுகளில் இரவில் தொந்தரவு செய்யும் எலிகளைப்பிடிக்க உதவும்பொறியைப் போன்றதே. ஆனால், நரிக் குறவர்களின் பொறி, மரத்திற்குப் பதிலாக இரும்புக் கம்பிகளால் முடையப்பட்டுள்ளது. இதை நரிக்குறவர் அணிலைப் பிடிக்க வீட்டின் சுவர் மேல் அல்லது மரங்களின் கீழ் வைத்து விடுவார்கள். இதன் சிறப்பு என்னவென்றால், இது திறந்த கதவு வேகமாக மூட உபயோகிக்கும் இரும்பு ஸ்பிரிங், மற்றும் நமது சைக்கிளில் உபயோகப் படுத்தும் ஒரு வகை உபபொருட்களாலானது.

மூன்றாவது வலைப்பொறி மிகவும் சிறியது. அதைக் கையில் சுற்றி வைத்துக் கொள்ளலாம். ஒரே சமயத்தில் ஒரு கையில் சுமார் எட்டு அல்லது பத்து இப்படி மடித்து வைத்த பொறிகளுடன் நரிக்குறவர் நடந்து செல்வதைக் காணலாம்.



அணில், முயல் பொறியுடன் காட்சி தரும் நரிக்குறத்தி

மரம், மற்றும் செடிகளின் அடர்த்தியில் சுமார் இரண்டு மீட்டர் நீளமுள்ள இப்பொறியைத் தளர்த்தி பூமியில் நடுவர். இப்படி அவற்றைப் பூமியில் நடச் சுமார் பன்னிரண்டு ஆப்புகள் அல்லது கூரிய ஆணிகள் உதவுகின்றன. ஒவ்வொரு ஆணியின் தலையிலும் ஒரு சுருக்கு -இது நைலான் கயிற்றினால் ஆனது. புதர்கள் மத்தியில் மறைவாகப் பரவப்பட்டிருக்கும் இப்பொறியிடம் கீரிப்பிள்ளை தனது கூர்மையான தலையை நீட்டி முன்னேறும்பொழுது கழுத்தில் சுருக்கு மாட்டபபட்டுத் தவிக்கும்.

நான்காவது வகைப் பொறி வளைவு நெளிவான வடிவில் ( Zig - Zag ) மரச் சட்டங்களில் அமைக்கப்பட்ட சுருக்குப் பொறியாகும். ஒவ்வொரு பொறியிலும் சுமார் 12 முதல் 18 சட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு சட்டத்திலும் மூன்று அல்லது ஐந்து நைலான் சுருக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இப் பொறியை விரித்துப் பரப்பினால் சுமார் அறுபது அடி நீளம் பரவும். இதனைக் காட்டில் செடிகளின் ஓரமாக விரித்துவிட்டால் சற்று நேரத்தில் அப்பக்கம் ஊர்ந்து, கால்களில் தவழ்ந்து செல்லும். சிறு பறவைகளான காடை, கவுதாரி குதித்து ஓடும்போது அவற்றின் கழுத்திலோ, அல்லது கால்களிலோ இச்சுருக்கு மாட்டப்பட்டுப் பிடிபடுகின்றன.

இவ்விதமான பல தரப்பட்ட பொறிகளால் பல இனப்பிராணிகளை நரிக்குறவர் வேட்டையாடி அவற்றின் இறைச்சியை உணவாகக் கொள்வதுடன், தோல், கொம்பு, பல் போன்றவற்றைப் பல வகைகளில் பயன்படுத்தி அதன் மூலம் வரும் வருமானத்தைக் கொண்டு எளிய வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

முக்கியமாக தாங்கள் வேட்டையாடும் பிராணிகளின் தோலைத் தங்களுக்குத் தெரிந்த எளிய முறையில் துரிதமாகப் பதப்படுத்தி, அவற்றைப் போலி உயிரினமாக்கி ( Taxidermy ) அவற்றைக் கலைப்பொருளாக மாற்றி, குறைந்த விலைக்கு விற்கின்றனர். ஆனால் அப்படிப்பட்ட போலி உயிரினங்கள் அவற்றிற்குரிய உருவமில்லாமல் இருப்பதால் கவர்ச்சியற்று உள்ளன.

மேலும் போலி உயிரினமாக்கப்படும் பிராணிகளின் தோல் சரியாகப் பதப்படுத்தப்படாததால் சில நாட்களிலேயே தோல் பூச்சிகளால் அவை தாக்கப்பட்டு,

பறவைப் பொறி சரிபார்க்கப்படுகிறது



தோலின் மேலுள்ள உரோமங்கள் உதிர்ந்து தங்கள் உடல் உருவத்தை இழக்கின்றன. இதனால் பிராணிகளின் தோல் வீணாவதுடன் பல இனப் பிராணிகளின் அழிவிற்கு ஏதுவாகவும் உள்ளது. இப்படிப்பட்ட போலி உயிரினங்களை வாங்கியவரும் ஏமாற்றத்திற்குள்ளாகின்றனர்.

எனவே, இத்தகைய அழிவிலிருந்து தடுத்து, பிராணிகளின் தோலை விஞ்ஞான முறைப்படிப் பதப்படுத்தவும், பதப்படுத்திய தோலைப் போலி உயிரினமாக்கவும், அம்முறையை ஏன் பின்தங்கிய வறுமையில் வாழும் நரிக்குறவர் கற்றறிந்து தங்களது வருமானத்தை இரட்டிப்பாக்க முடியாது என்ற கருத்தின் கீழ், 1983 செப்டம்பர் மாதம் முதல் மூன்று நாட்களில் போலி உயிரினமாக்கும் பயிற்சி முகாம் ஒன்று திருவான்மியூர் நரிக்குறவர்களின் இருப்பிடத்தில் அரசு அருங்காட்சியகத்தின் விலங்கியல் பிரிவால் நடத்தப்பட்டது.



போலி உயிரினமாக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது

பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்தின் ஒரு பிரிவான உழைப்போர் பல்நோக்குக் கல்வி நிறுவனத்தாரால் இப்பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டது. சென்னையில் நரிக்குறவர்களின் முன்னேற்றத்தில் ஈடுபட்டுள்ள பெல் ( Bel ) எனப்படும் நிறுவனம் இந்த நரிக்குறவர்களை ஒன்றுபடச் செய்து இக்கலையைக் கற்க உதவியது.

பறவை மற்றும் விலங்குகளின் கழுத்தைக் கொடூரமாக நெரித்துக் கொல்லுதலைத் தவிர்த்து இரக்கமான முறையில் உயிரை இழக்கச் செய்வது எவ்வாறு, பிறகு இறந்த பிராணியின் உடலில் ஏற்ற இடத்தில் சிறு கத்தியினால் கீறி, படிப்படியாகத் தோலை உடலிலிருந்து நீக்குதல், தகுந்த எலும்புப் பகுதிகளை வெட்டி எறியாமல் தோலுடன் இருக்கச் செய்தல், இவ்வாறு பிரிக்கப்பட்ட தோலின் உட்புறத்தில் மரத்தூளுக்குப் பதிலாக ஆர்சனிக் பசையைப் பூசிப் பதப்படுத்துதல், பிறகு பதப்படுத்தப்பட்ட தோலினுள் இயற்கை உடலுக்குப் பதிலாகச் சணல் நாரும், கம்பியும் கொண்டு செய்யப்பட்ட செயற்கை உடலைப் பொருத்திப் பிராணியை நிலையாக நிறுத்துதல், செயற்கைக் கண்ணாடிக் கண்களைப் பொருத்தி அதன் இயற்கை வடிவத்தை மீண்டும் பெறச் செய்தல் போன்ற செயல் முறைகளை விஞ்ஞான முறையில் நரிக்குறவர்கள் முதல் இரண்டு நாட்களில் இம்முகாமில் கற்றுத் தெரிந்து கொண்டனர்.

மூன்றாம் நாளில் நரிக்குறவர்களில் பயிற்சி பெற்ற சிலர் தாங்களாகவே இறந்த அணிலைப் போலி உயிரினமாக்கும் கலைப் பணியில் ஈடுபட்டு முற்றிலும் வெற்றி கண்டனர்.

போதிய கல்வி இல்லாத இந்த நரிக்குறவர்களுக்குப் பள்ளிசாரா கல்வித்துறை வாயிலாகத் தங்கள் வருமானத்தை உயர்த்த விஞ்ஞான ரீதியில் அமைக்கப்பட்ட இக் கைத்தொழில் கல்வி முகாமில் அவர்கள் முன்னேற்றப் பாதையில் மேலும் ஒரு படி உயர இது உற்ற துணையாக இருக்கும்.


நரிக் குறவர்கள் அணிலின் உடலிலிருந்து தோலைப் பிரித்தெடுக்கின்றார்கள்

வயது வந்தோர் கல்வி வாரியம், திருவான்மியூர் நரிக்குறவர் காலனியில் வயது வந்தோருக்கு மாலையில் கல்வி கற்க வேண்டிய உதவிகளைச் செய்து வருகிறது. மேலும் ''பெல்'' நிறுவனத்தார் ஒரு குடிசைக் கட்டடத்தை அங்கு அமைத்து அதில் ஐந்து முதல் பத்து வயது வரை உள்ள சுமார் முப்பது நரிக்குறவர் குழந்தைகளுக்கு இரண்டு ஆண்டுப் பாடப் பயிற்சியைத் தொடங்கி நடத்தி வருகிறது.

நரிக் குறவர்களிடமிருந்து பெறப்பட்ட சிறப்பான, எளிய பொறிகள், மற்றும் சில கலைப் பொருட்கள் பொதுமக்கள் பார்ப்பதற்காக, சென்னை அரசு அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்படும்.

# சார், தபால்!


நூறு வயதாகும் சென்னை ஜி.பி.ஓ

கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் அஞ்சல் நிலைய கட்டடங்கள் கட்ட தமிழ் நாட்டுக்கு மத்திய அரசு 484 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்ததில், 483 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் பயன்படுத்தப் பட்டது.

நடப்பு ஆண்டில் 105 இடங்களில் புதிய அஞ்சல் நிலையங்கள் அமைக்கப்படும். தமிழ் நாட்டில் 12 ஆயிரமாவது அஞ்சல் நிலையம் மதுரை சிவானந்த நகரில் திறக்கப்படும்.

தமது எல்லைக்குட்பட்ட எல்லாக் கிராமங்களிலும் நாள்தோறும் அஞ்சல் பட்டுவாடா செய்துவரும் பெருமை தமிழ்நாடு அஞ்சல் பிரிவுக்கு உண்டு. நாள் ஒன்றுக்கு 92 இலட்சம் கடிதங்கள், 3 இலட்சம் பதிவுத் தபால்கள், ஒரு இலட்சம் மணி ஆர்டர்கள் ஆகியவை தமிழ்நாடு பிரிவில் கையாளப்படுகின்றன.

அஞ்சல் தந்தி வாரத்தில் மட்டும் 27 அஞ்சல் நிலையங்கள் திறக்கப்படும். மலைவாழ் மக்கள் நலனுக்கென சேலம், தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, திருச்சி, தருமபுரி மாவட்டங்களில் 100 இடங்களில் அஞ்சல் நிலையங்கள் செயல்படுகின்றன. நடப்பு ஆண்டில் 10 மலைவாழ் மக்கள் வாழும் இடங்களில் அஞ்சல் நிலையங்கள் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் மட்டும் 13 இலட்சத்து 16 ஆயிரம் ரேடியோ செட் லைசென்சுகளும், 2 இலட்சத்து 22 ஆயிரம் டெலிவிஷன் லைசென்சுகளும் வழங்கப்பட்டுள்ளன. சென்னையில் மட்டும் லைசென்ஸ் உள்ள ஒரு இலட்சத்து 99 ஆயிரம் டெலிவிஷன் செட்டுகளும், 869 வீடியோ கேஸட் ரிகார்டர்களும் உள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள அஞ்சல் நிலையங்களில் 44 இலட்சத்துக்கு மேற்பட்ட சேமிப்புக் கணக்குகள் கையாளப்படுகின்றன. 331 கோடி ரூபாய் சேமிப்பு டெபாசிட்டுகள் உள்ளன.

சரியான முகவரியோ, விவரமோ இல்லாத காரணத்தால் நாள் ஒன்றுக்கு 100 பதிவுத் தபால்களும், 11 ஆயிரம் சாதாரண தபால்களும் 'ரிடர்ன்ட் லெட்டர்' அலுவலகத்தில் கையாளப்படுகின்றன. பல மொழிகளிலும் முகவரி எழுதப்பட்ட கடிதங்கள், முகவரி எழுதப்படாத கடிதங்கள், ஒருவராலும் ஏற்கப்படாத அல்லது ஏற்க மறுக்கப்பட்ட கடிதங்கள் இந்த அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டு, சம்பந்தப்பட்டவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுகின்றன. பல்வேறு நடவடிக்கைகள் மூலம் உண்மையான முகவரிதாரர்கள் கண்டுபிடிக்கப்பட்டு உரியவர்களிடம் சேர்ப்பிக்கப்படுகின்றன. சுமார் 5 சதவிகித கடிதங்கள் மட்டுமே பட்டுவாடா செய்யப்படாமல் போய்விடுகின்றன.

—அஞ்சல் தந்தி வாரத்தையொட்டி (9-1-84 முதல் 15-1-84 முடிய) 10-1-84 அன்று சென்னை அண்ணா சாலை தலைமை அஞ்சலகத் தலைமை அஞ்சல் அலுவலர் திரு குருசரண்சிங், செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்த கருத்துக்களிலிருந்து.....





நெய்வேலி திறந்தவெளிச் சுரங்கத்தின் மாதிரி அமைப்பு

# நெய்வேலி நிலக்கரிச்சுரங்கம்

ராஜஸ்தான், குஜராத் மாநிலங்களில் ஏற்படுத்தப்படவிருக்கும் பழுப்பு நிலக்கரிச் சுரங்கங்கள் அமைப்பு குறித்து, நெய்வேலி நிறுவனம் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கி வருகிறது. இந்த இடங்களிலும் நெய்வேலியில் உள்ளதுபோல் திறந்த சுரங்கங்கள் அமைக்கப்படும்.

8-வது திட்ட முடிவில், அதாவது 1995-96-ஆம் ஆண்டுக்குள், நெய்வேலியில் பல விரிவாக்கத் திட்டங்கள் அமல்படுத்துவதன் மூலம் மொத்தம் 3,700 மெகாவாட் மின் சாரம் உற்பத்தி செய்யப்படும்.

நெய்வேலி நிறுவனத்தின் கடந்த 9 ஆண்டுப் பணிகளில் குறிப்பிடத்தக்க அம்சம், தமிழக மின்சார வாரியத்துக்கு நடப்பு ஆண்டில் நெய்வேலி தருவதாக ஒப்புக் கொண்ட 2,200 மில்லியன் யூனிட் மின்சாரம் கடந்த 9 மாதங்களிலேயே தரப்பட்டுள்ளதாகும். வரும் 3 மாதங்களில் மேலும் 890 மில்லியன் யூனிட் மின்சாரம், தமிழக மின் வாரியத்துக்கு வழங்கப்படும்.

1983-ஆம் ஆண்டில் 66 இலட்சத்து 70 ஆயிரம் டன் பழுப்பு நிலக்கரிவெட்டியெடுத்து பதிய சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. உற்பத்தித் திறனைவிட இது கூடுதல் அளவாகும. யூரியா உர உற்பத்தியும் கடந்த ஆண்டைவிட 18.91 சதவிகிதம் கூடுதலாக இருந்தது.




நாட்டில் உள்ள 500 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட அனல் மின்சார நிலையங்களில் மிகச் சிறப்பாகச் செயல்படும் அனல் மின் நிலையம் நெய்வேலி நிலையம் என்ற பெருமையும் கிடைத்துள்ளது. இதற்காக தேசிய உற்பத்தித் திறன் குழு பரிசும் கிடைத்துள்ளது.

—இந்தத் தகவல்களை, 18-1-84 அன்று சென்னை செய்தியாளர் கூட்டத்தில், நெய்வேலி நிலக்கரிச் சுரங்க நிறுவனத்தின் தலைவர் திரு ஜி. எல். டாண்டன் தெரிவித்தார்.

அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில், நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் அரங்கினையும் செய்தியாளர் சுற்றிப் பார்த்தார்கள். நெயவேலி திறந்த வெளி சுரங்கத்தின் மாதிரி அமைப்பு, நிலக்கரி வெட்டியெடுக்கும் இயந்திரங்கள் செயல்படும் விதம், அனல் மின்நிலையம், யூரியா பிரிவின் மாதிரி அமைப்பு போன்ற பல்வேறு புகைப்பட விளக்கங்கள் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன.

— பி. வி. கிரி

# ராஜஸ்தான் அழைத்தது

ராஜஸ்தான் சுற்றுலாத்துறையின் சார்பில், 65 பேர் கொண்ட கலைக் குழு ஒன்று 11-1-84 அன்று சென்னை மியூசியம் அகாடமியில் கண்கவர் கலை நிகழ்ச்சியை நடத்தி, எல்லாரின் பாராட்டுதல்களையும் பெற்றது.

இந்த அழகிய கலை நிகழ்ச்சியை மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தொடங்கி வைத்தார். அவர் பேசுகையில் குறிப்பிட்டார்.—

"'ராஜஸ்தான் அழைக்கிறது' என்ற தலைப்பில், தமிழக மக்கள் கண்டு களிக்கத்தக்க வகையில் அமைந்துள்ள ராஜஸ்தான் கலைக் குழுவினரின் கலை நிகழ்ச்சிகள், தமிழக - ராஜஸ்தான் மக்களின் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளவும், இந்திய ஒருமைப்பாட்டை வளர்க்கவும் உதவும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

"ஒரு மாநிலத்தின் பழக்க வழக்கங்கள், கலை, நாகரிகம், தோழமை உணர்வுகள் போன்றவற்றைச் சுற்றுலாதான் நிலைநிறுத்தி வருகிறது. தமிழ்நாட்டின் தலை நகரத்தில், ராஜஸ்தான் மாநிலக் கலையின் பெருமையை விளக்க வந்திருக்கும் குழுவினரை அரசின் சார்பில் நான் மனமார வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்."

விழாவில் கலந்து கொண்ட மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில், "இங்கு நடந்த இந்தக் கலை நிகழ்ச்சி ராஜஸ்தான் மாநிலத்தைப் படம்பிடித்துக்காட்டியது. தங்கள் நாட்டின் தொன்மைக் கலையை ஆடல் பாடல் மூலமாக இசைக் கருவிகளைக் கொண்டு நிகழ்த்திக் காட்டியதை நாம பாராட்டவேண்டும்" என்றார்.

விழாவில், ராஜஸ்தான் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு பி.டி. கல்லா அவர்களும், ராஜஸ்தான் சுற்றுலாத்துறைச் செயலாளர் அவர்களும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்கள்.

ராஜஸ்தான் கலைக் குழுவினர் இந்தியாவில் மட்டுமின்றி, அயல் நாடுகளிலும் புகழ்பெற்றவர்கள்.

வண்ண உடையணிந்துவனிதையர் ஆடிய ரம்மியமான நடனக் காட்சியும், மயில் நடனமும் கண்ணை மட்டுமல்ல, கருத்தையும் கவர்ந்தன. இவை மட்டுமா? ஆர்மோனியம் தபேலாவுடன் அருமையான கச்சேரியும், புதுமையான கடம்வாசிப்பும் மனத்தைக் க்வர்ந்தன. நம் நாட்டில் ஆடும் கரகம் ஆட்டம் போல், சற்றுப் புதுமையாக ஆடிய ஆடவரைக் கண்டதும் அவையே கரவொலி எழுப்பியது. கத்தி முனையில், கண்ணாடித் தம்ளர்களில் ஏறி நின்று கொண்டு, தலையில் குவளைக்கு மேல் ஐந்து குடங்களையும் வைத்துக் கொண்டு ஆடிய அற்புதக் காட்சி அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

— பி. வி. ஜி.



மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன், மாண்புமிகு ராஜஸ்தான் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு பி.டி. கல்லா, ராஜஸ்தான் சுற்றுலாத்துறைச் செயலர் ஆகியோர் கலை நிகழ்ச்சியைக் கணடு களிக்கின்றனர்.



# வரலாற்றில் மரங்கள் பாதுகாப்பு

**ஸ்ரீதரன்**
பதிவு அலுவலர்
தொல்பொருள் ஆய்வுத்துறை

நம் நாட்டில் மரங்களைப் பேணிக் காப்பதிலும், புதிய மரங்களை உண்டாக்குவதிலும் சடுபட்டு வருகிறோம். மரங்கள் விறகுக்காக வெட்டப்படுவதால், காடுகளில் மரங்கள் குறைந்ததால் மழை உரிய காலத்தில் பெய்வதில்லை என்ற கருத்து வருகிறது. தமிழகத்தின் வரலாற்றுச் செய்திகளைப் பார்க்கும்பொழுது மரங்களில் எத்தகைய மரங்களை வளர்த்தனர், எவ்வாறு போற்றிக் காப்பாற்றினர் என்பது தெரிகின்றது.

இந்தியாவில் மர வழிபாடு மிகவும் பழமையானது. தமிழகத்தில் மரங்களைத் தெய்வமாகவே வழிபடுகின்றனர். திருமணங்களும், மரக்கிளைகளை வைத்து அதன் முன்னிலையில் செய்யப் படுகின்றன. தெய்வத் திருமணங்களும், மரங்களின் முன்னிலையில் நடைபெற்றதாகப்பல ஓவியங்களும், கற்சிற்பங்களும் சித்திரிக்கின்றன. ஆற்றங்கரைகளிலும், குளக்கரைகளிலும் அரச மரமும், வேப்பமரமும் இணைந்திருக்கும் நிலையில், அதனைச் சுற்றி வந்து வணங்குவர் மகளிர். கோயில்களில் ஸ்தல விருட்சங்களாகப் பல்வேறு மரங்களை வழிபட்டு வருகிறோம். பண்டைக் காலத்தில் ஊர்ச் சபைகள் ஊர் நடுவே உள்ள மரத்தினடியில் நடைபெற்றுள்ளன. இவ்வாறு நம் வாழ்க்கையோடு ஒன்றி விளங்குகின்றன மரங்கள். பௌத்தமத சமயத்திலும் புத்தர் ஞானம் பெற்ற போதி மரம் புனிதமாகக் கருதப்படுகிறது. புத்தர் பெருமானை மர வடிவில் வழிபடுவதைப் பல சிற்பங்களில் காணலாம்.

பண்டைய தமிழகத்தில் மரங்களைப் பல்வேறு வகையாகப் பிரித்திருக்கின்றனர். மரங்கள் நிறைந்த இடத்திற்குப் பல்வேறு பெயரிட்டு அழைத்திருக்கின்றனர். ஊர் புதிதாக அமைக்கும்பொழுது மரங்களை நட்டும் உண்டாக்கியுமிருக்கின்றனர், கோயில்களுக்கு மரங்கள் அடங்கிய தோப்புக்களைத் தானமாக அளித்திருக்கின்றனர். மரங்களை வெட்டக் கூடாது என ஆணையும் பிறப்பித்திருக்கின்றனர் என்று பல கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன. பல்வேறு கல்வெட்டுச் செய்திகள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

பெரும்பாலும் மரங்கள் நின்ற இடங்களைத் 'தோட்டம்' என்றும் 'கொல்லை' என்றும் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இவற்றில் படுமரம், இடுமரம், முதுமரம், இளமரம், வனமரம் என்ற மரவகைகள் குறிப்பிடப்படுகின்றன. கல்வெட்டுக்களில் இலுப்பை, வாகை, வேம்பு, புங்கு, புளி, ஆத்தி, ஆவிரை, கொழிஞ்சி, பனை, மா, தெங்கு, பலா, மருவு, தமனகம், இருவேலி, உள்ளி முதலிய மரங்கள் பொதுவாகக் குறிப்பிடப்படுகின்றன.

**வான்பயிர், தண்டிலைகள்:**

'தெங்கு, கமுகு, பலாமரம், கொழுந்து உள்ளிட்ட வான் பயிரும்' என்று ஒரு கல்வெட்டு குறிப்பிடுகின்றது. மேலும் தெங்கு, பலா ஆகிய பயிர்களை 'தண்டிடிலைகள்' என்று பெயரிட்டு முதலாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டு அழைக்கிறது,

அக்காலத்தில் ஒரு ஊர் அமைக்கப்படும்பொழுது மரங்களை நடுவது அக்கால வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. செம்பியன்சோடி வரையன் என்னும் ஒரு அதிகாரி முதலாம் பராந்தகச் சோழன் காலத்தில் அய்யப்பாடி என்ற ஊரைத் திருத்தி அமைத்தபோது அவ்வூரில் தெங்கும், தமனகமும், பனையும் உள்ளிட்ட பயன்தரு மரமும் நடவும் இடவும் பட்டது. என திருவிடைமருதூர்கல்வெட்டு கூறுகிறது. பிரம்மதேயம், பள்ளி சந்தங்கள் ஏற்படுத்தியபோதும் அங்கும் மருவும், தமனகமும், இருவாட்சியும், செண்பகமும், செங்கழுநீரும், மாவும், பலாவும் தெங்கும், உள்ளிட்ட பயன்தரு மரங்கள் நடவும் இடவும் பெற்றதைத் திருவாலங்காடு செப்பேடு கூறுகிறது.

இதைத்தவிர கடற்கரையில் இருந்த நிலங்கள் சிலசமயங்களில் மணலடித்து பயிர் இட ஏதுவின்றி போதல் உண்டு. இது போன்ற இடங்களில் பனையும், இலுப்பையும் பயிராக்கலாம் என மூன்றாம் குலோத்துங்கனின் சீர்காழி கல்வெட்டு பின்வருமாறு 'கடலில் திரை எறிவாய் அருகு இல்லிபடும் இராவணன் மெல்வாயும் எழுந்து மணல் குன்றாக நிலனும் பட்டினவர் குடியிருப்பான நிலனும் நீங்கலாகப் பனையும் இலுப்பையும் மரமாக்கலாம் நிலமாக்கி' (990-5) என்று கூறுகிறது.

அக்காலத்தில் கோயில்களுக்கு நந்தவனங்களையும், தோட்டங்களையும் அமைத்து அதன் வருவாயைக் கோயிலுக்குத் தானம் அளித்துள்ளனர். அதில் பெரும்பாலும் தென்னை மரமே குறிப்பிடப்பட்டிருக்கிறது. தென்னை பயிரிடும் இடங்களைத் தெங்கு நந்தவனம், தெங்குத் தோட்டம், தெங்கஞ்செரு, தெங்கிட்ட நந்தவனம் என கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. தில்லையில் இருமருங்கும் தென்னை பல செறிந்த வீதியொன்று 'விக்கிரம சோழன் தெங்கு திருவீதி' என அழைக்கப்பட்டது.

மங்கை நல்லாள் என்பவள் 48,000 தென்னை மரங்கள் கொண்ட ஒரு தோப்பையே கொடையளித்ததாக திருவண்ணாமலை கல்வெட்டுக்கூறுகிறது. திருவாவடுதுறை கோமுத்தீச்சுவரர் கோயிலுக்கு சாக்கையன் ஒற்றி என்பவன் 1000 மரங்கள் அடங்கிய தென்னந் தோட்டத்தைத் தானமாக அளித்தான். மேலும் 700 மரங்கள் அடங்கிய தோப்பு தானமாக அக்கோயிலுக்கே அளிக்கப் பட்டது.

திருப்பனந்தாள் கோயிலிலிருந்து கொள்ளிடத்திற்கு விழா நாட்களில் இறைவன் எழுந்தருள சாலை போடுவதற்கு நிலம் தானமாக அளிக்கப்பட்டது.அச் சாலையில் 750 தென்னை மரங்கள் வளர்க்கப்பட்டன.

அதன் வருவாய் கோயிலில் விளக்கெரிக்கப் பயன்படுத்தியதாக இரண்டாம் இராஜராஜன் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இன்று சாலையில் இருபுறமும் மரங்கள் நடும் வழக்கத்தைக் காண்கிறோம். அன்றே இப்பழக்கம் இருந்து வந்திருக்கிறது என்பதை வரலாற்றுச் சான்றால் அறிய முடிகிறது.

தஞ்சை மாவட்டம் திருக்கண்ண புரம் அருள்மிகு சௌரிராஜபெருமாள் கோயிலிலுள்ள மூன்றாவது இராஜேந்திரனின் 18ம் ஆண்டு கல்வெட்டு தென்னை பயிரிடுதலைப் பற்றி விளக்குகிறது. ஆலயத்தை அடுத்த வீதியில் வீடுகள் கட்டிக் கொள்வதற்கு நிலம் ஒதுக்கப்பட்டது. ஏழு கோல் நீளம், மூன்று கோல் அகலம் கொண்ட நிலப் பரப்பில் வீடுகள் கட்டப்பட்டன. வீடுகள் கட்டி முடித்ததும் அவற்றைச் சுற்றியுள்ள வெற்று நிலப் பரப்பில் தென்னை பயிரிட ஆணையிடப்பட்டது. இளங்கன்றுகளை ஆறுஆண்டுடன் நீர்ஊற்றி வளர்த்தல் வேண்டும். கன்றுகள் மரங்களாயின. இம்மரங்களைப் பராமரிப்பவர்கள் ஆலய கருவூலத்தில் ( ஸ்ரீபண்டாரம் )ஒரு கோல் நிலத்திற்கு மூன்று உழக்கு வீதம் தேங்காய் எண்ணெய் அளித்திட வேண்டும். வீடுகட்டி வசிக்கும் மக்களே இம்மரங்களை வளர்க்கும் பணியில் சடுபட்டனர் என அறிகிறோம்.

**பனை:**

திருவாவடுதுறை மகாதேவர்க்கு தென்னம் பிள்ளைகள் தவிர 100 பனை மரங்கள் நின்ற தோப்பும் தானமாக அளிக்கப் பட்டது. பிரம்மதேயத்தைத் தவிர பிற இடங்களில் தெங்கும், பனையும் கள் இறக்குவதற்காக அதிகம் பயிரிடப்பட்டன.



## சாண எரிவாயுத் திட்டத்தில் தமிழகத்தின் சாதனைகள்

மண்ணெண்ணெய், பெட்ரோலிய எரிவாயு, விறகுக்குப் பதிலாக சாண எரிவாயுவைப் பயன்படுத்தும் வழக்கம் கடந்த சில ஆண்டுகளாகவே மக்களிடையில் நிலவி வந்துள்ளது. எனினும் நாடு முழுவதும் எல்லா மக்களும் சாண எரிவாயுவைப் பெருமளவில் பயன்படுத்தும் நிலையை உருவாக்க வேண்டுமென்று மத்திய,மாநில அரசுகள் சில ஆண்டுகளாகவே பெரிதும் முயன்று வருகின்றன.

இந்தியப் பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்தில் இது ஒரு அம்சமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு முனைப்புடன் செயல்படுத்தப்படுகிறது.

1983-84-ஆம் ஆண்டில் தமிழகத்தில் 5,000 சாண எரிவாயுக் கலன்களை அமைக்க வேண்டுமென்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்தது. இவற்றில் 1983ஆம் ஆண்டு டிசம்பர் முடிய - அதாவது குறியீட்டை அடைய மூன்று மாதங்களுக்கு முன்பாகவே தமிழக அரசு 5045 அமைப்புகளை நிறுவி சாதனை புரிந்துள்ளது. எஞ்சியுள்ள காலத்தில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் இலக்கினையும் எடுத்துக் கொண்டு செயல்படுத்த மாநில அரசு முன் வந்துள்ளது. இதன் மூலம் 6,000 கலன்களை அரசு ஏற்படுத்தி விடக்கூடும்.

இவை மட்டுமல்ல, சென்ற ஆண்டிலும் கூட தமிழகத்தில் குறியீட்டை மிஞ்சிவிட்டோம். திட்ட இலக்கான 5,000 சாண எரிவாயு அமைப்புகளுக்குடிசம்பர் மாத இறுதியில் 5,004 நிறுவப்பட்டன.

**இலுப்பை:**

ஆலயங்களில் நந்தவனங்கள் அமைக்கும்பொழுது அதில் இடம் பெற்ற மரங்களில் இலுப்பையும் ஒன்று. விளக்கு எரிப்பதற்கு இலுப்ப எண்ணெய் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. இலுப்பை மரங்கள் அடங்கிய தோட்டங்கள் கோயில்களில் விளக்கெரிக்கத் தானமாக அளிக்கப்பட்டன. செந்தலை கோயிலுக்கு இறைவனுக்குப் பகல் விளக்கெரிக்க சுவாமிநாதயிளவரசன் என்பவன் இலுப்பைத் தோட்டம் ஒன்றினைத் தானமாக அளித்தான். பாண்டியன் சடாவர்மனின் காளையார் கோயில் கல்வெட்டொன்று இலுப்பையைப் பயிர் செய்வோர் மூன்றில் ஒரு பங்கு வரி செலுத்தவேண்டும் எனக் குறிக்கிறது. மேலும் இலுப்பைத் தோப்பை உடைமையாகக் கொண்டவர்கள் 'இலுப்பை மரக்கிழான்', எனக் குறிக்கப் படுகின்றனர்.

**ஊர்ச்சபை கூடும் இடம்:**

மரங்கள் ஊர்ச்சபை கூடும் இடமாக இருந்தது. கோவேரிராஜபுரத்தில் ஊர்ச்சபை 'இராசேந்திரன்' என்று அழைக்கப்பட்ட மரந்தினடியில் கூடியதாக முதலாம் இராஜாதிராஜன் கல்வெட்டுக் கூறுகிறது. (640-1909) இதுபோன்ற ஊர்ச்சபை புளிய மரத்தடியில் உள்ளதாக ஜம்பை கல்வெட்டுக் கூறுகிறது.

**மரங்களை வெட்டக்கூடாது:**

மரங்களின் அவசியத்தை உணர்ந்த அக்காலத்து அரசர்கள் மரங்களை வெட்டக் கூடாது என்று உத்தரவு இட்டிருந்தனர். வட ஆர்க்காடு மாவட்டம், செய்யாறு வட்டத்தில் திருப்பனங்காடு என்ற ஊர் உள்ளது. பனை மரங்கள் அதிகம் உள்ள ஊர் இது. இவ்வூரில் நிலமளக்கும்கோல் இவ்வூர் கோயிலில் (தாளபுரீஸ்வரர் கோயில்) கருவறையின் பக்கச் சுவரில் வெட்டப்பட்டிருந்தது. அதன் சிறப்பு என்னவென்றால் அக்கோலின் இருமுனையிலும் பனைமரம் செதுக்கப்பட்டிருந்தது.

மேலும் அக்கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்றில் 'உயிருடன் இருக்கும் பனை மரங்களை வெட்டுகின்றவர்கள் தண்டனைக்குள்ளாவர்' எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தின் கிரனூர் என்ற ஊரில் உள்ள உத்தமநாதசுவாமி கோயிலில் உள்ள மூன்றாம் குலோத்துங்கனின் 24ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டில் கிரனூர் ஊரைச் சேர்ந்தவர்கள் தங்களுள் ஏதும் சச்சரவு உண்டாகும் காலத்தில் மரங்கள், கிணறுகள், குளங்கள் இவற்றுக்குத் தீங்கு ஏதும் செய்யக்கூடாது என்று ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதாகக் கூறுகிறது. அவ்வாறு ஒப்பந்தத்தை மீறி தீங்கு செய்தவர்களின் நிலங்கள் பறிமுதல் செய்யப்படும் எனவும் கூறுகிறது.

நன்னிலம் வட்டத்தில் போழக்குடி என்ற ஊரில் குளத்திற்கு அருகில் ஒரு ஜைன சிலையின்பின்புறம் உள்ள 17ஆம் நூற்றாண்டின் கல்வெட்டில் இக்குளத்தைச் சுற்றியுள்ள மரங்களை வெட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டது என்று குறிக்கிறது (280, 1950-51).

நம் பண்டைய வரலாற்றை நோக்கும்பொழுது மரங்களின் அவசியத்தை உணர்ந்த நம்முன்னோர்கள் அதைத் தெய்வமாகவும் ஊர் அமைக்கும் பொழுது அவற்றை உண்டாக்கியும், மேலும் மரங்களை வெட்டக்கூடாது என்று ஆணைகள் பிறப்பித்தும் வந்திருக்கின்றனர் என்பது தெரிகிறது.

மரங்கள் ஒரு நாட்டின் செல்வங்கள், அவற்றைப் போற்றிக் காப்போம்.

**கட்டுரைக்கு ஆதாரமான நூல்கள்:**

1. கல்வெட்டு-இதழ், 10நந்தவனங்கள், வெ.வேதாசலம்
2. தென்னைவளம், இலுப்பை கட்டுரைகள், தமிழ்நாடு வரலாற்றுக் கருத்தரங்கு-1979.
3. யாவரும் கேளிர்- இரா. நாகசாமி.
4. வேளாண் இயல்-நடன. காசிநாதன், ஆய்வுக்கொத்து 1973.

## பேச்சான் குளத்தில் ஒரு பாலர் பள்ளி



கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளதுதான் பேச்சான் குளம் என்னும் கிராமம். இந்தக் கிராமம் முழுக்க முழுக்க ஆதிதிராவிடர்கள்வாழும் பகுதியாகும்.

இப்பகுதியில் பள்ளி இல்லாத குறையைப் போக்கும் வகையில், விவேகானந்தா கேந்திராவின் சார்பில், ஒரு பாலர் பள்ளி மிகச் சிறப்பாக நடந்து வருகிறது.

இந்தப் பள்ளியில் 40 ஆதி திராவிடர் குழந்தைகள் படிக்கிறார்கள். அவர்களுக்கு நாள் தோறும் இலவச மதிய உணவும் வழங்கப்படுகிறது. காலையும் மாலையும் பொட்டுக்கடலையும் கொடுக்கப்படுகிறது. இக்குழந்தைகளுக்கு ஆண்டுதோறும் இலவசச் சீருடை வழங்கப்படுகிறது. இந்தப் பாலர் பள்ளியில் இரு ஆசிரியைகள் பணியாற்றுகிறார்கள்.

விவேகானந்தா கேந்திராவைச் சேர்ந்தவர்கள், ஞாயிறுதோறும் இதுபோன்ற கிராமங்களுக்குச் சென்று மருத்துவச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்வதுடன் இசை, நடனம், நாடகப் பயிற்சி ஆகியவற்றையும் கற்றுத்தருகிறார்கள்.

## இலங்கைத் தமிழர்க்கு இல்லங்கள் உதவி



திரு தா. சிவசிதம்பரம் வீட்டுச் சாவி பெறுகிறார்



திருமதி நீலா சம்பந்தம் அவர்களிடம் வீட்டுச்சாவி வழங்கப்படுகிறது.

இலங்கையிலே நடந்த இனக் கலவரத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டு, தமிழகம் வந்துள்ளவர்கள் நலம் பெறத் தமிழ்நாடு அரசு அளித்து வரும் உதவிகள் அளவற்றவை. அங்கே சொத்து சுகங்களை இழந்து இங்கே வந்துள்ளோர்க்கு வீட்டு வசதியளிக்கும் திட்டம் தமிழக அரசால் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இதன்படி - இலங்கையில் தமிழின உரிமை காக்கும் போரில் ஈடுபட்டு மாண்ட குட்டிமணி, தங்கதுரை குடும்பத்தார்க்கு முதற்கட்டமாக மூன்று வீடுகள் வழங்கப்பட்டன. குட்டிமணியின் மனைவி திருமதி ராஜருபராணிக்கு 'டி-3' எண்ணுள்ள வீடும், தங்கதுரை குடும்பத்தார்க்கு 'பி-6' எண்ணுள்ள வீடும் சென்னை நந்தனம் பகுதியிலுள்ள பழைய டவர் பிளாக்கில் அளிக்கப்பட்டது. குட்டி மணியின் சகோதரி திருமதி யோகலட்சுமிக்கு, நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி குடியிருப்பில் 'டி-6' எண்ணுள்ள வீடு கொடுக்கப்பட்டது.

அதற்கடுத்த கட்டமாக, இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களான திரு. தா. சிவசிதம்பரத்திற்கும், இரா. சம்பந்தத்திற்கும் இப்போது வீடுகள் அளிக்கப்பட்டுள்ளன. சென்னை நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி குடியிருப்பில் 'டி-5', 'பி-5' என்ற எண்ணுள்ள இரு வீடுகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

ஒவ்வொன்றும் ரூ. 2.5 இலட்சம் மதிப்புடையது ஆகும். இந்த வீடுகளின் சாவிகளைத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு வி. செல்லையாத் தேவர் (8.9-2-84). அளித்தார்.

இந்த வீடுகளில், அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுதும் வாடகையின்றிக் குடியிருக்கலாம் என்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் செய்தியையும் அவர்களிடம் வீட்டு வசதி வாரியத் தலைவர் அன்புடன் தெரிவித்துக் கொண்டார்.

''தமிழ்நாடு அரசின் இத்தகைய உதவி பற்றிய தங்கள் கருத்து என்ன?'' என்று இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் ஐக்கிய முன்னணித் தலைவர்களில் ஒருவருமான திரு தா. சிவசிதம்பரம் அவர்களைக் கேட்டோம்.

அதற்கு அவர் அளித்த பதில் விவரம் வருமாறு:

''இலங்கையிலே மூண்டுள்ள இனவெறி காரணமாக - ஈழத்திலே பல ஆண்டுகளாக எங்கள் இயக்கம் போராடி வந்துள்ளது. எமக்கு என்ன நேர்ந்தாலும் தொடர்ந்து நம் இலட்சியத்தை நோக்கி நாம் சென்று கொண்டே இருப்போம். இந்த எம் நோக்கத்திற்கு எல்லா வகையிலும் எமக்கு வேண்டிய உதவிகள் அத்தனையையும் செய்து வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், எம் பிரச்னைகளை உணர்ந்து எமக்குத் துணை நிற்கும் தமிழகத்திலுள்ள கோடானுகோடி உள்ளங்களுக்கும் யாம் எப்போதும் கடமைப் பட்டவர்களாவோம்.

''சொத்து சுகம் வீடெலாம் இழந்து, இங்கு வந்த வேளையில் எமக்குத் தங்கும் வசதியும் உணவும் தந்து இத்தனைக் காலமும் எம்மை அரசு விருந்தினர் விடுதியில் வைத்து உபசரித்த தமிழ்நாடு அரசும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் எமக்குள்ள பளுவைப் போக்கும் நோக்குடன் அளிக்கும் வீடுகளை நாங்கள் நன்றியுணர்வோடு பெற்றுக் கொள்கிறோம்.

''மாண்பமை முதல்வரின் கட்டளைக்கேற்ப, வேகமான வகையில் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு எமக்கு இந்த வீடுகளை வழங்குவதில் முக்கியப்பங்கு வகிக்கும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. செல்லையா அவர்களுக்கும் நாங்கள் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.''

— திரு தா. சிவசிதம்பரம் இவ்வாறு நம்மிடம் உணர்ச்சிப் பெருக்கோடு கூறி உள்ளத் துணர்வை வெளிக்காட்டினார்.

—இந்திரன்



மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு க.இராசாராம் அவர்களை, இந்தியாவில் சொற்பொழிவாற்றுவதற்காக வந்திருந்த அமெரிக்காவைச் சார்ந்த அனைத்து நாட்டுச் சிறப்பாய்வு மைய முதுநிலை ஆய்வாளர் திரு ராபர்ட் ஜி. நியூமன் 13.2.'84 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார்.

# படமும் செய்தியும்



மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை, இந்தியாவில் உள்ள நெதர்லாந்து நாட்டின் தூதர் திரு. அட்ரியான் வாண்டர் வில்லிங்கன் 14.2.'84 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார். உடன் இருப்பவர், சென்னையில் உள்ள நெதர்லாந்து நாட்டின் குடிமகன் திரு கே.வி. ஷெட்டி.





மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள், உதகை நகராட்சி ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்ட நகராட்சி தினசரி சந்தை நான்காம் கட்டக் கடைகள் கட்டடத்தை 21.1.'84 அன்று திறந்து வைத்தார்.



மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு ம. விஜயசாரதி அவர்களை, மாண்புமிகு மேற்கு வங்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துறை அமைச்சர் டாக்டர் சம்குநாத் மந்தி அவர்கள் 14.2.84 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார்.



மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு க. கலைமணி அவர்களை, மாண்புமிகு கர்நாடக மாநில மீன் வளத்துறை அமைச்சர் திரு இராஜவர்த்தனம் அவர்கள் 13.2.'84 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார்.



சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் பதவிக்குத் தேர்ந் தெடுக்கப் பெற்ற திரு ஜி. சுவாமிநாதன் 16.2.84ல் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார். அவருக்கு மேலவை முன்னவர் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் மாலை அணிவித்து வாழ்த்துகளைத் தெரி வித்தார்.



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர், அவர்களின் ஆணைப்படி, இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு எம். சிவசிதம்பரம் அவர்களுக்கு நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி குடியிருப்பில் டி4. இல்லம் அளிக்கப்பட்டது. மேற்படி இல்லத் தின் சாவியை சிவசிதம்பரம் அவர்களின் துணைவியாரிடம் 20.2.84ல் வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. ஏ. செல்லையாத் தேவர் வழங்கினார்.





# புலியாட்டக் கலைக்குழு

இந்திய நாடு சுதந்திரம் அடைந்து, குடியரசு பெற்றபின் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரித் திங்கள் 26ஆம் நாள் இந்தியா முழுவதும் குடியரசுதின விழா சிறப்புடன் நடத்தப்படுகிறது.

ஒவ்வொரு மாநிலத் தலை நகரில் முப்படை வீரர்களின் அணி வகுப்பு, அலங்கார ஊர்தி அணி வகுப்பு, கலைநிகழ்ச்சிகள் நடத் தப்படுகின்றன. அதுமட்டுமல்லா மல், ஒவ்வொரு மாநிலத்தினு டைய பண்பாட்டையும் கலை யினையும், உலக மக்கள் தெரிந்து கொள்வதற்கேற்பக் கலைநிகழ்ச் சிகள் மற்றும் அலங்கார ஊர்தி கள் புதுடெல்லியில் நடைபெறு கின்ற குடியரசு தினவிழாவில், இந்தியப் பாதுகாப்பு அமைச்ச கத்தினால் ஏற்பாடு செய்யப்படு கின்றன.

1984ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26ஆம் நாள் நடை பெற்ற குடியரசு தினவிழாவில், பூட்டான் மன்னர் சிறப்பு விருந் தினராகக் கலந்து கொண்டார். யானை போன்று அலங்கரிக்கப் பட்ட ஹெலிகாப்டர் வானத்தில் நடனமாட, மற்றொரு ஹெலி காப்டர் பொதுமக்கள்மீது மலர் தூவ, காலை 9.30 மணியளவில் குடியரசுத் தலைவர் மாளிகையி லிருந்து அணிவகுப்புகள் புறப் பட்டன.

இந்தியப் பாதுகாப்பு அமைச்ச கம் குடியரசு தினவிழா அணி வகுப்பில் பங்கேற்பதற்குத் தமிழ் நாட்டின் சார்பில் கிராமியக் கலைக்குழுவினைப் பங்கேற்கு மாறு கேட்டுக் கொண்டதற் கிணங்க, தமிழ்நாட்டின் சார்பில் புலியாட்டக் கிராமிய கலை நிகழ்ச்சியினைத் தேர்வு செய்து குடியரசு தினவிழா அணிவகுப்பில் பங்கேற்க ஏற்பாடு செய்யப்பட் டது. மத்தியப் பாதுகாப்புஅமைச் சகத்தின் ஒப்புதலுக்கேற்ப ஈரோட்டைச் சேர்ந்த திரு ஜெல்ல கிருஷ்ணன் பாசறையில் பயிற்சி பெற்ற 30 பேர் அடங் கிய கலைக்குழுவினர் திரு.சுப்பிர மணியத்துடன் புதுடெல்லிக்கு 9.1.84அன்று சென்னையிலிருந்து புறப்பட்டு, 11.1.84ல் புதுடில் லியை அடைந்தார்கள்.

புதுடெல்லியில் ரபீந்தரா ரஸ்லாலாவில் இந்தியப் பாது காப்பு அமைச்சகம் கலைக்குழு வினர் தங்குவதற்கும் பயிற்சி பெறுவதற்கும் ஏற்பாடு செய் திருந்தது. இந்தியச் செய்தி மற் றும் தகவல் ஒலிபரப்பு அமைச் சகத்தினைச் சேர்ந்த துணை இயக் குநர் திரு.ஆர்.கே.பரோரா, கலைக்குழுவினருக்கு வேண்டிய பயிற்சியினை 11.1.84 முதல் 24.1.84 வரை ரபீந்திரா ரஸ் லாலாவில் கொடுத்தார்.

குடியரசு தினவிழா அணிவகுப் பில் 15 மாநிலங்களின் சார்பில் 500 பேர் அடங்கிய கலைக்குழு வினர் பங்கேற்றுக் கலைநிகழ்ச் சிகளை நடத்தினார்கள்.

16.1.84 அன்று பத்திரிகையா ளர்கள் மற்றும் தொலைக்காட்சி யினர் 15 மாநில கலைக்குழுவின் நிகழ்ச்சியினைப் பார்வையிட் டார்கள். தமிழக கலைக்குழுவின் புலியாட்டக் கலை நிகழ்ச்சி யினைப்பார்வையிட்ட பத்திரிகை யாளர்கள், கலைக்குழுவினர் புலி போன்ற வண்ணத்தைப் பூசி நடனமாடியதை வெகுவாகப் பாராட்டினார்கள்.

26.1.84 அன்று கலைக்குழு வினர் குடியரசுத்தலைவர் மாளி கையின் அருகில் விஜயசௌக் என்ற இடத்திற்குக் காலை 8 மணிக்கே அழைத்துச் செல்லப் பட்டனர். 26.1.84 காலை 9.30 மணிக்கு விழா நிகழ்ச்சிகள் ஆரம் பமாயின.

மாண்புமிகு பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் திறந்த காரில் வருகை தர, மேதகு குடியரசுத்தலைவருடன், மேதகு பூட்டான் மன்னர் திரு. வாங்க தலைமை விருந்தினராகக் குடியரசு தினவிழா நிகழ்ச்சியைப் பார்ப்பதற்கு ஊர்வலமாகத் திறந்த குதிரைவண்டியில் அழைத் துச் செல்லப்பட்டார்.



**மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களின் இல்லத்தில் தமிழகப் புலியாட்டக் கலைநிகழ்ச்சி நடத்தப்பட்டது; கலைக் குழுவினருடன் பிரதமர்.**

பின்னர் குடியரசுத் தலைவர் தேசியக் கொடியை ஏற்றினார். யானை போல் அலங்கரிக்கப் பட்ட ஹெலிகாப்டர் உயரப் பறந்து மலரினைத் தூவியது. தொடர்ந்து முப்படை வீரர்கள் அணிவகுப்பு, போர்ப்படைக் கருவிகள், மற்றும் இயந்திரங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப் பட்டன. பள்ளிமாணவ-மாணவி யரின் கலை மற்றும் இசை நிகழ்ச்சி ஊர்வலத்தில் இடம் பெற்றது. குடியரசுத் தலைவரின் விருந்தினர் ஆறு யானைகளின் மேல் உட்காரவைத்து ஊர் வலமாக அழைத்துசெல்லப்பட் டனர்.

பின்னர் 9 மாநிலங்கள் மற்றும் பெல், விமானத்துறை ஆகியவற் றின் மொத்தம் 15 அலங்கார ஊர்திகள் ஊர்வலத்தில் பங்கேற் றன. இதனைத் தொடர்ந்து 15 மாநிலங்களின் கலைநிகழ்ச்சி 11.15 மணிக்கு குடியரசுத் தலை வர் மாளிகையிலிருந்து புறப்பட் டது. கலைக்குழுவினர் அனை வரும் ஊர்வல அணிவகுப்பில் அந்தந்த மாநிலக் கலாச்சாரத் தைப் பிரதிபலிக்கும் வகையில் நடன நிகழ்ச்சியை நடத்திச் சென்றனர்.

தமிழ்நாட்டின் சார்பில் பங் கேற்ற புலியாட்ட நடனக்கலை நிகழ்ச்சி பொதுமக்கள் மத்தியில் தனி உற்சாகத்தை ஏற்படுத்தி யது. குழந்தைகள் எல்லாம் புலி வருகிறது, புலி வருகிறது என்று முழக்கமிட்டனர். குடியரசுத் தலைவர் மாளிகையிலிருந்து புறப்பட்ட கலைக்குழுவினர் இந் தியா கேட் அடுத்த நேஷனல் அரங்கம் வரை நடன நிகழ்ச் சியை நடத்திச் சென்றனர். தென்மாநிலங்களில் தமிழ்நாடும், கர்நாடகமும் மட்டும்தான் கலைக்குழுவில் பங்கேற்றன.

27.1.84 மற்றும் 28.1.84 ஆகிய நாட்களில் புதுடில்லி நக ராட்சி அரங்கில் பொதுமக்கள் பார்ப்பதற்கு 15 மாநிலங்களின் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட் டன. ஒவ்வொரு மாநிலத்திற்கும் 7 நிமிட நேரம் தரப்பட்டது. இவ்வரங்கில் புலியாட்டக் கலை நிகழ்ச்சியைக் கண்ட மக்கள்



**தமிழ்நாடு கலைக்குழுவினர் மேதகு குடியரசுத் தலைவர் திரு ஜெயில்சிங் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்துதல்**



மெய்மறந்தனர். புலி நடன நிகழ்ச்சி, தப்பட்டை, தாரை, மேளம் முழங்க நடத்தப்பட்டது.

27.1.84 அன்று காலை மாண்புமிகு துணைக் குடியரசுத் தலைவர் இல்லத்தில் அனைத்து மாநில கலைநிகழ்ச்சிகள் நடத் தப்பட்டன. உணர்ச்சிமிகுந்த புலியாட்ட நடன நிகழ்ச்சியைப் பார்த்த துணைக் குடியரசுத் தலைவர் அவர்கள், புலியுடன் நான் சண்டைபோடப் போகி றேன் என்று தெரிவித்துப் புலி யுடன் சண்டை போட்ட காட்சி உள்ளங்களைக் குளிரச் செய் வதாக இருந்தது.

28.1.84 அன்று மேதகு குடி யரசுத் தலைவர் மாளிகையிலும், மாண்புமிகு உள்துறை அமைச்சர் இல்லத்திலும், கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. குடியரசுத் தலைவர் அவர்கள் தன்னுடைய பேரக்குழந்தைகளுடன், புலி யாட்டக் கலைக்குழுவினரோடு புகைப்படம் எடுத்துக் கொண் டார். மாலை 4 மணியளவில் மாண்புமிகு மத்தியப் பாது காப்புத்துறை அமைச்சர் திரு ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் ரபிந்தரா ரஸ்ஸாலாவில் அனைத்துக் கலைக்குழுவினரின் கலைநிகழ்ச்சியினைப் பார்வை யிட்டார். புலியாட்டக் கலை நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக இருந்தது என்று டெல்லி மக்கள் கூறுகிறார்கள் என்று தெரிவித் தார். பின்னர் புலித்தலையைத் தலையில் வைத்து புகைப்படம் எடுத்துக் கொண்டார். அனைத்து கலைக்குழுவினருக்கும் அன் பளிப்புப் பொருள்கள் வழங்கி னார்.



**புலிவேடதாரி ஒருவருடன் மேதகு துணை குடியரசுத் தலைவர் திரு. இதயதுல்லா**

29.1.84 அன்று காலை மாண்புமிகு பிரதமர் இல்லத்தில் கலைநிகழ்ச்சி நடத்தப்பட்டது. புலியாட்டக் கலைநிகழ்ச்சியைப் பார்த்த பிரதமர் அவர்கள், ''ரொம்ப சந்தோஷம், வணக்கம், நன்றி'' என்று தமிழில் தெரி வித்து, தமிழ்க் கலைஞர்களைப் பெருமைப்படுத்தினார். புலித் தலையை எடுத்துத் தன் கையில் வைத்துப் புலி நடன நிகழ்ச்சி யைப் பாராட்டினார்.

29.1.84 அன்று மாலை 6 மணிக்குக் குடியரசுத் தலைவர் மாளிகையின் முன்பு குடியரசுத் தலைவர் அவர்கள் முப்படை வீரர்களின் அணிவகுப்பு, கலை மற்றும் இசை நிகழ்ச்சியினை ஏற்றுக் கொண்டபின், தேசியக் கொடி இறங்கியதும் வாணவெடி யுடன் குடியரசுத் தலைவர் மாளிகை, நாடாளுமன்றம் மற் றும் அனைத்துக் கட்டடங்களும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டு விழா நிகழ்ச்சிகள் இனிதே முடிவுற்றன.

தமிழ்நாட்டின் சார்பில் பங் கேற்ற புலியாட்டக் கலைநிகழ்ச்சி டெல்லி மக்களிடையே அழியா மகிழ்ச்சிப் பெருக்கையும், மீண் டும் பார்க்க முடியாதா என்ற ஆவலையும் தோற்றுவித்துள்ளது. புலியாட்டக் கலைக்குழு 1.2.84 அன்று புதுடில்லியிலிருந்து புறப் பட்டு 3.2.84ல் சென்னைக்குத் திரும்பியது.

புதுடில்லியில் கலைக்குழுவினர் ரபிந்தரா ரஸ்ஸாலா முகாமில் தங்கியிருந்தபோது மாண்புமிகு தமிழக மின்துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு இல்லத்தின் சிறப்பு ஆணையர் அவர்கள் 21.1.84 அன்றும், மாண்புமிகு தமிழ்நாடு சிறப்புப் பிரதிநிதி திரு ஜி.ஆர்.எட்மண்ட் அவர்கள் 20.1.84 அன்றும் கலைக்குழு வினரைச் சந்தித்து மகிழ்வித்துச் சென்றார்கள்.

பாதுகாப்பு அமைச்சகத்தைச் சேர்ந்த அலுவலர்கள் திரு.எல். என். மேத்தா, திரு.அரோரா ஆகியோர் கலைநிகழ்ச்சிக்குப் பொறுப்பேற்றுச் சிறப்புடன் எல் லாப் பணியினையும் செய்து கொடுத்தார்கள்.

**வி. சச்சிதானந்தம்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர், தலைமைச் செயலகம்.**



### நகரியங்களுக்கு நிதியுதவி

மாமல்லபுரம், இராமேஸ்வரம், கன்னியா குமரி ஆகிய நகரியங்களுக்கு, 1982-83-ல் கீழே குறிப்பிட்டுள்ளவாறு அடிப்படை வசதி களைச் செய்து கொடுப்பதற்காக 50 சத வீதக் கடன், 50 சதவீத மானிய அடிப்படை யில் ரூ. 58 இலட்சம் நிதி உதவி அளிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

| | ரூபாய் இலட்சம் |
|---|---|
| மாமல்லபுரம் நகரியம் | 17.00 |
| இராமேஸ்வரம் நகரியம் | 22.50 |
| கன்னியாகுமரி நகரியம் | 18.50 |
| மொத்தம் | 58.00 |

# மீண்டும் தாய்மையடையும் நிலையா ?

கவலை
வேண்டாம்



கருவை கலைத்துவிடலாம்

சட்டம் இதை அனுமதிக்கிறது



அரசு ஆஸ்பத்திரிகள் அனைத்திலும் வைத்திய அடிப்படையில் கருக்கலைக்கும் வசதிகள் இலவசமாக கிடைக்கும்.

முதல் பன்னிரண்டு வாரங்களில் கருவைக் கலைப்பது சுலபமானது; அபாயமற்றது

**இரண்டு குழந்தைகளே போதும் மூன்ருவது கர்ப்பத்தை தடுங்கள்**

நினைவிருக்கட்டும் : அடிக்கடி கருக்கலைப்பு செய்து கொள்ளுவது ஆரோக்கியத்தைக் குலைக்கும். தகுந்த கருத்தடை முறையை கடைப்பிடியுங்கள்.

davp 83/2




திரு அவினாசிலிங்கம் கல்வி நிறுவனங்களின் தலைவர் திரு. தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள் கருத்தரங்கைத் தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.

# சத்துணவுடன் பள்ளிக்கல்வி:

## யுனெஸ்கோ கருத்தரங்கு

அனைவருக்கும் கல்விவாய்ப்பு அளிக்கவும், கல்வித்தரம் உயரவும் செம்மையாகச் செயல்பட்டு வரும் ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான கலாசார நிறுவனம் (UNESCO) முப்பது ஆண்டுகளுக்கு முன் நடத்திய தனது பதினான்காவது அனைத்துலக நாடுகளின் கல்விக் கருத்தரங்கில், பள்ளிச் சிறுவர்களுக்கு உணவளித்தல் பற்றிச் சில பரிந்துரைகளைச் செய்திருந்தது.

அவற்றில் ஒன்று, 'சத்துணவுடன் கல்வி அளிக்கப்படுவதால் மாணவர்களுக்குக் கிடைக்கும் நன்மைகளைக் கருத்தில்கொண்டு எல்லாக் குழந்தைகளுக்கும் எவ்விதப் பாகுபாடுமின்றி உணவு வழங்கப்படவேண்டும்' என்பதாகும். .

ஐக்கிய நாட்டு நிறுவனங்கள் நீண்ட காலமாகவே பள்ளிக் கல்விக்கும், உணவு வழங்குவதிலும் தமது கவனத்தைச் செலுத்தி வந்திருக்கின்றன. யுனிசெப் (UNICEF) நிறுவனம் குழந்தைகளுக்கு உணவு வழங்குதல் பணிகளிலும், உணவு மற்றும் விவசாய நிறுவனம் (F.A.O.) சத்துணவுத் துறையிலும், அனைத்துலகநாடுகளின் சுகாதார நிறுவனம் (W.H.O.) யுனெஸ்கோ நிறுவனம் ஆகியவை சத்துணவு குறித்த தொழில் நுட்ப ஆலோசனைகளிலும் நீண்ட கால அனுபவம் கொண்டவை.

இந்நிறுவனங்கள் அனைத்தும் இணைந்து 'சத்துணவுடன் கல்வி பற்றிய கருத்தரங்கை' சத்துணவுக் கல்விப் பணிக்கெனக் கால் நூற்றாண்டிற்கும் மேல் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள திரு. அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் நடத்தத் தீர்மானித்தது பொருத்தம்தானே?

இக்கருத்தரங்கு 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-21 தேதிகளில் 26 வளரும் நாடுகளிலிருந்து வந்திருந்த 45 சிறப்பு நிபுணர்களின் பங்கேற்புடன் சிறப்பாக நடைபெற்றது.

திரு. அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியின் நிறுவனர் திரு. தி.சு. அவினாசிலிங்கம் அய்யா அவர்கள் தமது வரவேற்புரையில் -பள்ளிக் கல்வியுடன் சத்துணவு மட்டுமல்லாமல் சத்துணவுக் கல்வியும் அதில் ஒரு முக்கியப் பகுதியாக இருக்கவேண்டும் என்று வலியுறுத்தினார். இக்கருத்தரங்கின் மையமாகச் சத்துணவுத் திட்டம் செயல்படும் தமிழகத்தைத் தேர்ந்தெடுத்தது மிக மிகப் பொருத்தமானது எனப் பாராட்டினார்.

இக்கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளரும் யுனெஸ்கோ நிறுவன இயக்குநரின் பிரதிநிதியுமான திரு. ரிச்சர்டு லோவால்டு ( Richard Loewald ) தமது தொடக்க உரையில், இக்கருத்தரங்கின் நோக்கம் எப்படிச் சத்துணவின் மூலம் கல்வி பயிலுவதை ஊக்குவிக்கமுடியும்என்பது தானே தவிர ஏன் சத்துணவு வேண்டும், என்ன சத்துணவு வேண்டும் என்பது அல்ல என்று குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கின் தொழில் நுட்ப ஒருங்கிணைப்பாளரும், திரு. அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியின் இயக்குநருமான டாக்டர் (திருமதி) இராசம்மாள் பா. தேவதாஸ் அவர்கள் தமது தொடக்க உரையில், ''பள்ளியில் சத்துணவுத் திட்டம் கல்வி பயில்வதற்கான ஒரு தூண்டுகோல்' என்ற தலைப்பில் சத்துணவுத்திட்டம்கல்வி பயில்வதற்கு



மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள், கருத்தரங்கின் நினைவாக திரு ரிச்சர்டு. லோவால்டு அவர்களுக்குப் பரிசளிக்கிறார்.

உதவுவதை ஆதாரங்களுடன் தெளிவாக எடுத்துரைத்தார். இதனை ஒட்டி விவாதமும் தொடர்ந்து நடைபெற்றது.

'அணுகுமுறை, அறிவு, திறமை ஆகியவற்றின் முன்னேற்றத்திற்குப் பள்ளிச் சத்துணவின் பங்கு' என்ற தலைப்பில் பள்ளிக் கல்வியின் பல்வேறு நிலைகளுக்கும் உணவளித்தல் எப்படி நேரடியாக அல்லது மறைமுகமாகப் பயன்படுத்தமுடியும் என்பது குறித்து விவாதிக்கப்பட்டது. பொதுவாகச் சத்துணவுத் திட்டம் பள்ளியில் பயிலும் மாணவர் சேர்க்கை எண்ணிக்கையை அதிகரித்துள்ளது என்ற மேம்போக்கான சிந்தனைக்கு அப்பால் குழந்தைகளின் மிகச் சிறிய வயதில் கவனிப்பு, கல்வி பற்றிய கண்ணோட்டங்களும் ஆராயப்பட்டன.

உணவுப் பழக்கங்கள், உணவுப் பண்டங்கள் சுகாதாரம், உணவு மூலம் ஏற்படும் நோய்கள் குறித்தும், இதுவரை பள்ளிப் பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளவைகளால் அணுகுமுறை, அறிவு, திறமை ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், குழந்தைகளின் தற்போதைய எதிர்காலத் தேவைகளுக்குப் போதுமானதா என்பது குறித்தும் கருத்துப் பரிமாற்றம் மேற்கொள்ளப்பட்டது. பல்வேறு நாட்டு நிபுணர்களின் பரிசீலனைக்குப் பின் மண்டல, தேசிய, சர்வதேச அளவில் (அ) பாடத்திட்ட முன்னேற்றம், (ஆ) வழிமுறைகள் (இ) பாட நூல்கள், ஆசிரியர்களுக்கான துணை நூல்கள் பற்றிய கருத்துக்களும் வெளியிடப்பட்டன.

கருத்தரங்கின் நிறைவு நாளன்று திரு. ரிச்சர்டு லோவால்டு தனது உரையில், கருத்தரங்கில் விவாதிக்கப்பட்ட, தீர்மானிக்கப்பட்ட கருத்துகளை விரிவாக எடுத்துரைத்தார். கருத்தரங்கில் பள்ளி முன்கல்வி பெறும் வயதுள்ள குழந்தைகள், தாய்மையடைந்த நிலையிலுள்ள பெண்கள், தாய்மார்கள், ஆகிய நலிவடைந்த பிரிவினருக்குச் சமுதாயத்தின் பங்கைப் பெரிதும் வலி

கருத்தரங்கில் கலந்துகொண்ட உலக நாடுகளின் பிரதிநிதிகளுள் ஒரு பகுதியினர்.





# சத்துணவு நன்மைகள்

**1982**-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் தொடங்கப்பட்ட முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் பயன்களைப் பற்றிக் கண்டறிவதற்காக ஒரு விரைவு ஆய்வு, மதிப்பீடு மற்றும் செயல் முறை ஆராய்ச்சித் துறையினால் மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்டத்தின் முக்கிய விளைவுகளைப் பற்றி உடனடியாகத் தெரிந்து கொள்வதற்காக நடத்தப்பெற்ற ஒரு விரைவான ஆய்வு இது. திட்டம் செயல்படத் தொடங்கிய 3 மாதங்களுக்குப் பின் ஏற்பட்ட விளைவுகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

பள்ளிக்கு வரும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை மாற்றம், குழந்தைகளின் உடல்நலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டன. சென்னை மாநகரம், தருமபுரி மாவட்டத்தில் சில நகராட்சிகளும், கிராமப்புற மையங்களும் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. இந்த ஆய்வில் கண்டறியப்பட்ட முக்கியமான முடிவுகள் வருமாறு:

**உடல் நலத்தில் மாற்றங்கள் :**

ஆய்வில் தொடர்பு கொள்ளப்பட்ட 2 வயதிலிருந்து 4 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 87.8 சதவீதத்தினருக்கு எடை கூடியுள்ளது. பள்ளிச் சிறுவர்களில் 90.2 சதவீதத்தினருக்கு, எடை கூடியுள்ளது.

வயதிற்குரிய எடை என்ற அளவுகோலின்படி ஊட்டச்சத்துக் குறைந்த குழந்தைகளாகக் கருதப்படுபவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்து காணப்பட்டது. ஊட்டச்சத்துக் குறைவாக இருப்பதாகக் கருதப்படும் குழந்தைகளின் சதவிகிதமும் 34லிருந்து 30 ஆகக் குறைந்துள்ளது.

சோகை நோய் 18.4 சதவிகிதத்திலிருந்து 11 சதவிகிதமாகக் குறைந்துள்ளது.

**பள்ளி வருகையில் மாற்றங்கள்**

1982-ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் ஆகிய 3 மாதங்களுக்கான சராசரிப் பதிவு 10 சதவீதம் உயர்ந்துள்ளது. 1980-81ல் 1.9 சதவீதமும், 1979-80ல் 1.7 சதவீதமும், 1978-79ல் 2.3 சதவீதமும் இருந்தது.

1982-ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் பள்ளியின் வருகை முந்தைய ஆண்டைவிட 33 சதவிகிதம் கூடியுள்ளது. குறிப்பாகச் சிறுவர்களின் எண்ணிக்கை 31.25 சதவிகிதமாகவும், சிறுமியர்களின் எண்ணிக்கை 35 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளன.

பதிவு செய்யப்பட்ட பள்ளிக் குழந்தைகளில் தினசரி வருகை தருவோரின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. 1981ல் 62 சதவீதமாக இருந்தது 71.46 சதவீதமாக உயர்ந்துள்ளது. ஆகவே பள்ளிகளில் பதிவு செய்தபின் படிப்பைப் பாதியிலே விட்டுவிடுபவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

யுறுத்தும் வண்ணம் கருத்தரங்கின் முடிவுகள் எடுக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

விழாவின் நிறைவு நாளன்று வரவேற்புரை நிகழ்த்திய கருத்தரங்கின் தொழில் நுட்ப ஒருங்கிணைப்பாளரான டாக்டர் (திருமதி) இராசம்மாள் பா.தேவதாஸ் அவர்கள், பாரிசில் திரு. ரிச்சர்டு லோவால்டு மற்றும் அவர் சகாக்களும், இந்தியாவில் தாமும் தம் சகாக்களும் மூன்றாண்டுகளாகப் பெரும் முயற்சி எடுத்துச் செயல்பட்டதற்குத் தகுந்த பலன் கிடைத்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

''சமுதாயத்தின் பின்தங்கிய நிலையிலுள்ள குழந்தைகளுக்குத் தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மதிய உணவுத் திட்டம் முன்னோடியாக விளங்குவதால், தமிழகம் யுனெஸ்கோ கருத்தரங்கின் மையமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பெருமை கொள்கிறது'' என்று தமது மகிழ்வினைத் தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர். எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் துவக்கியுள்ள குழந்தைகளுக்கான மாபெரும் மதிய சத்துணவுத் திட்டம் சடு இணையற்றது என்று புகழாரம் சூட்டி, அதன் காரணமாகவே பள்ளிக் கல்வி குறித்த உலகப் படத்தில் தமிழகம் ஒரு சிறப்பான இடத்தையும் பெற்றுள்ளது என்றும், சத்துணவுக்கெனத் தனி அமைச்சர் கொண்ட சிறப்பு தமிழகத்திற்கு மட்டுமே என்றும் கூறிய டாக்டர் இராசம்மாள் பா.தேவதாஸ் அவர்கள், கருத்தரங்கு சிறப்பாக நிறைபெற உதவிய அனைவருக்கும் தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

கருத்தரங்கை நிறைவு செய்து மாண்புமிகு தமிழகக் கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் ஆற்றிய உரையில், ''இந்தியாவில் போதிய அளவு ஆசிரியர்கள் அல்லது பள்ளிகள் இல்லை என்ற பிரச்னை கிடையாது; ஆனால் கற்பதற்கு ஆர்வமுடைய குழந்தைகள் பள்ளியில் சேர்வதுதான் பிரச்னை'' எனக் குறிப்பிட்டார். ''பள்ளிக்குக் குழந்தைகளைச் செல்லத் தூண்டியதும், தொடர்ந்து கல்வி பயிலும் குழந்தைகளின் எதிர்கால வாழ்விற்குத் தகுந்த அடித்தளத்தை ஏற்படுத்தியதும்தான் தமிழக முதல்வரின் சத்துணவுத் திட்டத்தின் மூலம் கிடைத்த மிகப் பெரிய நன்மைகளாகும்'' என்று அவர் சுட்டிக்காட்டினார்.

யுனெஸ்கோவின் திட்ட நிபுணர் திரு எப்.பி.நல்லதம்பியின் நன்றியுரையுடன் கருத்தரங்கு முடிவடைந்தது.

—பார்வையாளன்

நன்றி : விஞ்ஞானச் சுடர்
ஜனவரி, 1984

அனைத்து சாலைகளும் அஞ்சலகத்தை நோக்கியே!

**உங்கள் பணத்தை 6 ஆண்டுகளில்**
**இரட்டிப்பாக்குங்கள்**
**தேசீய சேமிப்புப் பத்திரம்**
6-வது வெளியீட்டில் முதலீடு செய்யுங்கள்




உங்கள் பணத்திற்கு நல்ல வட்டியும் பாதுகாப்பும் அளிக்கிறது. இப்பத்திரம் ரூ.10, 50, 100, 500, 1000, 5000 மதிப்பில் கிடைக்கும். முதலுக்கும், வட்டிக்கும் வருமான வரி சலுகை உண்டு!

அயல் நாட்டில் வாழும் இந்தியர்களுக்கு 13% வட்டி அளிக்கிறோம்!

தொடர்பு கொள்க:
இயக்குநர்,
**சிறு சேமிப்புத் துறை,**
143, அண்ணா சாலை, சென்னை-600 002
அல்லது அருகிலுள்ள அஞ்சலகங்கள்.



# அரிய கலைஞருக்கு அரசு அஞ்சலி

பரதநாட்டிய மேதை, அபிநய அரசி எனப் பலவாறு போற்றிப் புகழ்பெற்ற திருமதி டி. பால சரஸ்வதி 9-2-84 அன்று சென்னையில் இயற்கை எய்தினார்.

இத்துயரச் செய்தியறிந்ததும் மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள், கீழ்ப்பாக்கத்தில் உள்ள பரதநாட்டிய மேதையின் இல்லத்துக்குச்சென்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும், தன் சார்பிலும் மலர் அஞ்சலி செலுத்தினார்.

மாண்புமிகு பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களின் சார்பிலும் திருமதி பாலசரஸ்வதியின் உடல்மீது மலர் வளையம் வைக்கப்பட்டது.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம், வீணை வித்துவான் திரு எஸ் பாலசந்தர், பரதநாட்டியக்கலைஞர் செல்வி பத்மா சுப்பிரமணியம் ஆகியோர் திரும்தி பால சரஸ்வதி மரணத்துக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

நாட்டியமேதை திருமதி ருக்மணி அருண்டேல், கர்நாடக இசை மேதைகள் திருமதி எம் எஸ். சுப்புலட்சுமி, திருமதி டி. கே. பட்டம்மாள், திரு. டி. கே. ஜெயராமன், நடிகைகள் திருமதி பத்மினி, திருமதி வைஜயந்தி மாலா ஆகியோர் திருமதி பால சரஸ்வதியின் இல்லத்துக்குச் சென்று மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

**வாழ்க்கைக் குறிப்பு**

திருமதி. பாலசரஸ்வதி 1918-ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் தேதி பிறந்தார். 4-வது வயதில் நாட்டியமாடத் தொடங்கிய அவர், தமது 7வது வயதில் நாட்டிய அரங்கேற்றம் செய்தார். அவர் பத்து வயதடைந்ததும் மயிலாப்பூர் கௌரி அம்மாள், சின்னையா நாயுடு ஆகியோரிடம் அபிநயம் கற்றார். பின்னர் லட்சுமி நாராயண சாஸ்திரியிடம் குச்சுபிடி நடனம் பயின்றார். அத்துடன் அவர் இசையும் பயின்று வந்தார். உலகின் பல பகுதிகளில் அவர் நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார்.



# தாய்லாந்து மொழியில் இராமாயணம்

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையின் சார்பில் 2.2.1984ஆம் நாள் நடைபெற்ற ஒரு சிறப்புக் கூட்டத்தில் தாய்லாந்து நாட்டின் தலைநகராகிய பாங்காக்கில் உள்ள சில்பக்ரான் பல்கலைக் கழகத்தில் கிழக்கியல் மொழிகளின் துறையில் பணிபுரியும்பேராசிரியர் டாக்டர் சிர்பத் பிரபன் வித்யா, ஆய்வாளர்களிடையே ஒரு சிறப்புரை நிகழ்த்தினார்.

அப்பொழுது அவர், தாய்லாந்துக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே பழங்காலத்திலேயே கலை, பண்பாட்டு உறவுகள் ஏற்பட்டு இருந்தமைக்கான சான்றுகள் நிரம்ப இருக்கின்றன என்று குறிப்பிட்டார்.

தமிழில் உள்ள கலைக்களஞ்சியத்திலேயே தாய்லாந்து பற்றிய கட்டுரையில் இது பற்றிய குறிப்புகளுக்கு இடையே சிறந்ததொரு செய்தியும் உள்ளது. அது வருமாறு: ''தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்திருக்கின்ற வாணிகச் சங்கத்தை குறிப்பதும்,கி.பி.8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததுமான ஒரு தமிழ்க் கல்வெட்டு காணப்படுகிறது.'' மறைந்த பேராசிரியர் டாக்டர் தெ.பொ.மீ. 'சையசையாமிய திருப்பாவை-திருவெம்பாவை' என்றே ஒருநூலும் எழுதியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட தாய்லாந்து அறிஞர் ஒரு புதிய செய்தியையும் வெளியிட்டார். அது தாய்லாந்து மொழியில் உள்ள இராமாயணத்தில் தமிழ் இராமாயணம் ஆகிய கம்ப இராமாயணத்தின் செல்வாக்கு நிரம்ப இருக்கிறது என்பது ஆகும்.

எடுத்துக்காட்டாக, கலைக்கோட்டு முனிவர் (ருஷ்ய சிருங்க முனி) பற்றிய குறிப்பு வால்மீகி இராமாயணத்தில் இல்லை. ஆனால் கம்ப இராமாயணத்தில் தான் இருக்கிறது. அதன் செல்வாக்கு காரணமாகத் தாய் இராமாயணத்திலும் அக்குறிப்பு உள்ளது என்றார்.

கம்பராமாயணத்தில் ஆங்கில மொழி பெயர்ப்பு கிடைத்தால் இதுபோன்ற இன்னும் பல குறிப்புகளை அடையாளம் கண்டு கொள்ளலாம் என்றும் தெரிவித்தார். எடுத்துக்காட்டாக, மயில் இராவணன் கதை தாய் மொழியில் உள்ளது என்றார்.

—டாக்டர் ந. சஞ்சீவி

---

திருமதி பாலசரஸ்வதி பிரபல வீணை வித்துவான் வீணை தனம்மாளின் பேத்தி. நாட்டியத்தைக் கண்ணியக் குறைவாக நினைத்த ஒரு காலத்தில் அதற்குப் பெருமை தேடித்தந்த இவர், மேல் நாடுகளில் முதன் முதலாகப் பரத நாட்டியத்தின் சிறப்பை உணர்த்தினார். 'சங்கீத கலாநிதி' என்ற பட்டம் பெற்ற இவருக்கு மத்திய அரசு பத்மஸ்ரீ என்ற விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது.

திருமதி பாலசரஸ்வதியின் தாயார் ஜெயம்மாள் சிறந்த பாடகர். தஞ்சை பாப்பம்மாள், ருக்மிணி ஆகியோரிடம் இசைப் பயிற்சியும், நாட்டியப் பயிற்சியும் பெற்றவர். புகழ்பெற்ற கந்தப்ப பிள்ளையிடம் தமது நான்காவது வயதில் பாலசரஸ்வதி நாட்டியப் பயிற்சி பெற்றார்.

1961-இல் ஜப்பானில் டோக்கியோவில் இவருடைய நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. அயல் நாடுகளில் இவர் நடத்திய முதல் நாட்டிய நிகழ்ச்சி இதுதான். பின்னர் 1962-ல் சான்பிரான்சிஸ்கோவிலும், 1963-ல் எடின்பரோவிலும் இவருடைய நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்தியாவின் தலைசிறந்த நாட்டியக் கலைஞர் என்னும் பெயரை அயல் நாடுகளில் இவர் பெற்றார்.

1963 முதல்ஒவ்வொரு ஆண்டும் அவர் தொடர்ந்து அமெரிக்கா சென்று சான்பிரான்சிஸ்கோவில் உள்ள கோடை காலப் பரத நாட்டியப் பயிற்சிப் பள்ளியில் நாட்டியம் கற்றுக் கொடுத்து வந்தார். அத்துடன் கீழைநாட்டுக் கலைகளுக்கான அமெரிக்க சங்கத்தின் சார்பில் நாட்டிய நிகழ்ச்சிகளையும் நடத்தி வந்தார்.

சென்னை சங்கீத வித்வத் சபை இசை விழாவில் ஆண்டு தோறும் இவருடைய நாட்டிய நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. 1973-ல்'சங்கீத கலாநிதி' என்னும் பட்டத்தை சங்கீத வித்வத் சபை இவருக்கு வழங்கியது. இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சங்கம், 'சங்கீத கலா சிகாமணி' என்ற பட்டத்தை அளித்தது. இவரைப்பற்றி சத்திய ஜித்ரே ஒரு திரைப்படம் தயாரித்துள்ளார். 'பரத நாட்டியம்' என்னும் தலைப்பில் இவர் ஒரு நூல் எழுதியுள்ளார். இவரது கணவர் திரு சண்முகம், கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பே காலமாகி விட்டார்.

பாலசரஸ்வதியின் சகோதரர்களில் டி. விஸ்வநாதன் புல்லாங்குழல் இசை வல்லுநர். இன்னொருவர் டி. ரங்கநாதன் மிருதங்க வித்வான். இவரது புதல்வி லட்சுமி நாட்டியக் கலைஞர்.

**மாண்புமிகு பிரதமர் இரங்கல்**

மாண்புமிகு பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் இரங்கல் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார். அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

''மறைந்த நாட்டிய மேதை பாலசரஸ்வதி நமது தேசிய மற்றும் கலாசார பாரம்பரியத்தின் மொத்த உருவம். அவர் பரத நாட்டியத்தின் தலைசிறந்த மேதைகள் என்ற வரிசையில் முக்கியமான ஒரு இடத்தை வகித்தவர்.

''பரத நாட்டியக் கலையில் தனக்கென ஒப்பற்ற மங்காத புகழைத் தேடிக் கொண்டவர் பாலசரஸ்வதி. அவருடைய கலையில் அழகு, நளினம் ஆகியவை மிளிர்வதைத் துல்லியமாகக் காணலாம்.

''பாலசரஸ்வதியுடன்எனக்குப் பல ஆண்டுகள் நட்பு உண்டு. அவருடைய மறைவு கலை உலகத்துக்கே பெருத்த நஷ்டம். அவர் மறைந்துவிட்டாலும் அவருடைய நிகரற்ற உன்னத கலை அனைவருடைய மனத்திலும் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டது''.

**மேதகு ஆளுநர் இரங்கல்**

மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:

'பாலசரஸ்வதியின் மறைவினால் சாஸ்திரீய பரத நாட்டியத்திற்கு மட்டும் இழப்பல்ல. இந்தியாவின் நுண்கலை அனைத்திற்குமே ஒரு பேரிழப்பு ஆகும்.'



# நல்லுறவுக்குப் பரிசு

தொழிலாளர் நலத் துறையின் சார்பில், தொழில் நல்லுறவுப் பரிசுகள் வழங்கும் விழா 24.1.84 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடந்தது.

1981ஆம் ஆண்டிற்குரிய தொழிற்சாலைப் பாதுகாப்பு மற்றும் தொழில் நல்லுறவு ஆகியவற்றில் சிறந்த தொழிற்சாலை, தொழிற்சங்கம்,தொழிலாளர்கள் ஆகியோருக்கு விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில்:

''தமிழ்நாட்டில் தொழில் பெருக, தொழில் உறவு வளர தொழிலதிபர்கள்,தொழிற்சங்கப் பிரதிநிதிகள் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். இரு தரப்பினரும் வன்முறையில் ஈடுபடக்கூடாது. உற்பத்தி பாதிக்கப்படாமல் பிரச்சினைகளைத் தொழிலாளர்கள் பேசித் தீர்க்க ஒத்துழைப்புத் தரவேண்டும்.''

**பரிசளிப்பு திட்டம் என்றால் என்ன!**

தமிழ்நாட்டில் தொழில் வளம் பெருக வேலையளிப்பவருக்கும், தொழிலாளர்களுக்குமிடையே தொழிலமைதி நிலவுவது முதல் தேவையாகும் என்று அரசு கருதுகிறது. தொழில் நல்லுறவும், தொடர்ச்சியான அமைதியும் அவற்றால் ஏற்படும் தடையில்லாத உற்பத்தியும் தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல, தொழில் மற்றும் அரசு ஆகியவர்களுக்கும் கூடச் சந்தேகமில்லாமல் நன்மை விளைக்கும் திறன் படைத்தவையாகும். இதை அரசு உணர்ந்துள்ளது.

வேலை அளிப்பவர்களும், தொழிற் சங்கங்களும் மேலே சொன்ன இலக்கை அடைய உதவுகின்றனர் என்ற உண்மையை அங்கீகரிக்க இவ்வரசு எண்ணியது. ஆகவே, மாநில தொழிலாளர் ஆலோசனைக் குழு பரிந்துரைத்தபடி தொழிலாளர்களும், தொழிலும் செழிக்கும் வகையில் தொடர்ந்த தொழில் அமைதிக்கும், தடையில்லாத உற்பத்திக்கும் காரணமாக இருக்கும் நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கங்கள் ஆகியவற்றிற்கும் ஒரு பரி



மாண்புமிகு தொழில்அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள், சிறந்த நிறுவனங்கள் தொழிலாளர்களுக்குப் பரிசுகள் வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''தொழில் உற்பத்தி பாதிக்காத வகையில் தொழிற்சங்கங்கள் பேச்சு வார்த்தை, தன்னிச்சையாக மத்தியஸ்தம் ஆகியவற்றின் மூலம் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்''.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்குத் தேவையான தொழில் அமைதி நிலைமையைக் காப்பாற்ற வேண்டும்.

''தமிழ்நாட்டில் சிறு தொழில் தனியார்-கூட்டுறவுத் தொழில்களுக்கு மானியம் கொடுத்து தொழில் வளர்ச்சி பெரிய அளவில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

## கல்பாக்கம் மின்சார உற்பத்தி அதிகரிப்பு

கல்பாக்கம் யூனிட்டின் முதல் பிரிவு 150 மெகாவாட் மின் சாரத்தை உற்பத்தி செய்வதுடன் திருப்திகரமாகச் செயல்பட்டு வருகிறது. இந்நிலையை அடைவதற்குமுன் பல்வேறு முறையான சோதனைகள் செவ்வனே மேற்கொள்ளப்பட்டன.

23.7.'83 முதல் இப்பிரிவு உற்பத்தியைத் தொடங்கியதிலிருந்து இதுவரை 60 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்துள்ளது. இவற்றில் 45 மில்லியன் நிலையத்தின் தேவைக்குப் பயன்படுத்தப்பட்டது. இந்த நிலை சிலகாலம் வரை தொடர்ந்து நீடிக்கும். மற்ற சோதனைகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

சளிப்புத் திட்டத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் முதல் பரிசு பெறுபவர்களுக்குச் சுழற் கேடயமும், நிரந்தரமாக வைத்துக்கொள்ளக்கூடிய மற்றொரு கேடயமும், அதனுடன் ஒரு சான்றிதழும் பரிசாக வழங்கப்படுகிறது. இரண்டாம் பரிசு பெறுபவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. பரிசுக்குரிய தொழில் நிறுவனங்களும், தொழிற் சங்கமும் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பின்வருமாறுபிரிக்கப்பட்டுள்ளன:

100 அல்லது அதற்குக் குறைவான தொழிலாளர்கள் உள்ள நிறுவனங்கள் மற்றும் 100 அதற்குக் குறைவான உறுப்பினர்கள் கொண்ட தொழிற் சங்கங்கள்.

101 முதல் 500 வரையில் தொழிலாளர்கள் உள்ள நிறுவனங்கள் மற்றும் 101 முதல் 500 வரையில் உறுப்பினர்கள் கொண்ட தொழிற்சங்கங்கள்.

501 முதல் 1000 வரையில் தொழிலாளர்கள் உள்ள நிறுவனங்கள் மற்றும் 501 முதல் 1000 வரையில் உறுப்பினர்கள் கொண்ட தொழிற் சங்கங்கள்.

1000க்கும் மேலான தொழிலாளர்கள் உள்ள நிறுவனங்கள் மற்றும் 1000க்கும்அதிகமான உறுப்பினர்கள் கொண்ட தொழிற் சங்கங்கள்.

இத்திட்டத்தின்கீழ் பரிசு பெறுபவர்களைத் தேர்ந்தெடுக்க அரசு ஒரு உயர் மட்டக் குழுவையும் நியமித்துள்ளது. இதில் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியின் தலைமையின்கீழ், தொழிலாளர்கள் மற்றும் வேலையளிப்பவர்களின் பிரதிநிதிகள் பணியாற்றுகிறார்கள். 1978ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் அமலில் உள்ளது. 1978, 1979 மற்றும் 1980 ஆண்டுகளுக்கான பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

### மாநில சிரம்வீர் பரிசுத் திட்டம்

'பிரிவு—ஏ': உற்பத்திச்செலவு மற்றும் உற்பத்தி நேரத்தைக் குறைக்கும் பயனுள்ள கருத்துக்களுக்கும் இதன்மூலம் அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தும் ஆலோசனைகட்கும் ரூ.1000 ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

'பிரிவு-பி': உற்பத்தி நேரம் மற்றும் உழைப்பின் கடுமையைக் குறைத்து வேலையை எளிதாக்கும் யோசனைகட்கு ரூ. 500- ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

'பிரிவு-சி': உற்பத்தி முறை மாற்றம், உற்பத்தித்திறனை அதிகரித்தல் போன்ற யோசனைகட்கு ரூ. 250 பரிசுகள் தரப்படுகின்றல.

### தொழிற்சாலைகளில் பாதுகாப்புக்கான மாநிலப் பரிசு

தமிழ்நாட்டில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. அவற்றிடையே விபத்துக்களைத் தடுப்பதற்கும், பாதுகாப்பு அமைப்புகளைப் பெருக்குவதற்கும் மாநிலப் பாதுகாப்புப் பரிசுகள் தமிழக அரசால் ஒவ்வொரு ஆண்டும் கொடுக்கப்பட்டு வருகின்றன. தொழிற்சாலைகள் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

பிரிவு 'ஏ' : பத்து இலட்ச மனித மணி நேரத்திற்கு மேல் வேலை செய்யும் தொழிற்சாலைகள்.

பிரிவு 'பி' : ஐந்து முதல் பத்து இலட்ச மனித மணி நேர வேலை செய்யும் தொழிற்சாலைகள்.

பிரிவு 'சி' : இரண்டு முதல் ஐந்து இலட்சம் மனித மணி நேரம் வேலை செய்யும்தொழிற்சாலைகள்.

தொழிற்சாலைகள் மேலும் பத்துப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பொது பாதுகாப்புப் பரிசுத் திட்டத்தின் கீழ்மூன்று திட்டங்கள் உள்ளன:

1. விபத்து நிகழ் விகிதத்தின் விழுக்காட்டின் உயர்ந்த குறிப்பு.

2. மிகக் குறைந்த விபத்து நிகழ் விகிதம்.

3. விபத்து இல்லா மிகவும் நீண்ட காலப் பிரிவு.

முதல் திட்டத்தின்கீழ் பரிசு பெறும் தொழிற்சாலைகளுக்குச் சுழற் கேடயங்கள் வழங்கப்படுகின்றன. இரண்டாவது திட்டத்தின்கீழ், பரிசு பெறும் தொழிற்சாலைகளுக்குச் சுழற்கேடயம் மற்றும் ரொக்கப்பரிசுகள் வழங்கப்படுகின்றன. மூன்றாவது திட்டத்தின்கீழ் பரிசுபெறும் தொழிற்சாலைகளுக்கு ரொக்கப்பரிசுகள் மட்டும் வழங்கப்படுகின்றன. ரொக்கப் பரிசு பிரிவு தொழிற்சாலைகட்கு ரூ.1,000ம், பிரிவு-பி' தொழிற்சாலைகட்கு ரூ.500ம், 'பிரிவு-சி' தொழிற்சாலைகட்கு ரூ. 250ம் முறையே வழங்கப்படுகின்றன.

இரண்டாம், மூன்றாம் பரிசு பெறும் தொழிற்சாலைகளுக்குச் சான்றிதழ்கள் மட்டும் வழங்கப்படுகின்றன.

விண்ணப்பத்திற்கான கட்டணம் ரூ. 15 மட்டும் வசூலிக்கப்படுகின்றது. எல்லாத் தொழிற்சாலைகளிலிருந்தும் பெறப்பட்ட விண்ணப்பங்களைப் பரிசிலனை செய்யச் சிறப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, பரிசுபெறும் தொழிற்சாலைகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இக்குழுவில் தொழிற்சாலை நிர்வாகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும், அரசுத் தரப்புப் பிரதிநிதிகளும் பங்கு பெற்று, பரிசு பெறும் தொழிற்சாலைகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

—பி.வி.ஜி.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.






தமிழரசு
16-3-1984 75 காசு
எழும்பூர், சென்னை-600 008





தமிழரசு திருவள்ளுவர் ஆண்டு 2015 ருத்ரோத்காரி — பங்குனி 3
மலர் : 14 இதழ் : 18 16-3-1984

# கொடைக்கானலில் ஒரு குதூகல விழா

பாரதியாரின் கனவை நனவாக்கும் வகையில் கொடைக்கானலில் தமிழ்நாடு அரசு மகளிர் பல்கலைக் கழகத் தொடக்க விழா **2.3.84** அன்று நடைபெற்றது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.செ. அரங்கநாயகம் அவர்கள் வரவேற்புரையாற்றுகையில்:

''மகளிர் பல்கலைக் கழகம் தொடங்கவேண்டுமென்று பாரதி நூற்றாண்டு விழாவில் முதல்வர் அறிவித்தார். அன்று அறிவித்தபடி இந்தப் பல்கலைக் கழகம் இன்று துவக்கப்படுகிறது. மால்கம் ஆதிசேசய்யா தலைமையில் அமைந்த வல்லுநர் குழு இந்தப் பல்கலைக் கழகம் அமையத் திட்டங்கள் தீட்டியது.

''தாய்மார்கள இந்தச் சமுதாயத்தில், இந்த நாட்டில் சமமாக வாழ வேண்டுமென்று கருதி இந்த அரசு பல்கலைக் கழகத்தை உருவாக்கியுள்ளது. கிராமத்தில் வாழ்கின்ற தாய்மார்களின் நலன் பற்றியும் இந்தப் பல்கலைக் கழகம் ஆராயும். எதிர்காலத்தில் நம்நாட்டில் ஆண்கள் போன்று சமமாகப் பெண்கள் வாழ்கின்றார்கள் என்ற நிலையை இந்த நிறுவனம் தரும். இந்தப் பல்கலைக் கழகத்தைத் திறக்க அன்னை தெரசாவைவிட வேறு யாரும் சிறந்தவர்களாக இருக்க முடியாது.

''கோகினூர்மாளிகையில் காஷ்மீர் சிங்கம் சேக் அப்துல்லா தங்கியிருந்தார். அவருடைய நினைவாக இந்த மாளிகைக்கு அவர் பெயர் சூட்டப்படுவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்''.

மகளிர் பல்கலைக் கழகத்தைத் தொடங்கி வைத்து அன்னை தெரசா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''அன்பின் ஆற்றலைப் பரப்புவதற்குத்தான் ஏசுபிரான் அவதரித்தார். அன்பின் ஆற்றலை உலகம் முழுவதும் நாம் பரப்ப வேண்டும். ஒவ்வொரு குடும்ப வாழ்க்கையிலும் தாய் தான் இதயமாக இருக்கிறாள்.

''பெண்களுக்காகத் தொடங்கப்படும் இந்தப் பல்கலைக் கழகம் சிறந்து விளங்க வேண்டுமென்று விரும்புகின்றேன்.

''அன்பின் அடிப்படையில் ஏழைக் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் தமிழக முதல்வரைப் பாராட்டுகின்றேன். மகிழ்ச்சியடைகின்றேன். இந்தப் பணி இந்த மாநிலத்தில் மட்டுமல்லாது இந்தியா முழுவதும் பரவ வேண்டும்.

''அன்பு வாழ்க்கையைத் தொடங்கத் தூய்மையான இதயம் வேண்டும். நாம் எவ்வளவு தொகை கொடுக்கிறோம் என்பது கூட அல்ல, எவ்வளவு தூரம் அன்பு காட்டுகிறோம் என்பது தான் முக்கியமானது. நம்முடைய வாழ்வை நல்லபணிகளுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்று விரும்புகின்றேன்.

''பசியோடு யாரும் இருக்கக் கூடாது. தியாக மனப்பான்மையோடு செயல்பட வேண்டும்.

''இந்தப் பல்கலைக் கழகத்தில் பயில வரும் மகளிர் அன்பின் வழியில் உயர் கல்வி என்ற தத்துவத்தில் ஊறித் திளைக்கட்டும்'' என்றார்.

டாக்டர் மால்கம் எஸ்.ஆதிசேசய்யா அவர்கள் பேசுகையில்;

''பாரத நாட்டிற்கும், உலகிற்கும் இன்று சிறந்த நாள். மகளிர் கல்வி தொடர்பாக இந்தப் பல்கலைக் கழகம் நடத்தும் ஆராய்ச்சியை அரசுசெயல்படுத்த





## கடைசி அட்டையில்....

கொடைக்கானலில் மாண்புமிகு முதலமைச்சர் சத்துணவு மையத்தில் அன்னை தெரசா, மற்றும் மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர்.

சென்னை மக்கள் சார்பில் வள்ளுவர் கோட்டத்தில் அன்னை தெரசாவுக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாக் காட்சி.

கொடைக்கானலில், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் தலைமையில், மாண்புமிகு முதல்வர் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் கோகினூர் சேக் அப்துல்லா மாளிகை பெயர்ப் பலகையை மாண்புமிகு காஷ்மீர் முதல்வர் திறந்து வைத்தார்.

வேண்டும். அன்னை தெரசாவால் திறக்கப்பட்ட இந்தப் பல்கலைக் கழகம் உலகச் சிறப்புப் பெறும்'' என்றார்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர். கா. காளிமுத்துஅவர்கள் பேசுகையில்:

''குறிஞ்சிப் பூக்கள் பூக்கின்ற மலையில் இர்ண்டு நிகழ்ச்சிகள் நடைபெறுவது குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன். கோகினூர் மாளிகை பெயர் மாற்றம், பெண்கள் பல்கலைக் கழகம் அமைவது காற்றோடு கலந்த கீதம் அல்ல; முதல்வர் புரட்சித் தலைவரின் முத்திரைச் செயலாகும்.

''பாரதியார் இன்று உயிரோடு இருந்திருந்தால் முதல்வர் புரட்சித் தலைவரின் இந்தச் செயலைப் பாராட்டிக் கவிதைபாடி இருப்பார். இங்கு பல்கலைக் கழகம் அமைவது பெண் குலத்தின் வாழ்க்கையின் முதல் மைல் கல் ஆகும்.

''அதியமான் என்னும் மன்னன் தனக்குக் கிடைத்த அரியதொரு நெல்லிக்கனியை ஒளவைப் பாட்டிக்கு அளித்து அகமகிழ்ந்தான். தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரியதொரு பல்கலைக் கழகமான பெண்கள் பல்கலைக் கழகத்தை அன்னை தெரசாவுக்கு அர்ப்பணித்திருக்கிறார்.''

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். ஆர். இராதா அவர்கள் பேசுகையில்:

''இங்குள்ள கோகினூர் மாளிகை பெயர் மாற்றம் உலகத்திற்கு எடுத்துக் காட்டாக அமையும். இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்குப் பாடுபட்டார். அவர் தன்னுடைய நாட்டின் இலட்சியத்தையும் விட்டுக் கொடுக்கவில்லை.''

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் பேசுகையில்:

''ஓர் அற்புதமான இயற்கைச் சூழ்நிலையில் மகளிர் பல்கலைக் கழகம் இங்கு அமைவது குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன். பெண்கள் திடகாத்திரமாகவும், நீண்ட காலம் வாழவும் கருதி இங்கு மகளிர் பல்கலைக் கழகம் அமைக்கப்படுகின்றது. டென்மார்க் நாட்டுத் தாய்மார்களுக்கு இங்கு ஒரு அமைப்பை ஏற்படுத்தியுள்ளது மிகவும் பாராட்டத்தக்கது.

''ஒரு ஆண் படித்தால் தன்னுடைய தலைமுறைக்குப் பயன்படும். பெண் படித்தால் தலைமுறை தலைமுறைக்கும் பயன்படும்.

' நிறம், சாதி, நாடு பார்க்காமல் அன்னை தெரசா பாடுபட்டு வருவது பாராட்டத்தக்கது.

''காஷ்மீர் பாகிஸ்தானுடன் போகாமல் இருக்கப் பாடுபட்ட சிங்கம் சேக் அப்துல்லாவின் மகன் மாண்புமிகு ஜம்மு காஷ்மீர் முதல்வர் திரு. பரூக் அப்துல்லா அவர்களின் பணி மிகவும் பாராட்டத்தக்கது'' என்றார்.

கொடைக்கானலில் காஷ்மீர் சிங்கம் தங்கியிருந்த கோகினூர் மாளிகையின் பெயர் மாற்ற விழாவில் மாண்புமிகு ஜம்மு-காஷ்மீர் முதல்வர் பரூக் அப்துல்லா அவர்கள் உரையாற்றுகையில்:

''எனது தாயும் தந்தையும் இங்கு மூன்று ஆண்டுகள் வாழ்ந்தார்கள். அவர்கள் வாழ்ந்த இடம் இது. நான் பேசும் மொழி உங்களுக்குப் புரியாது. உங்கள் மொழி எனக்குப் புரியாது. ஆனால் நம்மையெல்லாம் இணைப்பது அன்பு ஒன்றுதான். ஒரு கடவுளின் மக்கள் நாம்.

''என்னைப் பிரிவினைவாதி என்கிறார்கள். நான் தேர்தலில் வெற்றி பெற்ற பின் என்னைத் தேசவிரோதி என்கிறார்கள். அதற்கு முன்பு என்னைத் தேசியவாதி என்றே கூறினார்கள்.

''நாங்கள் பாகிஸ்தானிய முஸ்லீம்கள் என்று சொல்வதில் உண்மை கிடையாது. நாங்கள் இந்திய முஸ்லீம்கள் என்று உங்களிடம் கூறிக் கொள்கின்றேன்.

'' இந்தியா பாகிஸ்தான் இடையே எந்த நிலையிலும் போர் வரக்கூடாது. அவ்வாறு போர் வந்தால் பாகிஸ்தானுக்குச் சரியான பாடம் புகட்டுவோம். நான் தேசியவாதியாகவே வாழ்வேன், அப்படியே சாவேன். என்னுடைய தந்தையும் தேசியவாதியாகவே இருந்து மறைந்தார். அவர் வழியேதான் நானும் செயல்படுவேன்.

''தமிழ்நாட்டில் உள்ள சத்துணவுத் திட்டத்தை மிகவும் பாராட்டுகின்றேன். ஜம்மு காஷ்மீரிலும் கொண்டு வருவது குறித்து நிதி நிலைமைக்கு ஏற்ப பரிசீலிப்பேன்.''

''உங்கள் மாநில மக்கள் காட்டும் அன்பிற்கு, எங்கள் மாநில மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அன்னை தெரசா தெரிவித்த கருத்துக்கள் உலகம் முழுவதும் பரவ வேண்டுமென்று விரும்புகின்றேன்'' என்று குறிப்பிட்டார்.

மகளிர் பல்கலைக் கழகக் கட்டடத்திற்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் அடிக்கல் நாட்டிப் பேசுகையில்:

''கொடைக்கானலில் துவங்கப்பட்டிருக்கும் மகளிர் பல்கலைக் கழகத்திற்கு அன்னை தெரசா பல்கலைக் கழகம் எனப் பெயர் சூட்டுவதில் பெருமை அடைகின்றேன். அன்னை தெரசா அவர்கள் அன்பின் சின்னம். நோபல் பரிசு பெற்றவர். இந்த நிகழ்ச்சி எனக்கு நெகிழ்ச்சியை உண்டாக்குகிறது.

''அன்னை தெரசா அவர்கள் பக்கத்தில் அமர்ந்திருந்தபோதும் எழுந்து அவர் நடமாடும் போதும் என் அன்னையைப் போல் இருந்தார். என் தாய் உயிருடன் இருந்திருந்தால் இவரைப் போல தான் இருந்திருப்பார். இவருடைய உயரம்தான் என்னுடைய தாய். அவர் பேசும்போது என் தாய் அறிவுரை கூறுவதுபோல் இருந்தது. அவர் என்னுடைய தாயைப்போல் பல நல்ல கருத்துக்களைக் கூறி வந்தார்.

''என்னை எல்லோரும் பாராட்டிப் பேசுவது என்பது எளிது. அன்னை தெரசா வாழ்த்துவது என்னுடைய தாயே வந்து வாழ்த்துவதுபோல் உள்ளது.

''மதத்தின் பெயரால் பிரச்சினைகள் இல்லை. அவர்கள் செய்கின்ற செயல்களினால் தான் பிரச்சினைகள் வருகின்றன.

''இங்கு அமைய இருக்கும் மகளிர் பல்கலைக் கழகம், பெண்கள் வாழ்க்கை பற்றியும், எப்படி வாழவேண்டும் எதைச் செய்து வாழ வேண்டும் என்பது பற்றியும் சொல்லிக் கொடுக்கும். மற்ற பல்கலைக் கழகங்கள் எதைச் செய்வார்களோ அதைச் செய்வார்கள்.

''பரூக் அப்துல்லா அவர்களுக்கு எனது அனுபவத்தில் இருந்து சொல்கிறேன். அறிவுரையாக எண்ண வேண்டாம். பிரச்சினைகள் வரும்போதுதான் மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

''உங்களைப் பற்றி அதிகம் பேசுகிறார்கள் என்றால், அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் நீங்கள். யார் யாரையோ நம்பி எங்கோ போய் விடாதீர்கள்; என்னை நம்புங்கள், எங்களுடன் இருங்கள். சந்தர்ப்பத்தின் காரணமாக நண்பர்களாக இருப்பவர்களை நம்பாதீர்கள். இன்று உங்களைக் குற்றம் சொல்பவர்கள் நாளை பாராட்டுவார்கள். இந்த நிலை வரவேண்டும் என்று விரும்புகின்றேன்.

''மகளிர் பல்கலைக் கழகம் தொடங்கும்போது இங்கு ஒரு பெண், மாவட்ட ஆட்சித் தலைவராக இருக்கிறார். இதுமகிழ்ச்சியுறத் தக்கது.

''அன்னை தெரசா உள்ளத்தில் செயல்படும் தன்னம்பிக்கை, பொறுமை ஆகியவை அனைவருக்கும் எடுத்துக் காட்டுகளாகும்.

''உள்ளத்தில் லட்சியத்தை வைத்துக் கொண்டால், இறுதி வரை அதற்காகப் பாடுபடவேண்டும். அதற்கு உதாரணம்அன்னை தெரசாவாகும். மாணவர்கள் உடற்பயிற்சி பெற வேண்டும். கல்வியோடு தொழிற் கல்வியையும் கற்க வேண்டும். இதற்கான மாபெரும் திட்டத்தைத் தமிழக அரசு தீட்டியுள்ளது. இது 1985ல் அமலுக்கு வரும்.

''பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வரும்போது, இன்ன இடத்தில் உனக்கு வேலை இருக்கிறது என்ற நிலை வரவேண்டும். குழந்தைகளின் எதிர்காலத்திற்கு என்னென்ன செய்ய முடியுமோ அதை இந்த அரசு செய்யும்.

''ஆண்டவன் இருக்கும்போது நாம் ஒன்றுபட்டு வாழ்வோம் என்று நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்கின்றேன்.''

அன்னை தெரசாவிற்குத் தங்க நிற மயில் சிலையையும், மாண்புமிகு ஜம்மு - காஷ்மீர் முதல்வர் பரூக் அப்துல்லா அவர்கட்குத் தஞ்சாவூர்த் தட்டும் வழங்கப்பட்டன.

விழா இறுதியில் மகளிர் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திருமதி கே. வசந்திதேவி நன்றி கூறினார்.

**-அ. மருதவிநாயகம்**

---

காஷ்மீர் முதல் அமைச்சர்திரு பரூக் அப்துல்லா அவர்கள் ''காஷ்மீர் சிங்கம்'' என்று அழைக்கப்பட்ட மறைந்த திரு ஷேக் அப்துல்லா அவர்களின் மூத்த மகன் ஆவார்.

அவர் இலண்டனில் மேல் படிப்பு படித்தவர். 1963ல் அரசியலுக்கு வந்தார். மறைந்த திரு ஷேக் அப்துல்லா அவர்கள் நோய்வாய்ப்பட்டு இருந்தபொழுது பரூக் அப்துல்லா அவர்கள் தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவராக ஆனார். 1982ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில்தான் அவர் காஷ்மீர் அமைச்சரவையில் சேர்க்கப்பட்டு சுகாதார அமைச்சரானார்.

காஷ்மீர் முதல் அமைச்சராக இருந்த ஷேக் அப்துல்லா அவர்களின் மறைவைத் தொடர்ந்து தற்காலிக முதல் அமைச்சராக பரூக் அப்துல்லா அவர்கள் பதவியேற்றார். 11.9.'82 அன்று காஷ்மீர் முதல் அமைச்சராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.







## முதலாவது அட்டையில்....

கொடைக்கானலில் நடைபெற்ற (2.3.84) மகளிர் பல்கலைக் கழகத் திறப்பு விழாவிற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையேற்று அடிக்கல் நாட்டினார். மாண்புமிகு காஷ்மீர் முதல்வர் திரு. பரூக் அப்துல்லா மற்றும் தமிழக அமைச்சர்கள் பங்கேற்ற இவ்விழாவில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தைத் தொடங்கி வைத்தார்.



## கடைசி அட்டையில்...

கொடைக்கானலில் மாண்புமிகு முதலமைச்சர் சத்துணவு மையத்தில் அன்னை தெரசா மற்றும் மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர்.

சென்னை மக்கள் சார்பில் வள்ளுவர் கோட்டத்தில் அன்னை தெரசாவுக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாக் காட்சி.

கொடைக்கானலில், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் தலைமையில், மாண்புமிகு முதல்வர் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் கோகினூர் சேக் அப்துல்லா மாளிகை பெயர்ப் பலகையை மாண்புமிகு காஷ்மீர் முதல்வர் திறந்து வைத்தார்.

வேண்டும். அன்னை தெரசாவால் திறக்கப்பட்ட இந்தப் பல்கலைக் கழகம் உலகச் சிறப்புப் பெறும்'' என்றார்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர். கா. காளிமுத்துஅவர்கள் பேசுகையில்:

''குறிஞ்சிப் பூக்கள் பூக்கின்ற மலையில் இரண்டு நிகழ்ச்சிகள் நடைபெறுவது குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன். கோகினூர் மாளிகை பெயர் மாற்றம், பெண்கள் பல்கலைக் கழகம் அமைவது காற்றோடு கலந்த கீதம் அல்ல; முதல்வர் புரட்சித் தலைவரின் முத்திரைச் செயலாகும்.

''பாரதியார் இன்று உயிரோடு இருந்திருந்தால் முதல்வர் புரட்சித் தலைவரின் இந்தச் செயலைப் பாராட்டிக் கவிதைபாடி இருப்பார். இங்கு பல்கலைக் கழகம் அமைவது பெண் குலத்தின் வாழ்க்கையின் முதல் மைல் கல் ஆகும்.

''அதியமான் என்னும் மன்னன் தனக்குக் கிடைத்த அரியதொரு நெல்லிக்கனியை ஔவைப் பாட்டிக்கு அளித்து அகமகிழ்ந்தான். தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரியதொரு பல்கலைக் கழகமான பெண்கள் பல்கலைக் கழகத்தை அன்னை தெரசாவுக்கு அர்ப்பணித்திருக்கிறார்.''

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். ஆர். இராதா அவர்கள் பேசுகையில்:

''இங்குள்ள கோகினூர் மாளிகை பெயர் மாற்றம் உலகத்திற்கு எடுத்துக் காட்டாக அமையும். இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்குப் பாடுபட்டார். அவர் தன்னுடைய நாட்டின் இலட்சியத்தையும் விட்டுக் கொடுக்கவில்லை.''

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் பேசுகையில்:

''ஓர் அற்புதமான இயற்கைச் சூழ்நிலையில் மகளிர் பல்கலைக் கழகம் இங்கு அமைவது குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன். பெண்கள் திடகாத்திரமாகவும், நீண்ட காலம் வாழவும் கருதி இங்கு மகளிர் பல்கலைக் கழகம் அமைக்கப்படுகின்றது. டென்மார்க் நாட்டுத் தாய்மார்களுக்கு இங்கு ஒரு அமைப்பை ஏற்படுத்தியுள்ளது மிகவும் பாராட்டத்தக்கது.

''ஒரு ஆண் படித்தால் தன்னுடைய தலைமுறைக்குப் பயன்படும். பெண் படித்தால் தலைமுறை தலைமுறைக்கும் பயன்படும்.

'நிறம், சாதி, நாடு பார்க்காமல் அன்னை தெரசா பாடுபட்டுவருவது பாராட்டத்தக்கது.

''காஷ்மீர் பாகிஸ்தானுடன் போகாமல் இருக்கப் பாடுபட்ட சிங்கம் சேக் அப்துல்லாவின் மகன் மாண்புமிகு ஜம்மு காஷ்மீர் முதல்வர் திரு. பரூக் அப்துல்லா அவர்களின் பணி மிகவும் பாராட்டத்தக்கது'' என்றார்.

கொடைக்கானலில் காஷ்மீர் சிங்கம் தங்கியிருந்த கோகினூர் மாளிகையின் பெயர் மாற்ற விழாவில் மாண்புமிகு ஜம்மு-காஷ்மீர் முதல்வர் பரூக் அப்துல்லா அவர்கள் உரையாற்றுகையில்:

''எனது தாயும் தந்தையும் இங்கு மூன்று ஆண்டுகள் வாழ்ந்தார்கள். அவர்கள் வாழ்ந்த இடம் இது. நான் பேசும் மொழி உங்களுக்குப் புரியாது. உங்கள் மொழி எனக்குப் புரியாது. ஆனால் நம்மையெல்லாம் இணைப்பது அன்பு ஒன்றுதான். ஒரு கடவுளின் மக்கள் நாம்.

''என்னைப் பிரிவினைவாதி என்கிறார்கள். நான் தேர்தலில் வெற்றி பெற்ற பின் என்னைத் தேசவிரோதி என்கிறார்கள். அதற்கு முன்பு என்னைத் தேசியவாதி என்றே கூறினார்கள்.

''நாங்கள் பாகிஸ்தானிய முஸ்லீம்கள் என்று சொல்வதில் உண்மை கிடையாது. நாங்கள் இந்திய முஸ்லீம்கள் என்று உங்களிடம் கூறிக் கொள்கின்றேன்.

'' இந்தியா பாகிஸ்தான் இடையே எந்த நிலையிலும் போர் வரக்கூடாது. அவ்வாறு போர் வந்தால் பாகிஸ்தானுக்குச் சரியான பாடம் புகட்டுவோம். நான் தேசியவாதியாகவே வாழ்வேன், அப்படியே சாவேன். என்னுடைய தந்தையும் தேசியவாதியாகவே இருந்து மறைந்தார். அவர் வழியேதான் நானும் செயல்படுவேன்.

''தமிழ்நாட்டில் உள்ள சத்துணவுத் திட்டத்தை மிகவும் பாராட்டுகின்றேன். ஜம்மு காஷ்மீரிலும் கொண்டு வருவது குறித்து நிதி நிலைமைக்கு ஏற்ப பரிசீலிப்பேன்.''

''உங்கள் மாநில மக்கள் காட்டும் அன்பிற்கு, எங்கள் மாநில மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அன்னை தெரசா தெரிவித்த கருத்துக்கள் உலகம் முழுவதும் பரவ வேண்டுமென்று விரும்புகின்றேன்'' என்று குறிப்பிட்டார்.

காஷ்மீர் முதல் அமைச்சர்திரு பரூக் அப்துல்லா அவர்கள் ''காஷ்மீர் சிங்கம்'' என்று அழைக்கப்பட்ட மறைந்த திரு ஷேக் அப்துல்லா அவர்களின் மூத்த மகன் ஆவார்.

அவர் இலண்டனில் மேல் படிப்பு படித்தவர். 1963ல் அரசியலுக்கு வந்தார். மறைந்த திரு ஷேக் அப்துல்லா அவர்கள் நோய்வாய்ப்பட்டு இருந்தபொழுது பரூக் அப்துல்லா அவர்கள் தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவராக ஆனார். 1982ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில்தான் அவர் காஷ்மீர் அமைச்சரவையில் சேர்க்கப்பட்டு சுகாதார அமைச்சரானார்.

காஷ்மீர் முதல் அமைச்சராக இருந்த ஷேக் அப்துல்லா அவர்களின் மறைவைத் தொடர்ந்து தற்காலிக முதல் அமைச்சராக பரூக் அப்துல்லா அவர்கள் பதவியேற்றார். 11.9.'82 அன்று காஷ்மீர் முதல் அமைச்சராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.









## முதலாவது அட்டையில்....

கொடைக்கானலில் நடைபெற்ற (2.3.84) மகளிர் பல்கலைக் கழகத் திறப்பு விழாவிற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையேற்று அடிக்கல் நாட்டினார். மாண்புமிகு காஷ்மீர் முதல்வர் திரு. பரூக் அப்துல்லா மற்றும் தமிழக அமைச்சர்கள் பங்கேற்ற இவ்விழாவில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தைத் தொடங்கி வைத்தார்.

மகளிர் பல்கலைக் கழகக் கட்டடத்திற்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் அடிக்கல் நாட்டிப் பேசுகையில்:

''கொடைக்கானலில் துவங்கப்பட்டிருக்கும் மகளிர் பல்கலைக் கழகத்திற்கு அன்னை தெரசா பல்கலைக் கழகம் எனப் பெயர் சூட்டுவதில் பெருமை அடைகின்றேன். அன்னை தெரசா அவர்கள் அன்பின் சின்னம். நோபல் பரிசு பெற்றவர். இந்த நிகழ்ச்சி எனக்கு நெகிழ்ச்சியை உண்டாக்குகிறது.

''அன்னை தெரசா அவர்கள் பக்கத்தில் அமர்ந்திருந்தபோதும் எழுந்து அவர் நடமாடும் போதும் என் அன்னையைப் போல் இருந்தார். என் தாய் உயிருடன் இருந்திருந்தால் இவரைப் போலதான் இருந்திருப்பார். இவருடைய உயரம்தான் என்னுடைய தாய். அவர் பேசும்போது என் தாய் அறிவுரை கூறுவதுபோல் இருந்தது. அவர் என்னுடைய தாயைப்போல் பல நல்ல கருத்துக்களைக் கூறி வந்தார்.

''என்னை எல்லோரும் பாராட்டிப் பேசுவது என்பது எளிது. அன்னை தெரசா வாழ்த்துவது என்னுடைய தாயே வந்து வாழ்த்துவதுபோல் உள்ளது.

''மதத்தின் பெயரால் பிரச்சினைகள் இல்லை. அவர்கள் செய்கின்ற செயல்களினால் தான் பிரச்சினைகள் வருகின்றன.

''இங்கு அமைய இருக்கும் மகளிர் பல்கலைக் கழகம், பெண்கள் வாழ்க்கை பற்றியும், எப்படி வாழவேண்டும் எதைச் செய்து வாழ வேண்டும் என்பது பற்றியும் சொல்லிக் கொடுக்கும். மற்ற பல்கலைக் கழகங்கள் எதைச் செய்வார்களோ அதைச் செய்வார்கள்.

''பரூக் அப்துல்லா அவர்களுக்கு எனது அனுபவத்தில் இருந்து சொல்கிறேன். அறிவுரையாக எண்ண வேண்டாம். பிரச்சினைகள் வரும்போதுதான் மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

''உங்களைப் பற்றி அதிகம் பேசுகிறார்கள் என்றால், அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் நீங்கள். யார் யாரையோ நம்பி எங்கோ போய் விடாதீர்கள்; என்னை நம்புங்கள், எங்களுடன் இருங்கள். சந்தர்ப்பத்தின் காரணமாக நண்பர்களாக இருப்பவர்களை நம்பாதீர்கள். இன்று உங்களைக் குற்றம் சொல்பவர்கள் நாளை பாராட்டுவார்கள். இந்த நிலை வரவேண்டும் என்று விரும்புகின்றேன்.

''மகளிர் பல்கலைக் கழகம் தொடங்கும்போது இங்கு ஒரு பெண், மாவட்ட ஆட்சித் தலைவராக இருக்கிறார். இது மகிழ்ச்சியுறத் தக்கது.

''அன்னை தெரசா உள்ளத்தில் செயல்படும் தன்னம்பிக்கை, பொறுமை ஆகியவை அனைவருக்கும் எடுத்துக் காட்டுகளாகும்.

''உள்ளத்தில் லட்சியத்தை வைத்துக் கொண்டால், இறுதி வரை அதற்காகப் பாடுபடவேண்டும். அதற்கு உதாரணம் அன்னை தெரசாவாகும். மாணவர்கள் உடற்பயிற்சி பெற வேண்டும். கல்வியோடு தொழிற் கல்வியையும் கற்க வேண்டும். இதற்கான மாபெரும் திட்டத்தைத் தமிழக அரசு தீட்டியுள்ளது. இது 1985ல் அமலுக்கு வரும்.

''பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வரும்போது, இன்ன இடத்தில் உனக்கு வேலை இருக்கிறது என்ற நிலை வரவேண்டும். குழந்தைகளின் எதிர்காலத்திற்கு என்னென்ன செய்ய முடியுமோ அதை இந்த அரசு செய்யும்.

''ஆண்டவன் இருக்கும்போது நாம் ஒன்றுபட்டு வாழ்வோம் என்று நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்கின்றேன்.''

அன்னை தெரசாவிற்குத் தங்க நிற மயில் சிலையையும், மாண்புமிகு ஜம்மு - காஷ்மீர் முதல்வர் பரூக் அப்துல்லா அவர்கட்குத் தஞ்சாவூர்த் தட்டும் வழங்கப்பட்டன.

விழா இறுதியில் மகளிர் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திருமதி கே. வசந்திதேவி நன்றி கூறினார்.

—அ. மருதவிநாயகம்

# சென்னை நகரில் அன்னை

"எங்கும் நிறைந்திருந்து எல்லார்க்கும் அன்பு செலுத்த முடியாத நிலையிலேயே இறைவன் தாய்மார்களைப் படைத்தான்' என்றொரு ஆங்கிலப் பழமொழி உண்டு. அதற்கு மிகச் சரியான தோர் எடுத்துக்காட்டேபோல் திகழ்பவர்தான் அன்னை தெரசா.

'.......பெற்ற
அன்னையைக் காண்போர்
அன்னை
அன்பினைக் கண்ணிற்
காணார்;
என்னினும் உயிர்க்கூட்டத்தை
இணைத்திடல் அன்பே
யன்றோ!'

—என்ற புரட்சிக் கவிஞரவர்களின் கவிதையடிகளுக்கேற்ப அன்பின் மொத்த உருவமாகத் திகழும் அன்னை தெரசா அவர்களுக்குச் சென்னை நகர மக்கள் சார்பிலே சிறந்ததோர் வரவேற்பளிக்கப்பட்டது. 2.3.84 அன்று வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற இந்த மாபெரும் வரவேற்புக்குக் குழுத் தலைவராக இருந்து மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் செயல்பட்டார்.



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அன்னை தெரசா இருவரும் பங்கேற்ற இவ்விழாவுக்கு மாண்புமிகு மத்திய கப்பல் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே.விஜய பாஸ்கர ரெட்டி தலைமை தாங்கினார்.

முன்னாள் கேரள ஆளுநர் திருமதி ஜோதி வெங்கடாசலம், மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ.சி., மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்த வள்ளுவர் கோட்ட விழா மேடையில் 'அன்னை தெரசாவுக்கு நல்வரவு கூறுகிறோம்' ...'மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி. ஆருக்கு நல்வரவு கூறுகிறோம்' என்ற ஆங்கில வாசகங்கள் அழகு மலர்களால் சித்திரிக்கப்பட்டிருந்தன. மண்டபத்தைச் சுற்றிலும் 'அருளாசி புரியவரும் அன்னை தெரசா வருக!' 'ஏழைகளின் தலைவர் எம்.ஜி.ஆர். வருக!' என்பன போன்றவாசகங்களோடு வண்ணப் பதாகைகள் வசீகரம் காட்டின.

### இசை நிகழ்ச்சி

விழாத் தொடங்கும் முன்பாக, 5.30 மணியளவில் 5 வயது முதல் 15 வயதுக்குட்பட்ட பள்ளிக் குழந்தைகள் 600 பேர்களின் இசை நிகழ்ச்சி இனிது நடைபெற்றது.

இசை மேதை எம்.பி. சீனிவாஸ் பயிற்சியளித்திருந்த இந்த 600 குழந்தைகளும் ஒரே குரலில், சிறிதும் பிசிரடிக்காமல் பாடி வள்ளுவர் கோட்டத்திலிருந்த அவ்வளவு பேரையும் அதிசயிக்கச் செய்தார்கள்.

### விழாத் தொடக்கம்

இந்த இசை நிகழ்ச்சி இடையிடையேவிழாவின் முக்கிய விருந்தினர்கள் வள்ளுவர் கோட்டத்திற்கு வந்து சேர்ந்தனர். நுங்கம்பாக்கம் மகளிர் மேநிலைப் பள்ளி சிறுமியர் அவர்களை மலர் தூவி வரவேற்றனர்.



வள்ளுவர் கோட்டத்தில் சுற்று வெளியில், ஏசுவுக்குப் பெண்சீடர்கள்இல்லை என்ற வரலாற்றை மாற்ற வந்த அன்னை தெரசா அவர்கள் மரம் நட்டார். பின்னர் அவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களும் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரால் மேடைக்கு அழைத்து வரப்பட்டனர்.

'கைகளை வீசி நடப்பதை நாணி கைகளைக் கட்டியே நடந்தேன்' என இர்ாமலிங்க அடிகளார் குறிப்பிட்டதைப்போல வந்த அன்னை தெரசா அம்மையாரும் மற்றவர்களும் அமர்ந்த பின்,பாராட்டு விழா நிகழ்ச்சிகள் முறைப்படி தொடங்கின.

சட்டப் பேரவைத் தலைவர் திரு.க.இராசராம் வரவேற்புரையாற்றினார். அப்போது அவர்—''பெரிய பதவியில், அதிகாரத்தில், ஆட்சி பீடத்தில் இருப்பவர்களுக்கு நடக்கும் பாராட்டு விழா அல்ல இது; ஏழைகளின் இதயத்தில் வீற்றிருக்கும் ஒரு உண்மையான அன்புள்ளத்திற்கு எடுக்கப்படுகிற விழா. 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்ற பேரறிஞர் அண்ணா வழி நடக்கும் நாம் அதே கருத்தை வலியுறுத்தி வரும் அம்மையாரைப் பாராட்டி விழா நடத்துகிறோம். ஏழை எளியவர்களுக்குஉதவுவதிலிருந்து பகைவருக்கு அன்பு காட்டுவது வரை அன்னை தெரசா அவர்களுக்கும் நம்முடைய முதல்வர் அவர்களுக்கும் ஏராளமான ஒற்றுமைகள் உண்டு'' என்று குறிப்பிட்டார்.

### மத்திய அமைச்சர்

மாண்புமிகு மத்திய கப்பல் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே. விஜயபாஸ்கர ரெட்டி பேசுகையில் ''ஏழை எளிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமான அன்னை தெரசாவைப் பாராட்டும் வாய்ப்பை எனக்களித்த தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு அவர் நீடூழி வாழ வாழ்த்துகிறேன்'' என்றார்.





முன்னாள் கேரள மாநில ஆளுநர் திருமதி ஜோதி வெங்கடாசலம் தமது உரையில் ''பாரத மாதாவின் புதல்வியாய், மகளிர் குல மாமணியாய், இந்தியாவின் இணையற்ற ரத்தினமாய் மற்றவர்கள் துயர்நீக்கும் பணியில் வெற்றி பெற்று அன்னை தெரசா அவர்கள் மகிழ்வோடு வாழ்க பல்லாண்டு'' என்று குறிப்பிட்டார்.

### நூல் வெளியீடு

உத்திரமேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரான திரு எஸ். ஜெகத்ரட்சகன் எழுதிய ஆங்கில நூலொன்று இவ்விழாவில் வெளியிடப்பட்டது. 'டாக்டர் எம்.ஜி.ஆர். ஓர் ஒப்பில்லாத் தலைவர்' (Dr. M. G. R. a Phenomenon) என்ற அந்நூலை அன்னை தெரசா அவர்கள் வெளியிட்டார்.

127 பக்கங்கள் உள்ள இந்தப் புத்தகம் அப்போலோ வெளியீட்டகத் தயாரிப்பாகும்.

### வாழ்த்துக்கள்

அடுத்து-அன்னை தெரசா அம்மையாரை வாழ்த்தி எஸ்.ஐ.ஈ.டி மகளிர் கல்லூரி அறக்கட்டளை சார்பில் திருமதி பதிர் சையத் பேசுகையில்- ''மகளிர் குலத்தின் மங்கா விளக்கான தெரசா அம்மையாரை வாழ்த்தி தாய்க்குலத்திற்குத் தகும் மதிப்பளிக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விழா எடுப்பது மிகவும் பொருத்தமுடையது'' என்று குறிப்பிட்டார்.

பேராயர் அடைக்கலம் அவர்கள் பேசுகையில்-''அன்புள்ளமும் தொண்டு மனமும் ஒன்றே போல் பெற்றவர்களான அன்னை தெரசா அம்மையாரும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் எல்லா நலமும் பெற்று நீடூழி வாழத் தெய்வம் துணை நிற்கும் ''என்றார்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. பேசுகையில்- ''அவ்வைப் பிராட்டியே வந்ததுபோல இங்கே அன்னை தெரசா அம்மையார் வருகை தந்திருக்கிறார். தாய்க்குலம் ஏற்றம் காணப் பாடுபடுபவர் நம்முடைய முதல்வர். அந்தத் தாய்க்குலமே ஒருருவில் வந்ததுபோல் இங்கே வருகை தந்திருக்கிறார், அன்னை தெரசா. இந்த இருவர் புகழும் வளர இதயத்தால் வாழ்த்துவோம்'' என வாழ்த்தினார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''பாராட்ட வேண்டிய ஒருவரைப் பாராட்டுவதில், வாழ்த்த வேண்டிய ஒருவரை வாழ்த்துவதில் நாம் பெருமை கொள்கிறோம். 45 ஆண்டுக் காலமாகத் தம் உழைப்பை ஏழ்மை அகற்றவும், இல்லாமை நீக்கவும்அளித்து வருபவரே அன்னை தெரசா அம்மையார். 'அன்பர் பணிக்கு ஆளாக்கி விட்டுவிட்டால் இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே' என்றார் தாயுமானார். அந்த வகையில் தம் நேரத்தைச் செலவிட்டுப் புகழும் பெருமையும் பெற்றவர் இவர். ஏழை எளியோருக்குதவும் இவர் இருப்பதால்தான் இன்றைக்கு இந்தியா இருக்கிறது என்றே சொல்லலாம்.''

### அன்பளிப்பு-நிதியுதவி

அன்னை தெரசாவின் அறப்பணி மன்றங்களுக்கு நிதி, ஆடைகள், மருந்துகள் ஆகியவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூலம் அன்னை தெரசாவிடம் வழங்கப்பட்டன. அதன் விவரம் வருமாறு:

பல்வேறு மருந்துக் கம்பெனிகள் தந்த ரூ. 73,450 மதிப்புள்ள மருந்துகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச்.வி.ஹண்டே அளித்தார். குமாரபாளையம் எஸ்.எஸ்.எம். குடும்பத்தார் ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் பெருமானமுள்ள ஆடைகளை வழங்கினர். ராஜேஷ் தம்பதியார், ஏர்க்காட்டில் உள்ள ஒன்றரை லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள ஒரு கட்டடத்தைத் தானம் செய்தனர்.

'ஸ்பிக்' நிறுவன நிர்வாக இயக்குநர் திரு ஏ.சி. முத்தையா, டாக்டர் பி.எம்.ரெக்ஸ் குடும்பத்தார் அறக்கட்டளையினர், வி.ஜி.



பி. சகோதரர்கள், ஓட்டல் அதிபர் சங்கத் தலைவர் திரு. புருஷோத்தமன், திரு. என்.வி. இராமையா, உகும்சந்த்எம்.எல்.ஏ. குடும்பத்தார், நடிகர், திரைப்பட இயக்குநர் திரு. கே.பாக்யராஜ், நடிகர் திரு ரஜினிகாந்த் ஆகியோர், தலா பத்தாயிரம் ரூபாய் நன்கொடை அளித்தார்கள்.

**அன்னை தெரசா**

அன்னை தெரசா அம்மையார் அவர்கள், 'டாக்டர் எம்.ஜி.ஆர் ஓர் ஒப்பிலாத் தலைவர்' என்ற நூலை எழுதிய திரு எஸ்.ஜெகத்ரட்சகன், சட்டப்பேரவைத் தலைவர் திரு க.இராசாராம் இருவருக்கும் பட்டாடைகள் அணிவித்துச் சிறப்பித்தார்.

பின்னர், இந்த 74 வயதிலும் இளமை மாறாத குரலில் அவர் பேசியதாவது:

''நாட்டுமக்கள் நலனுக்காகவும், ஏழ்மையால் மரணடைவோருக்காகவும் நாம் பிரார்த்திப்போமாக. நம் அன்புக் கரங்களால் வறுமையில் உழல்வோர் கண்ணீரைத் துடைப்போமாக.

''ஏழை எளிய மக்களை, இந்து முஸ்லீம் என்ற பேதமெல்லாம் பாராமல் அவர்களும் நம் உடன் பிறந்த சகோதரர்கள், கடவுளின் குழந்தைகள் என நாம் மதிப்போம். இறைவன் அன்பு வடிவானவன் என்ற ஏசுபிரானின் செய்தியை மக்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்த அன்பு அவரவர் வீட்டிலே தொடங்குகிறது. வீட்டில் உள்ள அனைவரும் கூடி வழிபடும்போது தான் அது பரிமளிக்கிறது. வாழ்வும் சாவும் நிம்மதியோடிருக்க வேண்டுமானால், நாம் மற்றவர்களுக்கு உதவுபவர்களாக இருக்க வேண்டும்.

''நான் உணவில்லாமலிருந்தேன்; நீ எனக்கு உணவளித்தாய்; நான் உடையில்லாமல் தவித்தேன், நீ எனக்கு உடையளித்தாய்; நான் வாழ வீடில்லாமல் இருந்தேன், நீ எனக்கு இல்லம் தந்தாய் என்று ஏசுபிரான் பிரார்த்தித்ததை எல்லோரும் நெஞ்சில் நிறுத்துங்கள்.

''அன்பு இணையற்றது. அந்த வகையில், தமிழக முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டில் செய்து வரும் சத்துணவுத் திட்டம் போன்ற நற்பணிகள் மூலம் நாட்டு மக்களுக்கு அன்பைச் செயல்வடிவத்தில் காட்டி வருகிறார்; அவரை வாழ்த்துகிறேன்''

**முதல்வர் உரை:**

மாண்புமிகு முதல்வர், டாக்டர் எம்.ஜி.ஆர். பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''என்னைப் பற்றி இங்கே ஒரு புத்தகம் வெளியிடப்பட்டது; என்னைப் பற்றி நானே ஒரு நூலை வெளியிடவிருக்கிறேன். அது மட்டுமல்ல; ஒரு சிறு தொகுப்பை, என்னைப் பற்றித் திரைப் படமாக வெளியிடவும் இருக்கிறேன்.

''வாழும்போதும் சாகும்போதும்நிம்மதியோடிருக்கவேண்டும் என்று அன்னை தெரசா அம்மையார் குறிப்பிட்டார். எந்த நல்லதைச் செய்தாலும் இங்கே குறைகாண்போர் இருக்கும்போது என்னால் அப்படியிருக்க முடியுமா என்று தெரியாது. என் வாழ்க்கை தொடக்கம் முதல் இன்றுவரை ஒரு போராட்டமாகவே இருக்கிறது.



''சத்துணவுத் திட்டம் பற்றித் தெரசா அம்மையாரே பாராட்டி விட்ட பிறகு, அது பற்றி யார் என்ன குறைசொன்னாலும் நான் இனி கவலைப்படப் போவதில்லை.

''நாட்டுமக்கள் வாட்டம் போக்குவதற்காக இங்கே பலரும் பணம் கொடுத்தார்கள். இதெல்லாம் கலைவாணர் அவர்கள் தொடங்கி வைத்த பணி; இனி அந்த நற்பணி தொடரும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''இந்த அரசு நிறைவேற்றிச் செயல்படுத்தும் சத்துணவுத் திட்டம் முதலான பல திட்டங்களை, ஒரு ஐந்தாண்டுக்குப் பின்னர் 'நல்லவிதமாகச் செயல்படுத்துகிறீர்கள்' என்று இதே அன்னை தெரசா அம்மையார் அவர்கள் வந்து பார்த்து வாழ்த்த வேண்டும் என்பது என் ஆசை.

''இங்கே சின்னஞ்சிறு குழந்தைகள் பாடிய பாடல்களைக் கேட்டு நான் பூரித்துப்போனேன். அவர்கள் பல்லாண்டு வாழ என்னைப் பெற்ற அன்னையையும் பெறாத அன்னையையும்வாழ்த்தி வணங்குகிறேன்.''

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்.

குன்றக்குடி அடிகளாரால் அளிக்கப்பட்ட பொன்னாடை, அன்னை தெரசா அம்மையாரால் மாண்புமிகு முதல்வருக்கு அணிவிக்கப்பட்டது.

மாண்புமிகு மத்திய அமைச்சருக்கும், அன்னை தெரசா அவர்களுக்கும் விழாக்குழு சார்பில் தஞ்சாவூர்த் தட்டு அளிக்கப்பட்டது.

அன்னை தெரசாவின் ஆங்கிலப் பேச்சை, மொழிபெயர்ப்புத் துறை இயக்குநர் டாக்டர் அவ்வை நடராசன் தமிழில் மொழி பெயர்த்தார்.

விழா முடிவில் திரு எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.எல்.ஏ. நன்றி கூறினார்.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**இந்திரன்**



# அயப்பாக்கத்தில் அன்னை..

அன்னை தெரசாவின் பாதம் படும் பேறு 3.3.84 அன்று அயப்பாக்கம் கிராமத்திற்குக் கிட்டியது. சென்னையிலிருந்து 25கி.மீ. தொலைவிலுள்ள இக்கிராமத்திற்கு, ''முதலமைச்சர் சத்துணவுத் திட்டம்'' என்ற நூலை வெளியிடவும், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையத்தைத் திறந்து வைக்கவும் அவர் வருகை தந்தார்.

இச் சீரிய நிகழ்ச்சிக்கு அந்தச் சிறு கிராமம் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. பூஞ்சிட்டுக் குழந்தைகள் பூத்தமலர்களாய் நின்று வரவேற்க, பெரியவர்கள் பல்லாண்டுகூற, ''அன்னையே வருக! அருளாசி தருக'' என்று அன்புடன் அனைவராலும் இன்முகத்துடன் வரவேற்கப்பட்டார் அன்னை.

விழாவிற்கு, மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் திரு ஆர். சவுந்தரராசன் அவர்கள் தலைமை வகித்தார்.

செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு டி.ஆர்.சீனிவாசன், இ.ஆ.ப., சத்துணவுத் திட்டச் செயலர் திரு க. லட்சுமிகாந்தன் பாரதி, இ.ஆ.ப., சமூக நலத்துறை இயக்குநர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப. ஆகியோர் வரவேற்றனர்.

மேலவை உறுப்பினரும், ''தாய்'' பத்திரிகை ஆசிரியருமான திரு வலம்புரிஜான் பேசுகையில், ''அன்பைச் சுமந்து கொண்டு அன்னை தெரசா இங்கே வந்திருக்கிறார்கள். வசந்த காலத்தின் வருகை. இயேசு பெருமானின் பெண் சீடராக இன்று வாழந்து கொண்டிருப்பவர்.



''நிவேதிதா கல்லறையில், இந்தியாவுக்காகவும் இந்தியர்களுக்காகவும் தன்னைத் தந்தவர் என்று எழுதப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்தியாவுக்காகவும் இந்தியர்களுக்காகவும் தன்னைத் தந்து வாழ்ந்து கொண்டிருப்பவர் அன்னை தெரசா. வாழ்கிற போதே வரலாறு ஆனவர்'' என்று குறிப்பிட்டார்.

வில்லிவாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு ஜே.சி.டி. பிரபாகரன் பேசுகையில்; ''இந்நாள் நன்னாள். பொன்னான திருநாள். அட்சயபாத்திரம் ஏந்திய மணிமேகலையாக அன்னை தெரசா வந்திருக்கிறார். அன்னையே, வடலூர் வள்ளலார் உருவிலே தமிழ்மக்கள் உங்களைப் பார்க்கிறார்கள். இன்றைக்கு வெளியாகியிருக்கிற பட்ஜெட்டில் 15 வயதுக் குழந்தைகளுக்கும் சத்துணவு போடப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் வருகைதரும் இந்த நல்ல நாளில் இந்த அறிவிப்பு வெளியாகியிருக்கிறது. பள்ளியில் படிக்க வரும் பிள்ளைகள், படிப்பு முடித்து வெளியே போகும்வரை அவர்களுக்குச்சத்துணவு போடப் புரட்சித் தலைவர் உள்ளம் விரும்புகிறது.''

தலைமை வகித்த மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் திரு ஆர். சவுந்தரராசன் அவர்கள் குறிப்பிட்டார்:

''எந்த மதத்தைச் சார்ந்தவரும் கடவுளைப் பார்க்க ஆவலோடு இருக்கிறார்கள். தெய்வம் எங்கே இருக்கிறது? மனித உருவத்தில் இருக்கிறது. இங்கே நடமாடும் தெய்வமாக அன்னை தெரசா வந்திருக்கிறார்.

# அன்னை தெரசா



யுகோஸ்லேவியா நாட்டில் உள்ள சுகோல்ஜி என்னும் ஊரில் 1910 ஆகஸ்ட் 27ஆம் நாள் பிறந்தவர் அன்னை தெரசா.

இளமையில் கல்வி கற்று, பின்னர் அயர்லாந்தில் துறவியர்க்குரிய சமயக் கல்வி பயின்றார். இந்தியாவுக்கு வந்து வங்காளத்தின் தலைநகர் கல்கத்தாவில் கல்விப் பணியாற்றத் தொடங்கினார்.

"அன்னையின் இதயத் துடிப்பு, என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதாகும். துன்பப்படும் மக்களுக்குத் தொண்டு செய்வதைத் தூய பணியாகக் கொண்டவர்.

கல்கத்தாவில் தூயமேரி உயர்நிலைப் பள்ளியில் 1929ல் ஆசிரியையாகப் பொறுப்பேற்றார். இயற்பெயர் அக்னஸ் கான்ஜா பெஜாட்சு. 1931ல் சமயச் சான்றோர் இட்ட பெயர் தெரசா. இதுவே உலகம் தெரிந்த பெயராகிவிட்டது.

1944ல் பள்ளி முதல்வரானார். ஒரு நாள் அன்னை உறங்குகையில், "கடைப்பட்டவர்களுக்கு நீ எது செய்தாலும் அதை எனக்கே செய்தாய்" என்ற குரல் ஒலிக்கக் கேட்டார். அன்றைக்கே இறைவன் இட்ட இந்தக் கட்டளையை இதயத்தில் ஏற்றுக் கொண்டார்.

இறப்போர் நலச் சங்கம் கண்டார். குழந்தைகள் காப்பகம், தொழுநோயாளர் இல்லம் போன்றவை தொடர்ந்தன. கிளைகள் இந்தியாவெங்கும் படர்ந்தன. கோவையில்கூட, பஞ்சாலைத் தொழிலாளர் நலன் காக்கும் இயக்கம் அன்னையின் கண்காணிப்பில் நடைபெற்று வருகிறது.

"இட்டார் பெரியோர்; இடாதோர் இழி குலத்தோர்" என்பதற்கிணங்க, ஈத்துவக்கும் இன்ப வாரியில் மக்கள் திளைக்க அன்னை அனைவரையும் ஆற்றுப்படுத்தி வருகிறார்.

உலகப் புகழ்பெற்ற விருதுகள் பல இவருக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்தியாவின் மிக உயர்ந்த "பாரத ரத்னா", மற்றும் டாக்டர் பட்டங்கள் பல பெற்றுள்ளார். 1979ல் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

எல்லாப் பரிசுகளையும் விருதுகளையும்விட, ஏழைகளின் உள்ளங்களில் அவர் அன்பின் திருவுருவமாக, அறப்பணி, அருட்பணியின் சின்னமாகக் குடியேறி விட்டார்.

"அன்பின் திருவுருவமாக அன்னை வந்திருக்கிறார். இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள், எவ்வளவு சிரமம் வந்தாலும் சத்துணவுத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்தும் துணிவோடு இருக்கிறார். பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் இருந்து 10-15 வயதுக் குழந்தைகளுக்கும் சத்துணவு போடப்படும் என்பதைத் தெரிவித்திருக்கிறார்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து, அதனை அவன்கண் விடல்என்பதற்கேற்ப, இந்தக் காரியத்தை இவர்தான் செய்ய வேண்டும் என்று அன்னை தெரசா அவர்களை அழைத்திருக்கிறோம். அவரது திருவடி பட்டதால் இந்த ஊர் பெருமைப்படுகிறது.

"எங்களுக்கு இறைவன் தந்த நோபல் பரிசு நீங்கள்தான் அன்னையே!" என்று அமைச்சர் சொன்னபோது, பொதுமக்கள் அதனை ஆமோதித்துக் கையொலி எழுப்பினார்கள்.

நூலை வெளியிட்டும், சத்துணவுக்கூடத்தைத் திறந்து வைத்தும் அருள்கனிந்த பார்வையோடு அன்னை தெரசா மொழிந்த அமுத மொழிகள்:

"ஒருவரையொருவர் நேசியுங்கள். அன்பு பாராட்டுங்கள். சேர்ந்து இறைவனை வழிபடுங்கள். சேர்ந்திருங்கள். அப்பொழுது கடவுள் உங்களுடன் இருப்பார்.

"முதலமைச்சர் உங்கள் குழந்தைகளுக்குச் சத்துணவு கொடுத்திருக்கிறார். கடவுள் நமக்குக் கொடுத்துள்ள நன்மைகளுக்காக நாம் நன்றி தெரிவிப்போம். முதலமைச்சர் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்குவதற்காக இறைவனுக்கு நன்றி சொல்வோம்.

"பணம் பெரிதல்ல. பகிர்ந்துண்பதுதான் பிரதானம். நம்மிடம் இருப்பதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளவேண்டும்.

"நாம் எல்லோரும் ஒருநாள் இறைவனைச் சந்திப்போம். அப்பொழுது அவர், இங்கே வா. என் அருகில் வா, நான் உணவில்லாமல் இருந்தேன். நீ உணவு கொடுத்தாய். நான் உடை இல்லாமல் இருந்தேன். நீ உடை கொடுத்தாய். நான் இடம் இல்லாமல் இருந்தேன். நீ இடம் கொடுத்தாய் என்று சொல்வார்".

பல்வேறு நிறுவனங்கள், தனிப்பட்டவர்கள் சார்பில் அன்னையிடம் ஏராளமான நன்கொடைகள் நல்ல காரியங்களுக்கு வழங்கப்பட்டன.

விழா இறுதியில், சத்துணவுத் திட்டத் துணைச் செயலர் திரு. மா. இராமு, இ.ஆ.ப. நன்றி தெரிவித்தார்.

புனித மழையில் நனைந்தது போல் நமக்கு உடலும் உள்ளமும் பனித்தன. அன்னையின் திருவுரு நோக்கி அனைவர் கரங்களும் பணிந்தன, பரவசத்துடன் குவிந்தன.

நிகழ்ச்சித் தொகுப்பு

**முத்துரவி**



# வெற்றியை நோக்கி வீறுநடை



மாண்புமிகு நிதி அமைச்சர்

## டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்

**தமிழ்நாடு நிதி அமைச்சர் மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 1984-85ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவைமுன் வைத்து 1984ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3ஆம் நாள், திருவள்ளுவர் ஆண்டு 2015, ருத்ரோத்காரி மாசித் திங்கள் 20ஆம் நாள் அன்று ஆற்றிய உரை.**

2-வது ஆண்டை சொல்லும் செய்தி

*மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே !*

1983–84ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும், 1984–85ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இம்மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்க விழைகிறேன்.

துன்பம் உறவரினும் செய்க துணிவுஆற்றி
இன்பம் பயக்கும் வினை.

முதலில் மிகுந்த துன்பம் வந்தாலும் அதுகண்டு தளராமல், முடிவில் இன்பம் பயக்கும் செயல்களைத் திட்பமுடையவராக இருந்து செய்தல் வேண்டும் என்று வள்ளுவப்பெருந்தகையார் வகுத்தருளிய நெறிக்கேற்ப, இந்த அரசு செயலாற்றி வருவதில், கண்ணுங்கருத்துமாக இருந்து வருகிறது.

சென்ற இரண்டு ஆண்டு காலமாகத் தமிழகத்தில் இயற்கையின் விளைவால் ஏற்பட்ட இடர்ப்பாடுகளையும் செயற்கையால் ஏற்படுத்தப்பட்ட தொல்லைகளையும் பெருமளவுக்குச் சமாளித்து, மக்களின் துயர்களைத் துடைப்பதிலும், ஏழை எளிய, நலிவடைந்த மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பதிலும், பல்வேறு துறைகளில் உற்பத்தி வளங்களைப் பெருக்குவதிலும், வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதிலும், நாட்டில் சட்டம்—ஒழுங்கு—அமைதி நிலைகளைக் காப்பாற்றுவதிலும், இந்த அரசு அக்கறையோடு அரும்பணியாற்றி வந்துள்ளதை அவை உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

2. இரண்டாண்டு காலமாகத் தொடர்ந்து நீடித்த கடும் வறட்சியின் கொடுமையான பிடியிலிருந்து தமிழகம் கடந்த ஆண்டின் இறுதியில்தான் விடுபட்டது. ஆனால், சோதனையாகக் கடும் வறட்சியைத் தொடர்ந்து, வரலாறு கண்டிராத அளவுக்கு பெரும் மழை பெய்து, வெள்ளப் பெருக்கேற்பட்டு, இம்மாநிலத்தின் சில பகுதிகள் மிகவும் சேதமடைந்தன. அடுத்தடுத்து நிகழ்ந்த இத்தகைய இயற்கைச் சீற்றங்களினால் மாநில அரசுக்குச் செலவுச் சுமை பெருமளவுக்குப் பெருகியது. நிவாரணப் பணிகளுக்காகவும், பழுது பார்ப்பு வேலைகளுக்காகவும் பெரிய அளவில் செலவிட வேண்டியிருந்தது. வறட்சி நிலையைக் கண்டறிய, மத்திய அரசு அனுப்பிய குழு, வறட்சி நிவாரணத்துக்காக ரூ. 68.36 கோடிவரை செலவிடலாம் என்று வரையறுத்திருக்க, 1982-83, 1983–84ஆம் ஆண்டுகளில், வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மாநில அரசுக்கு ரூ. 114.28 கோடி செலவேற்பட்டது. கூடுதலாக உதவித்தொகை அளிக்க வேண்டும் என மாநில அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க, தொடர்ந்து நிலவிய வறட்சி நிலையைக் கண்டறிய, மத்திய அரசு, இன்னுமொரு குழுவை அனுப்பியது. இக்குழுவின் பரிந்துரைப்படி, ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட உச்சவரம்பிற்கும் கூடுதலாக, ரூ. 9.18 கோடி செலவிடலாம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வறட்சிப் பணிகளின்கீழ், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால், ஏறத்தாழ ரூ. 46 கோடி செலவில், 21,726 குழாய்க் கிணறுகள்

அமைக்கப்பட்டன. ரூ. 3.73 கோடி செலவில் குடிநீர்க் கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டன. பாசன வாயில்களைப் பழுது பார்த்துச் சீரமைப்பதற்காக, ரூ. 17.31 கோடி செலவிடப்பட்டது. மேலும் ரூ. 5 கோடி செலவில், ஊருணிகளும், குளங்களும், தூர்வாரிப் பண்படுத்தப்பட்டன. வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கும் வகையில், மாநில அரசு அவர்களுக்கு ஜனதா சேலைகளையும், வேட்டிகளையும் ரூ. 10 கோடி செலவில் வழங்கியது. இத்தகைய நடவடிக்கைகளினால், வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் கிடைத்தது மட்டுமல்லாமல், குடிநீர் வாயில்கள், பாசன வசதிகள், சாலைப் போக்குவரத்து வசதிகள் போன்ற நிலையான வசதிகளும் மாநிலத்தில் உருவாக்கப்பட்டுள்ளன.

**3.** சென்ற டிசம்பர் மாத இறுதியில் பரவலாகவும், கடுமையாகவும் மழை பெய்தது. இதனால் குறிப்பாகத் தஞ்சாவூர், தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உயிர் இழப்பு ஏற்பட்டதுடன், அறுவடையாகும் நிலையிலிருந்த பயிர்களுக்கும், சாலைகள், பாலங்கள், கட்டிடங்கள், ஏனைய சொத்துக்கள் ஆகியவற்றுக்கும் பெருமளவு பாதிப்பு ஏற்பட்டது. போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணிகளும், நிவாரண நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. போக்குவரத்து வசதியைச் சீர் செய்யவும், வெள்ளத்தினால் சூழப்பட்டப் பகுதிகளில் அகப்பட்டுக் கொண்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் அளிப்பதற்கும், இராணுவத்தினரின் உதவி கோரப்பட்டு, இப்பணிகள் இராணுவத்தினரால் செவ்வனே செய்து முடிக்கப்பட்டன. வெள்ளத் துயர் துணிப்புப் பணிகளுக்காக ரூ. 128 கோடி நிதியுதவி வழங்குமாறு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டது. உடனடியாக, ரூ. 5 கோடி வழங்கியதற்கும், வெள்ள நிலையை நேரில் கண்டறிந்து, பாதிப்பை மதிப்பிட்டு, மத்திய அரசு அளிக்க வேண்டிய நிதியுதவியை முடிவு செய்ய



மத்திய குழு ஒன்றை அனுப்பியதற்கும், இந்தியப் பிரதமருக்கு நாம் நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளோம். மத்திய அரசு மேலும் ரூ. 10 கோடி வழங்கி, இதனைப் பின்னர் கொடுக்கப்படவுள்ள வெள்ள நிவாரண மானியத்தில் சரிகட்ட முடிவு செய்துள்ளபோதிலும், மாநில அரசு, துயர் துணிப்புப் பணிகளுக்காக, உடனடியாக ரூ. 37.54 கோடி செலவிட அனுமதி வழங்கியுள்ளது. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு கருணை உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ள **ரூபாய் 10 கோடியும் இதில் அடங்கும்.**

**4.** வரலாறு கண்டிராத அளவுக்கு இயற்கைச் சீற்றங்களினால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக மாநில அரசுக்கு ஏற்பட்ட பெரும் செலவுச் சுமையினால், மாநில அரசின் பொருளாதார நிலை நடப்பாண்டில் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. நமது கூட்டாட்சி அமைப்பு முறையில் வளர்ச்சித் திட்டங்கள், மக்கள் நலனுக்கான நடவடிக்கைகள் ஆகியவற்றை நிறைவேற்றும் பொறுப்பு மாநில அரசைச் சார்ந்ததாகும். ஆனால், இப்பணிகளை நிறைவேற்றுவதற்கான நிதி வாயில்கள் தேவையான அளவிற்கு மாநில அரசுக்குக் கிடைப்பதில்லை. பெருகக்கூடிய நிதி வாயில்கள் மத்திய அரசிடம் பெருமளவு உள்ளன. மேலும், பொதுமக்கள், வங்கிகள் ஆகியோரிடமிருந்து கடன் திரட்டும் வாய்ப்புகள், ஆயத் தீர்வைகள், சுங்கத் தீர்வைகள், கூட்டு நிறுவன வரி ஆகியவற்றை வசூலிக்கும் வாய்ப்பு, வெளிநாடுகளிலிருந்து கடன் பெறும் வாய்ப்பு போன்ற வசதிகள், மத்திய அரசுக்கு உள்ளன. ஆனால் மாநில அரசின் நிதி வாயில்களோ மிகவும் குறைந்தவையாகும். வணிக வரிகள், ஆயத் தீர்வைகள் ஆகியவற்றிலிருந்து மட்டுமே மாநில அரசுக்கு வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. முக்கியமான வளர்ச்சிப் பொறுப்புகளை நிறைவேற்றும் போக்குவரத்துக் கழகங்கள், மாநில மின் வாரியம் போன்ற மாநில அரசு நிறுவனங்கள் கூட, மத்திய அரசு அடிக்கடி அறிவிக்கும் பொருள் விலையேற்றங்களினால் அவ்வப்பொழுது நிதிப் பற்றாக் குறைக்கு உள்ளாகின்றன. கடந்த ஐந்து ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ்ச் செயலாக்கப்பட்டு வந்த திட்டங்கள், தற்போது திட்டத்திற்குப் புறம்பாகச் செயலாக்கப்படுவதால், திட்டத்தில் சேராத செலவு பெருகிக்கொண்டே போகிறது. மாநிலத் திட்டங்களுக்கு மத்திய அரசு 20 சதவீதமே உதவித் தொகை அளிக்கிறது. இச்சதவீதமும் முதல் திட்டத்திலிருந்து குறைந்து கொண்டே வருவது கவலை அளிக்கிறது. இத்தகைய சூழ்நிலையில், இயற்கைச் சீற்றங்களின் காரணமாகவோ, திடீரென ஏற்படும் நிதிப் பொறுப்புகளின் காரணமாகவோ, மாநில அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினால், மாநில அரசின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளே குலைந்துவிடும் நிலை உருவாகிறது. மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை மாநில அரசு புறக்கணிக்க முடியாது. அதே நேரத்தில் ஏராளமான வளர்ச்சித் திட்டங்களையும், மக்கள் நலன் தொடர்பான திட்டங்களையும், மாநில அரசு நிறைவேற்ற வேண்டியுள்ளது. மேற்கூறிய காரணங்களினால் மிகைப்பற்று வாங்க வேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலை தமிழ்நாட்டிற்கு உருவாயிற்று. இக்கண்ணோட்டத்துடன் இம் மாநிலத்தின் நிலையை, பரிவுடனும், உண்மையான நிலையை உணர்ந்து கொள்ளும் எண்ணத்துடனும் மத்திய அரசு கவனித்து, இம் மாநில அரசு தாற்காலிகமாக எதிர் நோக்கி



இருக்கும் நிதிப் பற்றாக்குறையைச் சமாளிக்க உதவியளிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

**5.** ஆட்சிப் பணிகள் செம்மையாக நடைபெற, ''வலிவான இந்தியாவும் வளமான மாநிலங்களும்'' அமைய வேண்டும். இந்தக் கொள்கையைத்தான், இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இந்தியாவை எல்லாவகைகளிலும் பாதுகாக்கின்ற பொறுப்பு மைய அரசையும், மக்களை எல்லா நிலைகளிலும் வாழவைக்கின்ற பொறுப்பு, மாநில அரசுகளையும் சார்ந்தனவாக ஆகின்றன.

**6.** கூட்டாட்சித் தன்மைகொண்ட வலிவான இந்தியாவில், தேவையான, நியாயமான, மிகவான அதிகாரங்கள் கொண்ட தன்னாட்சி மாநிலங்கள் நிலவ வேண்டும். இந்த அடிப்படையில், இந்தியக் கூட்டாட்சியில், மிகவான அதிகாரங்கள் கொண்ட தன்னாட்சி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ வேண்டும் என்பதைத்தான், பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய நெறிமுறையில் நின்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடிக்கடி வற்புறுத்தி வருகிறார்கள்.

**7.** மைய—மாநில அரசுகளின் உறவு நிலையும், உரிமை நிலையும் வரையறுக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி வந்த அறிஞர் அண்ணா அவர்கள், ''மைய அரசிடமிருக்கும் அதிகாரங்கள் பலவும் மாநில அரசுகளுக்கு நியாயத்தின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அப்படி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட, அரசமைப்புச் சட்டம் தேவையான அளவுக்குத் திருத்தப்பட வேண்டும். அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு ஏற்ற நேரமும், நிலையும், நினைப்பும் இப்பொழுது ஏற்பட்டிருக்கின்றன. அரசமைப்புச் சட்டத்தை அலசி, ஆராய்ந்து, திருத்துவதற்குச் சட்டத்தின் மூலம் வாய்ப்பளிக்க வேண்டும், திருத்தப்படவேண்டும் என்று வற்புறுத்துவதற்குக் காரணமே, அதிகாரங்கள் முறையாகவும், செம்மையாகவும், சிறப்பாகவும் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவேண்டும்'' என்பதற்காகத்தான் என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

**8.** மைய-மாநில அரசுகளின் உறவுகளையும், உரிமைகளையும் ஆராய்ந்தறிந்து பரிந்துரை செய்வதற்காக மைய அரசு நீதிபதி சர்க்காரியா குழுவை அமைத்திருப்பதை, இந்த அரசு வரவேற்பதோடு, அந்தக் குழு உண்மையான மையக் கூட்டாட்சியும், மாநிலத் தன்னாட்சியும் அமைய, வழிவகுத்துத் தரவேண்டும் என்று வற்புறுத்துகிறது. இன்றைய சூழ்நிலையில் மைய—மாநில அரசின் உறவு நிலைகளும், உரிமை நிலைகளும் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தமிழக அரசின் சார்பாக எடுத்துக் காட்டுவதற்கான கொள்கையை வகுக்க, நீதிபதி இராமபிரசாத் ராவ் குழு, தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

**9.** அரசியல் அறிஞரான திரு. கே. சி. வியர் என்பார் 'கூட்டாட்சிமுறை அரசு' என்னும் நூலில்,

''மைய அரசும், மாநில அரசுகளும் தங்கள் ஆதிக்கத்திற்கு உட்பட்டவைகளில், கூட்டாகவும்—ஆனால் சுதந்திரமாகவும் இயங்கும் வகையில் அதிகாரங்களைப் பிரித்துக்கொள்ளும் முறைதான், கூட்டாட்சிமுறைத் தத்துவமாகும் என்பது நான் கருதுவதாகும். மைய அரசும், மாநில அரசுகளும் தங்கள் தங்களது வரையறுக்கப்பட்ட ஆட்சி எல்லைக்குள் அமைந்திருப்பவை; தங்கள் தங்கள் அதிகாரங்களைப் பொறுத்துச் சுதந்தரமானவை; ஒன்றுக்கு ஒன்று கீழ்ப்படிந்து நடக்க வேண்டியவை அல்ல'' என்று குறிப்பிட்டிருப்பது கூர்ந்து கவனிக்கத்தக்கதாகும்.

**10.** திட்டங்களை நிறைவேற்றுவதைப் பொறுத்த வரையில், தமிழ்நாடு பல சிறந்த சாதனைகளைப் புரிந்து முன்னணியில் நிற்கின்றது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் செலவு ரூ. 3,150 கோடியாக இருக்க வேண்டுமென்று முதலில் திட்டமிட்டிருக்க, முதல்

மூன்றாண்டுகளிலேயே, இம்மாநில அரசு திட்டப் பணிகளுக்காக, ரூ. 1,821 கோடி செலவிட்டுள்ளது. நடப்பாண்டுக்கான திருத்தச் செலவு மதிப்பீடு ரூ. 861.87 கோடியாகும்; 1984–85ஆம் ஆண்டுக்கான செலவு மதிப்பீடு ரூ. 979.22 கோடியாகும். இக் கணக்கின்படிப் பார்த்தால், திட்டத்திற்காக அனுமதிக்கப்பட்ட செலவைவிட ரூ. 511·61 கோடி அதிகமாக நாம் செலவிடுவது தெரியவரும். முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் போன்ற, திட்டம் சாரா வளர்ச்சித் திட்டங்கள், மக்கள் நல நடவடிக்கைகள் ஆகியவற்றிற்காக மாநில அரசு ஏராளமான அளவில் செலவிட வேண்டியிருந்தது. திட்டப் பணிகளுடன் இவற்றையும் சேர்த்து நிறைவேற்றி வருவது பாராட்டுக்குரிய சாதனையாகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்கால அளவில் ரூ. 1,100 கோடி திரட்டுவதாக வாக்களித்திருந்தபோதிலும், ரூ. 1,450 கோடி அளவிற்குக் கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டியதன் பலனாக மாநில அரசு இச்சாதனையை எய்த முடிந்தது. 1983–84ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 184.55 கோடி பற்றாக்குறை எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இயற்கைச் சீற்றங்களின் காரணமாகக் கடும் செலவுச் சுமை ஏற்பட்டுப் புதியப் பணிகளை மேற்கொண்ட போதிலும், திருத்த மதிப்பீட்டில் இப்பற்றாக்குறையை ரூ. 129.31 கோடியாக நாம் குறைத்துள்ளோம். தொடராயினச் செலவுத் தன்மை வாய்ந்த சிறப்புப் பணிகளின் காரணமாக ஏற்பட்ட இப்பற்றாக்குறை, ஆறாவது திட்டத்தின் கடைசி ஆண்டாகிய இந்த ஆண்டில், மாநில அரசுக்குப் பெரும் நிதிச் சுமையாக அமையக்கூடாது என்றும், மத்திய அரசு இந்நிலையை பரிவுடன் கவனித்து இந்நிதிப் பற்றாக்குறையை ஈடுகட்ட நமக்குச் சிறப்பு உதவி அளிக்க வேண்டுமென்றும், நாம் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம். நிதி நிர்வாகத்தில் அறிவார்ந்த முறையில் செயல்படுவதில், தமிழ்நாடு, தொடர்ந்து முன்னணியில் நிற்கின்றது. 1982 மார்ச் திங்களில் ஏராளமான மாநிலங்கள் ரூ. 1,751 கோடி அளவுக்கு மிகைப்பற்று வாங்கியிருக்க, அவற்றை நடுத்தரக்காலக் கடன்களாக மாற்றிக் கொடுக்க மத்திய அரசு முன் வந்த நிலையிலும், இத்தகைய உதவியைக் கேட்க வேண்டிய அவசியமான நிலையோ அல்லது பயன்படுத்திக்கொள்ளவேண்டிய நிலையோ இம்மாநில அரசுக்கு ஏற்படவில்லை.

**11.** இப்படிப்பட்டப் பின்னணியில்தான் பொது மக்கள் நலனுக்காகவும், பொருளாதார வளர்ச்சி தொடர்பாகவும் பல்வேறு துறைகளில் இம்மாநில அரசு எடுத்துக்கொண்டுள்ள முயற்சிகளை விளக்க விழைகிறேன்.

### வேளாண்மை

**12.** மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மைத் துறையின் பங்கு பற்றி மிகவாக வலியுறுத்திக்கூற வேண்டியதில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளில், வேளாண்மைக்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகள், உணவுத் தானியங்கள் உற்பத்தி, அவை கிடைக்கும் அளவு ஆகியவற்றை மட்டுமின்றி, ஆதாரத் துறையான இந்தத் துறையில் வேலைவாய்ப்புகளையும் மோசமாகப் பாதித்துள்ளன. இந்த ஆண்டு இறுதியில் சுமார் 50 இலட்சம் மெட்ரிக் டன் நெல்லும், 19 இலட்சம் மெட்ரிக் டன் சிறு தானியங்களும் உற்பத்தி செய்யப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஆண்டில் 65 இலட்சம் மெட்ரிக் டன் நெல்லும், 30 இலட்சம் மெட்ரிக் டன் சிறு தானியங்களும் உற்பத்தி செய்ய வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**13.** அடுத்த நிதியாண்டில் மாநிலத்தில் தற்போதுள்ள விதை பதப்படுத்தும் பிரிவை ரூ. 8 இலட்சம் செலவில் வலுப்படுத்தவும், விதைப் பண்ணைகளில் ரூ. 18 இலட்சம் செலவில் பாசன வசதிகளைப் பெருக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில், உழவர் பயிற்சி நிலையத்தை ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. இரண்டு பரம்புப் பொறிகளை ரூ. 20·56 இலட்சம் செலவில் வாங்கவும், ரூ. 19·87 இலட்சம் செலவில் ஆழ்கிணறு துளையிடும் கருவிகள் 5 வாங்கவும் வேளாண்மைப் பொறியியல் துறை திட்டமிட்டுள்ளது. பல்லடம், காங்கேயம் மற்றும் பெருந்துறை ஆகிய இடங்களில் உள்ள மாநில வேளாண்மை விளைபொருள் தர ஆய்வுக் கூடங்களுக்கும் கட்டிடம் கட்டவும் எண்ணப்பட்டுள்ளது.

**14.** எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்க, மாநில அரசு உரிய முக்கியத்துவம் கொடுத்துள்ளது. 1984–85-ல், எண்ணெய் வித்துக்கள் துறையின் மூலம் வேர்க்கடலை வித்துக்களை வழங்கி அதன் மூலம் எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்படும் பரப்பளவை 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகப் பெருக்கிட எண்ணெய் வித்துக்கள் துறை திட்டமிட்டுள்ளது. நவ்லோக்கில் உள்ள துறைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட புதிய கலப்பின வகை ''நெட்டை மற்றும் குட்டை'' நாற்றுக்கள் 1984–85 முதல் உழவர்களுக்குக் கிடைக்கும். நடப்பாண்டில் இத் துறை 36.69 இலட்சம் நாற்றுக்களை வழங்கியுள்ளது. தற்போது 4.55 இலட்சம் கலப்பின நாற்றுக்கள் வழங்கப்பட்டிருக்க, அதன் அளவை 5.75 இலட்சம் நாற்றுக்களாக பெருக்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துக்கள் துறையின் கீழ் நடப்பாண்டில் 14.54 இலட்சம் எக்டேரில் பயிரிடவும், 1984–85-ல் 14.67 இலட்சம் எக்டேரில் பயிரிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அடுத்தாண்டில், நடப்பாண்டு இலக்கான 14.25 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து, 14.60 இலட்சம் மெட்ரிக் டன்னாக பெருக்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 10,728 மெட்ரிக் டன் எண்ணெய் வித்துக்களை இத் துறை வழங்கியுள்ளது. 1984-85-ல் 12,550 மெட்ரிக் டன் எண்ணெய் வித்துக்களை வழங்கக் கருதியுள்ளது.





### கால்நடை வளர்ப்பு

**15.** கால்நடை வளர்ப்பு மும்முரத் திட்டம், கேந்திர கிராமத் திட்டம், கால்நடை உற்பத்திச் சிறப்புத் திட்டம் போன்ற பல்வேறு கால்நடை வளர்ப்புத் திட்டங்கள், கணிசமான அளவுக்குக் கால்நடை உற்பத்தியை முன்னேற்றமடையச் செய்வதற்கு மட்டுமின்றி, நவீன கால்நடை நிர்வாக முறைகளைப் பரவலாகப் பயன்படுத்துவதற்கும் கால்நடை வளத்தைப் பெருக்குவதற்கும் பயன்பட்டுள்ளன.

**16.** கால்நடைகளுக்குச் சிறந்த முறையில் மருத்துவ வசதி அளிக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன், புதிதாக 26 கால்நடை மருந்தகங்கள் தொடங்கப்பட்டுள்ளன, 3 கால்நடை மருந்தகங்கள், கால்நடை மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப் பட்டுள்ளன; இரண்டு கால்நடை மருத்துவமனைகள் முதன்மை கால்நடை மருத்துவ நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. இத்துடன், செங்கற்பட்டு, தஞ்சாவூர், சேலம் மாவட்டங்களில் கால்நடை நோய்த் தகவல் சேகரிப்புப் பிரிவுகள் மூன்று புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### பால் பண்ணை வளர்ச்சி

**17.** பால் கொள்முதலைத் தொடக்கப் பால் கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற அரசின் கொள்கையின் அடிப்படையில், கிராம அளவிலும், மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, இவ்வமைப்பின் மூலம், பால் கொள்முதல் மற்றும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. 1984-85ஆம் ஆண்டில் 500 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**18.** நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பாலைக் குளிரவைத்துப் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை திருநெல்வேலியில் அமைப்பது குறித்த பணியும், பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் பாலைக் குளிர வைக்கும் நிலையங்கள் அமைப்பது குறித்த பணியும் நடந்தேறி வருகின்றன. 1984–85ஆம் ஆண்டில், ரூ. 28 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில், பாலைக் குளிர வைக்கும் நிலையம் ஒன்றை மேற்கொண்டும் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. வறட்சி பாங்கான பகுதித் திட்டத்தின்கீழ், ரூ. 150 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், இராமநாதபுரம் மாவட்டத்தில் காரைக்குடியில், ஒரு பால்பண்ணை அமைக்கப்பட்டு வருகிறது.

**19.** பால்வளத் திட்டம்-II தற்போது இம்மாநிலத்தில், 9 மாவட்டங்களில் ரூ. 42.87 கோடி மதிப்பீட்டுச் செலவில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டம், ஊக்கம் அளிக்கக் கூடிய வகையில் செயல்பட்டு வருவதால், இத் திட்டத்தை, இம்மாநிலத்தில் மேலும் மூன்று மாவட்டங்களுக்கு நீட்டிக்க வேண்டுமென்று, இந்தியப் பால்பண்ணைக் கழகத்திடம் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

### உணவு

**20.** 1982, 1983ஆம் ஆண்டுகளில் பெருமளவுக்குப் பருவமழை பொய்த்ததனால், இம்மாநிலத்தின் உணவு நிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டது. 1983ஆம் ஆண்டு, காலதாமதமாக ஆகஸ்ட் திங்களில் காவிரி நீர் திறந்துவிடப்பட்டதனாலும் உணவு உற்பத்தி குறைந்தது. இருப்பினும், பாசன மற்றும் வறட்சி



நிவாரண ஈட்டுத் தொகை குவின்டால் ஒன்றுக்கு ரூ. 35 கொடுத்ததாலும், திருச்சி மற்றும் புதுகோட்டை மாவட்டங்களிலுள்ள சில வட்டங்களில் அரசின் ஏக போகக் கொள்முதல் உரிமை நீட்டிக்கப்பட்டதாலும், 1983ஆம் ஆண்டு குறுவைப்பருவத்தில் ஒரு இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்ய முடிந்தது.

**21.** பொது விநியோக முறையின் மூலம் திங்களொன்றுக்கு 70,000 முதல் 80,000 டன் அரிசி வழங்க வேண்டியிருந்ததால், வெளி அங்காடியிலிருந்து மிகவான விலைக்குப் பெருமளவில் அரிசியைக் கொள்முதல் செய்ய வேண்டியிருந்தது. நடப்பாண்டில், மலிவு விலையில் உணவுப் பொருள் வழங்கிய வகையில், மாநில அரசுக்குச் சுமார் ரூ. 100 கோடி அளவிற்குக் கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது என்று மதிப்பிடப்படுகிறது. இப் பெரும் செலவைக் குறைக்க, தற்போது திங்கள் ஒன்றுக்கு மத்திய அரசின் இருப்பில் இருந்து வழங்கப்படும் 35,000 மெட்ரிக் டன் அரிசியின் அளவை, 80,000 மெட்ரிக் டன்னாக அதிகரிக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

### கூட்டுறவு

**22.** கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களிடம் தொடர்ந்து மிகைப்பற்று இருந்து வருவது, குறுகிய கால வேளாண்மைக் கடன் அளவில் எதிர்பார்த்த வளர்ச்சியைப் பாதித்திருந்த போதிலும், 1982–83ஆம் ஆண்டில், நீண்ட கால, நடுத்தரக் காலக் கடன் வழங்கும் அளவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. வேளாண்மைத் தொழில், துணைத் தொழில்கள் மூலம், சிறு விவசாயிகள் தங்களின் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள, அவர்களுக்கு, நடுத்தரக் காலக் கடன் தொகையின் மொத்த அளவில், 95 சதவீதம் வழங்கப்பட்டுள்ளது என்பதுதான் கடன் வழங்கு அமைப்பு முறையின் முக்கிய அம்சமாகும்.

**23.** இம்மாநிலத்திலுள்ள வேளாண்மைப் பணித் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள், 1982–83ஆம் ஆண்டில், ரூ. 67.18 கோடி அளவிற்கும், நடப்பாண்டில் 1983 டிசம்பர் வரை, ரூ. 58.04 கோடி அளவிற்கும் குறுகிய காலப் பயிர்க் கடன்களை வழங்கியுள்ளன. பால்பண்ணை, கோழிப் பண்ணை முதலியன போன்ற துணைத் தொழில்களுக்கு, 1981–82ஆம் ஆண்டில் ரூ. 9.79 கோடி அளவிற்கு நடுத்தரக் காலக்கடன் வழங்கப்பட்டிருக்க, 1982–83ஆம் ஆண்டில், இவற்றிற்கு ரூ. 15.97 கோடி வழங்கப்பட்டது. நடப்பாண்டில், ரூ. 8.33 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கப் பட்டுள்ளன. 1981–82ஆம் ஆண்டில், நீண்ட காலக் கடன்களுக்கான நிதி ஒதுக்கம், ரூ. 5.52 கோடியாக இருந்தது. அதனைத் தொடக்க நிலவள வங்கிகள் 1982–83ஆம் ஆண்டில் ரூ. 14.35 கோடியாகப் பெருக்கியுள்ளன. 1983–84ஆம் ஆண்டில் 1983 டிசம்பர் வரை, ரூ. 9.11 கோடி அளவிற்கு நீண்ட காலக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.



**24.** சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள நலிந்த பிரிவினர்களுக்குத் தொடர்ந்து 4 சதவீத சலுகை வீதத்தில் கடன் வழங்கப்படும். பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், மலைவாழ் பழங்குடியினருக்கு இச்சலுகை வீதத்தில் கடன் வழங்குகின்றன. சிறு உழவர்கள், கடன்களை முறையாகத் திருப்பிச் செலுத்துவதற்காக, 2 சதவீத வட்டி தள்ளுபடி வழங்கும் ஊக்கத்திட்டமும் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகிறது.

**25.** ஒரு இலட்சம் ஆதி திராவிட குடும்பங்களைக் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவர, குடும்பம் ஒன்றிற்கு அரசு மானியமாக, ரூ. 100 வழங்கும் திட்டத்தின்கீழ், இதுவரை, 80,000 குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன. அடுத்த நிதி ஆண்டில், இத்திட்டத்தின் கீழ், ரூ. 10 இலட்சம் செலவு செய்யக் கருதப்பட்டுள்ளது.

**26.** விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் முதலிய வேளாண்மை இடுபொருட்களை வழங்குவதில், கூட்டுறவுச் சங்கங்கள் முனைப்பாகச் செயல்பட்டு வந்துள்ளன. அண்மையில் ஏற்பட்ட வறட்சி, வெள்ளப்பெருக்குப் போன்ற பாதகமான பருவகாலங்களில், உழவர்களுக்கு இது பேருதவியாக அமைந்தது. இவை தவிர, சிறு உழவர்களுக்கும், சொற்ப நில உழவர்களுக்கும், பெருமளவில் உதவியளிக்கும் தேசியத் திட்டத்தைச் செயல்படுத்துவதில், கடன் வழங்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. வேளாண்மைப் பணித் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகச் சிறு பாசனக் காரியங்களைச் சிறப்பு இனமாகக் கருதி, அவற்றிற்கு நீண்டகாலத் தவணை வேளாண்மைக் கடன்கள் வழங்க 8 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**27.** கூட்டுறவுச் சங்கங்கள் இன்றியமையாத பொருட்களை வழங்குவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இம்மாநிலத்திலுள்ள கிராமப் பகுதிகளில், 11,159 கிராமக் கூட்டுறவுக் கடைகள் பெரும் அளவில் செயல்பட்டு வருகின்றன. இது தவிர, காய்கறிகளின் விலைவாசி ஏற்றத்தைத் தடுப்பதற்காக, காய்கறி பயிரிடுவோர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள், 47 ஏற்படுத்தப்பட்டுள்ளன. 8 மாவட்டங்களில் இச்சங்கங்கள் காய்கறி விற்பனையை மேற்கொண்டுள்ளன. வரும் ஆண்டில், இத்திட்டம் மேலும் 8 மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்படும்.



### காட்டுவளம்

**28.** காடுபடு பொருள்களைப் பாதுகாத்து வளர்ப்பதோடு மட்டுமல்லாது, அதிகப் பரப்பளவில் காடு வளர்க்க இம்மாநில அரசு, பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஸ்வீடன் அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் கூடிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், 1983 டிசம்பர் வரையில் 285 இலட்சம் மரங்கள் நடப்பட்டுள்ளன. 28,000 எக்டேர் பரப்பளவில் மலைத் தோட்டப் பயிர்கள் வளர்க்கப்பட்டுள்ளன. கரையோரங்களிலும் சாலையோரங்களிலும் 803 கி.மீ. நீளத்திற்குக் காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன. 1983–84ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்காக ரூ. 8.67 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**29.** மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின்கீழ், மதுரை, கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்களில் பல்வேறு காடு வளர்ப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இத்திட்டங்கள் தவிர, 1983–84ஆம் ஆண்டில் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், 2,132 எக்டேரில் யூக்கலிப்டஸ் மரங்களையும், 742 எக்டேர் பரப்பளவில் முந்திரி மரங்களையும் பயிரிட்டுள்ளது.

### மீனளம்

**30.** மீனளத்தை மேம்படுத்துவதற்கும், மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தைச் சிறப்படையச் செய்யவும், அரசு, வெவ்வேறு திட்டங்களை வகுத்துள்ளது. மீனவர்களுக்கு உயர்தர மீன்பிடி வலை கிடைக்கச் செய்வதற்காக, 20 டன் மீன்பிடி திறன்கொண்ட வலை தயாரிக்கும் பிரிவு ஒன்றை ஏற்படுத்த, தமிழ் நாடு மீனள மேம்பாட்டுக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நீலகிரி மாவட்டத்தில், உள்ள அவலாஞ்சியில் 'டிரவுட்' வகை மீன் குஞ்சுகளை வளர்க்கும் நவீன திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசு அனுமதி வழங்கியுள்ள 9,931 வீடுகளில், 7,535 வீடுகளை, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம், கடலில் மீன் பிடிக்கின்ற மீனவர்களுக்காகக் கட்டியுள்ளது. எஞ்சியுள்ள வீடுகள், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையும் முன் கட்டி முடிக்கப்படும்.

### பாசனம்

**31.** 1983–84ஆம் ஆண்டில், 14,350 எக்டேர் நிலப்பரப்பிற்குக் கூடுதல் பாசன வசதி கிடைக்கும் வகையில், பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்கள் முடிக்கப்படும். 1984–85ஆம் ஆண்டில், இத்தகைய திட்டங்களுக்கு மூலதனச் செலவு ரூ. 48.97 கோடி ஆகும். இந்த முதலீட்டின் மூலம் 28,170 எக்டேர் நிலப்பரப்பிற்குக் கூடுதல் பாசன வசதிகளை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**32.** நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பரம்பிக்குளம்—ஆளியாறு விரிவாக்கத் திட்டம், பெரியாறு, வைகைப் பாசன ஏற்பாட்டை நவீனப்படுத்தும் திட்டம் ஆகிய இரு முக்கியத் திட்டப் பணிகளும் செவ்வனே நடைபெற்று வருகின்றன. திட்டமிட்டபடி, இப்பணிகள் செய்து முடிக்கப்படும்.

**33.** நடுத்தரப் பாசனத் திட்டங்கள் மூன்று இந்த ஆண்டு முடிக்கப்பட்டுவிடும். பெரியார் மாவட்டத்தில் பெரும்பள்ளம் நீர்த்தேக்கத் திட்டப் புணி நடப்பாண்டில் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**34.** பெரியாறு, வைகை பாசன ஏற்பாட்டை, ரூ. 59 கோடி செலவில் நவீனப்படுத்தும் இரண்டாம் நிலை திட்டச் செயற் குறிப்புக்கு உலக வங்கி ஏற்பளித்துள்ளது. ரூ. 44.50 கோடி செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிற முதலாம் நிலைப் பணியுடன், இரண்டாம் நிலைப் பணியும் ஒருசேரச் செயல்படுத்தப்படும்.

**35.** அரசுத் துறைகளைச் சேர்ந்த வெவ்வேறு அதிகாரிகளுக்குப் பணியில் பயிற்சி அளிப்பதற்காக திருச்சிராப்பள்ளியில், அமெரிக்க நாட்டு உதவித் திட்டத்தின்கீழ்ப் பாசன நிருவாகப் பயிற்சி நிலையம் ஒன்றை அமைக்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

### மின்சக்தி

**36.** சென்ற நிதி ஆண்டுத் தொடக்கத்தில், தமிழ்நாடு மின் அமைப்பின் நிறுவுத்திறன் 3,109 மெகாவாட்டாக இருந்தது. கல்பாக்கம் அனல் மின்நிலையம் தொடங்கியதிலிருந்து தற்போது இந்த மின் அமைப்பின் அளவு 3,344 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது. நீர்மின் தேக்கங்களை அறிவார்ந்த முறையில் பயன்படுத்தி, மின் உற்பத்தியைச் சீரமைத்ததாலும், தூத்துக்குடி அனல் மின் திட்டச் செயல்பாட்டை மேம்படுத்தியதாலும், கூடுதல் மின் உற்பத்தி கிடைத்தது. 1983 ஜனவரியிலிருந்து ஜூன் வரையில் சராசரியாக நாளொன்றுக்கு 23·83 மில்லியன் யூனிட் என்றிருந்த மின் உற்பத்தி, இந்த ஆண்டில் சராசரியாக நாளொன்றுக்கு 33·68 மில்லியன் யூனிட் மின் சக்தி கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**37.** 1—2—1983 அன்று 128 மில்லியன் யூனிட்டாக இருந்த புனல் மின் உற்பத்தித்திறன், 1—2—1984 அன்று 1,068 மில்லியன் யூனிட்டாயிற்று. இதனால், புனல் மின்வள வாயில்கள் கணிசமான அளவு அதிகரித்துள்ளன. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 1983 டிசம்பரில் 333 மில்லியன் யூனிட் மின்சாரமும், 1984 ஜனவரியில் 344 மில்லியன் யூனிட் மின்சாரமும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இது, இந்த அனல் மின்நிலையத்தின் ஒரு சாதனையாகும். எனினும், இந்த அளவு மின் உற்பத்திக்குப் போதிய நிலக்கரி கிடைப்பது மிகவும் அரிதாக உள்ளது. மாதம் ஒன்றுக்கு 2·7 இலட்சம் டன் நிலக்கரி தேவையாகயிருக்க, வழங்கப்படுகின்ற நிலக்கரியின் அளவு 1·5 இலட்சம் டன் மட்டுமேயாகும்.

**38.** மின்சக்தி நிலைமை சீரடைந்துள்ளதால், மின்வெட்டைக் குறைக்க முடிந்தது. மின்சக்தியைப் பயன்படுத்துவது குறித்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தவும் இது உதவியது. இந்த ஆண்டில் மின்சக்தியின் பயன்பாடுமீதான கட்டுப்பாடுகளை மேற்கொண்டும் அதிகரிக்காமல் நிலைமையைச் சமாளிக்க முடியும் என்று மின்வாரியம் நம்பிக்கை கொண்டுள்ளது.

**39.** மின்சக்தி மேம்பாட்டுத் திட்டங்களை விரைவுபடுத்துவதன் மூலமே, மாநிலத்தில் தொடர்ந்து நிலவும் மின் பற்றாக்குறைக்கு நிலையான தீர்வு காண முடியும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், மேட்டூர் அனல் மின் நிலைய நீட்டிப்புத் திட்டம், வட சென்னை அனல் மின் திட்டம், தூத்துக்குடி அனல் மின் நிலைய நீட்டிப்புத் திட்டம் ஆகிய மூன்று பெரிய திட்டங்களை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இவற்றில், மேட்டூர் அனல் மின் நிலைய நீட்டிப்புக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதன் மூலம், ஒவ்வொன்றும் 210 மெகாவாட் உற்பத்தி செய்யும் இரண்டு பிரிவுகள் சேர்க்கப்படும். பிற இரண்டு திட்டங்கள் மத்திய அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன.

**40.** திட்டப் பணிகளின்கீழ் நிதி ஒதுக்குவதில் மின் துறைக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அடுத்த நிதியாண்டில் மின் துறைக்கு மத்தியத் திட்டக் குழு 237 கோடி ரூபாய் ஏற்பளித்துள்ளது. எனினும், நிலக்கரி, எண்ணெய், இரயில்வே கட்டணம், பிற மாநிலங்களிலிருந்து வாங்கும் மின்சக்திக்கான கட்டணங்கள் ஆகியவை பெரும் அளவில் உயர்ந்து விட்டதால், தமிழ்நாடு மின் வாரியத்தின் ஆதாரங்களுக்கும், பொறுப்புக்கும் இடையே உள்ள இடைவெளி மிக அதிகமாக உள்ளது. நிலக்கரி விலையைத் தற்போது 25 சதவீதமாக உயர்த்தியுள்ளது மின்வாரியத்திற்கு ஆண்டுதோறும் சுமார் ரூ. 15 கோடி நிதிச் சுமையைச் சேர்க்கிறது. 1983ஆம் ஆண்டு மே திங்களில் செய்யப்பட்ட மிதமான மின் கட்டணத் திருத்தம் புதிய திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கப் போதுமானதாக இல்லை. தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்ட மாற்று முறைகள் உருவாக்கப்படவேண்டியிருக்கின்றன.

### தொழில் வளர்ச்சி

**41.** மாநிலத்தின் தொழில் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது என்றும், நிலையானப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் ஒருசில மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் ஒரு சில தரப்பினரிடையே ஆதாரமற்ற கருத்து நிலவி வருகிறது. எனினும்,



மத்திய நிதி நிறுவனங்களிடமிருந்து, மொத்தக் கடன் உதவி ரூ. 1,289 கோடி பெற்ற தமிழ்நாடு, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, இந்திய தொழில் கடன் முதலீட்டு நிறுவனம், இந்திய தொழில் நிதி நிறுவனம் போன்ற பல்வேறு நிதி உதவி நிறுவனங்களிலிருந்து கடன் பெறுவதில், மூன்றாவது இடத்தை வகிக்கிறது. மாநிலத்தில் செய்யப்பட்ட மொத்த முதலீடு மிகவும் அதிகம் என்பதையே இது காட்டுகிறது. தமிழ்நாட்டின் தொழில் வளத்தில் மைய அரசின் முதலீடு மிகவும் குறைவு என்பதையும் நாம் இங்கே குறிப்பிட வேண்டும். தொழில்களில் மத்திய அரசின் மொத்த முதலீடான ரூ. 21,171 கோடி மற்றும் எந்த ஒரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்படாத ரூ. 2,422·14 கோடி ஆகியவற்றில் 1981 மார்ச் வரை தமிழ்நாட்டில் செய்யப்பட்ட முதலீடு ரூ. 922.51 கோடி மட்டுமே. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மத்திய அரசு தமிழ்நாட்டில் ஏற்படுத்திய புதிய தொழில் திட்டம் ரூ. 1·06 கோடி சொற்ப முதலீட்டுடன் தொடங்கப் பட்ட மத்திய ''பிளாஸ்டிக் பொறியியல் கருவிகள் உற்பத்தி நிறுவனம்'' மட்டுமேயாகும்.

**42**. தொழில் வளர்ச்சியைப் பெருக்கும் திட்டத்தை அணுகும் முன்னரும், புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்தும் முன்னரும் மாநிலத்தில் உள்ள தொழில் வளர்ச்சியின் தன்மை பற்றி ஆய்வு செய்யவேண்டும். மாநிலத் தொழில் வளர்ச்சியின் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் சிறு தொழில் பிரிவுகளின் விரைவான வளர்ச்சியே ஆகும். 31—3—1979 அன்று 22,254 சிறு தொழில் பிரிவுகள் பதிவு செய்யப்பட்டிருக்க 31—3—1983 அன்று 40,925 சிறு தொழில் பிரிவுகள் பதிவு செய்யப் பட்டிருந்தன. கடந்த நான்கு ஆண்டுகளில் சிறு தொழில்களின் எண்ணிக்கை 83 சதவீதம் அதிகரித் துள்ளது என்பதையே இது காட்டுகிறது. பெருந் தொழிற்சாலைகள் நிறுவப்படாத நிலையிலும், சிறு தொழில் வளர்ச்சிக்குப் பெருமளவில் முதலீடு செய்யப்பட்டிருப்பதையே இது உணர்த்துகிறது. நமது தொழில் வளர்ச்சியின் மற்றொரு குறிப்பிடத் தக்க அம்சம் என்னவென்றால் இது மாநிலம் முழுவதும் ஏற்பட்ட பரவலான வளர்ச்சி ஆகும். தமிழ் நாட்டில் எந்த மாவட்டமும், தொழிற்சாலை இல்லாத மாவட்டமாக வகைப்படுத்தப்படவில்லை. மாநிலத் தில் தொழில் வளர்ச்சிக்கு மத்திய நிதி உதவி அளிப் பதற்கு இது இடையூறாக இருந்தபோதிலும், வட்டார ஏற்றத்தாழ்வுகளை அகற்ற இந்த நிலை உதவி வருகிறது. தொழில் வளர்ச்சியின் மற்றொரு முக்கிய அம்சம் என்னவென்றால் பட்டுப்புழு வளர்ப்பு, ஏனைய கிராமப்புற குடிசைத் தொழில்கள் போன்ற வேலை வாய்ப்பைப் பெருக்கக் காரணமாக அமைகின்ற தொழில் களின் வளர்ச்சியாக இருப்பது ஆகும். இது வேலை வாய்ப்புப் பிரச்சினையைத் திறமையாகச் சமாளிக்க அரசு எடுத்துள்ள பெரு முயற்சியின் விளைவால் ஏற்பட்டுள்ள ஒன்றாகும்.

**43**. திறமையை வளர்த்துத் தொழில்களைப் பெருக்கி, அதன் மூலம் இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியைப் பெருக்க, முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்பதையே மேற்சொன்ன ஆய்வு காட்டு கிறது. இந்நோக்கத்தை எய்த, தனியார் பல்தொழில் பயிற்சிப் பயிலகங்களையும் பொறியியல் கல்லூரி களையும் தொடங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. வாழ்க்கைத் தொழில் கல்வி, தொழில் நுட்பக் கல்வி முதலியவற்றை மேம்படுத்த அரசு எடுத்துள்ள முயற்சிக்கு இது உறுதுணையாக இருக்கும்.






**44**. அரசின் பல்வேறு நிறுவன அமைப்புகள் அவற்றைச் சார்ந்த தொழில் வளத்தை மேம்படுத்த முக்கியப் பங்காற்றி வருகின்றன. 1983–84ஆம் ஆண்டில் டிசம்பர் வரை மாவட்டத் தொழில் மையங்கள், 6,621 சிறு தொழில் நிறுவனங்களைப் பதிவு செய்துள்ளன. இவை 47,767 பேர்களுக்கு வேலைவாய்ப்பை நல்கியுள்ளன. சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், ரூ. 16.47 கோடி அளவிற்கு நிதியுதவி அளிக்கப்படுவதற்காக 10,988 விண்ணப்பங்கள் பரிந்துரை செய்யப்பட்டு வங்கிகளுக்கு அனுப்பப் பட்டுள்ளன. இவற்றில் 2,079 இனங்களுக்கு இதுகாறும் ரூ. 318.98 இலட்சம் தொகைக்கு வங்கிகள் அனுமதி வழங்கியுள்ளன.

**45.** சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனம் (சிட்கோ) நிருவகித்துவரும் தொழில் பேட்டைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைகள் திட்டத்தின்கீழ், 33 அரசு தொழில் பேட்டைகளில் உள்ள 783 பட்டறைகள், 983 மேம்படுத்தப்பட்ட மனைகள் சிறு தொழில் பிரிவு களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. தவணைக் கொள்முதல் திட்டத்தின்கீழ், 101 சிறு தொழில் பிரிவுகள், அவற்றின் பட்டறைகளுக்கான தொகை முழுவதையும் செலுத்தி உள்ளன? பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனம் (சிட்கோ) ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 55.50 கோடி முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது.

**46**. 1983–84ஆம் ஆண்டில், கதர்–கிராமத் தொழில் வாரியம், ரூ. 83.79 கோடி மதிப்பிற்குப் பொருட்களை விற்கத் திட்டமிட்டுள்ளது. அடுத்த ஆண்டில், இது ரூ. 101.51 கோடியாக உயர்த்தப் பட உள்ளது. 1984–85ஆம் ஆண்டில் கூடுதலாக 32,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும். 41,476 கைவினைஞர்களுக்கு நிதியுதவி அளிக்க வாரியம் வகை செய்துள்ளது.

**47**. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) பொதுத் துறை, கூட்டுத் துறையின்கீழ் 26 திட்டங்களை வெற்றிகரமாகத் தொடங்கியுள்ளது. பொதுத் துறையிலான அரக்கோணம் தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனத்தின் மீள் உருள் ஆலைத் திட்டம் சோதனை முறையில் உற்பத்தியைத் தொடங்கி யுள்ளது. பொதுத் துறையின்கீழ் 3 திட்டங்களும், கூட்டுறவுத் துறையின்கீழ் 7 திட்டங்களும் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. பொதுத் துறையின்கீழ் 7 திட்டங்களையும், கூட்டுறவுத் துறையின்கீழ்

(33ஆம் பக்கம் பார்க்க)



# தமிழகத்தில் ஆதி திராவிடர் நலம்

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்

## திரு. எம். விஜயசாரதி

"ஆதிதிராவிடர் நல வார விழா'' வினை நாம் ஒவ்வொரு ஆண்டும், சனவரித் திங்கள் 24ஆம் நாள் முதல் 30ஆம் நாள் வரை கொண் டாடி வருகின்றோம். ஆதிதிராவிடர்களை மக்கள் மதிக்க வேண்டும் என்பதற்காக அவர் கள் ''கடவுளின் மக்கள்'' என்று அண்ணல் மகாத்மா காந்தி அடிகள் அழைத்தார். தீண் டாமை ஒரு பாவச் செயல். அதனை வேரோடு ஒழித்தால்தான் சமுதாய வாழ்வில் ஏற்றத் தாழ்வு மனப்பான்மை நீங்கும் என்று சொல் லாலும், செயலாலும் செயலாற்றினார் அண்ணல் காந்தியடிகள்.

தீண்டாமை என்ற கொடிய வழக்கம் சமூக ஒற்றுமையைப் பாதித்து, நாட்டின் உயர் வையும், ஒற்றுமையையும் சீர்குலைக்கின்றது. இதன் விளைவாக நாட்டின் பொருளாதார உயர்வு தடைப்பட்டு, வளர்ச்சிப் பணிகள் பாதிக்கும் நிலை உருவாகின்றது. இந்த அவல நிலையை, பூண்டோடு ஒழிக்க அண்ணல் டாக் டர் அம்பேத்கார், தந்தை பெரியார், பேரறி ஞர் அண்ணா போன்ற பெரும் தலைவர்கள் அயராது பாடுபட்டனர். இவர்களது சீரிய தொண்டினால், தீண்டாமை என்ற கொடிய வழக்கம் சமூக வாழ்க்கையிலும் பெருமளவு நீக்கப்பட்டாலும், நாட்டின் சில பகுதிகளில் இது இன்னும் கடைப்பிடிக்கப்பட்டு, அதன் விளைவாக இனக்கலவரம் போன்ற கசப்பான சம்பவங்கள் நடைபெறுகின்றன. தீண்டா மையை ஒழிப்பதன் அவசியத்தையும், அரசு அதற்காக எடுத்துள்ள நடவடிக்கைகளையும் விளக்கும் வகையில் ''ஆதிதிராவிடர் நல வார விழா '' கொண்டாடப்படுகிறது.

ஆதிதிராவிடர்கள், தமிழகத்தின் மொத்த மக்கட்தொகையில் 18 சதவிகிதம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களது மேம்பாட்டுக்குச் சிறப்பாக, செயலாற்றுவதற் கென்று 1959ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் நலத்துறை என்று தனியே ஒரு துறை ஏற் படுத்தப்பட்டது. 1959ல் ரூபாய் ஒரு கோடிக் குக் குறைவாக நிதியுடன் தொடங்கப்பட்ட இத்துறை, தற்போது சுமார் ரூபாய் 44.61 கோடியளவில் பல்வேறு மேம்பாட்டுத் திட் டங்களை இவர்களின் நலத்திற்காகச் செயற் படுத்தி வருகிறது.

சமுதாயத்தில், இதர சமூகத்தவரோடு ஆதிதிராவிடர்கள் சரிசமமாக உயர, கல்வி யில் முன்னேற்றம் ஏற்பட்டால்தான் இயலும் என்பதால் மொத்த நிதி ஒதுக்கீட்டில் கணிச மான தொகை பள்ளிக்கூடங்கள் கட்டுதல், அரசு மாணவ மாணவியர் விடுதிகள் ஆரம் பித்தல், மதிய உணவு வழங்குதல், இலவசச் சீருடைகள், பாடப்புத்தகங்கள், சிலேட்டுகள் வழங்கல், கல்வி உதவித்தொகை வழங்குதல், படிப்பில் அதிக ஆர்வம் காட்டும் மாணவ மாணவியருக்குச் சிறப்புப் பரிசு வழங்குதல் ஆகி யவை போன்ற பல திட்டங்கள் செயல்படுத் தப்பட்டு வருகின்றன.''கல்வி உதவித்தொகை பெற, பெற்றோரது வருமான வரம்பு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3,000 ஆக இருந்ததை ரூ.6,000 ஆக 1981-82ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப் பட்டுள்ளது. இது தவிர காந்தி நினைவுப் பரி சுத்தொகை, தகுதி அடிப்படைச் சலுகை போன்ற இதர சலுகைகளும் வழங்கப்படு கின்றன. மத்திய நிதியுதவியுடன் துப்புரவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் குழந்தை களுக்குப் படிப்பு உதவித்தொகை வழங்கப் புதிய திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களவு சத்துணவுத் திட்டத்தின் கீழ் எல்லா நாட்களிலும் மாண வர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1.78 இலட்சம் ஆதி திராவிட மாணவ மாணவியர் பயனடைகின்ற னர். நடப்பு ஆண்டு இத்திட்டத்துக்காக 86.82 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது. இவ்வருடம் அரசு விடுதிகள் 10 புதிதாக ஆரம்பிக்கப்பட உத்தரவிடப்பட் டுள்ளது.

இந்திய அரசுப்பணி, காவல் துறைப் பணி போன்ற பணிகளில் சேர வாய்ப்பும் வசதியும் செய்து தரும் பொருட்டு, சென்னை யில் 1966ஆம் ஆண்டு முதல் முன்னோடிப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, நடைபெற்று வருகிறது.

கல்வி மற்றும் வேலை வாய்ப்பு வசதி களுக்கு அடுத்து ஆதிதிராவிடர்கள் பொரு ளாதார மேம்பாடு அடையச் சிறு தொழில்

கடன் திட்டம் செயல்படுத்தப்பட்டு, இதற்காக ரூ. 15,000 வரை பல்வேறு தொழில்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கப்படுகிறது. தொழிலில் தேர்ச்சி பெற்றுள்ள ஆதிதிராவிடர்களுக்கு, இலவசமாக தொழில் கருவிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் தையல், தச்சு, கருமார் தொழில், செருப்பு தைத்தல், கல் உடைத்தல் போன்ற தொழில்களுக்கு இலவசமாகக் கருவிகள் வழங்கப்படுகின்றன. விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உழவு மாடுகள் வாங்கவும், பாசனக் கிணறுகள் வெட்டவும் மானியத்தொகை வழங்கப்படுகின்றது.

வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவையான வீட்டு மனைகள், வீடுகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, இணைப்புச் சாலைகள், மின் வசதி மற்றும் சுகாதார வசதிகள் செய்து தரப்படுகின்றன. சிறப்பு உட்பகுதித் திட்டம் என்று ஒரு புதியதோர் சிறப்புத் திட்டம் தமிழ்நாட்டில் 1980-81லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மொத்த ஆதிதிராவிடர் குடும்பங்களில் பாதி குடும்பங்களை யாவது ஐந்து ஆண்டுகளில் வறுமைக் கோட்டுக்கு மேல் கொண்டுவர இதன்கீழ் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக நடப்பு நிதி ஆண்டில் மத்திய அரசு தன் பங்காக ரூ. 9.16 கோடியும், மாநில அரசு 126.77 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளன.

**தீண்டாமை ஒழிப்பு**

தீண்டாமையை ஒழிக்கும் பொருட்டும், தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கும் பொருட்டும், குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் தீவிரமாக அமலாக்கப்படுகிறது. இதற்காக 20 இயங்கும் காவல் படைகளும், நான்கு தனி நீதி மன்றங்களும் செயல்பட்டு வருகின்றன.

கலப்புத் திருமணம், சாதி, சமய வேறுபாடுகளைக் களையச் சிறந்த வழி என்பதால் தமிழக அரசு கலப்புத் திட்டத் தம்பதியர்களுக்கு தங்கப் பதக்கம் , திருமணச் செலவுக்காக ரூ. 300, பாராட்டு மடல், தம்பதிகளின் பெயரில் ரூ. 3,000க்கு ஆறு ஆண்டுக் காலத்திற்கு தேசிய சேமிப்புப் பத்திரம் ஆகியவற்றினை வழங்குகிறது.

சுத்தமும், சுகாதாரமும் தீண்டாமையை ஒழிக்க உதவிடுமாகையால் சுத்தமாகப் பராமரிக்கப்பட்டு வரும் ஆதிதிராவிடர் பகுதிகளுக்குத் தொலைக் காட்சிப் பெட்டிகளும், வானொலிப் பெட்டிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. தீண்டாமை ஒழிப்பில் சிறந்து விளங்கும் கிராமங்களுக்கு ரொக்க மானியமும் வழங்கப்படுகிறது. தீண்டாமை ஒழிப்பில் கவனம் செலுத்திப் பாடுபடும் நபர்கள் ஆண்டு தோறும் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் நாளன்று பாராட்டு மடல் வழங்கி கௌரவிக்கப்படுகின்றனர்.

தமிழ்நாடு அரசின் இத்திட்டங்களைப் பயன்படுத்தி ஆதிதிராவிடர் மக்கள் சமுதாயத்தில் ஏற்றமிகு வாழ்வு காண்பவர்கள் என்ற நம்பிக்கையைக் கூறி என் உரையை நிறைவு செய்கின்றேன்.



(30.1.1984 **அன்று சென்னை வானொலி நிலையத்தில் ஆற்றிய உரை)**











# சொந்தக்காலில் நிற்க வந்ததொரு திட்டம்

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், படித்துவிட்டு வேலையற்று இருக்கும் இளைஞர்களின் வாட்டம் போக்கிட அன்றே சுய வேலைவாய்ப்புத் திட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்றார். அதுவே நமது தமிழக முதல்வரின் திட்டமான வீட்டிற்கு ஒருவருக்கு ஒருவேலை வாய்ப்பு என்ற திட்டமாகும். இதன் அடிப்படையில்தான் பாரதப் பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயனடைவோர் ஒவ்வொருவரும் 18 வயதிலிருந்து 35 வயதிற்குட்பட்டும் உயர்நிலைப் பள்ளிதேர்ந்தவர்களாகவும் அதற்கு மேற்பட்டகல்வித் தகுதி மற்றும் தொழிற் கல்வி கற்றவர்களாகவும் இருக்க வேண்டும். இதற்கேற்ப ஒவ்வொருவருக்கும் ரூ. 25,000க்கு மேற்படாமல் தொழிற் திட்டத்திற்கேற்ப வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படுகிறது. இதற்கு வட்டி வீதம் திருச்சி போன்ற பிற்பட்ட பகுதிகளுக்கு 10 சதவீதமும் மற்ற பகுதிகளில் 12 சதவீதமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலும் தொழில் ஆரம்பிக்கும் இளைஞர்கள் இன்னலுறாமலிருக்க கடன் தொகையில் 75% முறையாக திரும்ப செலுத்தியவர்களுக்கு 25% அரசு மான்யமாக வழங்கப்படும். **கடன் பெற தகுதியுடையோர் இக் கடனுக்குச் சொத்து அடமானமோ முன் பணமோ கொடுக்கத் தேவையில்லை.** மேலும் தொழில் துவக்கத்தில் 6முதல்18 மாதங்களுக்குப் பின்னர் தொழிலின் இயல்பு மற்றும் இலாபம் ஈட்டலைப் பொறுத்து தவணைகள் செலுத்த வாய்ப்பளிக்கப்படும். வழங்கப்படும் கடனை 3 முதல் 7 ஆண்டுகளில் தவணை முறையில் செலுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தைச் செயல்படுத்த மாவட்ட தொழில்மையப் பொது மேலாளர் தலைமையின் கீழ் ஒரு பணிக்குழு (Task Force Committee) அமைக்கப்பட்டுள்ளது. அதில் மாவட்ட தொழில் மையக் கடன் வசதி மேலாளர், மாவட்ட முன்னோடி வங்கி நிர்வாகிகள், சிறு தொழில் சேவை நிலைய துணை இயக்குநர் மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

பணிக்குழுவின் முதல் கூட்டம் திருச்சி மாவட்ட தொழில் மைய அலுவலகத்தில் 14.10.83ம் தேதியன்று நடைபெற்றது. இந்த மாவட்டத்திற்கு ஆயிரம் பேர் பயனடைய ஒரு கோடி ரூபாய் கடன் உதவி வழங்க குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 10.1.84ஆம் தேதி முடிய 4,018 விண்ணப்பங்கள் தொழில் மைய அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளன. இவைகளில் 1,200 விண்ணப்பதாரர்களை 12 கூட்டங்களில் நேர்முகத் தேர்வு செய்யப்பட்டு 349 நபர்கள் பல்வேறு தொழில்கள் ஆரம்பிக்க ரூ. 52,52,000 இம்மாவட்டத்திலுள்ள பல்வேறு வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் வயது வரம்பு பின்வருமாறு:**

| | |
|---|---|
| 18 முதல் 20 வரை | 29 |
| 21 முதல் 25 வரை | 126 |
| 26 முதல் 30 வரை | 118 |
| 31 முதல் 35வரை | 76 |
| | 349 |

**வகுப்பு அடிப்படையில் விவரம் கீழ்க்கண்டவாறு:**

| | |
|---|---|
| தாழ்த்தப்பட்டவர்கள் | 27 |
| பின்தங்கிய வகுப்பினர் | 226 |
| மற்ற வகுப்பினர் | 96 |
| | 349 |

**தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களில் 45 பேர் மகளிராவர். பயன்பெற்றவர்களின் கல்வித் தகுதி பின்வருமாறு:**

| | |
|---|---|
| பொறியியல் பட்டதாரிகள் | 2 |
| தொழில் சிறப்புச் சான்று பெற்றவர்கள் | 5 |
| தொழிற்பயிற்சி சான்று பெற்றவர்கள் | 40 |
| முதுநிலைபட்டதாரிகள் | 4 |
| அறிவியல் பட்டதாரிகள் | 23 |
| கலைப்படிப்புப் பட்டதாரிகள் | 39 |
| மேல்நிலைப்பள்ளிப் படிப்பு படித்தவர்கள் | 55 |
| பள்ளி இறுதிவகுப்பு படித்தவர்கள் | 181 |
| | 349 |

பணிக்குழு தற்போது வாரமிருமுறை கூடி கடன் ஒதுக்கீடு செய்கிறது. ஒதுக்கீட்டின் பாதித் தொகை அதாவது ரூ. 50,00,000 (ஐம்பது இலட்சம்) ஒதுக்கீடு செய்யப்பட்டு மீதமுள்ள தொகையையும் 1984ஆம் ஆண்டு பிப்ரவரி மாத இறுதிக்குள் ஒதுக்கீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

படித்து வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்குச் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடன் வழங்கும் தொடக்கவிழா தமிழகத்தில் முதன் முதலாகத் திருச்சி ஜமால் முகமது கல்லூரி திடலில் 11.1.84 அன்று நடந்தது.

விழாவிற்கு வந்திருந்தோரை தொழில்துறைச் செயலாளர் திரு வி.செல்வராஜ் இ.ஆ.ப. வரவேற்று உரையாற்றுகையில், "கல்வி முடித்தபின்பு வேலைவாய்ப்பு கிடைக்காமல் அவதிப்படுவது குறித்து அரசு உணர்ந்து இந்தத் திட்டத்தை **முதன் முதலாகத் திருச்சியில் துவக்குகின்றது.** ரூ.16 கோடி தமிழக அரசு செலவழிக்க வேண்டும் என்று மைய அரசுகோரியிருந்த உச்சவரம்பை இன்று நீக்கிவிட்டது' என்றார்.

இத்திட்டதொடக்கவிழாவில் திட்டத்தின் நோக்கங்கள் பற்றி திரு. எம்.அண்ணாதாசன் எம்.எல்.ஏ. திரு.எம்.சின்னசாமி எம்.எல்.ஏ, (குழாய்க் கிணறு வாரியத் தலைவர்), திரு எஸ்.ஏ. துரை செபாஸ்டியன் எம்.பி., திரு சி.முத்தையா தலைமை மேலாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சென்னை ஆகியோர் பேசினார்கள்.

விழாவிற்குத் தலைமை வகித்து மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. இரா. அருணாசலம் அவர்கள் உரையாற்றுகையில், "படித்து பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு இன்று இங்கு தொடங்கப்படும் இந்தவிழா மற்ற மாவட்டங்களிலும் நடத்தப்படும். ஆண், பெண் என்று வித்தியாசம் பாராமல் உதவிகள் வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தில் ஏறத்தாழ 1.5 இலட்சம் பேர் பயன் அடைவார்கள் என்று நம்புகிறேன்.

"படித்தவன் அரசைமட்டும் நம்பி இருக்கக் கூடாது, தான் படிக்கும்போது தொழில் கல்வி பற்றியும் அறிந்து இருக்கவேண்டும். அப்பொழுதுதான் சுயமரியாதையோடு தொழில்கள் செய்ய முடியும். பெண்களுக்குக் குங்குமம் தயாரிக்க அரசு உதவிசெய்து வருகிறது. கோழிப் பண்ணை அமைக்க நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உதவித் தொகைத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யும். வட ஆர்க்காடு மாவட்டத்தில் ரூ. 37 இலட்சத்தில் கட்டப்பட்டுவரும் பட்டு வளர்ச்சித் தொழில் விரைவில் தொடங்க இருக்கிறது. அண்ணா வழியில் இந்த அரசு இது போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது" என்றார்.

சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடன் வழங்கி மாண்புமிகு சத்துணவுத்திட்ட அமைச்சர் திரு. ஆர். சௌந்தரராசன் அவர்கள் பேசுகையில், "உலகப் பெரியார் காந்தியடிகள் வாழ்க்கை வசதிகளை கிராமப்புற மக்களும் பெற வேண்டும் என்று விரும்பினார்கள். காந்தியார் விரும்பிய கிராம ராஜ்யத்தை முதல்வர் அவர்கள் இத் திட்டத்தைத் தொடங்குவதன் மூலம் காந்தியின் கனவை செயல்படுத்தியுள்ளார்.

"படிப்பது என்பது வேலைக்கு மட்டும்தான் என்பது அல்ல, தொழில்கள் மூலமும் பெறவேண்டும். பெரிய தொழிற்சாலைகள் மூலம் 1000 பேருக்கு வேலை கிடைப்பதைக் காட்டிலும், இலட்சம் பேருக்குச் சுயவேலைவாய்ப்புத் திட்டம் மூலம் ஏற்றம்பெற அரசு திட்டம் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

"1980இல் முதல்வர் அவர்கள் கூறிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் வரவேற்று இந்தியா முழுவதும் செயல்படுத்தி வருகிறார்கள். மக்களாகிய நீங்கள் இன்று பெறும் கடன், வாழ்வில் ஒளி வீசித் திகழ அடிக்கல் நாட்டுவது போன்றதாகும் இத்திட்டம்.

"ஒவ்வொருவரின் தகுதி, திறமைக்கு ஏற்ப இத்திட்டம் மூலம் கடன் உதவி வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் மூலம் வறுமையைப் போக்க முடியும்" என்றார்

விழா இறுதியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு எம். சிகப்பதுல்லா நன்றி கூறினார்.

**—அ. மருதவிநாயகம்**

**காது வழிக் கல்வி**



**விழியிழந்தோர் காதில் தேனாக ஒலிக்க ஒரு கம்ப்யூட்டர் அமெரிக்காவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது அச்சில் அல்லது தட்டச்சில் (Printed or Typewritten) உள்ளவற்றைப் பேச்சாக மாற்றிப் பார்வையற்றவர்களுக்குச் செவிச் செல்வம் வழங்கும்.**

**மேஜையின் மீது வைத்துக் கொள்ளக் கூடிய அளவுக்குச் சிறிதானது. இதன் கண்ணாடிப் பரப்பில் படிக்க வேண்டியதை வைத்து விட்டால் போதும். அதில் உள்ள செய்திகள் ஒலி வடிவில் கிடைக்கும். பேச்சின் வேகத்தைத் தேவைக் கேற்பக் கூட்டவும் குறைக்கவும் வழி செய்யப்பட்டுள்ளது. கேட்டதையே மீண்டும் உடனே திரும்பக் கேட்கலாம். சொற்களின் எழுத்துக் கூட்டமைப்பையும் நிறுத்தல் குறியீடுகளையும் (Spelling and Punctuation) எடுத்துச் சொல்லும்.**

**—அமெரிக்கத் தகவல் நிலையம்**

# தரமான உணவுப்பொருள் கிடைத்திட...

தமிழ்நாட்டின் தென் கோடியில் அமைந்துள்ளகுமரிமாவட்டத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்கீழ் ஐந்து பெரிய உணவுப் பொருள்கள் சேமிப்புக்கிட்டங்கிகளும், உணவுப் பண்டங்களைப் பொதுவினியோக முறையில் வியாபாரம் செய்ய 85 மாதிரிக் கடைகளும், 2 கிராம அங்காடியும் சிறப்புற இயங்கி வருகின்றன. இம்மாதிரிக் கடைகளில் குடும்ப அட்டை வழங்கப் பட்டவர்களுக்கு உணவுத் தானியங்கள், மற்றும் தேவையான பண்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், கிட்டங்கிகளிலோ மாதிரிக்கடைகளிலோ விநியோகிக்கப்படும் உணவுத் தானியங்களின் தரத்தை தரக்கட்டுப்பாட்டு அலுவலர்கள் பரிசோதித்து சான்றிதழ் அளித்த பிறகே பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது.

மேலும், தமிழக அரசின் முக்கியத் திட்டங்களில் ஒன்றான காவலர் நல்வாழ்வுத் திட்டங்களின்கீழ் காவலர்களுக்கு இந்நிறுவனத்தின் மூலம் மானியத் தொகை அடிப்படையின் கீழ் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்படித் திட்டத்தின்கீழ் தீயணைப்புக் காவலர்களுக்கும் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் தமிழக அரசின் மூலம் ஓய்வு ஊதியம் பெறுகின்ற முதியவர்களுக்கும், விதவைகளுக்கும், ஊனமுற்றவர்களுக்கும் "இலவச அரிசி" இந்நிறுவனத்தின் மாதிரிக் கடைகள் மூலமும் கூட்டுறவு சில்லறை விற்பனை அங்காடிகள் மூலமும் வாரந்தோறும் அரிசி இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. 1980ஆம் ஆண்டுமுதல் இத்திட்டம் சீராகச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 1982-83ல் 189 மெ.டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தில், இந்நிறுவனம் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்நிறுவனம் மூலம் குழந்தைகளுக்கு நல்ல தரமான அரிசி, பருப்புவகைகள் மற்றும் சமையல் எண்ணெய் 1982 ஜூன் முதல் சத்துணவு மையங்களுக்கு வழங்கப்பட்டு மிகவும் வெற்றிகரமாக இத்திட்டம் செயலாற்றப்பட்டு வருகின்றது. 1982 ஜூன் முதல் 1983 மார்ச் முடிய இந்நிறுவனத்தின் மூலம் இம்மாவட்டக்கில் மட்டும் வழங்கப்பட்ட அரிசி, தானியங்களின் அளவுகீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

மொத்தம் இயங்கும் சத்துணவு மையங்கள் 1220. அரிசி 5227 மெ.டன், பருப்பு வகைகள் 792 மெ.டன், சமையல் எண்ணெய் 354 மெ.டன்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மக்களுக்கு இன்றியமையாத வகையில் உணவுப்பொருட்களைச் சீராக வழங்கி லெவி சந்தை விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தியும் சேவை செய்கிறது.

இம்மாவட்டத்தில் இயங்கி வருகின்ற அரசு தலைமை மருந்தகம் நாகர்கோவில் மற்றும் தக்கலை, குழித்துறையில் அமைந்திருக்கும் அரசு மருத்துவமனைக்கு இந்நிறுவனத்திலிருந்து அத்தியாவசியப் பண்டங்கள் கடனாக வழங்கப்பட்டு வருகின்றன. துணைச் சிறைச்சாலை, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் நலப்பிரிவின்கீழ் இயங்கி வரும் மாணவ மாணவி விடுதிகளுக்கும், போக்குவரத்துத் துறைகளுக்கும் இந்நிறுவனத்திலிருந்து அத்தியாவசியப் பண்டங்கள் கடனாக வழங்கப்பட்டு வருகிறது.



மேலும், இந்நிறுவனத்தின்கீழ் அண்ணா பேருந்து நிலையத்தின் அருகில் அமைந்திருக்கும் காமராசர் ஐந்து மாடி கட்டடத்தில், இந்நகரத்தின் மையப்பகுதியில் அமுதம் சிறப்பு அங்காடி இயங்கி வருகிறது. மக்களுக்கு அன்றாடத் தேவையான பலசரக்குச் சாமான்கள், அழகு சாதனங்கள், குழந்தைகள் உணவுகள், மற்றும் இதர சரக்குகளும் மலிவான விலையில் நல்ல தரமான பொருட்களை வழங்கி நல்ல பெயரை ஈட்டி வருகின்றது. இச்சிறப்பு அங்காடியிலிருந்து அரசு நிறுவனங்களுக்கும் ஏனை பொது நிறுவனங்களுக்கும் கடனாகப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மாதத்திற்கு 2 இலட்சத்திற்கு மேல் இந்த அங்காடியில் மொத்த விற்பனை எட்டுகிறது என்பதிலிருந்து, இந்த அங்காடி பொதுமக்களிடம் நன்மதிப்பைப் பெற்று திகழ்கிறது என்பதற்குத் தக்க சான்றாகும்.




## விருப்புறுதிச் சட்டம் (உயில்கள்)

**ஆசிரியர்:** சோ. சேசாசலம்

**வெளியீடு:** புனிதா இல்லம்,
சி.413, பெரியார் நகர்,
சென்னை-82.

**விலை:** ரூ. 15.00 **பக்கம்:** 134

ஆங்கிலத்தில் WILL என்று சொல்லப்படும் ஆவண வகை உயில் என்று ஒரு காலத்தில் வழங்கப்பட்டு, தற்போது விருப்புறுதி என்று குறிப்பிடப்படுகிறது.

விருப்புறுதி என்றால் என்ன, அதன் சிறப்பம்சங்கள் யாவை, விருப்புறுதிக்குரிய இன்றியமையாத் தேவைகள் எவை ஆகிய தகவல்களையும், விருப்புறுதி தோன்றிய காலம்-அது படிப்படியாகச் சட்டமாக்கப்பட்ட ஆண்டு, விருப்புறுதி தோன்றிய வரலாறு ஆகியவற்றையும் இனிய எளிய நடையில் விளக்கமாக எழுதியிருக்கிறார் நூலாசிரியர்.

விருப்புறுதியின் இலக்கணத்தை விவரித்துள்ள ஆசிரியர், எவை எவை விருப்புறுதி ஆகா என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்ற உயர் கொள்கைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இந்நூல், சட்டக் கல்வியைத் தமிழில் கற்றுத்தர இயலும் என்னும் கருத்தரங்கு அரணாக அமைந்துள்ளது.

## அந்தக் கிராமத்திலே

**ஆசிரியர்:** தோப்பூர் திருவேங்கடம்

**வெளியீடு:** தென்புலம்
16, அமிர்தலிங்கசாமி சன்னதி தெரு.
வேலூர்,
வடஆர்க்காடு மாவட்டம்.

**விலை:** ரூ. 5.00 **பக்கம்:** 92.

கவிஞன் சொல்ல வந்த கருத்தைக் கவிதையில் வடிக்கிறான். ஓவியன் வண்ணத்தில் தீட்டுகிறான். அதைப்போல நாவலாசிரியன்-நவீனத்தின் வாயிலாகத் தனது கருத்துக்களை எடுத்துரைக்க முற்படுகிறான். இந்த வகையில் அரிய செய்திகளை-தகவல்களை-பொது அறிவுக் கருத்துக்களை எல்லாம் இந்த நவீனத்தின் மூலம் ஆசிரியர் எடுத்துக் கூறியுள்ளார். பல்வேறு பிரச்சினைகளைப் பாத்திரங்களின் மூலம் விவாதிக்க வைத்துத் தக்க விடைகளையும் கூறுகிறார்.

திருக்குறள் இந்நவீனத்தில் சிறப்பிக்கப்பட்டிருக்கிறது. சீர்திருத்தத் திருமணம் வாழ்த்தப்படுகிறது. தாவர உணவு போற்றப்படுகிறது. பெண்ணின் பெருமை புகழப்படுகிறது. நூலாசிரியர் கையாண்டுள்ள எளிய, இனிய நடை—சுவையாக இருக்கிறது.

—தமிழ்ப்பித்தன்

## நம் நாட்டுக் கீரைகள்

**ஆசிரியர்கள் :**
கே. பாலசுப்பிரமணியன்,
கே. கருப்பஞானி

**வெளியீடு :**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை-98.

**விலை:** ரூ. 8-00 **பக்கம் :** 126

ஒவ்வொரு நாளும் கீரையைத் தங்கள் உணவில் தவறாது சேர்த்துக் கொள்ளும் கீரைப் பிரியர்கள் இருக்கிறார்கள். என்னென்ன கீரையில், என்னென்ன உயிர்ச் சத்துகள் இருக்கின்றன, உடலில் உள்ள எந்தச் சத்துக் குறைவைக் கீரைகள் சமன் செய்கின்றன என்பன போன்றவற்றை அவர்கள் அறியாவிட்டாலும் கீரை உண்பது உணவுக்காக மட்டுமல்ல உடலாரோக்கியத்துக்காகவும் தான் என்ற முழு நம்பிக்கை அவர்களிடம் உண்டு.

அது பொய் அல்ல முற்றிலும் உண்மை என்பதை ஆதாரத்தோடு விளக்குகிறது 'நம்நாட்டுக் கீரை வகைகள்' என்ற இந்நூல்.

இருபத்தேழு கீரை வகைகளையும், அவற்றின் ரகங்களையும், பயிரிடும் முறையையும், இவற்றின் மருத்துவக் குணங்களையும், அவை தோன்றிய வரலாற்றையும் மட்டுமல்ல, இலக்கியங்களிலுள்ள இவை பற்றிய குறிப்புகளையும் தந்திருப்பது பாராட்டுக்குரியது.

கீரைகளைப் பற்றி அதுவும் நம்நாட்டுக் கீரைகளைப் பற்றி மட்டுமே ஒரு நூலை உருவாக்கி இருப்பது போற்றத்தக்க முயற்சியே.

'கீரைகளைச் சாப்பிடுவதைத் தாழ்வாகக் கருதும் நிலை மாற வேண்டும்' என்று இதன் ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அத்தகைய கருத்துக் கொண்டோர் இருப்பின் இவ்வரியநூல் அவர்கள் கருத்தை நிச்சயமாக மாற்றிவிடும்.

அ. மருது

## இலங்கைப் படுகொலை

**ஆசிரியர் :**
பேராசிரியர் க. பெருமாள்

**வெளியீடு :**
வான்மழைப் பதிப்பகம்,
20, புருசோத்தமர் தெரு,
லேக் ஏரியா, சென்னை-34.

**விலை:** ரூ. 10 **பக்கம் :** 210

அண்மையில் நடந்த இலங்கைப் படுகொலை உலகத்தையே உலுக்கிவிட்ட ஒரு துயர நிகழ்ச்சியாகும். அங்கு நடந்த அக்கிரமங்கள் கண்டு தமிழினமே இரத்தக் கண்ணீர் வடித்தது. ஏடுகளெல்லாம் இதயம் கலங்கின. இந்த நிகழ்ச்சியெல்லாம் அறிந்து ஆசிரியர் வேதனையுறுகிறார்; விம்மி அழுகிறார். இதயத்தின் அடித்தளத்திலிருந்து பீறிட்டு எழும் துயரங்களை வெளிப்படுத்துகிறார். அதுவே நூலாக வடிவெடுத்திருக்கிறது.

இந்நூல் இலங்கைப் படுகொலையைக் கண்டிப்பது மட்டும் அல்ல. இலங்கைக்கும் நமக்கும் உள்ள உறவை, அங்குள்ள தமிழ் மக்கள் இலங்கை தழைத்தோங்கப் பட்ட அரும்பாட்டை, அந்த நன்றியுணர்வு சிறிதுமில்லாமல் படுகொலை புரிந்திட்ட மாபாதகங்களை அப்படியே இந்நூலில் படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

இந்நூலில் கண்ணீர்க் காவியமே பாடியிருக்கிறார் ஆசிரியர். கவிதை வரிகள் நம் நெஞ்சைக் கலக்குகின்றன; கட்டுரைகளோ ஆசிரியரின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை எடுத்துக் காட்டுகின்றன.

—பி. வி. ஜி.



நல்ல காற்றைச் சுவாசிப்பதென்பது நகர்ப்புற மக்களுக்கு, குறிப்பாக வேகமாக வளர்ந்து வரும் பெருநகரங்களில் மிகவும் அரிய ஒன்றாக ஆகிவிட்டது.

உயிரினங்கள், தாவரங்கள் மனிதனுக்கு நெருக்கமாக இருந்த காலம் ஒன்று இருந்தது. இயற்கையின் செறிவு, மனித இனத்தைப் போற்றி வந்தது. நவீனமயம், நகர்ப்புறத் தொழில்மயம்மற்றும் அதிகரித்து வரும் மக்கள்தொகை ஆகியவற்றின் விளைவாக இயற்கை பல்வேறு வழிகளில் நாசமாகியது.

அசுத்தக் கேட்டின் விளைவாக நாட்டின் விலைமதிப்பற்ற செல்வங்களை நாம் இழந்துள்ளோம். வன விலங்குகளில் சிறுத்தை இனத்தை நாம் முழுமையாக இழந்துவிட்டோம். பறவைகளில் 500 இனங்கள் தற்போது இல்லை. எண்ணற்ற தாவரங்களையும, பூக்களையும் நாம் நிரந்தரமாக இழந்துவிட்டோம்.

சுற்றுப்புறச் சூழ்நிலையின் முக்கியத்துவத்தை மனிதன் அசட்டை செய்ததே இதற்குக் காரணம். அணு ஆயுதப் போரைவிட, சுற்றுப்புறச் சூழ்நிலைக் கேடுதான் படிப்படியாக மனித நாகரிகத்தினை அழிக்க வல்லதாக உள்ளது.

நகரங்கள, தொழில்களின் தாறுமாறான வளர்ச்சி, சுதந்திரமான நீர் வழிகள் மற்றும் வன விலங்குப் பகுதிகள் அழிவு ஆகியவையே நாகரிகங்கள் அழியக் காரணம் என்று வரலாறு நிரூபித்துள்ளது.

விமான தளம், சுரங்கங்கள், இரசாயன ஆலைகள், அனல் மின் ஆலைகள் மற்றும் காடுகள் அழிப்பு போன்றவற்றில் ஈடுபாடு கொண்டுள்ள தொழில் மய, சமுதாயம், கட்டடக்கலை மற்றும் நினைவுச் சின்னங்களை மெதுவாக அழித்து வருகின்றது.

நாட்டின் கலாசார அழிவினை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டியது மிகமிக அவசியம். இந்திய அகழ்வாராய்ச்சி அமைப்பின்கீழ் 5,000 நினைவுச் சின்னங்களும், மாநில அரசு பராமரிப்பின்கீழ் 10,000 நினைவுச் சின்னங்களும், பாதுகாக்கப்படாத மேலும் 30,000 நினைவுச் சின்னங்களும் நாட்டிலே உள்ளன.

நினைவுச் சின்னப் பகுதிகளிலும், இவற்றைச் சுற்றிலும் துரித கதி நகர்ப்புற மயம் மற்றும் தொழில் மயத்தின் விளைவாக இவை பெரும் ஆபத்துக்குள்ளாகி உள்ளன. தாஜ்மகால் இதற்குச் சிறந்த உதாரணம். இத்தகைய சுற்றுப்புறச் சூழ்நிலைக்கேட்டை தவிர்க்க நாம் அனைவரும் முயல வேண்டும்.

இதுபோலவே, கடற்கரைப் பகுதிகள் மற்றும் வனவிலங்குப் பகுதிகளும் மனிதனின் தவறான போக்கினால் பாழ்பட்டுள்ளன.

சமீபத்தில் உயிரின வாழ்க்கை சமத்துவத்தினைப் பராமரிக்க வேண்டும் என்ற நாடு தழுவிய உணர்வு ஏற்பட்டுள்ளது. சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பராமரிக்கவும், சுதந்திரமான பகுதிகளில் அசுத்தக் கேட்டைத் தடுக்கவும், புதிய ஆர்வத்தினை இது தூண்டி உள்ளது.




உயிரின வளப் பாதுகாப்பு, தாவர வகை பராமரிப்பு மற்றும் உயிரின வாழ்க்கைச் சமத்துவத்தைப் பேணுவதன் நோக்கங்களுக்காக 12 உயிரின சரணாலயங்களை ஏற்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

# ரோஜா நகரம் சண்டிகார்





சென்னையில் நடைபெறும் 11வது சுற்றுலா, தொழில்பொருட் காட்சியில், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு பற்பல மாநிலங்கள் புதிதாகக்கலந்து கொண்டுள்ளன. அவற்றில் பஞ்சாப் மாநிலமும் ஒன்று.

சண்டிகார் தொழில் மற்றும் பொது வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள சண்டிகார் அரங்கு பல்வேறு தகவல்களை வழங்கும் அரங்காகத் திகழ்கிறது. பஞ்சாப் மாநிலத்தின் சிறப்பம்சங்கள் பலவற்றை அரங்கில் உள்ள வண்ணப் புகைப்படங்கள் எடுத்துக் கூறுகின்றன.

மாநிலத்தின் தலைமைச் செயலகக் கட்டடம், நீதிமன்றக் கட்டடம் - சட்டமன்றக் கட்டடம் ஆகியவை நவீன காலக் கட்டடக் கலைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றன. உடைந்த வளையல்கள், பயனற்ற குழல் விளக்குகள், உடைந்த பீங்கான் பொருட்கள் ஆகியவற்றைக் கொண்டு அமைக்கப்பட்ட பொம்மைகள் நிறைந்த பாறைத்தோட்டம் - சுற்றுலாப் பயணிகளையும் கலை அன்பர்களையும் மிகவும் கவர்கின்றது.

ரோஜாத் தோட்டம், சுகுனா ஏரி, அரும்பொருட்காட்சியகம், தேசிய புகைப்படக் கலைக் கூடம், பஞ்சாப் பல்கலைக் கழகம், காந்திபவன், நீச்சல் குளம், தாவர இயல் தோட்டம் ஆகியவை இம்மாநிலத்தின் சிறப்பம்சங்கள். இவை சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்ந்து வருகின்றன.

'சண்டிகார் ஓட்டல் மவுண்ட் வியூ' என்னும் ஓட்டலின் வண்ணப் புகைப்படம் இந்த அரங்கில் இடம் பெற்றுள்ளது. ஏறக்குறைய 10 ஏக்கர் பரப்பளவில்-அழகான புல்வெளித் திடலுடன் கூடிய இந்த ஓட்டல், நகரின் சிறப்பம்சமாகும். சண்டிகார் தொழில் மற்றும் பொது வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகத்தில் இயங்குகிறது இந்த உணவு விடுதி. இந்தக் கழகம் கோல்ப் விளையாட்டுக் குழு ஒன்றினையும் நடத்தி வருகிறது.

இந்தக் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் 'யாத்ரி நிவாஸ்' என்னும் சுற்றுலா விடுதி, சுற்றுலாப் பயணிகளின் பொருளாதாரநிலைக்கு ஏற்ப உருவாக்கப்பட்டுள்ளது. அறையின் வாடகை 25 ரூபாயிலிருந்து 40 ரூபாய் வரை ஆகிறது. முழுச் சாப்பாட்டின் விலை ரூ. 5 தான்.

தொழில் வளர்ச்சி-மற்றும் வசதி மையம், காலணிப்பொருள் தயாரிப்புப் பயிற்சி மற்றும் உற்பத்தி மையம் ஆகியவற்றால் உருவாக்கப் பெற்ற பொருள்கள் இந்த அரங்கில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

சண்டிகார் அரங்கினைப் பார்க்கும்போது சண்டிகாருக்கே சென்று வந்த நிறைவு ஏற்படுகிறது.

—தமிழ்ப்பித்தன்





சுக்னா ஏரி



தலைமைச் செயலகம்





பாறைத் தோட்டம்



# கேரள நாள்



அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் அறிஞர் அண்ணா கலையரங்கில் 7-2-84 அன்று 'கேரள நாள்' மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்த விழாவினையொட்டி நடந்த கலைநிகழ்ச்சித் தொடக்க விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

''மத்திய அரசு உலகச் சுற்றுலாப் பயணிகளுக்குக் காஷ்மீரையும், டெல்லியையும் மற்றும் அதைச் சுற்றி 500 மைல் தூரத்தில் அமைந்துள்ள சுற்றுலா மையங்களையும் மட்டுமே விளம்பரப்படுத்துகிறது. தங்கள் பகுதிக்கும் போதிய விளம்பரம் அளிக்க வேண்டும் என்று தென் மாநிலங்கள் இணைந்து பலமுறை கோரிய பின்பும் போதிய விளம்பரத்தை மத்திய அரசு அளிக்கவில்லை. தென் மாநிலங்களில் உள்ள தொன்மை வாய்ந்த கலைகள், சிற்பங்கள், பண்பாடு ஆகியவற்றைப் புறக்கணிப்பது நல்லதல்ல.''

விழாவிற்கு மாண்புமிகு கேரள மாநில சுற்றுலா மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் திரு கே. பி. இராமச்சந்திரன் நாயர் அவர்கள் தலைமை வகித்தார். அவர் பேசுகையில், 'மாலத் தீவு' இலங்கை மற்றும் இந்தியாவின் தென் மாநிலங்களை இணைக்கின்ற சுற்றுலாத் திட்டத்தை உருவாக்கினால் அதிகச் சுற்றுலாப் பயணிகளைக் கவரமுடியும்' என்று கூறினார்.

சிறப்பு விருந்தினராக மாண்புமிகு தமிழ்நாடு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில், 'சுற்றுலாத் துறைக்கு மத்திய அரசு அளிக்கும் நிதி உதவி போதாது' என்று தெரிவித்தார். விழாவில், மாண்புமிகு கேரள அமைச்சருக்கு தஞ்சாவூர்த்தட்டு ஒன்றை நினைவுப் பரிசாக, மாண்புமிகு நிதியமைச்சரும், மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சரும் வழங்கினார்கள்.

தொடக்கத்தில் கேரளச் சுற்றுலாத் துறை இயக்குநர் திரு. ஹரி கிருஷ்ணன் நாயர் வரவேற்றார். நிர்வாக இயக்குநர் திரு எஸ்.கே. பிள்ளை நன்றி நவின்றார்.

முன்னதாக, பொருட்காட்சியில் அமைந்துள்ள தமிழ்நாடு ஓட்டலில் மாண்புமிகு கேரள அமைச்சர் திரு கே. பி. இராமச்சந்திரன் நாயர் அவர்கள் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார். அப்பொழுது அவர், ''கேரளாவில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திட கொல்லம், ஆலப்புழை, எர்ணாகுளம் ஆகியவற்றுக்கிடையே நீர்நிலை வழியாகப் படகுப் போக்குவரத்தை அதிகரிக்க கேரள அரசு தீர்மானித்துள்ளது. சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது போல, கேரள சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தகவல் அலுவலகங்கள் தில்லி, பம்பாய் போன்ற இடங்களில் விரைவில் அமைக்கப்படும்'' என்றார்.

கேரள நாளையொட்டிக் கலையரங்கில் நடந்த கதகளி, மோகினி ஆட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகள் எல்லாரையும் வெகுவாகக் கவர்ந்தன.

—பி. வி. ஜி.

# மயிலாடி

## சிற்பக் கலைக்கூடம்

கன்னியாகுமரி மாவட்டம் மயிலாடியில் கற்சிற்பத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று உள்ளது.

நாகர்கோவிலிலிருந்து சுமார் 10 மைல் தொலையில் உள்ள இது, 1958லிருந்து இயங்கி வருகிறது. தமிழக அரசு இதற்கு ரூ. 15 ஆயிரம் நன்கொடை வழங்கியுள்ளது.

இந்தச் சிற்பக் கூடத்தில் 25 பேர் பணியாற்றுகிறார்கள். இங்கு கடவுளர் சிலைகள், முக்கியத் தலைவர்களின் திருவுருவங்கள் ஆகியவை உருவாக்கப்படுகின்றன. இவையன்றி மெருகேற்றப்பட்ட கற்களைக் கொண்டு கோவில்களைக் கட்டவுமான பணிகள் நடைபெறுகின்றன. கன்னியாகுமரி மற்றும் கேரள மாநிலத்திலும் கோயில்களுக்கான சிலைகள் உருவாக்கித் தருவதற்கான ஆர்டர்கள் தொடர்ந்து கிடைத்து வருகின்றன.



நாகர்கோயில், திருநெல்வேலி, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் தந்தை பெரியார் நினைவுத் தூண்களையும், திருவனந்தபுரத்தில் உள்ள நேதாஜி சிலை, பட்டம் தாணுப்பிள்ளை சிலை ஆகியவைகளையும் இக்கூடமே தயாரித்திருக்கிறது.

உட்கார்ந்திருக்க நிலையில் உள்ள திருவள்ளுவர் சிலை ஒன்று முடிவுறும் தறுவாயில் இருப்பதைப் பார்க்கிறோம்.

மேலும் திருவள்ளுவர் சிலை (மெரீனா கடற்கரை சென்னை), சுவாமி விவேகானந்தர் சிலை (கன்னியாகுமரி), வீரபாண்டிய கட்டபொம்மன் சிலை (கயத்தாறு), மார்ஷல் நேசமணி சிலை (நாகர்கோயில்), குஞ்சன் நாடார் சிலை (நாகர்கோயில்), பெருந்தலைவர் காமராசர் சிலை (கீழப்பாவூர்), பேரறிஞர் அண்ணா சிலை (களக்காடு), சா. கணேசன் சிலை (காரைக்குடி), சங்கரதாஸ் சுவாமிகள் சிலை (மதுரை), மகாபலிபுரம் சிற்பக்கலைப் பயிற்சி நிலையக் காட்சி மண்டபம், அசோக ஸ்தூபி (மதுரை), பகவதி கோவில் (ஆல்வாய்) முதலானவற்றை, மயிலாடி சிற்பக் கலைக் கூடத்தின் மகிமைக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

# ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமாவது வறுமையை ஒழிப்பதற்கான திட்டமாகும்.

இது மத்திய அரசின் புதிய இருபதம்சத் திட்டத்தில் தனி முக்கியத்துவம் அளிக்கப்பட்டு செயல்படுத்தப்படும் ஒரு சிறந்த திட்டமாகும். இத்திட்டத்தின்படி ரூ. 3,500-க்குக் குறைவான நிகர ஆண்டு வருமானம் உள்ள குடும்பங்கள்வறுமைக்கோட்டிற்குக்கீழ்வாழும் குடும்பங்களாகக் கருதப்படுகின்றன. மேற்படி குடும்பங்களுக்கு நிரந்தரமான சொத்து உருவாக்கி அதன் மூலம் வருமானத்தை அதிகரித்து அவர்களை வறுமைக்கோட்டிற்கு மேல் கொண்டு வருவதே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் குறிக்கோளாகும். இதற்காக மேற்படி குடும்பங்களுக்கு வங்கிகளின் மூலம் கடன் ஏற்பாடு செய்து கடனில் ஒரு பகுதி மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம் மூலம் மானியமாக வழங்கப்படுகிறது. மலைவாழ் மக்களுக்கு வழங்கப்படும் மானியம் 50 சதவிகிதம் ஆகும்.

1983-84-ல் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தலா 600 வீதம், குமரி மாவட்டத்தில் மொத்தம் 5,400 குடும்பங்கள் பயன்பெற தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் தலா ரூ. 8 இலட்சம் வீதம் ரூ. 72 இலட்சம் இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையைக் கொண்டு நடப்பு ஆண்டு புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட 5,400 ஏழைக் குடும்பங்களுக்கு உதவியளிப்பது மட்டுமின்றி மூன்றாண்டுகளில் உதவிபெற்ற ஏழைக்குடும்பங்கள் வறுமைக்கோட்டைத் தாண்டும் முகத்தான் அவர்களுக்கு இரண்டாவது உதவியளிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. இதற்காக மாவட்டத்தில் மொத்தம் 2,355 குடும்பங்களுக்கு ரூ. 17.10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 5,400 குடும்பங்களுக்காக மொத்தம் ரூ. 55.27 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத்திட்டத்தில் பயனடையும் 5,400 குடும்பங்களில் 1,955 குடும்பங்கள் (36 சதவிகிதம்) ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் குடும்பத்தைச் சார்ந்தவர்கள்



நோயற்ற வாழ்வுக்கு நோய்த் தடுப்பு தேவை. 1983 ஏப்ரல் 7-ஆம் நாள் உலக நல்வாழ்வு தினமாகக் கொண்டாடப்பட்டது. கி.பி. 2000 ஆண்டில் எல்லாருக்கும் நோயற்ற நல்வாழ்வு தருவதே நமது குறிக்கோள். அதன் அடிப்படைப் பணியாக, நாளைய மலர்களாகிய இன்றைய அரும்புகளுக்கு நோய் பரவாமல் தடுக்க முன் நடவடிக்கை எடுக்க வேண்டியது நமது கடமை.

இப்பணியின் அடிப்படையாக, நாகர்கோவில் நகராட்சி நலத்துறையினரால், முதன் முறையாக 1200 குழந்தைகளுக்குத் தட்டம்மைத் தடுப்பூசி போடப்பட்டது. தட்டம்மைத் தடுப்பூசி மருந்து கிடைப்பதற்கு அரிதானதும், விலை அதிகமானதும் ஆகும். அம்மருந்தை கனடா நாட்டிலிருந்து தருவித்துக் குழந்தைகள் மேம்பாட்டுக்காக. நாகர்கோவில் சுழற்கழகம் இலவசமாக வழங்கி உதவினர்.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்களின் குழந்தைகளுக்கு உணவு அளிப்பதோடு தன் பணிகளை முடித்துவிடாமல், அவர்களுக்கு நல்லொழுக்கம் கடைப்பிடிக்க உதவவும் நோய் வராமல் தடுக்கவும் முன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்களில்உள்ள 1665 குழந்தைகளுக்கும், 21.11.83 முதல் 25.11.83 வரை முந்நோய்த் தடுப்பூசி, இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து வழங்கப்பட்டதுடன், குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து மருந்தும் வழங்கப்பட்டது. குழந்தை வளர்ப்பு, சுகாதாரக் கல்வி தாய்ப்பாலூட்டலின் மேன்மை ஆகிய அறிவுரைகளும் வழங்கப்பட்டன.

தமிழகத்திலேயே முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்களில், முதன் முறையாக இந்நகராட்சியில்தான் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

இக்குழந்தைகளுக்கு இரண்டாம் முறை மூன்றாம் முறை தடுப்பூசி மற்றும் இளம்பிள்ளை வாத மருந்துகள் 26.11.83 முதல் 30.11.83 வரையும், 22.1.84 முதல் 31. .84 வரையும் வழங்கப்பட்டன.

## நகராட்சியின் நற்பணி



# கிராமிய வீட்டுவசதித் திட்டம்

எறும்பு முதல் யானை வரை அனைத்து உயிரினங்களும் உணவிற்காக மட்டும்பாடுபடுகின்றன. ஆனால் பகுத்தறிவு பெற்ற மனிதர்கள் உணவு, உடை, உறைவிடம் ஆகியமூன்று அடிப்படைத் தேவைகளையும் உணர்ந்து உழைக்கத் துவங்கினார்கள்.

மக்கள் தொகை அதிகரிக்கும் முன்னதாக உறைவிடத்திற்கு அத்தகைய முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. எண்ணற்ற குடும்பங்கள் நிலச் சுவான்தார்களின் காலி மனைகளில் குடிசைகள் போட்டு வாழத் துவங்கினார்கள். இதற்கு முக்கிய காரணம், முன் காலங்களில் போதிய தொழில் இன்மையேயாகும். எனவே, நிலச்சுவான்தார்களின் நிலத்தில் வேலை செய்து கிடைக்கின்ற கூலியை நம்பி வாழ வேண்டியிருந்தது. குடிசைவாழ் ஏழை மக்கள் ஓரளவிற்குக் கொத்தடிமைகளாகவே வாழ்ந்தனர். நிலத்தின் மதிப்பு ஏறியதும் அத்தகைய குடிசைவாழ் ஏழை மக்களை அகற்ற நிலச்சுவான்தார்கள் முன்வந்தனர். அரசின் அரவணைப்பில் குடிசைவாழ் மக்களை அப்புறப்படுத்தாமலிருக்க சட்டம் வந்தது. அரசு, வீட்டு மனைக்கு இலவசப் பட்டா வழங்கத் துவங்கியது. ஆயினும் சாலை ஓரம், ஏரி ஓரம், கால்வாய் ஓரம் போன்ற பொது வசதிக்கான அரசு மனைகளிலும், நத்தம் பூமியிலும் குடிசை போடுதல் அதிவிரைவில் தொடர்ந்து பரவி வருகிறது. இதனைக் கட்டுப்படுத்தவும், ஏழை குடிசைவாழ் மக்களுக்கு வீட்டுவசதி அளிக்கவும் அரசு முன்வந்து திட்டங்கள் தீட்டியது.

தமிழகத்தில் கூட்டுறவு வீட்டு வசதி தேவைக்கேற்ப இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்று நகரவீட்டுவசதி, மற்றொன்று கிராமிய வீட்டுவசதி. இம்மாவட்டத்திலுள்ள இருதரப்பு, கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களும் உறைவிடம் அற்றவர்களுக்காகவே சேவை செய்கின்றன.

நகர கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களில் தமிழகத்திலேயே மிகச் சிறந்த சேவை செய்து 2 தடவை முதற் பரிசு தேடித்தந்த புகழ், நாகர்கோவில் கூட்டுறவு வீட்டுவசதிசங்கத்தினைச் சாரும். இ.சங்கம் 1963ல் துவங்கி தற்போது மூன்று குடியிருப்புகளில் 541 குடும்பங்களுக்கு உறைவிடம் அளித்து, தன் அலுவலகத்திற்காக 3 அடுக்குமாடி கட்டடத்தையும் கட்டி வெற்றி நடைபோடுகிறது.

வறுமைக்கோட்டிற்குக் கீழ், பொருளாதாரத்தில் நலிந்தவர்கட்கு உறைவிடம் அளிக்க அரசு ஏற்படுத்திய திட்டம் ''கிராமிய வீட்டுவசதித் திட்டம்.'' இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தில் 2 இலட்சம் வீடுகள் கட்ட திட்டமிட்டு முடிக்கப்பட்டுள்ளது. அனைத்தும் கூட்டுறவு மூலம் கட்டப்பட்டதனால் முதலீட்டிலும், செயல்முறையிலும் அரசுக்குப் பேருதவியாக உள்ளது. கடன் வழங்குவதிலும், கடனைப் பயன்படுத்துவதிலும் ஜனநாயக முறை கையாளப்படுகிறது. குமரி மாவட்டத்தில் இத்திட்டத்தில் 3 கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் வாயிலாக 1445 ஆதிதிராவிடர்களும், 1615 ஆதிதிராவிடர் அல்லாத மற்றவர்களும் வீடுகள் கட்டியுள்ளனர். கிராமிய வீட்டுவசதிக் கூட்டுறவு மூலம் அமல்படுத்தப்படுவதால் வீடு கட்டுவதில் சொந்தக்காரரின் முதலீடும் உழைப்பும் பயன்படுத்தப்பட்டு விருப்பப்படியே வீடு கட்டப்படுகிறது.

வாழ்க்கையில் வசதியற்றவர்கட்குக் குறிப்பாக, ஆதிதிராவிடர்கட்கு தமிழக அரசு இலவசமாக வீட்டுமனை வழங்குகிறது. ஆதிதிராவிடர்கள் அதிகமாக வாழுகிற பகுதிகளில் இத்தகைய பட்டாக்கள் வழங்கப்படுகிறது. அத்தகைய வீட்டுமனைகள் அமைந்த குடியிருப்பில் குடிநீர் வசதி, மின்வசதி, வானொலி போன்றவைகள் அரசு இனாமாக ஏற்படுத்திக் கொடுக்கிறது. அனைவரும் கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தில் கடன் பெற்று வீடுகள் கட்டுகின்றனர். இதில் உழைப்பாகவும் பணமாகவும் தத்தம் முதலீடு செய்ய வசதி உண்டு. குமரி மாவட்டத்தில் 30 ஆதிதிராவிடக் குடியிருப்புகளில் கூட்டுறவு மூலம் 408 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

நகரப்பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் வீடு இல்லாதவர்கட்கு வீடுகட்டுவதற்குப் போதிய உதவி அளித்து அப்பகுதிகளை நவீனமாக்குகிறது. விளவங்கோடு வட்ட ஆறுகாணி, பத்து காணி போன்ற மலைப் பகுதியிலுள்ள மலைவாழ் மக்கள் வட்டக் கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தில் கடன் பெற்று மலைச் சரிவுகளில் புல், மூங்கில் இலைகளைக் கொண்டு கூரை அமைத்திருந்த குடிசைகளை அகற்றி, ஓட்டு கூரை அமைத்து அழகிய வீடுகள் கட்டி மகிழ்ச்சியுடன் வசிக்கின்றனர். அவர்கள் தமது கடனைத் திருப்பிச் செலுத்துவதிலும் மிகக் கண்டிப்பாக இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கூட்டுறவுக் கடன் பெற்று வீடு கட்டுவதனால் பல கோணங்களில் இலாபமும், வாழ்க்கையில் நிம்மதியும், சமுதாய ஒற்றுமையும் பேணப்படுகிறது.

கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்களால் 1455 வீடுகளும், ஏனையோர்களால் 1615 வீடுகளும் மொத்தம் 3070 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றிற்காக அரசு ரூ. 106.81 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது. தமிழக அரசு 800 ஆதிதிராவிடர்களுக்கு ரூ. 6.69 இலட்சம் மானியம் வழங்கியது. இதுதவிர இம்மாவட்டத்தில் 18 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் உள்ளன. இவற்றில் 16 சங்கங்களில் 12674 அங்கத்தினர்கள் ரூ 49.38 இலட்சம் பங்கு செலுத்தி, 5312 அங்கத்தினர்கள் ரூ.443.55 இலட்சம் கடனாகப் பெற்று வீடுகள் கட்டி இத்துறையில் அரசின் திட்டங்களைச் செவ்வனேசெயல்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களின் நலனுக்காக ஒரு சட்டம் கொண்டுவர மத்திய அரசு திட்டமிட்டது. அதன்படி ஜனவரி மாதம் முதல் தேதி முதல் "திரைப்படத் தொழிலாளர்கள் நல்வாழ்வு நிதிச் சட்டம்" அமலுக்கு வந்துள்ளது.






## அருங்காட்சியகத்தில் ஓர் அரிய கலைக்கூடம்!

சென்னை எழும்பூரில் உள்ள அருங்காட்சியகத்தில், வளர்கலைக் கூடத் தொடக்க விழா 25.1.84 அன்று நடந்தது.

பொதுப்பணித் துறையினரால் அழகிய வடிவமைப்புடன் கட்டப்பட்ட இந்த இரண்டு மாடிக் கட்டடத்தில், கண்ணைக் கவரும் வண்ண ஓவியங்கள் வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை "மாடர்ன் ஆர்ட்" வகையைச் சேர்ந்தவை. இந்தியாவின் பல பகுதிகளிலுமுள்ள ஓவியர்களின் கைவண்ணத்தையும், கலைத் திறமையையும் வெளிப்படுத்த இந்த வளர்கலைக் கூடம் உதவும் என்று உறுதியாகச் சொல்லலாம்.

இந்தக் கவின்மிகு கலைக் கூடத்தின் தொடக்க விழாவுக்கு, கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை ஆணையர் மற்றும் செயலர் திரு தி. து. சுந்தர்ராஜ் இ.ஆ.ப. தலைமை வகித்தார். அவர் பேசுகையில், "இங்கே உள்ள ஓவியக் கலைப் பொருள்கள் மேலை நாட்டினரையும், சுற்றுலாப் பயணிகளையும் வெகுவாகக் கவரும்'' என்றார்.

வளர்கலைக் கூடத்தை ஜெர்மன் குடியரசு பெடரேஷனின் கான்சுலேட் ஜெனரல் திரு நிக்கலாஸ் மெர்ட்டன் தொடங்கி வைத்தார். அவர் பேசுகையில், ''இந்தக் கலைக் கூடத்தில் உள்ள ''மாடர்ன் ஆர்ட்'' ஓவியங்கள் இந்தியக் கலை நாகரிகத்தை எடுத்துக் காட்ட உதவும்" என்றார்.

விழா தொடக்கத்தில் அரசு அருங்காட்சியகத்தின் இயக்குநர் திரு என். ஹரிநாராயணா அனைவரையும் வரவேற்றார். கலை மற்றும் தொல்பொருள் பிரிவு காப்பாட்சியர் திரு வ. ந. சீனிவாசதேசிகன் நன்றி கூறினார்.

பி. வி. கிரி

### முதியோர் உதவித் தொகை

கன்னியாகுமரி மாவட்டத்தில் முதியோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் 2489 பேர்களும், உடல் ஊனமுற்றோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் 341 பேர்களும், விதவை உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் 785 பேர்களும், விவசாயத் தொழிலாளர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் 1000 பேர்களும், ஆக மொத்தம் 4615 பேர்கள் மாதம் ரூ 35/- வீதம் உதவித் தொகை பெற்று வருகின்றனர்.

உதவித் தொகை பெறும் அனைவருக்கும் ஒவ்வொரு ஆண்டும், பொங்கல் தினத்தன்றும் சுதந்திரத் திருநாளன்றும் இலவச வேட்டி, புடவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், முதியோர் உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெறும் அனைவருக்கும், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்படி 15.1.1983 முதல் தினமும் மதியம் ஒருவேளை இலவச சத்துணவு வழங்கப்பட்டு வருவதுடன், அனைவருக்கும் வாரம் ஒருமுறை ½ கிலோ இலவச அரிசியும் நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

# பொன்மொழிகள்

ஈண்டாமை என்பது தெய்வத் துக்கும் மனிதனுக்கும் நாம் செய் யும் பாவம்.

—காந்தியடிகள்

பிறப்பில் ஈண்டாமை கருது வது கொடுமை; வன்கண்; அநாக ரிகம்.

—திரு.வி.க..

ஈண்டாமை என்பது சாதி கரணியமாக ஏற்பட்டதே தவிர, அதற்கு வேறு கரணியமோ, ஆதாரமோ, இல்லை.

—தந்தை பெரியார்

ஈண்டாமை உண்மையில் ஒழிந்துவிட்டதா என்று கண்டு பிடிக்க ஊர்களிலுள்ள கிணறு கள் சாதி வேறுபாடின்றிப் பயன் படுகின்றனவா என்று பார்த் தாலே போதும்!

—பேரறிஞர் அண்ணா

ஈண்டாமை என்னுமொரு பேய்-இந்த தேசத்தில் மாத்தி ரமே திரியக் கண்டோம்;எனில் சண்டுப் பிறநாட்டில் இருப்போர் செவிக்கேறியதும் இச்செயலைக் காறியுமிழ்வர்.

—பாவேந்தர் பாரதிதாசன்

பகுத்தறிவுக்கு எட்டாத ஒன் றில் நம்பிக்கை வைப்பது குருட் டுத்தனமான நம்பிக்கையாகும்.

—காந்தியடிகள்

மனிதனுக்கோ ஆறறிவுஉண்டு; ஆறாவது அறிவே மன உணர்வு எனப்படும். அது பகுத்தறிவு எனப்படும்.

—திரு.வி.க.

எதையும் சிந்தித்து பகுத்தறி வுக்கு எது பொருத்தமோ அதையே ஏற்றுக்கொள்.

—தந்தைபெரியார்..

குருட்டு நம்பிக்கையின்றி புலன்கட்கு எட்டக்கூடியவற்றை மட்டும் ஏற்று தெய்வச் செய்தி கள் என்பவற்றைத் தள்ளுபடி செய்யும் ஆழமென அறிவுநிலை நுகர்ச்சியே பகுத்தறிவாகும்.

—சான்மார்ட்டினோ

எந்தத் தத்துவமானாலும் அதை விருப்பு வெறுப்பு அற்ற பகுத்தறிவு உரைகல்லில் உரைத் துப் பார்க்க வேண்டும்.

—சான்சுடுவர்ட்மில்.

என்னை ஒரு பகுத்தறிவுவாதி என்றே கருதிக் கொண்டு இருக்கி றேன். மற்றவர்களும் அப்படி யிருக்க வேண்டுமென்று விரும்பு கிறவனே பகுத்தறிவாளன்.

—பெட்ரண்ட்ரஸ்ஸெல்

தொகுப்பு:

—மு. செல்லமுத்து

**மாணவர் பக்கம்**

## பதினாறு கட்டளைகள்



காலை வெயிலை விடமென எண்ணு
கடும் பகல் வெயிலில் ஆடாதே கண்ணு!
மாலை வெயிலை மருந்தாக எண்ணு
மனமாற உடல்தேற விளையாடு கண்ணு!

நாள்தோறும் மணியாறில் எழுந்திட எண்ணு
நலம்பெறக் கடமைகள் செய்திடு கண்ணு!
வாள்போலப் பகைவரை அஞ்சாதே கண்ணு
வஞ்சகர் வலையை அறுத்திட எண்ணு!

வேர்விடும் செடிபோல் வளர்ந்திட எண்ணு
வியர்வை வடிந்தால் நோய்போகும் கண்ணு
சேர்இடம் அறிந்து செயல்பட எண்ணு
செயல்முறை உன்னைச் சிறப்பாக்கும் கண்ணு!

தாய்போல தமிழ்உனை வளர்த்திடும் கண்ணு
தரங்கெட்ட செயலை அழித்திட எண்ணு!
நாய்போல உழைப்புனை வளமாக்கும் கண்ணு
நன்றிக்கு வித்தாக நடந்திட எண்ணு!

— கவிஞர் உலகநாத பல்லவன்

## சின்னஞ்சிறு துணுக்குகள்

கெட்டில் மீனுக்கு மூன்று இருதயம் உண்டு.

பறவைகளில் புறா மட்டுமே தண்ணீரை உறிஞ்சிக் குடிக்கும்.

பூமியின் விட்டம் 7626.9 மைல்கள்.

லென்சைக் கண்டுபிடித்தவர் செய்ஸ்.

இரத்தம் உறைய வைட்டமின் K உதவுகிறது.

24 மணி நேரத்தில் நாம் 15,000 விட்டம் காற்றைச் சுவா சிக்கிறோம்.

நாயின் மோப்பசக்தி மனித னின் மோப்ப சக்தியைவிட 10 மடங்கு அதிகம்.

அணுகுண்டைவிட 1500 மடங்கு அதிக சக்தி உடையது ஹைட்ரஜன் குண்டு.

உலகிலேயே மிகப்பெரிய தோட்டம் கியூ பொட்டானிக் கார்டன் ஆகும்.

—ச. பிரபாகரன்

இளங்கலை பௌதீகம்
புட்பம் கல்லூரி,
பூண்டி,
தஞ்சாவூர் மாவட்டம்.

# உத்தம புத்திரன்



மு. முத்துக்காளத்தி

ஒரு கிராமத்தில் உலகநம்பி என்ற ஒரு நல்ல மனிதர் வாழ்ந்து வந்தார். அவரை ஏன் நல்ல மனிதர் என்று சொல்கிறேன் என் றால் அவருக்கு மூன்றே பையன்கள்தான். அதற்கு மேல் குழந்தைகள் வேண்டாம் என்று நிறுத்திக் கொண்டார்.

அவருக்கு ஐம்பது வயதானது. மூன்று பிள்ளைகளும் நன்றாக வளர்ந்திருந்தார்கள். உருவம் வளர்ந்திருந்ததே தவிர, உள்ளம் வளரவில்லை. அவர்கள் மூன்று பேரும் ஒன்று சேர்ந்து வந்து, தந்தையின் சொத்தைத் தங் களுக்குப் பங்கு போட்டுத் தர வேண்டும் என்று கட்டாயப் படுத்தினார்கள்.

உலகநம்பிக்கு ஐம்பதாவது பிறந்த நாள் விழா நடந்து கொண்டிருந்தது. விருந்தினர்கள் ஏராளமாக வந்திருந்தார்கள். பரிசுப் பொருள்கள் குவிந்தன.

மூன்று பிள்ளைகளும் எல்லா வற்றையும் மூன்று சமபங்கு களாகப் போட்டு, பிரித்துக் கொடுத்துவிட வேண்டும் என்று அடம் பிடித்தார்கள். உற வினர்கள் எவ்வளவு எடுத்துச் சொல்லியும் கேட்கவில்லை.

உலகநம்பி குழந்தைகள் விருப்பப்படியே ஆகட்டும் என்று சொத்தையெல்லாம் மூன்றாகப் பிரித்துக் கொடுத்துவிட்டார். அப்பொழுது அவர் வீட்டுக்குள் ஒரு திருடன் புகுந்து விட்டான்.

'எல்லோரும் போகட்டும் இரவில் உலகநம்பி தனியாக இருக்கும்பொழுது அவரை அடித்துப் போட்டுவிட்டு, இருப் பதைச் சுருட்டிக்கொண்டு போய் விடலாம்' என்று காத்திருந்தான்.

விருந்தினர்கள் அனைவரும் சாப்பிட்டுவிட்டு ஒவ்வொரு வராகப் போய்விட்டார்கள். பிள்ளைகள் மூன்று பேரும் சொத்தையும் பரிசுப் பொருள் களையும் பாகம் போட்டுக் கொண்டு போய்விட்டார்கள்.

வீட்டில் தனியாக விடப்பட் டார் உலகநம்பி. இன்னும் யாரா வதுசாப்பிடாமல்இருக்கப் போகி றார்கள் என்ற எண்ணம் வந்தது அவருக்கு. அதனால் வீட்டைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந் தார். அப்பொழுது வீட்டில் ஒளிந்து கொண்டிருந்த திருட னைப் பார்த்துவிட்டார்.

''இன்னும் நீ சாப்பிடவில்லை யாப்பா? வா சாப்பிடலாம்'' என்று அவனை அன்போடு அழைத்து, தன் பக்கத்தில் உட் கார வைத்துக் கொண்டு அவ னோடு சேர்ந்து விருந்துண்டார் உலகநம்பி.

பிறகு அவனைப் பார்த்து, ''உன்னைப் பார்த்தால் என் பிள்ளைகளில் ஒருவனைப் பார்ப் பதுபோல் இருக்கிறது. அவர்கள் எல்லோரும் என் சொத்தைப் பங்கு போட்டுக் கொண்டு போய் விட்டார்கள். இப்பொழுது என் னிடம் உனக்குத் தருவதற்கு ஒன்றுமில்லை.

''ஆனால் என்னுடையதந்தை யார் அவர் இறக்கும்பொழுது எனக்குத் தந்த சில தங்க நாண யங்கள் இருக்கின்றன. அவற்றை இதுவரை நான் யாருக்கும்காட்ட வில்லை. அந்த நாணயங்களை நான் உனக்குத் தருகிறேன். அவற்றைக் கொண்டு நீ வாழ்க் கையில் முன்னேற முயற்சி செய்'' என்று ஆசீர்வதித்து, தங்க நாண யங்களை ஒரு பையில் போட்டுக் கொடுத்தனுப்பினார் உலகநம்பி.

பத்தாண்டுகள் உருண்டுவிட் டன. உலகநம்பிக்கு மணிவிழா வந்தது. இப்பொழுது அவரிடம் முன்போல் செல்வம் இல்லாத தால் ஒருவரும் அவரைத் திரும்பிப் பார்க்கவில்லை. அவர் மேல் இரக்கப்பட்டவர்களில் சிலர், மூன்று பிள்ளைகளிடம் போய், ''உங்கள் அப்பாவுக்கு மணி விழா வருகிறதே? அவர் ஓகோ என்று வாழ்ந்த காலத்தில் பொன் விழா கொண்டாடி எப்படி எல் லோருக்கும் விருந்து வைத்தார்! நீங்கள் சொத்தைப் பிரித்து வந்து அவரைச் சொத்தையாக்கி விட்டீர்கள். இப்பொழுது நீங்கள் தானே அவருக்கு உதவ வேண் டும்?'' என்று இதமாக எடுத்துச் சொன்னார்கள்.

இதற்கு மூத்த பையன் சொன் னான் ''நான் கைநிறைய ரூபாய் நாணயங்களை எடுத்து மேலே வீசிப் போட்டு என் கையைப் பிடிக்கிறேன். என் கையில் விழு கிற நாணயங்களை நான் எடுத் துக் கொள்கிறேன். கீழே விழு கிற நாணயங்களை என் அப்பா பொறுக்கிக் கொள்ளட்டும். இது தான் நான் அவருக்குச் செய்யக் கூடிய உதவி!''

இரண்டாவது பையனை அணுகிக் கேட்டார்கள். அவர் களுக்கு அவன் பதில் சொல்லும் விதத்தில் பூமியில் ஒரு பெரிய வட்டம் போட்டான். ''இந்த வட்டத்தைப் பார்த்தீர்களா? இந்த வட்டத்தில் நின்று கை நிறையக் காசுகளை எடுத்து நான் ஆகாயத்தை நோக்கி வீசுகிறேன். இந்தப் பெரிய வட்டத்திற்குள் விழுகிற காசு களெல்லாம் எனக்குச் சொந் தம். வட்டத்தைத் தாண்டி விழுகிற காசுகளை என் தகப்ப னார்பொறுக்கிக்கொள்ளட்டும்'' என்று சொல்லிவிட்டான்.

இவர்கள் இரண்டு பேருக்கும் சற்றும் இளைத்தவன் அல்ல என்று காட்டிக் கொண்டான் மூன்றாவது மகன். ''நான் கை நிறைய அள்ளி மேலே ஆகாயத் தைப் பார்த்து வீசுகிறேன். கீழே விழும்காசுகளெல்லாம் எனக்குச் சொந்தம். மேலே ஆகாயத்தில்



## மாணவர்களின் சமுதாயப் பணி!

**ஒ**ருங்கிணைந்த நாட்டு நலப் பணித் திட்டத்தின் முகாம் 1983 நவம்பர் 25 முதல் டிசம்பர் 4 முடிய செங்கை மாவட்டம், பெருவ ளூரில் நடந்தது.

இந்தச் சிறப்பு முகாமில், பெரம்பூரிலுள்ள தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி மேல்நிலைப் பள்ளி, தொன்போஸ்கோ மேல்நிலைப் பள்ளி, மற்றும் ஜார்ஜ் டவுன் முத்தியால் பேட்டை மேல்நிலைப்பள்ளி ஆகியவை கலந்து கொண்டன.

இந்த முகாமில் உலகச் சிக்கன நாள், தேசிய ஒருமைப்பாடு விழா, தீண்டாமை ஒழிப்பு நாள், மரம் நடும் விழா ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

இந்தப் பத்து நாள் முகாமில் ஒரு கிலோ மீட்டருக்கு வாய்க்கால் சீர்ப்படுத்தப்பட்டது. இதனால் பெருவளூர் ஏரிக்கு நிறை'' நீர் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## விளையும் பயிர்



**ம**துரை காமராஜர் பல்கலைக் கழக மாலைக் கல்லூரியில் பி.காம். படிக்கும் மாணவர் எஸ். இராமசுப்பிரமணியம்.

இவர் கதை, கட்டுரை, கவிதைகள் எழுது வதில் ஆர்வம் காட்டுகிறார். இத்துறைகளில் இவர் பரிசும் பாராட்டும் பெற்றுள்ளார். கவி யரங்குகளிலும், பட்டி மன்றங்களிலும் இவர் பங்கு பெற்று வருகிறார்.

நின்று விடுகிற காசுகளை என்னு டைய அப்பா எடுத்துக் கொள் ளட்டும்...'' என்று கூறினான்.

மூன்று பிள்ளைகள் சொன்ன செய்திகளைக் கேள்விப்பட்ட உலகநம்பி, ஒரு வறட்டுப் புன் னகை உதிர்த்தார். ''என் பிள்ளைகள் சந்தோஷமாக இருந் தால் போதும், அவர்கள் எனக்கு ஒரு சல்லி தரவேண்டாம்'' என்று சொல்லிவிட்டார்.

அப்பொழுது அவர் முன்னால் பணிவன்போடு வந்து நின்றான் ஒரு வாலிபன். ''உங்கள் மணி விழாவுக்கு இந்த ஏழையின் எளிய காணிக்கை'' என்று ஏராளமான பொருள்களைக் கொண்டு வந்து அவரது காலடியில் வைத்தான்.

''நீ யாரப்பா?'' என்று கேட் டார் உலக நம்பி.

''ஐயா, பத்து ஆண்டுகளுக்கு முன்னால் நான் உங்கள் வீட்டுக்கு திருடுவதற்காக வந்தேன். நீங்கள் எனக்கு விருந்தளித்து, பொற் காசும் கொடுத்தனுப்பினீர்கள். அதைக்கொண்டு நான் வியா பாரம் செய்து இன்றைக்கு லட்சாதிபதியாகி விட்டேன். என் னுடைய எல்லாச் சொத்துக்கும் நீங்கள்தான் அதிபதி. என்னை ஆசீர்வதிக்க வேண்டும்.''

''என் பிள்ளைகளிலேயே நீதான் உயர்ந்தவன். உண்மை யில் நீதான் எனக்கு உத்தம புத்திரன்!'' என்று அவனைச் சேர்த்து அணைத்துக் கொண் டார், உலகநம்பி.



(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

17 திட்டங்களையும் உருவாக்கத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) திட்டமிட்டுள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (டிட்கோ) முழுவதும் சொந்தமானதும் அதன் துணை நிறுவனமு மான தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், ரூ. 10 கோடி செலவில் திருச்சி மாவட்டத்தில், மாயனூரில், ஆண்டொன்றுக்கு 30,000 மெட்ரிக் டன் திறனுடன் ஆஸ்பெஸ்டாஸ் குழாய் தயாரிக்கும் திட்டப் பணியை மேற்கொண்டுள்ளது. இது, 1984 செப்டம்பரில் முடிக்கப்பட்டுவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. திருச்சி மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி நிலையில் பின்தங்கியுள்ள பகுதியான புகளூரில், பத்திரிகைக் காகிதம்-பிற காகிதம் தயாரிக்கும் தொழிற் சாலையை, தமிழ்நாடு பத்திரிகைக் காகிதம்-பிற காகித நிறுவனம் அமைத்து வருகிறது. ரூ. 195 கோடி மதிப்புள்ள இத் திட்டம் ஆண்டொன்றுக்கு 50,000 டன் பத்திரிகைக் காகிதத்தையும், 40,000 டன் பிற காகிதத்தையும் உற்பத்தி செய்யும். இதனால், ஆண்டொன்றுக்கு ரூ. 40 கோடி அந்நியச் செலாவணி மிச்சமாகும்.

**48.** நடுத்தர மற்றும் பெரிய தொழில்களின் வளர்ச்சி யிலும் மேம்பாட்டிலும், தமிழ்நாடு சிறு தொழில் மேம் பாட்டு நிறுவனம் (சிப்காட்) முக்கிய பங்கு வகிக்கிறது. நடப்பாண்டில், 31—1—1984 வரை தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டு நிறுவனம், ரூ. 23.26 கோடி அளவிற்குக் குறித்த காலக் கடன் உதவிக்கு அனுமதி வழங்கியுள்ளது. உத்தரவாதத்தின்பேரிலும், நேரடியாகத் தொகை அளித்தல் பேரிலும் ரூ. 20.99 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ரூ. 83.40 இலட்சம் அளவிற்கு அடிப்படை மூலதன நிதியுதவி அளிக்க அனுமதி வழங்கியுள்ளது.



**49.** இம்மாநிலத்தில் கனிம வளர்ச்சிப் பணி நிர்வாகத்தை மேம்படுத்துவதற்காக, அரசு, மண்ணியல்-சுரங்கம் வெட்டுதல் எனும் தனித் துறை ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாடு மாக்னசைட் நிறு வனம், படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின் கீழ், ரூ. 80 கோடி செலவில் ''வெப்பந்தாங்கிக் கற்கள் தயாரிக்கும் திட்டம்'' ஒன்றை மேற்கொண்டுள்ளது. 1985 மார்ச்/ஏப்ரலில், சுழல் ஊது உலை தொடங்கப் படும்போது, இத்திட்டத்தின் முதற்கட்டப் பணி முடிவடையும்.

**50.** இம்மாநிலத்தில் உள்ள கனிமவளத்தைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் நிறுவப்பட்ட பொதுத் துறை நிறுவனமாகிய தமிழ்நாடு கனிமவள நிறுவனம் நல்ல முன்னேற்றத்தை எய்தியுள்ளது. இந் நிறுவனத்தின் மொத்த விற்பனை 1983–84ஆம் ஆண்டில் ரூ. 256 இலட்சம் இருக்குமென்று எதிர் பார்க்கப்படுகின்றது. அடுத்த ஆண்டில் இந்த விற்பனை ரூ. 350 இலட்சமாக இருக்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1982–83ஆம் ஆண்டு விற்பனைத் தொகையான ரூ. 168 இலட்சத்தைப் போல் இது இரண்டு மடங்குக்கு மேலாகும். இந்நிறுவனம் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்டுள்ள நிறுவனமாதலால் இதன் விற்பனையில் 90 சதவீதம் அந்நியச் செலாவணியாகக் கிடைக்கும். சென்னை அருகே மணலியில் ரூ. 385 இலட்சம் செலவில், 100 சதவீதம் ஏற்றுமதிக்காகக் கருங்கற்களை வெட்டி, பளபளப்பாக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவும் பணியை 'டாமின்' மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்காக அரசு பங்கு மூலதனமாக ரூ. 30 இலட்சம் ஏற்கெனவே வழங்கியுள்ளது. இத்தொழிற்சாலை 1984ஆம் ஆண்டு இறுதியில் உற்பத்தித் தொடங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. சிவகங்கையில் கிடைக்கும் சிறப்பு மிக்க மைக்கல்லை (கிராஃபைட்) பயன்படுத்தித் தொழிற்சாலை ஒன்றை நிறுவவும் இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இத்தொழிற்சாலைக்காக ரூ. 30 இலட்சம் முதலீடு செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. இந்நிறுவனம் அடைந்துள்ள முன்னேற்றம் அரசுக்கு மனநிறைவு அளிக்கிறது. இந்நிறுவனம் 1983–84ஆம் ஆண்டில் ரூ. 100 இலட்சம் ஆதாயத்தை எதிர் பார்க்கிறது.

**51.** பட்டுப்புழு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், 1984–85ஆம் ஆண்டில், ரூ. 91.65 இலட்சம் மூலதனச் செலவில், திட்டங்கள் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. இக்கால அளவில், மேலும், 10,000 ஏக்கரில் கூடுதலாக முசுக்கட்டைச் செடி பயிரிடப்படும். 1984–85ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் முக்கியத் திட்டங்களில், அரசு பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணைகளில், முசுக்கட்டைச் செடிகள் வளர்த்தலும், கோயம்புத்தூரில், ஆண்டிற்கு இருமுறை முட்டை யிடும் பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்தலும் அடங்கும்.

### கைத்தறி-துணிகள்

**52.** நம் மாநிலத்தில் கைத்தறித் தொழில் சுமார் 13.34 இலட்சம் நெசவாளர்களுக்கு நேரடியாக வேலைவாய்ப்பினை அளித்து வருகின்றது. மொத்தம் 5.56 இலட்சம் கைத்தறிகளில், இதுவரையில், 3.47 இலட்சம் தறிகள், 1,529 தொடக்க நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் அமைக்கப்பட்டுள்ளன. கைத்தறி இல்லாத நெசவாளர்களுக்குக் கூட்டுறவு அமைப்புத் திட்டத்தின் மூலம் பொதுவான பணிக்கொட்டகைகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ், நடப்பு நிதியாண்டில் 12 தொழில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. 1984–85ஆம் ஆண்டில், அத்தகைய நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 15-ஐ அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர, சிறப்புக்கூறு திட்டத்தின்கீழ், ஆதி திரா விடர்களுக்கென்றே நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 8-ஐ ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

53. இவ்வாண்டில், கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்குக் கைத்தறித் துணிகளை வழங்கும் திட்டத்தின்கீழ் கைத்தறித் துணிகளை வழங்குவதில் முக்கியப் பங்கேற்றுப் பணியாற்றியுள்ளன. அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்போது, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் குறுகிய கால அளவில், ரூ. 2 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளை வழங்க ஏற்பாடு செய்தது.

### வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி

54. உலக வங்கியின் நிதி உதவி பெறும் சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், குடிசைப் பகுதி மேம்பாட்டு விரைவுத் திட்டங்கள் ஆகியவற்றின் கீழ், குடிசைப்பகுதி மாற்று வாரியம் மேற்கொண்டுள்ள விரிவான திட்டம்,தொடர்ந்து முழு வேகத்துடன் செயல் படுத்தப்பட்டு வருகிறது. சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-1-ன்கீழ், சென்னை நகரில் ரூ. 443.65 இலட்சம் செலவில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இதனால், 24,862 குடும்பங்கள் பயனடைந்தன. 1981ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2-ன்கீழ் ரூ. 354.31 இலட்சம் செலவில் 22,000 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. இந்தத் திட்ட இலக்கான 50,000 குடும்பங்களும் பயனடையும் வகையில் 1984–85ஆம் ஆண்டிற்கு ரூ. 6.00 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ், 1984–85ஆம் ஆண்டில், வீட்டு மேம்பாட்டிற்காக, ரூ. 273 இலட்சம் அளவிற்குக் கடன்கள் வழங்கப்படும்.

55. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்றுவாரியம், மதுரை, கோயம்புத்தூர், ஈரோடு ஆகிய இடங்களில் குடியிருப்புகள் கட்டும் பணியை, மேற்கொள்ளும். இது மதுரை, கோயம்புத்தூர் ஏனைய நகராட்சிகளிலும், குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கொள்ளும்.

56. சென்னை அருகே முகப்பேர், நெற்குன்றம் கிராமங்களில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-2-ன்கீழ் ''மனைகள்-பணிகள்' திட்டத்தைச் செயல்படுத்துகிறது.

57. சென்னை மாநகருக்காக, ரூ. 135 கோடி செலவில் விரிவான நகர வளர்ச்சித் திட்டம் ஒன்று (M.U.D.P. III) தயாரிக்கப்பட்டு, உலக வங்கியின் ஆய்வுக்காக இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதே போன்று கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப் பள்ளி, சேலம் ஆகிய நகரங்களை மேம்படுத்துவதற்கான விரிவான திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டு உலக வங்கியின் ஆய்வுக்காக இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

58. 1984–85ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அரசுப் பணியாளர்கள் வீடுகட்டும் முன் பணத்திற்காக ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், நகராட்சிப் பணியாளர்களுக்கு மட்டும் ரூ. 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

59. நடப்புத் திட்டக் கால அளவில் கிராமப் பகுதி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், 1978–79லிருந்து மொத்தம் 1,57,766 வீடுகள் கட்டப்பட்டுள்ளன ; தமிழ்நாடு வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கம், வீடு கட்டுபவர்களுக்குக் கடனாகவும், உதவித் தொகையாகவும் ரூ. 58·23 கோடி வழங்க, கிராம வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அளித்துள்ளது. இவற்றில், ஆதிதிராவிடர்களால் மட்டும் 1,26,409 வீடுகள் கட்டப்பட்டுள்ளன: 1984–85ஆம் ஆண்டில், இத் திட்டத்தின்கீழ் மேலும் 40,000 வீடுகள் கட்டக் கருதப்பட்டுள்ளது.



### சாலைகள், போக்குவரத்து, துறைமுகங்கள்

60. போக்குவரத்துக் கழகங்கள் தொடர்ந்து நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. 1982–83ல் மூன்று போக்குவரத்துக் கழகங்களைத் தவிர மற்றவை ஆதாயத்தில் செயல்பட்டன. நமது போக்குவரத்துக் கழகங்களில் இரு கழகங்கள் தேசீய உற்பத்தித்திறன் குழுவின் அனைத்திந்திய விருதுகளைப் பெற்றுள்ளன.

61. ஜீவா போக்குவரத்துக் கழகம், நேசமணி போக்குவரத்துக் கழகம், மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் ஆகிய மூன்று புதிய போக்குவரத்துக் கழகங்கள் 1983ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாளிலிருந்து தனித்துச் செயல்படத் தொடங்கியுள்ளன. பல்லவன் போக்குவரத்துக் கழக ஆலோசனைப் பணிப் பிரிவு ஒரு தனி நிறுவனமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.



62. 1983ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1ஆம் நாளிலிருந்து போக்குவரத்துத் தொழிலாளர்களின் ஊதியம் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் ஆண்டொன்றுக்கு ரூ. 9 கோடி கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது. டீசலின் விலை அதிகரிப்பு, நிருவாகச் செலவை மிகவும் உயர்த்தியுள்ளது என்பதை ஈண்டு குறிப்பிடுவது அவசியமாகும்.

63. சாலைகளைப் பராமரிப்பதற்குரிய அடிப்படைத் தேவைப் பொருளான நிலக்கீலின் விலையை மூன்றாண்டுக்கால அளவில் 75 சதவீதத்திற்கு மேல் மத்திய அரசு உயர்த்தியுள்ளது. இந்த விலை ஏற்றம் காரணமாக சாலைப் பணிகளின் முன்னேற்றம் தடைப் பட்டது.

64. ஹால்டியாவிலிருந்து தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரியைக் கொண்டுவருவதற்காக கப்பல் ஒன்றை வாங்கப் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

65. 1982–83ஆம் ஆண்டில், இம் மாநிலத்திலுள்ள சிறு துறைமுகங்கள், 3.40 இலட்சம் டன் சரக்கை ஏற்றி இறக்கின. கடலூர் துறைமுகத்திலும், குளச்சல் துறைமுகத்திலும் அடிப்படை வசதிகளை மேம் படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாலி நோக்கத்தில் சிறு துறைமுகத்தை அமைப்பது அனுமதியளிக்கப்பட்டு, பணிகள் நடந்தேறி வருகின்றன.

### சுற்றுலா

66. சுற்றுலா மேம்பாட்டிற்கான வழிவகைகள் தமிழ்நாட்டில் ஏராளமுள்ளன. இந்த வழிவகைகளை மேம்படுத்த மாநில அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மாமல்லபுரத்தில் திறந்த வெளி அருங்காட்சியகம் ஒன்றை அமைக்கவும், முட்டுக் காட்டில் நிலையான படகுத் துறை ஒன்றைக் கட்டுவது, குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், கன்னியாகுமரி, முதுமலை, பிச்சாவரம் ஆகிய இடங்களில் இளைஞர் உணவகங்களை ஏற்படுத்தும் பணியை மேற்கொண்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு . சுற்றுலா மையங்களை மேம்படுத்துவதற்கான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக ஐந்து சுற்றுலா மையங்களை ரூ. 10 இலட்சம் செலவில் மேம்படுத்துவதற்கான பணிகள் நடந்தேறி வருகின்றன. 1984–85ஆம் ஆண்டு, மேலும் சில மாவட்ட சுற்றுலா மையங்களை மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

67. சுற்றுலா மையங்கள் பற்றி அதிக அளவில் விளம்பரம் கொடுக்கும் பொருட்டு, ரூ. 2 இலட்சம் செலவில் செய்திப் படம் ஒன்றைத் தயாரிக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது. பூம்புகார் தொகுப்பில் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### தமிழ் கலையும், பண்பாடும்

68. தமிழர்களின் புகழ்வாய்ந்த பாரம்பரியத்தையும், அவர்களது பண்பாட்டையும் ஒளிபெறச் செய்வதை, அரசு, அறிவார்ந்த கொள்கையாகக் கொண்டிருக்கிறது. புது டில்லியில் முக்கியமானதோர் இடத்தில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 10 அடி உயர வெண்கலச் சிலை ஒன்றை நிறுவக் கருதப் பட்டுள்ளது. மகாகவியின் முழுப்படைப்புகளையும், கவிதைகள், கட்டுரைகள், கதைகள் என மூன்று தொகுதிகளாக வெளியிடவும் எண்ணியுள்ளது. இதற்காக அரசு ரூ. 3 இலட்சம் அனுமதியளித்து, இப் பணியைத் தஞ்சையிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளது.



69. தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை வல்லுநர் குழு ஒன்று தயாரித்து வருகிறது. தீண்டாமைக் கொடுமையை எதிர்த்து அவர் நடத்திய போராட்டத்தை நினைவு கூறும் வகையில் கேரளாவிலுள்ள வைக்கத்தில் பெரியார் நினைவுக் கட்டிடத் தொகுப்பு ஒன்றை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. கேரளத்தில், வைக்கத்தில் தந்தை பெரியார் திருவுருவச் சிலையை வைக்க கேரள அரசு இடம் ஒதுக்கித் தந்துள்ளது. அங்குப் பெரியார் சிலை அடுத்த ஆண்டுக்குள் தமிழக அரசுச் செலவில் நிறுவப்படும்.

70. தமிழகத்திலுள்ள கோயில்களுக்கு திருப்பணி செய்வதற்கும், பழுது பார்ப்பதற்கும் அரசு ரூ. 15 இலட்சம் மானியமாக அளிக்க முடிவெடுத்துள்ளது.

71. தமிழக அறிஞர்களின் பேருரைகளை அவர்களின் வாயுரையாகவே பெற்றுப் பாதுகாக்க அடுத்த நிதியாண்டில், ரூபாய் ஒரு இலட்சம் செலவில் புதிய திட்டம் ஒன்றைக் கொண்டுவரவும் கருதப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் கிராமியக் கலைகளைப் பேணிப் பாதுகாத்துப் பிரபலப்படுத்தக் கிராமியக் கலை நிலையம் ஒன்றை ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது.

### கல்வி

72. வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கத்தில், கல்விக்குத் தொடர்ந்து அதிக முக்கியத்துவம் அளிக்கப் பட்டு வருகிறது. கல்வி என்பதன்கீழ் செலவு தொடர்ந்து பெருகிக்கொண்டே வந்துள்ளது. 1984–85ஆம் ஆண்டு மொத்த மூலதனச் செலவு ரூ. 404·76 கோடியாகும். முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் காரணமாக 6—11, 11—14 வயதுத் தொகுதியில் கூடுதலாக மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது உயர்ந்துள்ளது. இது 20 அம்சத் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினைவிட அதிகமானதாகும். 2 இலட்சம் சிறுவர்கள் என்ற இலக்குக்கு மாறாக, 1983-84-ல் 3.82 இலட்சம் சிறுவர்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

73. 1983–84-ல் 6—14 வயதுத் தொகுதியில் உள்ள மாணவர்களுக்காக, 390 முறைசாராக் கல்வி நிலையங்கள் இருந்தன. இவை ஒவ்வொன்றிலும் 30 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1984–85-ல் குடியாத்தம் பகுதியில் மேலும் 10 முறை சாராக் கல்வி நிலையங்களைத் தொடங்கக் கருதப் பட்டுள்ளது. 1983–84-ல் மொத்தம் 17,047 முதியோர் கல்வி நிலையங்கள் செயல்பட்டன. இந்த நிலையங்களில் 5.50 இலட்சம் முதியோர் பயின்றனர். அவர்களில் 3.55 இலட்சம் பேர்கள் பெண்கள். 1984–85-ல் 1,000 ஏட்டறிவு நிலைக் கல்வி நிலையங்களைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

74. அண்மையில் கொடைக்கானலில் ஏற்படுத்தப் பட்ட அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம், மகளிர் நலன் குறித்த ஆராய்ச்சியை மேற்கொள்வதுடன் மகளிர் நலத்திட்டங்களுக்காக ஆலோசனை, கண் காணிப்புப் பணிகளையும் நல்கும். ஏற்கெனவே அறிவித்தவாறு, காரைக்குடியில் ஒரு பல்கலைக் கழகம் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1984–85-ல் புதிய பட்டப் படிப்பையும், பட்ட மேற்படிப்பையும் தொடங்க ரூ. 7 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 5 ஆண்டு சட்டப் படிப்பு 1983–84 முதல் கொண்டு வரப்பட்டுள்ளது.

**75**. தொழில் நுட்பக் கல்வித் துறையில் புதிய பாடமுறைகளைக் கொண்டு வரவும், தக்க கல்வி வசதிகள் அளிக்கும் பொருட்டும், கட்டிடங்கள், கருவிகள் வகையில் வசதிகளை மேம்படுத்தவும் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. 1983–84-ல் அரசுப் பல்தொழில் பயிற்சிப் பயிலகங்கள் ஒவ்வொன்றிலும், ஸ்ரீலங்காவிலிருந்து திரும்பியுள்ள தமிழ் அகதிகளின் நலன் கருதி 5 இடங்களைக் கூடுதலாக அரசு ஏற்படுத்தியுள்ளது.

**76**. ஐக்கிய நாடுகள் வளர்ச்சி நிறுவனம் மற்றும் பன்னாட்டுத் தொழிலாளர் நல அமைப்பின் நிதியுதவி யுடன், அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் கொண்டுவரப்பட்டுள்ள வாழ்க்கைத் தொழில் நவீன பயிற்சி முறை தற்போது மதுரை தொழிற் பயிற்சி நிலையத்திற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது; இது, விரைவில் செயல்படத் தொடங்கும். 1983–84ஆம் ஆண்டில் அரசு, மூன்றாம் ஷிப்டு முறையை, மூன்று தொழில் பயிற்சி நிலையங்களில் கொண்டு வந்துள்ளது. 1984–85ஆம் ஆண்டில், சேலம் தொழிற்பயிற்சி நிலையத்திற்கும் இந்த ஏற்பாடு நீட்டிக்கப்படும்.

**77**. ஏற்படுத்தக் கருதியுள்ள அறிவியல்-தொழில் நுட்பவியல் நிலையங்களை அமைத்து, அவற்றைப் பராமரிப்பதற்காக நிறுவனம் ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது.

### சுகாதாரப் பணிகள்—குடும்ப நலன்

**78**. 1983–84-ல் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ள 17 தொடக்க சுகாதார நிலையங்கள் மூலம், கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்குச் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகள் கிடைக்கச் செய்வதில் அரசு முக்கியத்துவம் கொடுத்துள்ளது. இவற்றோடு மாநிலத்தில் மொத்தம் 424 தொடக்கச் சுகாதார நிலையங்கள் இருக்கும். சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்த 1984–85-ல் மேற்கொள்ளவிருக்கும் குறிப்பிடத்தக்க திட்டங்களில், கன்னியாகுமரி மாவட்டத்தில் யானைக் கால் நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தல், இராமேஸ்வரம் தீவில் மலேரியா நோய்க் கட்டுப்பாட்டிற்கான பணியாளர்களை நியமித்தல், நகராட்சிப் பகுதிகளில் உள்ள ஒரு இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்குச் சுகாதாரத் தகவல் அட்டைகள் வழங்குதல் ஆகியவை அடங்கும்.

**79**. சேலம், தென் ஆர்க்காடு மாவட்டங்களில் கிராமப்புறப் பகுதிகளுக்குச் சுகாதார வசதிகள் அளிப் பதற்கான டேனிடா நிதியுதவி பெறும் திட்டத்தின் கீழ், 449 சுகாதாரத் துணை நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. தொடக்க சுகாதார நிலையங்களில் 13 மருந்தகக் கட்டிடங்கள் கட்டும் பணியும், 4 அறுவை சிகிச்சை அரங்குகள் கட்டும் பணியும் நடந்தேறி வருகின்றன. நடப்பாண்டு இறுதியில் மொத்தத் திட்டச் செலவான ரூ.14·40 கோடியில் 50 சதவீதத் தொகையை நாம் செலவிட்டிருப்போம்.

**80**. கல்லூரி இணைந்த மருத்துவ மனைகளிலும் மருத்துவக் கல்லூரிகளிலும் வசதிகளைப் பெருக்குவதற் காக ரூ. 50 இலட்சத்திற்கு மேற்பட்ட செலவில் மருத்துவக் கருவிகள் வாங்கக் கருதப்பட்டுள்ளது. மருத்துவர்கள், ஏனைய மருத்துவப் பணியாளர்கள் ஆகியோரை நியமிப்பதன் மூலமும் மருத்துவக் கருவி களை வாங்குவதன் மூலமும் மாவட்ட, வட்ட மருத்துவ மனைகளில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.





**81**. நம் நாட்டு சித்த மருத்துவ முறைக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்ற அரசின் கொள்கைக்கேற்ப, சித்த மருத்துவ முறை மேம்பாடு தொடர்பாக அரசுக்கு ஆலோசனை நல்க, தமிழ்நாடு சித்த மருத்துவக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. ''தமிழ்நாடு மருந்துச் செடிப் பண்ணை மூலிகை மருந்து நிறுவனம்'' கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மூலிகைப் பண்ணைகளை ஏற்படுத்துவதையும், மருந்து தயாரித்து வழங்குவதையும் இந்நிறுவனம் மேற்கொள்ளும். சென்னை, அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவமனையில் உள்ள மருந்தாக்கியல் பிரிவை ரூ. 5·00 இலட்சம் செலவில் மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

**82**. அடுத்த நிதியாண்டில் மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலப் பணிகள் துறைக்கான நிதி ஒதுக்கம் ரூ. 131.47 கோடியாகும்.

### குடிநீர் வழங்கல்

**83**. மக்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு அரசு மிகவும் முக்கியத்துவம் அளித்துள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில், குடிநீர் பற்றாக்குறை நிலவிய 10,244 சிற்றூர்களுக்குக் குடிநீர் வழங்க ரூ. 77.73 கோடி செலவிடப்பட்டது. நடப்பு ஆண்டில் மேற்கொண்டும் 2,465 கிராமங் களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டது. 1982–83, 1983–84ஆம் ஆண்டுகளில், வறட்சி நிவாரணப் பணி களின்கீழ் 22,000 குழாய்க் கிணறுகள் ரூ. 46 கோடி செலவில் அமைக்கப்பட்டன.

**84**. சென்னை மாநகர குடிநீர் வழங்கல்–கழிவுநீர் அகற்று வாரியம், 1984–85ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் ரூ. 15.25 கோடி செலவில் நீர் வழங்கு திட்டங்களையும், கழிவுநீர் அகற்றுத் திட்டங்களையும் மேற்கொள்ளவிருக்கிறது. கிருஷ்ணா நதி நீர் வழங்கு திட்டப்பணி முன்னேறி வருகிறது. 1984–85ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்தில், இப் பணிக் காக, ரூ. 60 கோடி செலவிட வகை செய்யப் பட்டுள்ளது.



**85**. கோயம்புத்தூர், சேலம், மதுரை ஆகிய மூன்று பெரிய நகரங்களுக்கும் ஏனைய 75 நகரங்களுக்கும் 740 சிற்றூர்களுக்கும் ரூ. 149.42 கோடி செலவில் குடிநீர் வழங்க வகை செய்யும் திட்டம் ஒன்றுக்கு, உலக வங்கியின் உதவியைப் பெறப் பேச்சு வார்த்தைகள் முடிந்துவிட்டன. 14 நகராட்சிகளில் முன்னோடித் திட்டமாகக் குறைந்த செலவில் துப்புரவு வசதிகள் செய்துகொடுக்கவும் இத் திட்டம் வகை செய்கிறது. 1984–85ஆம் ஆண்டிற்காக இத் திட்டத்தின்கீழ் ரூ. 8 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**86**. நீர் வள மண்ணியல், செயற்கை முறை மறுச் செறிவு தொடர்பான ஆய்வைத் திட்டப் பணியாகக் கருதி நடத்துவது குறித்த திட்டத்தை இவ்வரசு, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் நிதியுதவியுடன் செயல் படுத்தி வருகிறது. 1981ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் முதல்கட்டப்பணி முடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வு, நிலத்தடி நீர்வளத்திற்கு கூடுதல் வாயில்கள் இருப்பதைக் கண்டறிந்து முக்கியமான கருத்துக்களை அளித்துள்ளது. செயற்கைமுறை மறுச் செறிவு, நீர் பயன்பாட்டைச் சிக்கனமாகச் சீரமைத்தல் தொடர்பாக, தொழில் நுட்ப வாய்ப்பு இருப்பதை யும் அது புலப்படுத்தியுள்ளது. ஆறுகளுக்குக் குறுக்கே, தக்க இடங்களில், தடுப்பு அணைகள் கட்டுவதன் மூலம் ஆறுகளின் உபரிநீர் கடலில் கலந்துவிடுவதைக் குறைக்க முடியும். இத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணி 1984–85 முதல் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படு கிறது. இந்த ஆய்விற்கு ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பு ரூ. 1 கோடிக்கும் மேல் உதவி வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசும் அதற்கிணையாக தன் பங்கிற்கு நிதி ஒதுக்கி வருகிறது. இம் மாநிலத்தில் நிலவும் கடும் தண்ணீர்ப் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு இயன்ற இடங்களிலெல்லாம் பெருமளவிற்கு மழை நீரைத் தேக்கி வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

### சமூக நலன்

**87**. ஆதி திராவிடர்கள், ஏனைய பிற்பட்ட வகுப்பினர் நலன்களைப் பாதுகாக்க, சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கொள்கையை அரசு இடையறாது பின்பற்றி வருகிறது. நடப்பாண்டில் 1983 டிசம்பர் வரை, ஆதி திராவிடர்களுக்கு, 16,216 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆதி திராவிட மாணவர்களுக்கும், துப்புரவுப் பணியாளரின் சிறார்களுக்கும், 10 புதிய மாணவர் இல்லங்களையும் அரசு தொடங்கியுள்ளது. 1984–85ஆம் ஆண்டில் பள்ளி மாணவிகளுக்காக 12 இல்லங்களையும், பள்ளி மாணவர் களுக்காக 6 இல்லங்களையும், கல்லூரி மாண விகளுக்காக 8 இல்லங்களையும் தொடங்கத் திட்ட மிடப்பட்டுள்ளது. ஆதி திராவிட மாணவிகளுக்கான இல்லங்களைக் கட்டுவது தொடர்பான மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழும் அரசு கட்டிடங் களைக் கட்டி வருகிறது. 101 மாணவரில்லங்கள் கட்ட அனுமதியளிக்கப்பட்டு 29 இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. மாணவரில்லங்களைக் கட்டு வதற்கான மாநிலத் திட்டத்தின்கீழ், 66 இல்லங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு, 27 இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன.

**88**. ஐம்பது சதவீத ஆதி திராவிட குடும்பங்கள் வறுமைக்கோட்டைத் தாண்ட உதவும் சீரிய நோக்கத் துடன் சிறப்புத் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது. 1984–85-ல், 1·80 இலட்சம் ஆதி திராவிட குடும்பங்களை மேம்படுத்தும் வகையில், பல்வேறுதுறை களின் முயற்சிகளை ஒருங்கிணைத்து, ரூ. 122.81 கோடி செலவிடப்படும். இத் திட்டங்களுக்காக ரூ. 12 கோடி சிறப்பு மத்திய உதவியாகக் கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. ஆதி திராவிடர்களுக்கான வீடுகள் கட்டும் திட்டம் தொடர்ந்து தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி நிறுவனத்தால் செயலாக்கப்பட்டு வருகிறது. ஒரு வீட்டின் கட்டுமான மதிப்பீட்டுச் செலவு நடப்பு நிதி ஆண்டுத் தொடக்கத்திலிருந்து ரூ. 4,000-லிருந்து ரூ. 6,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத் தொகை முழுவதும் உதவித் தொகையாக வழங்கப்படும்.

**89**. 15,000 பழங்குடியினர் குடும்பங்களின் வருவாயை வறுமைக்கோட்டிற்கும்மேலே உயர்த்தும் நோக்கத்துடன், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தம் ரூ. 21·67 கோடி செலவில் பழங்குடியினர் துணைத் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டுக்கான இத்திட்டச் செலவு ரூ. 6 கோடி யாகும். 3,000 குடும்பங்களுக்கு இத்திட்டத்தின்கீழ் பயன்கிட்டவேண்டுமென்று இலக்கு நிச்சயிக்கப் பட்டிருக்க, இதுவரையில் 2,953 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

**90**. பிற்பட்ட வகுப்பினர் நலனுக்கு முதன்மை அளிக்கப்பட்டுள்ளது. பிற்பட்ட வகுப்பினரின் நிலைமைகள்பற்றிய சமூக-பொருளாதார ஆய்வு ஒன்றைத் தமிழ்நாடு பிற்பட்ட வகுப்பினர் ஆணைக்குழு நடத்தி வருகிறது. 1984–85ஆம் ஆண்டில் ரூ. 30.79 இலட்சம் செலவில், பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்காக மேற்கொண்டும் 42 இல்லங்களைக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

**91**. முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின்கீழ், இம்மாநிலத்தில் 1,99,639 பேர் பயனடைகின்றனர். இவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 35 ரொக்கமாகப் பெறு வதைத் தவிர, முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு திட்டத்தின்கீழ், ஒவ்வொரு நாளும் இலவசமாக மதிய உணவும், வாரம் ஒன்றுக்கு அரை கிலோ அரிசியும் பெறுகின்றனர். உடல் ஊனமுற்றோர் பள்ளிகள் சிலவற்றில் உயர் வகுப்புகளைத் தொடங்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. காது கேளாதோருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன், 1984–85-ல்,

இண்டியில் உள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் 16 பேர் களுக்கு ஃபிட்டர் தொழிலில் பயிற்சி அளிப்பதற்காகத் தனிப்பட்ட பிரிவு ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. கடும் உடல் ஊனமுற்ற சிறார்களுக்காக மதுரையில் அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிக்குச் செயற்கை உறுப்புக் களையும், சாதனங்களையும் வழ்ங்க, மதுரையில் செயற்கை உறுப்புக்கள் தயாரிப்பு நிலையம் ஒன்று தொடங்கப்படும். விதவைகள், கணவரால் கைவிடப் பட்ட மகளிருக்காக, 1984–85-ல் மேற்கொண்டும் ஒரு பணி இல்லம் தொடங்கப்படும்.

**92**. வறுமையில் உழலும் உடல் ஊனமுற்றோர்க்குத் தேவைப்படும் இன்றியமையாத உதவிகளை ஆராய்ந்து செய்திட தனிப் பரிந்துறைக் குழுக்கள் நாடு தழுவிய அளவில் அமைக்கப்படும். வறுமையில் வாடும் ஆதரவற்றவர்களாக விளங்கும் முதியோர்களின் சரியான கணக்கு எடுக்கப்பட்டு, அவர்களுக்கு உதவித் தொகை வழங்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

**93**. மகளிர் முன்னேற்றத்திற்காகத் தமிழ்நாடு மகளிர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றக் கருதியுள்ளது. ஆறு தொழில்களில் மகளிருக்கான தனிப்பட்ட பிரிவுகள் மூன்று தொழிற்பயிற்சிப் பள்ளிகளும், ஒரு பல்தொழிற் பயிற்சிப் பயிலகத்திலும் ஏற்படுத்தக் கருதப் பட்டுள்ளது.

### வருவாய் நிர்வாகம் மற்றும் நிலச் சீர்திருத்தம்

**94**. நடப்பு நிதி ஆண்டில், 1983 டிசம்பர் வரையில், 9029.42 ஏக்கர் பரப்பளவுள்ள சாகுபடி நிலங்கள், நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுக்கப் பட்டன; இதே கால அளவில் 149,413 வீட்டு மனைகள் வழங்கப்பட்டன; இவற்றில் 73,224 மனைகள் ஆதி திராவிடர்களுக்கும் 3,767 மனைகள் பழங்குடி யினருக்கும் 72,422 மனைகள் ஏனையோருக்கும் வழங்கப்பட்டன.

**95**. வருவாய் ஆய்வாளருக்கு அலுவலகங்கள்-குடி யிருப்புகள் அளிக்கும் திட்டத்தின்கீழ், 958 குடியிருப்புகள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதுவரை 609 குடியிருப்புகளுக்கான கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. ஏனைய கட்டிடங்கள் பல்வேறு நிலைகளில் உள்ளன. வட்டாட்சியர் அலுவலகங்கள், கோட்டாட்சி அலுவலகங்கள் சிலவற்றுக்காக, 1984–85-ல் புதிய கட்டிடங்கள் கட்டப்படும்.



**96**. தமிழ்நாடு 1969ஆம் ஆண்டு வேளாண்மை நிலக் குத்தகை உரிமைப் பதிவேடுகள் சட்டத்தின்கீழ், 1983ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30ஆம் நாளன்று உள்ளவாறு 439,464 குத்தகைக்காரர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இந் நிலங்களின் மொத்தப் பரப்பளவு 636,513 ஏக்கர் ஆகும். பதிவேட்டு அலுவலருக்கு உதவுவதற்காக வட்ட அளவில் அலுவல் சார்பற்ற ஆலோசனைக் குழுக்களை அரசு அமைத் துள்ளது.

**97**. உபரி நில ஒப்படைதாரர்களுக்கு நிதி உதவி அளிக்கும் மத்திய அரசுத் திட்டத்தின்கீழ், 1983–84ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட ரூ.10 லட்சத்தில் 1983ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாளன்று வரை ரூ. 7,00,873 செலவிடப்பட்டுள்ளது.

### காவல் துறையும் நீதிமன்றங்களும்

**98**. நடப்பு நிதி ஆண்டில், சட்டம்-ஒழுங்கு நிலைமை, நல்ல முறையில், மன நிறைவளிப்பதாக உள்ளது. காவல் துறையின் செயல் திறனுக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். .காவல் துறையை நவீனமய மாக்கவும், வலுப்படுத்தவும், காவலர்களின் நலனைப் பேணிக்காக்கவும், மாநில அரசு, பல்வேறு நடவடிக் கைகளை மேற்கொண்டுள்ளது. காவலர்களின் நலத் திட்டத்தின்கீழ், ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டு அவர் களுக்கு மலிவு விலையில் அளிக்கப்பட்டுவரும் இன்றி யமையாப் பொருட்களான அரிசி, எண்ணெய், கோதுமை, சர்க்கரை முதலியவற்றின் மான்ய அளவைப் பெருக்கக் கருதப்பட்டுள்ளது. அவர்களுக்குச் சீருடை, துணிகள் வழங்குவதற்காக ரூ. 62·50 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**99**. மீ உயர்அலைக் கோபுரங்கள் அமைப்பது, மீ உயர் அலைச் சாதனங்கள் வாங்குவது ஆகியவற்றின் மூலம் காவல் துறையின் தகவல் போக்குவரத்து வசதி மேம்படுத்தப்படும். இத்துடன், வழக்கமான பணி களும், குடியிருப்புக் கட்டிடங்கள், அலுவலகங்கள் கட்டுதல் தொடர்பான பணிகளும் மேற்கொள்ளப்படும்.

**100**. நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளைத் துரிதமாக விசாரித்துத் தீர்ப்பு வழங்க, அரசு புதிய நீதிமன்றங்கள் ஏற்படுத்தவும் கருதியுள்ளது.

### இருபது அம்சத் திட்டம்

**101**. நம் மாநிலம் அனைத்து நிலைகளிலும் மேம்பாடு அடைய வேண்டுமென்பதற்காக, மாநில அரசு, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காகப் பாரதப் பிரதமர் அறிவித்துள்ள புதிய இருபது அம்சத் திட்டத்திற்கு அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தை முறையாகச் செயல்படுத்துவதிலும், இத் திட்ட இலக்கை எய்துவதிலும் குறிப்பாக இத் திட்டத்தில் உள்ள வருவாய் திரட்டும் பொருளாதார நடவடிக்கைகளில் இலக்கை எய்துவதிலும் தொடக்கத்தி லிருந்து தமிழ்நாடு பிற மாநிலங்களைவிட முன்னணியில் இருந்து வந்துள்ளது. 1982–83ஆம் ஆண்டில் இருபது அம்சத் திட்டத்தின்கீழ் சாதனை புரிந்ததில், தமிழ்நாடு, பிற மாநிலங்களைவிட முதன்மையாக விளங்கியது. இவ் வகையில், மாநிலங்களின் சாதனை யைத் தீர்மானிக்க திட்டக்குழு தெரிந்தெடுத்துக் கொண்ட 16 அம்சங்களில் 14 அம்சங்களின்கீழ் சாதனை புரிந்தமையில் தமிழ்நாடு முதன்மையாகத் திகழ்ந்தது. ஒருங்கிணைந்த கிராமப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்த் தமிழ்நாடு ஆற்றியுள்ள பணி, சாதனை இலக்கில், 120·2 சதவீதமாக இருந்தது. கிராமப்புற வேலை வாய்ப்பு தேசியத் திட்டத்தைச் செயல் படுத்தியதில், இம்மாநிலத்தின் சாதனை, மிக உயர்ந்து 242·2 சதவீதமாக இருந்தது. 1984 சனவரி திங்கள் இறுதிவரை தமிழ்நாடு, பின்வரும் துறைகளில் 80 சத வீதத்திற்கும் அதிகமாக இலக்கை எய்தியுள்ளது. அவையாவன : கிராம வேலை வாய்ப்பு தேசிய திட்டம் (83·5 சதவீதம்) ; வழங்கப்பட்ட உபரி நிலம் (92·7 சதவீதம்) ; மறுவாழ்வு அளிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்கள் (158 சதவீதம்) ; பயனடைந்த ஆதி திராவிடர் குடும்பங்கள் (96·6 சதவீதம்) ; வழங்கப்பட்ட வீட்டு மனைகள் (112 சதவீதம்); உதவி அளிக்கப்பட்ட குடிசைப் பகுதி மக்கள் தொகை (88·4 சதவீதம்) ; நடப்பட்ட மரங்கள் (86 சத வீதம்) ; நிறுவப்பட்ட கரிம வாயுத் தொழிற்சாலைகள் (110·6 சதவீதம்) ; கருத்தடை அறுவை சிகிச்சை (94·7 சதவீதம்) ; கொத்தடிமைத் தொழிலாளர்களை விடுவிப்பதிலும் கருத்தடை அறுவை சிகிச்சை எண்ணிக் கையிலும் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடம் பெற்றுள்ளது. வீட்டு மனைகள் வழங்குவதிலும் கரிம வாயு தொழிற்சாலைகள் அமைப்பதிலும் தமிழ் நாடு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விஞ்சி விட்டது. மத்தியத் திட்டகுழு, 1984 சனவரியில் செய்த ஆய்வில் தமிழ் நாட்டின் சாதனையை 80 சதவீதத்திற்கு மேற் பட்ட சாதனை புரிந்த தொகுதியில் சேர்த்துள்ளது. இடைவிடாது இத்தகைய நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதனால் நடப்பு ஆண்டிலும் இம் மாநிலம் முன்னணியிலேயே இருந்து வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்

**102**. ஓர் ஆண்டில், நாள்தோறும் மாநிலம் முழுவது மாக சுமார் 65 இலட்சம் குழந்தைகளுக்கு உணவளிக்கும் இத் திட்டம் தொடர்ந்து சிறப்பான திட்டமாகச் செயல் பட்டு வருகிறது. இத் திட்டம், முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கும் 1983ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 15ஆம் நாள் முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது. முதியோர் உதவித் தொகை பெறும் சுமார் 1,99,639 பேர் இத் திட்டத்தின்கீழ் பயன் பெறுகின்றனர். இவர்களில், 43,888 பேர் ஆதரவற்ற விதவைகள், 14,471 பேர் உடலூனமுற்றோர், மற்றும் 30,000 பேர் வேளாண்மைத் தொழிலாளர்கள். தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் நல நிதியிலிருந்து முதியோர் உதவித் தொகை பெறுகின்ற முன்னாள் படைவீரர் களுக்கும் இத் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

**103**. இத் திட்டம் கொண்டுவரப்பட்டதன் பயனாக, பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கைப் பொதுவாக பெருகியுள்ளது. 1982–83ஆம் ஆண்டில் 2.63 இலட்சம் சிறார்களும் 1983–84ஆம் ஆண்டில் 3.82 இலட்சம் சிறார்களும் பள்ளிகளில் அதி[illegible]ாகச் சேர்ந் துள்ளனர். இத் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வருமுன், பள்ளிகளில் ஆண்டொன்றுக்கு கூடுதலாகச் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை சராசரியாக 1·75 லட்சம்தான் இருந்தது. கூடுதலாகச் சேர்க்கப் படும் மாணவர்கள் எண்ணிக்கைக் கணிசமாக கூடிய திலிருந்து இத் திட்டத்தின் நன்மைகள் தெளிவாகத் தெரிகின்றன. மேலும், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ், குழந்தைகள் நலனைப் பேணும் வகையில் விரிவான திட்டம் ஒன்றும் வகுக்கப் பட்டுள்ளது. மருத்துவப் பணியாளர்கள் சிறார்களின் நலன் தொடர்பான அட்டைகளைப் பராமரிப்பதுடன், சிறார் நல மையங்களையும் முறையாகப் பார்வையிடு கின்றனர். அம்மைப்பால் குத்தும் திட்டமும்,



நோய்த் தடுப்பு ஊசி போடும் திட்டங்களும் மேற் கொள்ளப்படுகின்றன. தெரிந்தெடுக்கப்பட்ட சிறார் நல மையங்களில் மாதிரி ஆய்வு ஒன்று நடத்தப் பட்டதில், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் சிறார்களின் உயரம், எடை, பொதுவான உடல்நலன் கூடியிருப்பது தெரிய வந்துள்ளது.

**104**. இவ்வாறாக, முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களான சிறார்களின் கல்வி, சுகாதாரம், பிறநலன் ஆகியவை நிறைவடைந்து வருகின்றன. வரும் ஆண்டுகளில் இத் திட்டம் தொடர்ந்து முனைப்பாகச் செயல்படுத்தப் படும்.

### வேலைவாய்ப்பு

**105**. வேலையில்லாப் பிரச்சினையைப் போக்குவதில் அரசு உரிய கவனம் செலுத்தி வருகிறது. இப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேலை வாய்ப்புப் பணிகள் துறை ஏற்படுத்தப்பட்டு தாற்காலிகமான மற்றும் நிலையான தீர்வு காண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மோசமான பருவநிலைகளால் பாதிக்கப்பட்ட நிலமற்ற உழவர்கள் மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்கள் ஆகியோரிடையே நிலவிய வேலைவாய்ப்பில்லா பிரச்சினைக்குத் தீர்வு காண, வறட்சித்துயர் தணிப்பு நடவடிக்கைகளும், கிராமப்புற வேலை வாய்ப்புத் தேசியத் திட்டப் பணிகளும், படித்தவர்களுக்கிடையே நிலவிய வேலை வாய்ப்பில்லா • பிரச்சினைகளுக்குத் தீர்வு காண பல்வேறு திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன.

**106**. மத்திய அரசு உதவியுடன் செயலாக்கப்படும் திட்டமாகிய கிராம வேலைவாய்ப்புத் தேசியத் திட்டத் தின்கீழ், 1979–80 முதல் 1984 சனவரி முடிய உள்ள கால அளவில், 171,010 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 36.85 கோடியாகும். 1984–85ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக ரூ. 42.60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் சிறப்புத் தன்மை என்னவென்றால் வேலையற்ற ஏராளமான தொழி லாளர்களுக்கு வேலைவாய்ப்பை அளிப்பதுடன் கிராம மக்களுக்கு இன்றியமையாதத் தேவைகளான சாலைகள், சமுதாயக் கூடங்கள், பள்ளிக் கட்டிடங்கள் போன்ற வசதிகளும் இதனால் உருவாகியுள்ளன.

**107**. வேலை தேடுவோருக்கு மேலும் சிறந்த பணி வசதிகளைச் செய்துகொடுக்கும் நோக்குடன், வேலை வாய்ப்பு அலுவலகங்களில் கம்பியூட்டர் முறையைக் கொண்டுவர அரசு கருதியுள்ளது. இத் திட்டம், படிப்படியாகச் செயல்படுத்தப்படும். சென்னையிலுள்ள ஐந்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 1984–85ஆம் ஆண்டு ரூ. 6 இலட்சம் செலவில் கம்பியூட்டர் முறை செயல்படுத்தப்படும்.

**108.** ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1984 சனவரி திங்கள் முடிய 173,431 பேர்களுக்கு நன்மை பயக்கும் வகையில், ரூ. 54.51 கோடி மான்ய உதவித் தொகையாகவும், கடன் வழங்கும் நிறுவனங்கள் அளிக்கும் கடன் தொகையாகவும் திரட்டப்பட்டுள்ளன. இத் திட்டத்தின்கீழ் 61,933 ஆதி திராவிடர்களும், பழங்குடி மக்களும் பயனடைந்துள்ளனர். இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் 1984–85 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நிலைநாட்டப்படும் என்று எதிர் பார்க்கலாம்.

**109.** சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் வறுமைக் கோட்டைக் கடக்க இயலும் வகையில் ஏழை எளிய மக்களுக்குக் கடன் உதவி வழங்க, அரசு 1983ஆம் ஆண்டில் நிறுவன நிதித் துறை என்ற தனிப்பட்டத் துறையை ஏற்படுத்தியுள்ளது. இது ஏற்படுத்தப் பட்ட இரண்டு திங்களுக்குள் 170,564 பேர்களுக்கு ரூ. 30.16 கோடி அளவிற்குக் கடன்களும், மான்யமும் வழங்கி யுள்ளது. இவர்களில் 56,966 பேர் ஆதி திராவிடர் களாவர். மார்ச் 1984-ல் இத் துறை இந்த மாநிலத்தி லுள்ள 175,000 ஏழை எளிய மக்களுக்கு சுமார் ரூ. 40 கோடி வங்கிக் கடன் உதவி வழங்கத் திட்டமிட்டுள்ளது.

### திட்டச் செலவு

**110.** மத்தியத் திட்டக் குழு முடிவு செய்த நிதி ஒதுக்கத்திற்கும் மேல் தன் திட்டப் பணிகளைச் செயல் படுத்துவதில், தமிழ்நாடு அரசு தனது பெருமைக்குரிய நிலையைக் காத்து வந்துள்ளது. 1983–84ஆம் ஆண்டு, மத்தியத் திட்டக் குழு ரூ. 845 கோடிக்கு அனுமதி யளித்தது. திருத்த மதிப்பீட்டில் ரூ. 861.87 கோடி செலவாகும் என நாம் எதிர்பார்க்கிறோம். அடுத்த ஆண்டிற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ள ரூ. 927 கோடி நிதி ஒதுக்கத்திற்கு மாறாக, ரூ. 979.22 கோடி வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டை உருவாக்கியுள்ளோம். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மை, அது தொடர்பான பணிகள், பாசனம், தொழில், போக்கு வரத்து, சாலைகள் போன்ற முக்கியத் துறைகளின்கீழ் ஏற்பளிக்கப்பட்ட திட்டச் செலவிற்கு அதிகமாகவே மாநில அரசு செல்விட்டுள்ளது. வளர்ச்சித் துறைகளுக்கு மாநில அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது என்பது இதிலிருந்து தெரியவரும். தொடர்ந்து இரு முறை வறட்சியும், வெள்ளப் பெருக்கும் ஏற்படாது இருந்திருப்பின், நமது சாதனை மேலும் நல்ல முறையில் அமைந்திருக்கும். குறைந்த அளவு தேவைகள் திட்டத்திலும் மாநில அரசு தொடர்ந்து திட்ட இலக்கை எய்தியுள்ளது; சில நேரங்களில் அத் திட்ட இலக்கையும் தாண்டியுள்ளது. ஐந் தாண்டுத் திட்டக் கால அளவில் ரூ. 241 கோடி நிதி ஒதுக்கத்திற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்க, இத் திட்டத்திற்கு 1983–84 வரை, மாநில அரசு ரூ. 256 கோடி செலவிட்டது. மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய மாநில அரசு எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது என்பதை இது காட்டுகிறது. குறைந்த அளவுத் தேவைகள் திட்டத்தின்கீழ்ச் செய்யப் பட்ட செலவுடன் மாநில அரசு, இத் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதைக் கருத்திற் கொண்டு தன்னிறைவுத் திட்டங்களுக்கு ரூ. 207 கோடி செலவிட்டுள்ளது.

### தொழிற் கல்வி

**111.** வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு முக்கியமான மனித ஆற்றலைப் பெறச்செய்யும் பொருட்டு கல்வி முறையைச் சீரமைப்பது குறித்து அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது. ஆடவருக்கும், மகளிருக்கும்



தேவையான ஆற்றலைக் கல்வி கொடுக்க வேண்டும்; அப்போதுதான், அவர்கள் தங்களுக்குப் பொருத்தமான வாழ்க்கைத் தொழிலை அல்லது சுய வேலைவாய்ப்பைத் தேடிக் கொள்ள முடியும். இந்தக் குறிக்கோளை அடைய பள்ளியின் எல்லா நிலைகளிலும் கல்வியை வாழ்க்கைத் தொழிலுக்குகந்ததாக ஆக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பெரும் நிதித்தேவையைக் கருத்திற்கொண்டு, கல்வியின் வெவ்வேறு நிலைகளில் மாணவர்களுக்குச் சிறந்த ஆற்றலை அளிக்க வகை செய்வதுடன், கல்விமுறையை மாற்றியமைக்கும் பணியை மேற்கொள்ள எட்டாவது நிதிக் குழுவிடம் நிதி உதவியை நாம் கேட்டுள்ளோம். அப்போதுதான், வட்டாரங்களுக்கும், பகுதிகளுக்குமான வேலைவாய்ப்பு வசதிகள் முழுவதுமாகப் பயன்படுத்திக்கொள்ளப் படலாம். பாடத் திட்டத்தில் தக்க மாறுதல்களைச் செய்து, சீரமைப்பது உட்பட இதற்கான விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. 1985–86-லிருந்து படிப்படியாகச் செயலுக்குக் கொண்டுவருவதற்காக, வரும் ஆண்டில் இந்திய அரசுக்கு அந்த அறிக்கை அனுப்பி வைக்கப்படும்.

### அரசுப் பணியாளர் நலன்

**112.** அரசு மேற்கொண்ட பல்வேறு பணியாளர் நல நடவடிக்கைகள் பற்றி ஏற்கெனவே ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது. ஓய்வுகாலப் பயனை உயர்த்துவது பணியாளர்களின் நீண்டகாலக் கோரிக்கை களில் ஒன்றாகும். அரசுப் பணியாளர் ஒவ்வொரு வரும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 20 என்ற வீதத்தில், அத்தொகை கூட்டு வட்டியுடன் ரூ. 5,000 ஆகச் சேருகிற வரையில் செலுத்த வேண்டுமென்றும், பணியாளர் ஓய்வு பெறும் பொழுது அவர்கள் செலுத் தியுள்ள தொகையுடன் அரசு ரூ. 5,000 கொடுக்கும் என்றும் இதற்காக வகை செய்யும் திட்டம் ஒன்று, 1984ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாள் முதற்கொண்டு செயலுக்கு வரும் என்றும் அரசு அறிவித்துள்ளது. இத் திட்டத்தின் கீழ், அரசுப் பணியாளர்கள் திங்கள் ஒன்றுக்கு செலுத்தும் ரூ. 20. அதற்கான வட்டித் தொகையுடன் ரூ. 5,000 சேரும் வரையில் தொடர்ந்து செலுத்தப்பட வேண்டும், இத் தொகை சேர்ந்தவுடன் பணியாளர்கள் தொகை செலுத்தவேண்டியதில்லை. இக்கணக்கின்படி பார்த் தால் சுமார் ரூ. 3,000-க்குத்தான் எந்த அரசு ஊழியரும் இத்திட்டத்தில் முதலீடு செய்ய நேரிடும். வருங்கால வைப்பு நிதிக்குக் கொடுக்கப்படும் அதே கூட்டுவட்டிக்குச் சமமாக இத்தொகைக்கும் வட்டி கொடுக்கப்படும்.



அரசுப் பணியாளர் இயல்பாக ஓய்வு பெறுகையில் அரசு கொடுக்கும் ரூ. 5,000 இத்தொகையுடன் சேர்த்துக் கொடுக்கப்படும். இவ்வாறாக, 1984ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாளுக்குப் பின்னர், அரசுப் பணியாளர்கள் இயல்பாக ஓய்வு பெறுகையில், நிர்ணயித்த ரூ. 5,000மும், அவர்கள் செலுத்திய தொகையையும், அதற்குரிய கூட்டு வட்டியுடன் சேர்த்துப் பெறுவர். அரசுப் பணியாளர்கள் செலுத்தும் தொகை அதற்குரிய கூட்டு வட்டியுடன் ரூ.5,000-ஆக சேரும் நாளும், அவர்கள் பணியிலிருந்து இயல்பாக ஓய்வு பெறும் நாளும் ஒன்றாக இருக்கும் நேர்வில், அவர்கள் ரூ. 10,000 பெறுவர். அந்த நாளுக்குப் பின்னர் ஓய்வு பெறுபவர்கள் அதற்கேற்ப அதிகமான தொகை பெறுவர். புதிதாகப் பணியில் சேரும் ஒருவர் அவர் எத்தனை ஆண்டுகள் பணியாற்றியுள்ளாரோ அதைப் பொறுத்து அத் தொகை ரூ. 30,000-க்கும் மேற்படலாம். அரசுப் பணியாளர்களின் பிரதிநிதிகளைக் கலந்தாலோ சித்து வகுக்கப்பட்ட இத்திட்டம் அரசுப் பணியாளர்கள் அனைவரின் ஒருமித்த பாராட்டுதலைப் பெற்றுள்ளது.

**113.** ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டிருந்ததற்கு இணங்க நான்காவது ஊதிய ஆணைக் குழு (சம்பளக் கமிஷன்) சென்னை உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி ஒருவர் தலைமையில் ஒரு நபர் குழுவாக 1984ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1ஆம் நாள் அன்றி லிருந்து செயல்படத் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொறுப்பேற்கும் நீதிபதியின் பெயர் பின்னர் அறிவிக்கப்படும்.



### வரவு-செலவுத் திட்ட விவரம்

**114.** 1983–84ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் திட்டங்களுக்கும், திட்டத்தில் சேராதத் திட்டங்களுக்கும் இயன்ற அளவு நிதி ஒதுக்கம் செய் யப்பட்டது. இருந்தபோதிலும், செலவைச் சிக்கனப் படுத்த எல்லா முயற்சிகளையும் மேற்கொண்ட போதிலும் நடப்பாண்டில் வருவாய்க் கணக்கில் சுமார் ரூ. 200 கோடி கூடுதல் செலவு ஏற்படலாம் என்பது திருத்த மதிப்பீட்டிலிருந்து தெரியவருகிறது. கிருஷ்ணா நதி நீர் திட்டத்திற்காக ரூ. 30 கோடி யும், வறட்சி நிவாரணத்திற்காக ரூ. 55 முதல் ரூ. 60 கோடியும், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத் திற்கு உதவித் தொகை வழங்க ரூ. 30 கோடியும் ஒதுக் கியதே இக் கூடுதல் செலவிற்கு முக்கிய காரணமாகும். இதைத் தவிர, மைய அரசுத் திட்டங்களின் காரண மாகவும், மற்றத் திட்டச் செலவுகள் பெருகியதன் மூலமாகவும் இந்தப் பெருக்கம் ஏற்பட்டுள்ளது.

### நிதி நிலை

**115.** சென்ற ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத் துடன் கொடுக்கப்பட்ட 1982–83 திருத்த மதிப்பீட்டில் இறுதிப் பற்றாக்குறை ரூ. 89.02 கோடியாக இருக்கு மென்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் 1982–83ஆம் ஆண்டுக்குரிய இறுதிப் பற்றாக்குறை ரூ. 4.04 கோடி யாகவே அமைந்தது. 1983–84ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீட்டில் வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ. 1,892.86 கோடியாக இருக்குமென்று மதிப்பிடப் பட்டுள்ளது. வருவாய்க் கணக்கில் வரவினம் இவ் வாறிருக்க, வருவாய்க் கணக்கில் செலவு ரூ. 1,869.33 கோடியாக இருக்குமென்று கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாறாக, வருவாய்க் கணக்கில் ரூ. 23.53 கோடி உபரி இருக்குமென்று மதிப்பிடப்படுகிறது. மூலதனக் கணக்கில் செலவு ரூ. 186.32 கோடியாகும். பொதுக் கடன் என்பதன்கீழ் ரூ. 148.03 கோடி உபரியாக இருக்குமென்றும் கடன் செலவின்கீழ் நிகரப் பற்றாக் குறை ரூ. 233.86 கோடியாக இருக்குமென்றும் மதிப் பிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டக் கணக்கின்படி தொகு நிதியின்கீழ் ரூ. 248·62 கோடி பற்றாக்குறை இருக்கும். அதே சமயத்தில் பொதுக் கணக்கின்கீழ் ரூ. 123.35 கோடி உபரி எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் மொத்தப் பற்றாக்குறை ரூ. 125.27 கோடி யாகக் குறையும். தொடக்கப் பற்றாக்குறையான ரூ. 4.04 கோடியையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், நடப்பாண்டுக்கான இறுதிப் பற்றாக்குறை ரூ. 129.31 கோடியாக இருக்கும்.

**116.** 1984–85ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்படி, வருவாய்க் கணக்கில் வரவு ரூ. 2,065·43 கோடியாகும். வருவாய்க் கணக்கில் செலவு ரூ. 1,946·38 கோடியாகும். இதன்படி வருவாய்க் கணக்கில் ரூ. 119·05 கோடி உபரி இருக்கும். மூலதனச் செலவு ரூ. 178·43 கோடியாக இருக்குமென்றும், பொதுக்கடன் என்பதன்கீழ் நிகர உபரி ரூ. 145·76 கோடியாக இருக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. கடன்கள்-முன்பணங்கள் என்பதன்கீழ் நிகரமாக ரூ. 272·92 கோடி பற்றாக்குறை இருக்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது. மொத்தத்தில் தொகு நிதியில் ரூ. 186·54 கோடி பற்றாக்குறை இருக்கும். பொதுக் கணக்கில் ரூ. 114·35 கோடி உபரி இருக்கலாம். 1984–85 வரவு-செலவுத் திட்டத்தின்படிக்கான ரூ. 72·19 கோடி பற்றாக்குறையையும் தொடக்கப் பற்றாக்குறையான ரூ. 129·31 கோடியையும் கணக்கில் எடுத்துக்கொண்டால் அடுத்த நிதி ஆண்டுக்கான இறுதிப் பற்றாக்குறை ரூ. 201·50 கோடியாக இருக்கும்.

**117.** மாநில அரசின் வருவாய்க்கும் செலவினங் களுக்கும் இடையே பெரிய அளவில் பற்றாக்குறை இருப்பதைக் கருதி, கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கான அவசியத்தை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் உணர்ந்துகொள்வர்.

**118.** கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், ஒரு சில இனங்கள் குறித்து நுழைவு வரி விதிக்கக் கருதியது பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நினைவில் வைத்திருப்பார்கள். எனினும், சமுதாயத்தின் பல்வேறு பிரிவைச் சேர்ந்த பிரதிநிதிகள் முறையிட்டுக் கொண்டதைக் கருத்தில் கொண்டு வணிகர்கள், பொது மக்கள் ஆகியோரின் நலனைப் பாதிக்காமல் செயலுக்குக் கொண்டுவரக் கூடிய மாற்று வரி ஆதாரங்களை ஆய்ந்து அரசுக்கு அறிவிக்க, அரசு, குழு ஒன்றை நியமித்தது. கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்காக நுழைவு வரிக்குப் பதிலாகக் கூடுதல் விற்பனை வரியை

உயர்த்தலாம் என்று மேற்படி குழுவின் அரசு சார்பற்ற உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர். எனினும், இவ்வரிச் சுமையை, வணிகர்கள், நுகர்வோர்கள்மீது சுமத்தக்கூடாது என்றுள்ள தடையை எடுக்கவேண்டும் என்று அவர்கள் கருத்து தெரிவித்தனர். தமிழ் நாட்டிற்கும், அண்டை மாநிலங்களுக்கும் இடையே தற்போதுள்ள விற்பனை வரியில் கணிசமான அளவு வேறுபாடு இருக்கும் இனங்களில் எல்லாம், கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டும் பொருட்டு, தமிழ் நாட்டில் அத்தகைய இனங்கள் தொடர்பாக விற்பனை வரியை உயர்த்துவதற்கு வாய்ப்பு உள்ளது என்றும் குழு கருத்து தெரிவித்துள்ளது. கூடுதல் நிதி ஆதாரங் களைத் திரட்டுவதற்கான செயற்குறிப்புகளை வகுக்கையில், இக் குழுவின் கருத்துக்களை அரசு கருத்தில் கொண்டுள்ளது. எனினும், தற்போது விதிக்கக் கருதப் பட்டுள்ள கூடுதல் விற்பனை வரி வீதங்கள், வரி விதிக்கத் தக்க விற்பனைத் தொகை ரூ. 3 இலட்சத்திற்கு மேற் பட்டால்தான் விதிக்கப்படலாம் என்பதைக் கருத்தில் கொண்டு, இத்தகைய கூடுதல் வரி வீதங்கள், வணிக சமுதாயத்திற்குச் சுமையாக இருக்காது என்றும் எனவே வரிச்சுமையை, நுகர்வோரிடமிருந்து வசூலிக்க வேண்டியதில்லை என்றும் கருதப்படுகிறது.

**119.** எனவே, கீழ்க்கண்ட வரிவிதிப்புகளைச் செயலுக்குக் கொண்டுவரக் கருதப்படுகிறது—

(1) ஆழ்ந்த ஆலோசனைக்குப் பின்னர், கூடுதல் விற்பனை வரி வீதங்களை 1984ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாள் முதற்கொண்டு கீழ்க் குறிப்பிட்ட வாறு உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது :—

(அ) ரூ. 3 இலட்சத்துக்குமேல் ரூ. 5 இலட்சம் வரையுள்ள வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகைக்கான வரி வீதத்தை 0·4 சதவீதத்திலிருந்து 0·5 சதவீதமாக உயர்த்துதல்.

(ஆ) ரூ. 5 இலட்சத்திற்கு மேல் ரூ. 7 இலட்சம் வரை வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகைக்கான வரிவீதத்தை 0·5 சதவீதத்திலிருந்து 0·7 சதவீதமாக உயர்த்துதல்.

(இ) ரூ. 7 இலட்சத்திற்கு மேல் ரூ. 10 இலட்சம் வரையுள்ள வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகைக்கான வரி வீதத்தை 0·6 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாக உயர்த்துதல்.

(ஈ) ரூ. 10 இலட்சத்திற்கு மேற்பட்ட வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகைக்கான வரி வீதத்தை 0·7 சதவீதத்திலிருந்து 1·25 சதவீதமாக உயர்த்துதல்.

வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகையுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் மேற்குறிப்பிட்ட வரி விதிப்புகள் ஏற்ற வீதத்தில் அமைந்துள்ளதால், வணிகர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் வரியினால் அவர்களுக்கு அதிகச் சுமை ஏற்படாது. இத்தகைய வரி விதிப்புகளினால் கூடுதலாக வருவாய் ரூ. 20·25 கோடி அளவிற்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(2) தற்போது தமிழ்நாட்டில் ஒரு சில பொருள் களின்மீது விதிக்கப்படும் விற்பனை வரி வீதம், அண்டைய மாநிலங்களான கருநாடகம், ஆந்திரம், கேரளம் ஆகிய மாநிலங்களில் விதிக்கப்படும் வரி வீதங்களை விடக் குறைவாக உள்ளது. எனினும், இத்தகைய பொருள்களில் ஒரு சிலவற்றின் மீது, குறிப்பாகப் பெட்ரோலியம் பொருள்கள் மீது மட்டுமே, விற்பனை வரி வீதத்தை உயர்த்தக் கருதப்படுகிறது. இவ்வாறு உயர்த்தப்படும் விற்பனை வரி வீதங்கள்



அறிவிக்கை நாளிலிருந்து நடைமுறைக்கு வரும். இதன் விவரங்கள் வருமாறு :—

| | |
|---|---|
| (அ) பெட்ரோல் .. | 11 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. |
| (ஆ) விமான டர்பைன் எண்ணெய். | 7 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. |
| (இ) உயர்வேக டீசல் எண்ணெய். | 11 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. |
| (ஈ) இலகுவான டீசல் எண்ணெய். | 11 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. |
| (உ) மசகு எண்ணெய் வகையறா. | 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. |
| (ஊ) கனிம எண்ணெய் .. | 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. |

இவ்வரி விதிப்புகளினால், கூடுதலாக ரூ. 27 கோடி வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




(3) கோன், ஹோசைரி நூல் நீங்கலாக பருத்தி நூல் விற்பனைமீது விதிக்கப்படும் விற்பனை வரியை 3 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக உயர்த்தத் திட்ட மிடப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ. 5 கோடி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**120.** இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் செய்யப் பட்டுள்ள 46-வது திருத்தத்தினால், மாநில அரசுகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி தவணைக் கொள்முதல், பணி ஒப்பந்தக் குத்தகை போன்ற நடவடிக்கைகள் மீதும் விற்பனை வரி விதிக்க மாநில அரசுக்கு இயலும் வகையில் அதிகாரம் அளிக்கும் சட்ட முன் வடிவு ஒன்று இச்சட்ட மன்றக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படுகிறது. மேலும், சிப்பம் செய்யப்படும் பொருள்களின்மீது விதிக்கப்படும் வீதங்களிலேயே சிப்பப் பொருள்களுக்கும் சிப்பக் கட்டணங்களுக்கும் வரி விதிக்கவும் வகை செய்யும் சட்ட முன்வடிவு ஒன்றும் இச்சட்ட மன்றக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படுகிறது. இந் நடவடிக்கைகளினால் ரூ. 5 கோடி ரூபாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**121.** கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டு வதற்கான இத்தகைய நடவடிக்கைகளினால் மொத்தம் ரூ. 57.25 கோடி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

**122.** அதே சமயத்தில், கீழ்க்காணும் வரிச் சலுகைகளையும் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி யடைவர் :—

(அ) தற்போது ரூ. 50,000 மொத்த விற்பனைத் தொகை வரையில், பலமுனை விற்பனை வரி விதிப்பினின்றும் விலக்கு அளிக்கப்படுகிறது. இத்தகைய விலக்கு அளிப்பதற்கான வரம்பை ரூ. 1,00,000ஆக உயர்த்த தற்போது கருதப்படுகிறது. இதனால், சுமார் 20,000 வணிகர்கள் பயனடைவர் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதனால் ரூ. 3 கோடி அளவில் வருவாய் இழப்பு ஏற்படும்.

(ஆ) ரூ. 30,000-க்குக் குறையாத மொத்த விற்பனைத் தொகையைக் கொண்ட வணிகர்கள் தமிழ் நாடு பொது விற்பனைச் சட்டத்தின்கீழ்ப் பதிவுசெய்து கொள்ள வேண்டுமென்று தற்போது வகை செய்யப் பட்டுள்ளது. இந்த மொத்த விற்பனைத் தொகையை ரூ. 50,000 ஆக உயர்த்தத் தற்போது கருதப் பட்டுள்ளது.

(இ) கையினால் தயாரிக்கப்படும் விளையாட்டுப் பொருட்கள், கலைப் பொருட்கள் ஆகியவற்றின் மாநிலங்களுக்கிடையிலான விற்பனை மீது விதிக்கப்படும் வரியைப் பொறுத்தவரையில், 4 சதவீத சலுகை வீதத்தை இத்தகைய பொருள்களுக்கும் நீட்டிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) கோழித் தீவனம், கால்நடை கலவைத் தீவனம் ஆகியவற்றின் மீது, தற்போது 5 சதவீத பலமுனை விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இதனை மாற்றி இப்பொருள்கள் மீது 5 சதவீத ஒருமுனை விற்பனை வரியை விதிக்க தற்போது கருதப்பட்டுள்ளது. இதனால் ரூ. 25 இலட்சம் வரையில் வருவாய் இழப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(உ) கனரக மோட்டார் வண்டிகளின் அடிச் சட்டங்கள் மீது அண்டை மாநிலங்களான புதுச்சேரி, கருநாடகம் ஆகிய மாநிலங்களில் விற்பனை வரி குறைக்கப்பட்டுள்ளதால், இத்தகைய கனரக மோட்டார் வண்டிகளின் அடிச்சட்டங்கள் மீதான விற்பனை வரி வீதத்தை, இத்தகைய அடிச்சட்டங்கள் ஒப்படை விற்பனை அடிப்படையில் விற்கப்படுவதைத் தடுக்கும் பொருட்டு, 9 சதவீதத்திலிருந்து 6 சத வீதமாகக் குறைக்கக் கருதப்பட்டுள்ளது.

**123.** மேற்குறிப்பிட்ட வரிச் சலுகைகளினால், ரூ. 3·25 கோடி அளவிற்கு வருவாய் இழப்பு ஏற்படும் என்று மதிப்பிடப்படுகிறது. எனவே, தற்போது, வரி விதிப்பு நடவடிக்கைகளின் மூலம் கூடுதலாகக் கிடைக்கக் கூடிய நிகர வருவாய் ரூ. 54 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய நடவடிக் கைகளின் பலனாக அடுத்த ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டப் பற்றாக்குறை ரூ. 1,47·50 கோடி யாகக் குறையும்.

**124.** முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் பலனாக எல்லா வகையிலும் சிறார்களுக்கு ஏற்பட்டுள்ள நன்மை பற்றி நான் எடுத்து விளக்கி உள்ளேன். சிறுவர்கள் தங்களது வாழ்க்கையின் முக்கியமான பருவத்தில் பட்டினிக் கொடுமையிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும் என்பது முதல்வரின் உன்னத மான நோக்கமாகும். அப்போதுதான் அவர்கள் கல்வி பயில்வதற்கு ஏற்ற சூழ்நிலை உருவாகும். எனவே, நடப்பாண்டில், அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளாகிய செப்டம்பர் 15ஆம் நாளிலிருந்து குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தை இம்மாநிலத்திலுள்ள எல்லாப் பள்ளிகளிலும் 10—15 வயது வரையுள்ள மாணவர் களுக்கு நீட்டிக்க அரசு முடிவு செய்திருப்பதை பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தகைய சத்துணவு அவர்களுக்கு ஆண்டில் பள்ளி நாட்கள் அனைத்திலும் கிடைக்கும். சத்துணவுத் திட்டத்தை இவ்வாறு நீட்டித்த பிறகு, தமிழ் நாட்டிலுள்ள சிறுவர் களும் சிறுமியர்களும் பள்ளி செல்லத் தொடங்கும் நிலைக்கு முன்பிலிருந்து பள்ளிக் கல்வியை முடிக்கும் நிலை வரை இத் திட்டத்தின் பயனை அவர்கள் பெறுவர். இத் திட்டம் நம் மாநிலத்தின் மனித வளத்தில் செய்யப்படும் கணிசமான முதலீடாகும். இத் திட்டத்தினால், வரும் ஆண்டில் ரூ. 20 கோடி அளவிற்குக் கூடுதல் செலவு ஏற்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இச் செலவுப் பொறுப்பையும் கணக்கில் கொண்டால், ஆண்டு இறுதியில் நிகரப் பற்றாக்குறை ரூ. 167·50 கோடியாக இருக்கும். பொருளாதாரத்தின் பல்வேறு வளர்ச்சித் துறைகளில் எதிர்பார்க்கப்படுகிற மேம்பாடும், திட்டம் சாராச் செலவினங்களில் கண்டிப்பானச் சிக்கன முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் கிடைக்கக் கூடிய சேமிப்பும் இப்பற்றாக்குறையைச் சரிக்கட்ட நமக்கு உதவியாக இருக்கும் என நாம் நம்புகிறோம். இயற்கைச் சீற்றங்களினால், நடப்பாண்டில் நமது மாநிலத்திற்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாட்டை இந்திய அரசு நன்கு புரிந்து கொண்டு நமக்குப் பெருமளவுக்கு உதவி செய்யும் என்று நாம் எதிர்பார்க்கிறோம் என்பதை நான் ஏற்கனவே எடுத்துக் கூறியுள்ளேன்.

### உழவுத் தொழிலாளர்க்குக் காப்புறுதித் திட்டம்

**125.** நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள், சொற்ப நிலமுள்ள உழவர்கள் போன்ற சமுதாயத்தின் நலனுக்காக உழைக்கும் இந்தப் பிரிவினர்க்குப் பாதுகாப்பும் காப்புறுதி திட்டத்தின்கீழ் நன்மையும் அளிப்பது அவசியம். இயற்கைச் சீற்றங்கள் நேரிடும் போது இவர்கள் கையறு நிலையில் அகப்பட்டுத் தவிக் கின்றனர். மாநில அரசு அவ்வப்போது இவர்களுக்கு



அளிக்கும் வேலை வாய்ப்புத் திட்டங்களினாலும் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் இவர்களுக்கு அளிக்கும் சலுகைகளினாலும் ஏற்படக்கூடிய நன்மை, இயற்கைச் சீற்றங்களினால் அறவே பயனற்றுப் போய்விடுகிறது. இன்றியமையாப் பொருள்களைப் பொதுப் பங்கீட்டு முறையின் மூலம் பொது மக்களுக்கு அளித்தல், அரிசி போன்றவற்றை குறைந்த விலைக்கு இவர்களுக்குக் கிடைக்கும்படிச் செய்தல், முதியோர், ஆதரவற்றோர் ஆகியோருக்கான உதவித் தொகைத் திட்டம் ஆகிய நடவடிக்கைகளையும், சத்துணவுத் திட்டத்தை முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் வருபவர்களுக்கும் கிடைக்கும்படிச் செய்ய அண்மையில் அறிவிக்கப்பட்ட திட்டம், வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு வேட்டி, சேலை ஆகியவற்றை அளிக்கும் திட்டம் போன்ற பல்வேறு வகை உதவித் திட்டங்களையும் அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த அரசு பதவி ஏற்குமுன் தேர்தலின்போது உறுதியளித்ததுபோல் பயிர்க் காப்புறுதித் திட்டம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது உழவர்களுக்கும், உழவுத் தொழிலாளர்களுக்கும் வாழ்க்கைக்குப் பாதுகாப்பளிக்கும் இந்தத் திட்டத்தை அரசு வகுத்துள்ளது. இந்தத் திட்டம் அறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**126.** நிலமற்ற உழவுத் தொழிலாளர்களுக்காகவும், சிறு உழவர்கள், சொற்ப நிலமுள்ள உழவர்கள் போன்ற நலிந்த பிரிவினர்களுக்காகவும், தொழிலாளர் நலத் துறையில் ஒரு தனி பிரிவு ஏற்படுத்தப்படும். அதில் ஒவ்வொரு விவசாயத் தொழிலாளரும் சிறு உழவர்களும் முதலில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடிப் பார்வையின்கீழ் ஆங்காங்கே உட்பிரிவுகள் நிறுவப்படும். வெள்ளம், வறட்சி போன்றவைகளால் ஏற்படும் இழப்பை உறுப்பினர்களுக்கு ஈடு கட்டிப் பாதுகாப்பு கொடுப்பதோடு மட்டுமல்லாமல் தொழில் செய்யும் போது ஏற்படும் உயிர் இழப்பிற்கு குடும்ப நிலைக்கு ஏற்ப குறைந்தது ரூ. 5,000 முதல் ரூ. 10,000 வரை உதவி அளிக்கப்படும். உறுப்பினர் ஆகும் நபர்களை ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் தமிழக அரசே பதிவு செய்ய ஏற்பாடு செய்து, அதற்குத் தேவையான சந்தாத் தொகையில் ஒரு பங்கை அரசே ஏற்கும் என்றும் கூற விரும்புகிறேன். ஆகவே எதிர்பாராத இழப்புக்கள்




நேரிடும்போது இவர்களுக்கு, காப்புறுதிக் கழகத்தின் மூலமாகவும், எந்த அள்விற்குச் சட்டப்படி முடியுமோ அந்த அளவுக்குஅரசின் நேரடி ஈடுபாட்டின் மூலமாகவும் தேவைகளை அனுசரித்து உதவி செய்ய அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. இச் சிறப்புத் திட்டத்திற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 5 கோடி ஒதுக்கப்படும்.

தேர்தல் அறிக்கையில் பயிர்ப் பாதுகாப்பை இவ்வரசு மேற்கொள்ளுமென்று வாக்குறுதி அளித்தோம். அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இப்போது தேர்தலில் சொல்லாத, ஆனால் மிகவும் அவசியமான, உழைக்கும் உழவர்களின் உயிர், உடைமைகளுக்குப் பாதுகாப்புத் தரும் வகையில், இத் திட்டத்தை இந்த ஆண்டு நடைமுறைப் படுத்த இருக்கிறோம்.

தலைவர் அவர்களே !

**127.** தொடர்ந்து நடைபோட்டுச் செல்லும் அரிமா, ஓரிடத்தில் நின்று, தான் ஏறுநடைபோட்டு வந்த தொலைவைத் திரும்பிப் பார்த்து, தான் செல்ல வேண்டிய தொலைவை ஏறெடுத்துப் பார்க்குமாம். அதுபோல, இந்த நிதிநிலை அறிக்கை, சென்ற கால நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டும் பணியையும், எதிர்கால நிகழ்வுகளைப் பற்றி எடுத்துக்கூறும் பணியையும் செய்கின்றது.

**128.** தமிழகம் எல்லா வகைகளிலும் செழித்து ஓங்க வேண்டும், தமிழ்மக்கள் எல்லா வழிகளிலும் சிறப்புற்றுத் திகழவேண்டும் என்பதை எண்ணத்தில் கொண்டு, இதுகாறும் மேற்கொண்ட நற்பணிகள் பற்றியும், 1984–85ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட இருக்கும் சீரிய பணிகள் பற்றியும் ஓரளவுக்குக் கோடிட்டுக் காட்டினேன்.

**129.** இந்த நிதி நிலை அறிக்கையின்மீதான விவாதத்தில் கலந்துகொள்ள இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள், ஆன்ற அறிவோடும், ஆழ்ந்த சிந்தனையோடும், பரந்த நோக்கத்தோடும், தூய எண்ணத்தோடும், பாங்கான பண்போடும் எடுத்துரைக்கும் கருத்துக்கள், நாட்டை நல்வழிப் படுத்தவும், மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கவும் பெரிதும் பயன்படும் என்று எதிர்பார்க்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், மக்களாட்சி மரபுகளுக்கு மதிப்பளித்து, அவையின் கட்டுப்பாட்டைக் காத்து, கண்ணியம் போற்றி, கடமையாற்றி அவையின் புகழையும், பெருமையையும் நிலை நாட்ட, முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் நல்கவேண்டும் என்று விழைந்து கேட்டுக் கொள்கிறேன். அனைவரும் உவந்து அளிக்கின்ற உறுதுணையான ஆதரவு, இருந்திடும் நலிவுகளையெல்லாம் போக்கிடவும், விரும்பிடும் நலங்களையெல்லாம் எய்திடவும் பெரிதும் பயன்படும் என்று உறுதிகொள்கிறேன்.

**130.** இந்த நிதி நிலை அறிக்கையை உருவாக்கிட எனக்குச் சிறப்பான உதவியையும், செம்மையான ஒத்துழைப்பையும் தந்த நிதித் துறைச் செயலாளர் திரு. சி. இராமச்சந்திரன் அவர்களுக்கும், அவருடன் ஒருங்கிணைந்திருந்து அரும்பணியாற்றிய அதிகாரிகள் —அலுவலாளர் ஆகியோர்க்கும், அரசின் பல்வேறு துறையினர்க்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1984–85ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை அன்புடன் ஏற்குமாறு அவையினரை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்.





# உவர் நீர் குடிநீராகிறது!

ஒருவருக்குத் தாகமெடுத்தது. தண்ணீர் நிறைய இருந்தது. குடிக்க வேண்டியது தானே? அவரால் ஒரு வாய்கூடக் குடிக்க முடியவில்லை. அவ்வளவும் உவர் நீர், உப்பு நீர்!

உவர் நீர் குடிநீரானால் எப்படி இருக்கும்? எவ்வளவு உவப்பான செய்தி!

இந்த அரிய சாதனையை அற்புதமாக நிகழ்த்தியிருக்கிறார்கள், குஜராத் மாநிலம் பவநகரில் உள்ள மத்திய அரசுக்குச் சொந்தமான உப்பு ஆராய்ச்சி நிலையத்தார்.

அவர்கள் கண்டுபிடித்துள்ள இயந்திரம், 20.2.84 அன்று சென்னை கோட்டையில் செயல் விளக்கம் செய்து காட்டியது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜிஆர். அவர்கள, மாண்புமிகு அமைச்சர்கள், குடிநீர் வடிகால் வாரியத் தலைவர், த்லைமைச் செயலர், அரசு அலுவலர்கள், பத்திரிகையாளர்கள் முதலியோர் பார்த்துப் பாராட்டினர்.

பவநகர் நிலைய இயக்குநர் பேராசிரியர் தக்விகான் தெரிவித்தார்:

''சுற்றிலும் உப்புநீரால் சூழப்பட்ட கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க இந்த இயந்திரம் பயன்படும்.

''தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்கரை ஓரத்தில் உள்ள கிராமங்களில் இப்படிப்பட்ட இயந்திரங்கள் இரண்டை, சோதனை ஏற்பாடாக 6 மாத காலத்திற்கு வைக்க, மத்திய அரசு சொல்லி இருக்கிறது.

''இந்த இயந்திரத்தில் ஒரு பிளாஸ்டிக் தகட்டின் மேல் உவர் நீரை, சதுர அங்குலத்திற்கு 400 ராத்தல் அழுத்தத்திற்குச்செலுத்தினால், உப்புநீர் வேறாகவும், உப்பு இல்லாத நீர் வேறாகவும் பிரிந்துவிடும். இந்த உப்பு இல்லாத நீர் சுத்தமாகவும், குடிப்பதற்குச் சுவையாகவும் இருக்கும்.

''நாளொன்றுக்கு 10,000 லிட்டர் அல்லது 30,000 லிட்டர் குடிநீர் தயாரிக்கும் இயந்திரம் தான் இப்பொழுது உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு நடுத்தரக் கிராமத்திற்கு இது போதுமானது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 30,000 லிட்டர் இயந்திரம் நிறுவப்படும்.

''இதன் மூலம் குடிநீர் தயாரிக்க லிட்டருக்கு ஒரு காசுதான் செலவாகும். 1000 லிட்டருக்கு 10 ரூபாய்தான் பிடிக்கும். இயந்திரத்தின் விலை ரூ. 2.5 லட்சம். ஒரு சிறிய அறையில் வைத்துக் கொள்ளலாம்.''

முத்துராஜா

கண்ணைக் கவரும் வண்ணத் துணிகளைக் கண்டால், யாருக்குத்தான் வாங்க ஆசை வராது?

அந்த ஆசையை நிறைவேற்றுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது பூம்புகார்.

22.2.84 அன்று, சென்னை எல்டாம்ஸ் சாலையிலுள்ள சி.பி. ஆர்ட் சென்டரில், பூம்புகாரின் கைத்திறன் துணிகளின் கண்காட்சி தொடக்கவிழா நடந்தது. இது 2.3.84 முடிய பத்து நாட்கள் நடந்தது.

இந்தக் கண்காட்சியில் பல்வேறு மாநிலக் கைவினைக் கலைஞர்களின் கைவண்ணத்தைக் காணமுடிந்தது. தமிழ்நாடு உட்பட ஆந்திரா, குஜராத், ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களின் வண்ணச் சேலைகள், ஆடைகள், கண்கவர் திரைச்சீலைகள் விற்பனைக்குக் கிடைத்தன.

மெத்தை விரிப்புகள், தலையணை உறைகள், மேசை விரிப்புகள், மேசைப் பாய்கள், சுவர் அலங்காரப் பொருட்கள், தைக்கப்பட்ட உடைகள், பைகள், அப்ளிக், கலம்காரி, பாட்டிக், பிளாக் பிரிண்டிங், லேஸ் எம்பிராய்டரி போன்ற பல்வேறு கைத்திறனுள்ள பொருள்கள் நிரம்பியிருந்தன.

நம் நாட்டினரை மட்டுமல்லாமல், மேலை நாட்டினரையும் வெகுவாகக் கவர்ந்தது இக்கண்காட்சி.

—பி.வி.ஜி.



# நாட்டிய மேதைக்கு நகர மக்கள் அஞ்சலி

பரத நாட்டிய மேதை பால சரஸ்வதியின் மறைவுக்கு, சென்னை நகர மக்களின் சார்பில் இரங்கல் தெரிவிக்கும் கூட்ட மொன்றை, சென்னை நகர ஷெரீப் திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் கூட்டினார். இக்கூட்டம் சென்னை இராஜாஜி மண்டபத்தில் 29-2-84 அன்று நடந்தது.

மேடையில், திருமதி பால சரஸ்வதியின் திருவுருவப்படம் மலர் மாலைகளால் அலங்கரிக் கப்பட்டிருந்தது. விழாத் தொடக் கத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட அவரது குரலும் ஒலிபரப்பப் பட்டது. திருமதி பாலசரஸ்வதி யின் மகள் திருமதி லட்சுமியும், அவரது கணவரும் மற்றும் குடும் பத்தினரும் பொதுமக்களும் இந்த இரங்கல் கூட்டத்துக்கு வந்திருந்தார்கள்.

சென்னை நகர ஷெரீப் திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், 'கடலுக்கு இணை கடல்தான்; அதேபோல் நாட்டிய மேதை பாலசரஸ்வதிக்கு இணை பாலசரஸ்வதிதான். ஏழாவது வயது முதலே நடனக் கலை கற்று, சர்வதேசப் புகழ் பெற்ற வர். பரதக் கலையைக் கற்றுத் தந்து பல்லாயிரக்கணக்கான மாணவிகளைத் தயார்படுத்திய வர். அவருக்கு நம் இதயபூர்வ அஞ்சலியைத் தெரிவிப்போம்' என்றார்.

கூட்டத்துக்குத் தலைமைவகித்த மாண்புமிகு உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி (பொறுப்பு) திரு பு. ரா. கோகுலகிருஷ்ணன் அவர்கள் பேசுகையில், ''மேலை நாடுகளில் எல்லாம் பரதக்கலை யைப் பரப்பி வந்தவர் பால சரஸ்வதி; அதன் பெருமையை உலகுக்கு எடுத்துக் காட்டியவர். அவர் வளர்த்துவிட்ட மாணவிகள் பலர்; கலை நுணுக்கங்களோ பலப் பல. அவர் அபிநயத்திலே தலைசிறந்த கலைஞராகத் திகழ்ந் தார். இலக்கணம் குன்றாமல் அவர் வளர்த்த பரதக்கலையைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பது தான் நாம் அவருக்குச் செலுத் தும் அஞ்சலியாகும்'' என்றார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் பேசுகையில், ''பரத நாட்டியக் கலையைத் தமிழ் நாட்டில் மட்டுமல்ல, உலகமெல் லாம் பரப்பி அதன் மூலம் தமிழ் நாட்டுக்குப் பெருமை சேர்த் தவர். நாட்டிய மேதை பால சரஸ்வதி அவர்கள் மூன்று நிலை களில் தம் வாழ்க்கையை அமைத் துக்கொண்டவர். இசை-பரதநாட் டியம் - பரதக் கலையைக் கற் பித்த பேராசிரியை என்று அவர் பெருவாழ்வு வாழ்ந்தவர். அவர் வளர்த்த பரதக்கலையை இளைய கலைஞர்களும் பின்பற்றச் செய் வதுதான் அவருக்கு நாம் செலுத் தும் அஞ்சலியாகும்'' என்றார்.

கூட்டத்தில் திருவாளர்கள் சந்திரசேகரன், டி. என். கிருஷ்ணன், சங்கரன் மற்றும் திருமதி பாலசரஸ்வதி அவர்களின் மருமகன் ஆகியோர், பரத நாட்டிய மேதையின் சிறப்பியல் புகளை எடுத்துக் கூறினார்கள். இறுதியாகக் கவிஞர் நடராஜன், இரங்கற்பா ஒன்றைப் படித்தார்.

—பி. வி. ஜி.





# பரிதவிக்கும் மக்களுக்குப் பரிவோடு உதவி

பருவம் அல்லாத காலத்தில் பலத்த மழை பெய்து, சென்னை யில் 17.2.84 வாக்கில் பெரும் சேதம் விளைத்தது.

இப்பொழுது மார்ச் முதல் வாரத்தில் மழையின் சீற்றம் தென் மாவட்டங்களைப் பாதித்துள்ளது.

நெல்லை, மதுரை, இராமநாத புரம் மாவட்டங்களில் மக்கள் உயி ருக்கும் உடைமைக்கும் மழைப் பெருக்கு சேதம் விளைத்துள்ளது. வெள்ளத்தில் சிக்கித் தவிப்பவர் களைக் காப்பாற்ற விரைந்து செயல்படும்படி உரிய அலுவலர் களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் உத்தரவிட்டதோடு, வெள்ளப் பகுதிகளை நேரில் பார்க் கப் புறப்பட்டுச் சென்றார்.

எங்கே மக்களுக்கு இன்னலோ, அங்கே அவர்.

நெல்லை மாவட்டத்தில் மட்டும் 13 பேர் உயிர் இழந்தார்கள். 80 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாதிக் கப்பட்டன.

மதுரையில் சுவர் இடிந்து விழுந்து 2 பேர் மாண்டனர்.

இராமநாதபுரம், கன்னியாகுமரி, தஞ்சாவூர், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, புதுக்கோட்டை, திருச்சி, நீலகிரி ஆகிய மாவட்டங்களிலும் கடுமையான மழையால் சேதங்கள் ஏற்பட்டன.

உயிர் இழந்தவர்கள் குடும்பங் களுக்குத் தலா ரூ. 1000 உதவிப் பணம் கொடுக்கப்படுகிறது.

குடிசை இழந்தவர்களுக்கு ரூ. 200 ரொக்கம், வேட்டி-சேலை, 5 கிலோ அரிசி, மண்ணெண்ணெய் அளிக்கப்படுகிறது.

சாலைகள், கரைகள் சீரமைப்பு உடனடியாகச் செய்யப்படுகிறது.

மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவரி, தண்ணீர் வரி, உள்ளூர் வரி ஆகிய மூன்றும் தள்ளுபடி செய்யப்படுகின்றன. கூட்டுறவுக் கடன்களும் குத்தகைப் பணமும் ஒத்தி வைக்கப்படுகின்றன.

யாரையும் பட்டினியால் சாகவிட மாட்டோம் எனச் சூளுரைத்து வீறுடன் விழிப்புடன் செயல்படு கிறது தமிழக அரசு.

—முத்துராஜா



மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஹெலிகாப்டர்களில் இருந்து உணவுப் பொட்டலங்கள் போடப்பட்டன. உணவுப் பொட்டலங்களைப் பெற மக்கள் விரைகின்றனர்.






# வத்தலக்குண்டில் அன்னை தெரசா

வத்தலக்குண்டில் நடைபெற்ற விழாவில், ஆறு சத்துணவுத் திட்ட சமுதாயக் கூடங்களை அன்னை தெரசா அவர்கள் திறந்து வைத்தார்கள். விழாவிற்கு மாண்புமிகு சத்துணவு அமைச்சர் திரு ஆர். செளந்தரராசன் அவர்கள் தலைமை தாங்கினார்.

''அண்ணாவின் கொள்கையைத் திரைப் படங்களில் புகுத்தி வந்தேன். அதை இன்று ஆட்சிக்கு வந்ததும் செயல்படுத்தி வருகின்றேன்'' என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் கூறினார்.

## கோகினூர் மாளிகை

கோடைக்கானலில் உள்ள கோகினூர் மாளிகை, ஐதராபாத்தைச் சேர்ந்த நவாப் காசிம் யார்ஜங் அவர்களுக்குச் சொந்தமானது. 1958-ல் அரசு மாளிகையாக எடுக்கப்பட்டது. இது வெளியேற்றப்பட்டவர்களின் சொத்து என (Evacuee Property) மத்திய அரசால் அறிவிக்கப்பட்டு – ரூ. 38,200/-க்கு மத்திய அரசு மூலமாக வாங்கப்பட்டது. இதனுடைய பரப்பளவு 3.85 ஏக்கர். இதில் 4 அறைகள் உள்ளன. ரூ. 1 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் காஷ்மீர் முதலமைச்சர் மறைந்த திரு ஷேக் அப்துல்லா இங்கே தங்கியிருந்தார். அவரது நினைவை மக்கள் மனத்தில் பதிய வைக்கும் வகையில், மதுரை மாவட்டம் கொடைக்கானலில் உள்ள இந்த அரசு மாளிகை "கோகினூர் ஷேக் அப்துல்லா மாளிகை'' என்று பெயரிடப் பட்டுள்ளது.

## அன்புத் தலைவருக்கு அன்னை தெரசா புகழாரம்



"மக்கள் ஒருவருக்கொருவர் நேசத்துடனும் பாசத்துடனும் உதவ வேண்டும் என்று இயேசு பெருமான் சொன்னார். அவர் சொன்ன வழியில் செயல்படுகிறார் தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர்.

''நான் பல்கலைக் கழகத்தில் படித்துக் கற்றவள் அல்ல. ஆனால், பரந்த இந்த உலகத்தில் கற்றுக்கொண்டது ஏராளம்.

''கொடைக்கானல் பெண்கள் பல்கலைக் கழகத்திற்கு என் பெயரைச் சூட்டுவார் திரு எம்.ஜி.ஆர் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அது என்னை மிகவும் வியப்படையச் செய்தது.''

(6.3.84 அன்று புதுச்சேரியில் நிருபர்களிடையே) —அன்னை தெரசா


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.











அம்சத் திட்டச்
20
சிறப்பிதழ்
தமிழரசு
1-4-1984



சென்னை நேரு விளையாட்டரங்கில் 40-வது தேசிய கால் பந்துப் போட்டியையும், ஒளிவெள்ள ஏற்பாட்டையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 15.3.84ல் தொடங்கி வைத்தார்.



'தமிழரசு' அச்சகத்திற்கு ரூபாய் 6.5 இலட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள இணைப்புக் கட்டடத்தை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் 19.3.84ல் திறந்து வைத்தார்.



# இனியவை இருபது

10 ஏப் 1984

மாண்புமிகு இந்தியப் பிரதமர்
திருமதி இந்திரா காந்தி அவர்க
14-1-1982-ல்
நாட்டுக்கு அறிவித்த
நல்வாழ்வுத்திட்டம்

## புதிய 20 அம்சத் திட்டம்

1. பாசன வசதியை அதிகரித்தல், மழையை நம்பியிருக்கும் விவசாயத்திற்கான பொருட்கள் கிடைத்தலை அதிகரித்தல், இந்நிலங்களுக்கான தொழில் நுட்பத்தை வளர்த்துப் பரப்பல்.
2. பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்க விசேட முயற்சி மேற்கொள்ளல்.
3. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி மற்றும் தேசிய கிராம வேலைவாய்ப்புத் திட்டங் களை வலுப்படுத்தல், விரிவாக்குதல்.
4. விளை நில உச்சவரம்பை அமலாக்கல், உபரி நில விநியோகத்தைப் பூர்த்தி செய்தல் மற்றும் நிர்வாக-சட்ட இடை யூறுகளை அகற்றி. நிலப் பட்டாக்களைத் தொகுக்கும் பணியைப் பூர்த்தி செய்தல்.
5. விவசாயத் தொழிலாளரின் குறைந்தபட்ச ஊதியத்தை மறுபரிசீலனை செய்து, பயன்தரும் வகையில் அமலாக்கல்.
6. பிணைத் தொழிலாளர்களுக்கு மறு வாழ்வு அளித்தல்.
7. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் வளர்ச்சிக்கான திட்டங்களைத் துரிதப் படுத்தல்.
8. பிரச்சனை கிராமங்கள் அனைத்துக்கும் குடிநீர் வழங்கல்.
9. வீடற்ற கிராமக் குடும்பங்களுக்கு வீட்டுக் கான மனை வழங்கி, வீடு கட்டுவதில் அவர்களுக்கு உதவுவதற்கான திட்டங் களை விரிவாக்குதல்.

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2015
ருத்ரோத்காரி — பங்குனி 19

மலர் : 14 இதழ் : 19

1-4-1984



10. சேரிகளின் சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்தல், எளியோருக்கு வீடு கட்டும் திட்டங்களை அமலாக்கல் மற்றும் நில விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுத்தல்.

11. மின்சார உற்பத்தியை உயர்ந்தபட்சமாக்குதல், மின்சார அமைப்புக்களின் இயக்கத்தை மேம்படுத்தல் மற்றும் கிராமங்கள் அனைத்துக்கும் மின்சார வசதி அளித்தல்.

12. காடு வளர்ப்பு, சமுதாய–பண்ணை மர வளர்ப்பு ஆகிய சாண எரிவாயு போன்ற மாற்று எரிபொருள் மூலங்களை வளர்த்தல்.

13. குடும்ப நலத் திட்டத்தை, தொண்டு அடிப்படையில், ஒரு மக்கள் இயக்கமாகப் பரப்பல்.

14. அடிப்படைச் சுகாதார வசதிகளைக் கணிசமாக அதிகப்படுத்தல், தொழு நோய், காசம், பார்வை இழத்தல் போன்றவற்றைக் கட்டுப்படுத்தல்.

15. பெண்கள், குழந்தைகள், கருவுற்ற பெண்கள், தாய்ப் பாலூட்டும் பெண்கள், குழந்தைகள் முதலியோருக்கான சத்துணவு, மற்றும் நல்வாழ்வுத் திட்டங்களை விரைவுபடுத்தல், முக்கியமாக பழங்குடியினத்தவர், மலை மற்றும் பிற்பட்ட பகுதிகளில் இத்திட்டங்களை விரைவுபடுத்தல்.

16. 6லிருந்து 14 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கிடையே முக்கியமாக பெண் குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வியைப் பரப்பல்; அதே சமயத்தில் மாணவ மாணவியர்களையும் சேவா ஸ்தாபனங்களையும், வயது வந்தோரிடையே கல்வி அறிவின்மையை அகற்றும் திட்டங்களில் ஈடுபடுத்தல்.

17. அதிகப்படியான நியாயவிலைக் கடைகள் மூலமாக பொது விநியோக முறையை விரிவுபடுத்தல், தொலைதூரப் பகுதிகளில் நடமாடும் கடைகளை ஏற்படுத்தல், தொழிற்சாலைத் தொழிலாளர்கள் மற்றும் விடுதியில் உள்ள மாணவர்களுக்கு வசதியாக அப்பகுதிகளில் கடைகள் நிறுவுதல்; மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களும் குறிப்பேடுகளும் கிடைக்கச் செய்ய முன்னுரிமை அடிப்படையில் ஏற்பாடு செய்தல், வலுவான தொரு நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தை வளர்த்தல்.

18. திட்டங்கள் உரிய நேரத்தில் பூர்த்தி அடைவதை உறுதி செய்வதற்காக முதலீட்டு நடவடிக்கைகளைத் தாராளப் படுத்தல், தொழில் துறை கொள்கைகளை எளிதாக்கல், கைவினைப் பொருட்கள், கைத்தறி சிறிய மற்றும் கிராமத் தொழில்கள் வளர்ந்து, தமது தொழில் நுட்பத்தை நவீனப்படுத்திக் கொள்வதற்கு, அவற்றுக்கு எல்லா வசதிகளையும் அளித்தல்.

19. கள்ளக்கடத்தல்காரர்கள், பதுக்கல் காரர்கள், வரி கொடாது ஏய்ப்பவர்கள் ஆகியோருக்கு எதிராக, தொடர்ந்து கடுத்தமானநடவடிக்கை மேற்கொள்ளல்; கறுப்புப்பணத்தை ஒழித்தல்.

20. திறன் உபயோகிப்பு, உள் வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளல் ஆகியவற்றின் மூலமாக, அரசு அமைப்புகளின் இயக்கத்தை மேம்படுத்தல்.





# மேதகு ஆளுநர் வாழ்த்துகிறார்



**1982** ஜனவரி 14-ஆம் நாளன்று பாரதப் பிரதமரால் அறிவிக்கப்பட்ட புதிய இருபது அம்சத் திட்டம், முக்கியத்துவம் வாய்ந்த சில வளர்ச்சிப் பணிகளை முடுக்கி விடுவதையும், ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டதாகும். கடந்த இரண்டாண்டுகளாக இத்திட்டம் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டு, மகத்தான வெற்றி கண்டுள்ளது. குறிப்பாகப் புன்செய் சாகுபடி, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், சுகாதாரம், குடிசைப் பகுதிகள் மேம்பாடு, குடும்ப நலத் திட்டம் போன்றவற்றில் சிறந்த சாதனை நிகழ்த்தப் பட்டுள்ளது. இதனை இந்திய அரசும் சரி, தமிழகத்தில் நன்மையடையும் மக்களும் சரி உணர்ந்து பாராட்டியுள்ளனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ், மாநில அரசின் நெறிப்படுத்தல், வழிகாட்டல், மேற்பார்வையிடல் ஆகியவற்றின் மூலமே இந்தச் சாதனை சாத்தியமாகியுள்ளது என்பது தெளிவு.

இருபது அம்சத் திட்ட நிறைவேற்றத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து அலுவலர்களுக்கும் எனது உளங்கனிந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். வருங்காலத்திலும் தொடர்ந்து ஊக்கமுடன் பணியாற்றி வெற்றியினை ஈட்டிட வாழ்த்துகிறேன்.

**எஸ். எல். குரானா**
தமிழ்நாடு ஆளுநர்.



எம். ஜி. இராமச்சந்திரன்
முதலமைச்சர்

புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை-600 009

நாள் 26-3-1984

## வாழ்த்துச் செய்தி

1984 ஏப்ரல் முதல் தேதியன்று பிரதமரின் புதிய இருபது அம்சத் திட்டம் பற்றிய சிறப்பிதழ் வெளியிடுவதற்காக நான் "தமிழரசு" இதழைப் பாராட்டுகிறேன்.

தமிழ்நாட்டின் சாதனை எல்லாத் துறைகளிலும், குறிப்பாகக் கிராமப்புற ஏழை எளிய மக்கள், பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் திட்டங்களில் மிகச் சிறப்பாக இருக்கிறது.

ஏழை மக்களின், குறிப்பாகக் குழந்தைகளின் நலனுக்கான புதிய திட்டங்களைத் தமிழ்நாடு மிகப்பெரிய அளவில் மேற்கொண்டுள்ளது. கிராமப் புறங்களில் தற்பொழுது தனது முத்திரையைப் பதித்து, அமைதியாக ஒரு சமுதாய மாற்றத்தைச் செய்துவரும் சத்துணவுத் திட்டத்தால் 64.18 லட்சம் குழந்தைகள் பயனடைகிறார்கள். 1,58,387 பெண்கள் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள்.

விரைவில், கல்வியைத் தொழிலோடு தொடர்புபடுத்தத் திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் குழந்தைகள், பெற்றோர், சமூகம் ஆகிய மூன்று சாராருக்குமே கல்வி, பொருள் பொதிந்ததாக இருக்கும். இந்த வளர்ச்சித் திட்டங்களுக்கு நாம் மிகப் பெரிய அளவில் பணத்தையும், முயற்சியையும் தியாகத்தோடு கூடிய உழைப்பையும் செலவிட வேண்டியுள்ளது.





இத்தகைய வளர்ச்சித் திட்டங்கள் எல்லாவற்றிலும் நாம் செய்யும் முதலீடு தமிழ்நாட்டை முன்னணியில் இருக்கச் செய்யும் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை.

பிரதமரின் புதிய இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் 1982-83-ல் முதலிடத்தைப் பெற்ற தமிழ்நாடு, 1983-84-லும் தொடர்ந்து முன்னணியில் இருந்து வருகிறது. இதற்குக் காரணம், சமுதாயத்தில் உள்ள ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்கு வழி வகுக்கும் ஆற்றல் பெற்றவை இத்திட்டங்கள் என்று எண்ணி நாம் இதயபூர்வமாகச் செயல்படுத்தி வருவதே!

இத்திட்ட நிறைவேற்றத்தில் ஒவ்வொரு மட்டத்திலும் செயல்படும் அரசு ஊழியர்கள் அனைவரையும் நான் பாராட்டுகிறேன். "தமிழரசு" சிறப்பிதழ் வாசகர்கள் விரும்பிப் போற்றும் வகையில் அமையும் என நான் நம்புகிறேன்.



(எம்.ஜி. இராமச்சந்திரன்)

# முன்னணியில் இருக்கும் தமிழ்நாடு



**பு**திய இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் 1982-83, 1983-84-ஆம் ஆண்டுகளில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணியில் இருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். அனைவரின் அயராத உழைப்பே இதற்குக் காரணம்.

சமுதாயத்திலுள்ள பலவீனப் பகுதி மக்களை நமது உதவிகள் சென்றடையத் தக்க வகையில் நமது நிர்வாக இயந்திரம் ஒரே குழுவாகச் செயல்பட்டுள்ளது. எல்லா மட்டங்களிலும் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டு தொடர்ந்து தொய்வின்றிப் பாடுபட்டதால் பெற்ற பலன் இது. தமிழ்நாடு உண்மையிலேயே உன்னதமாகச் செயல்பட்டுள்ளது.

தமிழ்நாடு இவ்வாறு முன்னேற்றப் பாதையில் மற்ற மாநிலங்களை விஞ்சி வீறுநடை போட, மிகச் சிறப்பாகப் பணியாற்றியுள்ள அரசு ஊழியர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கு. சொக்கலிங்கம், இ.ஆ.ப.
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர்.



நெகிழ்ச்சி

## "மகராஜனா நல்லா இருக்கணும்"

**கு**ழந்தைகள் சத்துணவுத் திட்டத்தினைப் பாராட்டி, சென்னை பழைய வண்ணாரப் பேட்டை, பேரம்பாலு செட்டித் தெருவில் 68ஆம் எண் வீட்டில் வசிக்கும் 76 வயது மூதாட்டியார் திருமதி தள்ளியம்மாள் ரூபாய் 5,001-க்கான காசோலையினை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களிடம், சென்னை நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற ஒளிவெள்ளக் கால்பந்தாட்ட விழாவில் வழங்கினார்.

திருமதி தள்ளியம்மாள் காசோலையினைக் கொடுக்கும் பொழுது ஆனந்தக் கண்ணீருடன் முதலமைச்சர் அவர்களைக் கட்டிப்பிடித்து,

"நீ மகராஜனா நல்லா இருக்கணும். எல்லாம் வல்ல இறைவன் வெங்கடேசப் பெருமாள் எப்பொழுதும் உங்கள் பக்கம் இருக்கும்" என்று வாழ்த்தி வழங்கினார். மேலும் நிதி அளிப்பதாகத் தெரிவித்தார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், அம்மையாரின் ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துக் காசோலையினைப் பெற்றுக் கொண்டார்.

## கொத்தடிமைகளை விடுவித்தல்

**கொ**த்தடிமைகளைத் தேடிப்பிடித்து அவர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, சுயவேலை செய்து சுதந்தரமாக வாழ 20 அம்சத் திட்டத்தின்கீழ் அவர்களுக்கு உதவி செய்யப்படுகிறது.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கொத்தடிமைகள் 1982-83ல் ஆந்திரப்பிரதேசத்திலிருந்து 1,325 பேரும் (329 குடும்பங்கள்) மத்தியப் பிரதேசத்திலிருந்து 54 பேரும் (12 குடும்பங்கள்), 1983-84ல் ஆந்திரப்பிரதேசத்திலிருந்து 1,072 பேரும் (241 குடும்பங்கள்) விடுவிக்கப்பட்டு, சேலம் மாவட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டனர்.

இவர்களில் 1741 பேருக்கு (183 குடும்பங்களுக்கு), குடும்பத்திற்கு ரூ. 1000 வீதம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி செய்யப்பட்டது.

கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு தருவதற்காக, ஜல்லி தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஓமலூரில் உருவாக்கப்பட்டுள்ளது.

கொத்தடிமைகள் நலம் பேணும் குழுவொன்று மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் உருவாக்கப்பட்டு, மூன்று மாதத்திற்கொரு தடவை கூடி, செய்ய வேண்டிய காரியங்களைப்பற்றி முடிவெடுக்கிறது.



# சத்துணவு என்னும் காந்தக்கல்

**ச**த்துணவு சாதித்த பல தன்மைகளில் மிகத் தெளிவாக, யாருக்கும் புரியக் கூடியதாக, எளிதில் விளங்கக் கூடியதாக இருப்பது பள்ளிகளில் மாணவர் பதிவேடு காட்டும் உண்மை.

மாணவர் வருகை பள்ளிகளில் சீராக இருப்பது மட்டுமல்ல, புதிதாக அதிக அளவில் சேர்ந்துள்ளார்கள்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் 11,191 மாணவர்களும், 11,645 மாணவிகளும் ஆக மொத்தம் 22,836 பேரும்,

வடஆர்க்காடு மாவட்டத்தில் 13,455 மாணவர்களும் 10,088 மாணவிகளும் ஆக மொத்தம் 23,543 பேரும்,

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 19,078 மாணவர்களும், 17,364 மாணவிகளும் ஆக மொத்தம் 36,442 பேரும்,

தருமபுரி மாவட்டத்தில் 9,098 மாணவர்களும், 8,442 மாணவிகளும் ஆக மொத்தம் 17,540 பேரும்,

சேலம் மாவட்டத்தில் 10,384 மாணவர்களும், 9,032 மாணவிகளும் ஆக மொத்தம் 19,416 பேரும்,

பெரியார் மாவட்டத்தில் 2,048 மாணவர்களும், 765 மாணவிகளும் ஆக மொத்தம் 2,813 பேரும்,

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 6,222 மாணவர்களும், 6,021 மாணவிகளும் ஆக மொத்தம் 12,243 பேரும்,

நீலகிரி மாவட்டத்தில் 2,963 மாணவர்களும், 2,537 மாணவிகளும் ஆக மொத்தம் 5,500 பேரும்,

மதுரை மாவட்டத்தில் 14,955 மாணவர்களும், 12,416 மாணவிகளும் ஆக மொத்தம் 27,371 பேரும்,

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 9,391 மாணவர்களும், 7,140 மாணவிகளும் ஆக மொத்தம் 16,531 பேரும்,

தஞ்சாவூர் மாவட்டத்தில் ... மாணவிகளும் ஆக மொத்தம் 21,730 பேரும்.,

புதுக்கோட்டை மாவட்டத்தில் 5,897 மாணவர்களும், 4164 மாணவிகளும் ஆக மொத்தம் 10,061 பேரும்,

இராமநாதபுரம் மாவட்டத்தில் 12,843 மாணவர்களும், 10,324 மாணவிகளும் ஆக மொத்தம் 23,167 பேரும்,

திருநெல்வேலி மாவட்டத்தில் 8,994 மாணவர்களும், 10,324 மாணவிகளும் ஆக மொத்தம் 19,244 பேரும்,

கன்னியாகுமரி மாவட்டத்தில் 2,594 மாணவர்களும், 2,108 மாணவிகளும் ஆக மொத்தம் 4,702 பேரும்,

சத்துணவுத் திட்டம் ஆரம்பித்த பிறகு புதிதாகப் பள்ளிகளில் சேர்ந்துள்ளார்கள். தமிழகம் முழுவதையும் எடுத்துக் கொண்டால்,

மொத்தம் 1,41,087 மாணவர்களும் 1,22,052 மாணவிகளும் ஆக மொத்தம் 2,63,139 பேர் புதிதாகப் பள்ளிகளில் சேர்ந்துள்ளார்கள். இது வரலாறு காணாத வெற்றி.

இப்பொழுது தமிழ்நாட்டில் மொத்தம் 64.18 லட்சம் குழந்தைகள் சத்துணவு சாப்பிட்டுக் கொண்டே கல்வி பயில்கிறார்கள். இதில் மாணவர்கள் 34.10 லட்சம்; மாணவிகள் 30.08 லட்சம்.

**மாவட்ட வாரியாக இதன் விவரம்:**

செங்கல்பட்டு - 5.39 லட்சம் (மாணவர்கள் 3 லட்சம்; மாணவிகள் 2.39 லட்சம்), வட ஆர்க்காடு - 6.50 லட்சம் (மாணவர்கள் 3.38 லட்சம்; மாணவிகள் 3.12 லட்சம்), தென் ஆர்க்காடு - 7.31 லட்சம் (மாணவர்கள் 3.79 லட்சம்; மாணவிகள் 3.52 லட்சம்), தர்மபுரி, 3.37 லட்சம் (மாணவர்கள் 1.86 லட்சம்; மாணவிகள் 1.51 லட்சம்), சேலம் - 4.11 லட்சம் (மாணவர்கள் 2.29 லட்சம்; மாணவிகள் 1.82 லட்சம்), பெரியார் 2.07 லட்சம் (மாணவர்கள் 1.14 லட்சம்; மாணவிகள் 0.93 லட்சம்), கோயம்புத்தூர் - 2.96 லட்சம் (மாணவர்கள் 1.60 லட்சம்; மாணவிகள் 1.36 லட்சம்), நீலகிரி - 0.78 லட்சம் (மாணவர்கள் ... லட்சம்), மதுரை - 6.34 லட்சம் மாணவர்கள் 3.34 லட்சம்; மாணவிகள் 3 லட்சம்), திருச்சி 3.75 லட்சம் (மாணவர்கள் 1.95 லட்சம்; மாணவிகள் 1.80 லட்சம்), தஞ்சாவூர் - 5.15 லட்சம் (மாணவர்கள் 2.70 லட்சம்; மாணவிகள் 2.45 லட்சம்) புதுக்கோட்டை 2.08 லட்சம் (மாணவர்கள் 1.13 லட்சம்; மாணவிகள் 0.95 லட்சம்), இராமநாதபுரம் - 4.59 லட்சம் (மாணவர்கள் 2.44 லட்சம்; மாணவிகள் 2.15 லட்சம்), திருநெல்வேலி - 5.53 லட்சம் (மாணவர்கள் 2.93 லட்சம்; மாணவிகள் 2.60 லட்சம்), கன்னியாகுமரி 1.94 லட்சம் (மாணவர்கள் 0.98 லட்சம்; மாணவிகள் 0.96 லட்சம்), சென்னை - 2.31 லட்சம் (மாணவர்கள் 1.16 லட்சம்; மாணவிகள் 1.15 லட்சம்)

**வெளி மாநிலங்கள் விவரம் கேட்கின்றன:**

தமிழ்நாட்டில் செயல்படும் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தை அறிந்து கொள்ள வெளிமாநிலங்கள் ஆர்வம் காட்டுகின்றன. இது சம்பந்தமாக, மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் திரு ஆர். சவுந்தரராசன் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்த விவரம்:

"ஆந்திரா, அசாம், ஒரிசா ஆகிய மாநில அரசுகளுக்கு, சத்துணவுத் திட்டத்தின் அமைப்பு முறைகள் பற்றி 13 பக்கத்தில் விளக்க அறிக்கை கொடுத்திருக்கிறோம். அந்த மாநிலங்களின் பிரதிநிதிகள் இங்கு வந்து சத்துணவுக் கூடங்களைப் பார்வையிடலாம்.

"சத்துணவுத் திட்டத்தைக் கேள்விப்பட்ட வெளிநாட்டினர் சென்னை வரும்போது இங்குள்ள சத்துணவுக் கூடங்களைப் பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்கள். சத்துணவுக் கூடங்களைப் பார்வையிட்ட அவர்கள் அதனைப் பாராட்டிச் சென்றிருக்கிறார்கள்.

"இந்திய ராணுவத் தளபதி வைத்யா இந்தத் திட்டத்தைப் பாராட்டி முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். இந்தத் திட்டத்தை எப்படிச் செயல்படுத்துகிறீர்கள் என்ற விவரத்தையும் தாருங்கள் என்றும் அவர் கேட்டிருக்கிறார்."

# மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம்

## —மைய அமைச்சரின் பாராட்டு

மாநிலத்திலுள்ள மக்களின் பல்வேறு பிரிவினரிடையேயும், தற்போது விளையாட்டு பற்றிய தொரு விழிப்புணர்ச்சியும் ஆர்வமும் ஏற்பட்டுள்ளன.

மற்ற மேம்பாட்டுப் பணிகள் சமுதாய நலப் பணித் திட்டங்களுடன், விளையாட்டுத் துறையின் நிதித் தேவை தற்போது போட்டியிடவேண்டியதுள்ளதால் விளையாட்டு வட்டாரத்திலுள்ள அதிகரித்து வரும் தேவைகளுக்கு விளையாட்டு மேம்பாட்டிற்கென மைய மற்றும் மாநில அரசுகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் ஈடு கொடுக்க இயலவில்லை.

மேற்குறிப்பிட்ட, நிதி நிர்வாகம் மற்றும் செயல் முறைச் சிக்கல்களைக் களையும் நோக்குடன் 'மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம்' என்றதொரு பதிவு பெற்ற நிறுவனத்தைத் தோற்றுவிக்கத் தமிழ்நாடு அரசு தீர்மானித்துள்ளது.

இந்த நிறுவனம், திரு சிவந்தி ஆதித்தன் அவர்களைத் தலைவராகவும், கல்வி, அறிவியல், மற்றும் தொழில் நுட்பவியல் துறை, உள்துறை, மற்றும் நிதித் துறை அரசு ஆணையாளர் மற்றும் செயலாளர்களை இயக்குநர்களாகவும் கொண்டதொரு கூட்டுக் குழுவால் நிர்வகிக்கப் படும்.

இந்த நிறுவனம் இரண்டு அலுவலர் சார்பற்ற இயக்குநர்களையும் கொண்டு இருக்கும். மாநில விளையாட்டு மற்றும் இளைஞர் பணித்துறை இயக்குநர் இந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக இருப்பார்.

**மக்களவையில் மனம் திறந்த பாராட்டு**

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழ்நாட்டில் மட்டுமே இப்படியொரு விளையாட்டு வளர்ச்சிக் கழகம் உருவாக்கியிருப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் எம் ஜி. ஆர். அவர்களுக்கு, மாநிலங்களவையில் மாண்புமிகு மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு பூட்டாசிங் அவர்கள் பாராட்டுத் தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை மானியக் கோரிக்கை மீது நடந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில்,

''தமிழ்நாட்டில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவிப்பதற்காக, ''விளையாட்டு வளர்ச்சிக் கழகம்'' என்ற தனி அமைப்பை உருவாக்கி இருப்பதைப் பாராட்டுகிறேன்.

''இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இப்படிப் பட்ட அமைப்பு அமைக்கப்படவில்லை. இந்தியக் குடிமக்கள் ஒவ்வொருவரும் திடகாத்திரமாக விளங்குவதற்கு ஏதேனும் ஒரு உடற்பயிற்சி அல்லது விளையாட்டில் ஈடுபடவேண்டும் என்பதை உணர்ந்து, தன்னுடைய மாநிலத்தில் இப்படிப்பட்ட ஒரு அமைப்பைத் தமிழக முதலமைச்சர் உருவாக்கி இருக்கிறார்.

''விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கவும் மேம்பாடு அடையச் செய்யவும் அவர் காட்டி வரும் ஆர்வத்தைப் பாராட்டுகிறேன்.

''டில்லியில் ஆசிய விளையாட்டுப் போட்டி நடந்தபோது பல்வேறு விளையாட்டுகளையும் அவர் நேரில் கண்டுகளித்தார். விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்டவர்களை ஊக்குவித்தார்.

''அவருடைய ஆர்வத்தை நான் போற்றுகிறேன்'' என்று கூறினார்.

---

**இருபது அம்சத் திட்டம் குறித்து 'தமிழரசு' இதழுக்கு ஏராளமான கட்டுரைகள் வந்துள்ளன. இந்த இதழில் இடம் பெறாதவை இனிவரும் இதழ்களில் வெளியிடப்பெறும்.**

*—ஆசிரியர்*

**16-4-1984 'தமிழரசு' இதழ் பைந்தமிழ் வளர்த்த நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரின் நூற்றாண்டுவிழாச் சிறப்பிதழாக வெளிவருகிறது.**



---

### தமிழ்நாட்டில் சூரிய மின் விளக்குகள்

**சூரிய ஒளியைப் பயன்படுத்தி, தமிழகத்தில் தேனூர், சேக்காடு, மத்தியனூர், மருதை, உந்தக்கலவலாறு ஆகிய 5 கிராமங்களில் சோதனை அடிப்படையில் இரவில் தெரு விளக்குகள் எரியச் செய்யப்படவுள்ளன. மாண்புமிகு மத்திய எரிபொருள் அமைச்சர் திரு சிவசங்கர் மாநிலங்களவையில் இதைத் தெரிவித்தார்.**

---



# புதிய 20 அம்சத்தில் பொன்னேடு பதித்த தமிழ்நாடு

**திருமதி. ஜே. அஞ்சனி தயானந்த், இ.ஆ.ப.**
**ஆணையர் மற்றும் செயலர், திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை.**

**அம்சம் 1 :**
**பாசன வளத்தைப் பெருக்குதல்.**

தமிழ்நாட்டில் பூமிக்கு மேலுள்ள நீர்வளத்தைப் பயன்படுத்திப் பெரிய, நடுத்தர, சிறிய அணைகளைக் கட்டியாகிவிட்டது. இந்த வகையில் 95 சதவீத நீர் ஆதாரங்கள் பயன்படுத்திக் கொள்ளப்பட்டுவிட்டன. மேலும் பயன்படுத்த இடமில்லை. இனிமேல் செய்யக்கூடியது, இருப்பதைத் திறமையாக நிர்வகிப்பதும், நிலத்தடி நீரைப் பயன்படுத்திக் கொள்வதும்தான்.

1983-84ல் 44,000 எக்டேருக்குப் பாசன வசதியளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 1984 ஜனவரி வரை 31,597 எக்டேருக்குப் பாசன வசதி கிடைத்துள்ளது.

ரூ.53.03 கோடி செலவுத் தொகை ஒதுக்கப்பட்டதில், ரூ. 31.43 கோடி செலவாகியுள்ளது.

**அம்சம் 2 :**
**பருப்பு, காய்கறி, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்கச் சிறப்பு முயற்சிகள் செய்தல்**

தமிழ்நாட்டுக்கு ஆண்டு தோறும் 9 லட்சம் டன் பருப்பு தேவை. விளைவதோ 3 லட்சம் டன் தான். அதனால் அண்டை மாநிலங்களில் இருந்து கணிசமான அளவு இறக்குமதி செய்யப் படுகிறது.

1983-84ல் 9.20 லட்சம் எக்டேரில் பருப்பு பயிரிட்டு, 2.83 லட்சம் டன் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1984 ஜனவரி வரை 7.08 லட்சம் எக்டேரில் 2.178 லட்சம் டன் பருப்பு உற்பத்தி செய்யப் பட்டுள்ளது.

1983-84ல் 14.54 லட்சம் எக்டேரில் 14.25 லட்சம் டன் எண்ணெய் வித்துகள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்ததில், 1984 ஜனவரி வரை 12.73 லட்சம் எக்டேரில் 12.75 லட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

**அம்சம் 3 :**
**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றை வலுப்படுத்துதலும், விரிவாக்கலும்**

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1983-84க்கான இலக்கு 2,25,600 குடும்பங்கள். இதில் 1984 ஜனவரி** வரை 1,73,431 குடும்பங்கள் நன்மையடைந்துள்ளன. இதில் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் பழங்குடியினர் குடும்பங்கள் 65,469. பெண்கள் 32,943 பேர்.

1983-84க்கான நிதி ஒதுக்கீடு ரூ.3008 லட்சம். 1984 ஜனவரி வரை மத்திய அரசும் மாநில அரசும் ரூ.2734.72 லட்சம் அளவிற்கு நிதியை விடுவித்துள்ளன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மானியச் செலவு ரூ.1514.73 லட்சம் என்ற கணிசமான அளவையும், சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூபாய் 90.04 லட்சத்தையும், அடிமட்ட அலுவலர் அமைப்புக்கு ரூ. 36.30 லட்சத்தையும் எட்டியுள்ளன.

வர்த்தக வங்கிகளிடமிருந்து ரூ.2496.91 லட்சத்துக்கும், கூட்டுறவு வங்கிகளிடமிருந்து ரூ. 928.72 லட்சத்துக்கும் கடன் வசதிகள் கிடைத்திருக்கின்றன.

**தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், 1983-84க்கான இலக்கு 3.05 கோடி மனித நாட்கள். இதில் 1984 ஜனவரி வரை 2.55 கோடி மனித நாட்கள் எட்டப்பட்டுள்ளன.**

**அம்சம் 4**
**உபரி நில வ...யோகம்.**

**தமிழ்நாட்டில் உபரி நிலமாக**

**அம்சம் 9 :**

**கிராமங்களில் வீட்டுமனை இல்லாத குடும்பங்களுக்கு வீட்டு மனை ஒதுக்குவதும்; அவர்களுக்கு வீடுகட்ட நிதி வழங்குவதும்.**

இந்த அம்சத்தின் கீழ், தமிழ் நாட்டில் இருவகைத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. புறம் போக்கு நிலங்கள் உள்ள இடங்களில் வருவாய்த்துறை அவற்றை ஒதுக்கீடு செய்கிறது. மற்ற இடங்களில், தனியார் நிலங்களை வாங்கி ஆதி திராவிடர்களுக்கும் மலைவாழ் பழங்குடியினருக்கும் சமூகநலத்துறை வழங்குகிறது.

1983 மார்ச் மாதத்தில் தமிழ் நாட்டில் வீட்டுமனை இல்லாத குடும்பங்கள் 7,43,474. 1983-84ல் 1,75,000 குடும்பங்களுக்கு வீட்டுமனை ஒதுக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 1984 ஜனவரி வரை 1,96,214 குடும்பங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இது 112 சதவிகித சாதனையாகும்.

கிராம வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு அங்கத்தினர்களுக்கு வீடு கட்டக் கடன் வழங்கப்படுகிறது. இந்தக் கடனை 20 ஆண்டுகளில் அடைக்க வேண்டும். 200 சதுர அடி வீட்டுக்கு, 1983 ஏப்ரல் மாதத்திலிருந்து ரூ.6000 வரை கடன் வழங்கப்படுகிறது. இதில் 25 சதவிகிதத்தை, வீடு கட்டிக் கொள்ளும் அங்கத்தினர் கட்டுமானப் பொருளுக்கான ரொக்கமாகவோ அல்லது உழைப்பாகவோ தர வேண்டும்.

ஆதிதிராவிடர்களாக இருந்தால், வீடு ஒன்றுக்கு அவர்களுக்கு ரூ.1000 மூலதன மான்யம் கிடைக்கும். அவர்களுக்கு வழங்கப்படும் கடனுக்கு வட்டி கிடையாது.

கிராமங்களில் வீடுகட்டிக் கொள்ள நிதிவசதி செய்யும் திட்டத்தின்கீழ் 1983-84ல் 40,000 வீடுகளுக்கு நிதியுதவி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 1984 ஜனவரி வரை 22,702 வீடுகளுக்கு உதவி செய்யப்பட்டுள்ளது.

**அம்சம் 10 :**

**குடிசைப் பகுதி மேம்பாடு. பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தை நிறைவேற்றுவதும் அவசியமற்ற முறையில் நிலத்தின் விலைகள் ஏறுவதைத் தடுத்தலும்.**

குடிசை மேம்பாட்டுப் பணிகள் மூன்று வகைகளில் நிறைவேற்றப்படுகின்றன. (1) விரைவுபடுத்தப்பட்ட குடிசை மேம்பாட்டுத் திட்டம். (2) உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்படும் குடிசை மேம்பாட்டுத் திட்டம். (3) பல்வேறு தல நிறுவனங்கள் மூலம் கிராமப் புறங்களில் நிறைவேற்றப்படும் குடிசை மேம்பாட்டுத் திட்டங்கள்.

1983-84ல் 1,72,000பேருக்கு உதவியளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 1984 ஜனவரி வரை 1,52,075 பேர் உதவி பெற்றுள்ளனர்.

பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு வீட்டுவசதி செய்து தரும் திட்டத்தின் கீழ், தமிழ் நாடு அரசு தற்சார்பு, சுய உதவியை அடிப்படையாகக்கொண்ட இரு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. கட்டி முடித்த வீடுகளைக் கொடுப்பது ஒன்று. மனை கிடைக்கச் செய்து வீடு கட்டிக் கொள்ளக் கடன் வழங்குவது இன்னொன்று.



1983-84ல் 39,450 வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 1984 ஜனவரி வரை 21,793 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**அம்சம் 11 :**

**மின்சார உற்பத்தியை உயர்ந்தபட்ச மாக்குதல், மின்சார அமைப்புக்களின் இயக்கத்தை மேம்படுத்தல் மற்றும் கிராமங்கள் அனைத்துக்கும் மின்சார வசதி அளித்தல்.**

மின் உற்பத்தியைப் பெருக்க மிகவும் அக்கறையுடன் தமிழ்நாடு அரசு தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. தென்மேற்கு, வடகிழக்கு பருவமழைகள்முற்றிலும் பொய்த்துப் போவதால் நீர் மின்சார நிலையங்களில் உற்பத்தி மிகவும் குறைந்துவிடுகிறது. அதனால், அனல் மின் உற்பத்தியைப் பெருக்க மாநில அரசு தன்னை அர்ப்பணித்துக்கொண்டு பணியாற்றி வருகிறது.

1984-85ல் எல்லாக் கிராமங்களுக்கும் மின்வசதி கிடைக்கச் செய்வது ஆறாவது திட்டத்தின் ஆரம்ப இலக்காக இருந்தது. மாநிலத்திலுள்ள 15,735 கிராமங்களில் 15,652 கிராமங்களுக்கு 1984 ஜனவரி வரை மின்வசதி செய்து தரப்பட்டுள்ளது.

மீதமுள்ள 83 கிராமங்கள் சேலம் மாவட்டத்தில் கல்ராயன், ஏர்க்காடு, சொல்லிமலை, மற்றும் தென்ஆர்க்காடு பழங்குடியினர் மலைப்பகுதிகளில் உள்ளன. இந்தக் கிராமங்களுக்கு மின் தளவாடங்களைக் கொண்டு செல்லப் பாதைகள் இல்லை. வனப் பகுதிகளில் கம்பம் நட்டுக் கம்பிகளைக் கொண்டு செல்ல, 1980-ஆம் ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்டப்படி மத்திய அரசு அனுமதியைப் பெற வேண்டும். இந்த அனுமதி இன்னும் கிடைக்கவில்லை.

1983-84 ஆம் ஆண்டில் 44 கிராமங்களுக்கு மின் வசதி தருவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் 24 கிராமங்களுக்கு மின்வசதி கொடுக்க, தமிழ்நாடு மின்வாரியம் உத்தேசித்துள்ளது. 1.4.83 லிருந்து 31.4.84 வரை 16 கிராமங்கள் மின்வசதி பெற்றுள்ளன.

ஆறாவது திட்டக் காலத்தில் 1.5 லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க இலக்கு

## 'வெரிகுட்' தமிழ்நாடு!

இருபது அம்சத் திட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்பு, உபரி நிலங்களைப் பெற்று ஒதுக்கீடு செய்யும் திட்டம், மலைவாழ் மக்கள் நலத் திட்டம், பிரச்சனை கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்' வீட்டு மனை வழங்கும் திட்டம், குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மரம் நடும் திட்டம், சாண எரிவாயு ஆலைத் திட்டம், குடும்ப நல அறுவைச் சிகிச்சைத் திட்டம், ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தும் திட்டம் ஆகியவற்றின்கீழ், தமிழ்நாடு செய்துள்ள சாதனையை, "மிக நன்று" (Very Good) என்று மத்திய திட்டக்குழு பாராட்டியுள்ளது.



நிர்ணயிக்கப்பட்டது. இதில் 1983 மார்ச் வரை 77,790 பம்பு செட்டுகள் மின் இணைப்புப் பெற்றுள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள பாசனக் கிணறுகளின் எண்ணிக்கை 12 லட்சம் (1.4.83). இதில் மின் இணைப்புப் பெற்ற பம்பு செட்டுகளைக் கொண்டவை 9,65,017.

1983-84ல் 48,000 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்தது. தமிழ்நாட்டில் மின் சப்ளை மிகவும் பாதித்ததால், புதிய இணைப்புகளுக்கு மாநில அரசு 1.4.83 முதல் 24.7.83 வரை தடைவிதித்திருந்தது. அதனால், 20,000 பம்பு செட்டுகளுக்கு மட்டும் மின் இணைப்புக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் 1984 ஜனவரி வரை 12,194 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

**அம்சம் 12 :**

**காடு வளர்ப்பு, சமூகக் காடு மற்றும் பண்ணைக்காடு வளர்ப்பைத் தீவிரப்படுத்துதல். மின்சக்திக்குப் பதிலாக சாண எரிவாயு போன்றவற்றைப் பயன்படுத்தல்.**

1983-84ல் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 37,000 எக்டேர் பரப்பில் காடு வளர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் 1984 ஜனவரி வரை 28,135 எக்டேர் மரம் வைக்கப்பட்டுள்ளது. 1260 லட்சம் மரக் கன்றுகள் நடுவது இலக்கு. இதில் 1086.33 லட்சம் கன்றுகள் நடப்பட்டுள்ளன.

1983-84ல் 5000 சாண எரிவாயு ஆலைகள் அமைப்பது இலக்கு. இதனை மிஞ்சி, 1984 ஜனவரி வரை 5532 சாண எரிவாயு ஆலைகள் தமிழ்நாட்டில் நிறுவப்பட்டுள்ளன.

**அம்சம் 13 :**

**குடும்பநலத் திட்டத்தை மக்கள் இயக்கமாக விருப்ப அடிப்படையில் வளர்த்தல**



1983-84ல் குடும்ப நலத் திட்ட அறுவைச் சிகிச்சை இலக்கு 3.99 லட்சம். 1984 ஜனவரி வரை 3,77,827 அறுவைச் சிகிச்சைகள் நடந்துள்ளன. இது 94.7 சதவிகித சாதனையாகும். இந்த நிதியாண்டில் இறுதி மூன்று மாதங்களில் முனைப்பு இயக்கம் நடத்தப்படுவதால், இலக்கை விஞ்சிய சாதனை ஏற்படுவது திண்ணம்.

**அம்சம் 14 :**

**மக்களுக்குச் சுகாதார வசதிகளை மிகுவித்தல். தொழுநோய், காசம், பார்வையிழப்பு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தல்.**

இந்த நூற்றாண்டு இறுதியில் இருக்கக் கூடிய மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டு பார்க்கும் பொழுது, சுகாதரப் பணிகளை ஆரம்பச் சுகாதார நிலையங்கள், துணை நிலையங்கள் போன்றவற்றைப் பெருக்குவதன் மூலமும், வலுப்படுத்துவதன் மூலமும் மேலும் பெருக்குவது இன்றியமையாததாகிறது.

50,000 மக்களுக்கு ஓர் ஆரம்பச் சுகாதார நிலையம் என்ற வகையில் மேலும் ஆரம்பச் சுகாதார நிலையங்களை நிறுவுவது இந்த அரசின் நோக்கமாகும். இப்பொழுது 407 நிலையங்கள் இருக்கின்றன. இன்னும் 373 நிறுவப்படும். அடுத்த 19 ஆண்டுகளில் இது படிப்படியே நிறைவேற்றப்படும்.

ஆறாவது திட்டக் காலத்தில் 80 கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்படும். இவற்றில் 20 பொதுவாகவும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்

டத்தின் கீழ் 1981-82ல் 2ம், 1982-83ல் புதுக்கோட்டை மாவட்டத்தில் 2ம் அமைக்கப்பட்டுள்ளன. 1983-84ல் மேலும் 15 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நிறுவ இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பச் சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரை கடந்த மூன்றாண்டு இலக்கு 37. இது நிறைவேற்றப்பட்டுவிட்டது.

துணை நிலையங்களைப் பொறுத்தவரை 1981-82ல் 622 இலக்கு நிர்ணயித்ததில் 422ம், 1982-83ல் 733 இலக்கு நிர்ணயித்ததில் 754ம், 1983-84ல் 712 இலக்கு நிர்ணயித்ததில் 1984 ஜனவரி வரை 221ம் நிறைவேற்றப்பட்டுள்ளன.

### தொழுநோய்க் கட்டுப்பாடு

தேசிய தொழு நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டப்படியே தமிழ்நாட்டில் பெருவாரி சர்வே, பள்ளி சர்வே மூலம் தொழு நோயாளிகளைக் கண்டுபிடித்து, ஒரு சமயத்தில் ஒரு மாத கால மருந்து கொடுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

1983 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை 46 லட்சம் பொதுமக்களும் 48 லட்சம் மாணவர்களும் பரிசோதிக்கப்பட்டு, பொதுமக்களில் 19,455 பேர்களுக்கும், மாணவர்களில் 12,566 பேர்களுக்கும் நோய் இருப்பது கண்டறியப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறே காசநோயாளிகளையும் கண்டறிந்து தொடர் சிகிச்சை தரப்படுகிறது. 1983-84ல் 2,41,800 கோழைப் பரிசோதனைகள் நடத்துவதும், 87,500 காச நோயாளிகளைக் கண்டறிவதும் இலக்கு. இதில், 1983 டிசம்பர் வரை ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 68,912 காச நோயாளிகள் கண்டறியப் பெற்றனர். 50,919 கோழைப் பரிசோதனைகள் செய்யப்பட்டன. இதில் 1,165 பேருக்கு நோய் இருந்தது.

1983 டிசம்பர் வரை இந்த இனத்தின் கீழ் மொத்தம் ரூ. 14.77லட்சம் செலவாகியுள்ளது. காச நோய்க்கு ஆரம்பச் சுகாதார நிலையங்கள், மருத்துவ மனைகள், மருந்தகங்கள், காச நோய் சானிடோரியம், மாவட்



# திட்டக்குழு தீர்ப்பளிக்கிறது!

இந்தியப் பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்தை, மாநில அரசுகள் எவ்விதம் நிறைவேற்றியிருக்கின்றன என்பதை, 1984 ஜனவரி வரை புள்ளி விவரங்களை எடுத்துக்கொண்டு, மத்திய திட்டக்குழு பரிசீலனை செய்திருக்கிறது. இருபது அம்சங்களில 16 அமசங்களை எடுத்துக்கொண்டது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம். உபரி நிலம், பிணைத் தொழிலாளர், ஆதிதிராவிடர் குடும்பங்கள், மலைவாழ் பழங்குடியினர் குடும்பங்கள், குடிநீர், வீட்டு மனைகள், கட்டுமான உதவி, குடிசைவாழ் மக்கள், பொருளாதாரத்தில் பலவீனமான மக்களுக்கு வீடுகள், கிராமங்களுக்கு மின்சாரம், பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு, மரம் நடுதல், சாண எரிவாயுக் கலன்கள், குடும்பநல அறுவை ஆகியவையே இந்தப் பதினாறு அம்சங்கள்.

மாநிலங்களின் சாதனைகளை A,B,C,D என்று நான்கு பிரிவுகளாகப் பிரித்து எடை போட்டுள்ளது மத்திய திட்டக்குழு.

இலக்கில் 70 சதவிகிதம், அதற்குமேல் சாதனை புரிந்திருந்தால் அது A பிரிவு.

தேசிய சராசரிக்குமேல் சாதனை புரிந்திருந்தால் அது B பிரிவு.

தேசிய சராசரிக்குக் கீழ் சாதனை புரிந்திருந்தால் அது C பிரிவு.

எதுவும் சாதிக்காமல் இருந்தால் அது D பிரிவு.

மத்திய திட்டக்குழு பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட 16 அம்சங்களில், தமிழ்நாடு 12 அம்சங்களில் A பிரிவும். ஒரு அம்சத்தில் B பிரிவும், 3 அம்சங்களில் C பிரிவும் பெற்றுள்ளது. ஒரு அம்சத்தில்கூட D பிரிவு பெறவில்லை.

மிக அதிகமான மதிப்பெண்களைப் பெற்றிருப்பது தமிழ்நாடுதான். நமது மாநிலம் 41 எடுத்துள்ளது. இமாசலப்பிரதேசம் 33ம், இராஜஸ்தான் 39ம் பெற்றுள்ளன. எனினும், ஒரு மாநிலத்தில் நிறைவேற்றப்படாத அம்சங்களுக்காக அந்த மாநிலத்துக்குச் சலுகை அளித்து மதிப்பிடும் திருத்தப்பட்ட நடைமுறைப்படி சதவிகிதக் கணக்கைக் கொண்டு பார்க்கின்றபொழுது தமிழ்நாடு 48க்கு 41 பெற்று 85·4 சதவிகிதமும், இமாசலப் பிரதேசம் 36க்கு 33 பெற்று 91.7 சதவிகிதமும், இராஜஸ்தான் 45க்கு 39 பெற்று 86.7 சதவிகிதமும் அடைந்துள்ளன.

...ச நோய் நிலையங்கள் மார்புச் சிகிச்சை நிலையங்கள் முதலி... எல்லா இடங்களிலும் இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது.

### பார்[illegible]யிழப்பைத் தடுத்தல்

மது...யில் உள்ள அரசினர் ராஜா[illegible]த்துவ மனையில் ஒரு மத்திய[illegible]மாடும் கண் வைத்தியப் [illegible] 1980 நவம்பரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்கள் பயன் பெறுகின்றன.

198[illegible] டிசம்பர் வரை இந்தப் பிரிவு [illegible] கண் அறுவைச் சிகிச்சை[illegible]செய்துள்ளது.

நுண்[illegible]விகள் வாங்கி, கண் வைத்தி[illegible]த்துறையை வலுப்படுத்த[illegible] பெரு[illegible] அரசு ரூ 5 லட்சம் அனும[illegible]ளியங்[illegible]ளது.

இந்[illegible] மூன்று மாவட்டங்களிலும் 48 ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும், 9 மாவட்ட மருத்துவ மனைகளிலும் பார்வைப் பழுதுக்குச் சிகிச்சையளிக்கக் கருவிகள், மருந்துகள் கொடுக்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 1982-83லும், தஞ்சாவூரில் அரசினர் இராஜா மிராசுதார் மருத்துவ மனையில் 1983-84லும் மத்திய நடமாடும் கண் வைத்தியப் பிரிவுகள் அனுமதிக்கப்பட்டு, வேன் மற்றும் கருவிகள் வாங்க அரசு ரூ. 4 லட்சம் ஒதுக்கியுள்ளது.

**அம்சம் 15 :**

மகளிர் குழந்தைகள் நலத் திட்டங்களைத் தீவிரப்படுத்தல், முக்கியமாக மலைப் பகுதிகள், பின் தங்கிய பகுதிகளில் கருவுற்ற தாய்மார்கள் பால் கொடுக்கும் தாய்மார்கள் குழந்தைகள் நலனுக்கான சத்துணவுத் திட்டங்கள்.

தற்பொழுது தமிழ்நாட்டில் 39 ஒருங்கிணைந்த குழந்தை நலத் திட்டங்கள் செயல்படுகின்றன. இவற்றில் 9 திட்டங்கள் 1983-84ல் தொடங்கப்பட்டன. இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு 35 காசிலும் ஒரு கர்ப்பிணிக்கு 60 காசிலும் ஒரு வேளைச் சத்துணவு வழங்கப்படுகிறது. குழந்தைகள் காப்பகங்கள் இப்பொழுது முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் வருவதால் 2+4+ வயதுக் குழந்தைக்கு 44 காசு மதிப்புள்ள சத்துணவு,நாள்தோறும் கிடைக்கிறது.

இரண்டு வயதுக்குக் குறைந்த குழந்தைகளும், கர்ப்பிணிகளும், பாலூட்டும் தாய்மார்களும் கேர் திட்டத்தின் கீழ் சத்துணவு பெறுகிறார்கள்.

கிராமப்பகுதிகளில் 22,910 மையங்களும், நகர்ப்புறங்களில் 4936 மையங்களும் 25 லட்சம் 2+4+ வயதுக் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்குகின்றன. அத்துடன் 1.06 லட்சம் பெண்களுக்குக் கிராமப்புறங்களில் வேலை வாயப்பு அளித்துள்ளன.

மேலும் 5—9 வயதுக் குழந்தைகள் 38 லட்சம் பேர் 33,000 பள்



ளிகள் மூலம் சத்துணவு பெறுகிறார்கள்.

படிப்பு, ஆர்வத்துடிப்பு, நோய் நொடித்தடுப்பு இவையும் இந்தக் குழந்தைகளுக்குச் சத்துணவோடு சேர்ந்து கிடைக்கின்றன.

**அம்சம்: 16**

ஆரம்பக் கல்வியை 6-14 வயதுக் குழந்தைகள் அனைவருக்கும் அளித்தல். பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தல். வயது வந்தோர் கல்வி பெற மாணவர்களையும் தொண்டு நிறுவனங்களையும் பயன்படுத்திக் கொள்ளல்.

6-11, 11-14 வயதுக் குழந்தைகள் 2 லட்சம் பேரை 1983-84ல் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்க்க வேண்டும் என்பது தமிழ்நாட்டுக்குத் தரப்பட்ட இலக்கு. சாதனையோ 3.82 லட்சம்.

1983 செப்டம்பர் 30 [illegible] சேர்க்கப்பட்ட கூடுதல் [illegible] வர்கள் விவரம்: 6-11 [illegible] பையன்கள் 1.13 லட்சம்; [illegible] கள் 1.27 லட்சம். 11-14 [illegible]து பையன்கள் 0.73 லட்சம், பெண்கள் 0.69 லட்சம் ஆக மொத்தம் 3.82 லட்சம்.

இதேபோல் 1982-83லும் 2 லட்சம் பேரைக் கூடுதலாகச் சேர்க்க வேண்டும் என்ற இலக்கை விஞ்சி 3.11 லட்சம் மாணவமணிகளைக் கூடுதலாகச் சேர்த்துப் பெருமை பெற்றது தமிழகம்.

இந்த மகத்தான சாதனைக்கு, முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் ஒரு முக்கிய காரணம். இன்னொன்று பெண் குழந்தைகளையும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குழந்தைகளையும் அதிக அளவில் சேர்க்க ஆசிரியர்கள் எடுத்துக் கொண்ட அயராத முயற்சி.

### வயது வந்தோர் கல்வி

1983-84ல் வயது வந்தோர் 4,25,000 பேருக்குக் கல்வி புகட்டுவது இலக்கு. 1983 டிசம்பர் இறுதியில் 17,012 வயது வந்தோர் மையங்களில் படித்தவர் தொகை 5.49 லட்சம் (ஆண்கள் 1.95 லட்சம்; பெண்கள் 3.54 லட்சம்). இந்த 5.49 லட்சம் பேரில் 2.94 லட்சம் பேர் (53 விழுக்காடு) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்.

**அம்சம்: 17**

பொது விநியோக முறையை விரிவுபடுத்தல்

அத்தியாவசியப் பண்டங்கள் அனைத்தும் சாதாரண மக்களுக்குக் கிடைக்கவும், நுகர் பொருள்கள் நியாயவிலையில் கிடைக்கவும் மாநில அரசு உரிய நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கிறது. நியாயவிலைக் கடைகள் கணிசமான அளவுக்கு அதிகமாக்கப்பட்டுள்ளன. மொத்தவிலை, சில்லறை விலை, வெளி மார்க்கெட் விலை இவற்றையெல்லாம் அவ்வப்பொழுது சர்வே செய்து அரசு விழிப்புடன் கண்காணிக்கிறது. சோதனைகள் நடத்தப்பட்டு, அத்தியாவசியப் பண்டங்களைப் பதுக்குவோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்.

*1983 டிசம்பர் இறுதியில் இருந்த நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை 18,009க்கு மேல்!*

அம்சம்: 18

**திட்டங்கள் குறித்த காலத்தில் நிறைவேற வசதியாக முதலீட்டு நடைமுறைகளைத் தாராளமாக்கவும், தொழில் கொள்கைகளைச் சீரமைத்தலும், கைவினைத் தொழில்கள், கைத்தறி, சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் ஆகியவை வரை எல்லா வசதிகளும் அளித்தல். அவற்றின் தொழில் நுட்பத்தைச் சமீப வளர்ச்சி வரை சரி செய்தல்.**

சிறு அளவுத் தொழில்களுக்குப் புதிதாக உரிமங்கள் வழங்கும் பொழுது உள்ளாட்சி நிறுவனங்கள் எளிய நடைமுறைகளையே கடைப்பிடிக்கத் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. தொழில் பகுதிகள் என அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில், குறிப்பிட்ட 14 தொழில்களுக்குத் தவிர, மற்றச் சிறு தொழில்களுக்கு, பொதுச் சுகாதார மற்றும் நகரமைப்புத் துறைகளைக் கலக்காமலே உள்ளாட்சி நிறுவனங்கள் இப்பொழுது உரிமங்கள் வழங்கலாம்.

தொழிலதிபர்களின் பிரச்சினைகளை உணர்ந்துகொண்டு, பல்வேறு நிறுவனங்களை ஒருங்கிணைத்துத் தீர்த்து வைப்பதில் ஒரு முன் மாதிரியாக நடந்து கொள்ள மாவட்டத் தொழில் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

*1983-84ல் 8,000 சிறு தொழில்கள் ஏற்படுத்துவது இலக்கு. 1984 ஜனவரி வரை 6372 நிறுவப்பட்*

## வெள்ளப் பகுதிகளில்...

**1984** மார்ச் முதல் வாரத்தில் பெய்த மழையினால் தமிழ்நாட்டில் உள்ள 6 மாவட்டங்களில் 45 பேர் இறந்தனர். 731 கால்நடைகள் மாண்டன. 19,024 வீடுகள், குடிசைகள் சேதமடைந்தன. 1.17 இலட்சம் ஏக்கர் பயிர்கள் பாதிக்கப்பட்டன.

தமிழகத்தில் சமீபத்தில் பெய்த பெரு மழை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர் பகுதிகளில் இரண்டு கடற்படை கெலிகாப்டர்கள் 20 டன் உணவுப் பொட்டலங்களைப் போட்டன.

டுள்ளன.

கதர் கிராமத் தொழில் வாரியம் இதற்கு முன்னால் தனது நிதியுதவியைத் துறை மூலம் இயங்கும் தொழிற்பிரிவுகளுக்கும் கூட்டுறவுகளுக்கும் அளித்து வந்தது. இப்பொழுது அதை மாற்றிக் கொண்டு, தொழில் முனைவர்களுக்கு நேர்முகமாகக் கொடுக்கிறது. இதனால் ஆர்வத்துடன் தொழில் ஆரம்பித்து, காலதாமதத்தைத் தவிர்த்து, வாழ்க்கையில் வளம் காணத் தொழில் முனைவர்களால் முடிகிறது.

கடந்த நான்காண்டுகளில் 1,41,997 பேருக்கு வாரியம், நிதியுதவி செய்திருக்கிறது.

1983 டிசம்பர் இறுதி வரை கதர்த் தொழிலில் 779 நிறுவனங்கள் பதிவு செய்துகொண்டுள்ளன. 37,000 பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளார்கள். ரூ. 7.86 கோடி மதிப்புள்ள கதர்த் துணி உற்பத்தியாகியு 180 பேர் பயிற்சி பெற்றுள்

இந்தக் காலத்தில் 1 கத் தொழிற் பிரிவு படுத்தப்பட்டு, 4.57 ல வேலை பெற்றுள்ளார்

தத் தொழிற் பிரிவுகள் ரூ. 3674.64 லட்சம் மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்துள்ளன.

கிராமங்களில் பட்டுப்பூ வளர்ப்புக்கு நல்ல வாய்ப்பும், அத னால் விவசாயிகளுக்கு நல்ல பயனும் இருப்பதால், சமீப காலங்களில் பட்டுப்புழு வளர்ப் புக்கு அதிக முக்கியத்துவம் அளிக் கப்படுகிறது.

1982-83ல் கூடுதலாக, 8,00 ஏக்கரில் முசுக் கொட்டைச் செடி வளர்க்க முயற்சி மேற்கொள்ளப் பட்டது. இதனால், மாநிலத்தில் முசுக்கொட்டைச்செடி வளரும் பரப்பு 55,042 ஏக்கராக உயர்

## பிற்பட்டோர் மாணவர் விடுதிகள்

**1983-84**ல் பிற்பட்டோர் மாணவர் விடுதிகள் 43 தொடங்கப்பட்டன. இதனால் 2150 மாணவ, மாணவியர் பயனடைகின்றனர். இதனால் புதிதாக 180 பேர் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். இந்த விடுதிகள் திறக்கப்பட்டதனால் இந்த ஆண்டு அரசுக்கு ரூ. 23,65,000 செலவு ஏற்பட்டிருக்கிறது. சுமார் 445 மாணவர் விடுதிகள் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இதற்கு வாடகைக்காக மட்டும் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 10 இலட்சம் ரூபாய் கொடுக்கப்படுகிறது.



# புதிய இருபது அம்சத் திட்டத்தில் புஞ்சைப்பயிர் உற்பத்தி (அம்சம் 2)

தமிழ்நாட்டில் மொத்த சாகுபடி நிலப்பரப்பு 62.32 இலட்சம் எக்டேர்கள். இவற்றில் சுமார் 52 விழுக்காடு மானாவாரி நிலமாகவே உள்ளது.

புஞ்சை நிலங்களிலிருந்துதான் நமது பெருவாரித் தேவையான சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள், பருத்தி கிடைக்கின்றன.

தமிழகத்தில் புஞ்சை சாகுபடி முறைகளைப் பெருவாரியாகப் பரப்ப 1983-84 ஆம் ஆண்டில் 2012 ''ஆயிரம் ஏக்கர் பெருவிளக்கப் பண்ணைகள்'' நடத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டப் பகுதிகளில் 29,124 பண்ணைக் குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. இவைகளில் 5,142 குடும்பங்கள் பிற்பட்ட மற்றும் மலை சாதி வகுப்புகளைச் சார்ந்தவையாகும். இத்திட்டப் பகுதிகளில் 8,890 உழவர்களுக்கு உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் மானாவாரி சாகுபடி முன்னேற்றம் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயல் விளக்கப் பண்ணைகளில், 25,372 எக்டேர் பரப்பளவிற்குத் தரமான விதைகள் வழங்கப்பட்டுள்ளன. இரசாயன உரங்கள் 11,347 எக்டேர் பரப்பளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. விதை மற்றும் உரமிடும் கருவிகள் 237, இதர மானாவாரி சாகுபடிக்கான கருவிகள் 8,640 விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

உழவர்களுக்கு நிரந்தர வருமானம் பெற சுமார் 11 இலட்சம் பழ மரம் மற்றும் இதர செடிகள் 2,856 எக்டேர் பரப்பளவில் பண்ணைக் காடுகளில் நடப்பட்டுள்ளன.

**புஞ்சைப் பயிரில் புளியம்பட்டி சாதனை**

முகவை மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டத்தில் உள்ள பெரிய புளியம்பட்டி கிராமத்தில் ஆயிரம் ஏக்கர் பெருவிளக்கப் பண்ணையின் சாதனை சிறந்து விளங்குகிறது.

இத்திட்டம் இந்திய வங்கியின் கடன் வசதியுடன் செயல்படுத்தப்பட்டது. இப்பகுதியில் தொன்று தொட்டு வழக்கத்திலுள்ள ஒரு பயிர் சாகுபடி முறையை மாற்றி, சோளம் மற்றும் பருத்திப் பயிர்களுடன் ஊடு பயிராக உளுந்து, காராமணி, மொச்சை ஆகியவை சாகுபடி செய்யப்பட்டன.

இப்பகுதியில் தனிப்பயிராக எக்டேருக்கு 375 கிலோ மகசூல் கிடைத்தது. இது இதர பகுதிகளின் மகசூலான எக்டேருக்கு 250 கிலோவைவிட 50 சதவிகிதம் கூடுதலாகும். கலப்புப் பயிர் சாகுபடியிலும் இத்திட்டப் பகுதியில் எக்டேருக்கு 300 கிலோ மகசூல் கிடைத்தது. இது இதர பகுதிகளின் மகசூலைவிட 100 கிலோ கூடுதலாகும்.

இந்திட்டத்தின் சாதனைகளை கிராம உழவர் பெருமக்கள் பலர் நேரடியாகக் கண்டு, புதிய சாகுபடி முறைகளைக் கையாளத் தொடங்கியது இத்திட்டத்தின் வெற்றியாகும்.

தது. 1983-84ல் மேலும் 7,400 ஏக்கரில் முசுக்கொட்டை பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணைகளில் 1981-82ல் 65.65 லட்சம் பட்டுப்புழு முட்டைத் தொகுதிகள் உற்பத்தி செய்யப்பட்டன. ஆனால் 1982-83ல் 109.80 லட்சம் தொகுதிகள் உற்பத்தி செய்யப்பட்டு, பட்டுப்புழு வளர்ப்போருக்கும் அரசு பட்டுப் பண்ணைகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டன. 1983 டிசம்பர் வரை 72 லட்சம் நோயற்ற பட்டுப் புழு முட்டைத் தொகுதிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 2240 எக்டேர் முசுக்கொட்டை சாகுபடியின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்தக் காலத்தில் ஒரு லட்சம் கிலோ கிராம் கச்சா பட்டும், 33,000 கிலோ கிராம் வேஸ்ட் பட்டும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. செலவான தொகை ரூ. 115.10 லட்சம். ரீலிங் பட்டுப் புழுக்கள் 20 லட்சம் கிலோ கிராம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**அம்சம்: 19**

**கள்ளக்கடத்தல்காரர்கள், பதுக்கி வைப்போர், வரி ஏய்ப்போர் ஆகியோர் மீது நடவடிக்கை.**

1983 ஆம் ஆண்டில் நுகர்பொருள் விநியோகத் துறையின் புலனாய்வுப் பிரிவு அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தின் கீழ் 910 வழக்குகள் பதிவு செய்தது. இதில் 413 பதுக்கல் சம்பந்தமானவை; 46 கள்ளச்சந்தை சம்பந்தப்பட்டவை: 270 கள்ளக்கடத்தல் சம்பந்தப்பட்டவை; 94 இருப்பு விலை விவரத்தை எழுதி வைக்காதவை; 87 வேறு வகையான குற்றங்கள்.

கட்டுப்பாட்டுஉத்தரவுகளை மீறியதற்காக ரூ. 1,01,46,902.30 மதிப்புள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

1983 ஏப்ரல் - நவம்பர் காலத்தில் 12,977 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. இவற்றில் 1628 மாதிரிகள் கலப்படமாக இருந்தன. 1296 வழக்குகள் தொடரப்பட்டு, அபராதத் தொகையாக ரூ.2,04,435 வசூலிக்கப்பட்டது.

இதே காலத்தில் எடை அளவு சட்டத்தின் கீழ் 2,25,417 சோதனைகள் நடத்தப்பட்டு, 12,025 வழக்குகள் தொடரப்பட்டு, 11,642 வழக்குகளில் தண்டிக்கப்பட்டு ரூ.3,30,340 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது.

# மாவட்டங்களில் 20 மகத்தான சாதனைகள்



மதுரை மாவட்டத்தில் புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழ் 1983-84ஆம் ஆண்டிற்குப் பாசன வசதியைப் பெருக்கும் திட்டத்தின்கீழ் 2795 எக்டேர் நிலத்திற்குப் பாசன வசதி செய்ய குறியீடு நிர்ணயிக்கப்பட்டு சனவரி மாதம் 84 முடிய 1326.49 எக்டேர் பாசன வசதி செய்யப்பட்டுள்ளது.

பயறு வகைகள் உற்பத்திக்கு 46.1 டன் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, சனவரி 84 முடிய 26.877 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 153.4 டன் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு சனவரி 84 முடிய 139.066 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 20400 குடும்பங்கள் பயன்பெற குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, 13045 குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன.

தேசிய கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 2940 ஆள் விளை நாட்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென 1983-84 ஆண்டிற்குக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு சனவரி 84 வரை 15672 ஆள்விளை நாட்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

1983-84ஆம் ஆண்டு 1900 ஏக்கர் விநியோகம் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு சனவரி 84 வரை 3037 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. விவசாயத் தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியத்தினை மறுபரிசீலனை பயன்தரும் வகையில் அமலாக்கல் சனவரி 84 முடிய 624 விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் கிடைக்கச் செய்யப்பட்டுள்ளது. கொத்தடிமைக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம் 13 கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வளர்ச்சி 1983-84ஆம் ஆண்டு 12721 ஆதிதிராவிடர்களுக்குக் கல்வி மற்றும் பொருளாதாரத்தில் மேம்படுத்த இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு 13544 ஆதிதிராவிடர் பயன் அடைந்துள்ளனர்.

பிரச்சனைக் கிராமங்கள் அனைத்திற்கும் குடிநீர் வழங்கல்- நடப்பு நிதியாண்டில் 102 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 81 கிராமங்களுக்கு சனவரி 84 முடிய குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

வீடற்ற கிராமக் குடும்பங்களுக்கு வீட்டுமனை வழங்கல், நடப்பு நிதியாண்டில் 17500 குடும்பங்களுக்கு வீட்டுமனை வழங்கவேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 20230 குடும்பங்கள் சனவரி 84 முடிய பயனடைந்துள்ளன.




வீடு கட்டுவதில் உதவுவதற்கான திட்டங்கள் விரிவாக்கல் 1983-84ஆம் ஆண்டிற்கு 6000 குடும்பங்களுக்கு உதவி அளிக்க வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 4441 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

சேரிகளில் சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்தல் 1510 சேரியில் வாழ்வோருக்கு உதவியளிக்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு [illegible]700 பேர் பயனடைந்துள்ளனர். பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ள எளியோர்க்கு வீடுகட்டும் திட்டத்தை அமல்படுத்தல் நடப்பு நிதியாண்டில் [illegible] எளியோர்க்கு வீட்டு வசதி [illegible]க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு [illegible]634 எளியோருக்கு வீட்டுவசதி செய்து தரப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் 3000 பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங்க வேண்டுமெனக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு சனவரி 84 முடிய 237 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் அனைத்து கிராமங்களுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டு விட்டது.

காடு வளர்ப்பு, பண்ணை மர வளர்ப்பு ஆகியவற்றுக்கான திட்டங்களைக் கடுமையாக அமலாக்கல்—நடப்பு நிதியாண்டில் 13381 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட வேண்டுமெனக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 13447 ஆயிரம் மரக்கன்றுகள் சனவரி 84 முடிய நடப்பட்டுள்ளன.

கரிமவாயு போன்ற மாற்று எரிபொருள் மூலங்களை வளர்த்தல்—கரிமவாயு வளர்ச்சித் திட்டத்தினை நடப்பு நிதியாண்டில் 450 குறியீடு நிர்ணயிக்கப்பட்டு சனவரி 84 முடிய 413 கரிமவாயு சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

குடும்பநலத் திட்டத்தின்கீழ் மதுரை மாவட்டத்திற்கு நடப்பு நிதியாண்டில் 43000 நபர்களுக்குக் குடும்ப நலச் சிகிச்சை அளிக்க வேண்டுமெனக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, 35152 குடும்பநலச் சிகிச்சைகள் சனவரி 84 முடிய செய்யப்பட்டுள்ளன.

அடிப்படைச் சுகாதார வசதிகளை அதிகப்படுத்துதல், தொழுநோய், காசம், பார்வை இழத்தல் போன்றவற்றைத் தடுத்தல், இத்திட்டத்தின்கீழ் எரியோடு, சேடபட்டியில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பெண்கள், குழந்தைகள், கருவுற்ற பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கான சத்துணவு நல்வாழ்வுத் திட்டங்களை விரைவுபடுத்துதல் இத்திட்டத்தின்கீழ் சனவரி 84 முடிய 3 முதல் 36 மாதங்கள் முடிய உள்ள குழந்தைகள் 3,22,661 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். பாலூட்டும் தாய்மார்கள் 95,715 பேர் பயனடைந்துள்ளனர்.

6லிருந்து 14 வயது வரையுள்ள குழந்தைகட்கு அடிப்படைக் கல்வியைப் பரப்புதல் – இத்திட்டத்தின் கீழ், நடப்பு நிதியாண்டில் 18830 குழந்தைகள் பயனடைய குறியீடு நிர்ணயிக்கப்பட்டு சனவரி 84 முடிய 20088 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். முதியோர்க்கு எழுத்தறிவைப் பரப்பும் நோக்குடன் நடப்பு நிதியாண்டில் 39600 குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 53334 முதியோர் சனவரி 84 முடிய பயன் பெற்றுள்ளனர்.

சனவரி 84 முடிய 333 கைத்தறி அலகுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 90.21 இலட்சம் மீட்டர் கைத்தறித் துணிகள் ரூ. 834.51 இலட்சம் மதிப்புள்ளவை உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. சிறுதொழில் மற்றும் கிராமக் கைத்தொழில் மூலம் ரூ.16.41 இலட்சம் பெறுமானமுள்ள காலணிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. ரூ.20.40 இலட்சம் பெறுமானமுள்ள சோப்புகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின் கீழ் சனவரி 84 முடிய 398 பதுக்கல்காரர்களிடமிருந்து ரூ.18,15,054 பெறுமானமுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மதுரைமாவட்டத்தில்129நபர்களுக்குக் கடன் வழங்க அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளுக்கு ரூ 72,37,650க்காகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. நலிந்த பிரிவினருக்காகச் சிறுதொழில் தொடங்க ரூ 1,96,085 கடன் வழங்க வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. 1748 நபர்களுக்கு சிறுதொழில்கள் தொடங்குவதற்காகச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

**ப. சாமிநாதன்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**மதுரை மாவட்டம்.**



# இராமநாதபுரம் மாவட்டத்தில்



இராமநாதபுரம் மாவட்டத்தில் 1983-84ஆம் ஆண்டில் 3468 எக்டேருக்குப் பாசன வசதியளிப்பது இலக்கு. 1984 பிப்ரவரி வரை 4403.08 எக்டேருக்குப் பாசன வசதி செய்து தரப்பட்டுள்ளது. இது 127 சதவிகித சாதனை.

பருப்பு உற்பத்தி இலக்கு 26,500 மெட்ரிக் டன். இதில் சாதனை 16,147.38 மெட்ரிக் டன். 61 சதவிகிதம்.

எண்ணெய் வித்துகள் உற்பத்தி இலக்கு 78.7 மெட்ரிக் டன். சாதனை 65.3 மெட்ரிக் டன். 82.9 சதவிகிதம்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட இலக்கு 19,200 குடும்பங்கள். சாதனை 17,959 குடும்பங்கள். 93.5 சதவிகிதம்.

தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்ட இலக்கு 19.1 இலட்சம் மனிதநாட்கள். சாதனை 21.2 இலட்சம் மனித நாட்கள். சாதனை 110.1 சதவிகிதம்.

ஒதுக்கீடு செய்யப் பெறப்பட்ட உபரி நில இலக்கு 300 ஏக்கர். சாதனை 183 ஏக்கர். 61 சதவிகிதம்.

கொத்தடிமைகள் மறுவாழ்வு இலக்கு 8 பேர். சாதனை 8 பேர். 100 சதவிகிதம்.

உதவி பெறும் ஆதிதிராவிடர் குடும்பங்கள் இலக்கு 11,008. சாதனை 9,146. இது 83 சதவிகிதம்.

குடிநீர் பெறும் பிரச்னைக் கிராமங்கள் இலக்கு186.சாதனை 134. இது 72 சதவிகிதம்.

ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டு மனைகள் இலக்கு 11,500. சாதனை 10,399. இது 90.4 சதவிகிதம்.

வீடுகள் கட்ட உதவி இலக்கு 3,500 வீடுகள். சாதனை 3,884. இது 110.97 சதவிகிதம்.

குடிசைவாழ் மக்கள் வீட்டு வசதி இலக்கு 5,000. சாதனை 1,178. இது 23.6 சதவிகிதம்.

காடு வளர்ப்பு இலக்கு 132 இலட்சம் மரங்கள். சாதனை 117 இலட்சம் மரங்... 88.3 சதவிகிதம்.

குடும்பநல அறுவை... சிகிச்சை இலக்கு 25,000. சாதனை 33,120. இது 132.5 சதவிகிதம்.

ஆரம்பச் சுகாதார நிலைய இலக்கு 1. சாதனை 1. இது 100 சதவிகிதம்.

6—14 வயதுக் குழந்தைகள் பள்ளியில் சேர்த்தல் இலக்கு 15,670 குழந்தைகள். சாதனை 33,175 குழந்தைகள். 210.1 சதவிகிதம்.

வயது வந்தோர் கல்வியறிவு பெறச் செய்தல் இலக்கு 25,700 பேர். சாதனை 32,715. இது 127.2 சதவிகிதம்.

**டி. பி. எஸ். சுந்தரநாதன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**இராமநாதபுர மாவட்டம்.**

# கன்னியாகுமரி மாவட்டத்தில்



கன்னியாகுமரி மாவட்டத்தில் 1983-84 ஆம் ஆண்டில் 3,400 டன் பருப்பு உற்பத்தி செய்ய வேண்டும் என்பது இலக்கு. இதில் 645 டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது 19 சதவிகிதம்.

எண்ணெய் வித்துகள் இலக்கு 2,000 டன். உற்பத்தி 1,895 டன். சாதனை 94 சதவிகிதம்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட இலக்கு 5,400 குடும்பங்கள். சாதனை 4,892 குடும்பங்கள்; 90 சதவிகிதம்.

தேசீய ஊரகவேலைவாய்ப்புத் ... இலக்கு 8.9 இலட்சம் மனி... ...ட்கள். சாதனை 15 ... இலக்கு ...மனித நாட்கள். இலக்கு ... ...டது.

...ாவிடர் மற்றும் மலைவாழ் ...ங்குடியினர் குடும்பங்களு... ...தவி இலக்கு 2,962 குடு... ...ள். உதவி பெற்றவை 899 ...ருக்...0 சதவிகித சாதனை.

... ...க் கிராமங்களுக்குக் குடிநீர் ...8,0... ...தி செய்து கொடுத்தல் இலக்கு ... கிராமங்கள். சாதனை 7 கிரா... ...கள். இலக்கு விஞ்சப் பட்ட...

வீட்... மனைகள் ஒதுக்கீடு இலக்கு ...00. சாதனை 168. இது 21... ...விகிதம்.

வீடுகள் கட்ட உதவி இலக்கு 450 வீடுகள். சாதனை 167. இது 37 சதவிகிதம்.

பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் வீட்டு வசதி இலக்கு 267 வீடுகள். சாதனை 26 வீடுகள். இது 9 சதவிகிதம்.

காடு வளர்ப்பு இலக்கு 6.2 இலட்சம் மரங்கள். சாதனை 4.3 லட்சம் மரங்கள். இது 68 சதவிகிதம்.

சாண எரிவாயு ஆலைகள் இலக்கு 300. சாதனை 70. இது 23 சதவிகிதம்.

குடும்பநல அறுவைச் சிகிச்சை இலக்கு 12,500. சாதனை 12021. இது 96 சதவிகிதம்.

6—14 வயதுக் குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்தல் இலக்கு 2,540. சாதனை 12. 12,656 இலக்கு விஞ்சப்பட்டது.

வயது வந்தோர் கல்வியறிவு பெறச் செய்தல் இலக்கு 19,200 பேர். சாதனை 20,044. இலக்கு விஞ்சப்பட்டது.

**இரா. நடேசன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**கன்னியாகுமரி மாவட்டம்.**

# கோ... மாவட்டத்தில்

தமிழ... அரசு புதிய பல ... திட்டங்களை வகுத்து மக்களின் மனநிறைவைப் பெற்றுத் திகழ்கிறது. தரணி போற்றும் தன்னிறைவுத் திட்டம், நாடுபோற்றும் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், உலகம் போற்றும் சத்துணவுத் திட்டம் என்கிற வகையில் நூற்றுக் கணக்கான திட்டங்கள் தமிழகத்தில் வாழுகின்ற மக்களுக்காக தமிழக அரசு செயல்படுத்தி, மக்களின் மனத்திலே மகிழ்ச்சியை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

இந்தத் திட்டங்களைப்போல் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் 1982லிருந்துபுதிய இருபதுஅம்சத் திட்டம் என்கிற ஒரு நல்ல திட்டத்தை வடித்து. இந்தியா முழுதும் செயல்படுத்த வழிவகை கண்டுள்ளார். அத்திட்டத்தால் விளைகின்ற நன்மைகளை மக்கள் வெகுவாகப் பெறவேண்டும் என்கிற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் முழு அளவில் செயல்படுத்தி மக்களுக்குச் சாதனைக் கனிகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்.

இந்தப் புதிய 20 அம்சத் திட்டத்தில் பல்வேறு சாதனைகளை உருவாக்குதல் பொருட்டு, மாவட்ட அளவில் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் திங்கள்தோறும் ஆற்றப்பட்ட பணிகள் குறித்து துறைவாயிலான ஆய்வினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாநில அளவிலான ஆய்வினை தலைமைச் செயலாளர் அவர்களும் செய்து வருகிறார்கள்.

**1982—83 :**

எத்திட்டத்தை எடுத்தாலும் கோவை மாவட்டம் அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் முன்னணியில் இருந்து வருகிறது என்பதுவெள்ளிடைமலையாகும்.

1982-83-வது நிதியாண்டில் 6,637 எக்டேர் நிலப்பரப்பை புதிதாகச் சாகுபடி நிலமாகக் கொண்டு வரவும், அதற்கு நீர்ப்பாசன வசதி செய்துதர இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அந்த இலக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. பயறு வித்துக்களைப் பெருக்குவது என்ற திட்டத்தின்கீழ் 34,400 டன் பயறு வித்துக்கள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டு 35,720 டன் உற்பத்தி செய்யப்பட்டது. எண்ணெய் வித்துக்கள் 96,700 டன் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 1,15,000 டன் உற்பத்தி செய்யப்பட்டது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 12,600 குடும்பங்களுக்கு மானியமும், கடனும் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 15,228 குடும்பங்கட்கு மானியமும், நிதியும் வழங்கப்பட்டிருக்கிறது.

தேசீய ஊரகவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பை நல்கி அதன் மூலம் சமுதாயச் சொத்தினை மேம்பாடடையச் செய்ய



வேண்டும் என்கிற வகையில் திட்டம் வகுக்கப்பட்டு 10,12,000 உழைப்பு தினங்களை உருவாக்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 11 இலட்சம் உழைப்புதினங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

உபரி நிலங்களை விவசாயத் தொழிலாளர்கட்கும். ஏழை விவசாயிகட்கும் பட்டா செய்து தர வேண்டும் என்கிற திட்டத்தின் கீழ் 394 ஏக்கர் நிலம் ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆதிதிராவிடர் மலை வாழுநர் வாழ்வில் ஒளி விளக்கேற்ற திட்டம் வகுக்கப்பட்டு 7,756 குடும்பங்கள் பயனடைந்திருக்கின்றன. 96 கிராமங்களில் குடிநீர் வசதியற்ற நிலைமை இருந்ததைப் போக்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, 21 கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. 5,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிடத் திட்டமிடப்பட்டு 4,500 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. 1,124 வீடுகள் கிராமப்புறங்களில் வாழ்கின்றவர்களுக்குக் கட்டித்தர நிதி உதவி வழங்கத் திட்டமிடப்பட்டு 1,196 வீடுகள் கிராமப்புறங்களிலுள்ள ஆதிதிராவிடர் பிற வகுப்பைச் சார்ந்தவர்கட்கு கட்டித்தரப்பட்டு இருக்கின்றன.



கோவை மாவட்டம் பெரிதும் நீர்ப்பாசனத்திற்குப் பம்புசெட்டுகளையே நம்பிக் கொண்டிருப்பதால் 902 பம்ப் செட்டுகளுக்கு மின்சார இணைப்பு செய்துதர திட்டமிடப்பட்டு 1,028 பம்ப் செட்டுகளுக்குமின்சார இணைப்பு செய்து தரப்பட்டிருக்கிறது. தனியாருக்குச் சொந்தமான இடங்களிலும், கிராமத்திற்குச் சொந்தமான இடங்களிலும், அரசுக்குச் சொந்தமான இடங்களிலும் மரங்களை நட்டு வளர்க்கின்ற மகத்தான திட்டத்தின்கீழ் 12,60,000 மரங்கள் நடப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன.

எரிசக்தியைப் பெறுகின்ற வகையில் கிராமப்புற மக்களிடையே எரிசாண வாயு அடுப்பு அமைத்துத் தருகின்ற திட்டத்தின்கீழ் 500 எரிசாண வாயு அடுப்புகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 1,002 எரிசாண வாயு அடுப்புகள் அமைத்து முடிக்கப்பட்டிருக்கின்றன.

குடும்பநலத்தைப் பேணுகின்ற வகையில் நிரந்தரக் குடும்ப நல அறுவைச் சிகிச்சை 19,000 பேருக்குச் செய்ய திட்டமிடப்பட்டு 19,615 பேருக்குக் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. 82-83-வது நிதியாண்டில் புதிய 20 அம்சத் திட்டத்தின்கீழ் . நிறைவேற்றப்பட வேண்டிய இலக்கினை வென்று அதிக அளவில் சாதனைகளை உருவாக்கிய பெருமை கோவை மாவட்டம் பெறுகின்ற வாய்ப்பு கிட்டியது.

**1983—84ல் :**

83-84வது நிதியாண்டில் புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழ் புதிய ஆயக்கட்டுகளுக்கு நீர்ப்பாசன வசதியை உருவாக்கி உற்பத்தியைப் பெறுகின்ற வகையில் உடுமலை, திருப்பூர், பொள்ளாச்சி வட்டங்களில் புதிதாக 5,365 எக்டேர் பரப்பிற்கு நீர்ப்பாசன வசதி செய்து தர இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 6,558 எக்டேர் நிலப்பரப்பிற்குப் புதிதாக நீர்ப்பாசன வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

பயறு வகைகளை மிகுதியாக உற்பத்தி செய்கின்ற திட்டத்தின் கீழ் 34,400 டன் பயறுவித்துக்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 46,306 டன் பயிறு வித்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. 89,000 டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யஇலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுகாறும் 81,620 டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன.

தேசிய ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 12,600 குடும்பங்களுக்கு மானியமும், நிதி உதவியும் வழங்கத் திட்டமிடப்பட்டு 12,000 குடும்பங்களுக்கு மானியமும், நிதி உதவியும் இதுகாறும் அளிக்கப்பட்டிருக்கிறது. கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பை வாக்கித் தருகின்ற வகையில் 15,30,000 உழைப்பு தினங்களை உருவாக்கிட திட்டமிடப்பட்டு, இதுகாறும் ரூ. 135 இலட்சம் செலவிடப்பட்டு 11,00,000 உழைப்பு தினங்கள் உருவாக்கித் தரப்பட்டுள்ளன. உபரி நிலங்களை விவசாயத் தொழிலாளர்கட்கும், ஏழை விவசாயிகட்கும் வழங்குகின்ற திட்டத்தின் அடிப்படையில் 236 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டு இருக்கிறது.

அடிமைத் தொழிலாளர்களை விடுவிக்கின்ற திட்டத்தின்கீழ் ... பேர் விடுவிக்கப்பட்டு, சரவணப்பட்டி கிராமப்பகுதியில் அவர்கட்கு நல்வாழ்வு தரப்பட்டிருக்கிறது. 5,253 ஆதிதிராவிட குடும்பங்களும் 44 மலைவாழுநர் குடும்பங்களும் பயன்பெற்றிருக்கின்றன.

குடிநீர் வசதியற்ற 32 கிராமங்கட்கு குடிநீர் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. 3,500 வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கத் திட்டமிடப்பட்டு, 6,438 வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. கிராமப்புறங்களில் வாழுகின்ற மக்களுக்கு 1,500 வீடுகள் கட்டித் தருகின்ற பணி நடைபெற்று வருகிறது. இதில் 600 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. குடிசைப் பகுதிகளை மாற்றி நல்ல வீடுகளை நகர்ப்புறங்களில் வாழுகின்ற குடிசைவாசிகளுக்கு வழங்கவேண்டும் என்கிற வகையில் 6,640 குடும்பங்கட்கு வீடு கட்டித்தர இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 5,469 வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன.



நீர்ப்பாசன வசதிக்காக 450 பம்ப் செட்டுகளுக்குப் புதிதாக மின் இணைப்பு செய்து தரப்பட்டிருக்கிறது. மரங்கள் நட்டு சமூகநலக் காடுகளை வளர்க்கின்ற திட்டத்தின்கீழ் 37,18,000 மரங்கள் நட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 49,30,828 மரங்கள் நடப்பட்டிருக்கின்றன. எரிசாண வாயு அடுப்பு அமைக்கின்ற திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் 500 அடுப்புகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 1,027 அடுப்புகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன.

நிரந்தரக் குடும்பநல அறுவைச் சிகிச்சை 34,000 பேருக்குச் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 25,000 பேருக்கு குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. மேலும் இதற்கான முகாம்கள் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்றுக் கொண்டுள்ளன. பெண்களுக்கான லேபரோஸ்கோபிக் அறுவைச் சிகிச்சை முகாம் அரசு மருத்துவ நிலையங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

கோவை மாவட்டத்தில் 21 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு, மக்களின் நல்வாழ்விற்கு - ஆரோக்கியமான வாழ்விற்கு, மருத்துவ வசதிகள் செய்து தரப்பட்டுவருவதோடு, 200-க்கும் மேற்பட்ட தாய்சேய் நல விடுதிகளும், 20-க்கும் மேற்பட்ட கிராமிய மருந்தகங்களும் பாங்குற செயல்பட்டு வருகின்றன. மேலும் ஒரு கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதுவும் நிறைவேற்றப்பட்டுள்ளது. 6 வயதிலிருந்து 14 வயதிற்குட்பட்ட எழுத்தறிவற்ற கிராமப்புற இளைஞர்கட்கு எழுத்தறிவு வழங்கும் திட்டத்தின்கீழ் 15,865 பேருக்கு எழுத்தறிவு அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 19,970 பேருக்கு எழுத்தறிவு அளிக்கப்பட்டு வருகிறது. கிராமப்புறங்களில் வாழுகின்ற கல்வியறிவற்ற முதியோர்கட்கு முதியோர் கல்வி மையங்கள் உருவாக்கப்பட்டு 25,600 பேருக்கு முதியோர் கல்வி வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு 29,715 பேருக்கு முதியோர் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.

**மகத்தான திட்டம் :**

புதிய இருபது அம்சத் திட்டம் பல புதுமைகளை உருவாக்குகின்ற மகத்தான திட்டமாகவும், மக்களின் மத்தியில் நற்பயனை மிகுதியாக விளைவிக்கின்ற திட்டமாகவும் இலங்கி விளங்கி, பெரும் பயனை மக்களுக்கு உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் மாவட்டத்திலுள்ள அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. கொடுக்கப்பட்ட இலக்கினை மிஞ்சி, பிற மாட்டங்களை விஞ்சி புகழ்சேர்க்கும் மாவட்டமாய் கோவை மாவட்டம் நடப்பு ஆண்டிலும் திகழ்கிறது என்பது பெருமைக்குரியதாகும்.

கிராமப்புற மக்களின் வளர்ச்சிக்கும், வாழ்விற்கும் இத்திட்டம் வழிவகுப்பதோடு, இந்தியாவின் வளர்ச்சிக்கும், பொருளாதார எழுச்சிக்கும் முத்தாய்ப்பாய் திகழுதல் காண முடியும். ஒட்டு மொத்த மக்களின் உழைப்புச் சக்தி, நாட்டின் வளர்ச்சிக்கும், பொருளாதார மேன்மைக்கும் வெகுவாக உதவுகின்றது. இத்திட்டத்தினால் தனி மனிதனின் வாழ்வு மலருவதோடு, அவனது குடும்பம், சமுதாயம், ஊர், நாடு மேன்மையடைகின்ற தத்துவம் உண்மையாக்கப்பட்டு வருகிறது.

சமுதாயத்தில் மகிழ்ச்சி என்கிற மகத்தான ஒளி வெகுவேகமாகப் பரவி வருவதோடு சமுதாயச் சொத்து வளர்ச்சி, தனி நபரின் பொருளாதார மேன்மை, உற்பத்திப் பெருக்கம் வெகுவாக பெருக்கப்பட்டு வருகிறது என்கின்ற உண்மையை தமிழகம் உலகறியச் சாதனைக் கனிகளைத் தந்து பெருமை சேர்த்துக்கொண்டிருக்கிறது என்றால் மிகையாகாது!

**பீ. சுப்பையா,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**

---

# எக்டேர் விளைச்சல் இரட்டிப்பு!

**பு**திய இருபது அம்சத் திட்டத்தின்கீழ்
பயறு உற்பத்தியை அதிகரிக்கும் வகையில்,
கொண்டைக்கடலை மகசூல் பல ஆண்டுகளாக
எக்டேருக்கு 750 கிலோ என்ற அளவில் இருக்
கின்ற மந்த நிலையினைப் போக்க, கோவை
மாவட்டத்தில் ''கொண்டைக்கடலை உற்
பத்தி அதிகரிப்பு'' என்னும் முயற்சி மேற்
கொள்ளப்பட்டு, 642 விவசாயிகள் பங்கேற்று
7000 ஏக்கரில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்
டது.

கிராம விரிவாக்கப் பணியாளர்களுக்குச் சிறப்
புப் பயிற்சி அளித்தும், விவசாயிகளைச் சந்
தித்தும், கோ 2. 'ஷோபா' போன்ற பொறுக்கு
ரக கொண்டைக்கடலை விதைகளை வழங்
கியும் கொண்டைக்கடலை உற்பத்தியை,
எக்டேருக்கு 1500 கிலோ என இருமடங்காக
ஆக்கியிருக்கிறது வேளாண்மைத்துறை.



# திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கென்று ஓர் வரலாற்றுப் பெருமையுண்டு. சத்துணவுத் திட்டம் என்ற புத்தம் புதிய திட்டத்தை, பசியால் கத்தும் குழந்தைகளின் சித்தம் மகிழ்ந்திட முத்தமிழ நாட்டில் முதலில் தொடங்கிய நகரம் திருச்சிராப்பள்ளிதான்! அத்திட்டம் இன்று எட்டுத் திசையும் புகழ் பரப்பி வருகிறது.

சுயவேலை வாய்ப்புத் திட்டம் -இளைஞர்களின் சிந்தனையைத் தூண்டும் திட்டம்- ''தன்கையே தனக்குதவி'' என்ற பழமொழியை வாழ்வில் வழிகாட்டியாக்கும் திட்டம். இத்தகைய திட்டத்தையும் முதலில் தொடங்கி வைத்த இடம் திருச்சிராப்பள்ளி தான்!

அரசின் திட்டங்களை முனைப்போடு செயலாற்றிவரும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், இந்தியப் பிரதமரின் புதிய இருபது அம்சத் திட்டத்தையும் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 20 அம்சத் திட்டத்தின் கீழ் ஏற்பட்டுள்ள முன்னேற்றப் பணிகள் வருமாறு :—

### திட்டம் 1

1982-'83 ஆம் ஆண்டில் வறண்ட பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதி கொடுத்து கூடுதலாக 3,965 எக்டேர் நிலப்பரப்பு குழாய்க் கிணறுகள் அமைத்ததன் மூலம் பாசன வசதி பெறப்பட்டுள்ளது. அரசு நிர்ணயித்த குறியீடான 3,355 எக்டேர் நிலப்பரப்பளவை மிஞ்சியது குறிப்பிடத்தக்கதாகும் 1983-84ஆம் ஆண்டில் மேலும் 2,684 எக்டேர் நிலம் புதிய பாசன வசதி கொடுக்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு பிப்ரவரி 1984 வரை 1,932 எக்டேர் நிலப்பரப்பு பாசன வசதி செய்யப்பட்டுள்ளது.

இது தவிர, பாசன வசதியைப் பெருக்கும் திட்டத்தின்கீழ், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 1,785 ஏக்கர் பாசனம் பெறும் வகையில், ரூ. 90 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் உப்பாறு நீர்த்தேக்கத் திட்டமும், 5,048.85 ஏக்கர் பாசனம் பெறும் வகையில் ரூ. 240 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் சுத்தமல்லி நீர்த்தேக்கத் திட்டமும், 9,625 ஏக்கர் பாசனம் பெறும் வகையில் ரூ. 713 இலட்சம் திட்ட ம[illegible]ப்பீட்டில் நொய்[illegible]ல் அணைக்கட்டு திட்டமு[illegible] செயல்படுத்த[illegible] வடிக்கை[illegible]ற் கொள்ள[illegible]பட்டுள்ளது. [illegible]ன் மூல[illegible] [illegible]தி தாக ப[illegible]லாயிரம் ஏக்[illegible]லம் [illegible]சன வசதி பெறும்.

பாசன ஆதாரங்களை அதிகரிப்ப[illegible] மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டங்களின் கீழ் 2,556 குழாய்க் கிணறுகளும், 1863 துளைக் கிணறுகளும், 2,664 வடி முனைக் குழாய்களும் அமைக்கப்பட்டுள்ளன. இது தவிர 1,546 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. 18 கசிவு நீர்க்குட்டைகளும் அமைக்கப்பட்டுள்ளன்.

### திட்டம் 2

பயிறுவகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியனவற்றின் உற்பத்தியை அதிகரிக்க சிறப்பான முயற்சி மேற்கொள்ளப்பட்டு இம் மாவட்டத்தில் பயறு வகைகள் 38,77[illegible] எக்டேர் நிலத்தில் சாகுபடி செய்யப்பட்டு இதுவரை 10,815 மெட்ரிக் டன் உற்பத்தி ஆகியுள்ளது. எண்ணெய் வித்துக்கள் 1,20,000 எக்டேர் நிலத்தில் 86,833 மெட்ரிக் டன் உற்பத்தியாகியுள்ளன.

நடப்பு ஆண்டில் பிப்ரவரி 84வரை 12,871 டன் பயிறு வகைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. எண்ணெய் வித்துக்கள் 92,736 டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

### திட்டம் 3

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1983-84ஆம் ஆண்டிற்கு 18,600 என குறியீடு நிர்ணயிக்கப்பட்டு பிப்ரவரி 1984 வரை 17,390 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. குறியீட்டளவில் 93 விழுக்காடு முடிவடைந்துள்ளது. எஞ்சியுள்ளது மார்ச் '84-க்குள் முடிக்கப்பட்டுவிடும்.

1983-84-ல் 2,380 மனித சக்தி நாட்கள் எனக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 12,480 மனித சக்தி நாட்கள் பிப்ரவரி' 84 முடிய பயன்படுத்தப்பட்டுள்ளது.





### தன்னிறைவு பெறும் கிராமங்கள்

இம்மாவட்டத்துல் உள்ள சிறிய, பெரிய கிராமங்களில் வாழும் மக்களின் அன்றாடத் தேவைகள் ஒருங்கிணைந்த முறையில் செயலாற்றிட தமிழ்நாடு அரசு தன்னிறைவுத் திட்டத்தினை அறிவித்து கிராமங்களின் வளர்ச்சிக்கு அடிகோலியது. இத்திட்டத்தின் கீழ் 31 ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கிய இம்மாவட்டத்தில் மூன்று கட்டமாகப் பிரிக்கப்பட்டு முதல் கட்டமாக 5 ஊராட்சி ஒன்றியங்களும், இரண்டாவது கட்டமாக 10 ஊராட்சி ஒன்றியங்களும், 3-வது கட்டமாக 16 ஊராட்சி ஒன்றியங்களும் பணிகள் முடிக்கப்பட்டன.

இக்கட்டங்களில் ஒவ்வொரு கிராமத்திலும். 1) இணைப்புச் சாலைகள், 2) சிறுபாலங்கள், 3) ஆதிதிராவிடர்கள் காலனி மயானப்பாதை, 4) சிறுபாசனக் குளங்கள் மேம்பாடு, 5) ஊரக மருந்தகம், 6) தாய்சேய் நல விடுதி, 7) பள்ளிக் கட்டடங்கள். போன்ற வளர்ச்சிப் பணி வேலைகள் செய்யப்பட்டன.

| வேலை விவரம் | செலவீடு (ரூபாய் லட்சத்தில்) | பணிகள் எண் |
|---|---|---|
| இணைப்புச் சாலைகள் | 593.56 | 3058 |
| சிறுபாலங்கள் | 405.33 | 2738 |
| ஆதிதிராவிடர்கள் காலனி மயானப்பாதை | 12.63 | 360 |
| சிறுபாசனக் குளங்கள் மேம்பாடு | 31.73 | 397 |
| ஊரக மருந்தகம் | 21.44 | 31 |
| தாய்சேய் நல விடுதி | 54.51 | 81 |
| பள்ளிக் கட்டடங்கள் | 254.91 | 413 |

### திட்டம் 4

விளைநில உச்சவரம்பை அமலாக்கி உபரி நிலங்கள் விநியோகம் செய்வதற்கு இம் மாவட்டத்திற்கான குறியீடு 625 ஏக்கர். ஆனால் 1982-83-ல் 1,489 நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 1448.39 ஏக்கர் உபரி நிலம் விநியோகிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பயன்பெற்றவர்களில் 633 பேர் தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள்.

1983-84ஆம் ஆண்டில் 1250 ஏக்கர் உபரிநிலம் விநியோகிக்கப்பட குறியீடு நிர்ணயிக்கப்பட்டு பிப்ரவரி '84 முடிய 1253.67 ஏக்கர் நில[illegible] [illegible]ழை மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. [illegible] 220 தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பய[illegible]ற்றுள்ளனர். குறியீட்டு அளவைத் தாண்[illegible]ாது சிறப்பு அம்சமாகும்.

### திட்டம் 5

விவசாயி தொ[illegible]ளின் குறைந்தபட்ச ஊதியம் நிர்ண[illegible]ப்பட்டு, கிராமங்களில் தண்டோரா மூலமும், கிராமச் சாவடி, ஊராட்சி மன்ற அலுவலகம், வேளாண்மைத் துறை அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஆகிய இடங்களும் மக்கள் அறிந்து கொள்ளத்தக்க வகையில் ஊதிய விகித அறிக்கைகள் ஒட்டி, விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

விவசாயத் தொழிலாளிகளின் குறைந்தபட்ச ஊதியத்தினை நிர்ணயிக்கும் திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் 1980-லிருந்து ஆகஸ்ட் '83 முடிய மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் விளைவாக 1, 26,386 விவசாயத் தொழிலாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

### திட்டம் 6

**பிணைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்:**

1982-83ஆம் அண்டில் மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாவட்டங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட இம்மாவட்டத்தைச் சார்ந்த பிணைத் தொழிலாளர்கள் எண்ணிக்கை 147. இவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் செயற்கை வைரம் தயாரிக்கும் தொழிலில் பிணைத் தொழிலாளர்களாக இருந்த தொழிலாளிகள் விடுவிக்கப்பட்டு அவர்களுக்கென தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

புதிய இருபது அம்சத் திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் 542 பிணைத் தொழிலாளர்கள் கண்டறியப்பட்டு, அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக மத்தியப் பிரதேசத்திலிருந்து 11 பிணைத் தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டு இங்கு கொண்டு வரப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவருக்கும் அரசு ரூ. 1,000 வீதம் உதவித்தொகை வழங்கியுள்ளது. இதுபோன்று அரசு இம்மாவட்டத்திற்கு ரூ. 2,48,100 நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### திட்டம் 7

**தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் வளர்ச்சிக்கான திட்டங்களைத் துரிதப்படுத்துதல்**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் துறையூர், உப்பிலியாபுரம்ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பச்சைமலைப் பகுதியில்தான் பழங்குடி



85347



# வறுமையை விரட்டி வாழ்க்கையை உயர்த்த...

அம்சம் 3

**கோ**வை மாவட்டத்தைச் சேர்ந்தகிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குச் சற்று முன்னர் ஓரிடத்தில், பெண்கள் சுறுசுறுப்புடன் பற்பல கைத் தொழில் வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றனர். பெண்கள்வண்ண வண்ணப் பொருட்களைச்செய்து குவித்த வண்ணம்இருக்கிறார்கள்.

இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அங்கே பனை ஓலை, ஈச்ச ஓலை, தும்புட் பயிற்சி நிலையங்கள் என்ற மூன்று வகைப் பயிற்சிகள் நடைபெறுகின்றன.

முதற்கண் பனை ஓலைப் பயிற்சி நிலையத்திற்குச் செல்வோம். 26 பெண்கள் அக்கம் பக்கத்து ஊர்களிலிருந்து இங்கு வந்து காலை 9 மணியிலிருந்து பனை ஓலையினால் தடுக்குப் பாய், மாணவ மாணவியருக்குரிய பைகள், காகிதக் குப்பைகள் போடும் கூடைகள், அடுக்குக் கூடைகள், 'டிரே', மாலை, மலர்க் கூடைகள், தொப்பி போன்ற பொருட்களை எண்ணற்ற வண்ணங்களில் செய்கின்றனர். பக்கத்து ஊர்களிலிருந்து இவர்களுக்கு ஓலை கிடைக்கிறது. அவ்வூர் மக்களே சாயம் தோய்த்து இங்கு அனுப்பி விடுகின்றனர்.

சென்ற ஆண்டு மே மாதம் முதல் இப்பயிற்சி தொடங்கிற்று, என்றாலும் இப்பெண்கள் இக்காலத்தில் சிறந்த பயிற்சியைப் பெற்று விட்டனர் என்பதை மறுக்க முடியாது. ஆறு மாத காலப்பயிற்சிக் காலத்துல் ஒவ்வொரு மாதத்திற்கும் ரூ. 125 வீதம் உதவித் தொகையை அரசிடமிருந்து பெறுகின்றனர், பயிற்சியாளர்கள். பயிற்சி முடித்தபின்னர், இவர்கள் சுயமாகவே தொழில் தொடங்குவார்கள். அதற்கு ஒன்றிய அலுவலர்களும், வங்கிகளும் தேவையான உதவிகளைச் செய்யும். ஒன்பதாம் வகுப்புவரை படித்த திருமதி சுந்தராம்பாள் என்பவர் 'என்னுடைய பயிற்சி முடிந்ததும் வங்கியில் உதவி பெற்றுச் சுயமாகத் தொழிலைத் தொடங்குவேன். எல்லாச் செலவும் போக எனக்கு நாளொன்றுக்கு ரூ. 6 வரை ஆதாயம் கிடைக்கும்' என்று மிகுந்த நம்பிக்கையுடன் கூறுகிறார்.

அடுத்தது, ஈச்ச ஓலைப்பயிற்சி நிலையம். ஷெட்யூல்ட் வகுப்பைச் சேர்ந்த 28 பெண்கள் இங்கே பயிற்சி பெறுகிறார்கள். வெல்லம், கருப்புக்கட்டி, புளி போன்றவற்றைக் கட்டி அனுப்புவதற்கு ஏற்ற ஓலைப்பாய்களை முடைதல், பல வண்ணங்களில் அழகிய துடைப்பங்கள், மிதியடிகள், பெருக்கும் படலங்கள், துடைப்பான்கள் ஆகியவற்றைச் செய்ய இங்கு பயிற்சியளிக்கப் பட்டு வருகிறது. கையால் இயங்கும் ஓர் இயந்திரத்தை வைத்து ஈச்ச ஓலைகளை நாறுகளாகப் பிரித்து இப்பொருட்களைச் செய்கிறார்கள். ஒருவர் ஒரு விதமான பொருளை மட்டுமே தயாரிக்கக் கற்றுக் கொடுக்கப்படுவதில்லை. எல்லோரும் எல்லாப் பொருட்களையும் தயாரிக்கப் பயிற்சி அளிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.


**எச்.பி.என். ஷெட்டி, இ.ஆ.ப.**

**ஆணையர் மற்றும்**
**அரசுச் செயலர்,**
**ஊரக வளர்ச்சி மற்றும்**
**உள்ளாட்சித்துறை.**


இறுதியாக உள்ள தும்புப் பயிற்சி நிலையத்தில் 28பெண்கள் சுறுசுறுப்புடன் ஓடியாடி வேலை செய்கின்றனர்.

பனை மரத்துப் பட்டையை மரச் சுத்தியால் அடித்து, சீவி 5 முதல் 12 அங்குலம் நீளம் வரை தரவாரியாகப் பிரித்து விற்பனைக்கு அனுப்புகிறார்கள். இந் நாறுகளைக் கொண்டு சாதாரண 'பிரஷ்கள், கழிவறைகள், குளியலறைகள் ஆகியவற்றைக் கழுவும் 'பிரஷ்'கள், மிருகங்களைச் சுத்தம் செய்யும் கருவிகள் செய்யப்படுகின்றன.

பயிற்சி பெறும் ஒருவர் 100 பட்டைகளை அடித்து அடுத்த நாள் அதனைக் கையால் இயங்கும் இயந்திரத்தின் உதவி கொண்டு நாறுகளாக்கி விடுகிறார்.

இம்மூன்று நிலையங்களும் பனை வெல்ல உற்பத்தியாளர் சங்கத்தால் கோவை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் உதவியினால் நடைபெறுகின்றன.

இங்குள்ள பெண்கள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியாக, வருங்காலத்தில் மிக்க நம்பிக்கையுடையவர்களாகத் தென்படுகிறார்கள். பயிற்சியின் முடிவில் சொந்தமாகத்தொழில்தொடங்க வேண்டுமென்ற ஆர்வம், அவர்களிடம் மிகுதியாகக் காணப்படுகிறது. மணமாகாத பெண்கள் பெற்றோருக்கும் மணமானவர்கள் தங்கள் குடும்பங்களுக்கும் கூடுதல் வருவாயைப் பெற இவ்விதப் பயிற்சிகள் உதவுகின்றன என்கின்றனர். வாழ்வில் வளங்காணத் துடிப்புடன் உள்ளனர்.

அடுத்து உடுமலைப் பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச்சார்ந்த கொடுங்கியம் என்ற கிராமத்திலுள்ள அம்பர் ராட்டை நூற்புப் பயிற்சி நிலையத்தைக் காண்போம். கொடுங்கியம், சாலையூர், எரிசனம்பட்டி, உடுக்கம்பாளையம் என்ற ஊர்களிலிருந்து ஷெட்யூல்ட் வகுப்பினரைச் சேர்ந்த 30 பேர்கள் இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டத்தில் பயிற்சி பெறுகின்றனர். இவர்களுக்கும் திங்கள்தோறும் ரூ. 125 உதவித் தொகை கொடுக்கப்படுகிறது.

பயிற்சி பெறும் ஒருவர் ஒரு நாளில் 5சிட்டம் அதாவது 5,000 மீட்டர் நூல் போடுவார். இச் சிட்டங்கள் மடத்துக்குளம் வட்டாரத்திலுள்ள கொழுமம் கால் விசைத்தறி நிலையத்திற்கு அனுப்பப்படுகின்றன. இதுவும் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் உருவான நிலையம் தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாண்டு செப்டம்பர் திங்களில் தொடங்கப்பட்ட இந் நிலையத்திற்கு ரூ. 30,900 மதிப்புள்ள இயந்திரங்கள் உள்ளன. 25 ராட்டைகள், 4 பட்டை இயந்திரங்கள், 2 பஞ்சு அறைக்கும் தரைப்பாகம் உள்ளன.

இவை போன்ற தச்சு, கருமார், கட்டடத் தொழில்கள் போன்றவற்றிலும், வீட்டில் மின் சாதனங்களை இணைத்தல், பழுது பார்த்தல், நீர் இறவை இயந்திரங்கள், டிராக்டர்கள் செப்பனிடல், சோப்பு செய்தல், மரம், இரும்பு, களிமண் கொண்டு விளையாட்டுப் பொருட்கள் செய்தல் போன்ற சுமார் நூற்றுக்கு மேற்பட்ட தொழில்களில் தரமான பயிற்சிகள் தமிழக மெங்கும் அளிக்கப்படுகின்றன.

கிராமங்களிலே தொழிற் பயிற்சி, கல்வியறிவு பெற்ற இளைஞர்கள் மிகக் குறைவாவாகவே உள்ளனர். கல்வியறிவு பெற்று வாழ்க்கையில் வளங்காண வேண்டுமென்று பேராவல் கொண்டுள்ள இளைஞர்கள்கூட, குடும்பச் சூழ்நிலை பொருளாதார நிலையின் காரணமாகப் படிப்பை நிறுத்தி விட்டு, பெற்றோர்களுடன் உழைத்து மிகக் குறைந்த வருவாயுடன் வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்களுடைய குடும்ப நிலை நாளுக்கு நாள் உயர்வடைவது தவிர்க்கப்பட்டு, வறுமைக்குத் தள்ளப் படுகின்றனர். இவர்களின் நிலையை உயர்த்த அரசு என்ன செய்கிறது? இவர்களுக்காகவே, அரசு 'இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தை' உருவாக்கி நாடெங்கிலும் கிராமம் கிராமமாகச் செயல்படுத்துகிறது.

'இத்திட்டத்திலே சேர்ந்து பயிற்சியடையக் குறைந்த அளவு கல்வித் தகுதியேதும் நிர்ணயிக்கப்படவில்லை. படித்துத்தெரிந்து கொள்வதைவிட, செய்து கற்றுக் கொள்ள வேண்டுமென்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இதில் சேர்ந்து பயிற்சி பெற, உதவித்தொகையை அரசு அளிப்பதுடன் மட்டும் அமையாது, பயிற்சி முடிந்தவுடனேயே தொழில் தொடங்குவதற்குத் தேவையான வங்கிக் கடன் வசதியைப் பெறவும், உதவித் தொகையைப் பெறவும், அரசு மீண்டும் உதவி செய்கிறது.

இத்திட்டம், கிராமங்களிலுள்ள 18 முதல் 35 வயது வரையிலான ஆண், பெண் இரு சாரார்களுக்கும் மிக்க பயனளிக்கும் திட்டமாகும். இதில் சேர்ந்து பயனடைய விரும்புவோர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்திலுள்ள திட்ட அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர்களை அணுகினால், குடும்ப நிலை, வருவாய், தகுதி போன்றவற்றை விசாரித்து சில விதிகளுக்குட்பட்டுத்தேவையான உதவிகளைச் செய்வார்கள்.

கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் தமிழகத்தில் 1,29,753 பேர்கள் பயிற்சி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க ஒரு செய்தியாகும்.

## முக்கிய மைல்கல்

**இ**ந்தியத் திருநாட்டின் பொருளாதார மறுமலர்ச்சிப் பயணத்தின்முக்கிய மைல் கல்லாகப் புதிய 20 அம்சத் திட்டம் விளங்குகிறது.

1975ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 20 அம்சத் திட்டம், ஐந்தாண்டுத் திட்டங்களின் பயனாக முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருந்த இந்திய சமதர்மப் பொருளாதார வளர்ச்சியை மேலும் ஊக்குவித்தது. இதன் தொடர்ச்சியாகவே புதிய 20 அம்சத் திட்டத்தை, நாட்டு மக்களுக்கு மாண்புமிகு பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் 14.1.1982 அன்று அளித்தார்.

முதல் இரண்டு அம்சங்கள் வேளாண்மைக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன.

விஞ்ஞானமும், ஆராய்ச்சியும் இதுகாறும் கோதுமை பற்றியும், நெற்பயிரைப் பற்றியும், பாசனப் பயிரைப் பற்றியும் ஆய்வு செய்து கொண்டிருந்தன.

புஞ்சைப் பயிரும், பயறு வகைகளும் நாட்டின் பெருமளவு - மிகப் பெருமளவு- விவசாயம் என்பதை நாம் நினைவு கூரவில்லை. புஞ்சைப் பயிர் உழவனும் நாட்டுக்கு அச்சாணியாவான்.

புஞ்செய் தானியமும் புரதம் நிறைந்த பயறு வகைகளும் உடலுக்கு உறுதி என்பதிலோ, இந்தப் பயிர்வகை உழவர்களையும் மேம்படச் செய்ய வேண்டும் என்பதிலோ இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியுமா?

எனவேதான், இருபது அம்சத் திட்டத்தில் முதல் இரண்டு திட்டங்களாக இவை அமைந்துள்ளன.



# தமிழ் நாட்டில் குடும்ப நலத் திட்டம்

அம்சம்: 13



**ம**க்கட்தொகைக் கட்டுப்பாடு என்பது ஒரு நாட்டின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு மிகவும் முதன்மையானது என்பதை உணர்ந்து, தமிழ்நாடு அரசு 1956ஆம் ஆண்டு முதற்கொண்டே குடும்பநலத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கி வருகிறது

நம்முடைய நோக்கம், பிறப்பு வீதத்தையும், இறப்பு வீதத்தையும் கி.பி.2000-ஆம் ஆண்டில் 1000-க்கு முறையே 21 9 என்ற விதத்தில் குறைப்பதாகும். தகுதி வாய்ந்த தம்பதியர் நிலையான அல்லது தற்காலிகமான குடும்ப நலத் திட்ட முறைகளைப் பின்பற்றி 'சிறு குடும்ப முறையை' ஏற்கும் வகையில் அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கி ஊக்கம் அளிக்க மும்முரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

1983-84ஆம் ஆண்டு குடும்ப நலத் திட்டத்தில் 3.99 இலட்சம் அறுவைச் சிகிச்சைகள் செய்வது இலக்கு. 1984 பிப்ரவரி வரை 4.28இலட்சம் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. இது இலக்கை விஞ்சிய சாதனை.

குடும்பநலத் திட்டத்தில் மகளிருக்கான கருத்தடை அறுவைச் சிகிச்சையின் வேகம் தற்போது அதிகரித்து வருகிறது. இக் கருத்தடை அறுவைச் சிகிச்சை ''லாப்ராஸ்கோப்'' நவீன முறையில் செய்து கொள்ளவே மகளிர் பலர் விரும்புகின்றனர். 1983-84-ஆம் ஆண்டில் மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு வழங்கியுள்ள 23 லாப்ராஸ்கோப்புகளுடன் மாநில அரசு ரூ.10.94 இலட்சம் மதிப்பீட்டில் 26 லாப்ராஸ்போப் கருவிகள் வாங்கி, வட்ட மருத்துவ மனைகளுக்கு வழங்கிட ஆணை பிறப்பித்துள்ளது. மகளிர்க்கான கருத்தடை அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள வசதிகள் செய்து கொடுக்கும் பொருட்டு 1983-84ஆம் ஆண்டில் 12 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் தனியாக அறுவைச் சிகிச்சைக் கூடங்களைக் கட்டவும் அரசு ஆவன செய்துள்ளது.

இம்மாநிலத்திலுள்ள அரசு மருத்துவ நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவை நகர்ப் பகுதி குடும்பநல மையங்களை நடத்தி வருகின்றன. அரசு சார்பில் 164 மையங்களும், உள்ளாட்சி மன்றங்கள் 66 மையங்களும், தொண்டு நிறுவனங்கள் 14 மையங்களும் ஆக மொத்தம் 244 மையங்கள் இயங்கி வருகின்றன.

சிறு குடும்பக் கோட்பாட்டில் நம்பிக்கை ஊட்டுவதற்குத் தாய் சேய் நலத் திட்டத்தினைச் செம்மையாகச் செயல்படுத்துவது இன்றியமையாததாகும். குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடுவது மற்றும் இரும்புச் சத்துள்ள மாத்திரைகள் வழங்குவதும் கருவுற்ற தாய்மார்களுக்கு இரும்புச் சத்துள்ள மாத்திரைகள் வழங்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

குறையுள்ள கருக்கலைப்பு செய்து கொள்வதனால் கருவுற்ற மகளிர் இறப்பதையும், நோய் வாய்ப்படுவதையும் குறைப்பதற்காக 1971ஆம் ஆண்டு மருத்துவமுறை கருச்சிதைவுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. காப்பு நடவடிக்கைக்காக இச்சட்டம் கொண்டு வரப்பட்டபோதிலும் மகளிர் சிறு குடும்பக்கோட்பாட்டை ஏற்றுக் கொண்டு அவர்கள் மருத்துவ முறையில் கருக்கலைப்பு செய்வது குடும்ப நலத் திட்டத்திற்கு உதவியாக இருக்கிறது. தற்போது 166 அரசு மருத்துவ நிறுவனங்களிலும், 234 தனியார் மருத்துவ நிறுவனங்களிலும் மருத்துவ முறையில் கருச்சிதைவு செய்துகொள்வதற்கான வசதிகள் உள்ளன.



# ஒரு நாள் சமையலுக்கு 1½ வண்டி விறகு



அம்சம் 12

**ம**துரை மாவட்டத்தைச் சேர்ந்த வடவீரநாயக்கன் பட்டியில் ஏழு சகோதரர்கள் கொண்ட ஒரு கூட்டுக்குடும்பம்.

இந்த சகோதரர்கள், வாரிசுதாரர்கள் உட்பட 136 பேர் அடங்கிய 31 குடும்பங்களாக ஒரே நான்கு மனைக்குள் குடியிருந்து வருகின்றனர். இவர்களுக்குச் சொந்தமாக நஞ்சை 15 ஏக்கரும், புஞ்சை 45 ஏக்கரும் உள்ளன. தாங்களே நேரடியாக விவசாயம் செய்து வருகிறார்கள்.

இவர்களுக்குச் சொந்தமாக 100 கால்நடைகள் உள்ளன. தானியங்கள் வெளியிலிருந்து வாங்குவதில்லை. விவசாயம் மூலம் கிடைக்கும் மொத்த தானியங்களையும் அவர்களது தானியக் களஞ்சியங்களில் சேமித்து வைக்கிறார்கள்.

இவர்கள் [illegible], கேழ்வரகு, கம்பு [illegible] தானியங்களுக்குத் தனித்[illegible] களஞ்சியங்கள் ஏற்ப[illegible]யுள்ளனர். இந்தக் குடும்ப[illegible]தைச் சேர்ந்த 136 உறுப்பினர்[illegible] வேண்டிய உணவு [illegible] ஒரே பொது ச[illegible]தில் சமைக்கப்படுகிற[illegible]

சமையல் [illegible]க்குப் பெண் பொறு[illegible] [illegible]யமிக்கப்பட்டி[illegible] அவரின் நேரடி நிர்வ[illegible] சமையல் வேலையை [illegible] ஒரு குடும்பம் என்ற முறையில் ஏற்றுக் கொள்கின்றனர்.

இக்கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சமையலுக்காக நாள் ஒன்றுக்கு 1½ வண்டி கணக்கில் மாதம் ஒன்றுக்கு 30 டன் விறகைப் பயன்படுத்தி வந்தனர். தற்போது பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அலுவலர்களின் தூண்டுதலின் பேரில் பத்து கன மீட்டர் அளவிலான 3 சாண எரிவாயு ஆலைகள் அமைத்துச் சிறிதளவும் விறகு பயன்படுத்தாமல் சமையலுக்கு முழுமையாக இச் சாதனங்களையே பயன்படுத்துகின்றனர்.

இச்சாதனங்கள் அமைப்பதற்கெனப் பெரியகுளம் கனரா வங்கிக் கிளையிலிருந்து ரூ. 28,660 கடனாகவும், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ரூ. 9,150 மானியமாகவும் பெற்றுள்ளனர். இந்த ஆலைகள் 27.1.84 முதல் இயங்கி வருகின்றன.

சாண எரிவாயுவின் அவசியத்தை உணர்ந்துள்ள இந்தக் குடும்பத்தினரைப் போல ஏனைய குடும்பத்தினரும் உணர்ந்து கொண்டால், நாட்டின் பொருளாதாரம் வளம் பெறும் என்பது திண்ணம்.

**—வி. சகாதேவன் நாயர்**

**ஆணையர், பெரியகுளம், ஊராட்சி ஒன்றியம்.**



# 11வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி

## நிறைவு விழா

அனைவராலும் போற்றிப் புகழப் பெற்ற அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 1983 டிசம்பர் 30ஆம் நாள் தொடங்கியது. அதன் நிறைவு விழா 1984 மார்ச் 12ஆம் நாள் நடந்தது. 72 நாட்கள் நடந்த இந்தப்பொருட் காட்சி எல்லார் இதயத்தையும் கவர்ந்தது.

மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள், அறிஞர் அண்ணா கலையரங்கில் நடந்த பொருட்சாட்சி நிறைவு விழாவுக்குத் தலைமை வகித்தார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சிறந்த அரங்குகளுக்குப் பரிசுகள் வழங்கினார். அப்போது அவர் பேசுகையில்—

''சுற்றுலா வருபவர்களின் மூலம் 1982ஆம் ஆண்டில் ரூபாய் 750 கோடியும், 1983-ல் ரூபாய் 780 கோடியும் அந்நியச் செலாவணி கிடைத்திருக்கிறது. அது 1984-ல் ரூ. 850 கோடியாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

''பிற மாநிலங்களைவிட தமிழ் நாட்டுக்கு வந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1982-ல் 2 கோடியே 29 இலட்சத்து 653 ஆகவும், 1983-ல் 2 கோடியே 75 இலட்சமாகவும் உயர்ந்திருக்கிறது. பிற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்தவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 75 ஆயிரம்''.

மாண்புமிகு செய்தி;அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள், நிறைவு விழா சொற்பொழிவாற்றினார். அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:



தெப்பக் காட்சி

''இந்தப் பொருட்காட்சியை 20 இலட்சம் பேர் பார்த்து இருக்கிறார்கள். மழை இல்லாமல் இருந்திருந்தால் மேலும் 8 இலட்சம் மக்கள் பார்த்து இருப்பார்கள். இதனால் வருவாய் வந்திருக்கும் என்பதற்காகச் சொல்லவில்லை. அனுபவ அறிவை மக்கள் பெற்று இருப்பார்கள் என்பதற்காகச் சொல்லுகிறேன்.

''பொருட்காட்சிக்கு வருமான இழப்பு வந்தாலும் பரவாயில்லை என்று சூதாட்டத்தை ஒழிக்க அரசு முடிவு செய்தது. ஆனால் ஒவ்வொரு மாவட்டத் தலை நகரங்களிலும் பொருட்காட்சி என்ற பெயரில் சிலர் சூதாட்டம் நடத்துகிறார்கள்.

''கிராம மக்கள் உழைத்துச் சம்பாதித்த பணத்தை, சூதாட்டத்தின் மூலம் இழந்து விடும் நிலை ஏற்படுகிறது. சூதாட்டத்தைப் பொருட்காட்சியில் அனுமதித்து இருந்தால், இன்னும் 5 இலட்சம் அதிகப்படியாக வருமானம் கிடைத்து இருக்கும். இதைப் பெற ரூ. 50 இலட்சத்தை மக்கள் சூதாட்டத்தின் மூலம் இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிடுமே என்றுதான் எடுத்த முடிவை நாங்கள் மாற்றவில்லை.

''இங்கே நிரந்தரப் பொருட்காட்சிக்குத் திட்டமிட்டு, நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டது.

''அறநிலையத்துறை அரங்கு, செய்தி - சுற்றுலா அரங்கு, தெப்பக் காட்சி, பொம்மலாட்டக் காட்சி ஆகியவை நிரந்தரப் பொருட்காட்சி அமைவதற்கு முன்னோடியாகத் தொடர்ந்து சில மாதம் இருக்கும். குழந்தைகள் ரெயிலையும் வைக்க வேண்டும் என்று நினைத்து இருக்கிறோம். சிறுவர்கள் விளையாடும் இடமும் இங்கே ஏற்படுத்தப்படும்.

''சுற்றுலா விடுதி (தமிழ்நாடு ஓட்டல்) மாலை நேரத்தில் இயங்கும். இங்கு உள்ள அண்ணா கலை அரங்கை, நிரந்தர திறந்த வெளி நாடக அரங்கமாக்கச் சுற்றுலாத்துறை உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.''



தமிழ்நாடு ஓட்டல்

விழா தொடக்கத்தில், தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர், திரு க. பாலசுப்பிரமணியன் அனைவரையும் வரவேற்றார். நிர்வாக இயக்குநர். திரு என். கோவிந்தன் இ.ஆ.ப. நன்றி நவின்றார்.

விழா முடிவில் செல்வி வெண்ணிற ஆடை நிர்மலா குழுவினரின் 'பாரதி கண்ணம்மா' என்னும் நாட்டிய நாடகம் நடந்தது.

— பி.வி.ஜி.

# தாய்க்குப் பாராட்டு



தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலகத் தாய்த் தமிழ்ப்பேரவை 22.2.84 அன்று தலைமைச் செயலகத் திறந்த வெளி அரங்கில் தலைமைச் செயலக நாடகக் கலைஞர்களுக்குப் பாராட்டு விழாவையும், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப் படத் திறப்பு விழாவையும் சீரும் சிறப்புமாக நடத்தியது. விழாவுக்கு வந்திருந்தோரை தாய்த் தமிழ்ப்பேரவைத் தலைவர் திரு நீ.சகாதேவன் வரவேற்றார்.

சட்டமன்றப் பேரவைத் தலைவர் மாண்புமிகு க. இராசாராம் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

தலைமைச் செயலாளர் திரு. கு.சொக்கலிங்கம் இ.ஆ.ப. அவர்கள், மற்ற மாநிலங்களில் பரிசு பெற்ற நாடகக் கலைஞர்களுக்கும், எட்டு நாடகக் கலைக் குழுவிற்கும் பரிசுகளை வழங்கினார்.

திரைப்பட முன்னணி நடிகை செல்வி ஊர்வசி வாழ்த்திப் பேசுகையில்:

''இங்குப் பணியாற்றும நாடகக் கலைஞர்களைப் பாராட்டுகின்றேன். அவர்களைப் பாராட்டும் விழாக்கள் அடிக்கடி நடைபெற வேண்டும். இந்தத் தமிழ்ப் பேரவையின் பணியைப் பாராட்டுகின்றேன். தங்களுடைய திறமையையும் வெளிப்படுத்த வேண்டுகின்றேன்.''

[illegible] கையில்:

''தாய்த் தமிழ்ப் பேரவையின் சார்பில் தக்கவர்களைத் தேர்ந்தெடுத்து முதல்வர் படத்தைத் திறந்து வைத்தது குறித்து மகிழ்ச்சி. அரசாங்க அலுவலகங்களில் பணியாற்றுவதால் இயந்திரங்களாக இல்லாமல் கலையார்வம் உள்ளவர்களாக உள்ளது பாராட்டுக்குரியது. மற்றவர்களால் பாராட்டப்படுகின்ற மகனை இந்தத் தாய் பாராட்டுகிறது.

''ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சியில் தலைமைச் செயலக நாடகக் குழுவிற்கு நாடகம் நடத்த அனுமதி வழங்கப்பட்டது. மாவட்டங்களில் நடைபெற்ற பொருட்காட்சிகளில் வாய்ப்புக் கொடுக்கப்பட்



தலைமைச் செயலகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிற நண்பர்கள் தாய்த் தமிழ்ப் பேரவை நடத்தி வருவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். நாடகங்களின் மூலம்தான் பல காரியங்கள் தமிழகத்தில் நடைபெற்றன. இன்றைய விஞ்ஞான உலகில் நாடகம் சிறப்புப் பெறுவது பாராட்டத் தக்கது. இங்கு பணியாற்றும் நண்பர்கள் தங்களது கலையார்வத்தை நாடகம் மூலம் வெளிப்படுத்துவது பாராட்டுக்குரியது. சினிமா வளர்ந்து இருந்தாலும் நாடகம்தான் அடிப்படை. நாடகம் சக்திவாய்ந்த சாதனம். பம்மல் சம்பந்த முதலியார், நவாப் ராசமாணிக்கம், டி.கே.எஸ். போன்றோரின் நாடகங்கள் பாராட்டுக்குரியவை.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம் ஜி.ஆர். அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்துக் கலைமாமணி திரு பாரதிராஜா அவர்கள் பேசுகையில்;

''தமிழகத்தில் நாடகம், எழுத்து, இசை ஆகியவற்றிற்குச் சமீபத்தில்தான் மதிப்பு வந்தது. மற்ற மாநிலங்களில் பரிசுபெற்ற தலைமைச் செயலகக் கலைஞர்களைப் பாராட்டுகின்றேன். அவர்கள் என்னைப்போல் வளர வேண்டும் என்று விரும்புகின்றேன். நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களையும் பாராட்டுகின்றேன்'' என்றார்.

தலைமைச் செயலக நாடகக் கலைஞர்களைப் பாராட்டி மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம.

டது. தலைமைச் செயலக நண்பர்கள் நாடகத்துறையில் நடிப்பது குறித்து அவர்களுக்கு ஒன்று சொல்வேன். நடிப்பு, நாடகம் யாருக்கும் சொந்தம் இல்லை. ஆகையால் நல்லமுறையில் நடித்து வெற்றி பெற விரும்புகிறேன்.

இங்கு நடிகர், பாடகர், எழுத்தாளர், கவிஞர் ஆகியோர் உள்ளனர். அவர்களைப் பாராட்ட வேண்டும். இந்த அமைப்புக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்'' என்றார்.

விழா இறுதியில் தாய்த்தமிழ்ப் பேரவையின் துணைத் தலைவர் திரு மா. செல்வராசு நன்றி கூறினார்.

**தொகுப்பு : அ. மருதவிநாயகம்**







# மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு மறுவாழ்வு மையம்

'அரிது அரிது மானிட ராதல் அரிது, மானிட ராதலிலும் கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது' என்று ஔவையார் குறிப்பிட்டார்.

சில குழந்தைகள் பிறக்கும் போதே ஊனமுள்ளவர்களாகப் பிறக்கிறார்கள். மனவளர்ச்சி குன்றியவர்களாகவும் சில குழந்தைகள் பிறந்து விடுகிறார்கள். கை, கால் போன்ற உறுப்புக் குறைபாட்டுடன் பிறக்கும் குழந்தைகள்-கண் பார்வை இல்லாது பிறக்கும் குழந்தைகள் ஆகியவர்களைவிட மனவளர்ச்சி குன்றிப் பிறக்கும் குழந்தைகள் மிகவும் பரிதாபமானவர்கள்.

தமிழ்நாட்டில் 2.25 இலட்சம் பேர் ஊனமுற்ற நிலையில் இருப்பதாக ஒரு கணக்கீடு 1974ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டுள்ளது. 1981ஆம் ஆண்டு ஜூலை-டிசம்பர் மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட தேசீய ஆய்வின் மூலம்-மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 2 சதவிகிதம் பேர்-அதாவது ஏறக்குறைய 10 இலட்சம்பேர் உடலூனமுற்றவர்களாக இருக்கின்றனர் எனத் தெரிய வருகிறது.

பார்வையற்றோர் 1.92 இலட்சம் பேர் என்றும், காது, கேளாதோர் 2.05 இலட்சம் பேர் என்றும், கை, கால் பாதிக்கப்பட்டவர்கள் 5.88 இலட்சம் பேர் என். தொழுநோயாளர், குள்ளர் ஆகிய வகையினர் 15 இலட்சம் பேர் என்றும் கணக்கீடு தெரிவிக்கிறது.

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளைப் பராமரிக்க அரசின் உதவியுடன் தமிழகம் முழுதும் 15 நிலையங்களும், அரசினர் உதவியின்றி தனியாரால் 20 நிலையங்களும் இயங்கி வருகின்றன. இவற்றின் மூலம் ஏறக்குறைய 1500 குழந்தைகள் பயன் பெறுகின்றனர்.

அரசு-தானே இத்தகைய நிலையத்தைத் தொடங்கிச் சேவை செய்ய வேண்டும் என்ற முனைப்புடன் குரோம்பேட்டை நேரு நகரில், ராஜாஜி தெருவில் ஓர் நிறுவனத்தை உருவாக்கியுள்ளது.

தற்சமயம் 25 குழந்தைகள் இங்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். 4 வயது முதல் 9 வயது வரை உள்ள குழந்தைகள் இங்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். மொத்தம் 100 குழந்தைகளைச் சேர்த்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

அரசுத் துறையில் இயங்கும், முதல் மனவளர்ச்சி குன்றியோர் நிறுவனம் இதுதான். 1984 பிப்ரவரித் திங்கள் 20ஆம் நாள் இந்நிறுவனத்தின் தொடக்க விழா நடைபெற்றது.

வரவேற்புரை ஆற்றிய சமூக நல இயக்குநர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப. குறிப்பிட்டார்:

''மனவளர்ச்சி குன்றியுள்ள குழந்தைகளுக்குக் கல்வி அல்லது பயிற்சி அல்லது பாதுகாப்பு அளிக்கச் சில நிறுவனங்கள் தேவைப்படுகின்றன. தனியார் துறையில் பல நிறுவனங்கள் உள்ளன. அரசுத்துறையில் முதல் நிறுவனம்-இன்று தொடங்கப்படும் இந்த நிறுவனம்தான்! இங்குள்ள குழந்தைகளுக்குக் கல்வி, மருத்துவ வசதி, உணவு, உறையுள் அனைத்தும் இலவசம்''.

விழாவுக்குத் தலைமை ஏற்ற அரசினர் மனநலக் காப்பகக் கண்காணிப்பாளர் டாக்டர் எம். வைத்தியலிங்கம் தமது உரையில் தெரிவித்தார்:

''50 குழந்தைகளில் ஒருவர் மூளை வளர்ச்சி குன்றிப் பிறக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. நவீன மருத்துவமுறை, சமூகநலத்துறை, உள இயல் நிபுணர்கள் ஆகியோர் ஒன்றுசேர்ந்துதான் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் நோயைக்குணப்படுத்த இயலும்.



விளையாட்டுப் பொருட்களின் உதவியால் கணிதம் கற்பிக்கப்படுகிறது

''இதைப் போன்ற நிறுவனங்களில் அந்தக் குழந்தைகள் தங்கியிருக்கும்போது, பல்வேறு விதமான பயிற்சிகளினாலும், அன்றாட அனுபவங்களின் மூலமாகவும் வளர்ச்சி பெற வாய்ப்பு உள்ளது.

''கருவுற்ற தாய்மார்கள் சத்துணவு சாப்பிடவேண்டும். அவர்களுக்கு நல்ல விதத்தில் பொது அறிவு புகட்டப்பட வேண்டும். அப்படிச் செய்தால் மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளின் பிறப்பு விகிதத்தை ஓரளவு குறைக்கலாம்.

''இதுபோன்ற நிறுவனங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் உருவாக்கப்பட வேண்டும். அப்படிச் செய்தால் 4 இலட்சம் குழந்தைகளின் வாழ்வு மேம்படும்''.

அடுத்து, முன்னாள் மனநலக் காப்பகக் கண்காணிப்பாளரான டாக்டர் ஓ. சோமசுந்தரம் சிறப்புரைஆற்றினார். மனநலக் காப்பகத்தில் அவர் பெற்ற அனுபவத்தையும், ஆய்வுகள் வாயிலாக உணர்த்தப் பெற்றுள்ள உண்மைகளையும் சான்றுக் கதைகளுடன் எடுத்துரைத்து, மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்குத் தரப்பட வேண்டிய பயிற்சிகளையும் ஆதரவையும் மிக விரிவாக எடுத்துரைத்தார். அவர் குறிப்பிட்டதாவது:

''மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் சமூகத்தில் எந்தத் தரத்தில் இருப்பவர்களுக்கும் பிறக்கலாம். அமெரிக்காவில் கென்னடியின் தங்கை அறிவு வளர்ச்சி குன்றியமாதாக இருந்தார். நோபெல் பரிசு பெற்ற பேர்ல் எஸ்.பக் என்னும் பெண் எழுத்தாளரின் குழந்தைகளில் ஒன்றுமனவளர்ச்சி குன்றியதாக இருந்தது.

''அமெரிக்காவில் ஒரு நிறுவனம் மனவளர்ச்சிக் குறைபாடு குறித்து ஆய்வு நடத்தியது. பணக்காரன், ஏழை, அறிஞர், விஞ்ஞானி, வித்தகன் எல்லாருக்கும் இதுபோன்ற குழந்தைகள் பிறக்கின்றன என்பதை ஆய்வின் மூலம் அந்த நிறுவனம் கண்டுபிடித்துச் சொல்லியது.





''ஏழை மக்களுக்குத் தோன்றுகின்ற மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு நாம் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் நமக்கு ஏற்பட வேண்டும்.

''இத்தகையவர்களுக்கு எப்படி உதவுவது என்பது குறித்துச் சில நூற்றாண்டாகத்தான் சிந்தனை செய்யப்பட்டு வருகிறது. பிரான்சில் 19ஆம் நூற்றாண்டில்தான் இந்த ஆராய்ச்சி முதல் முதலில் தொடங்கப்பட்டது.

''இத்தகைய குழந்தைகள் நல்வாழ்வு பெறுவதற்கு, விஞ்ஞானிகள், மருத்துவர்கள், தொழில் நிபுணர்கள் அனைவரின் உதவிகளும் தேவைப்படுகின்றன. குழந்தைகளுக்கு மிகுந்த பயிற்சி கொடுக்க வேண்டியுள்ளது. மருந்து கொடுத்தால் போதும் அறிவு வளர்ச்சி ஏற்பட்டுவிடும் என்று படித்தவர்கள் கூடக் கருதுகிறார்கள். அது தவறு. குழந்தைகளுக்கு மிகுந்த பயிற்சி அளிக்க வேண்டும். பெரியவர்களுடன் அவர்கள் பேசுவதற்குக் கற்பிக்கப்பட வேண்டும்.

''தியாகராயர், பனகல் அரசர் நடேசனார் ஆகியோரின் பாரம்பரியத்தில் வந்துள்ள இந்த அரசு, சத்துணவுத் திட்டத்தின் மூலம் குழந்தைகளின் வாழ்வில் ஒளி பெறச் செய்துள்ளது. அதைப் போலவே இந்த மையம் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் நலம்பெற அரும்பாடு படும் என்பது உறுதி. இந்தியாவுக்கே இது வழிகாட்டியாக இருக்க வேண்டும்''

அடுத்து, வாழ்த்துரை வழங்கிய சட்டமன்ற உறுப்பினர் திரு அப்துல் ரசாக் குறிப்பிட்டார்:

''புரட்சித் தலைவரின் அரசு, மக்களுக்கு எது எது தேவை என்பதைச் சிந்தித்துச் செயலாற்றி வருகிறது. கொடியவனுக்குக்கூட இந்த மனவளர்ச்சி குன்றிய நோய் வரக்கூடாது என்பது எனது கருத்து. மனவளர்ச்சி குன்றிய குழந்தையின் பிறப்பால் அந்தக் குடும்பமே சீரழிந்து விடுகிறது. அதன் உறவினர் மனச் சோர்வடைவார்கள். ஆகவே மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் அந்நோயிலிருந்து குணம்பெற ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.''

அடுத்து, நிறுவனத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் உரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்தார்:

''மனவளர்ச்சிக் குறைவு எவ்வாறு ஏற்படுகிறது? தாய் கருவுற்றிருக்கும்போது போதுமான சத்துணவு உண்ணாததால், குழந்தைக்கு இத்தகைய குறைபாடு ஏற்படுகிறது என்றும்,சுற்றுப்புறச் சூழ்நிலைகளின் காரணமாக இந்நோய் ஏற்படுகிறது என்றும், தாய் நல்ல முறையில் குழந்தையைக் கவனிக்காததால் இந்நோய் ஏற்படுகிறது என்றும், இப்படிப் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

''இந்த உண்மைகளை எல்லாம் அறிந்துதான் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சிறுகுழந்தைகளுக்குச் சத்துணவுத் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளார்.

''மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளை நாம் வாழவைக்க வேண்டும். அந்நோயிலிருந்து விடுபட வழிவகை செய்ய வேண்டும். வந்த நோயினை நிவர்த்திசெய்ய வழி செய்தாக வேண்டும். இதை எல்லாம் உணர்ந்து, அரசே பொறுப்பேற்று இந்த நிறுவனத்தை இன்று தொடங்கியுள்ளது. சமூகத்தில் எந்த வகைக் குழந்தையாக இருந்தாலும் குழந்தையின் வளர்ச்சியில் அரசு அக்கறை கொண்டு செயலாற்றுகிறது. இங்கு படுக்கை வசதி-பாய், போர்வை, தலையணை ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. ஏழைக் குழந்தைகளை நல்ல முறையில் வாழவைக்கும் பொறுப்பை அரசு மேற்கொண்டுள்ளது. என்றாலும் அரசே கவனித்துக் கொள்ளும் என்று பெற்றோர்கள் கருதிவிடக் கூடாது. அவர்களும் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும்.

''நாம் பாவம் செய்ததால்

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் விளையாடுவதற்குப் பயிற்சி பெறுகிறார்கள்.








நமக்கு இந்தக் குழந்தை பிறந்திருக்கிறது என்று பெற்றோர்கள் எண்ணுவதும், அந்தக் குழந்தைகளை அடுத்தவர்கள் பார்த்தால் நம்மை ஏளனமாக நினைப்பார்களோ என்று கருதுவதும், அதன் காரணமாகக் குழந்தைகளைப் புறக்கணிப்பதும் கூடாது. தாய் குழந்தையை அரவணைத்துக் கொள்ள வேண்டும்.

''இது, கல்வி கற்பதற்காக உள்ள கூடம் மட்டுமல்ல, குழந்தைகளின் வளர்ச்சிக்கு-எதிர் காலத்திற்கு - வழிவகுக்கும் கூடமும் ஆகும். இங்குள்ள ஆசிரியர்கள், மனவளர்ச்சி குன்றிய நிலையில் உள்ள இந்தக் குழந்தைகளை தங்கள் குழந்தைகள்போல் நினைத்து அவர்களுடன் பழக வேண்டும். மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் எதை எப்போது செய்வர் என்பதைப் புரிந்து கொள்ள முடியாது. அவர்களு டன் ஓரளவு பழகியபின்தான் தெரிந்து கொள்ள முடியும். ஆகவே ஆசிரியர்கள் தியாக மனப்பான்மையுடன் பணியாற்ற வேண்டும். மனவளர்ச்சி குறை வான குழந்தைகளிடம் அக்கறை காட்டுவது மிகப் பெரும் சிறப் பான தொண்டு ஆகும்.''

அடுத்து, சமூக நலத்துறை இணை இயக்குநர் திரு வீரராஜு அவர்கள் நன்றியுரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்;

''மனவளர்ச்சி குன்றியோருக்கு இந்த நிறுவனத்தைத் துவக்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டு இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் தக்க வகையில் இதற்கு இடம் கிடைக்கவில்லை. ஓய்வுபெற்ற அரசு ஊழியர் ஒருவர் இவ் வீட்டை வாடகைக்குக் கொடுத்துள்ளார். அவருக்கு நாம் நன்றி கூறவேண்டும்.''

மனவளர்ச்சி குன்றியகுழந்தைகள் மறுவாழ்வு பெறப்போவது உறுதி என்பதை அன்றைய விழா சுட்டிக் காட்டியது.

நிகழ்ச்சித் தொகுப்பு :

**தமிழ்ப்பித்தன்**

## மக்களுக்கு மனைப் பட்டா

சென்னை மாநகராட்சி வட்ட எண் 115-ல் உள்ள கன்னியப்பா நகர் குடிசைவாழ் மக்களுக்குப் பட்டா வழங்கும் விழா 27.2.84 அன்று மாலை நடைபெற்றது.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத் தலைவர் திருமதி ஈ.வெ.கி. சுலோசனா சம்பத் அவர்கள் தலைமையில் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். ஆர். ராதா அவர்கள் 286 நபர்களுக்கு மனைப்பட்டாவினையும், 133 நபர்களுக்கு வீட்டு அபிவிருத்தி மற்றும் மானியத் தொகையாக ரூ. 91,700/-ம் வழங்கினார்.

## மாதம் இருபது கிலோ கோதுமை

பொது விநியோக முறையில் குடும்ப அட்டைக்கு வழங்கப்படும் கோதுமையைத் தமிழ் நாட்டில் எல்லா இடங்களிலும், நகரங்கள், கிராமங்கள் என்ற வேறுபாடு இன்றி, மாதம் ஒன்றுக்கு 20 கிலோ வரை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. மலைப் பிரதேசங்களில் ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு முப்பது கிலோ வரை வழங்கவும் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. பொதுமக்கள் அவர்கள் குடும்ப அட்டை அடிப்படையில் தேவையான அளவு கோதுமை வாங்கிப் பயன் அடையும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.






# ஓய்வு பெறும் அரசுப் பணியாளர்களுக்கு ஒப்பற்ற பரிசு

ஓய்வூதிய பணிக்கொடைத் திட்டத்தின் கீழ் வழக்கமாக அரசுப் பணியாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய பயனைத் தவிர, கூடுதலாகப் பயன்தரும் ஓய்வூதிய நலத் திட்டமொன்றைச் செயலுக்குக் கொண்டு வருவது பற்றித்தமிழக அரசு பரிசீலனை செய்து வந்தது. அரசுப் பணியாளர்களின் பிரதிநிதிகளைக் கலந்தாலோசித்து இது தொடர்பாகத் திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அரசுப் பணியாளர் ஒவ்வொரு வரும் மாதம் ஒன்றுக்கு ரூ.20-ஐ அத்தொகை கூட்டு வட்டியுடன் ரூ.5,000 - ஆக சேர்கிற வரையில் செலுத்த வேண்டும். அதன் பின்னர் அரசுப் பணியாளர் மாத மாதம் எத்தொகையும் செலுத்த வேண்டிய தேவையில்லை. ஆனால் அவர் செலுத்தியுள்ள வட்டியுடன் கூடிய தொகை ரூ. 5,000 - அவர் இயல்பாக ஓய்வு பெறும் வரையில் வட்டி சேர்ந்து வரும். அவர் பணியிலிருந்து இயல்பாக ஓய்வு பெறும்போது அரசு தங்கள் நிதியிலிருந்து ரூ. 5,000-ஐ ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு அளிக்கும். பணியாளர் செலுத்தும் தொகையும் வட்டியும் சேர்ந்து ரூ.5,000 ஆவதற்கு முன்னதாகப் பணியிலிருந்து இயல்பாக ஓய்வு பெறுபவர்கள் தாங்கள் செலுத்தும் தொகையையும் அதற்குரிய வட்டியையும் தவிர அரசு அளிக்கும் ரூ.5,000 - தொகையும் பெறுவர். அரசுப் பணியாளர்கள் செலுத்தும் தொகை அதற்குரிய கூட்டுவட்டியுடன் ரூ.5,000 - ஆக சேரும் நாளும், அவர்கள் பணியிலிருந்து இயல்பாக ஓய்வு பெறும் நாளும் ஒன்றாக இருக்கும் நேர்வில், அவர்கள் ரூ. 10,000/- பெறுவர். அந்த நாளுக்குப் பின்னர் ஓய்வு பெறுபவர்கள் அதற்கேற்ப அதிகமான தொகை பெறுவர். முப்பத்து மூன்று ஆண்டுச் சந்தாத் தொகை செலுத்தியவர்கள் இயல்பாக ஓய்வு பெறும் போது ரூ.34,825 - பெறுவர். இதற்காகப் பணியாளர் செலுத்த வேண்டிய தொகை 1984-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கொடுக்கப்படும் ஏப்ரல் மாதச் சம்பளப் பட்டியலிலிருந்து பிடித்தம் செய்யப்படும், இத்திட்டம் தொடர்பான விதிகளும் பணியிலிருந்து இயல்பாக ஓய்வு பெறும் அரசுப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் தொகையின் அட்டவணையும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு வருங்கால வைப்பு நிதி பணிக்கொடைத் திட்டம் தொடர்பானவிதிகள் (29.2.84)**

1. இவ்விதிகள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு வருங்காலவைப்புநிதி-பணிக்கொடைத் திட்டம் தொடர்பான விதிகள் என்று அழைக்கப்படும்.

2. இவ்விதிகள் 1984 ஏப்ரல் 1-ஆம் நாளன்று செயலுக்கு வரத் தொடங்கும். அரசுப் பணியாளர் சம்பளத்திலிருந்து பிடிக்கப்படும் சந்தாத்தொகை ஏப்ரல் மாதத்தில் தொடங்கி அதாவது 1984 ஏப்ரல் மாதத்திய சம்பளப் பட்டியலிலிருந்து தொடங்கி பிடித்துக் கொள்ளப்படும். 1984 ஏப்ரல் 1-ஆம் நாளுக்குப்பின்னர் பணியிலிருந்து ஓய்வு பெறும் பணியாளர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவர்.

3. இவ்விதிகள், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் பணியைச் சேர்ந்த முறையான பணியாளர்கள் அனைவருக்கும் பொருந்தும். அயற்பணியிலுள்ளவர்கள், முகமையில் வேறு பணிக்குச் சென்றுள்ளவர்கள், தமிழ்நாட்டின் பணியில் உள்ள அனைத்து இந்தியப் பணி அதிகாரிகள் ஆகியோரும் இத்திட்டத்தின் கீழ் வருவர். இத்திட்டம் அவசரக் கால விதிமுறையின் கீழ் தற்காலிகமாக நியமிக்கப்படும் அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்தாது.

4. இத்திட்டத்தின் கீழ் அரசுப் பணியாளர் ஒவ்வொரு வரும் 1984 ஏப்ரல் மாதத்திற்கான சம்பளத்திலிருந்து தொடங்கி ஒவ்வொருமாதமும் ரூ.20 - தமது சந்தாத் தொகையாகச் செலுத்தவேண்டும். அவர் பணியிலிருந்து ஓய்வு பெறும் வரையில் அல்லது மாதம் ஒன்றுக்குச் செலுத்தும் ரூ.20- அதற்கான வட்டியுடன் ரூ.5,000 - ஆகச் சேரும் வரையில் ஆகிய இந்த இரு கால அளவுக்குள் எது முந்தியதாக வருகின்றதோ அது வரையில் அவர் சந்தாத் தொகை தொடர்ந்து செலுத்தவேண்டும்.

அரசுப் பணியாளர் ஒருவர் சம்பளமில்லாச் சிறப்பு விடுப்பில் இருந்தால், அவர் பணியில் மீண்டும் சேர்ந்தபிறகு அவரது சம்பளத்திலிருந்து மேற்படி விடுப்புக் காலத்திற்கான சந்தாத் தொகையில் பிடித்துக் கொள்ளப்படும். நடப்பு மாதச் சந்தாத் தொகையுடன் ஒரு மாத நிலுவை சந்தாத் தொகைக்குமேல் பிடித்துக் கொள்ளப்பட மாட்டாது. வருங்காலத்தில் அரசுப் பணியில் சேரும் பணியாளர்களைப் பொறுத்தமட்டில் அவர் பணி முறைப்படுத்தப்படும் தேதியை அடுத்த காலண்டர் மாதத்தில் இருந்து சந்தாத் தொகை அவரது சம்பளத்திலிருந்து பிடித்துக் கொள்ளப்படும். சந்தாத்தொகை ஒவ்வொருமாதச் சம்பளப் பட்டியலிலிருந்தும் பிடித்துக் கொள்ளப்படவேண்டும்.

5. பணியாளர் செலுத்தும் சந்தாத் தொகைக்கு 8 சதவீத கூட்டுவட்டி உண்டு. வட்டியுடன் ரூ.5,000 - ஆக தொகை சேருகிற வரையில் தொகை பிடித்துக் கொள்ளப்படும். அதன் பின்னர் இத்தொகை வருங்கால வைப்பு நிதிக்குச் சமமாக வைத்துக்கொள்ளப்படும். வருங்கால வைப்புநிதிக்குக் கொடுக்கப்படும் வட்டிவீதம் இத்தொகைக்கும் கொடுக்கப்படும். ஆனால், இத்தொகையிலிருந்து அரசுப் பணியாளர் தற்காலிக முன்பணமோ, மொத்தத் தொகையோ எடுக்க அனுமதிக்கப்படமாட்டாது.

6. பணியாளர் சம்பளத்திலிருந்து பிடித்துக் கொள்ளப்படும் தொகை தொடர்பாக அட்டவணை எதுவும் சம்பளப் பட்டியலுடன் இணைக்கப்படவேண்டியதில்லை. இது தொடர்பாகத் தனிப்பட்ட கணக்கும் வைத்து வர வேண்டிய தேவையில்லை. எனினும் சந்தாத் தொகை எத்தனைத் தவணைகளில் பிடித்துக் கொள்ளப்படுகிறது என்பது சம்பளப் பட்டியலில் குறிப்பிடப்பட வேண்டும். உதாரணமாக, சந்தாத் தொகை 144 தவணைகளில் பிடித்துக் கொள்ளப்பட வேண்டும் என்றுவைத்துக்கொண்டால், பிடித்துக்கொள்ளப்படும்

தவணையின் எண்ணிக்கையைக் குறிக்க சம்பளப் பட்டியலில் 1/144, 2/144, 3/144 என்று தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

7. அரசுப் பணியாளர் இத் திட்டத்தின் கீழ் வரத்தனக்குள்ள விருப்பத்தைத் தெரிவித்துஎழுதிக் கொடுத்துள்ளதுபற்றி அவரது பணிப் பதிவேட்டில் பதிவு செய்யப்படவேண்டும். மேலும், அவரது பணிக்கால அளவில் எத்தனைத் தவணைகளில் சந்தாத் தொகை பிடித்துக்கொள்ளப்பட வேண்டும், முதல் தவணை தொடங்கும் தேதி, ஒவ்வொரு காலண்டர் ஆண்டிலும் பிடித்துக்கொள்ளப்படும் மொத்தத் தொகை ஆகிய விவரங்கள் பணிப் பதிவேட்டில் குறிக்கப்படவேண்டும்.

8. அரசுப் பணியாளர் சம்பளத்திலிருந்து சந்தாத் தொகையை முறையாகப் பிடித்துக் கொள்வதற்குச் சம்பளம் பெற்று வழங்கும் அதிகாரிகளே பொறுப்பாளியாவர். தாமே நேரடியாகச் சம்பளப்பட்டியலில் கையெழுத்திட்டு சம்பளம் பெறும் அதிகாரிகளைப் பொறுத்தவரையில் சம்பளக்கணக்கு அதிகாரிகள், கருவூலத் துணை அதிகாரிகள் ஆகியவர் இதற்குப் பொறுப்பாளியாவர். முகமையில் வேறு பணிக்குச் சென்றுள்ள அல்லது அயற் பணியில் சென்றுள்ள அரசுப் பணியாளர்களைப் பொறுத்தவரையில் அவர் எந்த இடத்திற்கு முகமையில் அல்லது அயற் பணியில் சென்றுள்ளாரோ அப் பணிக்குப் பொறுப்பு வகிக்கும் அதிகாரி சந்தாத் தொகையைப் பிடித்துக் கொள்ளும் பொறுப்பை ஏற்று அத்தொகையை வீடு கட்டுவதற்கான கடன் போன்ற ஏனைய கடன்களைப் போல அரசுக் கணக்கில் செலுத்த வேண்டும்.

9. பணியிலிருந்து அரசுப் பணியாளர் ஓய்வு பெறுகையில் பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டும்:

அரசுப் பணியாளர் பணியிலிருந்து ஓய்வு பெறுகையில், அவரது சம்பளத்திலிருந்து பிடித்துக் கொள்ளப்பட்ட சந்தாத் தொகை அதற்கான வட்டியுடன் அவருக்குக் கொடுக்கப்படும். இது தொடர்பான அட்டவணை ஒன்று தனியாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது.* இதைத்தவிர அரசு அவருக்குத்தனியாக ரூ.5,000 - கொடுக்கும். உரிய காலத்திற்கு முன் பணியாளர் ஓய்வு பெறுதல், இறத்தல் போன்ற சூழ்நிலைகளில் அந்நாள் வரையில் அவர் செலுத்தியசந்தாத்தொகைஅதற்குரிய கூட்டுவட்டி ஆகியவை மட்டுமே அவருக்குக் கொடுக்கப்படும். பணியிலிருக்கையில் பணியாளர் இறந்துவிட்டால் அத்தொகை அவரது சட்டப்படிக்கான வாரிசுக்கு அல்லது அவர் குறிப்பிடும் நியமனதாரருக்குக் கொடுக்கப்படும்.

10. பணியிலிருக்கையில் அரசுப் பணியாளர் இறந்துவிட்டால் அத்தொகையைப் பெற உரிமை உள்ளவர்கள்:

அரசுப் பணியாளர் தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 -ன் கீழ் (இறப்பு-ஓய்வுக் காலப் பணிக் கொடைத் திட்டம்) தனது குடும்ப உறுப்பினர்களை இத் திட்டத்தின்கீழ் தொகை பெற நியமிக்கவேண்டும்.

11. நிர்வாகமும் தணிக்கையும்:—

கருவூலங்களின் இயக்குநர் இத்திட்டத்தின் நிர்வாகப் பொறுப்பை வகிக்க வேண்டும். மாநில வணிகத் திட்டங்களின் தலைமைத் தணிக்கையாளர் இத் திட்டத்திற்கான தணிக்கையாளராகச் செயல்பட்டு சந்தாத் தொகை சம்பளத்திலிருந்து பிடிபட்டு வருவது தொடர்பான தணிக்கையைச் சோதனைத் தணிக்கை செய்வார்.

12. கணக்குத் தலைப்பு:—

இத்திட்டத்தின் கீழ் பற்றுவரவுகள் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின்கீழ் வைக்கப்படும்:

(அ) சந்தாத் தொகை:—

'088-சமூகப் பாதுகாப்பும் நலனும் - AE. ஏனைய வரவுகள் 13. தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு வருங்கால வைப்புநிதி பணிக்கொடைத்திட்டம் (த. தொ.கு. 088 A AE AA 1307)'

(ஆ) தொகை கொடுத்தல்:—

(அ) அரசு கொடுக்கும் தொகையும் பணியாளர் செலுத்தும் சந்தாத் தொகையும்:—

'288-சமூகப் பாதுகாப்பும் நலனும் - E. ஏனைய சமூகப் பாதுகாப்பு-நலத்திட்டம்-AE. ஏனைய திட்டங்கள் -Lதிட்டம் சாராதது BE. தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு வருங்கால வைப்புநிதி-பணிக்கொடைத் திட்டம் (த.தொ.கு. எண்.288 E AEBE 0008)'.

(ஆ) வட்டி:—

'249-வட்டித்தொகை கொடுத்தல் - C. சிறு சேமிப்பு, வருங்கால வைப்புநிதி முதலியவற்றுக்கான வட்டி - AC. மாநில வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி - AK. தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு வருங்கால வைப்புநிதி - பணிக்கொடைத்திட்டம் - சாட்டியது (த.தொ.கு.எண்.249C ACAK 0000)'

13. தொகை வழங்கும் அதிகாரி:—

அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகளைப் பொறுத்த வரையில், சந்தாத் தொகை, அதற்குரிய வட்டி அரசு கொடுக்க வேண்டிய ரூ.5,000 - ஆகியவற்றைப் பணியாளர் பணியிலிருந்து ஓய்வு பெறும் நிலையில் அலுவலகத் தலைவர் கொடுக்க வேண்டும்; அல்லது பணியாளர் ஓய்வு பெற வேண்டிய நாளுக்கு முன்னரே வேறு ஏதாவது ஒரு காரணத்தினால் பணியிலிருந்து விலகும் நிலையில் அல்லது அரசுப் பணியாளர் பணியில் இருக்கையில் இறக்க நேர்ந்தால் அந்நிலையில் அவர் அதுவரை செலுத்திய தொகை வட்டி ஆகியவற்றைக் கொடுக்க அதிகாரமுள்ளவர் அலுவலகத் தலைவராவார். அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளைப் பொறுத்தவரையில் இப் பொறுப்பை அவருக்கு மேற்பட்ட அதிகாரி ஏற்றுக் கொள்ள வேண்டும். துறைத் தலைவர்களைப் பொறுத்தவரையில், தொகை வழங்கும் அதிகாரம் அரசுக்கே உண்டு.

14. தொகை வழங்குவது தொடர்பான ஆணைகளின் நகல்கள் கருவூலங்கள்-கணக்குகள் துறை இயக்குநருக்கு (சென்னை) அனுப்பப்படவேண்டும்.

**சி. இராமச்சந்திரன்,**
**ஆணையாளர்-அரசுச் செயலாளர்,**
**நிதித்துறை.**

---

* அட்டவணை இணைக்கப்பட்டுள்ளது.



## தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்.

### பணியாளருக்குக் கிடைக்கும் தொகை

1. பணியாளர் செலுத்துவது தொகை .. ஒவ்வொரு மாதமும் ரூ.20/-
   கால அளவு .. 12 ஆண்டு 4 மாதங்கள் (அல்லது) ஓய்வு பெறும் காலம் இந்த இரண்டில் எது முன்னதோ அதுவரை.
2. வட்டி .. முதல் கட்டம்:
   திங்கள் தோறும் எட்டு சதவீத கூட்டுவட்டி
   இரண்டாவது கட்டம்:
   ஆண்டுதோறும் ஒன்பது சதவீத கூட்டுவட்டி
3. அரசின் பங்கு .. பணியாளர் ஓய்வு பெறும்பொழுது ரூ.5,000/-
4. பணியாளர் ஓய்வு பெறும்போது பெறும் தொகை .. அட்டவணையில் மாதவாரியாக குறிப்பிட்டபடி

அட்டவணையில் குறுக்கு வரிசை ஆண்டையும், நேர் வரிசை மாதத்தையும் குறிக்கும்.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக் கொடைத் திட்டம்

பணியாளருக்குக் கிடைக்கும் தொகை

| | ஆண்டு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| திங்கள் | | | | | | | | |
| 0 | | 5249 | 5519 | 5811 | 6127 | 6470 | 6841 | 7242 |
| 1 | 5020 | 5271 | 5542 | 5836 | 6155 | 6499 | 6873 | 7277 |
| 2 | 5040 | 5292 | 5566 | 5862 | 6182 | 6529 | 6905 | 7312 |
| 3 | 5060 | 5314 | 5590 | 5887 | 6210 | 6560 | 6938 | 7348 |
| 4 | 5081 | 5337 | 5613 | 5913 | 6238 | 6590 | 6971 | 7383 |
| 5 | 5101 | 5359 | 5638 | 5939 | 6266 | 6621 | 7004 | 7419 |
| 6 | 5122 | 5381 | 5662 | 5966 | 6295 | 6651 | 7037 | 7455 |
| 7 | 5143 | 5404 | 5686 | 5992 | 6323 | 6682 | 7071 | 7492 |
| 8 | 5164 | 5426 | 5711 | 6019 | 6352 | 6714 | 7105 | 7528 |
| 9 | 5185 | 5449 | 5736 | 6046 | 6381 | 6745 | 7139 | 7565 |
| 10 | 5206 | 5472 | 5760 | 6073 | 6411 | 6777 | 7173 | 7602 |
| 11 | 5227 | 5495 | 5785 | 6100 | 6440 | 6808 | 7208 | 7640 |

தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக் கொடைத் திட்டம்:
பணியாளருக்குக் கிடைக்கும் தொகை

| திங்கள் | ஆண்டு 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | 7677 | 8149 | 8659 | 9212 | 9810 | 10322 | 10801 | 11323 |
| 1 | 7715 | 8190 | 8703 | 9260 | 9862 | 10359 | 10842 | 11368 |
| 2 | 7753 | 8231 | 8748 | 9308 | 9915 | 10397 | 10883 | 11412 |
| 3 | 7792 | 8272 | 8793 | 9357 | 9967 | 10435 | 10924 | 11457 |
| 4 | 7830 | 8314 | 8838 | 9406 | 10021 | 10472 | 10965 | 11502 |
| 5 | 7869 | 8356 | 8884 | 9455 | 10058 | 10513 | 11010 | 11550 |
| 6 | 7908 | 8399 | 8930 | 9505 | 10096 | 10554 | 11054 | 11599 |
| 7 | 7948 | 8441 | 8976 | 9555 | 10133 | 10596 | 11099 | 11648 |
| 8 | 7987 | 8484 | 9022 | 9605 | 10171 | 10637 | 11144 | 11697 |
| 9 | 8027 | 8527 | 9069 | 9656 | 10209 | 10678 | 11189 | 11746 |
| 10 | 8067 | 8571 | 9116 | 9707 | 10246 | 10719 | 11233 | 11794 |
| 11 | 8108 | 8615 | 9164 | 9758 | 10284 | 10760 | 11278 | 11843 |

| திங்கள் | ஆண்டு 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | 11892 | 12512 | 13188 | 1[illegible]5 | 14728 | 15604 | 16558 | 17599 |
| 1 | 11941 | 12565 | 13246 | 13988 | 14797 | 15679 | 16640 | 17688 |
| 2 | 11989 | 12618 | 13304 | 14051 | 14866 | 15754 | 16722 | 17777 |
| 3 | 12038 | 12672 | 13362 | 14115 | 14935 | 15829 | 16804 | 17866 |
| 4 | 12087 | 12725 | 13420 | 14178 | 15004 | 15904 | 16885 | 17955 |
| 5 | 12140 | 12783 | 13483 | 14247 | 15079 | 15986 | 16975 | 18052 |
| 6 | 12193 | 12841 | 13546 | 14315 | 15154 | 16068 | 17064 | 18149 |
| 7 | 12246 | 12899 | 13609 | 14384 | 15229 | 16149 | 17153 | 18247 |
| 8 | 12299 | 12956 | 13673 | 14453 | 15304 | 16231 | 17242 | 18344 |
| 9 | 12353 | 13014 | 13736 | 14522 | 15379 | 16313 | 17331 | 18441 |
| 10 | 12406 | 13072 | 13799 | 14591 | 15454 | 16395 | 17420 | 18538 |
| 11 | 12459 | 13130 | 13862 | 14660 | 15529 | 16477 | 17509 | 18635 |



தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு வைப்புநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்:
பணியாளருக்குக் கிடைக்கும் தொகை

| திங்கள் | ஆண்டு 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | 18732 | 19968 | 21315 | 22784 | 24384 | 26129 | 28031 | 30103 |
| 1 | 18830 | 20074 | 21431 | 22910 | 24522 | 26279 | 28194 | 30281 |
| 2 | 18927 | 20180 | 21546 | 23036 | 24659 | 26428 | 28357 | 30459 |
| 3 | 19024 | 20286 | 21662 | 23161 | 24796 | 26578 | 28519 | 30636 |
| 4 | 19121 | 20392 | 21777 | 23287 | 24933 | 26727 | 28682 | 30814 |
| 5 | 19227 | 20507 | 21903 | 23424 | 25083 | 26890 | 28860 | 31007 |
| 6 | 19333 | 20623 | 22029 | 23562 | 25232 | 27053 | 29038 | 31201 |
| 7 | 19439 | 20738 | 22155 | 23699 | 25382 | 27216 | 29215 | 31395 |
| 8 | 19545 | 20854 | 22281 | 23836 | 25531 | 27379 | 29393 | 31588 |
| 9 | 19651 | 20969 | 22406 | 23973 | 25681 | 27542 | 29571 | 31782 |
| 10 | 19757 | 21085 | 22532 | 24110 | 25830 | 27705 | 29748 | 31975 |
| 11 | 19862 | 21200 | 22658 | 24247 | 25980 | 27868 | 29926 | 32169 |

| திங்கள் | ஆண்டு 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | 32363 | 34825 | 37510 | 40435 | 43625 | 47101 | 50890 | 55020 |
| 1 | 32556 | 35036 | 37740 | 40686 | 43898 | 47399 | 51215 | 55374 |
| 2 | 32750 | 35247 | 37970 | 40937 | 44171 | 47697 | 51539 | 55728 |
| 3 | 32944 | 35458 | 38200 | 41188 | 44445 | 47995 | 51864 | 56082 |
| 4 | 33137 | 35669 | 38430 | 41438 | 44718 | 48292 | 52189 | 56436 |
| 5 | 33348 | 35899 | 38680 | 41712 | 45016 | 48617 | 52543 | 56822 |
| 6 | 33559 | 36129 | 38931 | 41985 | 45314 | 48942 | 52897 | 57207 |
| 7 | 33770 | 36360 | 39182 | 42258 | 45611 | 49267 | 53251 | 57593 |
| 8 | 33981 | 36590 | 39433 | 42532 | 45909 | 49591 | 53604 | 57979 |
| 9 | 34192 | 36820 | 39683 | 42805 | 46207 | 49916 | 53958 | 58365 |
| 10 | 34403 | 37050 | 39934 | 43078 | 46505 | 50241 | 54312 | 58750 |
| 11 | 34614 | 37280 | 40185 | 43351 | 46803 | 50565 | 54666 | 59136 |

40 வருடத்திற்கு 59522

# சென்னையில் எக்ஸ்போ '84

எக்ஸ்போ 84-என்னும் கைத்தறிக் கண்காட்சி பிப்ரவரித் திங்கள் 25ஆம் நாளன்று சென்னை எழும்பூர் கோ - ஆப்டெக்ஸ் பொருட்காட்சித் திடலில் தொடக்கம் ஆகியது. மைய அரசின் கைத்தறித் தொழில் வளர்ச்சி ஆணையர் அலுவலகமும், மாநில அரசும் இணைந்து இந்தக் கண்காட்சியை உருவாக்கி உள்ளன.

தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், கருநாடகம், உத்தரப் பிரதேசம், அரியானா, மேற்கு வங்கம், ஒரிஸா, பாண்டிச்சேரி, ராஜஸ்தான், அஸ்ஸாம், புது டெல்லி, பஞ்சாப், திரிபுரா, மத்தியப் பிரதேசம், மராட்டியம், குஜராத் ஆகிய மாநிலங்கள் இந்தக் கண்காட்சியில் பங்கு கொண்டுள்ளன. வெளிமாநிலத்துக் கைத்தறி ஆடைகளை வாங்கி அணிய விரும்பும் பெருமக்கள் - அந்தந்த மாநிலத்திற்குச் சென்று வாங்க வேண்டிய சிரமம் இன்றி அனைத்தையும் ஒரே வளாகத்தில் வாங்க முடிகிறது. இது, பொதுமக்களுக்குக் கிடைத்துள்ள மாபெரும் வாய்ப்பாகும்.

தமிழ்நாடு அரங்கில் புதுப் பாவு இடம் பெற்றிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

புதுப் பாவு என்றால் என்ன தெரியுமா? பழைய கைத்தறி முறையின் புதுமை அமைப்புத்தான் இது!

நகர்ப்புறப் பெண்களுக்கேற்ற வகையில் வடிவம், வண்ணம், அமைப்பு ஆகிய யாவும் ஒருங்கே அமைந்துள்ள - நிதிநிலைக்கேற்ற முறையில் அதாவது வாங்கும் சக்தியை அனுசரித்து நெய்யப்பட்டுள்ள புடவை வகையாகும். புதுப்பாவு குறித்த கண்காட்சி டெல்லியிலும் - சென்னையிலும் அண்மைக் காலத்தில் நடத்தப்பட்டபோது, பொதுமக்கள் பேரார்வத்துடன் கண்டு களித்தனர்.

பம்பாய், ஆமதாபாத், கல்கத்தா, பெங்களூர், ஐதராபாத் ஆகிய நகரங்களில் எல்லாம் 'புதுப் பாவு' கண்காட்சி நடத்தப்பட வேண்டும் என்றும் பலர் வேண்டுகோள் விடுத்தனர்.

புதுப்பாவின் அருமை பெருமைகளைப் பொதுமக்கள் நன்கறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே எக்ஸ்போ 84-ல் தனி அரங்கு உருவாக்கப்பட்டுள்ளது. புதுப்பாவுத் துணிகளின் மாதிரிகள் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

---

**அம்சம்: 18**

---

பாலியஸ்டர் சிஃப்பான் சேலை ரகம் ஒன்று கண்காட்சியின் தொடக்க நாளன்று அறிமுகப்படுத்தப்பட்டது. கண்ணைக் கவரும் வடிவமைப்பும் - இதயத்தைத் தொடும் இனிய வண்ணமும் கலந்து, அச்சடிக்கப்பட்ட இந்தச் சேலையின் விலை (5 மீட்டர்) ரூபாய் 200 ஆகிறது. 5½ மீட்டர் அளவுள்ள சேலையின் விலை ரூ. 220 ஆகிறது.

எக்ஸ்போ-84 கண்காட்சியை 25-2-84-ல் மாண்புமிகு மைய அரசின் தொழில் துறைத் துணை அமைச்சர் திரு பி.ஏ. சங்க்மா அவர்களின் தலைமையில் மாண்புமிகு தமிழக கைத்தறி-கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு தொடங்கி வைத்தார். தமிழ்நாடு தொழில்துறைச் செயலர் மற்றும் ஆணையர் திரு செல்வராஜ் வரவேற்றுப் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டார் :

''மைய அரசும், மாநில அரசும் நெசவாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றன. அதற்காகப் பல்வேறு திட்டங்களை அமலாக்கி வருகின்றன. கைத்தறியின் வளர்ச்சிக்குப் பல்வேறு செயலாக்கம் தருகின்றன. கூட்டுறவு, தொழிலாளர் நலன், செயல் திட்டம் மற்றும் ஏற்றுமதித் திட்டம் எனப் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றி வருகின்றன.''

கண்காட்சியைத் தொடங்கி வைத்த மாண்புமிகு கைத்தறி-கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தமது உரையில், கைத்தறியின் வளர்ச்சி குறித்தும், தமிழக அரசு கைத்தறியின் வளர்ச்சிக்காக ஆற்றிவரும் தொண்டு குறித்தும் எடுத்துரைத்ததோடு கைத்தறியின் வளர்ச்சிக்காகச் சில வேண்டுகோள்களை மைய அரசு தொழில்துறை துணை அமைச்சரின் முன்வைத்தது, குறிப்பிடத்தக்கது. மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் தெரிவித்ததாவது :

''விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிகமான மக்கள் ஈடுபட்டு வரும் தொழில் நெசவுத் தொழில்தான். தமிழ்நாட்டில் சுமார் 15 இலட்சம் பேர் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஏறக்குறைய 5.56 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. இவற்றில் 3.47 இலட்சம் தறிகள் கூட்டுறவுத் துறையின் கீழ் இயங்கி வருகின்றன.

''சென்ற ஆண்டு கோ-ஆப்டெக்ஸின் 526 விற்பனை நிலையங்களின் மூலம் 82 கோடி ரூபாய் அளவுக்குத் துணிகள் விற்பனையாகியுள்ளன. இந்த ஆண்டு 100 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனை ஆகலாம் என்று கருதப்படுகிறது.

''தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்திய நாட்டின் பல்வேறு நகரங்களிலும் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வெளிநாடுகளிலும் விற்பனையை அதிகப்படுத்துவதற்காக சிங்கப்பூர் போன்ற இடங்களில் அங்காடிகள் திறக்கப்பட்டு, விற்பனை செய்யப்படுகிறது. சென்ற ஆண்டு 1 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்த ஆண்டு 1.5 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித்துணிகள் ஏற்றுமதி செய்யப்படலாம் எனத் தெரிகிறது.

''நெசவாளர்களின் நல்வாழ்வுக்காகப் பல்வேறு திட்டங்களைத் தமிழக அரசு தீட்டிச் செயல்பட்டு வருகிறது. அவர்களுக்கு 5 ஆயிரம் வீடுகள் கட்டித் தரத் திட்டமிடப்பட்டு, இதுவரை 3 ஆயிரம் வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.

''நெசவாளர்களுக்கு இன்ஷ்யூரன்ஸ் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. நெசவாளர் 6 காசுகளும் தமிழ்நாடு அரசு 3 காசுகளும் செலுத்தி வருகின்றனர். நெசவாளர் மரணமடைந்தால் நெசவாளருடைய குடும்பத்திற்குத் தமிழக அரசு ரூபாய் 3,000 கொடுக்கிறது. இந்தத் திட்டத்திற்கு மைய அரசும் 3 காசு வீதம் உதவி செய்தால் மரணமடையும் நெசவாளரின் குடும்பத்திற்கு ரூ. 5,000 உதவியாகக் கொடுக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

''கூட்டுறவு நூற்பாலைகளை சில விதிகளைக் கடைப்பிடித்து வருகின்றது. மாவட்டத்தலைமை இடங்களில்தான் தற்போது கூட்டுறவு நூற்பாலைகள் தொடங்குவதற்கு நிதி உதவி வழங்குகிறது மைய அரசு. இதனை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

''பஞ்சு அதிகம் விளைகின்ற பகுதியில் கூட்டுறவு நூற்பாலை உருவாக்க வேண்டும். நெசவாளர்கள் அதிகமாக உள்ள இடத்திலும் உருவாக்க வேண்டும். எந்தத் தொழிலும் இல்லாத இடத்தில்தான் தொடங்கப்பட வேண்டும் என்பது சரியானதல்ல.

''பின்தங்கிய பகுதிகளில் கூட்டுறவு நூற்பாலை தொடங்குவதற்கு மைய அரசு அனுமதி அளிக்கவேண்டும். எட்டையபுரம், கமுதி ஆகிய பகுதிகளில் தொடங்கப்பட்ட நூற்பாலைகள் பாதியில் நிற்கின்றன - மைய அரசின் நிதி உதவி இல்லாமையால்! மைய அரசின் தொழில்துறைத் துணை அமைச்சர் அவர்கள் இதனையும் கவனித்து, ஆவன செய்ய வேண்டும்.

''ஜனதா திட்டத்தின் கீழ் வேட்டி, சேலை ரகங்களை மைய அரசு உருவாக்கியுள்ளது. தற்போது சட்டைத் துணியையும் ஜனதா திட்டத்தின் கீழ் கொண்டுவர மைய அரசு முடிவெடுத்துள்ளது. காடா வேட்டியையும் இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.''

''நெசவாளர்கள் வீடு கட்டிக் கொள்வதற்கு மாநில அரசு உதவித் தொகையாக ரூ. 1,000 வழங்குகிறது. மைய அரசும் இந்தத் திட்டத்திற்கு நிதி உதவி செய்தால் நெசவாளர்களின் வீடு மற்றும் தொழிற்கூடம் பெரிய அளவில் அமைப்பதற்கு வசதியாக இருக்கும்.

''நூல் பற்றாக்குறை உள்ள மண்டலங்களில் நூல் வங்கி ஆரம்பித்துத் தர வேண்டுகிறோம். அத்துடன் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளை - மைய அரசின் பல்வேறு துறைகளும் - உதாரணமாக இராணுவம், தபால்துறை போன்ற துறைகளும் வாங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

''மாநில அரசின் ஊழியர்களுக்குக் கைத்தறித் துணிகள் கடன் தவணைகளில் வழங்கப்பட்டு வருகின்றன. மைய அரசு சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கடன் தவணை முறையில் கைத்தறித் துணியைவாங்கிக்கொள்வதற்கு மைய அரசு அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு மைய அரசின் தொழில்துறைத் துணை அமைச்சர் திரு. சங்க்மா, தமது துணைவியாருடன் கைத்தறித் துணிகளைப் பார்வையிடுகிறார். மாண்புமிகு தமிழக கைத்தறி, கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு உடன் உள்ளார்.

மாண்புமிகு கேரள மாநிலத் தொழில்துறை அமைச்சர் திரு அசுமத், புதிய பாலியஸ்டர், சிஃப்பான் சேலையை வெளியிட நாட்டியமணி செல்வி சுவர்ணமுகி அந்தச் சேலையைப் பெற்றுக் கொண்டார். பின்னர் கேரள மாநிலத் தொழில் துறை அமைச்சர் உரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார் :

''தமிழகத்தைப் போலக் கேரளமும் கைத்தறித் துணியின் பெருமையை நன்கு உணர்ந்திருக்கிறது. கேரளத்தில் கைத்தறி வளர்ச்சி குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருக்கிறது. 95 ஆயிரம் கைத்தறி நிலையங்கள் உள்ளன. அவற்றில் 45 ஆயிரம் தறிகள் கூட்டுறவுத் துறையின் கீழ் இயங்கி வருகின்றன. கைத்தறியை வளர்ப்பதற்காக இரண்டு அமைப்புகள் கேரளத்தில் செயலாற்றுகின்றன.

''எங்கள் மாநிலத்தில் விழாக் காலங்களில் கைத்தறித் துணி விற்பனைக்குச் சலுகை வழங்கப்படுகிறது. அந்த விழாவில் 80 நாட்கள் கைத்தறிக் கண்காட்சியை நடத்தத் திட்டமிட்டோம். 101 நாட்கள் நடத்தினோம். அந்த அளவு எங்களுக்கு ஆதரவு அளித்த மைய அரசுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

' விழாக்காலத்துக்கு மைய அரசு வழங்கிய இந்தச் சலுகையை இதுபோன்ற கைத்தறிக் கண்காட்சிகளுக்கும் ஏன் விரிவுபடுத்தக்கூடாது? இதுபோன்ற கண்காட்சிகளையாவது இந்திய அரசு- சிறப்பு நிலையாகக் கருதிச் செயல்பட வேண்டும். அவ்வாறு செய்தால் அது கைத்தறி வளர்ச்சிக்கு உதவுவது மட்டுமல்ல சமூகப் பணிக்கு உதவுவதாகவும் அமையும்''.

அடுத்து உரையாற்றிய கோ-ஆப்டெக்ஸ் ஆலோசனைக் குழுவின் தலைவர் திரு அனகாபுத்தூர் ராமலிங்கம், எம்.எல்.சி. தெரிவித்தார் :

''இரண்டாண்டுகளுக்கு முன்பு மைய அரசின் தொழில் துறைத் துணை அமைச்சர் திரு சங்மா அவர்களிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தோம். 30 நாட்கள் கண்காட்சியை நடத்தி விலையில் தள்ளுபடி தருகிறோம்; குறைந்தது 60 நாட்களுக்காவது தள்ளுபடி தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். அதன்படி இந்த ஆண்டு 60 நாட்கள் சலுகை தரப்படும் என அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதற்கு நன்றி.

''நெசவாளர்களின் பாதுகாப்புக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பல்வேறு திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறார்.

''விசைத்தறியின் வளர்ச்சி கைத்தறியின் வளர்ச்சியைப் பாதிக்கிறது. எனவே விசைத்தறி கட்டுப்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் பிரதமரின் 20 அம்சத் திட்டம் வெற்றி பெற முடியும்.

''நாங்கள் விசைத்தறி வேண்டவே வேண்டாம் என்று சொல்லவில்லை. அவர்கள் உரிமம் பெற்றுள்ள ரகம் வேறு; உருவாக்கி அனுப்பும் ரகம் வேறு. இதனைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றுதான் சொல்கிறோம்!''

அடுத்து, கைத்தறித் துறை வளர்ச்சிக் கூடுதல் ஆணையர் திரு பி. கே. தத்தா நன்றியுரை கூறினார்.

அதன்பின்னர் கலைமாமணி செல்வி சுவர்ணமுகியின் நடனம் கண்களுக்கு விருந்தாகத் திகழ்ந்தது.

**நிகழ்ச்சித் தொகுப்பு :**
**தமிழ்ப்பித்தன்**



# இணைப்புக் கட்டட திறப்பு விழா!

தீமிழக அரசு செய்தி-மக்கள் தொடர்புத் துறையில் உள்ள தமிழரசு அச்சகத்தின் புதிய இணைப்புக் கட்டடத் திறப்பு விழா 19.3.84 அன்று மாலை 6 மணியளவில் அரசினர் தோட்டத்தில் நடைபெற்றது.

விழாவுக்கு வந்த அனைவரையும் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு சி.என். கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப. வரவேற்றுப் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''மற்ற மாநிலங்களின் செய்தித்துறைகள் போற்றும் வகையிலும் மக்கள் விரும்பிப் படிக்கும் அளவிலும் தமிழரசு மிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''மாநில அரசுகள் சார்பில் நடத்தப்படும் இதழ்களில் தமிழரசு இதழ் சிறந்த முறையில் வெளி வருவது பற்றிச் சொன்னார்கள். முதலில் ரூ.20 இலட்சம் செலவில் தொடங்கப்பட்ட இந்த அச்சகம் படிப்படியாக ரூ.35 இலட்சம் அளவிற்கு வளர்ந்துள்ளது. ரூ.5 இலட்சம் செலவில் புதிய எச்.எம்.டி. அச்சு இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளது.

பணிகள் ஒழுங்குபடுத்தப்பட்டு, வரன்முறை செய்யப்பட்டிருக்கின்றன. அதற்கு முன்னால் வேலை நிரந்தரம் இல்லாமல் இருந்தது. இப்பொழுது எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இத்துறை ஊழியர்களின் பணிகளில் கைவைக்க முடியாதபடி பாதுகாப்பு செய்யப்பட்டிருக்கிறது.

''தமிழரசு அச்சகப் பொறுப்பாளர்களும் ஆசிரியர் குழுவினரும் கலந்து பேசி புதிய உத்திகளைப் புகுத்தி இதழ் சிறந்த முறையில் வெளிவரும்படியாகவும் குறித்த காலத்தில் வரவும் முயற்சிகள் செய்ய வேண்டும். அரசின் செய்திகளை மட்டும் தருவதோடு நிற்காமல், பலரும் விரும்புகிற வகையில் சுவையான செய்திகளை வெளியிட வேண்டும். அரசின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையிலும் தமிழரசு இதழைக் கொண்டுவர வேண்டும். இதழில் இன்னும் கூடுதலான விளம்பரங்கள் இடம் பெற அதிகாரிகள் முயற்சி எடுக்க வேண்டும்''







இதழ் வெளியிடப்படுகிறது.''

செய்தி, சுற்றுலா மற்றும் (தமிழ்ப்) பண்பாட்டுத்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு ஏ.பி.முத்துசாமி, இ.ஆ.ப. விழாவுக்குத் தலைமை வகித்தார். தமது உரையில் அவர் குறிப்பிட்டார்:

''தமிழரசு இதழுக்கு வழங்கப்பட்டுள்ள சாதனங்களை ஆசிரியர் குழுவினரும், அச்சகப் பொறுப்பாளர்களும் முழு அளவில் பயன்படுத்தி இதழைக் கவர்ச்சியாகக் கொண்டுவரவேண்டும். ஊழியர்கள் செம்மையாகவும், உண்மையாகவும் பணிபுரிய வேண்டும்.''

தமிழரசு அச்சகத்தின் புதிய இணைப்புக் கட்டடத்தைத் திறந்து வைத்துப்பேசிய மாண்பு புதிய இணைப்புக் கட்டடமும் ரூ.6 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. பல்வேறு துறைகளின் வெளியீடுகள் அங்கு அச்சாகின்றன.

''அரசு எந்தத் துறையில் ஈடுபட்டாலும் தனியார் துறையைப் போல பணிகள் குறித்த காலத்தில் முடிக்கப்படுவதில்லை என்ற பொதுவான கருத்தைச் சிலர் ஏற்படுத்தியுள்ளனர். இந்தக் கருத்தை மாற்றக்கூடிய வகையில் அரசு ஊழியர்கள் பணிபுரிய வேண்டும். இதை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு வெற்றி பெற வேண்டும்.

'மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியில் செய்தித் துறையில் பணியாற்றும் ஊழியர்களின்

தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் நடைபெற்ற சிறந்த புத்தகங்களுக்கான போட்டியில் 1981-ஆம் ஆண்டு வெளிவந்த கவிதை நூலுக்கு முதற்பரிசு பெற்ற தமிழரசு நிருபர் திரு இராசேந்திரனையும், சிறுவர் நூலுக்கு முதற்பரிசு பெற்ற தமிழரசு நிருபர் திரு பி.வி கிரியையும், நீண்டகாலம் சிறந்த முறையில் பணியாற்றியமைக்காக அச்சக ஊழியர்கள் திரு. ஜே.அந்தோணி, திரு எஸ்.கன்னியப்பன் ஆகியோரையும் பாராட்டி அமைச்சர் அவர்கள் பரிசு வழங்கினார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு வி.டி.வீரப்பன் நன்றியுரையுடன் விழா இனிது முடிவடைந்தது.

— தே. மணி

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.




தமிழரசு
Licence No.
புதிய
அம்சத் திட்டச்
சிறப்பிதழ்


தமிழரசு
75



தஞ்சையில் கலப்புமணத் தம்பதியருக்கு ரொக்கப் பத்திரத்தையும், குடும்பநலத் திட்டத்தில் சிறப்பாகப் பணிபுரிந்த பெண் பணியாளர் ஒருவருக்குப் பரிசுப் பொருளையும் மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் 23.3.84ல் வழங்கினார்.



சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியாகப் பதவி ஏற்ற திரு. மதுர்கர் நர்ஹர் சந்துர்கர் அவர்களுக்கு மேதகு ஆளுநர் அவர்கள் 2.4.84ல் கிண்டி ராஜ்பவனில் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆகியோருடன் மாண்புமிகு தலைமை நீதிபதி திரு மதுர்கர் நர்ஹர் சந்துர்கர்.



தேரழுந்தூரில் மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 18.3.'84ல் கம்பர் கோட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.




# சைதை மருத்துவ மனை சிறப்புப் பெறுகிறது

**சை**தையில் உள்ள அரசினர் மருத்துவமனை மார்ச் 31ஆம் தேதியன்று வண்ண விளக்குகளாலும் தோரணங்களாலும் ஒளி நிறைந்திருந்தது. "பிரிமேசன் ஹால்'' அறக்கட்டளையினர் ரூ. 1.5 இலட்சம் பெறுமானமுள்ள ஊர்தி(வேன்) ஒன்றினை மாண்புமிகு தமிழக முதல்வரிடம் அன்பளிப்பாகஅளிப்பதை ஒட்டி நடைபெற்ற விழாவின் காரணமாகத்தான் சைதை அரசினர் மருத்துவமனையும் சைதைப் பகுதியும் என்றுமில்லாப் பொலிவுபெற்றுத் திகழ்ந்தன.

அறக்கட்டளையைச் சேர்ந்த டாக்டர் திருஜி.கே.தேவராஜுலு வரவேற்புரை ஆற்றினார்.

தலைமை வகித்த மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் குறிப்பிட்டார் :

''திருமூலர், அறிஞர் அண்ணா ஆகியோர் எடுத்துக் கொண்ட கொள்கையின்படி பணியாற்றி வருகிறது, மசானிக் சங்கம். அவர்கள் வலியுறுத்திய ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற எண்ணத்தை ஏற்று 18ஆம் நூற்றாண்டில் உருவானது இந்த இயக்கம். எந்த ஜாதிக்கும் இனத்துக்கும் தனிப்பட்ட சலுகை இங்கே கிடையாது. மனித சமுதாயத்திற்கே தொண்டு செய்வது இந்த இயக்கம்.

''ஆண்டொன்றிற்கு 2.5 இலட்சம் ரூபாய் நல்ல பணிகளுக்குத் தந்து வருகிறார்கள். சென்னையில் ஏதேனும் பணி செய்ய வேண்டும் என்று விரும்பும் இந்தச் சங்கத்தினர், சென்னையில் எந்த மருத்துவ மனைக்கு அந்த உதவியைச் செய்தால் அது ஏழை மக்களுக்குப் பயன்படும் எனச் சிந்தித்துப் பார்த்து, சைதை மருத்துவ மனைக்கு உதவினால், பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அது பயன்படும் என்பதை அறிந்து, இந்த மருத்துவமனைக்கு ஒரு வேனை' அதிலும் மாண்புமிகு முதல்வரின் கையில் அந்தவேனை வழங்க முன் வந்திருக்கிறார்கள்'

''சைதைப் பகுதியில் 50 சத்துணவு மையங்கள் உள்ளன. அவற்றின் மூலம் 12 ஆயிரம் குழந்தைகள் பயன் பெ கிறார்கள். அவர்களுக்கு நோ ஏதும் உள்ளதா என்பதை தெரிந்து கொள்ள இந்த ஊர் பயன்படப் போகிறது.''

சைதை அரசு மருத்துவமனை யின் கண்காணிப்பாளர் டாக் திரு எம். சேதுமாதவன் தம உரையில் தெரிவித்தார் :

''வயிற்றுக்குச் சோறிட வேண் டும் இங்கு வாழும் மாந்தரு கெல்லாம் என்று பாரதியா பாடினார். இன்று அந்தப் பண யைச் செவ்வனே செய்து வயி றுக்குச் சோறிடும் வள்ளலா இருக்கிறார் மாண்புமிகு முத வர்.


தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி — சித்திரை 4
மலர் : 14 இதழ் : 20
16-4-1984



''நோயாளியைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்காமல், சமூக நலத் திட்டம், சுற்றுப்புறப் பாதுகாப்புத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களையும் நோய்த் தடுப்பு முறைகளையும் சொல்லித் தருகிறோம். மருத்துவ மனை கோயிலாகவும், இந்த ஊர்தி உற்சவ மூர்த்தியாகவும் இருந்து பணியாற்றும்.''

அறக்கட்டளையைச் சேர்ந்த திரு ஜி. ஆர். தேவராஜுலு, திரு ஏ. பி. தம்பி ஆகியோர் ஊர்தியின் சாவியை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்க, முதல்வர் அவர்கள் அந்தச் சாவியை மருத்துவ மனைக் க்ண்காணிப்பாளர் டாக்டர் சேதுமாதவனிடம் வழங்கினார்.

வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச் வி. ஹண்டே அவர்கள் தெரிவித்தார்:

''மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ள சத்துணவுத் திட்டம் குழந்தைகள் ஆரோக்கியமாக வளர்வதற்கு வழி வகுக்கிறது. எதிர்காலத்தில் நல்வாழ்வுத் துறைக்கு ஆகும் செலவைக் குறைக்கும் வகையில் புரட்சித் தலைவர் சத்துணவுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளார்.

''இங்கே கொடுக்கப்பட்டுள்ள வேன்-குடிசைப் பகுதி மக்களுக்கு பெரிதும் பயன்படும். இதனை நாங்கள் தற்போது முன்னோடித் திட்டமாக ஆரம்பித்திருக்கிறோம். இது வெற்றிகரமாக அமையும்.''

அடுத்து, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ். ஆர். இராதா அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார் :

''இங்கு நிறுத்தப்பட்டுள்ள வண்டி, நாளை எங்கோ ஒரு குடிசைப் பகுதியில் தொண்டு செய்யப்போவதை எண்ணி மகிழ்கிறேன்.

''ஆதிதிராவிடர்களின் மேம்பாட்டுக்கு இந்த அரசு ஏன் அக்கறை காட்ட வேண்டும் என்று பலர் கேட்டுவருகிறார்கள். அந்தச் சமுதாயம் முன்னேற வேண்டுமென்றால், - சமநிலையாக நம்மோடு வாழவேண்டும் என்று புரட்சித் தலைவர் திட்டங்கள் தீட்டிச் செயல்பட்டு வருகிறார்.''

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் குறிப்பிட்டார் :

''கடமையைச் செய்கின்ற ஒவ்வொருவரும் ஒன்றே குலம் என்ற கொள்கைக்குச் சொந்தக்காரர்கள்தான். இதுபோன்ற பணிகளைச் செய்யும்போது அரசியல் கட்சி தேவைப்படுகிறது. மக்களுடைய நலன்கள் காக்கப்பட வேண்டுமென்றால் அரசியல் கட்சி தேவைதான் என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

''சமூகத்திலே தாழ்த்தப்பட்ட - நாட்டிலே தாழ்த்தப்பட்ட - சமுதாயத்திலே தாழ்த்தப்பட்ட - ஒதுக்கப்பட்ட அந்த மக்கள் வாழ்கின்ற 14 குடிசைப் பகுதிகளுக்கு இந்த ஊர்தி பயன்படப்போகிறது என்பதை அறிந்து மகிழ்ச்சியுறுகிறேன். எந்தக் கட்சி, எந்த மதம், எந்தச்சாதி என்று ஊர்திக்குத் தெரியாது. அதே நிலைமையில் மருத்துவர்களும் சாதி மத பேதமின்றி உழைக்கிறார்கள். இளைஞர்களும் இந்தப் பணியில் ஈடுபடுவது பாராட்டுக்குரியது.

''இளைஞர்கள் அரசியலைத் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் அரசியல்வாதிகளாக இருக்கக் கூடாது. மருத்துவர்களும் அரசியல் தெரிந்திருக்கலாம். ஆனால் அரசியல்வாதிகளாக இருக்கக் கூடாது என்று அறிஞர் அண்ணா அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

''ஆசிரியப் பணிபுரிபவர்களும் அரசியல், கட்சி, ஜாதி, மதம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும். அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவர்கள் - அரசியல் உணர்ச்சியோடு இயங்கினால் அது நல்லதல்ல; நுட்பமான கருவிகளை எப்படிப் பயன்படுத்துவது என்பதில் மருத்துவர்களின் கவனம் செல்ல வேண்டும்.

''நீதித்துறையிலும் அரசியல் கட்சி வரக் கூடாது. வந்துவிட்டால் நீதி செத்துவிடும். நீதித் துறையில் அரசியல் நுழையவில்லை. அதற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''ஒருமுறை அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். 'பதவிக்கு வரும்போது கட்சிக்காரன், வந்த பின் மக்கள் தொண்டன்' என்று!

''வட ஆர்க்காட்டிலே குடிநீர்த் திட்டத்திற்காக 98 லட்சம் ரூபாய் செலவு செய்து வருகிறோம். அங்கு எங்கள் எம். எல். ஏ. எவரும் கிடையாது. ஆனாலும் அந்தத் திட்டம் அங்கு தேவை என்பதற்காக அதனை நிறைவேற்றுகிறோம்.

''சத்துணவுத் திட்டத்திற்குக் கூட, முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் என்று போட்டது-எந்த முதல் அமைச்சர் வந்தாலும் அவர் திட்டமாக இருக்கவேண்டும் என்பதால்தான் அந்தப் பெயர் சூட்டப்பட்டது.

முதியோர்களுக்கும் சத்துணவு தருகிறோம். உழைத்துச் சாப்பிட முடியாத ஏழை முதியோர்க்கு ஒருவேளை உணவாவது கிடைக்க, தொல்லை இல்லாமல் உணவு கிடைக்க - அவர்களுக்குச் சத்துணவு அளிக்கிறோம். ஏழை எளிய முதியோர்களுக்கும் நிலமற்ற ஏழைவிவசாயிகள், உழைப்பாளர்கள் ஆகியோருக்கும் இலவச வேட்டிசேலை கொடுத்து வருகிறோம்.

''பெரிய பணக்காரர்கள் — வசதியுள்ளவர்கள் எல்லாரும் ஏழை மக்களுக்கு உதவ முன்வரவேண்டும். மாற்றுச் சேலை கட்டுவதற்கு வசதியில்லை என்கின்ற குடும்பத்தினருக்கு சேலைகள் வாங்கிக் கொடுக்கலாம். ஒரு குடும்பத்திற்கு சேலை வேட்டி எல்லாம் வாங்கித் தந்தால்கூட 300 ரூபாய்க்கு மேல் செலவாகாது. பணம் சேர்த்துவிட்டால் மட்டும் போதாது. அது யாருக்குப் பயன்படவேண்டும் என்று திட்டமிடுவது ஒரு கலையாகும். தருமம் செய்வோர் எண்ணிக்கை பெருக வேண்டும்.

''ஆதிதிராவிட மக்களுக்கு 6 ஆயிர ரூபாய் பெறுமானமுள்ள வீட்டை இலவசமாகக் கட்டித் தருவதற்கு அரசு உத்தரவு போட்டுள்ளது.

''இந்த மருத்துவ மனையை டாக்டர் சேதுமாதவன் தனியொரு மனிதராக இருந்து கல்லூரி மாணவர்கள் - இளைஞர்கள் ஆகியோரின் உதவியுடன் திறம்பட வளர்த்து வருகிறார். அவருக்கு நன்றி!''

பிரிமேசன் அறக்கட்டளையைச் சேர்ந்த திரு ஏ. பி. தம்பி நன்றி கூறினார்.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**

**எஸ். எஸ். சுந்தரம்.**



# 'எதிரொலி', 'முரசொலி' வெளியிட்ட அவதூறான செய்திகள் நிருபிக்கத் தவறியதாகப் பத்திரிகை மன்றம் தீர்ப்பு

'எதிரொலி' பத்திரிகை 17.4.82, 16.6.82, 30.11.82 மற்றும் 12.3.83 ஆகிய தேதிகளில் தமிழக அரசு மீது அவதூறான செய்தி வெளியிட்டதற்காக அந்தப் பத்திரிகை மீது பத்திரிகை மன்றத்தில் தமிழக அரசு தொடர்ந்த வழக்கில் பத்திரிகை மன்றம் 12.3.84ந் தேதி தமிழக அரசின் புகாரை உறுதி செய்து தீர்ப்பளித்தது. அதன் விவரம் வருமாறு:—

தமிழ்நாடு அரசு முதலமைச்சர், பிற அமைச்சர்கள் மற்றும் உயர்மட்ட அதிகாரிகள் மீது அவதூறான செய்தி வெளியிட்டதற்காக 'எதிரொலி' பத்திரிகை மீது தமிழ்நாடு அரசு நான்கு தனித்தனி புகார் மனுக்களைக் கொடுத்தது.

மேற்கண்ட நான்கு புகார்களும் உரிய காலம் கடந்து செய்யப்பட்டவை என்றாலும் மன்றத் தலைவர் தனது வரம்பின் கீழ் உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மேற்படி தாமதத்தைப் பொருட்படுத்தாமல் ஏற்றுக்கொண்டார்.

'எதிரொலி' ஆசிரியர் தனது ஆரம்ப எதிர்வாதத்தில், தனக்குத் தகவல் தராமல் தாமதமான புகார்களை ஏற்றுக் கொண்டமைக்கு ஆட்சேபம் தெரிவித்தார். தனக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்து இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். ஆனால் தாமதமான புகார் மனு ஏற்கெனவே ஏற்றுக் கொள்ளப்பட்டு இருப்பதால், மன்றத் தலைவர், பத்திரிகை ஆசிரியரைத் தனது எழுத்து மூலமான வாக்குமூலம் தாககல் செய்ய உத்தரவிட்டார். ஆனால், போதிய அவகாசம் கொடுத்து இருந்தும் பத்திரிகை ஆசிரியர் தனது வாக்குமூலத்தைத் தாக்கல் செய்யவில்லை.

9.12.83ஆம் நாளன்று நடைபெற்ற பத்திரிகை மன்றத்தின் விசாரணைக் குழுவின் கூட்டத்தில் மேற்படி புகார் மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. விசாரணைக் குழுவின் முன்பு, விண்ணப்பதாரரின் சார்பில் தமிழக அரசின் வழக்கை வழக்குரைஞர் திரு. ஏ. வி. ரங்கம், செய்தி-மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு என். அமிர்தலிங்கம், பொது (சட்டம்-ஒழுங்கு)த்துறை பிரிவு அலுவலர் திரு கே. பட்டாபிராமன் ஆகியவர்கள் எடுத்துரைத்தார்கள். எதிர் மனுதாரர் சார்பில் யாரும் வரவில்லை.

புகார் மனு கொடுத்தவர் சார்பில் வாதாடிய வழக்குரைஞர், எதிர்மனுதாரர் ஆகிய பத்திரிகை ஆசிரியர், வேண்டுமென்றே அவதூறாக எழுதுகின்றார் என்றும், அவ்விதம் எழுதப்பட்டவைகளை உண்மை என்று நிரூபிப்பதாகக் கூறி, ஆனால் நிரூபிக்கத்தவறிவிட்டார் என்றும் வாதாடினார். இதுதொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களைப் பார்வையிட்ட மன்றம் எதிர்மனுதாரரான பத்திரிகை ஆசிரியர், ஆட்சேபகரமான பத்திரிகைச் செய்திகளை வெளியிட்டதற்காகவும், அவற்றை நிரூபிக்கத் தவறிவிட்டதற்காகவும், குறைகூறப்பட வேண்டியவர் என்று தீர்ப்

பளித்தது. ஆகவே மன்றம் தமிழக அரசின் புகார்களை உறுதி செய்தது.

இதுபோலவே, ''முரசொலி'' பத்திரிகைக்கு எதிராகத் தமிழக அரசு செய்து கொண்ட புகாரின்மீதும், அதனை உறுதி செய்து 12.3.84ந் தேதி பத்திரிகை மன்றம் தீர்ப்பு வழங்கியது. அதன் விவரம் வருமாறு:

'முரசொலி' பத்திரிகைக்கு எதிராக 31.3.83ந் தேதி தமிழ்நாடு அரசு பத்திரிகை மன்றத்தில் வழக்குத் தொடுத்தது. அதில் 11.8.82ந் தேதி இதழில் ''மற்றுமொரு திருச்செந்தூர்'' என்ற தலைப்பில், தமிழ்நாடு அரசின் உள்ளாட்சித்துறை அமைச்சரின் தூண்டுதலின் பேரில் ஒரு கொலையை, தற்கொலை என்று பதிவு செய்ததாக, முரசொலி வெளியிட்டுள்ள செய்தி பொய்யானது, அடிப்படையற்றது என்று அரசு கூறியது.

இந்தப் புகார் உரிய காலம் கடந்து செய்யப்பட்டது என்றாலும், மன்றத் தலைவர் தனது வரம்பின் கீழ் உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மேற்படி தாமதத்தைப் பொருட்படுத்தாமல் ஏற்றுக் கொண்டார்.

'முரசொலி' ஆசிரியர் தனது ஆரம்ப எதிர்வாதத்தில், தனக்குத் தகவல் தராமல் தாமதமான புகாரை ஏற்றுக் கொண்டதை ஆட்சேபித்து, மன்றம் அப்படிச் செய்வதற்கு முன்னால் தனக்கொரு வாய்ப்பளித்திருக்க வேண்டும் என்றார். பிரஸ்தாப செய்தியில் உள்ள விஷயம் சரியானதே என்றும் கூறினார். ஆனால் தமிழ்நாடு அரசு தனது எதிர்வாதத்தில், அந்தச்செய்தி உள்நோக்கமுடையதென்றும், உள்ளாட்சி அமைச்சரின் நற்பெயருக்குக் களங்கம் உண்டாக்குவதென்றும் வலியுறுத்திக் கூறியது.

அதன் பேரில், எழுத்து மூலமான தனது வாக்குமூலத்தைத் தாக்கல் செய்யுமாறு 'முரசொலி' பத்திரிகைக்கு, பத்திரிகை மன்றம் உத்தரவிட்டது. ஆயின், எழுத்து மூலமான வாக்குமூலத்தை, 'முரசொலி' ஆசிரியர் தாக்கல் செய்யவே இல்லை

பத்திரிகை மன்றத்தின் விசாரணைக் குழுவின் கூட்டத்தில் மேற்படி புகார் எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது, தமிழகஅரசின் சார்பில் வழக்குரைஞர் திரு ஏ.வி.ரங்கம், திரு. என். அமிர்தலிங்கம், திரு.கே.பட்டாபிராமன் ஆகியோர் கலந்து கொண்டனர். எதிர் மனுதாரர் சார்பில் யாரும் வரவில்லை.

பத்திரிகையில் வெளியிடப்பட்ட செய்தியை நிருபிப்பதாக எதிர் மனுதாரர் கூறிய போதிலும், அவர் நேரில் வந்தோ, அல்லது ஆவணங்கள் வாயிலாகவோ அவ்வாறு செய்யத் தவறிவிட்டார் என்று மன்றம் கருத்துத் தெரிவித்தது. ஆகவே தமிழக அரசின் புகாரை உறுதிசெய்து மன்றம் தீர்ப்பளித்தது.



## ந. மு. வேங்கடசாமிப் பெருந்தகையின் சமய ஈடுபாடு

திரு. வி. க.

இந்நாளில் பழம்பெரும் புலவர் வரிசையில் வைத்து எண்ணப்படுவோர் தொகை மிகச் சிறியதாயிருக்கிறது. அச் சிறிய தொகையினருள் ஒருவர் ந. மு. வேங்கடசாமி நாட்டார். நாட்டாரின் நுண்ணிய நோக்கில் அன்புப் புனலும் வீரக்கனலும் ஒருங்கே ஒழுகித் தழல் விடுதல் புலப்படும்.

இன்றைக்குச் சுமார் முப்பதாண்டுகட்கு முன்னர் அறிஞர் வேங்கடசாமி நாட்டாரின் பேச்சை முதன்முதல் யான் தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபையின் ஆண்டு விழாவிலே கேட்டேன். அது புலமைப் பேச்சாகவே இயங்கிற்று. நாட்டார் வீட்டிலும், பள்ளியிலும் புலமைப் பேச்சே பேசுதல் பின்னே தெரிய வந்தது. அவர் கூட்டங்களில் பேசுவதைச் சுருக்கெழுத்தில் இறக்கிப் பெயர்த்துப் பார்த்தால் அது புலமை வாய்ந்ததாகவே காணப்படும்.



# நாட்டாரின் பண்பும் புலமையும்

பேராசிரியர்

**பி. விருத்தாசலம்**

முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி.

கரும்பும் நெல்லும் காடுபோல் விளையும் கழனிகளைக் கொண்ட காவிரிநாடு கல்விக்கும் நுண்கலைகளுக்கும் பெயர்பெற்ற நாடாகும். அக் காவிரி நாடாகிய சோழ நாட்டில் தஞ்சாவூருக்கு வடமேற்கே 12 கல் தொலைவில் நடுக்காவிரி என்னும் சிற்றூர் உள்ளது. காவிரியின் கிளை நதியாகிய குடமுருட்டி ஆற்றங்கரையில் அமைந்துள்ள அச் சிற்றூரில் செந்தமிழ்ச் சான்றோர் ஒருவர் நூறு ஆண்டுகளுக்கு முன் 12.4.1884இல் தோன்றினார். அவர்தாம் நம் போற்றுதலுக்கும் வணக்கத்திற்கும் உரிய நாவலர் பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டாரையா அவர்கள்.

தம் வாழ்நாள் முழுவதும் செந்தமிழ் மொழிக்கும் சைவசமயத்திற்கும் பெருந்தொண்டாற்றி வந்த நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டாரையா அவர்கள் நின்ற சொல்லராகவும், நீடுதோன்று இனியராகவும், என்றும் நம் நெஞ்சத்தை விட்டுப் பிரிந்து அகலாதவராகவும் விளங்கும் உயர் பண்பாளராக வாழ்ந்தவர்.

நாட்டாரையாஅவர்கள் செந்தமிழ்ப் புலமை மிக்கவராகவும் பண்புநலங் கனிந்த சான்றோராகவும் விளங்கியமைக்கு ஏராளமான எடுத்துக் காட்டுக்களை இயம்ப முடியும். தாம் மட்டுமன்றித் தம் காலத்தில் வாழ்ந்த தமிழாசிரியர் அனைவரும் சங்க காலப் புலவர்களைப் போல விளங்குதல் வேண்டும் என்று நாட்டாரையா அவர்கள் விரும்பினார் என்பது துறையூரில் நடைபெற்ற தமிழ்ப் புலவர் மாநாட்டில் அவர் இற்றிய வரவேற்புரையால் இனிது புலனாகும்.

அவரது பேச்சின் சில பகுதிகள் பின்வருமாறு:

"தமிழ்ப் புலவர்கள் தம்மை உயர்த்திக் கொள்வதற்கு அவர்கள் நல்ல கல்வியுடையராதல் ஒன்று மட்டும் போதாது. விரிந்த உள்ளமும், சிறந்த பண்புகளும் வேண்டும். பண்டை நாளிலிருந்த புலவர்கள் பரிசில் கருதி யாரையும் எங்ஙனமும் பாடினரென்று கூறுதல் பொருந்தாது. அவர்கள் தாம் குற்றமற்ற பண்புடையராய் இருந்ததோடு, வேந்தர்களாயினும், பிறராயினும் தவறுடையராய்க் காணப்படின் சிறிதும் அஞ்சாது அவர்களை நெருங்கி அறிவு கொளுத்தியும் வந்தனர்.''

''அத்தகைய அஞ்சாமையும் அருந்திறனும் பெருந்தன்மையும் இற்றை நாளில் தமிழ்ப் புலவர்கட்கு வேண்டும். ஏதோ சிறிது பொருள் கிடைத்தாற் போதுமென்று தம் நிலைமைக்குத் தகாதவாறுபிறரைத்தொடர்ந்து அவர்கள் மனைவாயிலைப் பற்றி நின்று பெருமை கெட வொழுகுவது தமிழ்ப் புலவர்கட்குச் சிறிதும் அடாது. அத்தகைய இழிதகவு யாரிடமேனும் காணப்படின் அன்னாரைப் புலவர் கூட்டத்திற்குப் புறகு என நீவிர்



ஒதுக்குதல் வேண்டும். சுருங்கச் சொல்லின் பிறரெல்லாம் தம்மிடம் மதிப்பு வைக்குமாறு நடந்து கொள்வது தமிழ்ப் புலவர் கடனாகும். ''

தாய்மொழிக்கல்வி பற்றி நாவலர் பெருமான் கூறிய கருத்துக்களை இப்பொழுது காண்போம்:

''கல்வியானது உலகில் வழங்கும் பல மொழிகளானும் எய்தற்பாலதே யெனினும், தாய்மொழியிற் கற்றலென்பது ஒவ்வொருவர்க்கும் பிறப்பானுரிய கடன்களுள் விழுமியதொன்றாம். அன்றியும் நாட்டு மக்களனைவரும் கல்வி கற்று அறியாமையினீங்குவதற்கு வேற்று மொழியைத் துணையாகக் கொள்ளுதல் ஆற்று வெள்ளத்தைக் கடக்க மண் குதிரை கொண்டது போலும் பயனில் செயலேயாகும்.

"இந்நாட்டிலே எத்தனை ஆண்டுகளாக எவ்வளவு பொருட் செலவும் முயற்சியும் கொண்டு ஆங்கிலக் கல்வி கற்பிக்கப்பட்டு வருகின்றது? அங்ஙனம் கற்பித்தும் ஆடவரினும் மகளிரினும் கற்றார் எத்துணையராகவுள்ளார்? இன்னும் எத்தனை யாண்டுகள் செல்லினும் யாவரும் அம்மொழி வாயிலாகக் கல்வி பெறுதல் கூடுமோ? இதனைச் சிந்தித்துணர்வது அறிஞர் கடனாகும். அம்மட்டோ! தம் நாட்டின் பழைய நிலையினையும், தம் முன்னோரின் பல்வகைப் பெருமைகளையும் அறிந்து இன்புறுதற்கும், அவ்வாற்றால் ஊக்கமும் உரனுங் கொண்டு தம் நாட்டை வளப்படுத்த முயல்வதற்கும், முந்தையோர் கைக்கொண்டொழுகிய சீரிய நெறிகளைக் கடைப்பிடித்து இம்மை மறுமை பேறுகளையெய்துதற்கும்தாய்மொழிக்கல்வி போல் உறுதுணையாவது பிறிதுண்டோ? கூறுமின்! ஒரு நாட்டிலே பண்டுதொட்டு வழங்கி வந்து மக்களுடைய குருதியிற் கலந்திருப்பதும், பின்னும் அந்நாட்டில் என்றும் நிலைபெற்றிருக்கற்பாலதுமாகிய மொழியன்றோ அங்கு வழிவழியாக வாழும் மாந்தர்க்கு அறிவின் செல்வத்தை வரையாது வழங்குவதற்குரியதாகும்''.

தமிழ்நாட்டில் மருத்துவக் கல்வி, பொறியியற் கல்வி உட்படக் கல்வி அனைத்தும் தமிழ்மொழி வாயிலாகக் கற்பித்தலுக்கு வழி செய்வதே நம் நாவலர் பெருமானுக்கு நாம் செய்யும் வணக்கமும் வழிபாடும் ஆகும்.

# என் தந்தையார்

ந. மு. வே. நட்ராசன்

திருச்சி மலைக்கோட்டைத் தெற்கு வீதியில் மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டியை ஒட்டினாற் போன்ற இடத்தைச் சுப்பிரமணிய முதலியார் என்பவரிடம் எனது தந்தையார் வாங்கி அதில் ஒரு சிறிய வீடு கட்டி அதற்குத் ''திருநாவுக்கரசு தமிழகம்'' என்று பெயர் வைத்திருந்தார்கள். அதில்தான் அப்பா மாற்றலாகி அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போகும் வரையில் வசித்து வந்தோம். அந்த வீட்டின் எதிரில் தாயுமான சாமிகள் மடமும், அதை ஒட்டினாற்போலக் கிழக்கே சைவசித்தாந்த சபையும் உள்ளன.

பெரியசாமி பிள்ளை என்பவர் சைவசித்தாந்த சபையின் அமைச்சராக இருந்தார். அவர் சிந்தாமணியில் வசித்து வந்தார். பலரின் வசதியின் பொருட்டு, சபையின் சாவி எங்கள் வீட்டிலேயே இருக்கும். அப்பொழுது என் தந்தையாரிடம், உலக ஊழியர், மருதூர் பிச்சையா, மார்நேரி சுயம்பிரகாசம் முதலியவர்கள் பாடம் கேட்டுக் கொண்டு சபையில் படுத்துக் கொள்வார்கள்.

ஒருமுறை பூகோளப் பாடத்துக்கு இந்தியாவின் வரைபடம் வரைந்து அதில் கடல் பகுதியைக் குறிக்க ஒரே சீரான நீலநிறம் போடுவதற்கு ஏதுவாக, அப்பாவினுடைய பீரோவில் இருந்துஒரு தடித்த புத்தகத்தின் சுரசுரப்பான அட்டையைக் கிழித்து விட்டேன். அந்த அட்டையைக் கீழே வைத்து வண்ணம் தீட்டுவதற்குரிய பாகத்தை அதன் மேல் வைத்துக் கலர் பென்சிலால் தேய்த்தால், கலர் ஒரே சீராக நன்கு தெரியும். இதற்காக நான் அந்த அட்டையைக்கிழித்து விட்டேன். புத்தகத்தின் முக்கியத்துவம் எனக்குத் தெரியாது. அவர்களுக்குத் தெரியாமல் அவர்கள் இல்லாத சமயம் கிழித்துவிட்டேன். பின்னர் இது தெரிந்தவுடன் மிகவும் கோபம் கொண்டு என் முதுகில் ஓர்அறை அறைந்தார்கள். ஐந்துவிரல்களும் பதிந்து அந்த இடம் தடித்து விட்டது. என் பாட்டிதான் தம்முடைய மகனைக் கடிந்து கொண்டு முதுகில் தேங்காய் எண்ணெய். தடவிப் புண்ணை ஆற்றினார்கள். அதுதான் என் தந்தையாரிடம் நான் வாங்கிய முதல் அடியும் கடைசி அடியுமாகும்.



சுமார் 54 வருடங்களுக்கு முன் எடுத்த நாட்டாரின் குடும்பப் படம். இதில் நாட்டாரும் அவரது வலப் பக்கம், மனைவி இந்திராணி அம்மாளும், இடப் பக்கம் மாப்பிள்ளை சிவப்பிரகாச சேதிராயரும். அவர் அருகில், நாட்டார் மூத்தமகள் சிவ. பார்வதியம்மாளும் இருக்கின்றனர். நடுவில் நிற்பது நாட்டாருடைய ஒரே மகன் வே. நடராசன். நாட்டாரின் 3வது குழந்தை மங்கையர்க்கரசி. சிறிய பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்திருப்பது, பார்வதியம் மாளின் மூத்தமகன் எஸ். திருநாவுக்கரசு, தற்சமயம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையில் ரீடர் ஆக இருப்பவர்.

பின்னர் ஒருமுறை பம்பரம் விளையாடியதற்காக அடிக்க வந்தார்கள். பிடிபடாமற் போகவே உலக ஊழியரை விட்டுப் பிடிக்கச் சொன்னார்கள். அதற்குள் நான் டயர் சக்கரத்தை ஓட்டிக் கொண்டே மலைக்கோட்டையைச் சுற்றி வந்துவிட்டேன். அதற்குள் கோபம் மறைந்து விட்டது.

பள்ளிக்கூட நாட்களைத் தவிர மற்ற நாட்களில் அப்பா சொற்பொழிவுக்காக எங்குச் சென்றாலும் என்னையும் அழைத்துப் போவார்கள். பத்தாவது வகுப்பு முடிவதற்குள் நான் அப்பா கூடவே போய்த் தென்னாடு முழுவதும் பார்த்திருக்கிறேன். டிசம்பர் மாதத்தில் நடக்கும் சைவசித்தாந்த மகா சமாஜத்தின் ஆண்டு விழாக் கூட்டங்களுக்குத் தவறாது அப்பா போவார்கள். அப்படி ஒருமுறை சமாஜக் கூட்டம் முடிந்து திரும்பும்பொழுது வண்டியில் ஏறியவுடன், சமாஜக் காரிய தரிசி வந்து அப்பாவிடம் வழிச் செலவுக்கு என்று பணம் கொடுத்தார்கள். அப்பா அதை வாங்கிக் கொள்ளாமலும், சைவம் வளர்க்கப் பாடுபடுவது தம் கடமை என்றும் சொல்லி விட்டார்கள். இக்காலத்தில் ஒரு கூட்டத்திற்கு வருவது என்றால் இன்ன இன்ன வசதிகள் வேண்டும் என்று வற்புறுத்தி வாங்கும் தலைவர்களின் கடமை யுணர்வை இதனுடன் ஒப்பிட்டு நோக்க வேண்டும்.

பள்ளியிலும், கல்லூரியிலும் படிக்கும் காலங்களில் நான் வீட்டிலேயே இருந்து கொண்டு படித்திருக்கின்றேன். கல்லூரிப் படிப்பு முடிந்த பின்பு நான் வெளியில் இருந்த காலங்களில் எனக்குக் கடிதம் எழுதும்பொழுதெல்லாம் ''அன்புள்ள குழந்தை நடராஜனுக்கு'' என்று ஆரம்பித்து எழுதி வந்தார்கள். எனக்குத் திருமணம் ஆனபின் அருவங்காட்டில் பணிபுரியச் சென்ற பிறகு, 'அன்புள்ள மைந்தன் நடராஜனுக்கு' என்று எழுத ஆரம்பித்தார்கள். குழந்தையாக இருந்த நான் எப்பொழுது மைந்தன் ஆனேன் என்று யோசித்தேன். அது ஒரு பெரிய மாறுதலாக என் மனதிற் பட்டது.

# நாவலர் எழுத்தோவியம்

## கடிதங்கள்

''திருக்குறள் முழுதும் பல முறை படிக்க வேண்டிய நூல். அதில் 60, 61, 62, 63 அதிகாரங்களையாவது முதலில் மனப் பாடம் செய்து கொள்க.''

மைந்தனுக்கு எழுதியமடல் 19.12.40.

14.9.42இல் மைந்தனுக்கு எழுதிய கடிதம்.

''குடும்ப நிருவாகம்'' எவ்வளவு கடினமானது என்பதை நான் நன்றாய் அறிந்து வருகிறேன். அவ்வகையில் நீ பயிற்சி பெறுதல் வேண்டும். எண்ணில் கோடி பொதுமக்களில் ஒருவனாக நீ வாழ்ந்தால் என்ன பயன்? பகுத்தறிவுடன், உண்மையும் ஊக்கமும் உடையையாயின் வாழ்க்கையில் வெற்றிபெறலாம். திருக்குறளை இடைவிடாது படித்துவருக!''.

''பொதுவாக ஆங்கிலக் கல்லூரியில் படித்தவர்களைவிடப் படிக்காதவர்கள் நல்லரென நினைக்கும்படி இருக்கிறது''.

''கடவுள் பக்தி, வாய்மை, அன்பு, ஊக்கம், சிந்தனாசக்தி, சிக்கனம், இவைபோல்வன வாழ்க்கையை மேம்படுத்தும்.''

## கட்டுரைத் திரட்டு

உழவுத்தொழில் ஓங்க முதலாவதாகச் செய்யவேண்டிய மருத்துவம்:

''நிலங்களின் பண்புகளை உள்ளவாறு சோதித்துணர்ந்து நிலையான குறைந்த வரியை விதித்தலாகும். குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்தல், வேளாண்மை நுட்பங்களை யாவரும் நன்கு அறியும்படி செய்தல் முதலியன அடுத்துச் செய்தற்குரியன. இவை ஒரளவு செய்யப்பட்டு வரினும், இன்னும் மிகுதியாகவும் விரைவாகவும் செய்யப்படவேண்டும். மற்று கல்வி கற்றுப் பட்டம் பெற்றவர்களும் எழுதொழில் செய்ய முற்பட்டுத் தொழில் செய்வதைக் குறைவாக மதிக்கும் எண்ணத்தை மாற்றுதல் வேண்டும்.

## தமிழில் பிற சொற்கள்

''பிறமொழிச் சொற்களை எடுத்துக் கொள்வது குற்றமின்றாயினும் அவற்றை வரம்பின்றிப் புகுத்துவதுவதானது, தமிழின் தூய்மையையும் அழகையும் சிதைத்து அதன் தொன்றுதொட்ட மாண்பினைக் கெடுப்பதாகும், என்பதனைக் கருத்திலிருத்தல் வேண்டும். இக்காலத்துப்புதிய கலைகள் பலவும் எழுதுவதற்குச் சொற்கள் பல வேண்டுமென்பது உண்மையாயினும், அதன்பொருட்டுத் தமிழினைத் துருவி ஆராய்ந்து வேண்டுஞ் சொற்களைக் காண்டலும், அவைபோதாவிடத்துத் தமிழினைத் துருவி ஆராய்ந்து புதிய சொற்களை ஆக்கிக் கொள்ளுதலும், இன்றியமையாத வழிப் பிற சொற்களை ஏற்றுக் கொள்ளுதலுமே அறிவும், ஊக்கமும் முயற்சியும் உடையார்க்கு அழகாவனவாம்''

## கல்வியால் விளையும் இன்பம்:

''கல்வியால் விளையும் இன்பத்தைச் சிறிது நோக்குவோம். உலகினர் பலராலும் நன்கு மதிக்கப்படுதலே இன்பம் விளைவிப்பதொன்று. ஆயின், உண்மைக் கல்வியுடையார்க்கு அங்ஙனம் தம்மைப் பிறர் மதித்தல் முதலியவற்றால் உண்டாகும் இன்பம் அத்துணைப் பெரிதன்று. பிற்றைநாளில் உலகெலாம் போற்றும் பெரும் புலமையெய்தினார் சிலர் தாம் உயிர் வாழுநாளில் யாராலும் மதிக்கப்படாதிருத்தலும் அவர் அம்மதிப்பை ஒன்றாகக் கொள்ளாது புலமை நடாத்திச் சேறலும் கண்டும் கேட்டும் அறியற்பாலனவே. கல்வியுடையார் முன் அறியாத நுண்பொருள் பலவற்றைத் தமது கலையுணர்வால் அறிந்தோறெய்தும் இன்பமே சாலவும் பெரிது!

# சட்டமன்றத்தில் திரட்டியவை



வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 31-5-1982 வரை 102.

செங்கற்பட்டு, லத்தூர் ஊராட்சி ஒன்றியம் மலையூர், கானத்தூர் கண்டிவாக்கம், நெடுமரம் ஆகிய ஆதிதிராவிட குடியிருப்புப் பகுதிகளுக்கு 1982-83 நிதியாண்டில் சாலை வசதி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தை ''நோயற்ற பகுதியாக'' அமைக்க ரூ. 41 கோடி செலவில் செயல்படுத்த மைய அரசுக்கு ஒரு திட்டம் அனுப்பப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் நோக்கம் ''நோயற்ற பகுதி'' ஏற்படுத்தி, நோயற்ற உயிருள்ள கால்நடைகள் மற்றும் இறைச்சியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதேயாகும்.

இப்பகுதியிலுள்ள அனைத்து கால் நடைகளும் வெக்கை நோய், கால் மற்றும் வாய் நோய் முதலிய தொற்று நோய்கள் வராமல் பராமரிக்கப்படும். மேலும் நீலகிரி, மாவட்டத்தில் கால், வாய் நோயைக் கட்டுப் படுத்த ரூ. 3.12 கோடி செலவில் ஒரு முன்னோடித் திட்டம், தேசிய பால் அபிவிருத்தி வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு, அந்நிறுவனத்தால் நீலகிரி மாவட்டத்திலுள்ள கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் 24 படுக்கைகள் கொண்ட சிறார் பிரிவு புதிதாக ஏற்படுத்த அரசு ஒப்புதலளித்துள்ளது. கட்டடவேலைகள் முடியும் தருவாயில் உள்ளன.

இந்திய மருந்துகளின் செயல்திறன் நோயாளிகளின் நோயின் தன்மை ஆகியவற்றை நவீன முறையில் அறிந்து திறம்பட செயல்புரிய புதியதாக உயிர் வேதியியல் (Bio-Chemistry) மற்றும் நோய் கணிப்பியல் (Pathology Laboratory) ஆய்வுக் கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன.

செவிலியர்கள் இந்திய மருத்துவத்துறையில் பயிற்சி பெற பயிற்சிப்பள்ளி அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதற்கான கட்டடப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

மருத்துவர்கள் மற்றும் மருந்தாளுநர் பயிற்சி மாணவர்கள் படித்துப் பயன்பெற நூலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மருந்துகளை அதிக அளவில் உற்பத்தி செய்ய மருந்து செய் நிலையத்தை இயந்திரமாக்கும் திட்டம் உள்ளது. இதற்காக ரூபாய் 8 இலட்சம் நிதி உதவி மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத் தலைமையிட மருந்துவமனையில் தற்பொழுதுள்ள 252 படுக்கைகளை 345 ஆக உயர்த்த, கட்டட வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

அ. மருது



## பண்டித நாவலர் ந.மு.வே.குறித்து டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் கருத்து

இப் பெரியார் சீரிய ஒழுக்கம் உடையவர்; ஒழுக்கத்தின் அவதாரம் எனக் கூறலாம்; உழைப்பால் உயர்ந்த பெரியவர்; தம்மீது பொறாமைப்பட்டோரையும் அன்பினால் அணைத்த உத்தமர். இப்பெரியாருடன் ஏறத்தாழப் பல ஆண்டுக்காலம் யான் நெருங்கிப் பழகியவன். புறங்கூறுதல் இவர்பால் யான் கண்டதில்லை. இவர் எளிய செந்தமிழ் நடையில் பேசும் வன்மை படைத்தவர்; சைவ சமயத்தில் அழுத்தமான பற்று உடையவர்; தமிழர்—தமிழ்—தமிழ்நாடு இம்மூன்றின் நலத்திலும் கண்ணும் கருத்துமாக இருந்தவர். இப்பெருமானுடைய நற்பண்புகளைப் பின்பற்றி வாழ்தலே உண்மைத் தமிழர்கள் கடமையாகும். இப்பேராசிரியர் புகழ், தமிழ் உள்ளவரை நின்று நிலவும் என்பது உறுதி. இவரது நினைவு நாளை ஒவ்வொரு மாவட்டத்திலும் கொண்டாடுதல் நல்லது.

['தமிழ் அமுதம்' என்னும் நூலிலிருந்து]

## கற்றாரைக் கற்றாரே....

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளி விழா 1938ஆம் ஆண்டு நடைபெற்றபோது 'மொழியரசி குறவஞ்சி' என்னும் நூல் அரங்கேற்றம் செய்யப்பெற்றது.

கொங்குநாட்டின் ஒரு பகுதியாகிய சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பெரும்புலவர் ஆசிரியர் அ. வரதநஞ்சைய பிள்ளையவர்களால் பாடப்பெற்ற அந்நூலில் "கொங்கை" என்னும் சொல் மிகுதியாக எடுத்தாளப் பெற்றிருந்தது.

இதனை நகைச்சுவையுடன் கட்டிக்காட்ட விரும்பிய நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், "நூலில் பலவிடங்களிலும் ஐகார ஈற்றுடைக் குற்றியலுகரம் (கொங்கு + ஐ) பயில வந்துள்ளது தங்களது நாட்டு வழக்குப் போலும்" என்று கூறி நகைத்தனராம்.

"கொங்கு நாட்டைச் சேர்ந்த புலவர் ஆதலின் கொங்கை என்ற சொல்லை மிகுதியாகப் பயன்படுத்தி உள்ளீர்கள்" என்பது அதன் பொருள். அதற்கு நூலை அரங்கேற்றம் செய்து கொண்டிருந்த பெரும்புலவரவர்கள், "தாங்கள் நாட்டாராதலின் நாட்டு வழக்குகளை நன்கறிந்து கூறினீர்கள்" என்று சிரித்துக் கொண்டே விடை கூறினாராம்.



## நாட்டார் விழா! இந்நாட்டார் விழா!

ஒளிவளர் விழியும் உண்மை
உயிர்த்திடும் மூக்கும் நீற்றுத்
தொளிவளர் நுதலும் சைவத்
துறைமறை பயிலும் நாவும்
அளிவளர் மொழியும் தூய
அறிவொளிர் முகமும் தெய்வக்
களிவளர் நெஞ்சும் கல்விக்
கவினும் ஓர் உரு ந.மு.வே.

கற்பனைச் சுடரும் வாய்மைக்
கவியமு துலகிற் கீந்து
நற்புகழ் வளர்த்த கம்ப
நாடனின் பின்சோணாட்டுப்
பொற்பமை நடுக் காவேரி
பூத்தசெந் தமிழ்ப்பே ராசான்
விற்பனர் நயக்கும் ந.மு.
வேங்கட சாமி நாட்டார்.

வண்மைசால் மக்கள் நாட்டார்
மாண்புகழ் பரப்ப வேண்டும்
ஒண்மைசேர் நினைவுச் சின்னம்
ஊர்தொறுந் திகழ வேண்டும்
நுண்மைகூ ரவர்நூல் யாவும்
நூற்றாண்டில் வருதல் வேண்டும்
தண்மைசால் ந.மு.வே.யின்
தமிழ்ப் பணி வாழி வாழி!

பாவலர்,
பேராசிரியர் ச. பாலசுந்தரம்

## நாட்டவர் போற்றும் நாவலர் ந.மு.வே.

நாவலராய்ப் பண்டிதராய்
நானிலமே போற்றிட்ட
நாட்டா ரையா

பாவலராய் வளர்வதற்குப்
பாங்காக யார்துணையும்
பற்றார் என்றும்

தாவருநற் றமிழ்ப்புலமை
தன்னாலே ஆக்கிட்டார்
தரணி தன்னில்

யாவருமே வியந்துருக
ஏற்றமிகு பேராசான்
என்ன வாழ்ந்தார்!

நாட்டாரும் நாவலரும்
நனிபோற்றும் நாவலரின்
நற்சீர் தன்னைப்

பாட்டாலே போற்றிடவும்
உரையாலே வாழ்த்திடவும்
பான்மை யாமோ?

ஏட்டாலே புகழ்பொறித்த
ஏந்தலவர் எளிதாகத்
தாமே கற்றுக்

காட்டாளன் கழலிணையே
கருதியவின் திருநாமம்
கனிந்து வாழி!

பேராசிரியர் கி. கோதண்டபாணி

# தஞ்சை மாவட்டத்தில் 20 அம்சத் திட்டம்

கலைக்கோயிலின் இருப்பிடமாகவும் கலைகளின் பிறப்பிடமாகவும் திகழ்வது தஞ்சாவூர் மாவட்டம்.

டெல்டா மாவட்டமான இம்மாவட்டத்தில் விளை நிலத்தின் மொத்த அளவு 18 லட்சம் ஏக்கர் ஆகும். நெல் பயிரே இம்மாவட்டத்தின் முக்கிய பயிர். ஒரு போகம் மற்றும் இரு போகம் சாகுபடி மூலம் இம்மாவட்டத்தில் நெல் பயிரிடப்படுகிறது. "காரிப் மற்றும் ராபி பருவம்" என்று பொதுவாகச் சொல்லப்படும் பருவங்கள் இம்மாவட்டத்தில் 'குறுவைப் பயிரெ'ன்றும் 'சம்பா பயிரெ'ன்றும் சொல்லப்படுகிறது.

காவிரி நீரையும் பருவ மழையையும் நம்பி வருடத்தில் குறிப்பிட்ட மாதங்களில் மட்டும் விவசாயம் செய்பவர்கள் தஞ்சை விவசாயிகள். நிலத்தின் மேற்பரப்பு நீர் நிலைகள் பயன்படுத்தப்பட்டு விட்டால் விவசாயத்திற்காக நிலத்தடி நீரை நாடுவது அவசியமாகிறது. இந்த வகையில் புதிய 20 அம்சத் திட்டத்தில் கூறப்பட்டுள்ளதுபோல் நீர்ப்பாசன முறையை மேம்படுத்தி விளைச்சலைப் பெருக்கத் தஞ்சை மாவட்டத்திற்குத் தேவை ஏற்பட்டிருக்கிறது.

விவசாயக் கூலிகள் அதிக அளவில் வாழ்கிற இம்மாவட்டத்தில் விவசாய வேலை இல்லாத காலங்களில் அவர்களுக்கு புதிய 20 அம்சத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்கள் மூலம் வேலை வாய்ப்பு தருவதற்கு வழி ஏற்படுகிறது.

விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்க உதவிகள் பெருமளவில் செய்ய வேண்டும். விவசாயக் கருவிகள், இடுபொருட்கள், கால்நடைகள் போன்றவற்றை இலவசமாகவும் குறைந்த வட்டிக் கடனாகவும் புதிய 20 அம்சத் திட்டத்தின் மூலம் வழங்கும் வாய்ப்பு இருப்பதால் விவசாயம் சிறக்கும்; விவசாய மாவட்டமான தஞ்சை மாவட்டமும் வளம் பெறும். மேலும் நிலமற்ற ஏழை விவசாயிக்கு நிலப்பட்டா தருவதும் அதுபோலவே வீடற்றவர்களுக்கு மனைப்பட்டா தருவதும் இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மிகவும் தேவைப்படும் திட்டமாக இருக்கிறது.



10.9 83 அன்று கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த திப்பிராஜபுரம் ஊராட்சியில், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 6 ஏக்கர் 40 செண்டில் அமைக்கப்பட்டுள்ள சமுதாயத் தோட்டத்தை, தென்னங்கன்றுகளை நட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. சத்பதி, இ.ஆ.ப.. தொடங்கி வைத்தல்.

தஞ்சை மாவட்டத்தில் மக்கள் தொகையில் ஆதிதிராவிடப்பெருமக்கள் குறிப்பிடத்தக்க அளவிற்கு உள்ளனர். புதிய 20 அம்சத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள பல அம்சங்கள் ஆதிதிராவிட மக்களின் நல்வாழ்வை மேம்படுத்தும் நோக்கத்தில் அமைந்துள்ளன. ஆகவே புதிய 20 அம்சத் திட்டம் தஞ்சை மாவட்டத்திற்கு ஒரு வரப்பிரசாதமாகவே வாய்த்துவிட்டது எனலாம். ஏழை எளிய மக்களுக்குத் தேவைப்படும் இத்திட்டம் இம்மாவட்டத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. வரவேற்பிற்கு அடையாளம் வெற்றிதான். அவ்வகையில் உதாரணத்திற்குச் சில சாதனைகளை இங்கே காணலாம்.

'சுழன்றும்ஏர்ப்பின்னது உலகம்' என்பதற்கேற்ப விவசாயத்திற்கு முன்னுரிமை அளிக்கும் விதத்தில் சிறப்பு வரைவுத் திட்டமாக ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் 5000 வடிமுனைக் குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் ஒன்று தமிழக அரசால் தஞ்சை மாவட்டத்துற்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் மூலம் முதல் கட்டமாக 1,000 கிணறுகள் அமைக்கப்பட்டு மின் இணைப்பும் கொடுக்கப்பட்டு இதன் மூலம் சிறிய விவசாயிகள் பெருமளவில் பயனடைந்துள்ளனர்.

இதுவரை 2,191 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. 1085 கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மற்றக் கிணறுகளுக்கும் மின் இணைப்பு வழங்கும் பணி முன்னேற்ற நிலையில் உள்ளது. நிலத்தடி நீரைப் பயன்படுத்தியதன் மூலம் நீர்ப்பாசனப் பரப்புக் குறியீடான 9460 எக்டேரில் 75 சதவீதத்திற்கும் மேலான 7680 எக்டேர் நீர்ப்பாசனத்திற்குண்டான பரப்பாக செய்யப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் 39,000 டன் எண்ணெய் வித்துகள் பயிரிடப்பட்டுள்ளன.

கிராமப்புறங்களில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் நலிவுற்று வாழும் குடும்பங்களின் வருமானத்தினைக் கணிசமான அளவுக்கு உயர்த்தி அவர்களை வறுமைக்கோட்டிற்கு மேல்கொண்டு வரவும் அக்குடும்பங்களில் 18 வயது முதல் 35 வயது வரை உள்ளவர்களுக்கு சுய வேலை வாய்ப்புத்தரும் பணிகளில் பயிற்சிகளை அளித்து அவர்களுடைய வருமானத்தை உயர்த்தும் நடவடிக்கையிலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் செயல்படுகிறது

இம்மாதிரிக் குடும்பங்களை கிராமங்கள் தோறும் இனம் கண்டு, கணக்கு எடுத்து, அவர்களுக்கு வேளாண்மை, கால்நடை, மீன்வளம் போன்ற இனங்களில் தொழில் நடத்தவும் அவ்வாறு செய்ய வங்கிகளிலிருந்து மூலதனக் கடன்கள் வழங்கப்படுகின்றன. கடன் பளுகுறைய அவர்களுக்கு. ஏற்ப சகாயத் தொகையும் அளிக்கப்படுகிறது.

1983-84 ஆம் ஆண்டுக்குரிய இலக்கு 20,000 குடும்பங்கள் ஆகும். இதுவரை 16,661 குடும்பங்களுக்கு 221 இலட்ச ரூபாய் உதவித் தொகை அளிக்கப்பட்டுள்ளது.



படித்து வேலை இல்லாத இளைஞர்களுக்கு, சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் தஞ்சையில் தலைமைச் செயலர் திரு கு. சொக்கலிங்கம் இ.ஆ.ப., அவர்கள் நிதி வழங்குகிறார்.

மேற்காணும் குடும்பங்களில் 7519 குடும்பங்கள் ஆதிதிராவிடர்கள். இக்குடும்பங்களுக்கு ஒரு கோடி ரூபாய் உதவித் தொகை அளிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 79,700 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பயனடைபவர்களில் 30 சதவிகிதம் ஆதிதிராவிடர் இருக்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அதற்கும் மேலாக 38 சதவிகிதம் ஆதி திராவிடர்கள் பயனடைந்து உள்ளனர்.

ஆதிதிராவிடர் மக்கள் தொகை பெருமளவில் உள்ள இம்மாவட்டத்தில் சிறப்புச் சலுகைத் திட்டம் எனப்படும் திட்டத்தின் மூலம் ஆதிதிராவிடர்களுக்கென்றே பிரத்யேகமாக கயிறு பயிற்சி, பாய் முடைதல், கோரை உற்பத்தி, நேபாள நெசவுத் தொழில், கையால் காகிதம் செய்தல் போன்ற பத்து வகையான தொழில் பயிற்சி மூலம் 1016 பேர்கள் பயனடைந்துள்ளனர். அரசு இதற்கென 74 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

மேலும் 860 ஆழ்குழாய்க் கிணறுகள், 240 தனியார் குழாய்க் கிணறுகள் அமைக்கவும் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இது மட்டுமல்லாமல், ஆதிதிராவிடர்களுக்கென்று உழவு மாடு வழங்குதல், சுய வேலைத் திட்டம், கிராம இளைஞர்களுக்கு சுய வேலைப் பயிற்சி, ஆடு உற்பத்தித் திட்டம் போன்ற சிறப்புச் சலுகைத் திட்டங்களுக்காக அரசு இம்மாவட்டத்தில் 26 இலட்ச ரூபாய் அனுமதித்துள்ளது. இது வரை இவற்றின் மூலம் 1,300 ஆதி திராவிடர்கள் பயனடைந்துள்ளனர்.

ஆது திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களுக்கு வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்று 20 அம்சத் திட்டத்தில் கூறப்பட்டுள்ளதற்கேற்ப 11994 குடும்பங்கள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும் தஞ்சை மாவட்டத்தில் 194 சதவிகிதம் இலக்கைவிட கூடுதலான அளவு அதாவது 24,244 குடும்பங்களுக்கு உதவி செய்யப்பட்டுள்ளது.

> - நேரு

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் இம்மாவட்டத்தில் 26.54 இலட்சம் பேர் பயனடைந்துள்ளார்கள். நடப்பாண்டில் (1983-84) சுமார் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

உபரி நிலம் விநியோகம் செய்யும் வகையில் குறியீடான 2000 ஏக்கரில் 1753 ஏக்கர் உபரி நிலம் கையகப்படுத்தப்பட்டு ஏழைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

அடிப்படைத் தேவையான குடிநீர் கிடைப்பதற்கு வழியில்லாமல் இருந்த 145 கிராமங்களிலும் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் நெல் உற்பத்தியில் தஞ்சை மாவட்டத்தில் மட்டுமே மூன்றில் ஒரு பங்கு நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. அவ்வகையில் நாட்டிற்கு உணவு வழங்கும் பொறுப்பில் முக்கிய பங்கை தஞ்சை மாவட்டம் வகிப்பதால் பொது விநியோக முறைக்கும் இம்மாவட்டம் தக்க உறுதுணையாக விளங்குகிறது.

இம்மாவட்டத்தில் நடப்பாண்டில் செய்யப்பட்ட 1.81 ஆயிரம் டன் கொள்முதலில் 1.35 ஆயிரம் டன் வெளி மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் 572 நேரடி கொள்முதல் நிலையங்கள் உள்ளன. சராசரியாக ஆண்டு தோறும் $2\frac{1}{2}$ இலட்சம் டன் சம்பா நெல்லும், $2\frac{1}{2}$ லட்சம் டன் குறுவை நெல்லும் இம்மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் 1700 க்கு மேற்பட்ட நியாய விலை கடைகள் செயல்படுகின்றன. இவற்றின் மூலம் பொது மக்களுக்குத்தேவையான அரிசி, மண்ணெண்ணெய் பாமாயில் போன்ற அத்தியாவசிய பொருட்கள் நியாய விலையில் வழங்கப்படுகின்றன.

**திரு ஆர். அண்ணாதுரை**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**தஞ்சை மாவட்டம்**



# செங்கல்பட்டு மாவட்டத்தில் 20அம்சம்

ஆர். சடகோபன்
உதவி-மக்கள் தொடர்பு அலுவலர்
செங்கற்பட்டு மாவட்டம்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் 1983-84ஆம் ஆண்டில் 3,798 எக்டேருக்குப் பாசன வசதியளிப்பது இலக்கு. 1984 பிப்ரவரி வரை நிலவள வங்கி மூலம் புதிய கிணறுகள் தோண்டுவதற்கும், ஆயில் என்ஜின் , பம்ப் செட் அமைப்பதற்கும் ரூ.6.71 இலட்சம் கடன் வழங்கி 4,678 எக்டேருக்குப் பாசன வசதி செய்து தரப்பட்டுள்ளது.

பருப்பு உற்பத்தி இலக்கு 15,900 டன். இதில் சாதனை 9,015 டன்.

எண்ணெய் வித்துகள் உற்பத்தி இலக்கு 1,12,088 டன். இதில் சாதனை 59,552 டன். எண்ணெய் வித்துக்கள் 9,87,473 எக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டது. இதில் நிலக்கடலை மட்டும் 56,872 டன் உற்பத்தி செய்யப்பட்டது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட இலக்கு 16,200 குடும்பங்கள். உழவு மாடுகள், கறவை மாடுகள், ஆடுகள், வாத்துக்கள், வண்டிகள், டயர் வண்டிகள், சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடன் உதவி ரூ.148.48 இலட்சம் வழங்கப்பட்டது. இதன் மூலம் 15,472 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. இதில் பெண்டிர்கள் 35,083 பேர்.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்ட இலக்கு 26,78,080 மனித நாட்கள். சாதனை 13,88,000 மனித நாட்கள்.

உபரி நிலத்தை வினியோகிப்பதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இலக்கு 288 ஏக்கர். சாதனை 285.85 ஏக்கர்.

கொத்தடிமைகள் மறு வாழ்வு இலக்கு 7 குடும்பங்கள். ஆந்திராவிலிருந்து 7 கொத்தடிமைக் குடும்பங்கள் அழைத்து வரப்பட்டு மதுராந்தகம் அருகில் உள்ள கிராமத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து குடும்பத்துக்கு ரூ 1000 - வீதம் 6 குடும்பங்களுக்கு உதவி செய்யப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் ரூ 1596 உதவி செய்யப்பட்டுள்ளது. வங்கிகள் மூலம் கல் உடைக்கும் கருவிகள் வாங்க உதவி செய்யப்பட்டுள்ளது.

குடிநீர் பெறும் பிரச்சனைக் கிராமங்கள் இலக்கு 198. சாதனை.81.

ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டு மனைகள் இலக்கு 5000. சாதனை 3639.

வீடுகள் கட்ட உதவி இலக்கு 1500. ஆதிதிராவிடர்களுக்கு ரூ. 340,71 லட்சம். மற்றவர்களுக்கு ரூ.67.89 லட்சம்; மொத்தம் ரூ. 408.60 லட்சம் நிதி உதவியளிக்கப் பெற்றதில் சாதனை 1744.

பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் வீட்டு வசதி இலக்கு 22,450; சாதனை 1,03,415.

இம்மாவட்டத்தில் அனைத்து கிராமங்களுக்கும் மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு இலக்கு 830;சாதனை 728.

காடு வளர்ப்பு இலக்கு 1,16,86,000; சாதனை 87,85,000.

சாண எரிவாயு சக்தி பயன்படுத்துதல் இலக்கு 558; சாதனை 421.

குடும்ப நல அறுவைச்சிகிச்சை இலக்கு 35,000;சாதனை 29,710

ஆரம்பச் சுகாதார நிலைய இலக்கு.1; சாதனை.1.

6-14 வயதில் குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்த்தல் இலக்கு 14,150; சாதனை 28,296.

வயது வந்தோர் கல்வியறிவு பெறச் செய்தல் இலக்கு 39,450; சாதனை 48,711. இதில் ஆதிதிராவிடர் 37,647; மலை வாழ் மக்கள் 813; பிற்பட்டோர் 10,251.





# திரு.வி.க ஒரு பல்கலைக் கழகம்

தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களின் பெயர் நிலைக்கும் வகையில், மதுரை காமராசர் பல்கலைக் கழக அஞ்சல் வழிக் கல்வித் தமிழ்த் துறை திரு.வி.க. நூற்றாண்டு விழாக் கருத்தரங்கொன்றை நடத்தியது.

பல்வேறு துறை அறிஞர்கள், பட்டை தீட்டிய வயிரமான திரு. வி. க. வின் பண்பு நலன்களை, தொண்டுகளை, சிந்தனை மாட்சியை விளக்கும் கட்டுரைகளைப் படித்தார்கள். இந்தக் கட்டுரைக் கரும்புகளைச் சாறு பிழிந்து தருவதுபோல் மணிவாசகர் பதிப்பகத்தார் நூலாக வெளியிட்டுள்ளார்கள்.

இந்த நூல் வெளியீட்டு விழா 9-3-84 அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது.

மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் இராம.சண்முகம் அனைவரையும் வரவேற்றார்.

தலைமை வகித்த மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

''திரு.வி.க.வுக்கு மறுபெயரே தமிழ்த் தென்றல். பொதிகையில் தோன்றும் தென்றல் வந்து சேர்ந்து சுகம் தரும் இடமாக நான்மாடக் கூடல் விளங்குகிறது. அந்த வகையில் தமிழ்த் தென்றல் திரு. வி. க. பற்றிய இந்தக் கருத்தரங்கு நடத்தும் பெருமையையும் மதுரை தட்டிக் கொண்டுள்ளது.

''புயல் அச்சம் தருவது. சிறிது காலமே இருக்கக் கூடியது. தென்றல் அப்படியல்ல; தென்றல் இன்பம் தருவது; நிலைத்து நிற்பது.

''திரு. வி. க. தந்தை பெரியாரிடமும், பேரறிஞர் அண்ணாவிடமும் நீங்காப் பற்றுக் கொண்டவர். தேசீய இயக்கம் அவரது அரசியல் வாழ்க்கையின் தொடக்கமாக இருந்தாலும், இறுதியில் அறிவியக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

''பெண்ணின் பெருமை பேசிய பெரியார். இந்த நூலை யார் வெளியிட வேண்டுமோ அவர் வெளியிடுகிறார்.

''தனித் தமிழில் கைதேர்ந்தவர் திரு. வி. க. தமிழ் படிக்கிறவர்கள் தொழிலாளர்களைப் பற்றி நினைப்பதில்லை. தொழிலாளர்களுடன் தொடர்பு கொள்வதில்லை. இதற்கு மாறாக இருந்தவர் திரு.வி.க. தொழிலாளர்களும் நல்ல தமிழ் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தான் படித்த தமிழை, பாமரருக்கும் புரியும் வகையில் பயன்படுத்தியவர்.''

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் பேசுகையில்,

''திரு வி. க. அவர்களைப் பற்றிப் பல்வேறு துறைகளில் அழகாக ஆராய்ந்து சொல்கிற சிறந்த நூல் இது.

''மதுரை காமராசர் பல்கலைக் கழகம் இந்தக் கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்ததன் மூலம், தமிழுக்கும் தமிழ் மாணவர்களுக்கும் நல்லதொரு தொண்டு செய்துள்ளது.

''திரு. வி. க. தேச விடுதலைக்குப் பாடுபட்ட மிகப் பெரிய தலைவர். 'தமிழாசிரியராகத் தொடங்கி, பொது வாழ்வில் ஈடுபட்டவர். பெரியார், வரதாஜுலு போன்ற தலைவர்களோடு

தோளோடு தோள் நின்று பாடுபட்டவர். தன்னைப் பற்றி, குடும்பத்தைப் பற்றிக் கவலைப்படாமல் நாட்டுக்கு உழைத்தவர்.

''தமிழ்நாடு தனித்தன்மை வாய்ந்த மாநிலமாக விளங்க அவரும் ஒரு காரணம். தேசபக்தன், நவசக்தி பத்திரிகைகள் அவர் எழுதிய தமிழால் மக்களிடையே நல்ல செல்வாக்கு பெற்றிருந்தன.

''தமிழ்நாட்டில் தொழிற்சங்கம் தோன்ற, வளர, திரு.வி.க. கருவியாக இருந்தார். இந்தி எதிர்ப்புக்கு வீரமுழக்கமிட்டார். இந்தித் திணிப்பைக் கண்டித்துத் தடுத்து நிறுத்துவதில், கருப்புச் சட்டை, கதர்ச்சட்டை, காவிச் சட்டை மூன்றும் ஒன்றாக இருப்பதாகப் பேரறிஞர் அண்ணா சொன்னபடி, திரு. வி. க. இந்தி எதிர்ப்பில் இணைந்திருந்தார்.

''திரு. வி. க. வின் உள்ளத்தைப் புரிந்து கொண்டு வாழ்க்கையில் அவரைக் கற்றுக்கொள்ள வேண்டும். தியாக மனப்பான்மை வேண்டும். இன்று சமுதாயத்துக்கு மேலானது தனி மனித உரிமை என்று நினைப்பதால்தான் இன்று வாழ்க்கையில் சிக்கல்கள் தோன்றுகின்றன. தனி மனித உரிமை சமுதாயத்துக்குக் கீழ்ப்பட்டதுதான் என்ற எண்ணம் வர வேண்டும்''

செல்வி ஜெயலலிதா நூலை



வெளியிட்டுப் பேசினார். அவரது அழகு தமிழ்ப் பேச்சில் வெளியான அரிய கருத்துகளிலிருந்து:

''காலத்தை வென்ற மேதைகள் வரலாற்றில் நிலைத்து நிற்கிறார்கள்.

''அப்படி இன்றைக்குத் தமிழ் உள்ளளவும், தமிழ் கூறும் நல்லுலகம் உள்ளளவும் வாழ்கின்ற தமிழ்ப் பெரியார்தான் தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள். தமிழும் அவரால் புகழ் பெற்றது. தமிழகமும் அவரால் பெருமை பெற்றது.

''தெள்ளுதமிழ் மேன்மையுற அவர் தென்றலாக உலவினார். உழைப்பவர்தம் உரிமை காக்க அவர் செஞ்சுடராக விளங்கினார். சமயத் துறையிலோ நல்லோர்க்குள் நல்லோராய் நடை பயின்றார். பல்லோரும் எல்லோரும் போற்றும் வண்ணம் பல்வேறு சமயங்களுக்கிடையே ஒருமை உலகினைக் கண்டார்.

மனித நேயத்தின் மகத்துவம் தெரிந்தவர்கள்தான் வேற்றுமையிலும் ஒற்றுமை காண்பர்.

''வாழ்க்கைக்கு ஏதேனும் செல்வம் தேவை என்கிறார் திரு. வி. க. அந்தச் செல்வம் பொன்னா? பொருளா? இல்லை. எல்லாச் செல்வங்களிலும் உயர்ந்த செல்வம் தொண்டுச் செல்வம் என்கின்றார்.

''பிறந்த நாட்டிற்கு, மனித இனத்திற்குத் தொண்டு செய்வதுதான் பெரிய செல்வம் - அரிய செல்வம் என்கிறார் திரு.வி.க.

''பண்டிதர்களின் நடைக்குப் பண்டிதம் செய்து, இளமையாக்கி, இனிமையாக்கி, தமிழ் வளர்ச்சிக்குத் திறவுகோலாக இருந்தவர் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள்.''

செல்வி ஜெயலலிதா வெளியிட்ட ''திரு. வி. க. ஒரு பல்கலைக் கழகம்'' நூலின் முதல் பிரதியை, மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

பேராசிரியர் ௸. மெய்யப்பன் நன்றி நவின்றார்.

கருத்துச் செறிவோடு கூடிய எளிய இனிய விழாவாகக் களை கட்டியது.

—மூத்து ரவி

## கோதுமையில் 30,000 இனங்கள் !

பிஸ்கோத்து, ரொட்டி, பூரி, சப்பாத்தி முதலியவை உங்களுக்குப் பிடித்தமான உணவுப் பண்டங்கள் அல்லவா? இவற்றைக் கோதுமையைக் கொண்டு செய்கிறார்கள். சேமியா, ரொட்டி, கேக் முதலியவை செய்யவும் கோதுமை பயன்படுகிறது. உடல் சக்திக்குத் தேவையான கார்போ ஹைடிரேட்டுகள், உடல் வளர்ச்சிக்கான புரதம் முதலிய சத்துப் பொருள்கள் கோதுமையில் நிறைந்துள்ளன.

கோதுமை 7,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பயிர் செய்யப்பட்டு வந்திருக்கிறது. இது இந்தியா, அபிசீனியா, ஆப்கானிஸ்தானம் ஆகிய நாடுகளிலிருந்து மற்ற நாடுகளுக்குப் பரவிற்று. இன்று உலகில் மிகுதியாகப் பயிர் செய்யப்படும் உணவுதானியம் கோதுமை. அரிசிக்கு அடுத்தபடியாக மிக அதிக அளவில் கோதுமையை மக்கள் உண்கின்றனர்.

கோதுமைப் பயிருக்குச் செழிப்பான மண் தேவை. வயலில் தண்ணீர் தேங்கக் கூடாது. வெப்பமும் அதிகம் இருத்தலாகாது. உலகின் பெரும்பகுதியில் இத்தகைய சமதட்பவெப்பநிலை நிலவுவதால், அங்கெல்லாம் கோதுமை பயிராகிறது.

அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, சீனா, கனடா, அர்ஜென்டீனா, இந்தியா, பிரான்ஸ் முதலிய நாடுகளில் கோதுமை அதிகமாகப் பயிராகிறது. இந்தியாவில் உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான், மகாராஷ்டிரம், பீகார் ஆகிய மாநிலங்களில் கோதுமை பயிராகிறது. இன்றைய புதுமுறை வேளாண்மையின் பயனாகத் தமிழ்நாட்டிலும் மற்றும் சில மாநிலங்களிலும் கோதுமை விளைகிறது. இந்தியாவில் பாதிக்குமேற்பட்ட மக்களின் முக்கிய உணவு கோதுமைதான்.

கோதுமையில் 30,000 இனங்கள் உள்ளனவாம்! இவற்றில் வெள்ளை மஞ்சள் சிவப்பு முதலிய நிறங்களும், மிருது, கடினம், மிகக் கடினம் எனப் பல தரங்களும் உண்டு. இவற்றுள் ரொட்டிக் கோதுமை, சேமியாக் கோதுமை, கூம்புக் கோதுமை, குள்ளக் கோதுமை, எம்மர் கோதுமை ஆகியவை முக்கியமானவை. இந்தியாவில் ரொட்டிக் கோதுமையும் சேமியாக் கோதுமையும் பயிராகின்றன.

— குழந்தைகள் கலைக் களஞ்சியம்






திருமலை மன்னர் திருப்பெயர் நினைவாகக் கலைக்குழு ஒன்றின் தொடக்கவிழா 4-3-84 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடந்தது.

செய்தி-மக்கள் தொடர்புத் துறைத் துணை இயக்குநர் திரு. ஆர். கே. கிருஷ்ணமூர்த்தி அனைவரையும் வரவேற்றார்

'திருமலை மன்னர் கலைக்குழு தொடக்க விழாவுக்கு, மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் திரு ஆர். சவுந்தரராசன் அவர்கள் தலைமை வகித்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்—

''திருமலை மன்னர் கட்டடக் கலையில் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தார். அவர் அழகிய ஆலயங்களைக் கட்டினார்; கலை, இலக்கியங்களை வளர்த்தார்''

மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் கலைக் குழுவைத் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில்—

''வரலாற்று நாயகராக விளங்கியவர் பெயரால், இந்தக் கலைக்குழு தொடங்கப்படுகிறது. திருமலை மன்னர் இந்த மண்ணை ஆட்சி செய்து 300 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகம் நினைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறது. அவர் எந்த மொழியைச் சேர்ந்தவர், எங்கிருந்து வந்தவர் என்று நாம் பார்க்கவில்லை. அவர் எப்படி ஆட்சி செய்தார் என்றுதான் நாம் பார்க்கிறோம். மழை பெய்கிறது. அது எந்த மண்ணில் பெய்கிறதோ அந்த நிறத்தையே பெறுகிறது. இது மனிதன் பெற வேண்டிய பாடம் - மண் சிறப்புக்குச் சொந்தக்காரர்களாக நாம் ஆக வேண்டும்.

''இந்தியாவில் ஒருமைப்பாடு பற்றிப் பேசுகிறோம். இந்திய அரசுக்கு, இதற்கு முன்மாதிரி வேண்டும் என்றால், தமிழ் வரலாறுகளைத் தெரிந்து கொள்ளட்டும்; திருமலை மன்னர் வரலாற்றைத் தெரிந்து கொள்ளட்டும். தெலுங்கு பேசுகிற தமிழர்கள் நாம் என்று இங்கே குறிப்பிட்டார்கள். மொழி, பேசுகிற ஒரு கருவியே தவிர, மொழியே மனிதனல்ல.

''திருமலை மன்னர் இஸ்லாமிய - கிறித்தவ சமயத்தை ஆதரித்தவர். மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம் அவர் காலத்தில் பொலிவு பெற்றது. அவர் மண்ணின் மைந்தனாக வாழ்ந்து காட்டியவர். அவரை நினைவு கூர்வதன் மூலம் மீண்டும் அந்தச் சிறப்பை நாம் பெற வேண்டும்'' என்றார்.

குடிசை மாற்று வாரியத் தலைவர் திருமதி சுலோசனா சம்பத் அவர்கள் பேசுகையில், 'திருமலை மன்னர் ஆட்சிக்கலையில், கட்டடக் கலையில் சிறந்து விளங்கினார்' என்றார்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றச் செயலாளர் திரு டி. வி. நாராயணசாமி அவர்கள் பேசுகையில், "நாயக்க மன்னர்களிலே மிகுந்த கலை உணர்வு கொண்டவர், இந்து திராவிடக் கலாச்சாரத்தை வளர்த்தவர், தென்னகத்தையே கட்டி ஆண்டு உயர்ந்த அரசியல் வாழ்வு நடத்தியவர். காலமெல்லாம் நிலைத்து நிற்கக் கல்லிலே கலைவண்ணம் கண்டவர்'' என்றார்.

விழாவில் திரு இரா. மோகனரங்கம், எம். பி., திரு சாம்பசிவம், எம். பி., முன்னாள் அமைச்சர் திரு இராசாராம் நாயுடு, திரு பாபு ஜனார்த்தனம், திரு எம். இ. தேவராசன் ஆகியோர் கலைக் குழுவை வாழ்த்திப் பேசினார்கள். பிறகு அரசு நர்த்தகி செல்வி சுவர்ணமுகி நாட்டிய நிகழ்ச்சி நடந்தது.

—பி. வி. கி.

# சென்னையில் புதுப்பாலங்கள்

சென்னையிலுள்ள நுங்கம்பாக்கம் பகுதியில் இரயில்வே வாகனச் சுரங்கப் பாதை-சூளைமேடு கால்வாய்ப் பாலம் ஆகியவற்றின் திறப்பு விழா சீரும் சிறப்புமாக (15-2-84) நடைபெற்றது.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு ஆகியோர் பங்கேற்ற இவ்விழாவிற்கு வருகை தந்தோரை - சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. கி. சந்திரசூடன் இ.ஆ.ப. வரவேற்றார்.

விழாத் தலைமையேற்ற மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தமது உரையில் ''சென்னை நகர மக்களின் துயர் துடைப்பதிலும், சென்னை மேம்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதிலும் தமிழக அரசு அயராதுசெயல்பட்டு வருகிறது'' என்று குறிப்பிட்டார்.

அதன் பின்னர் - நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அ. கலாநிதி, தேசிய நெடுஞ்சாலை தலைமைப் பொறியாளர் திரு. எஸ். இராமநாதன், நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை தலைமைப் பொறியாளர் திரு. பி.டி. ஜெயராமன், சட்டமேலவை அ.தி.மு.க. கொறடா திரு. ஜேப்பியார், ஆகியோர் சொற்பெருக்காற்றினார்கள.

நெல்சன் மாணிக்கம் சாலையில் அமைந்துள்ள இரயில்வே வாகனச் சுரங்கப் பாதையையும், சூளைமேடு கால்வாய் மேம்பாலத்தையும் திறந்து வைத்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் பேசுகையில், ''நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதில் இந்த அரசு கட்சிபேதம் பாராமல் கடமையாற்றி வருகிறது. அந்தந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் யார், நாடாளுமன்ற உறுப்பினர் எந்தக் கட்சி என்றெல்லாம் பாராமல் இப்படிப்பட்ட திறப்பு விழாக்களுக்கு அவர்களையும் அழைத்துப் பெருமைப் படுத்தி வருகிறோம். சென்னையைப் பொறுத்தமட்டில் தென் சென்னை வடசென்னை என்கிற பேதமெல்லாம் பார்க்காமல் மாநகராட்சி செயல்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே இந்தச் சென்னை மாநகரிலேதான் சோடியம் விளக்குகள் 3,500-க்கு மேல் —அதிக அளவில் போடப்பட்டுள்ளன'' என்று குறிப்பிட்டார்.

விழா முடிவில் மேற்பார்வைப் பொறியாளர் திரு. இராமதாஸ் நன்றி கூறினார்.

திறந்துவைக்கப்பட்ட பாலங்கள் குறித்த முழு விவரம் வருமாறு:

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் முதல் கட்ட வேலைகளில் ஒன்றாக, உலக வங்கிக் கடனுதவியோடு தமிழக அரசு அனுமதித்த திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டதே நெல்சன் மாணிக்கம் சாலையில் கட்டப்பட்டுள்ள இரயில்வே வாகனச் சுரங்கப் பாதை.

316 மீட்டர் நீளமும், 15.50 மீட்டர் அகலமும் கொண்டதாக இரண்டே ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டிருக்கும் இந்தச் சுரங்கப் பாதையின் திட்ட மதிப்பீடு 113 இலட்சம் ரூபாயாகும். மழைக்காலங்களில் நீர் தேங்குமானால், அதை அகற்றிட 2 மின்சார மோட்டார்களும், 2 டீசல் மோட்டார்களும் இதில் பொருத்தப்பட்டுள்ளன.

நெல்சன் மாணிக்கம் சாலையில் சூளைமேடு கால்வாய் குறுக்கே கட்டிமுடிக்கப்பட்டுள்ள உயர் மட்டப் பாலமும், உலகவங்கிக் கடனுதவியோடு சென்னைப் பெருநகர் வளர்ச்சி முதல்திட்ட வேலைகளில் ஒன்றாகத் தமிழக அரசு அனுமதித்த திட்டமேயாகும்.

மூன்றாண்டுகளில் கட்டி முடிக்கப்பட்ட இந்தப் பாலத்தின் திட்ட மதிப்பீடு 30 இலட்சம் ரூபாய். 46 மீட்டர் நீளமும் 15.99 மீட்டர் அகலமும் உடையது இந்தப் பாலம்.

—ராஜ

## தமிழகத்தில் பத்திரிகைக் காகித ஆலை

[illegible] பத்திரிகைக் [illegible] 1984-85 [illegible] தொழிற்சாலை, பத்திரிகை காகித உற்பத்தியை மேற்கொள்ளும்.

இங்கிலாந்து ஆஸ்டின் ரோவார் குரூப் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் புதிய மாடல் பயணிகள் கார் ஒன்றைத் தயாரிக்கும் சென்னை ஸ்டாண்டர்ட் மோட்டார் நிறுவனத்தின் திட்டமொன்றுக்கு, 1983 நவம்பரில் ஒப்புதல் அளிக்கப் பட்டது. கார் தயாரிப்பு அறிவு, நுட்பத்தகவல் பரிமாற்றத்திற்கு இத் திட்டம் வகை செய்கின்றது.

## குடும்பநலத் திட்டத்தில் தமிழகம் முதலிடம்

1983-84ஆம் ஆண்டில் குடும்பநலத் திட்டத்தில் நாட்டிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கலாம் என்று, மத்திய சுகாதார-குடும்ப நல அமைச்சகத்தில் ஆணையராக உள்ள திரு ஆர். பி. கபூர் 26.3.84 அன்று பரமக்குடியில் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

தமிழ்நாட்டுக்கு இந்த ஆண்டுக்குரியளவு 3.99 லட்சம் குடும்பநல அறுவைச் சிகிச்சைகள். இதுவரை 4.57 லட்சம் அறுவைகள் செய்து இலக்கை மிஞ்சிய சாதனையை ஏற்கெனவே ஈட்டிவிட்டது தமிழ்நாடு.





# பிற்பட்டோர் பொருளாதாரத்தில் முற்பட்டோராக..

அம்சம் 3

தமிழ்நாட்டின் மக்கள்தொகை சுமார் 5 கோடி. அதிலே 54 சதம், அதாவது 2¾ கோடி மக்கள் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள். அவர்களில் பெரும்பாலோர் இன்னும் வறுமைக்கோட்டில், ஏழ்மை நிலையில்தான் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். நமது தமிழக அரசு அந்தப் பிற்பட்டோருக்காகப் பல சலுகைகளை அறிமுகப்படுத்தி அவற்றைப் பிற்பட்டோர் நலத்துறை மூலமாக நிறைவேற்றி வருவதை அனைவரும் அறிவர். ஆனால், இந்தச் சலுகைகள் அனைத்தும் பெரும்பாலும் கல்வி வசதியை மையப்படுத்தியே செயலாற்றப்பட்டு வருவதால், பொருளாதார வளர்ச்சித் திட்டங்களில் முழுக் கவனம் செலுத்த முடியாத குறை இருந்து வந்தது.

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பிற்பட்டோர், பொருளாதார வசதியும் பெற்று முன்னேறுவதற்கு ஒரு முனைப்பான செயற்பாடு மிகவும் அவசியம் என உணரப்பட்டது. அவர்களது வாழ்வு வளம் பெற, அவர்களது நல்வாழ்விற்கான வேலை வாய்ப்புகளை நல்க, சிறுதொழில்களை நிறுவி உதவ, தமிழ்நாடு அரசு, ''தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்''(The Tamilnadu Backward Classes Economic Development Corporation (P) Ltd.,) என்கிற தனியமைப்பை ஏற்படுத்தியது. அது 1956-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் (Company Act, 1956) கீழ், 16-11-1981 அன்று பதிவு செய்யப்பட்டு 25-2-1982 முதல் தீவிரமாய் இயங்கி வருகிறது. இது நிறுவனச் சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்ட அரசைச் சார்ந்த ஒரு சுய ஆட்சி நிறுவனமாகும்.

இக்கழகத்தின் தலைவராகவும், மேலாண்மை இயக்குநராகவும் திரு பொன் பரமகுரு, ஐ.பி.எஸ். 22-5-1982 அன்று பொறுப்பேற்றார்.

இக்கழகத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் சென்னை அண்ணாசாலை 807-ஆம் எண்ணுள்ள கட்டடத்தின் ஐந்தாவது மாடியில் இயங்கி வருகிறது.

இக்கழகத்திற்கு அறிவிக்கப்பட்ட மூலதனம் ரூபாய் பத்து கோடியாகும்.

கீழ்க்கண்ட ஐந்து மூத்த அரசு அலுவலர்கள் இக்கழகத்தின் இயக்குநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்:

ஆணையாளர் மற்றும் செயலாளர், சமூகநலத்துறை.

ஆணையாளர் மற்றும் செயலாளர், வேளாண்மைத்துறை.

ஆணையாளர் மற்றும் செயலாளர், தொழில் துறை.

இணைச் செயலாளர், நிதித் துறை.

இயக்குநர், பிற்பட்டோர் நலத்துறை.

இவர்களைத் தவிர, கீழ்க்கண்ட துறைத் தலைவர்கள் இக்கழகத்தின் சிறப்பு அழைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம்.

இயக்குநர், தொழில் மற்றும் வணிகத்துறை.

இயக்குநர், கால்நடைத்துறை.

முதன்மைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம்.



## அழகிய ஆலயம்

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாரில் உள்ளதுதான், அருள்மிகு ஆதிகேசவப் பெருமான் திருக்கோயில், இது 9 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. கேரள பாணியில், உயரமான படிகளின்மேல் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. பார்க்க இல்லம் போலும் தோன்றுகிறது.

தென்னை சூழ்ந்த பரளியாற்றின் கரையில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தக் கோயிலில் கல்வெட்டுகளும், கவின்மிகு சிற்பங்களும் உள்ளன. பரந்து விரிந்த அழகிய மண்டபம்—அதை வரிசையாகத் தாங்கி நிற்கும் பாவை விளக்குத் தூண்கள்—பார்க்கக் கண் கொள்ளாக் காட்சியாகும்.

இங்கிருந்து கேரளா 15 கி.மீ. தூரத்தில் உள்ளது.

படத்தில் நாம் பார்ப்பது திருக்கோயில் முகப்பின் ஒரு அழகிய தோற்றம்.

இக்கழகம் தொடங்கப்பட்டதன் தலையாய நோக்கம், சமூகத்தில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ள, ஆண்டு வருவாய் ரூ. 5,000க்கு மேற்படாத மிகப் பிற்பட்டோர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர், மற்றும் இதர பிற்பட்ட மக்கள் தொழில் கூட்டுறவுச்சங்கங்கள் தொடங்குவதற்கு ஊக்கப்படுத்தும் வகையில் அவர்களுக்கு ஆரம்ப முதலீட்டுத் தொகையைக் (Margin Money) கடனாக அளிப்பதாகும். இக்கடன் தொகை, தொடங்க உள்ள தொழில் நிதித் தேவையில் ஐந்தில் ஒரு பகுதியாகும். இது, குறைந்த வட்டியில், அதாவது 4 சதம் வட்டியில் அளிக்கப்படும். இவ்வாறு தொடங்கப் பெறும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கம் வகிப்போர் வாயிலாக நபருக்கு ரூ. 5,000-க்கு மேற்படாத கடன் உதவி அளிக்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்படும் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தினர்கள் கீழ்க்கண்ட சதவிகிதத்தில் சேர்க்கப்படுவர் :

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் மற்றும் மிகப் பிற்பட்டோர்—60 சதம்.

இதர பிற்பட்டோர்—40சதம்.

தொழிற் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தினர் அனைவரும் அந்தந்தத் தொழிற்சாலையில் பணியாற்றி, மாத ஊதியமும், ஆண்டு இலாபத்தில் பங்கும் பெறுவார்கள்.

**அம்சம் 3 :**

ஐந்தில் ஒரு பங்குத்தொகையை இக்கழகத்திடமிருந்து கடனாகப் பெறும் இத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், தொடங்கும் தொழிலின் மூலத்தினத்தின் மூன்றில் ஒரு பங்குத் தொகையை ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலம் தகுதிக்கேற்ப ஊக்க உதவியாகப்பெறும். மீதமுள்ள முதலீட்டுத் தொகையை, தேசிய வங்கியிலிருந்தோ அல்லது கூட்டுறவு வங்கிகளிலிருந்தோ சலுகை வட்டி விகிதத்தில் கடனாகப் பெற்று, தங்களின் தொழில் முயற்சியைத் துவங்கும். இவ்வாறு பெறப்படும் கடன் தொகைகள் ஓராண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட காலம் கழித்தோ தொழிலைப் பொறுத்து வட்டியும், முதலும் திரும்ப வசூலிக்கப்படும். வசூலித்தபின் ஒவ்வொரு தொழிலும் அந்தந்த அங்கத்தினர்களுக்குச் சொந்த உடைமையாகி விடும்.

திட்டங்கள் செயற்பாட்டிற்காக அரசு சமூகநலத்துறைமூலம் வழங்கிய ரூபாய் இருபது இலட்சம் 19-3-1983 அன்று பெறப்பட்டது. அத்தொகையைக்கொண்டு ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள சிறு தொழில்களை மாவட்டங்களில் அமைத்து, சுமார் இரண்டாயிரம் பிற்பட்டோருக்கு உதவத் திட்டம் தீட்டியுள்ளது கழகம். இதுவரை திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் புதுக்கோட்டை ஆகிய நான்கு மாவட்டங்களில் இக்கழகத்தின் சிறு தொழில்கள் தொடக்க விழா நடந்துள்ளது.

தென் மாநிலங்கள்தான் பிற்பட்டோரைப் பேணி உதவுகின்றன. அவற்றில் ஒரு சில மாநிலங்களில் மட்டும் பிற்பட்டோருக்கு எளிய விகித வட்டிக்குக் கடன் உதவி வழங்கவே கழகங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஆனால், பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டிற்குப் பொருளுதவி செய்து, சிறு தொழில்கள் அமைத்துக் கொடுத்து, அவர்களது வாழ்வு வளம்பெறச் செய்வது தற்போது தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்ப் பெருமக்கள் பூரிப்பும் பெருமையும் கொள்ளத்தக்கது.





# நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம்

அம்சம் 4

தமிழகம் ஒரு விவசாய நாடு. தமிழகத்திலுள்ள எல்லா நிலங்களும் முன்பே நில அளவை செய்யப்பட்டுள்ளன. முப்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை மறு நில அளவை மற்றும் நிலவரித்திட்டம் எடுத்துக் கொள்வது என்ற கொள்கை சென்ற 1937-ஆம் ஆண்டில் அரசினால் கைவிடப்பட்டுள்ளது.

ஆகையால் கிராம ஊழியர்களிடமும் வட்ட அலுவலகங்களிலும் தற்போது புழக்கத்திலுள்ள மூல ஆவணங்களானசெட்டில்மெண்ட் பதிவேடு, புலச்சுவடி, சிட்டா போன்ற ஆவணங்கள் மிகவும் பழுதடைந்து உபயோகமற்ற தன்மையிலும் இருந்து வருகின்றன. அதே சமயத்தில் நீண்ட காலமாக நிலத்தைப் பற்றி ஏற்பட்ட மாறுதல்கள், விற்பனை, பாகப் பிரிவினை, தானம், பரிவர்த்தனை போன்ற மாற்றங்கள் அவ்வப்போது பலதரப்பட்ட நிர்வாகக் காரணங்களால் ஆவணங்களில் சரிவரப் பதியப்படவில்லை.

அதனால் இப்பொழுது நிலம் வைத்துள்ள விவசாயிகள் எண்ணிறந்த இன்னல்களுக்கு ஆளாகின்றனர். அவர்கள் தங்களது நிலத்தை அடமானமாக வைத்து அரசிடமிருந்தோ அல்லது கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்தோ எவ்விதச் சலுகையும் எளிதில் பெற முடியாத அளவுக்கு ஆளாகியுள்ளனர்.

இதுதவிர முன் நடந்த நில அளவைக்குப் பிறகு நாளடைவில் ஏற்பட்ட மாறுதல்கள் அதாவது புதிய ரோடு அமைத்தல் போன்ற மாற்றங்கள் ஆவணங்களில் பதியப்படவில்லை. புலங்களில் நட்ட சர்வே கற்கள் அதிக அளவில் காணாமல் போயிருந்தன. இவைகளையெல்லாம் நீக்கத் திட்டம் வகுத்துச் செயல்பட வேண்டி வந்தது.

இத்தகைய மாறுதல்கள் சாதாரணமாக மறு நில அளவை மற்றும் மறு நிலவரித்திட்டத்தினால் 30 ஆண்டுகளுக்கு ஒருமுறை சரி செய்யப்பட்டு வந்துள்ளது. அதே போல் இப்பொழுது செய்ய வேண்டுமானால் வெகுவாக கால தாமதமும் மிக அதிகப் பணச் செலவும் ஏற்படும்.

இதைக் கருத்தில் கொண்டும் குறுகிய காலத்தில் மக்களுக்கு அதன் பயன் கிடைக்க வேண்டுமென்ற நோக்கில் மறு நில அளவையாலும் மறு நிலவரித்திட்டத்தாலும் ஏற்படக்கூடிய எல்லாப் பயன்களையும் ஒன்று சேர்த்து இப் புதியதொரு திட்டத்தைத் தமிழக அரசு கொண்டு வந்துள்ளது.

இத்திட்டம் சென்ற 1.6.1979 முதல் முதலில் நிலஅளவை இலாகாவில் பணிபுரிந்த ஊழியர்களைக் கொண்டும் ஒரு சில புதிய பதவிகளை அனுமதித்தும் 28 அலகுகளின் மூலமாக 30 வட்டங்களில் செயல்படத் தொடங்கியது. 2 ஆண்டுகளுக்குப் பின்பு இத்திட்டப்பணி ஆய்வு செய்யப்பட்டது.

இத்திட்டத்தினால் எடுத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளில்உள்ள விவசாயிகள் இத்திட்டத்தை வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள். அந்நன்மைகள் தமிழகத்தில் எஞ்சியுள்ள பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு எட்ட வேண்டும் என்ற நோக்கிலும் இத்திட்டம் கிராம மட்டத்தில் அதிக அளவில் வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதாலும், இத்திட்டத்தை உடனடியாக மாநிலம் முழுவதும் அமலாக்கி இரண்டு முதல் 3 ஆண்டுக் கால வரையறைக்குள் இதை முடிக்க வேண்டுமென நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரும்பினார்கள்.

அதன்படி 14.9.82ஆம் தேதியின் அரசு உத்தரவில் ஏறத்தாழ 7500 புதுப் பதவிகளை அனுமதித்து, 80 புது அலகுகளும், 12 சிறப்பு உதவி இயக்குநர் அலுவலகங்களும் ஆரம்பித்து மாநிலத்திலுள்ள 16 மாவட்டங்களில் 13 மாவட்டங்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.

### இத்திட்டத்தினால் ஏற்படும் பயன்கள்

இத்திட்டம் பொதுவாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்லதொரு பயனை அளிக்கும் திட்டமாக அமைந்துள்ளது. அவர்கள் கீழ்க்கண்டவாறு பயனடைந்து வருகிறார்கள்.

ஒவ்வொரு நில உரிமையாளருக்கும் புதிதாக பட்டா கொடுக்கப்படுகிறது. அப்பட்டாவுடன் அவருக்குச் சொந்தமான நிலத்தினைக் காட்டும் வரைபடமும் கொடுக்கப்படுகிறது. அவ்வரைபடத்தில் அவர்கள் எளிதாகப் புரிந்து கொள்ளுமாறு நான்கு அளவுகளுக்கும் வடக்குப் பக்கத்தில் நிலச் சொந்தக் காரரின் பெயரும், சொந்தக்காரரால் பராமரிக்கப்பட வேண்டிய சர்வே கற்களும் பச்சை மையினால் போட்டுக் காண்பிக்கப்படுகிறது.



# மழை தரும் மரங்கள்

(அம்சம் 12)

தமிழ்நாட்டில் வனத்துறையினரால் சமுதாயக் காடுகளும் வேளாண்மைத் துறையினரால் பண்ணைக் காடுகளும் பட்டிகள்தோறும் ஏற்படுத்தத் தகுந்த வழிமுறைகள் வகுக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

வேளாண்மைத் துறையினரால் பண்ணைக்காடுகள் திட்டம் 5.9.83 முதல் மத்திய அரசு உதவியுடன் செயலாற்றப்படுகிறது.

நமது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இதுகாறும் வனவியல் துறையினர் சமுதாயக்காடுகள், பண்ணைக்காடுகள் என்றெல்லாம் அரசுக்குச் சொந்தமான நிலங்களிலும் நிறுவனங்களின் கீழ் பராமரிக்கப்படும் இடங்களிலும் பெரும் பரப்பளவில் காடுகளை வளர்த்துள்ளனர்.

அண்மையில் மத்திய, மாநில அரசுகள் ஒருங்கிணைந்து வேளாண்காடுகள், அதாவது விவசாயிகள் பட்டா நிலத்திலேயே இந்தக் காடுகளை உண்டாக்க 1983 செம்படம்பர் ஐந்தாம் தேதி முதல் இத்திட்டம் நமது மாநிலத்திலுள்ள அனைத்து வட்டாரங்களிலும் (374) நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் ஒவ்வொரு மாவட்டத்திலும் எல்லா வட்டாரங்களிலும் (ஊராட்சி ஒன்றியங்களிலும்) செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு வட்டாரத்திலும் 600க்கும் குறைவாக இல்லாத சிறு குறு விவசாயிகளுக்கு, குடும்பங்களுக்கு (ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடி மக்கள் உட்பட) எல்லோரும் பயனடையுமாறு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

சிறு விவசாயி அல்லது மிகச் சிறு அல்லது குறு விவசாயி என்றால் 5 ஏக்கர் புஞ்சை அல்லது 2.50 ஏக்கர் நஞ்சை, சிறு விவசாயி 2½ ஏக்கர் புஞ்சை (அல்லது 1.25 ஏக்கர் நஞ்சை, குறு விவசாயி. இந்த விவசாயிகளுக்குக் கீழ்க்கண்டவாறு மரக்கன்றுகள் வழங்கப்படுகின்றன.

(அ) பழம் மற்றும் கனி வகை கிடைக்கும் கன்றுகள்

(ஆ) விறகு கிடைக்க கன்றுகள்

(இ) நார் எடுக்கும் கன்றுகள்

(ஈ) ஆடு மாடு தீவனங்கள் கிடைக்க கன்றுகள்

என்று நான்கு முக்கிய உபயோகத்திற்காக பாகுபாடு செய்த கிராம வெப்ப தட்ப சூழ்நிலைக்கேற்றவாறு கன்றுகளைத் தேர்ந்தெடுத்து மேற்கூறிய சிறு, குறு விவசாய குடும்பங்களுக்கு அவர்களுடைய அனைத்துத் தேவையைப் பூர்த்தி செய்யுமளவுக்குக் கன்றுகள் இனாமாகவும் அல்லது பத்துக் காசு என்ற மிகக் குறைந்த விலைக்கே கொடுக்கப்படுகின்றன.

தமிழ்நாடு வேளாண்மைத் துறையின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களைக் கணக்கிட்டு, ஒன்றியத்திற்கு தலா ரூ.25,000 மற்றும் தென்னங்கன்றுகள் வழங்க ரூ.25,000 ஆக மொத்தம் ரூ.50 ஆயிரம் மானியமாக வழங்கத் திட்டத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது.

**தி. கோ. தணிகாசலம்**
**இணை வேளாண்மை இயக்குநர்.**

கூட்டுப்பட்டாக்களைப் பிரித்துத் தனித்தனியாக உட்பிரிவு செய்து கொடுக்கப்படுகிறது. அதற்காக நில உரிமையாளரிடமிருந்து எத்தகைய மனுக்களும் பெறுவதில்லை.

புலன்களின் காணாமற்போன சர்வே கற்கள் புதுப்பிக்கப்படுகின்றன.

கிராம மட்டத்திலும் வட்டாட்சி அலுவலகம் மட்டத்திலும் உபயோகப் படுத்தப்பட்டு வரும் மூல ஆவணங்களான செட்டில்மென்ட் ரிஜிஸ்டர், புலச்சுவடி, சிட்டா, கிராம வரைபடம் போன்றவைகள் புதிதாகத் தயாரித்து எதிர்வரும் 30 ஆண்டுகள்வரை உபயோகப்படுத்தக் கூடிய அளவுக்கு வழி செய்யப்படுகிறது.

மைய அரசின் 20 அம்சத் திட்டத்தில் கொண்டு வந்துள்ளபடி நில ஆவணங்கள் தற்பொழுதுள்ள நிலையைக் காட்டக்கூடிய வகையில் புதுப்பிக்கப்படுகின்றன.

இத்திட்டம் தமிழக அரசால் கொண்டு வரப்பட்டுள்ள பட்டா நில உரிமைப் பதிவேடு சட்டத்தினை அமல்படுத்த முன்னோடியாக இருக்கிறது.

அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களிலுள்ள ஆக்கிரமிப்புகள் கண்டு பிடிக்கப்பட்டு வட்டாட்சியருக்கு, மேல் நடவடிக்கைக்கு அனுப்பப்படுகின்றன.

கிராமங்களிலுள்ள நடைபாதைகள், வண்டிப்பாதைகள் போன்ற பொது மக்களால் உபயோகப்படுத்தப்பட்டு வரும் பாதைகள் பட்டா நிலங்களாக இருந்தாலும் அவை தனியாக நில அளவை செய்யப்பட்டு ஆவணங்களில் பதியப்படுகின்றன. அதைப் போல் நஞ்சையாகப் பதியப்பட்ட புலன்கள் புஞ்சையாக இருந்தாலும், புஞ்சையாகப் பதியப்பட்ட புலன்கள் நஞ்சையாக அனுபோகத்தில் இருந்தாலும் அத்தகைய மாற்றங்கள் கணக்கிடப்பட்டு வட்டாட்சியருக்கு, மேல் நடவடிக்கைக்கு அனுப்பப்படுகின்றன.

இத்திட்டத்தினால் சுமார் 7500 ஊழியர்களுக்கு மாதச் சம்பளமும் சுமார் 20,000 கிராமவாசிகளுக்கு தினப்படி வேலை வாய்ப்பும் வகை செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்காகும் மொத்தச் செலவு ரூ.17.36 கோடி.



# மனிதர்க்குத் தோழனடி பாப்பா!



நாய் நமது உண்மையான நண்பனாக மட்டுமின்றி, வழிகாட்டியாகவும், பாதுகாவலனாகவும் விளங்குகிறது. எனினும் மிகவும் மோசமாக ஏசப்பட்டு புறக்கணிக்கப்படுவது நாய் இனமே. பொது இடங்களை அசுத்தப் படுத்தி நோய்களைப் பரப்பும் தன்மை வாய்ந்தது நாய் என்ற தவறான கருத்துகூட நம்மிடையே நிலவுகிறது.

நாயை எப்படி நடத்துவது என்பதனை நாம் இன்னமும் அறியவில்லை. குரைக்கும் நாய்கள் அனைத்தும் மிகவும் துன்புறுத்தப்பட்டாலன்றிக் கடிப்பதில்லை.

பாம்புகளிடமிருந்து குழந்தையைக் காத்த கதை, காட்டு விலங்குகளிடமிருந்து எசமானின் உடலைக் காத்த கதை, எசமானர் புதைக்கப்பட்ட இடத்தின் அருகிலேயே உண்ணா விரதம் இருந்து உயிர் நீத்த கதை என்று நாயின் அருங்குணங்களை விளக்கும் பல கதைகளை நாம் கேட்டு இருக்கிறோம்.

திருடர்களைப் பிடிப்பதிலும், குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும் காவல் துறையில் சாகசம் மிகவும் பிரபலமான ஒன்று. ஆண்டுதோறும் நடைபெறும் நாய்க் கண்காட்சி மிகவும் அழகான, புத்திசாலித்தனமான நாய்களை நமக்கு அறிமுகப் படுத்துகிறது.

நாய் குறித்தும், நாய் வளர்ப்பு குறித்தும் மேலும் விவரங்களை அறிந்து கொள்வது சுவையான ஒன்றாகும். தொடக்கக் கட்டத்தில் தன்னுடைய குட்டிகளுக்குத் தாய் நாய், தானே பால் வழங்குகிறது. 12-வது நாள் வரைக்கும் குட்டிகள் கண்ணைத் திறப்பதில்லை. கேட்கும் சக்திகூட இருக்காது.

குரைக்கும் சத்தத்திற்குப் பதில் இவை சிணுங்கும். முழுமையாக வளர்ச்சி பெற்ற பின்னர் கெட்டியான ஈறுகளுடன் கூடிய 42பற்கள், தெளிவாகக் கண்கள் மற்றும் ஈரமூக்குடன் இவை திகழ்கின்றன.

சுறுசுறுப்பாகவும் விளையாட்டுத்தனமாகவும் இருக்கும். இவை மனிதனின் விருப்பமான மிருகமாக விரைவில் மாறுகின்றன.

நாளைக்கு ஐந்து முறையும், ஆறுமாத வளர்ச்சிக்குப் பின்னர் மூன்று முறையும் இவற்றுக்கு உணவிட வேண்டும். சுத்தமான பால், நீர்க்கப்பட்ட எருமைப் பால், பாரக்ஸ், சிறு ரொட்டித் துண்டுகள் ஒரு 'டீ'ஸ்பூன் காட் லிவர் ஆயில், ஒன்று அல்லது இரண்டு வைட்டமின் 'பி' காம்ப்ளெக்ஸ் மாத்திரைகள், இரண்டு 'டீ'ஸ்பூன் எலும்புச் சாறு ஆகியவை தினசரி அளிக்க வேண்டிய உணவு வகைகளாகும்.

நாய்களை இரண்டு கைகளாலும் தூக்க வேண்டும். எப்பொழுதும் இவற்றைக் காலைப் பிடித்தோ, கழுத்தைப் பிடித்தோ காதைப் பிடித்தோ தூக்கக் கூடாது. நாள்தோறும் நாயின் உடலைச் சுத்தப்படுத்த வேண்டும். தவறினால், நோய்க் கிருமிகள் அண்டும்.

வாரம் ஒருமுறை நமைச்சலை அளிக்காத சோப்பு போட்டு நாயைக் குளிப்பாட்ட வேண்டும். காதுகளை அவ்வப்போது சுத்தம் செய்யவேண்டும். சுற்றுச்சுவரைச் சுற்றி ஓடவிடுவதன் மூலமோ, தினசரி நடையின்போது கூட அழைத்துச் செல்வதன் மூலமோ நாய்க்குப் போதிய உடற்பயிற்சி அளிக்க வேண்டும்.

மழையிலும், வெய்யிலிலும் நாய்க்குப் பாதுகாப்பு மிக மிக அவசியம். அறைபோன்ற கூண்டுகளில் நாய்க்கு நிழல் அளிக்க வேண்டும். போதிய வெளிச்சத்துடன் கூடியவையாக, சுத்தமாக இவை இருத்தல் வேண்டும்.

தகுதி பெற்ற, பிராணி மருத்துவரின் ஆலோசனையுடன் நாய்க்கு அவ்வப்போது கிருமி அகற்றப்பட வேண்டும். ஆறு வார வளர்ச்சி பெற்ற நாய்க் குட்டிகளுக்குத் தடுப்பு ஊசி போடுவதன் மூலம், இவற்றை ஆரோக்கியமானதாகவும், ஊக்கமிக்கதாகவும் வைத்திருக்க முடியும்.

குழந்தைகள், விழியிழந்தோர் மற்றும் கால்நடைகளை வழி நடத்த நாய்களுக்குப் பயிற்சி அளிக்கலாம். கடைக்கண்ணிக்குச் சென்று வரும் நாய்களும் உண்டு. ஆட்டு, மாட்டு மந்தைகளை நாய்கள் மேய்ப்பது உண்டு. தனிமையில் வாழும் முதியோருக்கும் நாய்தான் உண்மையான தோழன். வாழ்நாள் முழுவதும் பயனுள்ள தோழனாக விளங்கும் வகையில், நாய்களை நாம் பரிவுடன் நடத்த வேண்டும்.




இசைய வைப்பது இசை எனப்படுகிறது. 'பாட்டால் பரமனைத் தொழும் நிலை' வரக் காரணம் இதுவே என்றாலும் தவறில்லை.

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனத் தமிழிசை ஏழாகக் குறிப்பிடப்படுகிறது. இதனையே வடநூலார் சட்சமம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம் எனப் பெயரிட்டு அச்சொற்களின் ஏழு முதல் எழுத்துக்களைக் கொண்டு, ச, ரி, க, ம, ப, த, நி எனச் சுரவரிசையிட்டனர்.

பண்டைக்காலத்தில் தமிழிசையின் பெருமை கூறும் சிற்றிசை, பேரிசை, இசைநூல், இசை நுணுக்கம், இசை விளக்கம், பஞ்சமா பாரதீயம், பண் அமைதி பண்வரி விளக்கம், பாட்டும் பண்ணும், இசைக்கூறு, பாடற் பண்பு, தாள வகையோத்து, தாள சமுத்திரம், கருவி இலக்கணம், ஆளத்தி அமைப்பு எனப் பல இசை நூற்களெல்லாம் நம் நாட்டில் இருந்திருக்கின்றன.

இந்தச் செய்திகள் மட்டுமே இப்போது நமக்குக் கிடைக்கிறதே தவிர அந்த நூற்கள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை.

### யாமிருக்க பயமேன்?

''அழிந்துபோய்விட்ட அந்த நூற்களைப் பற்றிக் கவலைப் பட்டு என்ன ஆகப்போகிறது? கவலையை விடுங்கள்; நாங்கள் இருக்கிறோம் இசையைக் காக்க'' என்கிறார் தமிழ்நாடு இசைக் கல்லூரி இயக்குநர், இசைச் சித்தர் சிதம்பரம் திரு. எஸ். ஜெயராமன்.

அவர் பொறுப்பிலிருக்கும் தமிழ்நாடு இசைக் கல்லூரியின் நடவடிக்கைகள்தான் என்ன? காணச் சென்றிருந்தோம்.

கிடைத்த செய்திகள் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன:

இசை மேதை, பி. சாம்பமூர்த்தியின் அரிய முயற்சியால், மத்திய - மாநில அரசுகள், நிதி உதவியோடு - 'மத்திய கர்நாடக இசைக் கல்லூரி' என்ற பெயருடன் 1949-ல் தான் முதன் முதலாக இந்த இசைக் கல்லூரி சென்னையில் தொடங்கப்பட்டது. சாந்தோமில் உள்ள 'ரஹமத் பாக்' என்ற சிறு கட்டடத்தில் துவக்கப்பட்ட இக்கல்லூரி பின்னர் இடவசதி இன்மையால் 'பிரிட்ஜ் ஹவுஸ்' என்னும் கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. அதன் பிறகுதான் இப்போதுள்ள 'தென்றல்' கட்டடத்திற்கு மாறியது.

இந்த இசைக் கல்லூரியின் முதலாவது முதல்வராக முசிரி சுப்பிரமணிய ஐயர் இருந்தார்; பிறகு, சந்தியாவந்தனம் சீனிவாசராவ் முதல்வராகப் பொறுப்பேற்றார்.

''திருப்பாம்புரம், என். சுவாமிநாத பிள்ளை, மாயவரம் கிருஷ்ணையர், சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, திருவாலங்காடு சுந்தரேச ஐயர், வரகூர் முத்து சுவாமி ஐயர், கல்யாண சாஸ்திரிகள், க. பொ. சிவானந்தம் பிள்ளை, காரைக்குடி முத்து ஐயர், திருமதி டி. பிருந்தா, பி. பாலகிருஷ்ணன்போன்றவர்களால் எல்லாம் கவனமாகக் காத்து வளர்க்கப்பட்ட இந்த இசைக் கல்லூரியில் இப்போது கல்லூரி முதல்வராகத் திரு டி. என். கிருஷ்ணன் பொறுப்பேற்றுள்ளார்'' என்று நமக்குத்தெரிவித்த இயக்குநர் ''கௌரவ இயக்குநராகச் சிலகாலம் செம்மங்குடி சீனிவாச ஐயர் இருந்தார்; அதற்கடுத்து இசைக் கல்லூரி இயக்குநர் பொறுப்பு எனக்களிக்கப் பட்டது'' என்று அடக்கத்தோடு தெரிவித்தார்.

தொடக்கத்தில் மத்திய-மாநில அரசுகளின் நேரடிப் பார்வையில் இருந்துவந்த இக்கல்லூரி நிர்வாகம், அதன்பின் பொதுக் கல்வி இயக்குநரும் இசை மேதைகள் சிலரும் அங்கம் வகித்த நிர்வாகக் குழு ஒன்றின் கட்டுப்பாட்டில் இருந்தது.

### அரசு பொறுப்பேற்றது

1957-ல் தான் இக்கல்லூரியை நிர்வகிக்கின்ற பொறுப்பைத் தமிழ்நாடு அரசு ஏற்றது. கல்வித் துறைத் துணைச் செயலாளரின் நேரடிப் பொறுப்பிலேயே இந்த அமைப்பின் நிர்வாகம் விடப்பட்டது. 'மத்திய கர்நாடக இசைக் கல்லூரி' என்ற இதன் பெயர், வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின்போது 'தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி' என மாற்றப்பட்டது.

1978-ல் மதுரை மாநகரில் ஓர் இசைக் கல்லூரி நிறுவப்பட்டது. 1980-ஆம் ஆண்டு முதலே இது கல்லூரிக் கல்வி இயக்குநரின் நேரடிப் பொறுப்பிலே இயங்கும் வண்ணம் செய்யப்பட்டது.

சென்னை, மதுரை, திருவையாறு ஆகிய இடங்களில் உள்ள இசைக் கல்லூரிகள் மட்டுமல்ல; வேறு எங்காவது பணிபுரிவோர், அல்லது பகல் வேளையில் வந்து இசை பயில வாய்ப்பற்றோர் ஆகியோருக்காகச் சென்னை மாநகரில் புரசைவாக்கம், மயிலாப்பூர், தியாகராய நகர், திருவல்லிக்கேணி ஆகிய இடங்களில் மாலை நேர இசைக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இவைகளில் மட்டும் 150 பேர் படித்து வருகிறார்கள்.

''சென்னையில் வேறு சில பகுதிகளிலும் மாலைநேர இசைக் கல்லூரி அமைக்க வேண்டும் என்று பலபேர் விண்ணப்பித்திருக்கிறார்கள்; அரசின் அனுமதி பெற்று விரைவிலேயே இன்னும் சில மாலைநேர இசைக் கல்லூரிகளும் அமைக்கப்படவிருக்கின்றன'' என்றார் கல்லூரி முதல்வரான திரு டி. என். கிருஷ்ணன்.

பிரதானக் கல்லூரி நேரம் 10 மணி முதல் 4 வரை என்றால், மாலை நேரக் கல்லூரி 6 மணி முதல் 8 மணி வரை ஆகும்.

1949-ல் நாற்பதே மாணவர்களோடு துவக்கப்பட்ட இந்த இசைக் கல்லூரியில் இப்போது மாணவர்கள் 150 பேரும்,


இலங்கை மாணவி

மாணவிகள் 250 பேருமாக நானூறு பேர் பயின்று வருகின்றனர்.

### படிப்பும் பட்டங்களும்

தொடக்கத்தில் - குரலிசை, வீணை, வயலின், இசை, இயல் ஆகியவை மட்டுமே கற்றுத் தரப்பட்டன இங்கே; இப்போதோ நாதசுரம், தவில், மிருதங்கம், புல்லாங்குழல், பரதநாட்டியம், கடம், கஞ்சிரா, மோர்சிங் ஆகியவைகளும் கற்பிக்கப்படுகின்றன. குரலிசை, வீணை, வயலின் முதலானவற்றில் தேர்ச்சி பெறுவோருக்கு 'இசைக் கலைமணி' என்ற பட்டமும், மற்றவர்களுக்கு 'வாத்தியக் கலைமணி' 'ஆடற் கலை மணி' என்கிற பட்டங்களும் வழங்கப்படுகின்றன.

இசைக் கலைமணி பட்ட வகுப்புக்கு இரண்டாண்டுக் காலப் பயிற்சி; வாத்தியக் கலைமணி, நாட்டியக் கலைமணி ஆகிய பட்ட வகுப்புகளுக்கு மூன்றாண்டுக் காலப் பயிற்சி; இவை தவிர இசை போதனா பயிற்சி வகுப்பென ஓராண்டுக் காலப் பயிற்சி வகுப்பொன்றும் இங்கே நடைபெற்று வருகிறது.

இசைப் பாடத் திட்ட வளர்ச்சிக்கெனத் திட்டமிட்டு, முதற் கட்டமாக இசை ஆராய்ச்சியாளர்கள்—ஒருவர் குரலிசை ஆராய்ச்சிக்கு, இன்னொருவர்







புதிய கட்டடத் திறப்பு விழாவில் மாண்புமிகு முதல்வருக்கு வரவேற்பு

''வருகிற மாணவ மாணவிகள் இசைக்கலை மீது கொண்ட ஆர்வத்தால்தான் வருகிறார்களா, அல்லது மற்ற கல்லூரிகளில் இடம் கிடைக்காமல் ஏதாவது படிப்போம் என்று வருகிறார்களா?''

''அப்படி ஒன்றுமில்லை. எங்கள் இசைக் கல்லூரியில் சேர்வதற்காகவே மனுப்போட்டு வந்து சேருகிறார்கள். எவ்வளவோ பிள்ளைகள் இடம் கிடைக்காமல் ஏமாந்தும் போகும் நிலை இருக்கிறது; அந்தமான், இலங்கை, மொரீஷியஸ், பிரான்ஸ் போன்ற வெளிநாடுகளிலிருந்தெல்லாம் இங்கே விரும்பிப் படிக்க வருகிறார்கள்!''

இந்த இசைக் கல்லூரியில் 70 சதவிகிதம் தமிழிசைக்கு முக்கியத்வம் தரப்பட்டாலும், 30 சதவிகிதத் தெலுங்குக் கீர்த்தனங்களும் இசை வல்லுநர்களால் கற்பிக்கப்படுகின்றன. நாதசுரம், தவில் கற்போருக்கு 60 ரூபாய் பயிற்சிக்கால உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது.

கருவி இசை ஆராய்ச்சிக்கு என இருவர் இங்கே தமிழக அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

''பழமை வாய்ந்த இசைக் கலைப் பிரிவுகளான கோட்டு



கல்லூரி முதல்வர், இயக்குநர் ஆகியோருடன் பேட்டி,

வாத்தியம், ஜலதரங்கம், டோலக் கொன்னக்கோல், இசைக்கதை ஆகிய பாடப்பிரிவுகளும் விரைவில் இங்கே துவங்கப்படஉள்ளன என்பது குறிப்பிடத்தக்கது'' என்றார் இசைக் கல்லூரி இயக்குநரான இசைச்சித்தர் திரு சி.எஸ். ஜே.

## படித்துப் புகழ் பெற்றோர்

''இந்தக் கல்லூரியில் படித்து முடித்து இப்போது புகழ்பெற்று விளங்குபவர்கள் யாராவது உண்டா?'' என்கிறோம் நாம்.

''அண்மையில் டாக்டர் பட்டம் பெற்ற இசைமணி சீர்காழி கோவிந்தராஜனே இங்கே படித்தவர்தான். இப்படி இன்னும் எத்தனையோ பேர்'' என்று பெருமையோடு சொல்கிறார் அவர்.

கல்லூரி மாணவர் தலைவர்



இங்கே பயிலும் மாணவிகளுக்கு விடுதி வசதி செய்து தரப்பட்டுள்ளது. விரைவில் மாணவர்களுக்கான விடுதியும் அமைக்கப்படவிருக்கிறது.

''இசை கற்பதில் மாணவ மாணவிகள் ஆர்வத்தோடு ஈடுபடுகிறார்களா?'' என்றோம் வாய்ப்பாட்டுப் போதகர் திரு. டி.என். சீனிவாசனிடம். ''நிச்சயமாக'' என்று உறுதியோடு தலையாட்டினார் அவர்.

இக்கல்லூரியின் வயலின் வகுப்பிற்கு நாம் சென்றபோது, அங்கே பார்வையற்ற மகளிர்





இருவர் பயின்று வருவதைக் கண்டோம்.

திருமதி ஆர். கமலா விரிவுரையாளராகவும், திருமதி வி.ஏ. கமலா வயலின் போதகராகவும் உள்ள அதே வகுப்பில் 12 பெண்களும் 23 ஆண்களும் பயின்று கொண்டிருந்தனர். ஆண்களில் ஒருவரும் அப்படிப் பார்வையற்றவராகக் காணப்படவே ''பார்வையற்ற நிலையில் பயில்வது கடினமாக இருக்காதா?'' என்று கேட்டோம்.

''கற்றலின் கேட்டலே நன்று என்று திருவள்ளுவரே சொல்லியிருக்கிறாரே! இசைப் பயிற்சியைப் பொறுத்தவரை கேள்வி ஞானம் தான் முக்கியம், இந்த வகையில் அவர்கள் எவ்விதச் சிரமும் இன்றி எளிதில் பயிற்சி பெற்று விடுகிறார்கள்'' என்றார் திருமதி வி. ஏ. கமலா.

''வயலினில் உங்களுக்கு எத்தனை ஆண்டுப் பயிற்சி?'' என்று நாம் கேட்க, சிரித்தவாறே ''1950 முதல்'' என்றார் அவர்.

## பல்கலைக் கழகமாகும்!

கூடுதலான வகுப்பறைகளுக்காகக் கட்டப்பட்ட புதிய கட்டடங்களை, அண்மையில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் திறந்து வைத்தார்.

''இந்தக் கல்லூரியை இசைப் பல்கலைக் கழகம் ஆக்க நாங்கள் பெரிதும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். இப்போது அதற்கான அந்தஸ்துகளை இக் கல்லூரிக்கு உண்டாக்கும் பணியில் தீவிரமாக இறங்கியுள்ள நாங்கள், விரைவிலேயே அண்டை மாநிலங்களுக்கெல்லாம் சென்று, அங்குள்ள இசைப் பல்கலைக் கழகங்களின் நடவடிக்கைகள் பற்றியும் இதற்காக அறிந்துவர இருக்கிறோம்'' என்று பெரிதும் ஆர்வத்தோடும், நம்பிக்கையோடும், உறுதியோடும் கூறினார், இசைக் கல்லூரி இயக்குநர் இசைச் சித்தர் திரு. சிதம்பரம் ஜெயராமன்.

இல. இராசேந்திரன்



# மக்களைக் கவரும் பழங்கலை

தமிழ்ப் பழங்கலை இயக்ககத்தின் சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 10.3.84 அன்று பழங்கலைப் பண்பாட்டு விழா நடைபெற்றது.

சேசம்பட்டி திரு டி.சிவலிங்கம் குழுவினரின் நாதசுர இசையுடன் காலை நிகழ்ச்சி தொடங்கியது. டாக்டர் சீர்காழி கோ. சிவசிதம்பரம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார்.

தமிழ்ப் பழங்கலை இயக்குநர் திருக்குறளார் திரு வீ.முனிசாமி அவர்கள் வரவேற்புரையாற்றுகையில், ''வருங்காலச் சந்ததியினருக்குப் பழங்கலை பற்றித்தெரிவிக்கத் தமிழ்ப் பழங்கலை இயக்ககம் செயல்பட்டு வருகிறது'' என்றார்.

விழாவிற்குத் தலைமை வகித்த மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் பேசுகையில், ''அனைத்துக் கலைகளையும் பாதுகாக்க வேண்டும். அவற்றைப் பேணிக்காக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காகக் கலைஞர்களையும், அறிஞர் பெருமக்களையும் தமிழ்ப் பழங்கலை இயக்ககத்துடன் இணைக்க வேண்டும். தமிழாசிரியர்கள் ஆதரவு தரவேண்டும். இதன்மூலம் இந்தக்கலை இயக்ககம் மாநிலம் முழுவதும் பரவும்'' என்றார்.

'மூவேந்தரும் கலை வளர்ச்சியும்' என்ற தலைப்பில் திரு அ.கி. பரந்தாமனார் உரையாற்றினார்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த டாக்டர் விஜயலட்சுமி, ''நாட்டுப்புறக் கலைகள்'' பற்றி உரையாற்றினார்.

'கலை வளர்த்த தமிழகம்' என்ற தலைப்பில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு எஸ்.வி. சிட்டிபாபு பேசினார்.

விழாவினைத் தொடங்கி வைத்த மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் உரையாற்றுகையில்,

''பண்பாட்டைப் பரப்பத் தோன்றியுள்ள இயக்ககம் இது. இத்தகைய விழாக்கள் நடத்தித் தமிழரின் கலை, பண்பாடுகளைப் பரப்பவேண்டும். பழமைக்குப்பழமையாய்ப்பின்னைப் புதுமைக்குப் புதுமையாய் விளங்கும் தமிழ்நாட்டுக் கலைகளுக்கு ஈடு இணை எதுவும் கிடையாது.

''வைரம் தீட்டத் தீட்ட ஜொலிப்பது போல், பண்பாடும் பழகப் பழகத் தான் வளரும். கிரேக்கம், ஹீப்ரு போன்ற மொழிகளையும் பிறநாட்டுக் கலைகளையும், நாம் படித்துத்தான் தெரிந்து கொள்கிறோம். ஆனால் தமிழ்மொழி அதன் இயற்கலை 2000 ஆண்டுகள் கழித்தும் பேசிப் படித்துத் தெரிந்து கொள்கின்ற மொழியாக-கலையாக உள்ளது. பண்டைய கலைகள் புது மெருகுடன் ரஷ்ய நாட்டில்தான் வளருகின்றன. இந்தக் கலை உணர்வு தமிழ்நாட்டிலும் ஏற்படவேண்டும்.

''உலகத்தில் இரு கூறுபாடுகள் உள்ளன. ஒன்று கலை; மற்றொன்று அறிவியல் என்று பிரிக்கப்பட்டுள்ளது. கட்டடம் கட்டுவதற்குக் காரணம் அறிவியல், அதை அழகுபடுத்துவது கலை. மிகச் சிறந்த செல்வம் சிந்தனைச் செல்வம். சிந்தனையிலிருந்து வந்தது கற்பனை; கற்பனை உள்ளத்தோடு கலைகள் படைக்கப்படுகின்றன'' என்றார்.

மாலையில் 'கைச்சிலம்பு' திரு டி.திருக்காளத்தி குழுவினரால் நடத்திக் காட்டப்பட்டது. கலைமாமணி தஞ்சை திரு வி.பாபு குழுவினரின் கரக ஆட்டம் காவடி ஆட்டம் மற்றும் கிராமியக் கலைநிகழ்ச்சிகளும் நடத்திக் காட்டப்பட்டன.

விழாவிற்கு வந்திருந்தோரை மொழி பெயர்ப்புத் துறை இயக்குநர் டாக்டர் ஔவை நடராசன் வரவேற்றார்.

மாண்புமிகு சட்ட மன்றப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமை வகித்து உரையாற்றுகையில், ''மறந்து கொண்டும் மறைந்து கொண்டும்இருக்கும் கலைகளைப் புதுப்பிக்க வேண்டும். அவற்றை மக்கள் மத்தியில் பரப்பப் பழங்கலை இயக்ககம் பணியாற்றி வருவது குறித்து மகிழ்ச்சி. கலை மூலம் கிராம மக்கள் மகிழ்ச்சியும் உடல் திறனும் பெற்றனர்''என்றார்

'இயற்றமிழும் கலையும்' என்ற தலைப்பில் டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் பேசினார்.

'சுவடிகளில் பழங்கலை' என்ற தலைப்பில் டாக்டர் ச. வே. சுப்பிரமணியம்பேசினார்.

'பௌத்தம் வளர்த்த கலைகள்' என்ற தலைப்பில் டாக்டர் நா. பாலுச்சாமி பேசினார்.

கலைமாமணி சுப்பு ஆறுமுகம் குழுவினர் நடத்திய 'கலைமகள் வந்தாள்' என்ற வில்லிசை அவை வரையும் ஈர்த்தது.

தமிழ்ப் பழங்கலை இயக்ககத்தின் பழங்கலைப் பண்பாட்டு விழாவின் இரண்டாவது நாள் நிகழ்ச்சிகள் வள்ளுவர் கோட்டத்தில் (11-3-84) காலை 10 மணியளவில் சிறப்போடு தொடங்கின.

டாக்டர் சீர்காழி கோ. சிவசிதம்பரம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார்.

தமிழ்ப் பழங்கலை இயக்கக இயக்குநர் திருக்குறளார் வீ. முனிசாமி அவர்கள் வரவேற்புரையாற்றினார். அப்போது அவர்- ''தமிழ்நாட்டின் பழங்காலக் கலைகளைப் பாதுகாத்து வருங்காலச் சந்ததியினருக்குத் தருகின்ற பெரும் பொறுப்பைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. அந்த உயரிய நோக்கத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டதே இந்த அமைப்பு'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் விழாத் தலைமையேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''கலைகளில் பெரும்பாலானவை கண்டு ரசிக்கப் படுபவைகளே தவிர கேட்டு ரசிக்கப்படுபவை அல்ல என்றே நான் கருதுகிறேன். பழங்கலைகள் என்று பார்க்கிறபோது, நம் முன்னோர்கள் அறிவாளிகள் என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்; ஆனால் அதுவே முடிவல்ல என்பதும் நம் நெஞ்சில் நிற்க வேண்டும். இப்போது நம் கண்ணுக்கு மேலே தெரிகிற கலைகளுக்கெல்லாம் ஆதாரம் கீழே உள்ள அஸ்திவாரமே என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

'கல்வெட்டு காட்டும் தமிழர் பண்பாடு' என்ற தலைப்பில் பேசிய திரு. நடன காசிநாதன்- கி.மு. 3ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டே நம்நாட்டுக் கல்வெட்டுகள்ல் மிகப் பழமையானது என்று கூறி நீதி வழங்குவது வரி வசூலிப்பது போன்றவைகளெல்லாம் அந்நாளில் எப்படி நடந்திருக்கிறது என்பதைக் கல்வெட்டு ஆதாரங்களோடு எடுத்து விளக்கினார்.

டாக்டர் திருஞானசம்பந்தம் 'அறிவியலும் கலை இயலும்' என்ற தலைப்பில் பேசும்போது, ''அறிவியலோடு கலையியலையும் இணைத்துப் புதுமைகாண நாம் முடல வேண்டும். அறிவியல் வளருமானால் சாதனைகளும் எளிதில் வளரும்'' என்று குறிப்பிட்டார்.

சென்னை நகரக் காவல்துறை ஆணையாளர் திரு ஸ்ரீபால் இ.கா.ப. 'சமணம் வளர்த்த கலைகள்' என்ற தலைப்பில் பேசுகையில்சமணம், பௌத்தம் ஆகியவை வளர்த்த கலைகள் பற்றி அரியதோர் உரையாற்றித் தமிழ்ப் பழங்கலைகளோடு அவற்றை இணைத்துக் காட்டினார்.

பிற்பகல் நிகழ்ச்சிகள் மாலை 4 மணியளவில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் தலைமையில் தொடங்கின.

யோகி திரு இராமபத்திரன். 50 பள்ளிச் சிறுவர்களைக் கொண்டு குறள் அணிவகுப்பு ஒன்றைச் சிறப்புற நடத்திக் காட்டினார்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர் திரு சிலம்பொலி செல்லப்பன் 'கலையும் இலக்கியமும்' என்ற தலைப்பில் உரையாற்றினார். அப்போது அவர் 'ஆடலும் பாடலும் அழகும் ஒன்றும் குறையாதிருப்பதே ஆடற்பெண் இலக்கணம் என்கிறது சிலப்பதிகாரம். பாடலின் இலக்கணம். ஆடலின் இலக்கணம் ஆட அமைக்கப்படும் மேடையின் இலக்கணம் வாழ்க்கை இலக்கணம் எல்லாமே சிலம்பில் எடுத்துக் காட்டப்படுகின்றன. எனவே, அந்தக் காலக் கலைகளின் இருப்பிடமாக விளங்குவது சிலப்பதிகாரமே' என்றார்.

'சிலம்பின் இசை நுணுக்கம்' என்ற தலைப்பில் பேச வந்த டாக்டர் எஸ். இராமநாதன் வீணையும் குழலும் இசைத்துக் காட்டச் செய்து சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள இசை நுணுக்கம், இசைப் பாங்கு ஆகியவை பற்றி-குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற பழந்தமிழிசையின் பாங்கு பற்றி மிக நேர்த்தியாக விரிவுரையாற்றினார்.

'தமிழர் வாழ்வும் கலையும்' எனுந் தலைப்பில், திரு எஸ். டி. காசிராஜன் இ.ஆ.ப. பேசுகையில்—'நமது பழந்தமிழ் நாகரிகத்தைச் சேர்த்து இப்போது 23 நாகரிகங்கள் உயிரோடிருப்பதாகக் கூறுகிறார்கள். உலகில் 150 நாடுகளுக்கு மேல் இருக்கின்றன. அதில் 50 நாடுகளில் தமிழன் தாக்கம் தெரிகிறது. இப்படி நமது நாடும் மொழியும் பண்பட்ட வாழ்வாலும் பழமையான கலையாலும் நனி சிறந்து விளங்குகின்றன'' என்று குறிப்பிட்டார்.

கலைமாமணி டாக்டர் திருமதி சேலம் ஜெயலட்சுமி, 'தமிழிசைப் பண்கள்' என்கின்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுகையில்-'தமிழிசைப் பண்கள் மிகப் பழமையானவை. தமிழிசையில் பதினோராயிரம் ஆதி இசைகள் இருந்ததாகக் கூறப்படுகிறது. இசைத் தமிழ் பற்றிச் சங்க இலக்கியங்கள் நமக்கு ஏராளமான செய்திகளைத் தருகின்றன. ஐவகை நிலங்களுக்கும் தனித்தனி யாழ்களும் பண்களும் இருந்திருக்கின்றன. அந்நாளில் பருவத்திற்கும் காலத்திற்கும் ஏற்றதாக இசை வகுக்கப்பட்டிருந்தது' என்றார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள்பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தமிழ்நாடு அரசின் முழு அரவணைப்பில், ஆதரவில் உள்ள இந்தத் தமிழ்ப் பழங்கலை இயக்ககம் கலைகளை, கலைஞர்களை ஊக்குவிப்பதிலும் காப்பதிலும் தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

''தமிழகத்திலே புலவர்களுக்கெல்லாம் புலவர் திருவள்ளுவர் என்றால் கலைஞர்களுக்கெல்லாம் கலைஞர் நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் ஆவார். இந்தக் காரணத்தினாலேதான் தமிழக அரசு 631 கலைஞர்களுக்குப் பட்டம், பரிசுகள், பொற்கிழி வழங்கிச் சிறப்பித்திருக்கிறது. திறமையான கலைஞர்கள் எதிர்கால மக்களாலும் நினைக்கப்பட வேண்டும். போற்றப்பட வேண்டும் என்ற கருத்திலே 157 சிறந்த கலைஞர்களின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. 'கலைமாமணி' போன்ற பட்டங்கள், பாராட்டுகள் 109 கலைஞர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. 1567 நலிவுற்ற கலைஞர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 150 வீதம் ஓய்வூதியம் அளிக்கப்பட்டு வருகிறது.''

இதன்பின்னர், கலைமாமணிகள் நடராஜ் - சகுந்தலா குழுவினரின் 'சிலப்பதிகார நாட்டிய நாடகக் கலை நிகழ்ச்சி' சிறப்புற நடைபெற்றது.

விழா முடிவில், தமிழ்ப் பழங்கலை இயக்ககத் திட்ட அலுவலர் டாக்டர் அர. இராமசாமி நன்றி கூறினார்.

**தொகுப்பு : - மருது-பி.எல்.ஆர்.**




# ஆசியப் பண்பாட்டு ஆய்வு நிறுவனம்

ஆசியப் பண்பாட்டுச் சிறப்புக் கூறுகளை அறிவியல் பூர்வமாக ஆராய்ந்து உலகுக்குக் காட்டி ஆசிய உணர்வினைப் பேணிப் பாதுகாத்து வளர்க்கும் அடிப்படைக் குறிக்கோளுடன் ஆசியப் பண்பாட்டு ஆய்வு நிறுவனம் சென்னையில் நிறுவப்பட்டுள்ளது.

தொன்னெடுங்காலம் முதல் மனித நாகரிகத்தின் வளர்ப்புத் தொட்டிலாகவும், உலகெங்கிலும் இன்று செழித்து வளர்ந்து காட்சி தரும் பல்வேறு சமயதத்துவ, கலாச்சாரச் சிந்தனைகளைப் பெற்றெடுத்துத் தந்த தாயகமாகவும் ஆசிய நாடுகள் திகழ்ந்து வருகின்றன. இந்துமதம், பௌத்தம், சமணம், கிறித்தவம், இஸ்லாம் போன்ற பெரிய சமயங்கள் ஆசிய மண்ணிலே பிறந்து உலகெங்கிலும் பரந்து நிற்கும் வியத்தகு காட்சியை நாம் கண்கூடாகக் கண்டு நிற்கின்றோம்.

மேலை நாட்டுக் கலாச்சாரத்தின் ஆதிக்கத்தால் ஆசியச் சிந்தனைகளும் தத்துவங்களும் பண்பாட்டுக் கூறுகளும் ஓரளவிற்கு மூடி மறைக்கப்பட்டுள்ளன எனலாம். ஆசிய நாடுகளில் தோன்றிய இலக்கியம், தத்துவம் போன்ற கலாச்சாரக் கூறுகள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று இணைபிரியாத நெருங்கிய உறவு கொண்டுள்ளன. இத்தகைய உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் மனப்போக்கும், இத்தகைய உணர்வுகளின் அடிப்படைகளை ஆராயும் ஆராய்ச்சிப்போக்கும், இத்தகைகய உணர்வுகளின் இதயத்துடிப்பை வரவேற்கும் ஒருமைப்பாட்டுணர்வும் இன்றைய நிலையில் குறைந்து காணப்படுவது வருந்துவதற்குரியது. மேல்நாட்டுக் கலாச்சார மோகத்திற்கு உலகமே அடிமையாகிவிட்ட இக்காலகட்டத்தில் ஆசிய உணர்வுகளைப் பேணிப் பாதுகாப்பதும், ஆசியக் கலாச்சாரங்களைப் பற்றிய ஒப்பீட்டு ஆய்வு முறைகளை மேற்கொள்வதும், ஆசியப் பண்பாட்டின் சிறப்புக் கூறுகளை உலகிற்குக் கொண்டு காட்டுவதும் இன்றியமையாத தேவைகளாகக் கருதப்படுகின்றன. இத்தகைய பின்னணியில்தான் பல்வேறு ஆசிய நாட்டு அறிஞர்களின் உறுதுணையோடு சென்னையில் ஆசியப்பண்பாட்டு ஆய்வு நிறுவனம் ஓராண்டுக்காலத்திற்கு முன்னர் நிறுவப்பட்டது.

ஜப்பானிய, இந்திய நாட்டு அறிஞர்களின் முயற்சியால் உருவாக்கப்பட்ட இந்நிறுவனத்தின் பல்வேறு ஆய்வுக் குழுக்களில் பல்வேறு ஆசிய நாடுகளைச் சார்ந்த உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். இந்நிறுவனத்தில் தத்துவம், தொல்பொருள் ஆய்வு, இலக்கியம், கலாச்சாரம், கல்வெட்டுக்கள், ஓலைச்சுவடிகள், இந்தியக் கலாச்சாரம், மொழியியல், மொழி பெயர்ப்பியல், மானிடவியல், சமூகவியல்போன்ற பல்வேறு தனித்தனி ஆய்வுத் துறைகள் காலப்போக்கில் இடம் பெறும். அதோடு, முதல் பத்தாண்டுக்காலத்தில் தமிழ், சமஸ்கிருதம், ஜப்பானிய மொழி, சீன மொழி, சிங்களம், எபிரேயம், பாரசீகம் போன்ற பல்வேறு மொழிகள், அம்மொழிகளில் தோன்றிய இலக்கியங்கள் ஆகியவை பற்றிய கல்வி புகட்டுவதற்குரிய திட்டங்கள் உள்ளன.

**டாக்டர் ஜி. ஜான் சாமுவேல்**

தொடக்க நிலையில் ஜப்பானிய மொழி, தமிழ்மொழி ஆகியவற்றிற்குத் தனித் தனித் துறைகள் நிறுவப்பட்டுள்ளன. தமிழக அரசின் நிதி உதவியோடு தமிழ் ஆய்வுக்கு எனப் புதிய தமிழியல் துறை ஒன்று தற்போது நிறுவப்பட்டுள்ளது. ஆசிய மொழி இலக்கியங்களைத் தமிழில் மொழி பெயர்ப்பது, தமிழ் மொழி இலக்கியங்களை ஆசிய மொழிகளில் மொழி பெயர்த்தளிப்பது ஆகிய பணிகளை இத்துறை மேற்கொள்ளும். பௌத்தக் காப்பியமான மணிமேகலையினை ஜப்பானிய மொழியில் இந்நிறுவனம் மொழி பெயர்க்கும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ளது. சிலப்பதிகாரம், சங்க இலக்கியங்கள் போன்றவை தொடர்ந்து முதன் நிலையில் ஜப்பானிய மொழியிலும் காலப் போக்கில் பிற ஆசிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்படும். அவ்வாறே ஆசிய நாட்டு இலக்கியச் செல்வங்களைத் தமிழில் மொழிபெயர்த்துத் தரும் அரிய பணிகளை இந்நிறுவனம் மேற்கொள்ளும்.

தமிழ் இலக்கியத்தின்பெருமையினை உலகுக்கு உணர்த்துதல், தமிழ் ஆய்வின் தரத்தினை மேலும் சிறப்படையச் செய்தல், வெளிநாட்டு அறிஞர்களோடு இணைந்து தமிழ் ஆய்வினைச் செழிக்கச் செய்தல் போன்ற அடிப்படை எண்ணங்களை மனத்தில் கொண்டு சில ஆய்வுத் திட்டங்களை இந்நிறுவனத்தின் தமிழியல் துறைமேற்கொண்டுள்ளது.



இதன் தொடக்க நிலையாகத் தமிழ் இலக்கியக் கலைக்களஞ்சியம் தயாரித்தல் என்னும் மிகப் பெரிய திட்டம் ஒன்றினைத் தற்போது இத்துறை செயல்படுத்தி வருகிறது. ஆங்கில மொழியில் வெளிவர இருக்கின்ற இக்களஞ்சியம் ஐந்து பகுதிகளாக ஐயாயிரம் பக்க அளவில் அமைக்கப் பெறும். இதன் முதற் பகுதி தயாரிக்கும் பணி சில மாதங்களுக்குள் நிறைவு பெறும். ஆங்கிலமும், தமிழும் கற்றுணர்ந்த எட்டு அறிஞர்கள் இக்கலைக் களஞ்சியம் தயாரிக்கும் பொறுப்பில் முழுமையாக ஈடுபட்டுள்ளனர். தமிழ்ப் பண்பாடு, தமிழ் நாட்டில் தோன்றிய சமயங்கள், அரசியல் அமைப்புக்கள் என்பன பற்றிய பல்வேறு தலைப்புக்களில் வல்லுநர்களின் அறிமுக ஆய்வுக் கட்டுரைகளும் இக் கலைக்களஞ்சியத்தின் முதற்பகுதியில் இடம் பெறுகின்றன.



நிறுவனத்தின் ஆய்வுப் பணிகளை மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் 10.12.1982ல் தொடங்கி வைத்தார்.

தமிழ்மொழி, ஜப்பானிய மொழி தொடர்பான மாலை வேளை அறிமுக வகுப்புக்களை இந்நிறுவனம் தற்போது நடத்தி வருகின்றது. தமிழ் தெரியாத வெளிநாட்டவர் பலருக்கு இந்நிறுவனம் தமிழ்மொழி பற்றிய அறிவினையும் தமிழியல் பற்றிய சிறப்புக் கல்வியினையும் புகட்டி வருகின்றது. அவ்வாறே நம் நாட்டவருக்கு ஜப்பானிய மொழிக் கல்வியினைப் புகட்டி வருகின்றது.



தமிழியல் துறைத் தலைவரும் நிர்வாக இயக்குநரும்

தமிழ்ப் பண்பாடு பற்றிய சிறப்புக் கல்வியினைப் புகட்டும் நோக்கத்துடன் இந்நிறுவனம் தொல்பொருளியல் தொடர்பான பகுதிநேர நிறைசான்றிதழ் (Diplomo course in archacology) வகுப்பினை நடத்தி வருகின்றது. இவ்வகுப்புக்கள் ஒன்பதுமாத காலம் தொடர்ந்து நடைபெறும்.

பௌத்தம், சுவடியியல், இந்தியப் பண்பாடு போன்றவற்றிற் காதைதனி ஆய்வுத்துறைகள் இந்நிறுவனத்தில் மிக விரைவில் இடம் பெற உள்ளன. ஆசியவியல் ஆய்வு பற்றிய கையேடு ஒன்றையும் இந்நிறுவனம் அண்மையில் தயாரித்துள்ளது. ஆசிய உணர்வுகளுக்கு என்று உலகெங்கிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆய்வு நிறுவனங்கள், ஆசியப் பண்பாடு தொடர்பாக வெளிவந்த ஆய்வுகள், நூல்கள், ஆசியப் பண்பாட்டு ஆய்வில் ஈடுபட்டுள்ள அறிஞர்கள் ஆகியோர் பற்றிய விளக்கங்களை இந்நூல் விரிவாகத் தந்து நிற்கின்றது.

ஆண்டுக்கு இருமுறை மலரும் ஆய்வு இதழ் ஒன்றினையும் இந்நிறுவனம் வெளியிட்டு வருகின்றது. (Journal of Asian Studies) என்ற பெயரில் இந்த ஆய்விதழின் முதல் இதழ் 1893 ஆகஸ்டு மாத இறுதியில் வெளிவந்துள்ளது ஆசியாவின் பல்வேறு பகுதிகளை சார்ந்த அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள், ஆசியப்பண்பாட்டு ஆய்வு பற்றிய செய்திகள் ஆகியவற்றை இவ்விதழ் தாங்கி ஆண்டிற்கு இருமுறை வெளிவருகின்றது.

இந்நிறுவனத்திற்குரிய. கட்டடங்கள் அமைப்பது போன்ற அடிப்படைப் பணிகளுக்குரிய முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. எட்டு அறிஞர்களைக் கொண்ட ஆட்சிக் குழுவின் மேற்பார்வையில் இந்நிறுவனம் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. முன்னாள் தலைமை நீதிமன்ற நீதிபதி திரு. வி.ஆர். கிருஷ்ண ஐயர் இதன் தலைவராகவும், அண்ணா பல்கலைக் கழகத்துணைவேந்தர் டாக்டர் வி.சி. குழந்தைசாமி இதன் துணைத்தலைவராகவும், தொழிலதிபர் திரு.நா. மகாலிங்கம் பொருளாளராகவும், டாக்டர் பொன். கோதண்டராமன், டாக்டர், ஷு. ஹிக்கோசகா, டாக்டர் ஜி.ஜான் சாமுவேல், டாக்டர் அஹீரா ஹிராகாவா ஆகியோர் ஆட்சிக்குழு உறுப்பினர்களாகவும் அமைகின்றனர்.

இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக டாக்டர் ஷு.ஹிக்கோசகா என்ற ஜப்பானிய அறிஞர் பொறுப்பேற்றுள்ளார். பேராசிரியர் டாக்டர் ஜி.ஜான் சாமுவேல் தமிழியல் துறைத் தலைவராகவும், தமிழிலக்கியக் கலைக் களஞ்சியத்தின் முதன்மைப் பதிப்பாசிரியராகவும் பணியாற்றி வருகின்றார். டாக்டர் க. காந்தி, டாக்டர் வீ.அரசு, டாக்டர் தி.சு. சத்தியம், டாக்டர். இரா. பழநிவேல், டாக்டர் ப.உதயக்குமார், திரு.கி.கணேசன் ஆகியோர் கலைக்களஞ்சிய உதவிப் பதிப்பாசிரியர்களாகப் பணிபுரிகின்றனர்.

# நுகர்வோர் நலன்



**20** அம்சத் திட்டத்தில் 17-வது அம்சம் நுகர்வோர் நலன் காப்பது ஆகும்.

பொது விநியோகத் திட்டத்தை மேலும் பல நியாய விலைக்கடைகளை ஆரம்பித்தல் மூலமும், நீண்ட தூரப் பகுதிகளில் நடமாடும் கடைகளை நிறுவுதல் மூலமும் விரிவுபடுத்துதல். தொழிலாளர்களுக்காகவும் மாணவர் விடுதிகளுக்கும் நியாய விலைக் கடைகளைத் திறத்தல், மாணவர்களுக்குப் பாட நூல்களையும் பயிற்சி நோட்டுப் புத்தகங்களையும் முக்கியத்துவ அடிப்படையில் கிடைக்கச் செய்தல் - நுகர்வோர் நலன் காக்கும் இயக்கங்களை வலுவடையுமாறு உயர்த்துதல். (அம்சம் 17)

தமிழக அரசின் கிராமக் கடைத் திட்டத்தின் கீழ் 1978 முதல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வருவாய்க்கிராமங்களிலும் நியாய விலைக்கடைகள் கூட்டுறவுச் சங்கங்களாலும், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தாலும் ஆரம்பிக்கப்பட்டன. இதுவரை 11,159 கடைகள் திறக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. அதுபோலவே நகரப்பகுதிகளில் 1,492 நியாய விலைக் கடைகளை இம்மாநிலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தி வருகின்றன. ஆக, கூட்டுறவுச் சங்கங்கள் இம்மாநிலத்தின் நகர மற்றும் கிராம பகுதிகளில் மொத்தம் 12,651 நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன.

மேற்கண்ட 12,651 நியாய விலைக்கடைகள் மூலமாகச் சுமார் 85 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் பயனடைகிறார்கள்.

தொழிலாளர்களுக்காக இம்மாநிலத்தில் 181 நியாய விலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுவதுடன் 292 தொழிலாளர் கூட்டுறவுப் பண்டக சாலைகள் தொழிலாளர்களுக்கு நியாய விலையில் பொருட்கள் வழங்குவதற்காகச் செயல்படுகின்றன.

இம்மாநிலத்தில் மாணவர் விடுதிகளுக்காக நியாய விலைக் கடைகள் ஏதும் தனியாகக் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படவில்லை. எனினும் ஒவ்வொரு மாதமும் கூட்டுறவுச் சங்கங்கள் சராசரியாக 880 மாணவர் விடுதிகளிலுள்ள சுமார் 58,600 மாணவர்கள் பயன்பெறும் வகையில் மலிவான விலையில் தரமான நுகர்பொருட்களை விநியோகித்து வருகின்றன. இது தவிர மாணவர்களின் நன்மைக்காக இம்மாநிலத்தில் 2,965 மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் செயலாற்றுகின்றன.

தமிழ்நாட்டில் (சென்னை மாவட்டம்) தவிர கூட்டுறவுச் சங்கங்களின் 3,032 சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாக சுமார் 36,775 பள்ளிகளில் பயிலும் சுமார் 91 இலட்சம் பள்ளி மாணவர்களுக்கு அரசின் பாடநூல்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

சென்னை மாவட்டத்தில் இப்பணி தமிழ்நாட்டு பாட நூல் நிறுவனத்தாலேயே மேற்கொள்ளப்படுகிறது. இதுபோலவே மாணவர்கள் பயன்பெறும் வகையில் மலிவு விலைக் காகிதத்தில் தயாரிக்கப்பட்ட நோட்டுப் புத்தகங்களை 1-10-79 முதல் மாணவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகித்து வருகின்றன.

அரசு தற்போது நியாய விலைக் கடைகளைக் கண்காணித்து அவை சிறப்பாகவும் நல்ல முறையிலும் பணிபுரிந்து பொது மக்களுக்குச் சேவை புரிந்திடும் வண்ணம் வட்ட அளவிலும், ஒவ்வொரு நியாய விலை அங்காடி அளவிலும் கண்காணிப்புக் குழுக்களை அமைத்துள்ளது. அக்குழுக்கள் நுகர்வோர் நலனுக்காகப் பாடுபட்டு வருகின்றன.

## நெசவுத் தொழில் சீர் பெற..

விவசாயத்திற்கு அடுத்தபடியாக, சுமார் 15 இலட்சம் மக்கள் ஈடுபட்டுள்ள நெசவுத் தொழில் மேம்பாடு அடைய தமிழக அரசு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. சுமார்-61 சதவீதம் நெசவாளர்கள் கூட்டுறவுத் துறையில் கொண்டுவரப்பட்டுள்ளனர். கூட்டுறவுத் துறையில் கொண்டுவரப்பட்ட நெசவாளர்களுக்கு வீடுகள்-ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் போன்ற நல்வாழ்வுத் திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது. சுமார் 5000 வீடுகள் கட்டித்தரத் திட்டமிட்டுப் பணிகள் நடக்கின்றன. இறந்தவர் குடும்பத்தினர் 3,000 ரூபாய் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின் கீழ் பெறுகின்றனர்.

## ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்ட மானியத்தொகை அதிகரிப்பு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, ஆதி திராவிடர்களுக்கு வீடு ஒன்று ரூபாய் 6,000 மதிப்பீட்டுச் செலவில் கட்ட அரசு முடிவெடுத்துள்ளது. இதில் பயன் பெறுவோரின் உழைப்பின் பங்கு ரூ. 750-ஆகும். அரசு முன்னர் மானியமாக ரூபாய் 3250 வழங்கியது. இது, தற்போது ரூபாய் 5250-ஆக உயர்த்தப்படுகிறது. வீடு ஒன்று 201 சதுர அடி பரப்பளவில் கட்டப்படும்.





# உங்களாலும் முடியும்

“இஃப்கோ’ என வழங்கும் இந்திய உழவர் உரக் கூட்டுறவின் சார்பில், ‘உங்களாலும் முடியும்’ என்னும் முதல் வண்ணத் திரைப் படத்தின் வெளியீட்டு விழா, 23-2-84 அன்று சென்னை தியாகராய நகரில் உள்ள ஒரு ‘மினி’ திரையரங்கில் நடந்தது.

புதுடில்லி, இஃப்கோ விற்பனை இயக்குநர் டாக்டர் கே.கே.எஸ். சௌஹான் விழாவிற்குத் தலைமை வகித்து, தமிழில் தயாரிக்கப்பட்ட வண்ணப் படத்தைப் பார்த்து விட்டு வெகுவாகப் பாராட்டினார்.

படத்தில் நடித்த கலைஞர்களுக்குப் பரிசுகள் வழங்கிய வேளாண்மைத் துறை இயக்குநர் திரு யு. எஸ். நடராசன் இ.ஆ.ப. பேசுகையில், ‘‘தமிழ்நாட்டில் ஒரு ஏக்கருக்கு 2 டன் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளில் ஒரு ஏக்கருக்கு 5 டன் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தக் குறியீட்டை நம்மாலும் எட்ட முடியும். நல்ல உரமிட்டு, உழைப்பைப் பயன்படுத்தினால் அமோக விளைச்சலை நாமும் பெற முடியும்’’ என்று குறிப்பிட்டார்.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு டி. எம். ஆறுமுகம், இ.ஆ.ப., ‘டான்ஃபெட்’ தனி அலுவலர் திரு எம்.கனகசபாபதி, இஃப்கோ மாநில விற்பனை மேலாளர் திரு வி. முருகேசன், பெங்களூர் மண்டல மேலாளர் திரு சின்முல்குண்டு ஆகியோர் இஃப்கோவின் பணிகளை எடுத்துக் கூறினார்கள்.

இஃப்கோ உரத்தின் இன்றியமையாத் தேவையை உணர்த்தும் ‘உங்களாலும் முடியும்’ என்ற வண்ணத் திரைப்படத்தின் கதை வசனத்தை எழுதி இயக்கி இருப்பவர் திரு ஏ. கே. வேலன். 45 நிமிடம் ஓடும் இந்தப் படத்தில் குலதெய்வம் இராசகோபால், காந்திமதி, சுமதி மற்றும் பலர் நடித்துள்ளார்கள்.

கிராம ஏற்புத் திட்டத்தின்கீழ் ‘இஃப்கோ’ இந்தியாவில் 560 கிராமங்களைத் தத்து எடுத்துள்ளது. இவற்றுள் தமிழ்நாட்டில் 14 கிராமங்கள் அடங்கும்.

## ‘இஃப்கோ’ என்றால் என்ன?

‘இஃப்கோ’ எனப்படும் இந்திய உழவர் உரக் கூட்டுறவு - ஆசியாவிலேயே ஒரு மிகப் பெரிய உரக் கூட்டுறவு நிறுவனமாகும். இந்தியாலேயே இரசாயன உரங்களை உற்பத்தி செய்யும் ஒரே கூட்டுறவு நிறுவனம்-இஃப்கோ.

இந்த நிறுவனத்தில் இந்தியாவிலுள்ள 16 மாநிலங்களைச் சேர்ந்த 28,000-க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் பங்கு மூலதனம் செலுத்தி அங்கத்தினர்களாக இருக்கின்றன.

தமிழ்நாட்டில் மொத்தம் 2401 கூட்டுறவுச் சங்கங்கள் ‘இஃப்கோ’வில் பங்குத் தொகையாக ரூ. 1 கோடி செலுத்தியுள்ளன.

— பி. வி. ஜி.

## துணுக்குகள்... துணுக்குகள்...

## பாரிசில் தமிழ்ச்சுவடிகள்

பாரிசில் 375 தமிழ்ச்சுவடிகள் உள. வெளிநாட்டில் சுவடிகள் ஆமைபோன்று, யாளி போன்று உள்ள கலை நோக்கத்தோடு அவை செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்திலிருந்து ஆச்சாரிகள் மரத்தைக் கொண்டுபோய் இலண்டனில் கப்பல் கட்டினார்கள். அந்தக் கப்பல் தமிழகம் வந்தபோது குமரி மாவட்டக் கடற்கரையில் உடைந்து போயிற்று. அதன் நினைவாக இன்றும் அந்தப் பகுதியில் பிப்ரவரி 4-ந் தேதியைக் கொண்டாடி வருகிறார்கள்.

## நியாய விலைக்கடைகளில் சோயாபீன்

கடந்த சில ஆண்டுகளாகப் பொது விநியோக முறையில் குடும்ப அட்டைகளின் பேரில் பாமோலின் எண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. இந்த பாமோலின் எண்ணெய் மலேசியா நாட்டிலிருந்து மத்திய அரசால் இறக்குமதி செய்யப்பட்டு மாநிலங்களுக்கு வழங்கப்படுகிறது.

தற்போது மலேசியா நாட்டில் ஏற்பட்டுள்ள பெருவெள்ளம் காரணமாக பாமோலின் உற்பத்தி குறைந்துள்ளது. அதன் காரணமாக பாமோலின் இறக்குமதி மிகவும் குறைந்துள்ளது.

நம்முடைய தேவைக்குத் தகுந்தவாறு பாமோலின் எண்ணெய்யை இறக்குமதி செய்ய முடியவில்லை. ஆதலால் மத்திய அரசு பிற நாடுகளிலிருந்து சோயாபீன் எண்ணெய்யை இறக்குமதி செய்து மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யத் தொடங்கியுள்ளது.

சோயாபீன் எண்ணெய் சுத்திகரிக்கப்பட்ட நல்ல எண்ணெய்யாகும். அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் போன்றவை அதிக அளவில் சோயாபீன் எண்ணெய்யைத்தான் சமையல் எண்ணெய்யாகப் பயன்படுத்துகின்றன.

பாமோலின் எண்ணெய்யைக் காட்டிலும் சோயாபீன் எண்ணெய் சத்துள்ளது.

இக்காரணங்களால், மத்திய அரசிடமிருந்து பெறப்படும் சோயாபீன் எண்ணெய் நியாய விலைக் கடைகள் மூலம் மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

பொதுமக்கள் சோயாபீன் எண்ணெய்யைத் தயக்கமில்லாமல் வாங்கிப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## தொழில் வளம்

அரசு மேற்கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் விளைவாகத் தமிழ்நாட்டில் தொழில் வணிகத்துறையிடம் பதிவுச் சான்றிதழ் பெற்றுள்ள சிறு தொழில்களின் எண்ணிக்கை 1978 மார்ச் இறுதியில் 18,000 ஆக இருந்தது. இது 1983 மார்ச் இறுதியில் 46,000 ஆக உயர்ந்துள்ளது. பெருந் தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் ஆண்டுக்கு சுமார் 75 வீதம் தொடங்கப்படுகின்றன.

தமிழ் நாட்டின் தனி நபர் வருமானம் 1970-71-ல் ரூபாய் 590 ஆக இருந்தது. 1983ல் இது ரூபாய் 1315 ஆக உயர்ந்துள்ளது.

தமிழ் நாட்டின் சராசரி உற்பத்தி விகிதம் 1970-ல் 137 ஆக இருந்தது. 1983ல் இது 172 ஆக உயர்ந்துள்ளது. இந்தியாவின் மொத்த உற்பத்தி அளவில் தமிழக அரசின் பங்கு 1960-61ல் 8 சதவிகிதம்; 1983ல் இது 10 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

## சத்திய மூர்த்தி வாஞ்சி ஐயர் விஜயராகவாச்சாரியார் அஞ்சல் தலைகள்

இந்திய விடுதலை வேள்வியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட தலைவர்கள், முக்கிய நிகழ்ச்சிகள் குறித்துச் சிறப்பு அஞ்சல் தலைகளைத் தபால்-தந்தித்துறை வெளியிட்டு வருகின்றது. இத் தொடரின் கீழ், தமிழகத் தியாகிகளான சத்திய மூர்த்தி, வாஞ்சி ஐயர், சேலம் விஜயராகவாச்சாரியார் ஆகியோரது உருவப் படம் பொறித்த அஞ்சல் தலைகள் வெளியிடப் பட உள்ளன. நாடு விடுதலையடைந்த பொன் விழா ஆண்டான 1997 வரை சிறப்பு அஞ்சல்தலை வெளியீடு தொடரும்.

## நேரு திடலில் ஒளி வெள்ளம்

சென்னையிலுள்ள நேரு விளையாட்டுத் திடலில் ஒளி வெள்ள விளக்குகள் ஏற்றி வைக்கும் விழாவும், 40வது தேசிய கால்பந்தாட்டப் போட்டித் தொடக்க விழாவும் அண்மையில் (15.3.84) சிறப்புற நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பங்கேற்ற இவ்விழாவிற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. யூசுப் அவர்கள், தமிழ்நாடு கால்பந்தாட்டக் கொடியை ஏற்றி வைத்தார். மாநகராட்சி சிறப்பு அதிகாரி திரு கே.சந்திரசூடன் இ.ஆ.ப., வரவேற்புரை ஆற்றினார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள், தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத் தலைவரும் 'சந்தோஷ்' கோப்பைக்கான கால் பந்துப் போட்டி அமைப்புக் குழுத் தலைவருமான திரு பா. சிவந்தி ஆதித்தன் ஆகியோரும் பங்கேற்ற இவ்விழா நிகழ்ச்சித் தொடக்கமாக தமிழ்நாடு கால் பந்தாட்டக் கழகத் தலைவர் திரு ஏ. ஜி. சுப்பராமன் எம்.பி., ஆண்டறிக்கை படித்தார்.

ரூ.25 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள மின் விளக்குகளை ஏற்றி வைத்தும், விளையாட்டுப் போட்டியைத் தொடங்கி வைத்தும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தமிழ்நாடு கால்பந்தாட்டக் கழகத் தலைவர் திரு ஏ.ஜி.சுப்பராமன் எம்.பி. இங்கே திறமையாகச் சில கோரிக்கைகளை முன் வைத்து, நான் அதை நிறைவேற்றுவேன் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் தெரிவித்தார்.

''சட்டமன்றம் நடக்கிறபோது நான் ஏதாவது தொகையைக் கூறிச் செய்வேன் என்று தெரிவிக்க முடியாத நிலையில் சட்டத்தில் கட்டுப்பட்டுள்ளேன்.

''இரண்டாண்டுகளுக்கு முன்பு நான் கூறியதை இங்கே நிறைவேற்றியிருப்பதாகச் சொன்னார்கள். ஒளி வெள்ள விளக்குகள் அமைக்கப்படும் என்று கூறி, முதலமைச்சர் என்ற முறையில் ரூ.25 இலட்சம் ஒதுக்கினேன். இந்த நுணுக்க வேலையை மனநிறைவோடும், கடமை உணர்வோடும், பொறுப்புணர்ச்சியோடும் செய்தவர்கள் பாராட்டுக்குரியவர்கள். இதில் அக்கறை காட்டிய கால்பந்தாட்டக் கழகப் பிரதிநிதிகளுக்கும் ஒத்துழைப்புக் கொடுத்த அதிகாரிகளுக்கும் நான் பாராட்டுத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''விளையாட்டுக்குத் தனி வாரியம் அமைக்கப்படும் என்று நான் முன்பே கூறியிருக்கிறேன். அதற்கு, அருமைச் சகோதரர் சிவந்தி ஆதித்தன் தலைவராக இருப்பார். அது விரைவில் நல்ல முறையில் நிறைவேறும். அது எந்தக் கட்டுப்பாட்டுக்கும் உள்ளாகாமல், விரிவாக, பரந்த இந்தியத் துணைக் கண்டத்திலேயே சிறந்து விளங்க வேண்டும், வழிகாட்டும் வாரியமாகச் செயல்பட வேண்டும் என்பது என் ஆசை.

''நேரு தங்கக் கோப்பை பந்தய ஆட்டம் 1986ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னையில் நடத்த சம்பந்தப்பட்டவர்கள் அனுமதித்துவிட்டதாகத் திரு சுப்பராமன் கூறினார். அவர் சொன்ன கோரிக்கைகள் 1986-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டுவிடும். எவ்வளவு செலவானாலும் அதை நிறைவேற்றி என் கண்ணால் பார்ப்பேன்.

''தமிழ்நாட்டின் தலைநகரில் 'இன்டோர் ஸ்டேடியம்' ஏற்படுத்த வேண்டும் என்பது எனது பேராசை. அதையும் அடுத்தபடியாகச் செய்வேன்.

'தமிழக அரசு, விளையாட்டுத் துறைக்காக 1976-77ல் ரூ. 12 இலட்சமே செலவழித்தது. இன்றைய தினம் ரூ.165 இலட்சம் செலவழிக்கிறது.

''எந்த இளைஞன் ஒரு விளையாட்டில் அக்கறை காட்டிச் சிறப்புப் பெறுகிறானோ, அந்த இளைஞனுக்குப் பயிற்சிக் காலத்திலேயே இலவசமாகச் சம்பளம் கொடுத்து, வசதியும் செய்து தரப்படும். நான் ஒரு விளையாட்டு விழாவில் கலந்துகொண்ட போது ஒரு சகோதரியைப் பார்த்தேன். விளையாட்டில் தேர்ச்சி பெற்ற அவர் ''வேலை இல்லை; உடலுக்கு ஆகாரம் இல்லை; ஆண்களுக்குக் கொடுப்பது போலச் சம்பளம் எங்களுக்கும் கொடுக்கக் கூடாதா'' என்று கேட்டார்; இனிமேல் இருசாராருக்கும் வழங்கப்படும்''.

கால்பந்தாட்டக் கழகச் செயலாளர் திரு சி.ஆர்.விசுவநாதன் நன்றி கூறினார்.

பின்னர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்தியக் கால்பந்தாட்டக் கழக நிர்வாகிகளும், தமிழக அணி வீரர்களும், குஜராத் அணிவீரர்களும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

விழாவுக்கு வந்திருந்த திருமதி தள்ளியம்மாள் என்கிற 76 வயது மூதாட்டி, மாண்புமிகு முதல்வரைச் சந்தித்து, தான் சேர்த்து வைத்திருந்த ரூ.5,001 ஐ முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்ட நிதிக்காக வழங்கினார். அதை நன்றிப் பெருக்கோடு பெற்றுக்கொண்ட மாண்புமிகு முதல்வரைப் பார்த்து, பழைய வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த அந்த அம்மையார் ''ஏழை எளியதுங்களுக்குச் சோறு போடற நீங்க மவராசனா இருக்கணும்; திருப்பதி வெங்கடாசலபதி எப்பவும் ஒங்களுக்குத் துணையிருப்பார்'' என்று உளமுருகக் கூறி ஆனந்தக் கண்ணீர் உகுத்தார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அம்மையாரின் விழிநீர் துடைத்தார்.

இதன்பின், கால்பந்தாட்டப் போட்டியைத் துவக்கி வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களும் மற்றும் அமைச்சர்களும் விளையாட்டைக் கண்டு களித்தனர்.

நிகழ்ச்சித் தொகுப்பு :
**'இந்திரன்'**





# ஊட்டச்சத்தினை உணர்த்திட ஒலி-ஒளி ஊர்தி!

"மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, வட ஆர்க்காடு, திருநெல்வேலி, செங்கல்பட்டு ஆகிய ஆறு மாவட்டங்களில் ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் நிறைவேற்ற 1980ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டு, முதல் மூன்று மாவட்டங்களில் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதை உலக வங்கி பாராட்டியுள்ளது'' என்று தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. கு. சொக்கலிங்கம், இ. ஆ. ப. செய்தியாளர்களிடையே கூறினார்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்ட ஒலி-ஒளி ஊர்தியின் தொடக்க விழா 28.3.84 அன்று கொண்டாடப்பட்டது.

ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி. சூசன் மாத்யூ, இ.ஆ.ப., அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் சில தகவல்களைக் கூறினார்:

''1500 பேர்களுக்கு ஒரு சமூக சத்துணவு மையம் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழந்தையும் மாதம் ஒருமுறை நிறுத்துப் பார்க்கப்படுகிறது. அதிக ஊட்டச் சத்து தேவைப்படும் குழந்தைகளுக்குக் கூடுதல் ஊட்டச்சத்து கொடுக்கப்படுகிறது.

''முதல் மூன்று மாவட்டங்களில் இத்திட்டத்தின் மூலம் 3.1 இலட்சம் குழந்தைகளும் 25 ஆயிரம் தாய்மார்களும் பயனடைந்துள்ளனர்''.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு கு. சொக்கலிங்கம் இ. ஆ. ப. செய்தியாளர்களிடம் பேசும் போது, தெரிவித்த கருத்துக்களாவன:

''56 கோடி ரூபாயிலான இந்த ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தில், தற்போது 20 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. திட்ட முடிவு ஆண்டான 1985 ஆம் ஆண்டுக்குள் மேற்குறிப்பிட்ட எல்லா மாவட்டங்களிலும் விரிவுபடுத்தப்படும்.

''தற்போது ஆறு மாதம் முதல் 36 மாதம் வரையிலான குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் சத்துணவு அளிக்கப்பட்டு வருகிறது. 1000 சுகாதார மையங்களும், 5600 துணைச் சத்துணவு மையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாகப் பயிற்சி பெற்ற 4000 பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.

சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் கபாலி, மக்கள் நல் வாழ்வுத்துறைச் செயலாளர் திரு சண்முகம் இ.ஆ.ப., ஆகியோர் இந்தத் திட்டத்தின் மூலம் நடத்தப்படும் பல்வேறு பணிகள் குறித்து செய்தியாளர்களிடம் விளக்கினார்கள்.

இந்த ஒலி-ஒளி ஊர்தி மூலம் கிராமப்புற மக்களிடம் சத்துணவு தயாரித்தல், பிள்ளைப் பேற்றுக்கு முன்பும், பின்பும் தாய்மார்கள்கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகள், சுகாதார மருத்துவ நடவடிக்கைகள் ஆகியவை பற்றி விளம்பரம் செய்யப்படும்.

இந்த அழகிய ஊர்தியில் என்னென்ன இருக்கின்றன? இதோ! பட்டியல்;



வண்ணத் தொலைக்காட்சி, வீடியோ கேசட் ரெக்கார்டர், 16 மி.மீ. திரைப்படக் கருவி, 35 மி.மீ. திரைப்படம் மற்றும் ஸ்லைடுகள் காட்டும் கருவி, வானொலி, கேசட் டேப் ரெக்கார்டர், இசைத்தட்டு போட உதவும் சாதனங்கள், மின்சார ஜெனரேட்டர், மின்சாரத்தைக் சேமித்து வைக்கும் சாதனம், ஒலிபெருக்கி இவ்வளவும் உள்ளன!

இந்த ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டத்தின் மூலம் பாப்பாவின் பார்வையில், குழந்தைகள் சிரிக்கட்டும், இனி நான் ஏமாறமாட்டேன் - முதலான வண்ணப் படங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் பத்து நிமிடம் ஓடும். இந்தப் படங்கள் கிராமப்புறங்களில் காட்டப்படும்.

—பி. வி. கி





# தமிழ்ப்பல்கலைக்கழகத் திருவிழா

மார்ச் திங்கள் 24ஆம் நாள்!

தஞ்சை நகரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. திரும்பிய பக்கமெல்லாம் தோரணங்கள் காட்சி தந்தன. தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக் கழக வளாகம் புதுப் பொலிவுடன் திகழ்ந்தது. அதன் பேராசிரியர்கள், ஊழியர்கள், அலுவலர்கள் அனைவரும் பம்பரம்போல் சுழன்று வந்தனர்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் சார்பில், திரு.ச.தண்டபாணி தேசிகர், திரு தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார், திரு சு.மு.கௌரி சங்கர ஸ்தபதி, திரு. திருவெண்காடு ப.சுப்பிரமணிய பிள்ளை, அமரர் சேவியர் எஃச் தனிநாயக அடிகள் ஆகிய ஐவருக்கும் இலக்கிய முதுமுனைவர், அறிவியல் முதுமுனைவர் ஆகிய சிறப்புப் பட்டங்கள் அளிக்கும் விழாவும், 'பாரதசக்தி மகா காவியம்' என்னும் நூலை எழுதிய கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்களுக்கு ரூ. 1,00,001 கொண்ட ராஜராஜன் விருது வழங்கு விழாவும்தான் இந்த எழுச்சிக்குக் காரணம்.

தஞ்சாவூர் கலைக்கூடத்தில் உள்ள சங்கீத மகால் என்றழைக்கப்படும் இசை அரங்கம் வண்ண விளக்குகளாலும் மலர்த் தோரணங்களாலும் அணிசெய்யப்பெற்றிருந்தது. பன்னீர் மணம் அரங்கம் முழுதும் பரவிக் கொண்டிருந்தது. 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்ற குறிக்கோளுடன் தமிழ்ப் பல்கலைக் கழகச் சின்னம் மேடையின் நடுவே காட்சி தந்தது.



கவியோகி சுத்தானந்த பாரதியார்.
இராசராசன் விருது பெறுகிறார்.

தமிழ்ப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், அழைப்பாளர்கள், பத்திரிகையாளர்கள் அனைவரும் ஒவ்வொருவராக அரங்கில் வந்து அமரத் தொடங்கினர். அவர்களை எல்லாம் வாழ்த்தி வரவேற்பதுபோல் நாயன இசை முழங்கியது.

10 மணியளவில் கௌரி சங்கர ஸ்தபதி - பட்டமளிப்பு விழா மண்டப மேடையில் உரிய கவுன் அணிந்தவாறு நுழைந்தார். அவரை அடுத்து, ராஜராஜன் விருது பெறும் கவியோகி-சுத்தானந்த பாரதி கவுன் அணிந்துவந்தார். பின்னர் முன்னாள் கல்வி அமைச்சர் திரு தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் வந்தார். அடுத்து வித்வான் தண்டபாணி தேசிகர் வந்தார். அடுத்து சக்கர நாற்காலியில் அமர்ந்தவாறு நாதசுர மேதை திருவெண்காடு டி. பி. சுப்பிரமணிய பிள்ளை வந்தார். அந்த நாற்காலியை அவரது மகன் திரு.டி. பி.எஸ்.சுந்தரநாதன் இயக்கிக் கொண்டு வந்தார். இறுதியாக தனிநாயக அடிகளின் சகோதரி மகன் திரு ராஜன் பிலிப் பிள்ளை வந்து சேர்ந்தார்.

சரியாக 10.25 மணி அளவில், கலைக்கூடத்திலிருந்து பல்கலைக் கழக வேந்தர் ஆளுநர் அவர்களும், இணைவேந்தர் கல்வி அமைச்சர் அவர்களும், துணை வேந்தர் அவர்களும் பல்கலைக் கழகப் பதிவாளர், சிண்டிகேட் உறுப்பினர்கள், செனட் உறுப்பினர்கள் அனைவரும் ஊர்வல

மாகப் புறப்பட்டு 10.30 மணிக்குப் பட்டமளிப்பு விழா மண்டபத்தின் உள்ளே நுழைந்தனர்.

தண்டுகள் முன் செல்ல-பாண்டு வாத்திய இசை முழங்க, வெண் கொற்றக் குடையுடன் வேந்தர் அழைத்து வரப்பட்ட அருங் காட்சி பண்டைத் தமிழ் மன்னரின் பவனியை நினைவுறுத்தியது.

அப்போது அரங்கில் அமர்ந்திருந்தோரும் பட்டம் பெறுவோரும் எழுந்து நின்று மரியாதை செய்தனர்.

சில வினாடிகளில் வேந்தரும் அவருடன் பவனிவந்த ஏனையோரும் பட்டமளிப்பு மண்டபத்திற்குச் சென்று தமக்குரிய இருக்கைகளில் அமர்ந்த பின்னர் தான் பார்வையாளர்கள் தங்கள் இருக்கைகளில் அமர்ந்தார்கள்.

உடனே தமிழ்த்தாய் வாழ்த்து ஒலித்தது. அனைவரும் எழுந்து

### கிராமப் புறங்களுக்கு சூரிய சக்தி

கிராமங்களில் வீடுகளைச் சூரிய சக்தியால் வெப்பப்படுத்துவதற்கான அமைப்பு ஒன்றை மாஸ்கோ கட்டட இயல் கழகம் உருவாக்கியுள்ளது.

இந்த வீட்டுக்கு வேண்டிய வெப்பத்தைப் பாதுகாக்கும் பிரிவின் பரப்பளவு 10 அல்லது 20 சதுர மீட்டர்களாகும். இதன் படுகையில் "கிராவல்" கற்கள் பரப்பப்பட்டுள்ளன.

சூரிய சக்தியால் கிடைக்கும் வெப்பத்தை இந்தக் கற்கள் [illegible]க்கொண்டு, ஒரு மாதம் [illegible] வெப்பத்தைப் பாதுகாக்[illegible] இந்த அறையின் வெப்ப[illegible] காற்று, குளிர் காலத்தில் வீட்டின் மற்ற அறைகளுக்கு [illegible] செலுத்தப்பட்டு [illegible] களின் வெப்பநிலை [illegible]படுகிறது.



**வேந்தர், இணைவேந்தர் ஆகியோரைத் துணைவேந்தரும் செனட்-சிண்டிகேட் உறுப்பினரும் அழைத்து வருதல்.**

மரியாதை செய்தனர். அந்தப் பாடலைப் பார்வையாளரில் சிலர் மெதுவாகப் பாடவும் செய்தனர்.

சிறப்புப் பட்டம் பெறுவோரின் சிறப்பம்சங்கள் - எடுத்துச் சொல்லப்பட்டன. சிறப்புப் பட்டம் எதற்காக வழங்கப்படுகிறது என்பதற்குரிய விளக்கமாக அது அமைந்திருந்தது.

இலக்கிய முதுமுனைவர் என்ற சிறப்புப் பட்டம் பெறும் திரு ச.தண்டபாணி தேசிகர் அவர்களை, க. வெள்ளை வாரணன் அவர்களும், திரு சு. மு. கௌரி சங்கர ஸ்தபதி அவர்களை, திரு கே.எம்.வெங்கடராமையா அவர்களும், திரு.திருவெண்காடு ப. சுப்பிரமணியபிள்ளை அவர்களை பேராசிரியர் ஆ. சி. இராமன் அவர்களும், அமரர் சேவியர் எஃச் தனிநாயக அடிகளைப் பேராசிரியர் ம.சண்முக சுப்ரமணியம் அவர்களும், அறிவியல் முது முனைவர் என்னும் பட்டத்தைப் பெறும் திரு.தி.சு.அவினாசிலிங்கம் செட்டியார் - அவர்களை, பேராசிரியர் ஆ.சுப்பிரமணியம் அவர்களும் முன்னிலைப் படுத்தினர்.

பல்கலைக் கழக வேந்தர் மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல்.குரானா அவர்கள் இந்தச் சிறப்புப் பட்டங்களை அளித்தார். திருவெண்காடு சுப்ரமணிய பிள்ளை அவர்கள், உடல் நலக் குறைவின் காரணமாக எழுந்து வர முடியாமல், சக்கர நாற்காலியில் கொண்டுவரப்படுவதைக் கண்ட வேந்தர் அவர்கள், தமது இருப்பிடத்தை விட்டு, அவரது அருகில் சென்று பட்டத்தை வழங்கிய காட்சி அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

பின்னர் இணைவேந்தர் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் பட்டமளிப்பு விழாப் பேருரையாற்றினார்.

அடுத்து, மாமன்னன் இராசராசன் தமிழ்ப் படைப்பிலக்கிய உலகப் பரிசு (1983-84) பெறும் கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்களின் சிறப்பைக் குறித்தும், அவரது பாரதசக்தி காவியம் பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றதற்குரிய காரணங்களையும் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு வ. அய்.சுப்பிரமணியம் எடுத்துரைத்தார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மாமன்னன் இராசராசன் விருதினைக் கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்களுக்கு வழங்கினார். அப்போது அதைப் பாராட்டி, பார்வையாளர்களின் மத்தியில் எழுந்த கர ஒலி அடங்குவதற்கு 5 நிமிடங்கள் ஆயின.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு பல்கலைக்கழக வேந்தர் மேதகு ஆளுநர் 'அவை கலையலாம்' என ஆணையிட்டார். பதிவாளர், செனட் - சிண்டிகேட் உறுப்பினர் புடைசூழ, வேந்தர்-இணை வேந்தர்-துணைவேந்தர் - அனைவரும் ஊர்வலமாகப் புறப்பட்டுச் சென்றனர்.

''பாரதியார் காலத்து மனிதர் சுத்தானந்த பாரதியார்; பாரதி வ.வே.சு.அய்யர், அரவிந்தகோஷ் போன்றவர்களின் சமகாலத்தவர் சுத்தானந்த பாரதி. அவர் எழுதியுள்ள காவியம் சுதந்தரப் போரின் எழுச்சியை வீறுடன் எடுத்துச் சொல்கிறது. அவருக்கு இந்த விருது வழங்கப் பெற்றது நியாயம் என்று ''அழைப்பாளர்களில் பலர் பேசிக் கொண்டது காதில் விழுந்தது.

**— எஸ். சண்முகசுந்தரம்**

# தமிழவேள் தனிமாண்பு



**ந. மு. வேங்கடசாமி நாட்டார்.**

**தமிழவேள் உமாமகேசுவரனார் குறித்து நாவலர் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி இது**

செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள், திரு. த. வே.உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்னும் அரசர்க்குரிய பண்புகள் இயல்பிலே அமைவரப்பெற்றவர். அவர், செல்வம், பதவி, ஆணை என்பவற்றிற், பிறர் எத்துணைச் சிறந்தோராயினும் அவை கருதியே அவர்க்கு வழிமொழிதலுடையரல்லர்; செய்தக்க செய்யாக் குறையோ, செய்தக்க வல்லன செய்யுங் குற்றமோ அவர்பாற் காணின் அவர் கண்ணெதிரே கழற்றுரை கூறித் தெருட்டு நீர்மையர்; முற்கூறிய மூன்றுமில்லாரை அவையின்மையேதுவாக மீக்கூறுதலுடையருமல்லர்; அவர்பாற் கடப்பாடறியும் பண்புடைமை காணின் அவர்க்கு வழிமொழிதலுஞ் செய்வர்.

மற்று, எனக்கிது செய்கவென எக்காலத்தும் யாரொருவர் கண்ணும் யாதொன்றனையும் இரத்தலறியார்; ஒல்லுவதொன்றனைப் பிறர் இரந்தவழி அதனை மறுத்தலுமறியர்ர்; இன்னவாற்றால், புறப்பாட்டிலே, நம்பி நெடுஞ்செழியனைப் பேரெயின் முறுவலார் கூறிய ''வலியரென வழிமொழியலன், மெலியரென மீக்கூறலன், பிறரைத் தான் இரப்பறியலன், இரந்தோர்க்கு மறுப்பறியலன்'' என்னும் ஏத்துரைகள் நம் தமிழவேளுக்கும் நன்கியையுமென்க.

மற்று சால்பு என்னும் பொறையினைத் தாங்கிய தூண்களென வள்ளுவனார் தெள்ளியுரைத்த அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐங்குணங்களும் தமிழவேளை அணிசெய்யாநின்றன. ''பெருமை பெருமித மின்மை'' என்னும் அறிவுறூக்கண்டு அவர் அடங்கினரோ, அவரது தருக்கின்மையாளாம் பெருமையை நோக்கி அவ்வுரை யெழுந்ததோ என்னுமாறு அவரது அடக்கம் சிறந்து திகழ்ந்தது. தெய்வப் புலவர் கூறிய வரைவின் மகளிர், கள், சூது என்பன அவரிருந்த திசையினும் சென்றறியாதன. மற்றும்,



''உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்'' ''அறிவறிந்தான் வினையின்மை பழி'' என்னும் மறைமொழிகளைக் கடைப் பிடித்து, இஃது அருமையுடைத்தென்று அசாவாது, வினை செய்தலாவாம் இன்னாமையை இன்பமெனக் கொண்டு இடையறாது முயலும் அவரது மீக்கோளும் ஊக்கமும் விளம்புதற்கரியன. அவர் அங்ஙனம் முயறற்கு மேற்கொண்ட வினைதான் தண்டமிழ் புரத்தலே. இரவன் மனையில் எழுந்த குழவியாம் கரந்தைத் தமிழ்ச் சங்கம் இப்பொழுது கந்தனையனையவர் கலை பயில் கழகமும், பந்தினை யிளையவர் பயிலிடமும், மன்றமும், பொதியிலும் மருத்துவக் கூடமும், ஆர் தமரற்றோர் சேர்தருமில்லமும், பட்டிமண்டபமும், பரந்த நூல் நிலையமும், பிறவுமாம் உறுப்புகள் திறவிதிற்பெற்ற பேரரண் உற்ற பெற்றிதான் செந்தமிழ்ப் புரவலர் நந்தா முயற்சியின் வந்ததோர் பயனேயன்றோ? அவர் எவ்வழிச் செல்லினும், யாருடன் பேசினும், யாது புரியினும் யாவும் தமிழின் பொருட்டே யாகும்.

இங்ஙனம் சிந்தையும், உரையும் செய்கையு மெல்லாம் செந்தமிழ்க் காக்கிய திண்டிறற் குரிசில் செந்தமிழ்ப் பயனாம் சிவநெறி பேணுந் தவமுடையாருமாயினர். கனிந்த அன்பின் நனைந்த வுள்ளமொடு திருப்பதி தோறும் விருப்புடன் நடந்து கண்ணுதற் கடவுளை நண்ணி வழிபடும் ஆர்வம் இவர்பால் அளவின்றாயது. ஐயாறப்பர் திருவுலாப்போதும் ஏழ்பதிவிழாவில் மெய்ப்பையின்றியும் மேலுடையின்றியும் வெம்மை மீதுறத் தன்மையின் நடக்கும் இவரது எளிய தகைமையைப் பல்லாயிரவர் பார்த்துளம் நெகிழ்வர். மற்றும், யாவர்க்கும் இன்னா செய்யாமையும், எளியார்பால் இரக்கங் கோடலும், கற்றாரைக் காதலித்தலும், நட்டாரை உயர்வு கூறலும், பெரியோரைப்பேணியொழுகலும் முதலிய இவர் பண்பனைத்தும் உரையில் அடங்குவவல்ல. சுருங்க உரைக்கின் இவரது வாழ்க்கை ஒரு கல்விக்கூடம்; உயர்நிலை விரும்புமொருவன் அதனிற் புகுந்து பயிறல் வேண்டும்.

ஆ! இப் பெருந்தகையாம் அருந்துணையைப் பிரிந்தேயும் இருந்தேம் யாம்! எம் அன்பிருந்த வாறென்னே!

## வளர்க தமிழ்

ஆசிரியர் : குலோத்துங்கன்

வெளியீடு: பாரதி பதிப்பகம்,
தியாகராய நகர்,
சென்னை-17.

விலை ரூ. 6-00 பக்கம் 111

மரபுக் கவிதை மலர்களால் உருவாக்கப் பெற்றது இந் நூல். பல்வேறு பொருள்களைக் குறித்து நூலாசிரியர் பாடியிருந்தாலும், அன்னைத் தமிழ் குறித்துப் பாடியுள்ள கவிதைகள் இத்தொகுப்பில் அதிக அளவில் இடம் பெற்றுப்பது நூலாசிரியரின் தமிழார்வத்தையும் தமிழ்த் தொண்டையும் எடுத்துச்சொல்கிறது.

'பாவலனல்லன் நான்' என்று அறிமுகக் கவிதையைத் தொடங்கி, 'பாரதி கண்ட பாரதம்' என்னும் கவி அரங்கத் தலைமைக் கவிதையுடன் நூலை முடித்திருக்கும் ஆசிரியர் தாம் சிறந்த கவிஞர் என்பதை நிரூபித்திருக்கிறார்.

அகிலமெல்லாம் அறிவியல் வளர வேண்டும் என்பதும், அன்னைத் தமிழில் அறிவியல் கலைகள் கற்றுத்தரப்படல் வேண்டும் என்பதும் நூலாசிரியரின் பேரவாவாகத் திகழ்கிறது.

''ஊசிசெயும் சிறு தொழிலின்
நுட்பம் கூற
ஒருகோடி நூல் வேண்டும்
தமிழில்'' — என்னும் வரிகளின் வாயிலாக இதனை உணர முடிகிறது.

''எண்ணின் இனிப்பது தமிழாம்-
எங்கள்
இன்பத் தமிழ்மொழி
வாழ்க.
கண்ணின் மணியெனக் காப்போம்
வாழ்வுக்
கடலில் எமக்கது தோணி''

''இன்பத் தமிழ் அலவோ-எம
தெண்ணப் பெருவெளி
தன்னில் ஒளிர் நிலா''

என்னும் வரிகள் நூலாசிரியரின் தமிழ்ப்பற்றை எடுத்தோதுகின்றன.

பாரதி, பாரதிதாசன், தந்தை பெரியார் ஆகிய பெருமக்களைக் குறித்துத் தீட்டப்பட்டுள்ள கவிதைகள் பேசா ஓவியங்களாகக் காட்சி தருகின்றன. இயற்கைப் பொருள்களைக் குறித்துப் புனையப்பட்டுள்ள கவிதைகளில் இயற்கைத் தாயின் எழில் நடனத்தை நம்மால் காண முடிகிறது.

இந்தக் கவிதை நூல்-கன்னல் சாறாக இனிக்கிறது! கவிதை நெஞ்சங்களை நனைக்கிறது.

—தமிழ்ப்பித்தன்

## மயில்தோகை

ஆசிரியர்: கவிஞர் பல்லவன்.
வெளியிட்டோர்:
குமணன் பதிப்பகம்,
'தமிழ்க்குடில்',
29, திருவள்ளுவர் நகர்,
திருக்கழுக்குன்றம்.
பக்கம்:80. விலை: ரூ.6.00

குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா அணிந்துரையோடும், புலவர் எம்.எஸ்.மணி ஆய்வுரையோடும் வெளியிடப்பட்டுள்ள இந் நூலில் நறுக்கி வைத்த கரும்புத்



துண்டாக 41 கவிதைகள் அடங்கியுள்ளன. அத்தனையும் அரும்புச் சிறுவர் சிறுமியர்க்கென்றே ஆக்கப்பட்டவை.

எதுகை, மோனை கெடக் கூடாதே என்று கடினமான சொற்களைப் பயன்படுத்தாமலும், புதுக்கவிதைக் காலமாயிற்றே என்று அந்தவகையில் போய் விடாமலும் மிக நேர்த்தியாக - இளஞ்சிறார்களுக்குப் புரியும் எளிய சொற்களைக் கொண்டே தம் கவிதைகளைத் தொடுத்திருக்கிறார் நூலாசிரியர்.

நாய், பூனை, மயில், கிளி, எறும்பு, அணில், பட்டாம்பூச்சி, பம்பரம், மா, பலா, வாழை, கடல், மழை என்று இளம் நெஞ்சங்களுக்குப் பிடித்தமானவைகளையே இவர் பாடியிருப்பது சிறப்பானதாகும். அது மட்டுமல்ல; தமிழைப் பயிலடா, தந்தை தாய்ப்பேண், முயற்சி செய், துணிந்து நில், நூல் பல கல், சிறுமை பேசேல் என்றும் ஆங்காங்கே காணப்படும் அறிவுரைக் கவிதைகள் மயில் தோகையின் வண்ணப் பிறைகளாக மின்னுகின்றன. 'அகரச் சூடி' அருமையான தொகுப்பு.

சின்னஞ் சிறுசுகள் மட்டுமல்ல; நாமும் கூட ஒருமுறை படித்தாலே உள்ளத்தில் பதிந்துவிடும் உருப்படியான இந்தக் கவிதை நூல் இனிய தமிழறிந்தோர் எல்லோராலும் வரவேற்கப்படும் வகையில் வெளிவந்துள்ளது.

## செந்தமிழ்ச் சோலையிலே

ஆசிரியர்: கவிஞர்
திருச்சி பாரதன்.
வெளியிட்டோர்:
சரவணா பிரசுரம்,
2497, தெற்கு ராஜ வீதி,
புதுக்கோட்டை-622001.
பக்கம்: 168. விலை: ரூ.15.00

சென்னை-திருச்சி வானொலிகளிலே அடிக்கடி உச்சரிக்கப்படும் பெயருக்குச் சொந்தக்காரரான கவிஞர் திருச்சி பாரதன் எழுதிய இன்சுவைப் பாடல்கள் இலங்கும் பேழையே இந்நூல்.

சந்தத்திற்கெனப் பொருளற்ற சொற்களையெல்லாம் பாடல்களில் எடுத்தாள்வது பெருமையாகக் கருதப்படும் இந்நாளிலும் பொருள் பொதிந்த சொற்களால் பாடல்களை இயற்றி இதன் மூலம் நமக்களித்திருக்கிறார் கவிஞர். எடுப்பு, உடன் எடுப்பு, அடிகள் என்ற முறைகெடாத இசைப் பாடல்கள், கவியரங்கக் கவிதை, பாரதி நூற்றாண்டு விழா நினைவாக இயற்றப்பட்ட இசை நாடகம், கப்பலோட்டிய தமிழனின் பெருமை கூறும் இசை நாடகம், பல்வேறு நாடகங்களுக்காக உருவாக்கப்பட்ட பாடல்கள், பக்திப் பாடல்கள் ஆகியவற்றின் தொகுப்பு நூலே இது; அதாவது தேன்கூடு.

சிறுவர்களுக்காக, பொழுது போக்கிற்காக என்றில்லாமல் - தமிழுக்காக, தமிழர்க்காக, தமிழகத்திற்காக என்றெல்லாம் இதிலுள்ள பாடல்கள் படிப்போர் நெஞ்சை நெருடும் வகையிலே அமைந்துள்ளன. தமிழன்னைக்கு இது ஒரு புதிய மணிமாலை என்றே கூறலாம்.

'—ராஜு'



# நாட்டாரின் சங்கப் புலமை

டாக்டர் வ. சுப. மாணிக்கம்

என் ஆசிரியப் பெருந்தகை நாட்டாரையா தமிழாசிரியனுக்கு இன்றியமையாத இருவகைத் திறமும் வாய்ந்தவர். எவ்வகைத் தமிழ் நூல்கள் எவ்வளவு படித்திருந்தாலும் தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு முதலான சங்க இலக்கியக் கல்வி இல்லாதாரைத் திறமான தமிழ்ப்புலமை பெற்றவராகச் சொல்ல முடியாது. ஆற்றுநீர் கடலிற்போய்க் கலக்கின்றது என்றாலும் ஆற்றிற் குளித்தோரைக் கடலிற் குளித்துத் திளைத்தவராகச் சொல்வதுண்டா? சொல்லாலும், பொருளாலும், பண்பாலும், செறிவாலும், நடையாலும் ஓங்கிய சங்கவிலக்கியம் கற்றாரின் புலமையே வேரோடிய தமிழ்ப் புலமையாகும்.

### புலமையும் பண்பும்

ஆசிரியர் நாட்டார் உவர்ப்பற்ற ஆழமான சங்கக் கடலில் திளைத்த புலமைச் செல்வர். சங்கப் புலமையோடு சங்கப் பண்பும் இணைந்த சான்றோர். சங்கப் பண்பு என்பது என்ன? பெருமிதமான உயர்ந்த நெஞ்சம்; தானும் தாழாது பிறரையும் தாழ்த்தாத சால்புடைமை.

செய்யா கூறிக் கிளத்தல்
எய்யா தாகின்றெஞ் சிறுசெந்
நாவே (புறம்.)

என்ற வன்பரணமே சங்கப் பண்பு. நாவலரையாவின் பேச்சு நடை பொதுவழக்கு நடையாக இராது. பாவாணர் வாய்மொழி நடைபோலக் கொச்சையில்லாத் தூய தமிழ்நடையாகவே இருக்கக் கண்டோம். இதற்கு அடிப்படை, அழுத்தமான சங்கத் தோய்வு.

ஆத்திசூடி முதல் அகநானூறு வரை உரைகண்ட உரைவள்ளல் நம் நாட்டார். எந்த நூலுரையிலும் சங்க இலக்கியப் பின்னலைக் காணலாம். பின்னூல்களையும் சங்க நூல்களொடு உறவாக்கும் உரையழுத்தம் இவரிடம் உண்டு.

''அறிவுடை யொருவனை
அரசனும் விரும்பும்''

என்னும் அதிவீரராமரின் வெற்றிவேற்கைக்கு, 'அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்' என்ற புறநானூற்றுக் கருத்தை ஒப்பிட்டுக் காட்டுவர்.

### உரைக்கொடை

நாட்டாரின் சங்கப் பனுவற் புலமையும் ஆராய்ச்சியும் கபிலர், நக்கீரர், கட்டுரைத்திரட்டு, வேளிர் வரலாற்று ஆராய்ச்சி நூல்களாற் பெறப்பெறும். எனினும் தலைசிறந்த சங்கத்தொகையான அகநானூற்றுக்கு நாட்டார் பெருமான் வரைந்த உரை தமிழுக்கு வழங்கிய பெரிய உரைக் கொடையாகும். இந்நூலுக்குச் சில குறிப்பும் உரையும் ஒருசில பாக்கட்கே முன்பு இருந்தன.

பால்வண்ண தேவனான வில்லவதரையன் என்பவன் இந்நெடுந்தொகைக்கு அகவல் நடையில் கருத்துரைத்தான் என்னும்செய்தி காணப்படுகின்றது. எனினும் அது கிடைக்கவில்லை. தொல்காப்பிய வுரை கண்ட பேராசிரியர் குறுந்தொகைக்கு உரை எழுதினார் என்ற வரலாறு உண்டு. நச்சினார்க்கினியர் கலித்தொகைக்கு உரை வரைந்தார். இடைக்கால உரையாளர் எவரும் அகநானூற்றுக்கு முழுவுரை எழுத முன்வரவில்லை.

ஆய்ந்த கொள்கைத் தீந்தமிழ்ப்
பாட்டுள்
நெடிய வாகி அடிநிமிர்ந்
தொழுகிய
இன்பப் பகுதி இன்பொருட்
பாடல்

எனப் பாராட்டப்படும் அக



நானூறு முழுவுரை பெறு தற்குப் பன்னூறாண்டு தவங் கிடந்து, பத்தொன்பதாம் நூற் றாண்டில் மூவரை ஈன்றது. இரு வேங்கடங்கள் என்று சொல்லத் தக்க நாவலர் வேங்கடசாமி நாட் டாரும் கவியரசு வேங்கடாசலம் பிள்ளையும். இவ்விரு புலவரும் உரையிரட்டையர்களாகி உரை எழுதப் பொருட்கொடை செய்த பாகனேரி காசிவிசுவநாதரும் ஒரு காலத்துத் தோன்றியமையால், நீண்ட மலடி மகப்பெற்றாற் போல நெடுந்தொகை என்ற அக நானூறு உரைப்பேறு எய்திற்று.

சங்கப் பனுவல்கட்கு, சிறப் பாக அகநானூற்றுக்கு உரை எழு தப் புகின், இலக்கண இலக்கிய வறிவு மட்டும் போதா. இயற்கை வரலாறு, இசை, குழுமம், காலச் சூழல், பாவியல், அரசியல், தொழிலியல், தொல்லியல் என் றாங்கு அறிவுப்பன்மை வேண்டும். சங்கச் செய்யுளின் கட்டுமானம் அறிவுப் பிணையல் நிறைந்தது. நாட்டார் இளமைக்காலம் தொட்டே பல்லறிஞராக விளங் கினார். ஆதலின் திருவிளையா டற்புராணம், சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு முத லிய தமிழ்ப்பெருநூல்கட்கு உரை எழுதத் தக்கார் ஆனார்.

**உரை விளக்கம்**

நாட்டாரின் சங்கப் புலமைக்கு அகத்திலிருந்து சில பாட்டுக்கள் பார்ப்போம்.

'இரவுத் துயில்மடிந்த தானை' (24) என்றால் போர்க்காலத்தில் படைகள் இரவு தூங்கிப்போயின என்று பொருள் கொள்ளலாமா? அது மறப்படைக்கு இழுக்காகுமே என்று எதிர்நோக்கிய நாட்டார், 'பலநாளும் துயிலின்றிப் போர் செய்து வினைமுற்றும் காலை துயின்ற தானை' என்று விளக்கம் செய்தனர். வெற்றிக்குப் பின் தூங்கின என்பது கருத்து.

மாட மாணகர்ப் பாடமை
சேக்கைத்
'துனிதீர் கொள்கைநங் காதலி
(124)

என்று பாடுவார் இளவேட்ட னார். தலைவன் பிரிந்த காலத்து வெறுப்போடு இருப்பது தலை விக்கு இயல்பு. அவ்வாறாகவும் வெறுப்பு ஒழிந்த காதலி என்று பாடுவது பொருந்துமா? பொருந் தும் என்பர் நம் நாட்டார். தலை வன் பிரிவு தலைவிக்கு வருத்தம் தருவதொன்றுதான் எனினும் குறித்த காலத்தில் வருவேன் என்ற அவன் உறுதிச்சொல்லை நம்பி ஆற்றி வீட்டுக் கடமை செய்வதே மனைமாட்சி எனப் படும். கணவர் சொற்பிழையாத கற்பினால் வருத்தத்தை மாற்றிக் கொண்டவள் என்று தலைவிக்கு ஏற்றம் கூறுவர் நாட்டார். 'பெண்துணை சான்றனள் இவள்' (15) என்ற தாயின் கருத்துக்கு தன் மகள் பெரிய பெண்ணாயி னாள் எனவும் நினைத்தபடி வெளியில் சுற்றித் திரியும்பேதைப் பருவம் கடந்துவிட்டாள் எனவும் விளக்கம் தருவதைப் பார்க் கின்றோம்.

நாவலர் நாட்டார்க்கு நாம் செய்யும் நன்றி சங்கவிலக்கி யத்தை நன்கு மதித்தலும் வழி வழிக் காத்தலும் வரக்கற்றலும் ஆம். புரியாத நடையுடையது சங்கவிலக்கியம் என்ற ஒரு சாரா ரின் அவலக் கருத்து நீர் சுடும் என்பது போன்ற மயக்க மரு ளாகும். இலக்கண வழக்கு முரண் பட்ட அயல்மொழிகளைப் புரி யும் என்று பொருள் கொட்டிப் படிக்கும் தமிழர்கள் தம் தாயி லக்கியம் புரியாது என்று புலம்பு வது பேதைமையுள் எல்லாம் கலப்பற்ற பேதைமையாகும். சங்கத் தமிழை நீர்தெளிந்த கோதாவரிக்கு கம்பர் ஒப்பிடு வதைச் சிறிதேனும் எண்ணுங்கள் புரியும்!

# நாட்டார் நற்றமிழ்

—கவியோகி சுத்தானந்த பாரதியார்

பாட்டாலும் உரையாலும்
பயன்மிகுந்த பைந்தமிழைப்
பயின்று நாளும்

ஏட்டாலும் எழுத்தாலும்
இனியகனி மொழியாலும்
இயம்பி நாளும்

காட்டாறு போலுதவும்
கலையின்பப் புலவர்மணி
கருணை நண்பன்

நாட்டாரின் நூற்றாண்டு
நாடெலாம் கொண்டாட
நன்மையாமே.

(வேறு)

இனித்தாறுக் தேனுடனே
இளநீரும் போலே
கனிச்சாறும் கற்கண்டும்
கலந்தசுவை போலே
தனித்தமிழைத் தருகின்ற
தண்ணளியான் அவனே



அனைத்துலகும் போற்றவனர்
அறிவாளர் பெருமான்!

(வேறு)

வேங்கடசாமி நாட்டார்
வித்தகருள் வேந்தர்
பாங்குடனே பாடுபட்டுப்
பைந்தமிழைக் கற்றார்
ஓங்குபுகழ் பாண்டித்துரை
ஒண்பரிசு நல்கத்
தாங்குபுகழ் மேவியவர்
தமக்குவமை யில்லார்

சங்கநூற் சுவையனைத்தும்
தனதாக்கிக் கொண்ட
சிங்கமணிப் புலவரெல்லாம்
சிறந்தபுகழ் செப்பும்
தங்கமணிப் புலவனவன்
தமிழினிக்கும் தமிழன்
எங்குமவன் இசையோங்கும்
இனியவிழாக் கொழிப்போம்!



# உரைவேந்தர் ந. மு. வே.

ஒப்பற்ற தமிழறிஞரான நாட் டாரையா அவர்கள் நூலாசிரிய ராகவும் உரையாசிரியராகவும் கட்டுரையாளராகவும் ஒளிரும் சிறப்பைத் தமிழுலகம் நன்கு உணரும். நாட்டாரையா உள்ளம் பழந்தமிழ்ப் பண்பாட்டுத் தாகம் கொண்டது. அதன் தாக்கமும் பெற்றது. நாவலர் பெருமானின் சங்கத் தமிழ்ப் பற்றும் பயிற்சி யும் 'நக்கீரர்', 'கபிலர்' போன்ற நூல்கள் தோன்றக்காரணமாயின. அன்னார்தம் சிலம்புத் தோய்வின் வெளிப்பாடாகக் 'கண்ணகி வர லாறும் கற்பு மாண்பும்' உரு வானது. எண்ணற்ற இலக்கியங் களுக்கும் அற நூல்களுக்கும் உரை கண்ட நாவலர் தம் நுண் மாண் நுழைபுலம் ஒளிரச் சிலப் பதிகாரத்திற்கு உரைவளம் வரைந்த பெருமகனாவர்.

சிலம்புக்குப் பழைய உரையாக அரும்பத உரையும் அடியார்க்கு நல்லார் உரையும் அமைந்தாலும் அவையிரண்டும் கற்பார் விழைவை நிறைவு செய்யும் அமைப்பிலும் அளவிலும் அருகின என்றே கொள்ள வேண்டும். அரும்பத உரை நூல் முழுதுக் கும் இருந்தாலும் யாவரும் எளி தில் உணரத்தக்கதென அதனைக் கொள்ள முடியாது. அடியார்க்கு நல்லார் உரையோ கானல் வரி, வழக்குரை காதை, வஞ்சின மாலை, அழற்படுகாதை, கட் டுரை காதை ஆகியவற்றிற்கும் வஞ்சிக்காண்டம் முழுமைக்கும் இல்லை. நாட்டாரையா உரை இக் குறைபாட்டினைப் போக்கி, நூல் முழுவதற்கும் தெளிவான உரை பெற உதவுகின்றது.

நாவலர் உரை, அரும்பதவுரை, அடியார்க்கு நல்லார் உரை இரண்டையும் மிகுதியும் தழு வியே எழுதப்பட்டது. ஆயினும் மிகுதியான இடங்களில் இருவர் தம் கருத்தினை உடன்பட்டு உரை வரையும் நாட்டாரையா சில இடங்களில் மறுத்தும் மாறு பட்டும் எழுதி மூல நூலுக்கு விளக்கம் சேர்க்கிறார். அவர்கள் இருவரும் பொதுப்பொருள் கொண்ட சொற்கள், தொடர் கள் பலவற்றுக்குக் குறிப்பு விளக் கமும் சிறப்புரையும் நாவலர் தரு வதைக் கண்டு மகிழலாம்.

மங்கல வாழ்த்துப் பாடலில் ஆசிரியர் கண்ணகியை முற்கூறிய தற்குக் காரணம் காட்டும் அடி யார்க்கு நல்லார், 'கண்ணகியை முற்கூறினார், பத்தினியை ஏத் துதல் உட்கோளாகலான்' என்று குறிப்பிடுகின்றார். அரும்பத உரை காரர்,"இவளை முன் கூறிற்றுக் கதைக்கு நாயகியாதலின்" எனக் கூறுகின்றார். இவ்விரு உரைக் குறிப்பிலும் நிறைந்த பத்தினி வழிபாடு, கதைத்தலைமை, இரண்டையும் உள்ளடக்கி நாட் டாரையா அவர்கள் "பத்தினியை ஏத்துதல் கருத்தாகலானும் கதைக்கு நாயகியாகலானும் கண் ணகியை முற்கூறினார் என்க" என்று விளக்கமளிப்பார்.

## டாக்டர் வே. காத்தையன்

உரைபெறு கட்டுரையில் "அன்று தொட்டுப் பாண்டிய நாடு மழைவறங்கூர்ந்து வறுமை யெய்தி வெப்பு நோயுங் குருவுந் தொடர" என்ற தொடரில் வெப்பு-தொழுநோய் என அடி யார்க்கு நல்லார் உரை எழுத, நாட்டாரையா வெப்பு நோய் (வெம்மை விளைக்கும் நோய்) 'குரு-கொப்புளம்; வெம்மையால் உண்டாவது' என விளக்கந் தரு வது பொருத்தமாக உள்ளது.

வினைவிளை காலம் ஆதலின்
யாவதும்
சினையலர் வேம்பன் தேரா
னாகிக்
கன்றிய காவலர்க் கூஉய்க்
கள்வனைக்
கொன்றச் சிலம்பு கொணர்க
ஈங்கென

என்பது பதிகத் தொடர். இப்பகுதிக்கு உரைகண்ட அடி யார்க்குநல்லார் "அக் கள்வனைக் கொல்லஅச் சிலம்பையும்அவனை யும் கொணர்கவெனச் சொல்லக் கருதினவன் வாய்சோர்ந்து, கொன்று அச்சிலம்பைக் கொண்டு வருக என்று கூறினான்" எனக் குறிப்பிடுகின்றார். இதனை ஏற் புடைத்தன்று என மறுக்கும் நாவலர் அவர்கள், மூன்று கார ணங்காட்டித் தம் கூற்றை மெய்ப் பிக்கின்றார். வினை விளைகால மாதலின் யாவதும் தேரானாகி என்றமையாலும், அச் சிலம்பு எனத்தேவியின் சிலம்பைக் கருதிக் கூறினமையானும், வழக்குரை காதையுள்ளும் "கள்வனைக் கோறல் கடுங்கோலன்று" என் றிறுத்தமையாலும் என்க" என் பது நாட்டாரையாவின் மறுப் புரையாகும்.

இந்திர விழவூரெடுத்த காதை யில் காவற்பூதம் என்ற தொட ருக்குப் புகாருக்கும் அரசர்க்கும் காவலாகிய பூதம் என்று உரை கூறுவதும், காட்சிக் காதையில் முதுநீர்க் காவிரி என்ற தொட ருக்குப் பொருள் கூறுங்கால் முது மையைக் காவிரிக்கு ஏற்றுக என எழுதுவதும் நாவலர் புலமைநலம் ஒளிரும் தொடர்களுள் சில என லாம்.

அரங்கேற்று காதை முடிவில் மாதவிபால் விடுதல் அறியா விருப்பங்கொண்டகோவலன் தன் வடுநீங்கு சிறப்பின் மனையகம் மறந்ததாக இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். வடுநீங்கு சிறப்பின் மனையகம் என்பதற்கு அடியார்க்கு நல்லாரும் அரும்பத உரையாசிரியரும் குற்றமற்ற கற் புச் சிறப்பினையுடைய மனைவி யும் மனையும் என வாளா வெழுத, நாவலரோ வடுநீங்கு சிறப்பென்பதற்கு மனையாட்குக் கற்பின் சிறப்பும், மனைக்குச் செல்வச் சிறப்பும் என விளக்க வுரை தருகின்றார்.


தமிழரசு
1.5.1984 இதழ்
பெரியார் மாவட்டச்
சிறப்பிதழாக
மலரவிருக்கிறது!




# நாட்டார் தந்த நல்விளக்கம்..

—ந. ரா. முருகவேள்.

நாவலர் பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டார் ஐயா அவர்கள் (1884-1944), அண்மைக் காலத்தில் இருந்த தமிழ்ப்பெருஞ் சான்றோர்களில் தலைசிறந்த பெரும் புலவர் ஆவார்.

கரந்தைப் புலவர் கல்லூரியில், ''இளங்கோவடிகள் இலக்கிய மன்றம்'என்னும் அமைப்பு ஒன்று, புலவர் வகுப்பு மாணவர்களின் பொருட்டு நடைபெற்று வந்தது. அதன் ஆண்டுவிழா ஒன்றிற்கு நாவலர் நாட்டார் ஐயா அவர்கள், தலைமை தாங்கினார்கள். வித்துவான் திரு.சி. இலக்குவனார், அவ்வாண்டு விழாவில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். அதுபோது திரு.சி.இலக்குவனார், திருவையாற்று அரசர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். ஆதலின் அவர் தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கும் கரந்தைப் புலவர் கல்லூரிக்கும், அவ்வப்போது வருவது உண்டு. அதனால் இளங்கோவடிகள் இலக்கிய மன்றத்தின் ஆண்டு விழாவில் நாவலர் திரு. நாட்டார் ஐயா அவர்கள் தலைமையில், ''சங்க இலக்கியச் சிறப்பு'' என்னும் பொருள் பற்றி, ஒருசிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

அறிஞர் திரு. இலக்குவனார், சங்க இலக்கியங்களின் சிறப்புக்களை விரிவாக விளக்கிச் சிறப்பாகப் பேசினார். அதுபோது, ''இயற்கைப்பொருள்களை உற்று நோக்கி ஆழ்ந்துணர்ந்து, அவற்றின் இயல்புகளை உள்ளவாறு எடுத்துப் பாடுதலில், சங்ககாலப் புலவர்கள் ஒப்புயர்வற்று விளங்கினர்'' என்னும் கருத்து, அவராற்பெரிதும் வலியுறுத்துப் பெற்றது.அதன் தொடர்பாகப் பேசிக் கொண்டு வந்தபோது, ''பிற்காலப் புலவர்கள் சங்ககாலப் புலவர்களைப் போல், இயற்கைப் பொருள்களை ஊன்றி நோக்கி உணர்ந்து, உள்ளவாறு எடுத்து விளக்கிப்பாடும்திறம் பெற்றிலர்'' என்று குறிப்பிட்டு, அப்போது புலவர் வகுப்பு மாணவர்களுக்குப் பாடமாக இருந்த, காஞ்சிப் புராணத்தில் ஒரு பாடலை எடுத்துச் சொல்லி, ''இந்தப் பாடலில் வரும் மரங்களுள் ஒன்றற்குக் கொடுக்கப் பெற்றிருக்கும் அடைமொழி அறவே பொருந்தாதது; கவிஞர் கொடுத்துள்ள அடைமொழி அம்மரத்தின் இயற்கைத் தன்மைக்கு முற்றிலும் முரணானது''என்று கூறி, அப்பாடலைப் பாடிய கவிஞரை, ஒரு சிறிது எள்ளற் குறிப்பு அமையச் சுட்டிக்காட்டி, தமது உரையினை நிகழ்த்தி முடித்தார்.

திரு இலக்குவனார் அவர்களின் ஆராய்ச்சித் திறன் மிக்க சொற்பொழிவை நாட்டார் ஐயா புகழ்ந்து போற்றி மகிழ்ந்தார். என்னும், இடையில் ஒரு சிறு விளக்கத்தினையும் செய்தருளினார்.

''நமது சிறப்புச் சொற்பொழிவாளர், தம்முடைய கருத்தினை விளக்குவதற்குக் காஞ்சிப் புராணச் செய்யுள் ஒன்றினைத் திறம்பட எடுத்து, மேற்கோள் காட்டினார். தமது கருத்தை வலியுறுத்துவதற்காகத் தகுந்த மேற்கோளை எடுத்துக் காட்டிய முறை, சொற்பொழிவாளரின் அரும்பெரும் புலமைத் திறனையும், சொல்வன்மையினையும் செவ்விதின் உணர்த்துகின்றது. எனினும், காஞ்சிப் புராணம் பயிலும் புலவர் வகுப்பு மாணவர்களாகிய நீங்கள், அவர் மேற்கோள் காட்டிய அருமைப் பாட்டினை ஓர்ந்து உணராமல், காஞ்சிப்புராண ஆசிரியரையே ஏதேனும் எளிதாகத் தவறாக எண்ணி விடக் கூடாதே என்று கவன்று அஞ்சி, யான் ஒரு சில சொற்களைச்சொல்லலாம் என்றுவிரும்புகின்றேன்.

''நமது தமிழ்கூறும் நல்லுலகத்தில், சைவசமயப் பெருவானத்தில், அண்மைக் காலத்தில் விளங்கியிருந்த மாபெரும் கவிஞர்களில் சிவப்பிரகாசர் - குமரகுருபரர்- சிவஞான சுவாமிகள் என்னும் மூவரும், ஒப்புயர்வற்ற ஞானப் பெருஞ்சுடர்மணிகள் ஆவர். சிவஞான சுவாமிகள் பல துறைகளில் வல்லவர். இலக்கணம்-இலக்கியம்-தருக்கம்-கவிதை புனைதல்-மறுப்புரை வரைதல் - காவியங்கள் இயற்றுதல்-பேருரைகள்வகுத்தல் ஆகிய பல துறைகளிலும், தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றித் திகழ்ந்து தலைமை நிலை பெற்று விளங்கியவர்.

''காஞ்சிப்புராணத்தில் ,பிற புராண நூல்களில் காணப்படாத பல புதிய புதிய நல்ல அமைப்புக்களை வகுத்து, சிவஞான சுவாமிகள் முதன் முதலாகவும், சிறப்பாகவும், அதனை இயற்றியருளியிருக்கின்றார். ஐந்திணைகளை முறையே வரிசையாகப் பாடி வருங்கால், பாலைத்திணையின் இயல்பு குறித்துச் சுவாமிகள் பாடிய பாடல்கள்ல் ஒன்றினையே இங்கு நம் சொற்பொழிவாளர் எடுத்துக் காட்டினார். பாலைத் திணையைச் சுவாமிகள் எவ்வளவு அழகாக, எத்தகைய கற்பனை நலம் பொருந்துமாறு, பாடியிருக்கின்றார் என்று பாருங்கள்.

''பாலைத் திணைக்கு உரிய மரங்களுள், குராமரம்- கோங்க மரம் - பாடலமரம் - மரா மரம்- முருங்கைமரம் என்பன, சிறப்பாக உரியன. இவ்வுண்மையை உணர்ந்து கொள்ளுதலே, இந்நாளர் பெரும் புலமையாகும். இம்மரங்கள் பாலைத் திணையில் இருக்கின்றன என்று, பொதுவாகக் குறிப்பிட்டாலேபோதும். ஆனால் அது கவிதையாகாது. ஆதலின், அவற்றையெல்லாம் இயைபுற இணைத்து, கற்பனை புனைந்து, அழகுபடுத்தி, உயிர் கொடுத்து, நாம் என்றும் மறவா வகையில் நம் உள்ளத்திற் பதிந்து மகிழ்ச்சி விளைவிக்கும் வண்ணம் நம்முடைய மனக்கண்ணின் முன்னர் அவற்றை உலவ விடுகின்றார் சுவாமிகள்.

நமது சொற்பொழிவாளர் குறிப்பிட்ட பாடலில், சுவாமிகள் பாடியருளியிருக்கின்றார்.

''குரா அளித்திடு பாவையைக்
கோழ்குபொன் கொடுத்துப்,
பராரைப் பாடலம் பூந்தழற்
பாங்கரின் மணப்ப,
மராமரத்து உளர்வண்டு பண்
பாட
வ(ன்) முருங்கை
விராவி வெண்பொரி இறைத்
திடும்
வியப்பினது ஒருபால்''
—காஞ்சிப்புராணம்



நிற்பவர்கள்: (இடமிருந்து வலமாக) நாட்டார் இளவல் திரு மு. கோவிந்தசாமி நாட்டார், நாட்டாரின் மகன் திரு வே. நடராசன், கோவை திரு பொன். அருணாசலம் நாட்டார், பெரம்பூர் திரு ஆர். ஏகாம்பர நாட்டார், மாணவர் ஒருவர், நாட்டாரின் மருமகன் வித்துவான் சிவப்பிரகாச சேதிராயர், கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு சுந்தரேச வாண்டையார்.

உட்கார்ந்து இருப்பவர்கள்: (இடமிருந்து வலமாக) இடக்கோடியில் உள்ளவர் திரு உலக ஊழியர். (நாட்டாரின் தலை சிறந்த மாணாக்கர்) தஞ்சை வழக்கறிஞர் திரு சுயம்பிரகாசம், பாகனேரி திரு எஸ்.ஓ.எஸ்.பி. உடையப்பா அம்பலம் (இவர் திரு ஆர்.வி. சாமிநாதனின் உறவினர்). திரு தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், திரு லெ.ப.கரு. இராமனாதஞ் செட்டியார், திரு சுந்தரேச வாண்டையாரின் மகன்.

இவ்வழகிய இனிய அரும் பெறற் பாடலில் முருங்கை மரம் 'வன் முருங்கை' என்று குறிப்பிடப் பெற்றிருக்கின்றது. ''முருங்கை மரம் மிகவும் மென்மை வாய்ந்தமரம்.அதனை 'வன்முருங்கை' என்று குறிப்பிட்டது பொருத்த மன்று. இப்பாடலைப் பாடிய கவிஞர் இயற்கைப் பொருள்களை உண்மையிலேயே உற்று நோக்கி நுனித்து உணராமல் இருந்ததனால்தான், இத்தகைய பிழையான அடைமொழி வழங்கினராதல் வேண்டும். இதனால் பிற்காலப் புலவர்களின் குறையும் பிழையும் தெற்றென விளங்குகின்றன'' என்று, நம் சொற்பொழிவாளர் சுட்டினார். சொற்பொழிவாளர் சுட்டிய குறைபாடும் பிழைபாடும், ஏதோ ஓரோவொருகால் யாரோ பிற சில பிற்காலப் புலவர்களுக்குப் பொருந்தக் கூடுமாயினும், உண்மையிலேயே சிறந்த சிவானுபூதிச் செல்வர் ஆகிய சிவஞான சுவாமிகள்பால், இத்தகைய குற்றமும் குறைபாடும் உண்டு என்று கருத, யான் சிறிதும் துணிகிலேன்''.

**வண்முருங்கை :**

''முருங்கை மரத்தின்பட்டை- இலை-சாறு - பூ - காய்-விதை முதலியன அனைத்துமே, மக்களின் அன்றாட வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படும் வளப்பம் (வண்மை) உடையன. முருங்கை மரம் மருத்துவ நலங்கள் செறிந்த ஒரு சிறந்த மூலிகை மரம் .ஏழைகளின் கற்பக மரம். அச்சிறப்பியல்புகள் கருதி, ஆசிரியர் சிவஞானசுவாமிகள் ''வண்முருங்கை என்றே பாடியிருந்திருப்பர். ஆனால் நூலை அச்சிட்டவர்களின் கவனக்குறைவால், அது ''வன்முருங்கை'' என்று, நமது சொற்பொழிவாளர் குறிப்பிட்டது போல, எல்லாப் பதிப்புக்களிலும் பிழையாக அமைந்து விட்டது. இப்பிழையும் குறையும் அச்சில் பதிப்பிட்டவர்களைச் சாருமேயன்றி, நமது மாதவச் சிவஞான சுவாமிகளை, ஒரு சிறிதும் சாராது என்று உறுதியாகக் கருதுகின்றேன்.

''புலவர் வகுப்பு மாணவர்களாகிய நீங்கள் சங்கத் தமிழ் இலக்கியங்களையும், காஞ்சிப் புராணம் போன்ற கலைநலஞ் சான்ற அரும்பெரும் தமிழ் இலக்கியங்களையும் எல்லாம், நன்றாக அழுந்திக் கற்றுத் தேர்ந்து, மிகவும் சிறந்த நிறைந்த செந்தமிழ்ப் புலமைபெறுதல் வேண்டும்என்று இறையருளை வேண்டி வாழ்த்தி, நமது சிறப்புச் சொற்பொழிவாளர் அவர்களை மனமாரப் பெரிதும் போற்றிப் பாராட்டி அமைகின்றேன்'' என்று கூறி, நாட்டார் ஐயா அவர்கள், தம்முடைய தலைமையுரையை நிறைவு செய்தருளினார்கள்.

# தமிழுக்கென வாழ்ந்த தகைமையாளர்..

என் இளமைக் காலத்திலிருந்தே என் தந்தையார் பேச்சிலும், உலக வழக்கிலும் நண்பர்களுட னும், மாணவர்களுடனும், பேர வைகளிலும், கல்லூரிகளிலும் பேசும்போது சிறிதும் இலக்கண வழுவின்றி, எளிய இனிய நடை யில் தெளிவாகப் பேசுவார்கள். அவர்கள் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கோளாரும் வேட்ப மொழியும் சொல்லாற்றல் உடை யவர்கள். அத்துடன் ஒழுக்கநெறி சிறிதும் பிறழாது தம் வாழ்க் கையை நடத்திவந்த குணக் குன்று ஆவார்கள். அவர்கள் தம் முடைய தூய திருமேனியுடன் ஒருநாள் பெரிய வழக்குரைஞராக வும், ஒரு பொழுது பெரும் பேரா சிரியராகவும், ஒரு சமயம் அப்பர் பெருமானின் அருள் உருவத் திரு மேனியைப் போலவும் இருப்பார் கள். தம் இறுதி மூச்சு உள்ளவரை யில் தமிழையும் சைவத்தையும் தம்மிரு கண்களாக நினைத்து ஒழுகி வந்தார்கள்.

அவர்கள் சிறந்த நூலாசிரிய ராகவும், உரையாசிரியராகவும், போதக ஆசிரியராகவும் விளங்கி னார்கள் எனக் கூறுதல் மிகை யாகாது. அவர்களை ஓயாது துன் புறுத்திவந்த காசநோயின் ஊடே யும் தமிழ்ப் பணியும் சைவப் பணியும் செய்வதில் சிறிதும் தவறவில்லை. என்றாவது ஒரு நாள் நோயினால் மிகத் துன்புறும் போது, ஒன்றும் செய்ய இயலா விடின் ''என்னப்பா இன்று வீண் பொழுதாகிவிட்டதே'' என்று வருந்துவார்கள். அவர்கள்பால் பயின்ற மாணவர்களுள் உலக ஊழியனார் போன்றவர்கள் தமக்கு ஏதாவது ஐயமேற்பட் டால் அவர்களைக் கண்டு தெளிய வருவார்கள். ஆனால் அவர்கள் முன் தோன்றியவுடனே ஐயம் தெளிந்துவிட்டதாக உணர்வார் கள் என்று அவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்.



ஆக்கம் மகள் சிவ. பார்வதி

பேரவைகளில் அவர்கள் எழுந்து பேசும்போது நிமிர்ந்த நிலையும், மலர்ந்த முகமும், தெளிந்த குரலும், இனிய சொல் லும் உடையவர்களாய்ப் பலமணி நேரம் கேட்போர் விம்மிதம் எய் தும்படி பேசுவார்கள்.

அவர்கள் தாமே தமிழ்ப் பயின்று பேராசிரியர் ஆனவாறே என்னையும் தமிழ்ப் பணியில் ஊக்குவித்தார்கள். தமிழ் நூல் களை என் கையில் கொடுத்து ''இதனைப் படித்துவா'' என்று சொல்வார்கள். அப்படிச் சில நாள் சென்றதும் அவற்றுள் கேள்விதான் கேட்பார்கள். அவர்கள் முகத்தைக் கண்டவுட னேயே என் உளம் தெளிந்து அதற்குச் சரியான விடையளிக்க இயலும். அவ்வாறே என்னையும் ஒரு புலவராக்கி, தம் தமக்கை யார் மகனும் என் கணவருமான திரு.சி.சிவப்பிரகாச சேதிராயர் அவர்களையும் புலவராக்கினார் கள். எனவே, என் தந்தையார் தொடர்புடைய எங்கள் குடும் பத்தினர் எல்லாருமே தமிழ்ப் பற்று உடையவர்கள் ஆனோம். எங்கள் சிறிய தந்தையார் ந.மு. கோவிந்தராச நாட்டார் அவர் களும் தமிழ்ப் புலமையில் சிறந்து விளங்கியன்மையோடு பல நூல் களையும் எழுதியுள்ளார்கள்.

என் அருமைத்தம்பி நடராச நாட்டாரும் மிகுந்த ஒழுக்கசீல ராய், கடவுள் அன்பும், தமிழ்ப் பற்றும் கொண்டு 'தந்தையறிவு, மகனறிவு,' என்பதற்கேற்ப விளங் குகின்றார்கள்.

அப்பா அவர்கள் எனக்குத் தெரிந்த வரையில் யாரிடமும் சினந்து பேசியதே இல்லை. அப் படி ஒருவேளை அவருக்குச் சின மேற்பட்டால் ''ஏது முட்டாள் தனமாக இருக்கிறது'' என்பார் கள். அப்படி ஒருமுறை என் கண வர் சேதிராயர் அவர்களிடம் ''என்னப்பா முட்டாள்தனமாக இருக்கிறது'' என்று சொன்னார் கள். உடனே என் கணவர் தேம் பித் தேம்பி அழுதார்கள். பின் னர் அவர்கள் பக்கத்தில் வந்து நின்றுகொண்டு ''என்ன சொல்லி விட்டேன், எதற்காக அழுகி றாய்?'' என்று சொன்னார்கள். அதற்கு அவர்கள்—

''குணமென்னும் குன்றேறி
நின்றார் வெகுளி
கணமேயும் காத்த லரிது''



நாட்டார் புகைப்படங்கள் உதவிய நடராசன்.

எனக் கூறி அழுதவுடன் தந்தை யார் பலமாக நகைத்துவிட்டுப் ''போதும் நிறுத்திவிடு'' என்றார் கள். இந்த நிகழ்ச்சி என் கண் முன்னே நிற்கின்றது. இப்படிப் பகைவர்களிடமும் எளிமையும் இனிமையுமாகப் பேசி அவர் களை வசப்படுத்திவிடுவார்கள்.

குன்றக்குடியில் சைவசித்தாந்த மகாசமாசத்தில் என் தந்தையார் பேசுகின்றபொழுது ''மையிலங்கு நற்கண்ணி பங்கனே'' என்று தொடங்கும் திருவாசகப் பாட் டினை எடுத்துரைக்கும்பொழுது உணர்ச்சிவசப்பட்டு மெய்மறந்து நின்றுவிட்டார்கள். அப்பொழுது சுந்தரஓதுவார் மூர்த்திகள் ''முன் னைப் பழம்பொருட்கும் முன் னைப் பழம்பொருளே'' என்ற திருவாசகத்தை ஓதி அவையின ரையும், அப்பா அவர்களையும் மெய்சிலிர்க்க வைத்துவிட்டார் கள். இந்த நிகழ்ச்சி மறக்க முடி யாத ஒன்று.

**வித்வான் சிவ. பார்வதி**

# நாட்டார் ஒரு சொல் ஓவியம்

**வித்துவான் சரவண ஆறுமுக முதலியார்**

இருபதாம் நூற்றாண்டுப் பிற்பகுதித் தமிழ் வானில், தமிழ்ப் புலவர்கள், பேராசிரி யர்களிடை, தாரகை நடுவண் தண்மதிபோல் விளங்கிப் புலமை நடாத்திய நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தனிப் பெருஞ்சிறப்புடையவராய், இன்றும் என்றும் பொன்றாப் புகழுடன் நிலைத்து விளங்கி நிற் கின்றார். நாவலர் அவர்களின் பன்னூறு மாணாக்கர்களில் ஒருவனாகிய யான் என் நினைவிலிருக்கும் வரை, அவர்களது குண நலங்கள், கற்பிக்கும் ஆற்றல் ஆகியவற்றில் சில குறிப்புக்களை, அவர்களது நூற்றாண்டு விழாக் காலத்தில் புகழ் அஞ்சலியாகத் தரு வது பொருத்தமான தே. 1925-27ஆம்ஆண்டு களில்(S.P.G. Bishop Heber) கல்லூரியில்பி.ஏ. வகுப்பில் சிறப்புத் தமிழ் (Major Group VI) மாணாக்கனாகவும், 1933-35இல் அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்க்கலை (Arts) துறையில் முதுகலைப் படிப்பில் (Post graduate M.A.) ஈராண்டுகள் மாணாக்க னாகவும், குடும்ப நண்பன் என்னும் தனிப் பட்ட முறையிலும் யான் நாவலவரர்கள்பால் தமிழ் பயின்றுள்ளேன்.

நெடுமாலென நிமிர்ந்த தோற்றம், சற்று நீண்ட எடுப்பான மூக்கு, ஊடுருவிப் பார்க் கும் கண்கள், அகன்று பரந்த நெற்றியில் திரு நீற்று முப்பட்டைகளின் நடுவில் சந்தனப் பொட்டு, தாழ்ந்து நீண்ட கைகள், உயரத் துக்கு ஏற்ற மிகுபருமனும், ஒடிசலுமில்லாத ஒத்த சதைப் பிடிப்பு, தூய வெள்ளை எட்டு முழத் தார்பாச்சு மடிப்பு வேட்டிக்கட்டு, வெள்ளிய தலைப்பாகை, கழுத்தில் திறப்பு இல்லாத மூடிய முழுக்கை-தாழ்ந்த சட்டை, வலக் கையில் ஒற்றைச் சிவப்புக் கல் இழைத்த மோதிரம், நறுக்கு மீசை, இன் சொல்லும் அது காட்டும் புன்முறுவலும்-இதுவே சுருக் கமாக மனக் கண்காணக்கூடிய நாவலரவர் களின் தோற்றப் பொலிவு. சிவபெருமான் திருவடிக்கே வைத்த நெஞ்சு. 'குணநலம் சான்றோர் நலனே' என்றபடி சிறந்த ஒழுக்க முடைமை, வகுப்பில் நுழைந்த உடனேயே மாணாக்கர்களை நோட்டம் விட்டுப் புன் முறுவலிக்கும் வாழ்த்து.

பழமையும் புதுமையும் கலந்ததொரு பெருமை: அறுபது ஆண்டுகட்கு முன்னரே இலக்கியத் திறம் ஆய்ந்து காண்பதில் புதுமை, பழமையும் போற்றுதல் ஆகிய இவ்வுத்தி நாவலரவர்களது தனிச்சிறப்பு. பண்டைத் தமிழகத்தில் நிலவிய ஆசிரியர்களின் இலக் கணங்களும், தற்கால மாணாக்கர்களுக்கு எடுத்துக் காட்டாய்த் திகழும் திறமும், இவர் கள்பால் கலந்து களிநடம் புரிந்தன. தொல் காப்பியப் பாயிரத்தில் நச்சினார்க்கினியர், நல்லாசிரியரியல்புக்கு ஆத்திரையன் பேராசிரி யன் கூற்றை மேற்கோளாகக் காட்டியுள்ளார். அவ்வியல்புகள் நம்மாசிரியருக்கும் பொருந் தும்.

''வலம்புரி முத்திற் **குலம்புரி** பிறப்பும்,
வான்யாறன்ன **தூய்மையும்**, வான்யாறு
நிலம்படர்ந்தன்ன நலம்படர் **ஒழுக்கமும்**
திங்களன்ன **கல்வியும்**, திங்களொடு
ஞாயிறன்ன **வாய்மையும்**, யாவதும்
**அஃகா அன்பும்**, வெஃகா **உள்ளமும்**
துலைநாவன்ன சமநிலை உளப்பட
**எண்வகை** உறுப்பினர் ஆகி''

என்ற எட்டு அடிப்படைத் தகுதிகளைக் கொண்டோரே 'நல்லாசிரியராவர்.

இப்பன்னருஞ் சிறப்பின் நல்லாசிரிய தொன்னெறிமரபும், உலகியலறிதல், பொறை, நிறை, சொற்பொருள் உணர்த்தும் சொல் வன்மை, கற்போர் நெஞ்சம் காமுறப்படுதல் ஆகிய சார்புத் தகுதிகளும் பெற்றிருப்பர். நம் நாயகர் நாட்டார் அவர்களும் இத்தன் மைத் தொன்னெறி வாய்ந்தவர். கலை பயில் தெளிவும் கட்டுரை வன்மையும் வாய்ந்த இவர், தொல்காப்பியப் புறத்திணை இயலிற் கண்ட ''எட்டு வகை நுதலிய அவையத்தா னும்'' என்பதற்கு நச்சினார்க்கினியர் மேலே காட்டிய எட்டு வகைகள் அடிப்படைத் தகுதி களோடு உருவகமாக, அவர்களுடைய நடை உடை பாவனைகளை ஆசிரியமாலைச் செய் யுளில் இருந்து எடுத்துக்காட்டி உருவக ஓவி யம் தீட்டியுள்ளார்.

''குடிப்பிறப் **புடுத்து**, பனுவல் **சூடி**
விழுப்பே ரொழுக்கம் **பூண்டு**, காமுற
வாய்மை **வாய்மடுத்து மாந்தி**, தூய்மை
**இல்**
காதல் இன்பத்துத் **தூங்கி** நடுவுநிலை
**நெடுநகர்** வைகி
**அழுக்காறின்மை அவாஇன்மை** என இரு
பெருநிதியம்
**ஒருதாமீட்டும்** தோலா நாவின் மேலோர்

இதில் இவர்கள் உடுப்பது, சூடுவது, பூண்பது, குடிப்பது, தூங்குவது, வாழ்வது, ஈட்டுவது முதலியவற்றை உருவகமாக விளக்கியுள்ளார், இவற்றுள் பிறர் நிலை கண்டு பொறாமைப் படாமை, பேராசை இரண்டும் இல்லாத செல்வ அமைதி நிலை மிகவும் போற்றற் குரியது. இவ்வளவும் அமைந்தவர் நாட்டார் அவர்கள் என்றே உறுதியாகக் கூறிவிடலாம்.

இத்தகு பேராசிரியர், தற்கால முறைக் கேற்பவே அப்போதே தாய் மொழியைப் பயிற்றுவித்தார். மாணாக்கர்களைமுறைப்படி வழக்கின் இலக்கணம் இழுக்கின்றறிதல், பாடம் போற்றல், கேட்டவை நினைத்தல்,

## வணக்கம் கோடி

ஆன்றொழுக்காய்ச் சொற்களெலாம் காவில்
தோன்றும்
அடுக்கடுக்காய் அரங்கமதில் முத்திக் கொள்ளும்,
பாற்சோறோ கற்கண்டோ தேனோ பாகோ
பருவம்சேர் மாமுதோ என்னும் வண்ணம்
ஆற்றல்மிகு சொல்லாற்றல் பெற்ற மேலோர்
அனைவர்களும் வல்லாசா னாகி வாழ்ந்தார்
நூற்றாண்டு விழவதனில் நாட்டார் ஐயா
நுண்மாண்பும் நுழைபுலமும் நுவலற் பாற்றோ?

இந்தபெரு [illegible]
இணையற்ற [illegible]
எந்தபெரு [illegible]
எடுத்துரைக்கும் [illegible]
பைந்தமிழின் [illegible]
பகர்கின்ற நாட்டாரின் [illegible]
செந்தமிழே [illegible]
சிறந்தோர்க்கு நூற்றாண்டில் [illegible]

புலவர் [illegible]

ஆசான் சார்ந்தவை அமைவரக் கேட்டல், அம்மாண்புடையோர் தம்மொடு பயிறல், வினாதல், வினாயவை விடுத்தல் போன்ற கற்பித்தல் முறைகளைத் தாமும் கையாண்டு மாணாக்கர்களை, மாண் ஆக்கர்களாகவும், நல்ல மொழித் திறமுடைய மாண்-நாக்கர்களாகவும் ஆக்கியுள்ளார்.

இனி, அவர்கள் செய்யுள் கற்பித்த திறனைச் சுருக்கிக் கூறுவேன். நிறமும் அழகும் எழிலும் நறுமணமும் வாய்ந்த மலர் ஒன்றை, அதன் இதழ்களைக் குலைத்து, மோந்துகசக்கி வீசிவிடாமல், அதன் நிறம், அழகு, எழில் மணம் முதலியவற்றில் ஈடுபட்டு இன்புறுதல் போலவே, செய்யுளையும், முதலிலேயேசொல் சொல்லாகப் பிரித்து உரை சொல்வது, உரைநடையாக்குவது பொருள் கேட்பது முதலியவற்றைச் செய்து பாழ்படுத்திவிடாமல், முழுச் செய்யுளையும் முதலில் ஓரிரு முறைகள் ஏற்ற இசையோடு பொருள் விளங்குமாறு படித்துப் பாடிக் காட்டினால்தான் சொல்லும் பொருளும், சுவையும் செய்யுளின் உணர்ச்சியும் மனத்திற் படியும். செய்யுட்கு இசை உயிர்நாடியாம். ''பாவென்பது கேட்புலத் திருந்த காலத்தும் ஒருவன் எழுத்தும் சொல்லும் தெரியாமல் பாடம் ஓதுங்கால் அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுள் என்று உணர்வதற்கேதுவாகி பரந்து பட்டுச் செல்வதோர் ஓசை''யாகும். இவ்வோசை நயம் சிதையாமல் செய்யுளை சுவைத்தல் முறையாகும்.

இவ்வாறு மாணவர்களின் மனத்தைச் செய்யுட் பகுதிகளை மேலும் மேலும் கிளர்ச்சியோடு படிக்கத் தூண்டுவதற்கும் புறத்தே சென்றுலவும் மாணவர் மனத்தைக் கவர்ந்து நடைபெறும் பாடத்தில் ஈடுபடுத்தவும் செய்யுளைக் கேள்விக்கு இன்பமாக அதற்குரிய ஓசையில் (இசை அரங்குபோல் இராகம், தாளம், சுரம் பாடுதல் போலன்று) செப்பல், அகவல், துள்ளல், தூங்கல் ஓசைகளைக் கொண்ட நாற்பாக்களையும் தாழிசை, துறை விருத்தம் போன்றவற்றின் ஓசைகளையும் தோன்ற எடுத்துப் படித்துக் காட்டுவது இவரது தனிப்பெருஞ் சிறப்பு. பின்னர் பாநலம், தொடைநலம், நடைநலம், அணிநலம், இலக்கண(அமைதி)க் குறிப்புக்கள், உவமைஉருவகப் பொருத்தங்கள் அணி, அமைதி, மேற்கோள், அரிய சொல்லாட்சி முதலியவற்றையும் விளக்கியது முறையேயாம். இக்காலத்தில் நூற்றுக்கு ஓரிரு புலவர்கள்கூட இதுபோன்று செய்ய வல்லாரிலர். ஆசிரியரவர்கள் பெரும்பாலும் வெண்பாவைச் சங்கராபரணத்திலும், அகவலை ஆரபி, தோடிகளிலும், கலிப்பாவை பந்துவராளியிலும், தாழிசையைத் தோடியிலும், துறையைப் பைரவியிலும், விருத்தப் பாக்களைக் காம்போதி, கல்யாணிகளிலும் பொருத்திப் படிப்பது சிந்தைக்கும் செவிக்கும் நல் விருந்தாயிருத்தல் வியப்பில்லை.

ஓசை நயத்தையும் பொதுக் கருத்தையும் அறிந்த பின்னர்ப் பதவுரை, பொழிப்புரை, இலக்கணக் குறிப்புக்கள், அணிகள், உவமை, உருவக அணிப் பொருத்தங்கள், தொகுகதைகள், சொல் பொருள் நயங்கள் நடை, தொடை நலங்கள், கவிமாந்தரின் இயல்புகள் பயின்ற சுவைகள் முதலிய இலக்கியத் திறனாய்வு முறைகளில் பாடம் தொடர்ந்து நடத்தியது இவர்களது நுண்மாண் நுழைபுலத்தையும் ஆசிரியத் திறமையையும் காட்ட வல்லனவன்றோ?

செய்யுளை நடத்தியது போலவே இலக்கணத்தையும் மாணாக்கர்கள் தற்போது போல வெறுக்காமல், விரும்பிப் படிக்கும் தற்கால முறைகளை அக்காலத்தேயே இவர்கள் கையாண்ட முறை மிகவும் போற்றற்பாலது. இலக்கியம் கண்டதற்கே இலக்கணமாதலின் இலக்கியங்களில் வரும் எடுத்துக்காட்டுக்களை வழக்கத்தில் வரும் எடுத்துக்காட்டுகளை அடிப்படையாகக் கொண்டே தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும், சிறப்புக்களிலிருந்துபொதுவுக்கும் போகும் விதிவருமுறை வழி அரிய இலக்கணப் பகுதிகளைக் கற்பித்தலால் மாணாக்கர்களுக்கு வெறுப்பும் சலிப்பும் இலக்கணத்தில் ஏற்பட்டதில்லை.

இவ்வாறு நல்ல தமிழாசானாய்க் கற்றவர்கள்பால், தமிழ்ப் பற்று, தமிழ்நாட்டுப் பற்று, உலகத்தோடு ஒட்ட ஒழுகும் பண்பாடு ஆகியவற்றைச் சொல்லளவில் மட்டும் அன்றிச் செயலிலும் செய்து காட்டி, மாணாக்கர்களை நல்வழிப் படுத்திய ந.மு.வே. நாட்டார் என்று குழைவுடன் அழைக்கப்பெறும், நாவலரவர்கள் புகழ், என்றும் நிலைத்து ஓங்கும் என்பதில் ஐயமில்லை.





### 4-வது அட்டை மசால்லும் கட்டுரை

# விண்வெளியில் முதல் இந்தியர்

**1984** ஏப்ரல் திங்கள் 3 ஆம் நாள்!

இந்திய வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப் பட வேண்டிய நன்னாள்!

ஆம். இந்திய வீரருடன் விண்வெளிப் பயணம் தொடங்கும் திருநாள்!

3.4.84 அன்று, ரஷியாவில் உள்ள கஜாக்ஸ்தான் மாகாணத்தில் பைகோனூர் என்னுமிடத்தில் உள்ள விண்வெளித் தளத்திலிருந்து, இந்திய நேரப்படி மாலை 6.38 மணிக்கு சோயுஸ் டி-11 என்னும் விண்கலம், வெள்ளை மற்றும் நீலவண்ணப் புகையைப் பாய்ச்சியவாறு விண்வெளியை நோக்கிக் கம்பீரமாகச் சென்றது.

இந்தியா-சோவியத் யூனியன் கூட்டு விண்வெளிப்பயணத்திட்ட அடிப்படையில் இந்த அரிய பயணம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த விண்கலத்தில், இந்திய வீரர் ராகேஷ் சர்மாவும், ரஷிய வீரர்கள் யூரிமாலிஷேவ், கென்னடி ஸ்டெரகாலோவ் ஆகியோரும் சென்றனர்.

இந்தியர் ஒருவர் விண்கலம் மூலம் விண்வெளிக்குச் செல்வது வரலாற்றில் இதுவே முதல் தடவை.

இந்த விண்வெளிப் பயணத்திற்காகத் தரையில் செய்யவேண்டிய ஏற்பாடுகளில் இருநாடுகளையும் சேர்ந்த பல ஆராய்ச்சி நிறுவனங்களும், உற்பத்தி நிறுவனங்களும் ஈடுபட்டிருந்தன.

இருநாடுகளும் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாகவே விண்வெளி ஆராய்ச்சிகளில் கூட்டாக உழைத்து வருகின்றன. 1961ல் முதன் முதலில் விண்வெளியில் பயணம்செய்த யூரிககாரின் தனது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த விண்வெளிப் பயணத்திற்குச்சில நாட்கள் கழித்து இந்தியாவுக்கு வருகை தந்தார். அப்போது அவர் 'இந்திய வீரர் ஒருவர் விண்வெளியில் பறக்கும் நாள் ஒன்று வரும்' என்று நம்பிக்கை வெளியிட்டார். அது வீண்போகவில்லை!

இந்த விண்வெளிப் பயணத்துக்காக 1980ஆம் ஆண்டு இறுதியில் இந்திய விமானப் படையின் விமானிகளிலிருந்து பத்து சிறந்த விமானிகள் தேர்ந்து எடுக்கப் பட்டனர்.

பெங்களூரிலிருக்கும் ''வான் பயண'' மருத்துவப் பயிலகத்தில் இவர்கள் சோதிக்கப்பட்டு இறுதியில் ரவிஷ் மல்கோத்ரா, ராகேஷ் சர்மா என்ற இரு விமானிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

'இவர்கள் ஒலியை மிஞ்சும் வேகம் உள்ள சூப்பர் ஸானிக் விமானங்கள் உட்பட பலவகையான ஜெட் விமானங்களை ஓட்டுவதில் பரந்த அனுபவம் உள்ளவர்கள். ரஷியாவிலுள்ள நட்சத்திர நகரில் (Star City) பயிற்சி பெறுவதற்காக இவர்கள் அனுப்பப்பட்டனர்.

பிற நாட்டவரையும் தங்கள் விண்கலத்தில் ஏற்றிச் செல்லும் ஏற்பாட்டை ரஷியா அண்மை ஆண்டுகளாகப் பின்பற்றி வருகிறது. எனவேதான் நட்பு நாடான இந்தியாவைச் சேர்ந்த ஒருவர் ரஷிய விண்கலத்தில் விண்வெளிப் பயணம் மேற்கொள்வது சாத்தியமாகியுள்ளது.

உலகில் விண்வெளிக்கு மனிதரை அனுப்பும் திறன் படைத்த ராக்கெட்டுகளையும் விண்கலத்தையும் ரஷ்யா, அமெரிக்கா ஆகிய இருநாடுகள் மட்டுமே பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

விண்வெளியில் ஏற்கெனவே ரஷியாவின் சல்யுட்-7விண்வெளி நிலையம் பூமியைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. இந்தியா-ரஷியா விண்வெளி வீரர்கள் ஏறிச்செல்லும் சோயுஸ் டி-11 விண்கலம், சல்யூட்-7 என்னும் ரஷிய விண்வெளி ஆய்வுக்கூடத்துடன் போய் இணைந்துகொள்ளும்.

சல்யூட்-7 கலத்தின் ஒரு முனையில் ஏற்கெனவே சோயுஸ்-10 விண்கலம் இணைந்தபடி உள்ளது. எனவே சோயுஸ்டி-11 கலம் சல்யுட் கலத்தில் மறுமுனையில் போய் இணைந்து கொள்ளும்.

சோயுஸ்-டி.11 விண்கலமானது நேராகச் சென்று எடுத்த எடுப்பில் சல்யூட் கலத்துடன் இணைந்துவிடாது. முதலில் தனியே சிலமுறை பூமியைச் சுற்றிவரும். அப்போது அதன் சுற்றுப் பாதை பூமியிலிருந்து அதிக பட்சம் 238 கிலோ மீட்டர் உயரத்திலும், குறைந்தபட்சம் 202 கிலோ மீட்டர் உயரத்திலு ம் அமைந்திருக்கும்.

சல்யூட் கலத்தின் சுற்றுப் பாதை பூமியிலிருந்து அதிகபட்சம் 370 கிலோ மீட்டர் உயரத்திலும், குறைந்தபட்சம் 340 கிலோ மீட்டர் உயரத்திலும் அமைந்துள்ளது.

சோயுஸ் டி-11 விண்கலம் சல்யூட் கலத்துடன் இணைந்த பிறகு இந்திய ரஷிய விண்வெளி வீரர்கள் மூவரும் சல்யூட் கலத்துக்கு மாறுவர். விண்வெளியில் இரு கலங்கள் இணைவது என்பது சிக்கலான பணியாகும்.

இந்த மூன்று வீரர்களும் சல்யூட் கலத்துக்கு மாறும்போது அவர்களுக்கு அங்கு வரவேற்பு காத்திருக்கும். ஏனெனில் சல்யூட் கலத்தில் ஏற்கெனவே 3 ரஷிய வீரர்கள் உள்ளனர்.

இந்திய-ரஷ்ய விண்வெளி வீரர்கள் சல்யூட் கலத்தில் தங்கியிருந்து தினமும் 6 மணி நேரம் பணியாற்றுவர்.

**மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் வாழ்த்து**

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில் சிங் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியதாவது :

''கூட்டு வானவெளிப்பயணம் இந்திய ரஷிய நட்புறவின் ஒரு சின்னமாக விளங்குகிறது. பரஸ்பர நன்மைக்கும் மனித இனத்தின் நலனுக்கும் இரு நாடுகளும் ஒன்றுபட்டு உழைக்கும் ஆக்கப்பணியின் ஒரு சிறந்த உதாரணமாகவும் இது உள்ளது.''

**மாண்புமிகு இந்தியப் பிரதமர் வாழ்த்து**

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:

''ரஷிய விண்வெளி வீரர்களுடன் சேர்ந்து இந்திய வீரர் ஒருவரும் விண்வெளிக்குச் சென்றுள்ளதானது இந்திய மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இது நாம் அனைவரும் பெருமைப்படுகிற நிகழ்ச்சியாகும். இந்திய-ரஷிய நட்புறவு மூலம் இது சாத்தியமாகியுள்ளது. இந்த நட்பு இப்போது புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளது.

''இந்தியாவுக்கு நவீன தொழில்நுட்பத்தை அளிக்கும் நாடுகளில் ரஷியா முதலிடம் வகிக்கிறது. ரஷிய மக்களுக்கும், ரஷிய அரசுக்கும், ரஷிய விண்வெளிவீரர்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

**மாண்புமிகு முதல்வர் வாழ்த்து**

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது :

''விண்வெளி மற்றும் வானியல் தொடர்பான விஞ்ஞான வரலாற்றில் நமது இந்தியத் திருநாடு மாபெரும் சாதனை புரிந்துள்ளது. இந்திய விமானப்படை வீரர் ராகேஷ் சர்மா விண்ணில் பயணம் செய்யும் முதல் இந்தியக் குடிமகன் என்னும் பேற்றினைப்பெற்ற தன் வாயிலாக இந்திய மக்கள் அனைவருக்கும் பெருமிதத்தையும், பூரிப்பையும் ஏற்படுத்தியுள்ளார்.

''மாபெரும் நாடான சோவியத் யூனியன் அளித்த ஒத்துழைப்பின் காரணமாக விண்வெளி ஆராய்ச்சித் துறையில் நமது இந்தியத் திருநாடு புதியதொரு அத்தியாயத்தை இயற்றத் தொடங்கியுள்ளது. இந்த மகத்தான சரித்திரச் சாதனை இந்திய சோவியத் ஒத்துழைப்பில் ஒளி மிக்க திருப்பத்தை உருவாக்கியுள்ளது.

''நமது அருமைச் சகோதரர் ராகேஷ் சர்மா விண்வெளிக் கலத்தில் உலகைச் சுற்றிவரும்போது நமது நாட்டின் இயற்கைவளங்கள் பற்றிய ஆய்வை மேற்கொள்ளப் போகிறார் என்கிற செய்தி, நமது நாடு விண்வெளி ஆராய்ச்சியைச் சமாதானப் பணிகளுக்காக மட்டுமே பயன்படுத்தும் என்பதற்கோர் உத்தரவாதமாக விளங்குகிறது.

''இந்திய விமானப்படைவீரர் ராகேஷ் சர்மாவின் சிறப்புமிக்க சாதனை நமது நெஞ்சங்களில் வர்ணிக்க இயலாத மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிற அதே நேரத்தில், நம் நாட்டு இளைஞர்களுக்கு புதிய உத்வேகத்தையும், உற்சாகத்தையும் அளிக்கும் என்பது நிச்சயம்.

''வெகு விரைவில் இந்திய விஞ்ஞானிகள் சோவியத் ரஷ்ய உதவியுடன் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட ஒரு விண்வெளிக் கலத்தை இங்கிருந்து வானவெளியில் செலுத்துவார்கள் என்று நம்புகிறோம்.



''இத்தகைய ஆக்க·பூர்வமான முயற்சிக்கு இணைந்து நின்று வெற்றியைத் தேடித் தந்த இந்தியப் பிரதமருக்கு நமது பாராட்டையும், வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். இந்தச் சாதனைக்குப் பெரிதும் உதவிய, இனியும் உதவ இருக்கின்ற சோவியத் அரசிற்கு நமது உளமார்ந்த நன்றியையும், வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

''தங்களது முழுத் திறமையின் வாயிலாக உலகிற்கு நல்லெண்ண உறவையும், விஞ்ஞானத் திறமையையும் எடுத்துக்காட்டிய இந்திய சோவியத் விஞ்ஞானிகளைப் பாராட்டுகிறேன்.

''ஒட்டுமொத்தமாக, இந்த வெற்றிக்குக் காரணமாக இருந்த இந்தியப் பிரதமருக்கும், இப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் தமிழக மக்கள் சார்பாகவும், அனைத்து அரசியல் கட்சிகளின் சார்பாகவும் மீண்டும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.''

தம்முடைய விண்வெளிப் பயணம் குறித்து திரு ராகேஷ்சர்மா கூறியதாவது:

''சோயுஸ் டி-11 விண்வெளிக் கப்பலில், ரஷிய வீரர்களுடன் கூட்டுப்பயணம் செய்வதையும் சல்யூட்-7 விண்வெளி ஆய்வுக் கூடத்தில் சென்று ஆய்வுநடத்தக் கூடிய வாய்ப்பைப் பெற்றிருப்பதையும் பெரிய பெருமையாகக் கருதுகிறேன். சவாலாக விளங்கும் இந்தப் பெரும் பணியில் ஈடுபடும் முதலாவது இந்தியன் என்னும் தனி கௌரவத்தைப் பெறுவதிலும் மகிழ்ச்சி அடைகிறேன்; மனித குல அறிவின் புதிய பரிமாணங்களை எட்டுவதில் என்னாலான பங்கை ஆற்றுவது குறித்தும் பெருமையடைகிறேன்.''

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் 5-4-84 அன்று இரவு 8.05 மணிக்கு, விண்வெளி இந்திய வீரர் திரு. ராகேஷ் சர்மா மற்றும் இரு ரஷியவீரர்களுடன் பேசினார். இதனை நாடு முழுவதுமுள்ள தொலைக்காட்சிகள் சிறப்பு நிகழ்ச்சியாக ஒளிபரப்பின.

